717/93

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 27 [illegible] எண் - 1

[illegible] - 1992

D
211, 31 N92
N92. 27.1
164944

வெளியீடு 18-3-1993 Issued 18-3-1993

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 28, 1992-தொகுதி 27 எண். 1
Tuesday, the 28th April 1992 - Volume 27 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] Price Rs.3-00

## உள்ளடக்கம்

28—4—1992

சென்னை-600009

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் vii—x

Personnel of the Government of Tamil Nadu xi—xiv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் xv—xvii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி). xviii—xxviii

. **வினாக்கள்—விடைகள்**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1—40

(ஆ) விடைகள் பெறப்பட்டுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு அவையில் வைக்கப்பெறுதல். 40—508

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் ..

. **விதி 110-இன் கீழ் அறிக்கைகள் அளித்தல்**

(அ) மதுரை மணியாச்சி மீட்டர்கேஜ் இரயில் பாதையை அப்புறப்படுத்தக் கூடாது என்று மத்திய அரசைக் கோருதல்— முதலமைச்சரின் அறிக்கை. 582—584

(ஆ) கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட விவசாயக் கடன்களை 30—6—1992-க்குள் செலுத்துவோருக்கு அரசு ஊக்கத் தொகைகள் வழங்கும் திட்டம்—முதலமைச்சரின் அறிக்கை. 584—593

(இ) ஆட்டோ சங்கர் உள்பட சிலர் சிறையிலிருந்து தப்பியோடியது குறித்து இஸ்மாயில் கமிஷன் அளித்த அறிக்கை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்— சட்ட அமைச்சரின் அறிக்கை 644—648

. **சிறப்புக் குறிப்புகள்—**

(அ) சென்னை இராதாகிருஷ்ணன் நகரிலுள்ள வ.உ.சி. முன்னேற்றச் சங்கம் இடிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. 593—597

(ஆ) சுயநிதி பாலிடெக்னிக் ஆசிரியர்கள் பணி பாதுகாப்புக் கோரி உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து. 597—598

3. சிறப்புக் குறிப்புகள்—தொடர்ச்சி. பக்கங்கள்

(இ) கமுதி தொகுதியில் கல்லூரி மாணவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கை வாபஸ் பெற வேண்டியதன் அவசியம் குறித்து. 599—

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து. 630–631

4. சில பத்திரிக்கையாளர்கள் அவையைப் புறக்கணிக்கப் போவதாக வந்துள்ள செய்தி குறித்து 600–630

5. உரிமைப் பிரச்சினைகள்—

(அ) 25–3–1992 ஆம் நாளன்று அவையில் முதலமைச்சர் பேசியதை திரித்து 6-4-1992 ஆம் தேதியிட்ட 'ஸ்டேட்ஸ்மென்' இதழில் வெளி வந்துள்ள செய்தி குறித்து. 631–635

(ஆ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் 12–2–1992 ஆம் தேதிய 'ஜூனியர் விகடன்' பத்திரிகையில் பேரவை நடவடிக்கைகளைத் திரித்துக் கருத்துக்கள் கூறியதாகக் கூறப்படுவது பற்றிய பிரச்சினை குறித்து. 636–637

(இ) பேரவைத் தலைவர் ஏற்கெனவே தீர்ப்பளித்த பிரச்சினை பற்றி ''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா'' ஏப்ரல் 24—மே 1 இதழில் அதன் ஆசிரியர் அனில்தர்க்கர் வெளியிட்டுள்ள செய்திகள் குறித்து. 637–638

6. ''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா'' முன்னாள் கட்டுரை யாளர் கே.பி. சுனில், 'முரசொலி'' ஆசிரியர் மற்றும் ,,கோவை மாலை முரசு'' ஆசிரியர் ஆகியோரை பேரவை கூடாதபோது கைது செய்தால் பேரவைத் தலைவர் முன் ஆஜராகச் செய்யுமாறும் பேரவைக் கூடும்போது அவர்களைப் பேரவைமுன் பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று ஆஜராகச் செய்யுமாறும் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு. 636—

7. கவன ஈர்ப்பு—

(அ) அறிவொளி இயக்கம் கல்வி அறிவின் அவசியத்தை பிரச்சாரம் செய்வதற்கு மாறாக அரசியல் பிரச்சாரம் செய்வது குறித்து. 638–642

(ஆ) பேராவூரணியில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றப்போவது குறித்து. 642–643

164944



8. அறிக்கைகள் அளித்தல்— பக்கங்கள்

(அ) பொதுக் கணக்குக் குழு .. 643

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. 645–646

9. சட்ட முன் வடிவுகள் (ஆய்வுசெய்தல்) —

(அ) மோட்டார் வாகனங்கள் (தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு, 1992. 648–659

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் 648, 653–659

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் .. 649–650

திரு. ஜி. பழனிசாமி .. 651–652

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் .. 652–653

(ஆ) வழக்குரைஞர் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. 660

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி .. 650–663 –668

திரு. சி. ஞானசேகரன் .. 661–662

(இ) வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்ட முன்வடிவு, 1992. 662–673

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் .. 669–672

(ஈ) உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 673–676

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் .. 673–685

திரு. கே. கந்தசாமி .. 673–674

(உ) இந்திய முத்திரை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1992. 676–662

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் .. 676, 679-682

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு .. 676–677

திரு. வே. தம்புசாமி .. 677–678

9. சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி. பக்கங்கள்.

(ஊ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணா மலைப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 682–707

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் .. 682, 699-707

திரு. சி. ஞானசேகரன் .. 683–684

திரு. கே. செல்வராஜ் .. 684–686

டாக்டர் பீட்ரிக் டி'சோசா .. 686–688

திரு. வி.கே. லட்சுமணன் .. 688–691

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு .. 691–694

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் .. 694–699

(எ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணா மலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 707–708

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் .. 707–708

(ஏ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992. .. 709–710

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் .. 709–710

(ஐ) ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992. 711–712

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் .. 711–712

(ஒ) பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 713–714

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் .. 713–714

(ஓ) மாநில உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 1992. 715–723

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் .. 715–722

(ஔ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 723–729

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு .. 723, 727–729



9. சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தல்—தொடர்ச்சி. பக்கங்கள்

திரு. டி. சுதர்சனம் .. 723–724

திரு. கே. செல்வராஜ் .. 724–725

திரு. நா.சா. பழனிசாமி .. 725–726

திரு. ஆர். சிங்காரம் .. 727–

(ஆஆ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. .. 729–731

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு .. 729–731

(அஆ) ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு. 1992. 731–753

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் 731, 749–753

திரு. டி. சுதர்சனம் 732, 748–749

திரு. ச. அழகிரி .. 732–734, 742–748

(இஇ) நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 753–754

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி .. 753–754

(ஈஈ) நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. 1922. 755–757

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி .. 755–757

(உஉ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 760–761

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் .. 760–761

(ஊஊ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. 1992. 761–763

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் .. 761–762

10. அறிவிப்புகள்—

(அ) வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன் வடிவு, 1992 (ஆ.செ.). 669

(ஆ) உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.) 714

பக்கங்கள்

**10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.**

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.). 729

(ஈ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன் வடிவு, 1992 (ஆ.செ.). 757

(உ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.). 758

(ஊ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு. 763

(எ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு— 763–767

(i) மதிப்பீட்டுக் குழு .. 765

(ii) பொதுக் கணக்குக் குழு .. 764

(iii) பொது நிறுவனங்கள் குழு .. 766

(iv) அவை உரிமைக் குழு .. 767

(ஏ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்த விவரங்கள். 767–774

11. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 757–758

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 758–759

12. அரசினர் தீர்மானங்கள்—

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகிய வற்றைத் தளர்த்துதல். 759

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல். 774–775

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 775–777




**தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.**

**ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :
பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலைத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப்பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :
நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு,

1. வருவாய்த் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இராம வீரப்பன் ;

பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர் .. — மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :

கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல்பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.



1. பொதுப்பணித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :

பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட) நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபு சாரா எரி சக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப் பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:

உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. செ. ரகுபதி :

தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்;

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி.

15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :

வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இட வசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. சமூக நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி :

சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :

ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால் நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்

18. மீனளத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :

மீனளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்:

சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத்தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU. Thiru. **BHISHMA NARAIN SINGH.**

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. **The Hon. Dr. J. JAYALALITHA :**

Public, General Administration Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Oi.

2. Minister for Finance .. **The Hon. Dr. V.R. NEDUN AN:**

Finance, Planning, Ele[illegible] and Legislature.

3. Minister for Law .. **The Hon. Thiru K.A. KRISHNASAMY:**

Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies.

Minister for Revenue ... **The Hon. Thiru S.D. SOMASUNDARAM:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Backward Classes. — The Hon. Ur. ERAAMA VEERAPPAN :

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.

6. Minister for Education — The Hon. Thiru C. ARANGANAYAGAM :

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

7. Minister for Health .. The Hon. Thiru S. MUTHUSAMY :

Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

8. Minister for Transport .. The Hon. Thiru K. A. SENGOTTAYAN

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona.

9. Minister for Handloom and Textiles — The Hon. Thiru E. MADHUSUDHANAN

Handlooms and Textiles.

10. Minister for Public Works — The Hon. Thiru S. KANNAPPAN :

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. — The Hon. Thiru ALAGU THIRU-NAVUKKARASU :

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.



12. Minister for Food and Co-operation. — The Hon. Thiru G. VISWANATHAN :

Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

13. Minister for Labour — The Hon. Thiru S. RAGUPATHY :

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture — The Hon. Thiru Ku. PA. KRISHNAN :

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugar cane Development.

15. Minister for Housing and Urban Development. — The Hon. Thiru T. M. SELVA-GANAPATHI :

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare. .. The Hon. Thirumathi R. INDIRA-KUMARI :

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. .. The Hon. Thiru M. ANANDAN :

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

18. Minister for Fisheries .. The Hon. Thiru D. JAYAKUMAR: Fisheries.

19. Minister for Rural Industries. .. The Hon. Thiru S. NAGOOR MEERAN: Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்.

ாபுமிகு திரு. இரா. முத்தையா.

பேரவைத் துணைத் தலைவர்.

ரசிரியர் க. பொன்னுசாமி.

ற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ம. சின்னசாமி.
திரு. வ. சத்தியமூர்த்தி.
திரு. ஆர். சிங்காரம்.
திரு. வி. தம்புசாமி.
திரு. நா. சா. பழனிசாமி.

செயலாளர்

. செ. சு. ஜானகிராமன்.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | | |
|---|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு. பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகர், திரு. ஆர்., .. பி.ஏ. | .. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | .. | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | .. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி. | .. | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி.காம். | .. | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | .. | சார்புச் செயலாளர். |
| இராசசேகரன், திரு. சே. க., எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | | சார்புச் செயலாளர். |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி.எல். | ... | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல். | ... | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி. பி.ஏ., பி.ஜி.எல். | ... | சார்புச் செயலாளர். |
| பானுமதி அனந்தராஜன், திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | | சார்புச் செயலாளர். |

| | | |
|---|---|---|
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| முனீர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | .. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | .. | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | .. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி. சி. | .. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்.

| | | |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர். |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம். எஸ். | மயிலாடுதுறை. |
| 4. | அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு. |
| 5. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. | அரங்கநாதன், திரு. ஆர்.டி. | விருத்தாசலம். |
| 7. | அரங்கநாயகம், டாக்டர். செ. | தொண்டாமுத்தூர். |
| 8. | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி. |
| 9. | அழகிரி, திரு. ச. | சிதம்பரம். |
| 10. | அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. | அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13. | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம். |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம். |
| 15. | ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம். |
| 16. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி—1. |
| 17. | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 19. | இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி. |
| 20. | இராசமாணிக்கம், திரு. க. வெ.வீ. | பேலூர். |

| | | |
|---|---|---|
| 21. | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம். |
| 22. | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 23. | இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம். |
| 24. | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 25. | இராமசாமி அம்பலம், திரு. கே.ஆர். | திருவாடனை. |
| 26. | இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம். |
| 27. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | கம்பம். |
| 28. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 29. | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி. |
| 30. | இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | இளையாங்குடி. |
| 31. | இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். | செஞ்சி. |
| 32. | இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம். |
| 33. | இராஜமன்னார், திரு. சு.சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. | இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி. |
| 35. | இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம். |
| 36. | இராம. வீரப்பன், திரு. | காங்கேயம். |
| 37. | இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 38. | இளம்வழுதி, திரு. | எழும்பூர். |
| 39. | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40. | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. | ஏகாம்பர ரெட்டி, திரு. ஏ. | பள்ளிப்பட்டு. |



| | | |
|---|---|---|
| 42. | கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர். |
| 43. | கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை. |
| 44. | கந்தசாமி, திரு. கே. | தலைவாசல் (செ.வ.) |
| 45. | கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46. | கலியபெருமாள். திரு. ப. | திருவையாறு. |
| 47. | கலைச்செல்வி, திருமதி கே.எம். | காட்பாடி. |
| 48. | கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி. |
| 49. | கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி. |
| 50. | கனகவல்லி, திருமதி என்.சி. | விளாத்திகுளம். |
| 51. | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 52. | காந்திராஜன், திரு. ச. | வடசந்தூர் |
| 53. | காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 54. | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55. | கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | ஆயிரம்விளக்கு |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ்.எம். | தாம்பரம் |
| 57. | கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58. | கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59. | குப்பன், திரு. சு. | திருவொற்றியூர் |
| 60. | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61. | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62. | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63. | கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 64. | கோபாலகிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 65. | கோபால், டாக்டர் த. | நன்னிலம் (செ.வ.) |
| 66. | கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67. | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 68. | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69. | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர். |
| 70. | சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி |
| 71. | சண்முகம், திரு. எஸ்.வி. | மதுரை மேற்கு |
| 72. | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 73. | சந்திரசேகர், திரு. வி.பி. | பொள்ளாச்சி |
| 74. | சம்பத், திரு. ஏ. | வாணியம்பாடி |
| 75. | சரஸ்வதி, திருமதி அ.தி. | சத்தியமங்கலம் |
| 76. | சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |
| 77. | சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.) |
| 78. | சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79. | சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர் |
| 80. | சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 81. | சிங்காரம், திரு. கே. | மொரப்பூர் |
| 82. | சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 83. | சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |
| 84. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85. | சிவபதி, திரு. என்.ஆர். | தொட்டியம் |
| 86. | சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 87. | சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 88. | சின்னசாமி, திரு. வி.கே. | பவானிசாகர் |



| | | |
|---|---|---|
| 89. | சின்னப்பன், திரு. கே.கே. | ஜெயங்கொண்டம் |
| 90. | சீனியம்மாள், டாக்டர், மு. | அவினாசி (செ.வ.) |
| 91. | சீனிவாசன், திரு. ஆ.கு. | பெரணமல்லூர் |
| 92. | சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 93. | சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94. | சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 95. | சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. | சுந்தரம், திரு. எம்.கே. | தண்டராம்பட்டு |
| 97. | சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 98. | சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர் |
| 99. | சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |
| 100. | சுப்பிரமணியம், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101. | சுப்பிரமணியன், திரு. வி.என். | பெருந்துறை |
| 102. | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103. | சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 104. | சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 105. | சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 106. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 107. | செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணாநகர் |
| 108. | செல்லசாமி, திரு. ஏ.டி. | ஒட்டன்சத்திரம் |
| 109. | செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 110. | செல்வகணபதி, திரு. டி.எம். | திருச்செங்கோடு |
| 111. | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 112. | செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு |

| | | |
|---|---|---|
| 113. | செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114 | சேகர், டாக்டர் எம்.பி. | பெரம்பலூர் (செ.வ.) |
| 115. | சேகர், திரு எம்.ஜி. | பாலக்கோடு |
| 116. | சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 117. | சோமசுந்தரம், திரு. எஸ் டி. | தஞ்சாவூர் |
| 118. | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 119. | டேனியல்ராஜ், திரு. எஸ் | ஸ்ரீவைகுண்டம் |
| 120. | தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |
| 121. | தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |
| 122. | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 123. | தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம் |
| 124. | தமிழரசன், திரு. செ.கு. | வந்தவாசி (செ.வ.) |
| 125. | தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர் |
| 126. | தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127. | தர்மலிங்கம், திரு. சி. | அணைக்கட்டு |
| 128. | தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை |
| 129. | தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 130. | தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 131. | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 132. | தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 133. | திருநாவுக்கரசு, திரு. எஸ் | அறந்தாங்கி |
| 134. | துரை, திரு. எஸ்.எம். | ஆத்தூர் |
| 135. | துரைமுருகன், திரு. கு.சு. | பல்லடம் |
| 136. | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோயில் |
| 137. | தெய்வநாயகம், திரு. ஏ. | மதுரை மத்தி |



| | | |
|---|---|---|
| 138. | தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 139. | தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 140. | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141. | நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |
| 142. | நடேசன், திரு. மு. | சேலம்-2 |
| 143. | நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குனேரி |
| 144. | நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 145. | நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல் |
| 146. | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147. | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148. | பட்டாபிராமன், திரு. கா.ப. | காஞ்சிபுரம் |
| 149. | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150. | பரமசிவம், திரு. ஆர்.பி. | சின்னசேலம் |
| 151. | பரமசிவன், திரு. ஏ.எம். | சோழவந்தான் |
| 152. | பலராமன், திரு. உ. | பூங்காநகர் |
| 153. | பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154. | பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155. | பழனிசாமி, திரு. நா.சா. | கிணத்துக்கடவு |
| 156. | பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157. | பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158. | பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம் |
| 159. | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர் |
| 160. | பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161. | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |

| | | |
|---|---|---|
| 162. | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |
| 163. | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 164. | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166. | பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 167. | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 168. | பாலன், திரு. எம். கே. .. | சைதாப்பேட்டை |
| 169. | பாலையா, திரு. ஆ. .. | குளச்சல் |
| 170. | பீட்ரிக் டி. சோ. சா. டாக்டர் | நியமனம் |
| 171. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173. | புரட்சிமணி, திரு. ச. .. | மங்களூர் (செ.வ.) |
| 174. | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175. | பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார் |
| 176. | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ. வ.) |
| 177. | பெரியவீரன், திரு. எம். .. | பெரியகுளம் |
| 178. | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ம.ப.) |
| 179. | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 180. | பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 181. | பொன்னுசாமி, திரு. பெ. .. | தருமபுரி |
| 182. | பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ. வ.) |
| 183. | போளூர் வரதன், திரு. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 184. | மணிமேகலை, டாக்டர் | அரியலூர் |
| 185. | மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை |
| 186. | மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை |
| 187. | மதுசூதனன், திரு. இ. .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |



| | | |
|---|---|---|
| 188. | மரியமும் உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி |
| 189. | மல்லிகா, செல்வி. கோ. .. | புவனகிரி |
| 190. | மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர் |
| 191. | மாணிக்கம், திரு. சி. .. | ஈரோடு |
| 192. | மாலா, டாக்டர் ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193. | முத்துசாமி, திரு. சு. .. | பவானி |
| 194. | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 195. | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை |
| 196. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 197. | முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர் |
| 198. | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 199. | முனுசாமி, திரு. கா. பூ. .. | காவேரிப்பட்டிணம் |
| 200. | முஹம்மது ஆசிப், திரு. .. | திருவல்லிக்கேணி |
| 201. | மூர்த்தி, திரு. து. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 202. | மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில் |
| 203. | ரகுபதி, திரு. சே. .. | திருமயம் |
| 204. | ரங்கநாதன், திரு. ப. .. | புரசைவாக்கம் |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர் |
| 206. | ரத்தினவேல், திரு. த. .. | திருவெறும்பூர் |
| 207. | ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம் |
| 208. | ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. | தூத்துக்குடி |
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. .. | பொன்னேரி (செ. வ.) |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. .. | உப்பிலியாபுரம் (ம. ப.) |
| 211. | ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம் |
| 212. | ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம் |
| 213. | ராஜு, திரு. கே. ஆர். .. | கூடலூர் |
| 214. | ராஜு, திரு. கே. பி. .. | பேரூர் |

| | | |
|---|---|---|
| 215. | ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார்கோவில் (செ. வ.) |
| 216. | லட்சுமணன், திரு. வி. கே. .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217. | லாரன்ஸ், திரு. கு. .. | பத்மநாபபுரம் |
| 218. | லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219. | வரதராஜன், திரு. செ. து. .. | செங்கல்பட்டு |
| 220. | விசுவநாதன், திரு. ஜி. .. | ஆற்காடு |
| 221. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ. வ.) |
| 222. | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223. | வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர் |
| 224. | வேடியப்பன், திரு. தா. .. | போளூர் |
| 225. | வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை |
| 226. | வேலையா, திரு. டி. .. | திருநெல்வேலி |
| 227. | ஜனார்த்தனன், திரு. தே. .. | விழுப்புரம் |
| 228. | ஜானகிராமன், திரு. கோ. .. | மேல்மலையனூர் |
| 229. | ஜீனத் சர்புதீன், திருமதி .. | சேப்பாக்கம் |
| 230. | ஜெயக்குமார், திரு. எஸ். .. | தியாகராய நகர் |
| 231. | ஜெயகுமார், திரு. டி. .. | ராயபுரம் |
| 232. | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1 |
| 233. | ஜெயலலிதா, செல்வி ஜெ. .. | பர்கூர் |
| 234. | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர். . | ஆரணி |
| 235. | ஸ்ரீதரன், டாக்டர் அ. .. | வால்பாறை (செ. வ.) |

## பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## சித்திரை 16, ஆங்கிரச - திருவள்ளுவர் ஆண்டு 2023 1992 ஏப்ரல் 28, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை''

இயற்கையான அறிவோடு நூல் அறிவினையும் கொண்டுள்ளார்க்கு எதிராக நிற்கக் கூடிய சூழ்ச்சித் திறன்கள் எவையும் எடுபடாது.

## 1. வினாக்கள் - விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள், வினா எண் 647—திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

647—

### கல்லத்திகுளம் வாக்காளர்களின் பெயர்களை மாறாந்தை வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை.

*1925—திரு. எஸ். எஸ் ராமசுப்பு :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கல்லத்திகுளம் வாக்காளர்கள் பெயர்கள் தவறான முறையில் சுப்பையாபுரம் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதை மாறாந்தை வாக்காளர் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

சுப்பையாபுரம் மற்றும் மாறாந்தை என்பவை 217 ஆலங் குளம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலடங்கிய இரு வேறு ஊராட்சிகளாகும். கல்லத்திகுளம் என்னும் குக்கிராமம் மாறாந்தை ஊராட்சியில் பிளாக் எண் 5-ல் உள்ளது. கல்லத்திக் குளத்திற்கும் மாறாந்தைக்கும் நல்ல சாலை வசதி இல்லாமலிருந்தது, எனவே, கல்லத்திக்குளம் வாக்காளர்கள், சுப்பையாபுரம் வாக்காளர்களுக்கு அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியுடன் இணைக்கப்பட்டிருந்தனர். ஆகவே, இவர்களின் பெயர்கள் சுப்பையாபுரம் வாக்காளர் பட்டியலின் பாகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

2. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி வாக்காளர் பட்டியல்கள் வாக்குச்சாவடி வாரியாகத் தயாரிக்கப் படுவதால் ஒரு வாக்குச் சாவடியின் எண்ணும் அந்த வாக்குச் சாவடியுடன் இணைக்கப்பட்டுள்ள வாக்காளர்கள் அடங்கிய வாக்காளர் பட்டியலின் பாகம் எண்ணும் ஒன்றாக இருக்கும்.

3. தற்போது கல்லத்திக்குளத்திற்கும், மாறாந்தைக்கும் இடையே நல்ல சாலை வசதி உள்ளது. ஆகவே, கல்லத்திக்குளம் வாக்காளர்களின் பெயர்களை சுப்பையாபுரம் வாக்காளர் பட்டியல்களிலிருந்து நீக்கி மாறாந்தை வாக்காளர் சேர்த்து மாறாந்தையில் உள்ள வாக்குச்சாவடியுடன் இணைக்க லாம் என திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத் தேர்தல் அதிகாரி (மாவட்ட ஆட்சித் தலைவர்) பரிந்துரைத்துள்ளார். வாக்குச் சாவடிகளிலும் வாக்காளர் பட்டியலின் பாகங்களிலும் மாற்றங்கள் செய்ய இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் தேவை. ஆகவே, கல்லத்திக்குளத்தைச் சார்ந்த வாக்காளர்களின் பெயர்களை சுப்பையாபுரம் வாக்காளர் பட்டியலின் பாகம் எண் 28-லிருந்து நீக்கி, மாறாந்தை வாக்காளர் பட்டியலின் பாகத்தில் சேர்த்து அதற்கான ஒரு வாக்குச் சாவடியுடன் இணைக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லத்திகுளம் கிராமத்து மக்கள் சுப்பையா புரத்துப் பகுதியிலே உள்ள வாக்காளர் பட்டியலில் இருப்ப தனால், அங்கு சென்று வாக்களிக்கும்பொழுது ஏராளமான பிரச்சினைகள் வருகின்றன. அந்தப் பகுதி மக்கள் எஸ்.சி., எஸ்.டி. பிரிவைச் சேர்ந்த மிகவும் தாழ்த்தப்பட்ட பகுதி மக்களாக இருந்து கொண்டிருப்பவர்களுக்கு சுப்பையாபுரம் சென்று வாக்களிக்கச் செல்லும்பொழுது கடுமையான சண்டை கள் மூளுகின்றன. அதுபோல, அந்தப் பகுதி மக்கள் வாக்களிக்க முடியாத சூழ்நிலை உருவாகியிருப்பதனால் இந்தப் பகுதி மக்களை மாறாந்தையிலுள்ள அந்த வாக்காளர் பட்டியலிலே சேர்த்து



அவர்களை மாறாந்தை கிராமம் அருகிலே இருப்பதனால் அங்கு வந்து வாக்களிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுப்பையாபுரம் மற்றும் மாறாந்தை என்பவை 217 ஆலங்குளம் சட்டமன்றப் பேரவை தொகுயிலடங்கிய இருவேறு ஊராட்சிகளாகும். கல்லத்திகுளம் என்னும் குக்கிராமம் மாறாந்தை ஊராட்சியில் பிளாக் எண் 5-ல் உள்ளது. கல்லத்திக்குளத்திற்கும் மாறாந்தைக்கும் நல்ல சாலை வசதி இல்லாமல் இருந்தது. ஆகவே, வாக்காளர்கள் வசதியான இடத்தில் வாக்களிக்க வேண்டு மென்பதற்காக சுப்பையாபுரம் வாக்காளர்களுக்கு அமைக்கப் பட்டிருந்த சாவடியோடு இணைக்கப்பட்டது. பொதுவாக வாக்களர்களை எந்தெந்த சாவடியிலே அவர்கள் வாக்களிக்க வேண்டுமென்பது வாக்குசாவடியைப் பொறுத்துதான் உள்ளபடியே நிர்ணயிக்கிறது. என்றாலும், மக்களுடைய வசதி வாய்ப்பு களையும் நாம் கவனிகின்றோம். ஆனால் இப்பொழுது இடையிலே சாலை வசதியில்லாத காரணத்தினாலே வாக்களிக்கின்றவர்களுக்குச் சாதகமாக இருக்கவேண்டுமென் பதற்காக சுப்பையாபுரம் வாக்காளர் சாவடிக்கு மற்ற ஊரிலுள்ள்ளவர்கள் பொருத்தப்பட்டார்கள். இப்பொழுது நல்ல சாலை அமைக்கப்பட்டுவிட்டது. ஆகவேஅமைக்கப்பட்டதன் காரணமாக வாக்குசாவடிகளிலே வாக்காளர் பட்டியல் பாகங்கள் மாற்றங்கள் செய்ய ஒப்புதல் அளிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் எழுதியிருக்கிறார். ஆனால் இந்த வாக்குசாவடியிலிருந்து வாக்களர்களை இன்னொரு வாக்குசாவடிக்கு மாற்றுவது என்பது தேர்தல் ஆணையம் தான் முடிவு செய்யவேண்டும். ஆகவே, கல்லத்திகுளத்தை சார்ந்த வாக்காளர்களின் பெயர்களை சுப்பையாபுரம் வாக்காளர்பட்டியல் பாகம் 28—லிருந்து நீக்கி, மாறாந்தை வாக்காளர் பட்டியல் பாகத்தில் சேர்த்து அதற்கான ஒரு வாக்குச் சாவடியுடன் இணைக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய தேர்தல் ஆணையத்தினுடைய ஒப்புதல் வந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறை வேற்றப்படும்.

முற்பகல் 9—35

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை சரியான முறையில் பரிசீலனை செய்து ,ஒப்புதலை பெற்று வைப்பதாகச் சொன்னார்கள். அதேப்போன்று, தமிழகத்திலே பல்வேறு கிராமங்களில் வாக்குச்சாவடிகள் தூரத்தில் இருப்பதனால் வாகனங்களையெல்லாம்வைத்து பலலட்சக்கணக்கான ரூபாயைச்

செலவழிக்க வேண்டிய சூழ்நிலையும், அதேபோல் ஒரு இனத்து மக்களுக்கும் இன்னொரு இனத்து மக்களுக்கும் பிடிக்காததனால் அங்கே சென்று வாக்களிக்கும்போது பல்வேறு தகராறுகள் சண்டைகள் அங்கு உருவாவதற்கு காரணமாக அமைகிற சூழ்நிலையும் இன்னும் பல பகுதியிலே மக்கள் வாக்களிப்பதற்கு நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலபகுதி களிலே 15 கிலோ மீட்டர்கூட இன்றைக்கு ஊட்டி பகுதியை எடுத்துக்கொண்டாலும், என்னுடைய தொகுதியான ஆலங்குளத்தை எடுத்துக்கொண்டாலும் இதுபோன்றனத்தலைவோ கிராமங்கள்—மிக தொலைவிலே உள்ள சூழ்நிலையும் இருக்கிறது. இதுபோன்று தூரத்தில் அமைந்திருப்பதினால், அந்தப்பகுதி மக்களுக்கு சென்று வாக்களிக்கமுடியவில்லை. அந்தப்பகுதியிலே யாராவது இடையிலே மறிக்கிறார்கள். போன தடவை திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கூட இரண்டுபேர் நின்று கொண்டுஊரிலுள்ள மக்களை செல்லத் தாயார்புரம் என்ற பகுதி மக்களை அங்கு சென்று வாக்களிக்கவே விடவில்லை. அப்படி கடுமையான இடர்பாடுகள் எல்லாம்உள்ளதால் அந்தந்த கிராமத்திலே ஆங்காங்குள்ள பள்ளிக் கூடங்களிலேயே வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு வாக்குச் சாவடியில் 800 வாக்காளர்களிலிருந்து 1,200 வாக்கா ளர்கள் வரையில் இடம் பெறலாம் என்ற முறையிலேதான் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. அப்படி அமைக்கப்படு கிறபோது, பொதுமக்களுடைய வசதி வாய்ப்புகளெல்லாம் கருதி, அவர்களுக்கு அதிக இடர்பாடுகளும், துன்பங்களும் ஏற்படாத வகையிலே, எந்தெந்த இடத்திலே எப்படி எப்படி வாக்குச்சாவடி அமைக்கலாம் என்பதை அந்தந்த மாவட்டத்தினுடைய அதிகாரிகளைக் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர்களை கலந்து கொண்டுதான் ஆங்காங்கே அமைக்கப்படுகின்றன. ஊருக்கு ஊர் ஒரு வாக்குசாவடி அமைப்பது என்பது, இயலாத ஒன்று. ஏனென்றால், 100 பேர் 150 பேர், 200 பேருக்கு ஒரு வாக்குசாவடி என்று சொன்னால் அரசுக்கு—மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் —ஏராளமான செலவுகள் வரும். ஆகவே, காலையிலிருந்து ஆரம்பித்து மாலை 5 மணி வரையில் வாக்கு போடுவதற்கு எவ்வாறு வாக்காளர்களை ஒரு வாக்கு சாவடியில் இருந்தால் நல்லது என்ற கணக்கின் அடிப்படையிலே தான் 800 வாக்காளர்களிலிருந்து 1200 வாக்காளர்கள் வரையில் இருக்கலாம் என்று வைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று சண்டை சச்சரவுகள் எல்லாம் எவ்வளவு இட்டே இருந்தாலும்கூட கிட்டகிட்ட



வாக்குச்சாவடிகள் இருக்கின்ற இடத்திலேயும் சண்டைகள் வரும்; அந்தச் சண்டைகள் கட்சிக்கு, கட்சி, சாதிக்கு சாதி, தெருக்குத் தெரு, ஆளுக்குஆள் வரும் என்ற ஒன்றே தவிர ,அதைப்போய் நாம் இந்த வாக்குச் சாவடிகள் மூலம் தீர்க்க முடியாது. வசதி, வாய்ப்புகளைச் செய்யலாம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிகாட்டியதைப்போன்று ஒரு குறிப்பிட்ட ஊரிலே இருக்கிறவர்கள், முதலிலேமற்ற ஊருக்கு செல்ல முடியாத காரணத்தினால், முதலிலே சொல்லிய படி அதிலே நியாயம் இருக்கிறது என்று கருதி ,அதை மாற்றியமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று நான் சொன்னேன்; அதேப்போன்று, இடர்பாடுகளை யாராவது, எங்கேயாவது சுட்டிக்காட்டு வார்களேயானால், அது தனியாக ஆராயப்பட்டு, அவர்கள் எண்ணுகிறபடி அதிலே ஏதாவது மாற்றம் செய்ய முடியும் என்றால் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வாக்குச்சாவடிகள் அமைக்கும்போதும் அதை மாற்றியமைக்கும் போதும் அரசு அதிகாரிகளை மட்டும் கலந்து செய்யாமல், சட்டமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்து முடிவு செய்ய அரசு முன்வருமா அதேப்போன்று தொகுதிகள் மிகப் பெரிய அளவிலே இப்போது இருக்கின்றன. 2½ லட்சம், 3 லட்சம் வாக்காளர்கள் ஒவ்வொரு தொகுதியிலே இருக்கிறார்கள். அதைமாற்றி அமைப்பதற்கு மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு வாக்குச் சாவடியிலே இருக்கக்கூடிய வாக்காளர்களை ,இன்னொரு வாக்குசாவடிபட்டியிலிலே சேகரித்து விட்டதை, மறுபடியும் மாற்றுவது பற்றிய கேள்வி. நீங்கள் கேட்பது விரிவான ஒரு கேள்விக்குரியது. அதற்குத் தனிக் கேள்வி போடவும். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னது போன்று 800-லிருந்து 1,200 வரைக்கும் ஒரு பூத்திலே போட லாம். ஆனால் ஒரே ஊரிலேயே ஒரு பூத் இருக்கிறது ; இது பூத்-ஏ என்று வையுங்கள் ; ஏ பூத் இங்கே இருக்கிறது. இங்கே 900 வோட்டர்கள் இருக்கிறார்கள். இந்த 900 வோட்டர்களிலே, 600 வோட்டர்களை இந்த பூத்திலே போட்டும், மிச்சம் இருக்கிற 300 வோட்டர்களை ஒரு 5 மைல் அந்தப் பக்கம் சென்று போடக் கூடிய ஒரு நிலைமை பல இடங்களிலே இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் தயவு செய்து பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அதை அங்கங்கேயெல்லாம் வெளியிலே

[1992 ஏப்ரல் 28

விடாமல், அந்த ஊரிலேயே பூத்இருக்கிற காரணத்தினால்தான்
அங்கங்கேயே போடுவதற்கான நடவடிக்கை எடுக்குமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது
போன்று அப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால், அரசாங்கத்
தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாவட்ட ஆட்சித்
தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வரலாம். ஆக, இந்தச்
சங்கடங்களை நியாயப்படி, சட்டப்படி, முறைப்படி தீர்க்க முடியும்
என்றால் தீர்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேர்வைத்
தலைவர் அவர்களே, எந்த ஆண்டு அமைத்த வாக்குச்
சாவடிகள் ஆரம்பத்திலே அமைக்கப்பட்டன? அப்போது
அமைக்கப்பட்ட காலத்தில் பல கிராமங்களிலே பள்ளி
கள் இல்லாத காரணத்தினால் ஒரு ஊரை விட்டு இன்னொரு
ஊருக்கு பள்ளிகள் இருக்கிற இடத்திற்குப் போகிற ஒரு சூழ்நிலை
உருவானதால், ஆனால் இன்றைக்கு கிராமங்கள் தோறும் பள்ளிக்
கூடங்கள் இருக்கிற காரணத்தினால் — மாண்புமிகு இதயதெய்வம்
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் கிராமங்கள்
தோறும் ஆரம்பப் பள்ளிகள் உருவாகி இருக்கிற காரணத்தினால்
— ஆங்காங்கே மைல் கணக்கிலே, 4 மைல், 5 மைல் சென்று
வாக்களிக்க வேண்டியவர்கள், குறைந்த தூரத்திலேயே, பக்கத்
திலேயே அவரவர்கள் சொந்த ஊரிலேயே உள்ள பள்ளிகளில்
வாக்களிக்கிற நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர்
அவர்கள், இந்த அவையின் மூலமாக ஒரு அறிவிப்பை அறிவிப்பார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்
டேன். ஒரு குறிப்பிட்ட வாக்குச் சாவடியில் காலை 8 மணியிலிருந்து
மாலை 5 மணி வரையில் வாக்காளர்கள் வரவேண்டுமென்றால்
அந்த நேர அளவுக்கு அளிக்க முடியும் என்ற கணக்கின் அடிப்படை
யில்தான் 800 லிருந்து 1,200 வாக்காளர்கள் இருக்கிற அளவுக்கு
வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே
வாக்குச்சாவடி எப்படி அமைக்கப்படுகிறது என்றால் நிரந்தரமாக
அதே எண்ணிக்கையில் இல்லை. கிட்டத்தட்ட 1 இலட்சம்
வாக்காளர்கள் இருந்த காலத்தில் இருந்த தன்மையைவிட இப்
பொழுது 2 இலட்சமும் $2\frac{1}{4}$ இலட்சம் வாக்காளர்கள் ஒவ்வொரு
தொகுதிக்கும் போனதற்குப் பிறகு வாக்குச் சாவடிகளின்
எண்ணிக்கை தேர்தலுக்குத் தேர்தல் கூடுதலாகத்தான் ஆக்கப்
பட்டு வருகின்றன. வாக்குச்சாவடிகள் அமைப்பதற்கு இருக்கிற



1942 ஏப்ரல் 28]

அடிப்படை நோக்கம் 800—லிருந்து 1,200 வரையில் அடங்கும்
அளவுக்கு இருக்குமேயானால் அங்கே வாக்குச்சாவடிகளை வைக்க
லாம் என்ற அளவில் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை தேர்
தலுக்குத் தேர்தல் பெருகிக் கொண்டுதான் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 648, திரு.
து. மூர்த்தி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

648—

தீண்டாமை ஒழிப்பு குற்றங்களை விசாரிக்க நாகப்பட்டினத்தில்
நீதிமன்றம்.

* 8350— திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
விற்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பு குற்றங்களை பற்றி விசாரிப்பதற்கு
நாகப்பட்டினத்தில் ஒரு நீதிமன்றத்தை அமைக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

தீண்டாமை ஒழிப்பு குற்றங்களைப் பற்றி விசாரிப்பதற்கு
நாகப்பட்டினத்தில் ஒரு தனி குற்றவியல்நீதிமன்றத்தை அமைக்கும்
செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தீண்டாமை
அதிகமாகப் பெருகி இருந்தது. ஆனால், இன்றைக்கு தமிழகத்
தினுடைய காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தீண்டாமை எவ்வளவோ மிக
வாகக் குறைந்திருக்கிறது. எனவே, இந்த தீண்டாமை குற்றங்
களை ஒழிப்பதற்கும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் நாகப்
பட்டினம் — காயிதே மில்லத் மாவட்டம் நாகப்பட்டினத்தில்
தீண்டாமைக் குற்றங்களை ஒழிப்பதற்கு ஒரு தனி குற்றவியல்
நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்து அந்த நீதிமன்றம் எப்
பொழுது செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, Protection of Civil Right Courts
என்ற வகையில் தீண்டாமைக் குற்றங்களை விசாரிப்பதற்காக

தமிழ்நாட்டில், மதுரை, திருச்சி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இப்பொழுது செயல்படுகிறது. அடுத்து, போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நாகப்பட்டினத்திலேயும், கோயம்புத்தூரிலேயும் இரண்டு Protection of Civil Rights Court-ஐ தீண்டாமை வழக்குகளைப் பரிசீலனை செய்து தீர்ப்பதற்காக விரைவில் உருவாக்க இருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில், தீண்டாமை ஒழிப்புக் குற்றங்களை மற்ற மாவட்டத் தலை நகரங்களில் இருக்கின்ற செஷன்ஸ் கோர்ட்டுகளில் இந்த நான்கு இடங்கள் தவிர, மற்ற இடங்களில் தீண்டாமைக் குற்றங்களை விசாரிப்பதற்கு, செஷன்ஸ் கோர்ட்டிற்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தனி நீதிமன்றங்கள் அமைக்கின்ற வரையில் என்று இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீண்டாமை ஒழிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கோர்ட்டுக்கு வருகின்றபோது அந்தக் கோர்ட்டு தீர்ப்பு அளிக்கின்ற காலம் ஏறத்தாழ 2 ஆண்டு, 3 ஆண்டு காலம் வரையிலும் காலதாமதம் ஆகின்றது. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள் இப்படிக் காலதாமதம் ஆகின்ற காரணத்தினால் அவர்கள் அலைந்து பார்த்துவிட்டு, கடைசியில் இங்கே போனால் ஒன்றும் நடக்காது என்று அலுத்து விடுகிறார்கள். ஆகவே, ஒரு காலத்தை வரையறுத்து, அந்தக் காலத்திற்குள் இந்த வழக்குகளை முடிக்க வேண்டுமென்று அரசு கால நிர்ணயிப்புச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே காலவரையறை இருக்கிறது. ஆனால், நீதிமன்றங்களுடைய செயல்பாடுகளில் சில சுணக்கங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த எண்ணம் நிறைவேறாமல் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மையமாக கொண்டு, நீதிமன்றங்களுக்கு துரிதமாக வழக்குகளைப் பைசல் செய்ய அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 649. திரு. இராம. இராமநாதன். இருக்கையில் இல்லை.

வினா எண் 650, டாக்டர் வெ. புருஷோத்தமன் திரு. ச. புரட்சிமணி, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1992 ஏப்ரல் 28]

650—

பாடத் திட்டத்துடன் தொழிற்கல்விப் பயிற்சி அளித்தல்.

*1068—டாக்டர் வெ. புருஷோத்தமன்,

திரு. ச. புரட்சிமணி

டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆறாம் வகுப்பு முதல், பாடத் திட்டத்துடன் தொழிற்கல்விப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1 முதல் 8 வகுப்பு வரை பொதுவான பாடத் திட்டத்தோடு வாழ்க்கைக் கல்வி பாடத் திட்டமும், 9 மற்றும் 10 வகுப்புகளில் முன் தொழிற் கல்வி பாடத் திட்டமும், 11 மற்றும் 12 வகுப்புகளில் தனியாக தொழிற் கல்வி பாடத் திட்டமும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 9-45

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. தமிழ்நாட்டிலே வெறும் அக்கடமிக் கல்வி பயின்று எந்தவித வேலைவாய்ப்பும் இன்றி இளைய சமுதாயம் திண்டாடிக்கொண்டிருப்பது அனைவரும் அறிந்தது. 6-ஆம் வகுப்பிலிருந்து தொழில் கல்வி தருகிற திட்டத்தை அமல்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்; சுயமாக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கும்; மேலும் தொழில் கல்வியின் தரம் தலைசிறந்ததாக இருக்கும்; தலைசிறந்த தொழில் நுட்ப அறிஞர்களை பல துறைகளிலும் உருவாக்க முடியும். வருங்கால சந்ததியினர் எதிர்நோக்கி இருக்கின்ற சவால்களை ஈடுகட்டக்கூடிய வகையில் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருக்கின்ற, இந்தியாவிலேயே நாம் ஒரு முன்மாதிரி மாநிலமாகத் திகழ வேண்டும் என்று பாடுபட்டுவரும் தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே எதிர்காலத்தில் இக்கொள்கையைப் பரிசீலித்து குறைந்தபட்சம் தாலுக்காவுக்கு ஒரு தொழில் கல்வி பள்ளியையாவது அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல் குறைந்தபட்சம் தொழில் கல்வி சம்பந்தமாக ஒரு பாடத் திட்டத்தை ஏற்படுத்தி 6-ஆம் வகுப்பிலிருந்து தொழில் கல்வியைப் புகுத்த அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இனிமேல் பரிசீலிக்க வேண்டிய ஒன்றல்ல. ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தான் நான் பதிலாக இங்கே கூறி இருக்கிறேன். அது பல் வேறிடங்களில் வெற்றிகரமாகச் செயல்படாமல் இருக்கலாம். அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் இப்படி தொழில் கல்விக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேள்வி கேட்கக் கூடிய நிலைமைகள் உருவாகி இருக்கக்கூடும். தலைமையாசிரியர் பொறுப்பில் இருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள் இதில் தனி ஆர்வம் எடுத்துக்கொண்டு, தொழில் கல்வியை மாணவர்களுக்குப் போதிக்கிற இந்த விஷயத்தில் அவர்கள் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுவார்களேயானால் இந்தக் குறை நீங்கும். அரசைப் பொறுத்த மட்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன காரணங்களை எல்லாம் சொன்னாரோ அந்தக் காரணங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டுதான் ஏற்கனவே இதை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள், தொழில் கல்விக்கூடங்கள் இல்லாத இடங்களில், தொகுதிகளில் கிராமப்புறங்களின் தேவையான நவீன முறை விவசாயம், காய்கறி உற்பத்தி, விவசாயக் கருவிகள் உற்பத்தி, தையல், பூத்தையல், தச்சு வேலை, நெசவு, வெல்டிங் போன்ற பயிற்சிகளை அளிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க நிலையில் இருக்கின்ற பள்ளிகளில், உயர்நிலைப்பள்ளிகளில், மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி எப்படி நடத்தப்படுகிறது என்பதைத்தான் இங்கே பதிலில் குறிப்பிட்டிருந்தேன். அது தவிர பயிற்சித் துறையின் சார்பாக தொழில் பயிற்சி நிலையங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு, நடைபெற்று வருகின்றன. புதிதாக ஆரம்பித்து நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இன்ஜினியரிங் கல்லூரிகள் நிறைய ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. வேலையில்லாத் திண்டாத்தை போக்கவும், நம்முடைய பொருளாதார நிலையை உயர்த்தவும், வீணாகிக் கொண்டிருக்கக்கூடிய மனித சக்தியைப் பண்படுத்துகிற ஒரு முயற்சியாக கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரைக்கும் தரப்படுகிற தொழில் கல்வியை இந்த அரசு நினைக்கிறது: ஏற்றுக்கொள்கிறது.

மாண்புமிகு போவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.





டாக்டர் அ. ஸ்ரீதரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொடக்கப் பள்ளி முதல் பள்ளி இறுதி வரை தொழில் கல்வி பயில வேண்டுமென்று ஒரு நிலை இங்கிலாந்து நாட்டிலே இருப்பதைப் போல, அதாவது 'த்ரீ டையர் சிஸ்டம்' போல தொழில் கல்வியையும் சேர்த்து பள்ளிகளில் பயில்வதற்கு அரசாங்கம் புதிய முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தமட்டில் முயற்சி எடுப்பதில் எந்தக் குறையையும் நாங்கள் வைக்கவில்லை. அதற்கேற்ற ஒரு ஒத்துழைப்புதான் ஆசிரியப் பெருமக்களிடத்திலிருந்தும், பொதுமக்களிடத்திலிருந்தும் நாம் எதிர்பார்க்கிறோம். பொதுவாக ஒன்றாவது வகுப்பில் சேர்க்கிறபோது பெரும்பாலான பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் தங்களுடைய மகன் இன்ஜினியராக, அல்லது டாக்டராக வரவேண்டுமென்றுதான் நினைக்கிறார்களே தவிர, அப்படி வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது அதாவது ஒரு தொழில் கல்வி கற்றுக்கொண்டு வாழ்க்கையில் சுதந்திரமாக வாழ்கிற சக்தியை அவர்கள் பெறவேண்டும் என்று பெற்றோர்கள் நினைப்பதில்லை. அவர்கள் ஒரு இறுதி நோக்கத்தை வைத்துக் கொண்டு, அதற்கு உரிய தகுதி தன்னுடைய குழந்தைக்கு இருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றிக் கூட கவலைப்படாமல் அந்தப் படிப்பினை அந்தக் குழந்தைக்குத் தர முயற்சிக்கிறார்கள். அதன் காரணமாக 7-வதிலே நிற்கின்றவர்கள், 8-வதிலே நிற்கின்றவர்கள, 10-வதோடு நின்று விடுகின்றவர்கள், 12 வதோடு நின்று விடுகின்றவர்கள் என்ற அளவிற்கு 'டிராப் அவுட்ஸ்' எண்ணிக்கை அதிகமாக இருந்து வருகிறது.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 651, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

651—

## இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பித்தல்

*3369— டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்துள்ள முடிவு என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் போது கோயம்புத்தூர், சிதம்பரம், பெருந்துறை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்காக தினசரி பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டு ஒவ்வொரு அல்லோபதி மருத்துவருக்கும் இந்திய மருத்துவச் சங்கம் அதைப் பற்றி விவரம் அனுப்பியது. இப்போது அரசு தனியார் மருத்துக் கல்லூரிகளை ஆரம்பிப்பது இல்லை என்று முடிவு செய்துள்ளது. தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும்போது இந்திய மருத்துவச் சங்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கான அனுமதி கொடுப்பதில்லை என்ற ஒரு கொள்கை முடிவை அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்துள்ளது. இப்போது அநேகமாக அதற்கான பதிலைச் சொல்லுவதற்கான வாய்ப்பில்லை என்று கருதுகிறேன். அது பற்றி ஆலோசிக்கும்போது கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அதைப்பற்றி ஆலோசிப்பதற்கான வாய்ப்பே இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்ற இடங்களில் தான் மக்களுக்கு நவீன மருத்துவ வசதி கிடைக்கிறது. ஆகவே, புதிய மருத்துவக் கல்லூரிகள் அரசு சார்பிலே அல்லது தனியார் துறையிலே ஆரம்பிக்கும்போது பின் தங்கிய பகுதிகளில் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத பகுதிகளில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்ற இடத்திலேதான் நவீன மருத்துவ வசதி கிடைக்கிறது என்பதை முழுமையாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கே கொஞ்சம் கூடுதலாக வசதி இருக்கலாம். ஆனால் மாவட்ட தலைநகரங்களிலே தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் அதே போல தாலுக்கா மருத்துவ



மனைகளையும் வலுவாக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே எங்கெங்கே மருத்துவக் கல்லூரி வருகிறதோ அங்கே தான் மருத்துவ வசதி கிடைக்கும் என்ற கொள்கையை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மத்திய சுகாதார அமைச்சர் திரு. பொட்டேதார் அவர்கள் கோவையில் பேசுகின்றபோது மருத்துவக் கல்லூரிகள் அரசுத் துறையில் ஆரம்பிக்க ஒரு சூழ்நிலையில் தனியார்கள் ஆரம்பிப்பதற்கு நாங்கள் அனுமதி கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்களே அது நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் பத்திரிகையிலே பார்த்தேன். ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற நிலையை ஏற்கெனவே எவ்வளவு இடங்கள் இருக்கின்றன; எவ்வளவு கல்லூரிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து அவசியம் ஏற்பட்டால் அரசாங்கத்திலே ஆரம்பிக்கப்படும். ஆனால் அவசியம் இல்லாத நேரத்தில் அதைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் பத்திரிகையிலே அதைப் பற்றிப் பார்த்தேன். எந்தச் சூழ்நிலையிலே அவர் சொல்லியிருக்கிறார் என்று எல்லாம் அரசாங்கத்திற்கு எந்தவிதமான தாக்கீதும் முறையாக அரசுப்படி வரவில்லை. எனவே, அவர்கள் சொல்லியதை பத்திரிகையிலே பார்த்த பின்னாலேயே அதை வைத்துக் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது, இதை வைத்துக்கொண்டு எந்த ஒரு முடிவுக்கும் வந்துவிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பொறியியல் மற்றும் இன்ஜினியரிங் மாணவர்களுக்காக தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையிலே இன்ஜினியரிங் கல்லூரி அமைத்து இருப்பதைப் போல பிராக்டீஸ் இல்லாத ஏழை மருத்துவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யும் மருத்துவர்கள் குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் முறையிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மருத்துவக் கல்லூரியை அமைத்து அந்த ஏழை மருத்துவர்களுக்கு உதவி செய்வதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1992 எப்ரல் 28

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களிலே யார் யாருக்கு பிராக்டீஸ் இல்லை என்று நாம் தேடிக்கொண்டுபோய் அவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்குவதற்கான நடவடிக்கையை நிச்சயமாக நம்மால் எடுக்க முடியாது. காரணம் அவர்கள் மருத்துவர்கள் ஆன பின்னாலே அவர்களுடைய குழந்தைகள் ஓரளவுக்கு மற்றவர்களுடைய குழந்தைகளோடு நல்ல நிலையிலே படிப்பதற்கான வாய்ப்பை அவர்கள் நிச்சயமாகப் பெறுகிறார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. எனவே, அதற்காக ஒரு தனி ஒதுக்கீட்டை செய்வோமானால் மற்றவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து நம்மை எல்லோரும் குறை சொல்லிவிடுவார்கள் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்பொழுது மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில், மிகச் சிலவே இருக்கிற காரணத்தால் இன்று மைனாரிட்டி இன்ஸ்ட்டிட்யூசன் நடத்தக்கூடிய மருத்துவக் கல்லூரிகள் அந்த மைனாரிட்டி இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து அதிகமான மாணவர்களைச் சேர்க்கிறார்கள். மற்ற இனத்தவர்களுக்கு அங்கே இந்த சீட்டுகள் கொடுக்கப்படுவதில்லை. குறிப்பாக வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் பொதுவாக 90 சதவிகிதத்தை அவர்களே அனுபவித்து விடுவார்கள். அதில் 50 சதவிகிதத்தை மட்டும் அவர்களுக்கு அளித்துவிட்டு மீதி 50 சதகிவிதத்தை மற்ற மதத்தவர்களுக்கும் இனத்தவர்களுக்கும் பிரித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்பொழுது ஒரே ஒரு கல்லூரி தான் இப்படி இருக்கிறது. மைனாரிட்டி ஆண்டில் நாம் தலையிட முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். எனவே, அநாவசியமாக பிரச்சினைகளை அதிலே கிளப்பாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 652 திரு. எஸ். சண்முகநாதன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



1992 எப்ரல் 28]

652—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

* 4791 —திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியம் வெட்டன்விடுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியம் வெட்டன்விடுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகநாதன் அவர்கள கடந்த ஒருமாத காலமாக உடல்நிலை சரியில்லாமல் கஷ்டமான நிலையில் இருக்கிறார். அவர் குணமடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் வேண்டி விரும்பி, ஆண்டவனை இறைஞ்சி வேண்டுவதுடன், அவர் கேட்ட கேள்வியைப் பொறுத்தவரை, வெட்டன்விடுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே திடீரென்று ஆஸ்பத்திரிக்கு போக வேண்டுமென்று சொன்னால் ஆலங்குடிக்கு தான் வர வேண்டும். அந்த ஊரில் ஒரே ஒரு பஸ்தான் போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த வெட்டன்விடுதிக்கு ஒரு சப் சென்டராவது துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப் சென்டரைப் பற்றியல்ல. சப் சென்டர் என்று சொன்னால் அங்கே எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறது என்ற கணக்கை எல்லாம் தனியாக அந்தக் கிராமத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கலாம். அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் பற்றிதான் சொல்லியிருக்கிறார்கள். இந்த கறம்பக்குடி ஒன்றியத்தில் 89,900 பேர் ஜனத்தொகை என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஏற்கெனவே 6 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 30 ஆயிரம் பேருக்கு ஒரு பி.எச்.சி. என்று வகுத்துக்கொண்டு அவற்றை செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் இங்கே அதைவிட அதிகமாக இருக்கிறது. ஏறத்தாழ 6 இடங்களில் பி.எச்.சி. இருக்கின்ற காரணத்தினால் அந்த இடத்தில் அவசியம் இல்லையென்று குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதை செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 653, செல்வி பி. நிர்மலா, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

653—

ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழக டிப்போக்கள்.

*1946—செல்வி பி. நிர்மலா :

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் இயங்கும் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழக டிப்போக்கள் எங்கெங்கு உள்ளன :

(ஆ) டிப்போக்களில் உள்ள பழைய உதிரி பாகங்களும் இஞ்சின் ஆயிலும் எந்த அடிப்படையில் விற்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகக் கிளைகள் திண்டுக்கல்லில் மூன்றும், பழனியில் இரண்டும், கம்பத்தில் இரண்டும் மற்றும் வத்தலக்குண்டு, பெரிய குளம், தேனி, போடி, குமுளி ஆகிய ஊர்களில் முறையே ஒவ்வொன்றும் உள்ளன.

(ஆ) டிப்போக்களில் உள்ள பழைய உதிரிபாகங்கள் பொது ஏலம்/பொது விற்பனை மூலமாக தினசரி நாளிதழ்களில் முறையாக விளம்பரப்படுத்தப்பட்டு விற்கப்படுகிறது. இஞ்சின் ஆயில் மைய விற்பனை கூடத்திற்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து சேரன் பொறியியற் கழகம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு மறுபடியும் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் விரிவான, விளக்கமான நல்ல பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 654, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

654—

நெசவுத் தொழிலாளர்களுக்கு கண்ட்ரோல் விலையில் நூல் வழங்கல்.

* 2424—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நகரிலும், பக்கத்து கிராமங்களான அனுப்பானடி நிலையூர், கிருஷ்ணாபுரம் காலனி, சுந்தரராசன்பட்டி, வண்டியூர்





பகுதிகளில் நெசவுத் தொழிலாளர்களுக்கு அரசு கண்ட்ரோல் விலையில் நூல் வழங்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்த 2 மாத காலத்திற்குள்ளாக சிட்டா நூலினுடைய விலை உயர்வையொட்டி தமிழகத்திலுள்ள தனியார் துறையைச் சார்ந்த அனைவருக்குமே கைத்தறி நூற்பாலைகளின் வாயிலாக மனித நேயத்துடனும், தாய் உள்ளத்துடனும் 2,000 பேல்கள் சிட்டாநூல் குறைந்த விலையில் வினியோகம் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். அந்த ஆணைக்கு இணங்க 898 சிட்டாநூல் அனுப்ப பாண்டி, நிலையூர், கிருஷ்ணாபுரம். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அந்த ஊரின் பெயர் அனுப்பானடி. ஊரின் பெயரையே மாற்றிவிடுகிறீர்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : சுந்தரராசன்பட்டி மற்றும் வாண்டியூர். . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாண்டியூர் அல்ல; வண்டியூர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : வண்டியூர் போன்ற பகுதிகளுக்கு 898 பேல்கள் சிட்டாநூல் சலுகை விலையில் வினியோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–00

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே, குறிப்பாக நெசவுத் தொழிலில் அதிகமாக மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் மதுரை நகரில் அனுப்பானடி, நிலையூர், கிருஷ்ணாபுரம் காலனி, சுந்தரராசன்பட்டி, வண்டியூர் போன்ற பகுதிகளிலே உள்ள நெசவாளர்களுக்கு கைத்தறி நூற்பாலை-மில்-மூலமாக சிட்டா நூல் வழங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதிலே ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த நெசவாளர்களோ அல்லது சங்கத்தினுடைய உறுப்பினர்களோ கைத்தறி நூற்பாலைக்குச் சென்று நெசவு செய்வதற்குச் சம்பந்தப்பட்ட கச்சாப் பொருளை, நூலை கேட்டால் உறுப்பினர்களுக்குக் கொடுத்தாகிவிட்டது என்ற ஒரே மாதிரியான மாமூல் பதிலைத்தான் சொல்கிறார்கள். அவர்களுக்கு கோட்டா முறையிலே சிட்டாநூல் வழங்கப்படுவதில்லை. அதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 எப்ரல் 28

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுவரையிலும் அப்படிப்பட்ட குறை
பாடுகள் ஏதும் வரவில்லை. குறிப்பாக மதுரை மாவட்டத்தில்
மொத்தம் 28,464 கைத்தறிகள் உள்ளன. இவற்றில் மதுரை
நகரில் 1,554 கைத்தறிகள் உள்ளன. இதற்குத் தேவைப்படுகிற
நூல், கூட்டுறவுகளுக்கு 1,453 பேல்கள், தனியார்களுக்கு
2,384 பேல்கள் சிட்டா நூல் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட
புகார்கள் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தெளிவாகத் தெரிவிப்பார்களேயானால் அதற்குத் தக்க நட
வடிக்கை எடுக்கப்படும். இவை நேரடியாக நூற்பாலைகள்
மூலமாக விநியோகம் செய்யப்படுவதில்லை. அந்தச் சரகத்தின்
ஏ.டி. மூலமாகத்தான் விநியோகம் செய்யப்படுகிறது என்பதை
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுரைப் பகுதியில் உள்ள கைத்தறி துணை இயக்கு
நர் மூலமாக சம்பந்தப்பட்ட நெசவாளர்களுக்கு நூல்
வழங்கப்படுவதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால்
நடைமுறையில் பார்த்தால், ஏ.டி. முதலாளிக்குச் சாதகமாக
நின்று, நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கோட்டா
நூலை முதலாளிகளுக்கே மாற்றித் தந்து, கோட்டாவை
முறைகேடாகப் பயன்படுத்துகிறார்கள். அந்தக் குறையைப்
போக்க வேண்டுமென்றால் அரசே யார்ன் டெப்போ என்று
ஏற்படுத்தி, அதிலே நெசவாளர்களை உறுப்பினர்களாகச்
சேர்த்து, அந்த யார்ன் டெப்போ மூலம் கைத்தறி நெசவாளர்
களுக்கு நூல் வழங்க ஆவன செய்யப்படுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ளவர்
களுக்கு கோ-ஆப்டெக்ஸ் வாயிலாகத் தரப்படுகிறது. தனி
யார்களைப் பொறுத்தவரையில், தனிப்பட்டவர்கள், தனிப்
பட்ட லாபத்தை ஈட்டக்கூடியவர்களைப் பொறுத்தவரையில்,
அதனுடைய விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய
அரசிடத்தில் இருக்கிறது. பொதுவாக நூலின் விலையை
நிர்ணயிப்பது, தனியார் நூற்பாலைகள் வாயிலாக சிட்டா
நூல் உற்பத்தி செய்வது போன்றவைகள் மத்திய அரசிடத்தில்
இருக்கிறது. அதிலே முடிவு எடுக்க வேண்டியவர்கள் மத்திய
அரசே தவிர நாமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு
நெசவாளர் பேரில் அவ்வளவு அக்கறை இருக்குமேயானால், அந்த
நெசவாளர்களைக் கூட்டுறவின்கீழ் கொண்டுவருவதற்கான
ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொள்வார்களானால், , கூட்டுறவுத்
துறையின்கீழ் அனைத்து சலுகைகளும் அந்த நெசவாளர்கள்
பெறுவார்கள். எனவே கைத்தறி நெசவாளர்கள் பேரில்
அக்கறை உள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைகளை



1992 ஏப்ரல் 28]

எல்லாம் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவர ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 616, திரு. சோ. இராசாராமன், திருமதி கே. மரியம் உல் ஆசியா, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

616—

சிட்டா நூல் குறைந்த விலையில் கிடைக்க நடவடிக்கை

* 2843—திரு. சோ. இராசாராமன்,

திருமதி கே. மரியம் உல் ஆசியா,

திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் சிட்டா நூல் கிடைக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கைத்தறிக்குத் தேவையான சிட்டா நூல் 1991 ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையிலும் மத்திய அரசினுடைய ஏற்றுமதிக் கொள்கை கோளாறின் காரணமாக சிட்டா நூல் விலை உயர்ந்தது. இதை உணர்ந்து, தாயுள்ளத்துத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த 2 மாத காலத்திற்குள்ளாக நெசவாளர்கள் படுகிற துன்பத்தை ஒட்டி 2000 பேல்கள் கூட்டுறவு நூற்பாலைகள் வாயிலாகக் குறைந்த விலையில் விநியோகிக்க வேண்டுமென்று சொல்லி, அனைத்துப் பகுதியிலே இருக்கிற நூற்பாலைகளிலிருந்து கைத்தறி இயக்குநரால் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து சரகங்களுக்கும் வழங்கப்பட்டது. கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ளவர்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக, குறைந்த விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

[1992 ஏப்ரல் 28

முற்பகல் 10—05

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு நெசவாளர்களுக்கு
சிட்டா நூல் சுலபமான முறையில் கிடைப்பதற்காக வலை
குறைக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். அதற்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலை
விக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த
கைத்தறி நெசவாளர்கள் தனியார் ஆலைகளையே பெரிதும்
நம்பியிருக்க வேண்டியிருப்பதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.
கூட்டுறவு ஆலைகள் மூலம் அவர்களுக்கு உரிய நேரத்தில் நியாய
விலையில் சிட்டா நூல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அதிகமான நூற்பாலை
கள் தனியாரிடத்தில் தான் உள்ளன. தனியார் 50 விழுக்காடு
சிட்டா நூல் உற்பத்தி செய்ய வேண்டுமென்று மத்திய அரசின்
ஆணைக்கிணங்க தமிழக அரசும் அவ்வாறு மாவட்ட ஆட்சித்
தலைவர்களுக்கு ஆணைகள் பிறப்பித்துள்ளது. பதுக்கலைத்
தடுப்பதற்காகவும் மற்றும் நூல் சரிவர வினியோகிக்கப்படுவதற்
காகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்
டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குறை
பாடுகளை சுட்டிக்காட்டுவார்களேயானால் அதற்கான தக்க நட
வடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது தனியார்
நூற்பாலைகள் சிட்டா நூல் தயாரிக்க வேண்டுமென்ற
ஆணையை மத்திய அரசு பிறப்பித்தது என்றார்கள். ஆனால்,
தனியார் ஆலையைச் சேர்ந்தவர்கள் அதற்கு இப்போது
தடையாணை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தடையாணை
பெற்றதன் மூலமாக அவர்கள் சிட்டா நூலை தயாரிப்பதையே
விட்டுவிட்டார்கள். 18 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே சிட்டா
நூலை தயாரித்து கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் கைத்தறி
நெசவாளர்களுக்கு வழங்கி வருகிறார்கள். ஆனால் கூட்டுறவு
சொசைட்டியைச் சேர்ந்தவர்கள் அந்த நூலைக் குறைந்த
விலைக்கு வாங்கி, தனியார் பவர்லூம்- களுக்கு விற்றுவிடுவது
அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அதைத் தடுப்பதற்காக
உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து, மற்ற தனியார்
நெசவாளர்களுக்கும் வினியோகிக்கிற முறையை அரசு கொண்டு
வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1453 கூட்டுறவுச் சங்கங்கள்
உள்ளன. அதில் ஏறத்தாழ 5 லட்சம் நெசவாளர்கள்
அங்கத்தினர்களாக உள்ளனர். இந்த நெசவாளர்களின் நலனைக்
கருதித்தான் கூட்டுறவு நூற்பாலைகளில், முன்னால் இருந்த
மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கையில் இருந்த கோளாறு
காரணமாக ஏற்பட்டு இருக்கிற நஷ்டத்தையும்
பொருட்படுத்தாமல் இன்றைய தாயுள்ளம் கொண்ட தலைவியாக
இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் நூற்பாலைகளில் உற்பத்தி
செய்யப்படும் சிட்டா நூலை குறைந்த விலையில் கூட்டுறவுத்
துறையைச் சார்ந்தவர்களுக்கு வினியோகிக்க வேண்டுமென்று
அன்பு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதற்கிணங்க
கூட்டுறவுத்துறையின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குத்
தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக்
காட்டியிருக்கிற அந்த சம்பவங்கள் பற்றி எனக்கும் சில
செய்திகள் வந்திருக்கின்றன. குறிப்பாக எந்தெந்த சரகத்தில்
எந்தெந்த அதிகாரிகள் இப்படி செய்கிறார்கள் என்று கோடிட்டுக்
காட்டுவார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவர்
எப்படிப்பட்ட கொம்பாதி கொம்பனாக இருந்தாலும் தவறு
செய்பவன் இந்த ஆட்சியில் தண்டிக்கப்படுவான், தண்டிக்கப்படு
வான் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் அப்படி தவறு
செய்பவர்களுக்கு தண்டனை தர தயங்க மாட்டார்கள்
என்பதை இந்த அவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக உள்ள இடங்
களில் கன்ட்ரோல் விலையில் நூல் கிடைப்பதற்காக அமைச்சர்
அவர்கள் முன்னுரிமை கொடுப்பதாக தன்னுடைய பதிலுரையில்
கூறினார்கள். பரமக்குடியிலும், எமனேஸ்வரத்திலும் கிட்டத்
தட்ட 45 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே, அவர்
களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில், கோ-ஆப்டெக்ஸ்
மூலம் நூல் கொடுக்க அமைச்சர் உத்தரவிடுவாரா என்று அறிய
விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவை.
தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் உள்ள அனைத்
நெசவாளர்களும் ஒரே நிலையிலேதான் பார்க்கப்படுகிறார்கள்
இதைப் பொறுத்த அளவில் பரமக்குடிக்கு என்று ஒரு சட்டம்
இல்லை; மதுரை மாநகராட்சிக்கென்று ஒரு சட்டம் இல்லை.
அனைத்து நெசவாளர்களுக்கும் ஒரே நிலையான சட்டம்தான்.
இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக
மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 580, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 655, திரு. சி. தாமோதரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

655—

தென்பெண்ணையாற்றின் வலதுகரை உடைபட்டதை சரிசெய்தல்

*9697—திரு. சி. தாமோதரன்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் கண்டரக்கோட்டை முதல் மேல்குமாரமங்கலம் கிராமம் வரை உள்ள தென்பெண்ணையாற்றின் வலதுகரை உடைபட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உடைப்பை சரி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெனபெண்ணையாற்றின் வலது கரை தாழ்வாக இருப்பதாலும், புலவனூர் கிராமம் வரை 300 மீட்டர் நீளத்திற்கு பலமான உடைப்பு ஏற்பட்டிருப்பதாலும் இந்தப் பகுதிவாழ் மக்களின் விளை நிலங்கள் மணல் மேடாகியும், பயிர்ச்சேதம் ஏற்பட்டும், வீடுகளை இழந்தும் உள்ளனர். இப்பகுதியில் உள்ள மேல் குமாரமங்கலம் என்பது நான் வசிக்கின்ற சொந்த கிராமமாகும். எதிர்காலத்தில் இவ்வாறு சேதம் ஏற்படாமல் இருக்க இந்த குறிப்பிட்ட 4 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச்சுவர் அமைக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு இவ்வாண்டே நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்தக் கேள்வி சம்பந்தமான பதிலை நேற்றைக்குக் கூட கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விவரமாக அறிக்கையாக வைக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இந்த மன்றத்திலே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் கூறியிருக்கின்ற பிரச்சினையில் எந்த அளவிற்குச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை எடுத்



திருக்கிறோம் என்பதை நேற்றே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது நிரந்தரமாக எதிர்காலத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப இந்தப் பகுதியினுடைய குறைகள் களையப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 656, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

656—

பழுதடைந்த குடிநீர் குழாய் சீர்செய்தல்.

*1525—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம் வட்டம், நாகப்பட்டினம் ஒன்றியத்தில் உள்ள எட்டுக்குடி ஊராட்சிக்கு வரும் குடிநீர்க் குழாய் பழுதடைந்து குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டிணம் காயிதேமில்லத் மாவட்டம், நாகப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எட்டுகுடி ஊராட்சிக்கு வரும் குடிநீர் குழாய் தற்போது நல்ல நிலையில் தடையின்றி குடிநீர் வழங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருந்து நீரேற்றக்கூடிய அந்தக் குழாய் ஆழ்குழாயாக அமைந்திருக்கிற காரணத்தால் பூமிக்கு அடியில் இருக்கிற பாகங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு, காலத்தில் சீர் செய்யப்படாமல் குடிதண்ணீர் விநியோகம் பல மாதங்களாக நடைபெறாமல் தடைபடுகிறது. ஆகவே, அந்த ஆழ்குழாய் கிணறுகள் என்பதை மாற்றி கேணியாக போட்டு அதன் மூலம் நீரேற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 28

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. ஆனால் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் கோடைக்காலம், தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிற நேரம். ஆகவே, விரைவாக பரிசீலவித்து கேணி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எட்டுக்குடியிலே ஓராண்டுக்கு முன்னால் ஒரு கேணி கட்டப்பட்டு இன்னமும் அந்த கேணிக்கு பம்புசெட்டுகள் கட்டாமல் தண்ணீர் விநியோகிக்கப்படாமல் அப்படியே அந்த தண்ணீர் கெட்டுப் போயிருக்கிறது. அதையும் சுத்திகரித்து விரைவாக நீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுக்குடி பகுதியைச் சேர்ந்த கிராம மக்களுக்கு நல்ல குடி தண்ணீர் வழங்குவதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 657, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

657—

## பொய்த்த கிணறுகளுக்கு கடன் தள்ளுபடித் திட்டம்.

*4443—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பொய்த்த கிணறு கடன் தள்ளுபடித் திட்டம் சரியான முறையில் அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளால் பொய்த்த கிணறுகள் நிதித்திட்டம் சரியான முறையில் அமல்படுத்தப் பட்டு வருகிறது. 1—4—1968 முதல் 30—9—1991 வரை இத்திட்டத்தின் மூலம் 3194 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதனுடைய மொத்தம் ரூ. 220.37 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 எப்ரல் 28]

முற்பகல் 10–15

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மூலமாக கிணறுகளை வெட்டுவதற்கு கடன் கொடுத்தார்களேயல்லாமல் அந்த குறிப்பிட்ட இடத்திலே கிணறு வெட்டினால் தண்ணீர் கிடைக்குமா என்று புவியியல் நிபுணர்களுடைய ஆலோசனை கொடுக்கப்படவில்லை. அதனால் பல இலட்சம் கிணறுகள் பொய்த்து இருக்கின்றன. எனவே இப்போது பொய்த்த கிணறுகள் அடிப்படையிலே கொடுத்து இருக்கின்ற சலுகை என்பது மிகக் குறைந்த அடிப்படையிலே இருக்கிறது. எல்லா கிணறுகளையும் பொய்த்துப் போன கிணறுகளையும் ஆய்வு செய்ய மீண்டும் அவர்களுக்கு சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு, ஓர் உறுப்பினர் கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கிறார். கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கிற உறுப்பினருக்கு முன்னால் நின்று கொண்டிருப்பது முறையல்ல.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு வெட்டுவதற்கு நிலவள வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கின்றோம். அந்த கிணறு வெட்டுபவர்களுக்கு அதற்கு வேண்டிய உபகரணங்கள் விவசாயத்துறையிலே வேளாண்மை பொறியியல் துறையிலே கிடைக்கின்றது. அதைப் பயன்படுத்தி கிணறுகளை வெட்டுகிறார்கள். சில இடங்களிலே வாட்டர் டிவைனர்ஸ் என்பவற்றைப் பயன்படுத்தியும் கிணறுகள் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் இந்த கிணறுகள் பொய்த்துவிட்டால் அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு 2 திட்டங்கள் வைத்து இருக்கின்றோம். (Failed Wells Fund) என்ற பெயராலே பொய்த்த கிணறுகள் நிதித் திட்டம் என்று ஒன்று. இது 1986 வரை இருந்திருக்கிறது. அதற்குப் பிறகு இப்போது புதிதாக (Failed Well Compensation Fund) பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதித் திட்டம் என்ற பெயராலே இன்னொரு திட்டம் வைத்து அதன் மூலம் விவசாயிகளுக்கு 90 சதவீதம் அவர்கள் செலவழித்த தொகையிலே மானியமாக கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம்; வட்டியை முழுவதுமாக தள்ளிக்கொடுத்துக்கொண்டு வருகின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவை போன்ற வறட்சி மாவட்டங்களிலே கிணறுகளுக்கு வாங்கிய கடன் மூலம் இன்று நூற்றுக் கணக்கான அடிகள் ஆழம் வெட்டியும் தண்ணீர் இல்லாத காரணத்தால் அதிலே விவசாயம் செய்ய முடியாத நிலையிலே அந்த நிலவள வங்கியில் வட்டி அபராத வட்டி என்று வளர்ந்து, அந்த விவசாயிகள் கிணற்றுக்கு பதிலாக நிலத்தையே விற்று கட்டினால்தான் அந்தக்

கடனை கட்ட முடியும் என்ற நிலை இருக்கின்றது. அப்படிப் பட்ட அந்தக் கடனை திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு அந்த பொய்த்த கிணற்றுக்கான முழுத் தொகையையும் அரசு தள்ளுபடி செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசினால் எந்தெந்த விவசாயிகளுக்கு எவ்வளவு தள்ளுபடி செய்யப்பட்டது என்பது முடிவு செய்யப் பட்டு இப்போது அதைத் தான் நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம். இரண்டாவது, இப்பொழுது நடைமுறையில் இருந்துகொண்டு இருக்கின்ற பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதியில், ஏற்கெனவே இருந்ததைப் போல இல்லாமல், சிறு விவசாயிகளுக்கும், நலிந்த விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கும் மட்டும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதைப் போல கிணறு பொய்த்துப் போய் நிலத்தையே விற்கக்கூடிய அளவுக்கு மிக மோசமாக இருந்தால் அந்த விவசாயிகளை நலிந்த விவசாயிகள் என்ற பிரிவிலே சேர்த்து அவர்களுக்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நமது வேளாண்மைத்துறை மூலம் கிணறு வெட்டுவதற்கு கடன் கொடுப்பதற்கு, அந்த விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்காமல் இருக்க, இனிமேல் அரசு கடன் கொடுக்கும் ஆணையிட்ட பிறகு, அந்த நிலத்தடி நீரை ஆய்வு செய்து கிணற்றை வெட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து அரசு ஆணை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி.விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலிலே அதுமாதிரி தண்ணீரே இல்லாமல் போய்விட்டால் அவர்களுக்கு 90 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும்; வட்டி இல்லாமல் வசூல் செய்யப்படும் என்று சொன்னார்கள். நம்முடைய அரசினால் நடத்தக்கூடிய சர்க்கரை ஆலைகளிலிருந்து பணம் கடனாகப் பெற்று, அவர்கள் மூலமாகவே 300 அடி வரை போர் போட்டும்



தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. இப்போது அந்தமாதிரி சர்க்கரை ஆலைகள் மூலமாக — அரசு சர்க்கரை ஆலைகள் பணம் கொடுத்து கிணற்றை வெட்டிப்போட்ட விவசாயிகள் அந்தப் பணத்தை திருப்பிக் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள், அவர்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து, தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற திட்டத்தின்படி அவர்கள் நிலவள வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் மண்டல கிராம வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு—கடன் பெற்று கிணறுகள் தோண்டி பொய்த்துப் போனால் நிதியிலிருந்து மானியம் வழங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். இதைத் தனிக்கேள்வியாகப் போட்டால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 658, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

658—

வால்பாறையில் தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைத்தல்.

*5336—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயன் தரும் வகையில் தொழிற்பயிற்சிக் கல்லூரி (Job Oriented) அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிலாளர் நல வாரியத்தால் நடத்தப்படுவதில்லை. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககத்தால் நடத்தப்படுகின்றன. வால்பாறையி

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயன்தரும் வகையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 40,000 நிரந்தரத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும், 20,000-க்கு மேலாக தற்காலிக தொழிலாளர்களும் பணியாற்றுகின்ற அந்தப் பகுதியில் 1952 ஆம் ஆண்டு அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மகாலிங்கம் முதல் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குறைகளைத் தீர்க்கிற வண்ணம் ஒரு தொழில் கல்லூரியோ, கலைக் கல்லூரியோ அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்தவகையில் என்னுடைய தொகுதியில் அரசினுடைய சில திட்டங்களைக் குறைத்துக் கொண்டாவது ஒரு கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் நிச்சியமாக இது நிறைவேறும் என்ற எண்ணத்திலும் கோரிக்கையைச் சொல்லித் தான் இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறேன். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் கருணையோடு பரிசீலனை செய்து, தொழிலாளர் நல நிதியிலிருந்தாவது, அடுத்த ஆண்டிலாவது ஒரு தொழில் பயிற்சி கல்லூரியை அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோவை மாவட்டத்தில் அரசின் சார்பில் 3 தொழில் பயிற்சி நிலையங்களும், மைய அரசினுடைய அங்கீகாரம் பெற்று 16 தொழில் பயிற்சி நிலையங்களும், மாநில அரசினுடைய அங்கீகாரம் பெற்று 12 தொழில் பயிற்சி நிலையங்களும், இன்றைக்கு இருக்கின்றன. கூடுதலாக ஒரு தொழில் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் அரசுக்கு தொடரா இனச் செலவாக 60 இலட்சம் ரூபாயும், தொடரினச் செலவாக 5 இலட்சம் ரூபாயும் ஆகும். எனவே, புதிதாக தொழில் நிலையம் வால்பாறையில் அமைக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை, என்பதை இங்கே மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சி நிலைய இயக்குநர் சார்பில் இடம் ஆய்வு செய்யப்பட்டு, வால்பாறை பகுதிக்கு தொழில் பயிற்சி நிலையம் அமைக்கலாம் என்று ஒரு பரிந்துரையும் அரசுக்கு





சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சா அவர்கள் தொழிலாளர் நல நிதியிலிருந்து, அடுத்த ஆண்டிலோ அல்லது அதற்கு அடுத்த ஆண்டிலோ, மறுபரிசீலனை செய்து, கண்டிப்பாக அந்தப் பகுதிக்கு ஒரு தொழில் பயிற்சி கல்லூரி அமைத்து தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதிநிலையைப் பரிசீலித்து அதன்படி வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 659 திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

659—

## விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை

*1662—திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை எல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனை செய்து விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம் வேளாண்மை விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் விவசாயிகளுக்கு நல்ல விலைக்கு விற்றுத் தர ஏதுவாக விற்பனைக் குழுக்களின் நிதி நிலைக்கேற்ப போதிய பணியாளர்களும், கிட்டங்கிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா விளைபொருள்களையும் விற்க நிதி நிலைமையை கருத்தில் கொண்டு வேண்டிய ஏற்பாடுகளை இவ்வரசு செய்யும்.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்

[1992 ஏப்ரல் 28

கிறேன். கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனில் சாகிறவர்கள் விவசாயிகள். அத்தகைய விவசாயிகளின் துயர் துடைக்கவும், இடைத் தரகர்களால் விளையும் இன்னல்களைத் தடுக்கவும், வியர்வையோடு ரத்தத்தையும் கலந்து உழைத்து விளைவிக்கும் விளை பொருள்களுக்கு உரிய நியாயமான விலையைப் பெற்றுத் தரவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பல இடங்களில் சரிவர செயல்படுவது கிடையாது. பெயரளவில் மட்டும்தான் பலகை உள்ளது. என் தொகுதியில்கூட ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்ற பெயர்ப் பலகையோடு ஒன்று உள்ளது. அது சரிவர இயங்குவது இல்லை. எனவே, இத்தகைய குறைகளைக் களையவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் புரட்சித் தலைவி அவர்களின் புனிதமான அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-25.)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வேண்டிய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்காகத்தான் இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் துவக்கப்பட்டன. விவசாயிகளுடைய நலனைக் கருத்திலே கொண்டு, எந்த அரசும் செய்யாத பற்பல திட்டங்களை புரட்சித் தலைவி அரசுத்தான் விவசாயிகளுடைய நலனிலே அக்கறை கொண்டு செய்திருக்கிறது. இது போன்ற திட்டங்கள் இதற்கு முன்னாலே இருந்த எந்த அரசாலும் செய்யப்படவில்லை. இனி வரக்கூடிய எந்தக் காலத்திலும் நிகழ்வுறாது என்பதை என்னால் ஆணித்தரமாகவும் இறுதியாகவும் சொல்ல முடியும். இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில், சில இடங்களில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் சரிவர செயல்படவில்லை என்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. தக்க நடவடிக்கையை புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நான் எடுத்துக் கொண்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் கொள்முதல் செய்கின்ற அரசு நிறுவனமான ''டான்காப்'' போன்றவைகள் இப்போது—அரசு கொடுக்கின்ற உதவிப் பணத்தைத் தனியார் வியாபாரிகளிடத்திலே— அங்கேயிருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாக அந்த விளை பொருட்களை குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து, மறுநாள் அதே விளை பொருட்களை அதிக விலைக்கு அரசினுடைய பெயரில் கொடுத்து



1992 ஏப்ரல் 28]

அரசு பணத்தையே வீணடித்துக் கொண்டிருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? இது சம்பந்தமாக அரசுத் துறைகள் மூலமாக கொள்முதல் செய்கின்ற நிறுவனங்கள் செய்கின்ற குறைகளைத் தடுப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் என்பது வேறு, ''டான்காப்'' என்பது வேறு. இரண்டும் தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது போன்ற கருத்துக்களை அரசினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால், அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை இவ்வரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 660, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

660—

## போளூரில் வீட்டுவசதி வாரியத் திட்டத்தின்கீழ் வீடுகள் அமைத்தல்.

*6182—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் வீட்டுவசதி வாரியத் திட்டத்தி வீடுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய போளூர் பகுதியில் வீட்டு வசதி வாரியத் திட்டத்தின்கீழ் வீடுகள் அமைக்க, ''ஆம்'' என்ற பதிலை அளித்திருக்கிறார்கள். அதற்காக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின்கீழ், அதற்கான இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா? இந்த நிதி ஆண்டில் வீடுகள் கட்ட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுகின்ற திட்டம் தீட்டப்பட்டு, ஹட்கோவினுடைய நிதி உதவி கோரி, இந்தத் திட்டம் ஹட்கோவிற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தில், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 26 வீடுகளும், மத்திய வருவாய்ப் பிரிவினருக்கு 58 வீடுகளும், மற்றும் 97 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கும், 48 மத்திய வருவாய்ப் பிரிவினருக்குமான வீட்டு மனைகளை மேம்படுத்தவும் ஒரு கோடியே 8 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. ஹட்கோ அனுமதித்த பின்னர், அரசிடம் ஒப்புதல் பெற்று, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 661, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

**661—**

**ஊனமுற்றோர் மற்றும் விதவைகளுக்கு மானியத்துடன் தொழில் கடன் கிடைக்க நடவடிக்கை.**

*8028—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஊனமுற்றோர்—விதவைகள் ஆகியோருக்கு மானியத்துடன் தொழில் கடன் வழங்க உத்திரவிட்டும் வங்கிகள் மானியக் கடன் கொடுக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு தொழில் கடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அவ்வாறு தகவல் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் மறு வாழ்வு அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு உதவி அளிக்கின்ற வகையில், அரசு சமூக நலத்துறை மூலமாக மானியத்தில் பல கடன்களுக்கு மனுக்களைப் பெற்றுக் கொடுக்கிறார்கள். அப்படி அனுப்பப்படுகின்ற மனுக்கள், அந்த சாங்சன் ஆர்டர், தற்போது புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில், உடனுக்குடன் வழங்கப்படுகிறது. ஆனால், அந்த வங்கிகள், அந்தக் கடனைக் கொடுக்க மறுக்கிறார்கள். இல்லை என்று திருப்பி விடுகிறார்கள். அந்தக் கலெக்டருக்கும் அல்லது சமூக நலத்துறை அதிகாரிகளுக்கும், எங்களுக்கு அவர்கள் அதிகாரிகள் அல்ல' எங்களுக்கு வங்கிகளினுடைய மேல் அதிகாரிகள் தான் அதிகாரிகள், இதை நான் கொடுக்க குடியாது என்று திருப்பி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து, இந்த அரசு தனியாக ஒரு துறையை அமைத்து, அவர்களுக்கு கடன் வழங்குவதாக இந்த மானியக் கோரிக்கையிலே அறிவித்ததாக நான் பார்த்தேன். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தீட்டி, அவர்களுக்கு தனியாக கடன் வழங்குவதற்குத் திட்டம் இருக்கிறதா ? மீண்டும் இதைப் பரிசீலிக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊனமுற்றோர் ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஏழை மகளிர் ஆகியோருக்கு சுய தொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது. இதில் ஊனமுற்ற பிரிவினருக்கு கடனில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ. 1,000-க்கு மிகாமல் இதில் எது குறைவோ அது மானியமாக அரசு சார்பிலிருந்து வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் 800 உடல் ஊனமுற்றவர்கள் பயன் பெற்று வந்தார்கள், இன்றைக்கு ரூ. 8 இலட்சத்தை அரசு மானியமாக ஆண்டு தோறும் வழங்கி வந்தது. ஆனால் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர், இந்த ரூ. 8 இலட்சம் ரூ. 16 இலட்சமாக உயர்த்தப்பட்டு, ஏறக்குறைய 1,600 உடல் ஊனமுற்றோர் பயனடைந்திருக்கிறார்கள் என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன். அதைப் போல தமிழகத்தில் ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஏழை மகளிர் ஆகியோருக்காக 1988-89-ல் கவர்னர் ஆட்சியில்

ரூ. 69.25 இலட்சம் அரசாங்க மானியமாக வழங்கப்பட்டது. இதனால் 13,142 மகளிர் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 1989-90-ல் ரூ. 33.47 இலட்சம் அரசு மானியமாக வழங்கப் பட்டு, 13,142 மகளிர் பயன் பெற்ற இந்தத் திட்டத்தில் 5,646 மகளிரே பயன் அடைந்தனர். ஆனால் நம்முடைய தானைத் தலைவி, தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தத் திட்டத்தில் ரூ. 88.36 இலட்சம் வழங்கப் பட்டிருக்கிறது. இதனால் 14,240 மகளிர் பயன் பெற்றிருக் கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரியப் படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மானிய மாக வழங்கப்படுகின்ற தொகைகளுக்கு வங்கிகள் உடனடியாக கடன்களை வழங்குகின்றன. ஆனால் சில நேரங்களில் சமூக நலத்துறை அனுதாபத்தோடு சில விண்ணப்பங்களை பரிசீலிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் மானியம் வழங்காமல் வங்கி களுக்கு சில விண்ணப்பங்களை அனுப்பி வைக்கின்றது. அந்த விண்ணப்பங்களில் தான் காலதாமதம் ஏற்படுகின்றது. அதை யும் உடனுக்குடன் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மூலமாக வங்கிகளுடைய அதிகாரிகளுக்கு அந்தந்த மாவட்டங்களில் எல்லாம் கூட்டங்கள் கூட்டப்பட்டு பேசி வருகிறார்கள். இதிலேயும் விரைவில் புரட்சித் தலைவியினு டைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியது போல் கடந்த ஆட்சிக் காலத்தில் அது ஒதுக்கப்பட்டது. எப்படி ஒதுக்கப் பட்டது என்று சொன்னால், இதில் ஊனமுற்றவர்கள் என் றால், தி.மு.க. ஊனமுற்றவர்களா ? அல்லது மற்றவர் களா ? அல்லது விதவைகள் என்றால், இதில் தி.மு.க. விதவை களா அல்லது மற்றவர்களா ? என்ற நிலையில் ஒதுக்கப்பட்டு கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமேதான் கொடுக்கப்பட்டது. ஐ.ஆர்.டி.பி. லோன் முதல் அனைத்து லோன்களும் அப்படித் தான் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சிக் காலத்தில் யார், எவர் என்று பார்க்காமல் ஊனமுற்றவர் யாராக இருந் தாலும், விதவைகள் யாராக இருந்தாலும், உடனடியாக அதைக் கண்காணித்து அதைக் கொடுக்கின்ற வாய்ப்பை பெற்ற புரட்சித் தலைவி ஆட்சி காலத்தில் அது வழங்கப்படுகின்றது என்பதை நான் மறுக்கவில்லை. நேற்று கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியைச் சார்ந்த இரண்டு பெண் குருடர்கள் வந்து, அந்த இரு குழந்தைகளையும் பார்க்கின்ற போது உடனடியாக தன் கையிலே இருந்த ரூ. 500 பணத்தைக் கொடுத்து உன்னுடைய கோரிக்கையை நான் உடனடியாக கவ னிப்பேன் என்று சொல்லி அந்தக் கோரிக்கையை கவனிப்பதற்கு [illegible] நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்தக் குழந்தைகள் வந்து



என்னிடத்தில் சொன்னார்கள். பெற்றோர்களும் வந்து சொன் னார்கள். எனக்கு மெத்த மகிழ்ச்சியாக இருந்தது. அப்படி நேரடியாகக் கொடுத்தாலும், அல்லது தகவல் கொடுத்தாலும், தகவல் வந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற முத லமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நான் மறுக்க வில்லை. ஆனால் 'பிராக்டிகலாக' அந்த வங்கிகளிலே கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அதில் நீங்கள் தனியாகக் கவனம் செலுத்தி, அதை மீண்டும் பரிசீலனை செய்து சமூக நல மாவட்ட அலுவலர்களைக் கலந்து பேசி, வங்கிகளுடைய பீல்டு ஆபிசர்ஸ், லீட் பாங்க் அவர்களையும் பார்த்து, அவர்கள் கட் டாயமாக கொடுக்க வேண்டுமென்று ஒரு அறிவுரையை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நேரத்தில், இதிலே உடனடியாக நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றோர் மட்டுமல்ல, வாழ்க்கையில் நலிவடைந்த பெண்களுக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உதவிகளைச் செய்து வருகிறார்கள். அண்மையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகத்தில் சந்தித்த பெண்களுக்கு அவர்களை ஊருக்கு திருப்பி அனுப்புகின்ற வேளையில் தன்னுடைய சொந்தப் பணத்தி லிருந்து ரூ. 10,000 அவர்கள் கையிலே கொடுத்து, புரட்சித் தலைவி அவர்கள் அவர்களை, ஊருக்கு அனுப்பி வைத்திருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இதிலே அக் கறை செலுத்துகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையில் உடனடி யாக நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 662, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை துறை அமைச்சர்.

662—

தோல் பொருட்கள் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அமைத்தல்.

*9274— திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூகநலத் துறை மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திலும் கணவனால் கைவிடப்பட்ட மற்றும் விதவை பெண்களுக்கு

உதவும் வகையில் தோல் பொருட்கள் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அமைக்கும் திட்டம் இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஒன்று, இரண்டு இடங்களில் ஆயத்த ஆடை தயாரிக்கும் அமைப்பை உருவாக்கலாமா என்பதை அரசு பரிசீலித்து வருகிறது.

(முற்பகல் 10-35)

திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் ஆண்டுக்கு ஒரு திட்டம் என அறிவித்து வந்த காலங்கள் போய், இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடரில் தினசரி மக்கள் நல்வாழ்வு திட்டங்களாக அறிவித்து, மாபெரும் புரட்சிகரமான திட்டங்களாக அறிவித்து இந்தியாவிலேயே வரலாற்று சிறப்பு மிக்க சரித்திரத்தில் சாதனை புரிந்து வரும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு விதவைப் பெண்களுக்கு, படித்து பட்டதாரிகளாக இருக்கிற வேலைஇல்லாத ஏழை பெண்களுக்கு இந்த ஏற்றுமதி திட்டங்கள் மூலம் அதாவது கைத்தறி ஆடைகளை, ரெடி மேட் ஆடைகளை ஏற்றுமதி செய்வதை, தோல் பொருள்கள் ஏற்றுமதி செய்வதை தனி வாரியமாக அமைத்து சமூக நலத்துறை மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க இந்த ஆண்டே திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அந்தத் திட்டம் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்திலே இந்த மாதிரியான ஆயத்த ஆடைகள் தயாரிப்பு மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சமூக நலத் துறைக்கு அறிவுறுத்தி உள்ளார்கள். அதன் அடிப்படையில் எந்தெந்த மையங்களில் இவைகளை துவக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் மையங்களை திருப்பூர், மதுரை, மற்றும் சென்னை போன்ற இடங்களில் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகளை பயன்படுத்தி சமூக நலத்துறையில் நல்ல முறையில் பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே துவக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 663, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.



663—

மகளிர் மன்றங்களுக்காக பால் பண்ணை அமைக்கும் திட்டம்.

*5943— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் 384 யூனியன்களிலும் ஒவ்வொரு யூனியனிலும் உள்ள 30 மகளிர் மன்றங்களுக்காக பால் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அமல் நடத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், ஊரின் அருகில் புறம்போக்கு நிலம் அல்லது கண்மாய்கள் இருந்தால் அதில் புல் வளர்த்து பால் பண்ணை வைத்துள்ளவர்களுக்கு தீவனம் குறைந்த விலையில் கொடுப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மகளிர் மன்றங்களுக்காக பால்பண்ணை அமைக்கும் திட்டம் இல்லை. ஆனாலும் மகளிருக்கென தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஒவ்வொரு யூனியனிலேயும் 30 மையங்களை வைத்திருக்கிறோம். மழை இல்லாத காலங்களில் அவர்கள் எல்லாம் வேலை இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே வழி இந்த பால் பண்ணையை அமைத்துக் கொடுப்பது ஒன்றுதான். அதன் மூலமாக அவர்கள் வாழ்வதற்கு ஏதாவது வழி ஏற்படும். ஆகவே மீண்டும் அதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இந்த பால் பண்ணைகளை ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஏ.டி. ஒருவர் இருக்கிறார் பஞ்சாயத்து யூனியனிலே, அத்தோடு முக்கிய சேவகிகள் இருக்கிறார்கள். இருவரையும் இணைத்து— இணைந்து இந்த பால் பண்ணைகளை அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மையங்களுக்கு என்று பால் பண்ணைகளை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இந்த பால் உற்பத்தி தொழிலில் ஈடுபடக்கூடிய மகளிருக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்து 1991—92 ஆம் ஆண்டில்

[1992 ஏப்ரல் 28

112 முக்கிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து இருக்கிறோம். எனவே தொழிலில் அக்கறை உள்ள பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆகவே அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒவ்வொரு யூனியனிலும் இல்லாவிட்டாலும் கூட ஒரு தொகுதிக்கு ஒன்றாக ஆரம்பிக்கலாம். 100 பெண்களுக்கு ஒன்று என்று ஆரம்பிப்பீர்களேயானால் அவர்களுக்கு வருவாய் பெருகக்கூடிய நிலைமை உருவாகும். ஆகவே, அது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு கண்மாய்கள் இருக்கின்றன. அது, பலமுறை நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தக் கண்மாய்களிலே ஆக்கிரமிப்பு செய்துகொண்டு தண்ணீர் தேங்குவதற்குக் கூட இடம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கே புல் வளர்க்கவேண்டும். புல் வளர்ப்பதற்காக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரோடு கலந்து பேசி, அங்கே ஆக்கிரமிப்புகளை அகற்றி புல் வளர்த்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தான் பரிசீலிக்க வேண்டும். பெண்களுக்கு சங்கங்களை ஆரம்பிப்பது பற்றி சொன்னார்கள். நீங்களும் ஒத்துழைப்பு தாருங்கள். நிறைய சங்கங்களை ஆரம்பிக்கிறோம். அந்தச் சங்கங்களுக்கு கடனாக மாடுகளை தருகிறோம். அந்த மாடுகளை பராமரிப்பதற்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்களைப் பற்றி கேட்டார்கள். அதைப்பற்றி நான் வருவாய்த்துறை அமைச்சரோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 664, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

664—

சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

*289 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் உத்தேசித்துள்ளது. இத்தொழிற் திட்டம் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் கற்கள் தயாரிக்க சுமார் ரூ. 5 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்படும்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரியிலேயிருந்து கிடைக்கின்ற சாம்பலைக் கொண்டு எண்ணூரிலே கற்களை தயாரிக்கின்ற தொழிற்சாலை முன்பு துவக்கப்பட்டது. அது லாபத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறதா ? நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறதா ? இப்போது துவங்க இருக்கிற தொழிற்சாலை எந்தப் பகுதியிலே துவங்கப்படும் ? அதற்கு மூலப் பொருள் என்ன என்பதை தமிழக அரசு தெரிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பலை மூலப்பொருளாகக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது. செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அனல் மின் நிலையம் அருகாமையிலே இத்திட்டம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டம் வெற்றிபெறுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 1990 முதல் 1995 ஆம் ஆண்டு கால அளவில் தேசிய வீட்டு வசதித் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மட்டும் 2,86,496 மில்லியன் கற்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய உற்பத்தித்திறன் சுமார் 2,31,598 மில்லியன் கற்கள் ஆகும். எனவே உற்பத்தித் தேவையை விட கணிசமாக குறைவாக இருப்பதால் இது வெற்றிபெறும் என எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு தற்போது என்னிடம் விடை இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலக்கரியிலே கிடைக்கின்ற சாம்பலைக் கொண்டு ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை எண்ணூரிலே துவக்கப்பட்டது. அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா அல்லது நடைபெறாமல் நின்றுவிட்டதா என அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தக் கேள்விக்கு என்னிடம் விடை இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

649—

சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றல்.

*4060 திரு. இராம. இராமநாதன் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கும்பகோணம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும்(ஆ) : கும்பகோணம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட பதிவகமாக மாற்றக்கோரும் செயற்குறிப்பு, பதிவுத் துறைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்பு மீது அரசின் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு முடிவெடுக்கப் படும்.

580—

குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி

*5184—திரு. பி. வி. இராஜேந்திரன் ;

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு வசதி கோரி ஊராட்சி தீர்மானித்து அதற்கான காப்புத்தொகை ஒன்றியம் வாயிலாக செலுத்தப்பட்டு இந்து ஆண்டுகளாகியும் இதுவரை மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி வழங்கப்படாத நிலையில் உள்ளதை தவிர்த்து பணி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—

வேதாரண்யம் தொகுதி குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் 80 தெரு விளக்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு காப்புத் தொகையாக ரூ. 1,600 செலுத்தப்பட்டுள்ளது. அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு (1991-92) இதற்கு மின் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) விடைகள் பெறப்பட்டுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு அவையில் வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 51-ன்படி இதுவரை துறைகளிடமிருந்து வரப் பெற்று அவையில் விடையளிக்காமல் நிலுவையில் உள்ள 975 உடுக்குறியிட்ட வினாக்களுக்கான விடைகள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு — (குறுக்கீடு) கேள்வி நேரமே முடியவில்லை-அவை முன் வைக்கப்பட்டுள்ளன அவ்வாறு மாற்றப் பட்டுள்ள உடுக்குறியிட்ட வினாக்களின் எண், அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்கள் பெயர், சம்பந்தப்பட்ட துறைகளுடைய அமைச்சர்களின் பெயர்கள் குறிப்பிட்ட பட்டியல் மேசைமீது வைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் அடங்கியுள்ள வினாக்களுக் கான விடைகள் பட்டியல் உறுப்பினர்களின் பார்வைக்காக சட்ட மன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1—

வரப்பாளையம் காவலர்களுக்கு குடியிருப்பு.

வினா எண் 283—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், வரப்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்புக் கட்டித்தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

பெரியார் மாவட்டம், வரப்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்பு கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

[1992 ஏப்ரல் 28

## வேலூரை சுற்றுலா மையமாக்குதல்.

வினா எண் 421—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரை சுற்றுலா மையமாக்கி சுற்றுலா பயணிகள் தங்க பெரிய ஓட்டல் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

3—

## காவல் நிலையங்களுக்கு ஜீப் வழங்கல்.

வினா எண் 451—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட காவல் நிலையங்கள் மலைப் பகுதியில் அமைந்துள்ளதால், வழக்குகளை விரைவில் விசாரித்து நடவடிக்கை எடுக்க உதவியாக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஜீப் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட காவல் நிலையங்களுக்கு ஜீப்புகள் வழங்குவது பற்றிய செயற்குறிப்பு தனியாக அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஜீப் வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன் அனைத்து காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்கப்படும்போது கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்க வாய்ப்பு ஏற்படும்.



1992 ஏப்ரல் 28]

4—

## விளவங்கோடு தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம்.

வினா எண் 1049—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

விளவங்கோடு தாலுகாவில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் உள்ள குழித்துறை தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

## பேராவூரணி காவல் நிலையத்தைப் பழுது பார்த்தல்

வினா எண் 1159—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பேராவூரணி காவல் நிலையத்தைப் பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி காவல் நிலையத்தை பழுது பார்ப்பதற்கான செலவினத்தை மேற்கொள்ள நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததாலும், இச் செயற்குறிப்புக்கு ஆகும் செலவு (ரூ. 2,35,000) மிகவும் அதிகமாக இருப்பதாலும் இச்செயற்குறிப்பை 1992-93 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் கொண்டு வருமாறு காவல் துறை இயக்குநர் கோரப்பட்டுள்ளார்.

6—

## பரமக்குடி காவல் நிலையத்திற்கு கூடுதல் காவலர்கள்.

வினா எண் 1444—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி காவல் நிலையக் காவலர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

7—

**கள்ளச் சாராயத்தை ஒழிக்க சிறப்பு நடவடிக்கை.**

வினா எண் 2628—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க சிறப்பு நடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம், எனில், திட்டத்தின் முழு விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு முழுவதும் கள்ளச் சாராயத்தை களையும் பொறுப்பு கிராம நிருவாக அலுவலர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் ஆகியோரைச் சேர்ந்தது என்று அரசு ஆணைகள் பிறப்பித்து உள்ளது. தவறு செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மதுவிலக்கு காரணமாக ஏற்படும் நற்பயன்கள் மற்றும் குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்து பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்வதற்காக பெருமக்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று என் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மதுவிலக்கை தீவிரமாக அமல் படுத்த கிராம, வட்ட மற்றும் மாவட்ட அளவில் மதுவிலக்கு குழுக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. கள்ளச் சாராய நடவடிக்கைகளை தடுக்கவும், ஒடுக்கவும் 15—10—1991 நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அரசாணை (நிலை) எண் 240–இல் காவல் துறையில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8—

**சிறப்பு காவல் படை காவலர்களை குடும்பத்துடன் வாழ அனுமதித்தல்.**

வினா எண் 3742—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மற்ற காவல்துறை காவலர்களை குடும்பத்துடன் வாழ அனுமதித்துள்ளது போல் சிறப்புக் காவல்படை காவலர்களையும் அனுமதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் நடைமுறைப் படுத்தப்படும் ?

விடை—

(அ) சிறப்பு காவல்படையில் பணிபுரியும் காவலர்களில் மணமானவர்கள் குடும்பத்துடன் தங்குவதற்கு தடை ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9—

**வானூர் வட்டத்தில் தீயணைப்பு நிலையம்.**

வினா எண். 3748—திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

வானூர் தொகுதியில் வானூர் வட்டத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ? :

விடை

புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்காக தீயணைப்புத் துறையில் பராமரிக்கப்பட்டு வரும் முன்னுரிமைப் பட்டியலில் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வானூர் 5 வது இடத்தில் உள்ளது. 1990–91-ம் ஆண்டில் மிகுந்த நிதி நெருக்கடியின் காரணமாக அரசால் முன்னுரிமைப் பட்டியலில் உள்ள எல்லா இடங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் திறக்க இயலவில்லை. 1991–92-ம் ஆண்டிலும், மிகுந்த நிதி நெருக்கடி நிலையினை சமாளிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் அரசு உள்ளது. எனவே, அரசின் நிதிநிலைமைக்கேற்ப உரிய நேரத்தில் வானூரில் தீயணைப்பு நிலையம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

10—

**கணபதி சாஸ்தா அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா மையமாக்குதல்**

வினா எண். 3764—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராஜபாளையத்திற்கு அருகிலுள்ள கணபதி சாஸ்தா அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

11—

கொடுமுடியில் தீயணைப்பு நிலையம்

வினா எண். 4744— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கொடுமுடியில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

ஓர் ஊரில் தீயணைப்பு நிலையம் அமைக்கக் கோரி கோரிக் கைகள் பெறப்படும்போது அந்த ஊரின் மக்கட்தொகை, அருகில் உள்ள தீயணைப்பு நிலையங்கள், தீ விபத்து அபாயங்கள் போன்றவற்றைப் பரிசீலித்து அங்கு தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டிய அவசியமிருப்பின் அந்த ஊர் தீயணைப்பு நிலையம் திறக்கப்பட வேண்டிய ஊர்களின் முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்படுகிறது. இந்த முன்னுரிமைப் பட்டியல் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரியில் தமிழ்நாடு தீயணைப்புத் துறையால் தயாரிக்கப்படுகிறது. அதன்படி 1991 ஜனவரியில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் பெரியார் மாவட்டம் கொடுமுடி இடம் பெறவில்லை. 1992-ம் ஆண்டுக்கான முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கும்போது கொடுமுடியை அப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

2—

வாக்காளர் சாவடிகள்

வினா எண். 6367—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில், ...ட்டையூர், தாமரைக்கரை, தட்டக்கரை, செங்குளம், தாளக்கரை போன்ற ஊர் மக்கள் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களில் ஓட்டுப் போட 40 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று ஓட்டுப் போட வேண்டியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தந்த ஊரிலுள்ள பள்ளிகளிலேயே ஓட்டுப் போடுவதற்கு அரசு நடவடிக்கை துரிதமாக எடுக்குமா ?



விடை—

(அ) மற்றும் (ஆ) இவ்வூர்களைச் சேர்ந்த வாக்காளர்கள் 40 கி.மீ.தூரம் நடந்து சென்று வாக்களிக்கும் வகையில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவில்லை.

13—

அரசுத் துறைகளில் கணிப் பொறி பயன்படுத்துதல்.

வினா எண் 7765—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசின் எந்தெந்த துறைகளில் '' கம்ப்யூட்டர் சிஸ்டம் '' செயல்படுத்தப்படுகிறது ?

(ஆ) மேலும் எந்தெந்த துறைகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது ?

விடை—

விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

(அ) திட்ட முதலீட்டில் பெரும் பகுதியினை செலவிடும் அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் பலவற்றிலும் கணிப் பொறிகள் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. இணைப்பு 1-ல் குறிப்பிட்டுள்ளபடி 7 தலைமைச் செயலகத் துறைகள், 45 அரசுத் துறைகள் மற்றும் 52 அரசு நிறுவனங்களில் கணிப் பொறிகள் நிறுவப்பட்டு நிர்வாகத்திற்கு தேவைப்படும் விவரங்களை தொகுக்க அவை பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் தலைமைச் செயலகத்தில் மத்திய அரசினால் நிறுவப்பட்டுள்ள தேசீய தகவல் தொகுப்பு அளிப்பு மையத்தில் (National Informatics Centre)-ல் உள்ள என். டி. 550 என்ற சூப்பர் மினி கணிப்பொறியினையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள சூப்பர் ஏடி கணிப்பொறிகளையும் தமிழக அரசின் பல்வேறு அரசுத் துறைகள் பயன்படுத்துகின்றன.

(ஆ) இணைப்பு 2-ல் கணிப்பொறிகள் நிறுவப்படவுள்ள அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்படி தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித் துறையிலும் 2 அரசுத் துறைகளிலும் மற்றும் மூன்று அரசு நிறுவனங்களிலும் கணிப் பொறிகள் நிறுவ நடவடிக்கைகள் அத்துறைகளில் எடுக்கப்படுகின்றன.

[1992 ஏப்ரல் 28

## இணைப்பு 1.

கணிப் பொறிகள் நிறுவப்பட்டுள்ள அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் பட்டியல்:

அ) தலைமைச் செயலகம் :

1. வேளாண்மைத் துறை
2. கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை
3. நிதித் துறை
4. தொழில் துறை
5. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை
6. பொதுத் துறை
7. ஊரக வளர்ச்சித் துறை

ஆ) துறைத் தலைவர்கள் :

1. வேளாண்மைப் பொறியியல், தலைமைப் பொறியாளர்
2. வேளாண்மை இயக்குநர்
3. கால்நடை வளர்ப்பு இயக்குநர்
4. மீன்வளத் துறை ஆணையர்
5. பால் உற்பத்தி, பால் பண்ணை வளர்ச்சி ஆணையர்
6. வணிக வரிகள் துறை
7. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
8. கல்லூரிக் கல்வி இயக்குநர்
9. பள்ளிக் கல்வி இயக்குநர்
10. தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்
11. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் துறை
12. பொது நூலகங்கள் இயக்குநர்
13. தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழு
14. வனத் துறைத் தலைவர்
15. அரசு தகவல் தொகுப்பு மைய இயக்குநர்
16. சிறு சேமிப்புத் துறை இயக்குநர்
17. கருவூலங்கள் மற்றும் கணக்குகள் இயக்குநர்
18. மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுத்துறை இயக்குநர்
19. மருத்துவக் கல்வி இயக்குநர்
20. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர்,



1992 ஏப்ரல் 28]

21. ' டேனிடா ' நிதியுதவி பெறும் திட்டத்தின் திட்ட அலுவலர்.
22. காவல் துறைத் தலைவர்
23. தடய அறிவியல் ஆய்வக இயக்குநர்
24. நகரம் மற்றும் ஊரமைப்புத திட்ட இயக்குநர்
25. தொழில் துறை ஆணையாளர்கள் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர்
26. சர்க்கரைத் துறை இயக்குநர்.
27. புவியியல் மற்றும் சுரங்கவியல் இயக்குநர்
28. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர்.
29. தொழிலாளர் நலத் துறை ஆணையாளர்
30. நகராட்சிகள் நிருவாக இயக்குநர்
31. புள்ளியியல் துறை
32. மாநில திட்டக் குழு
33. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
34. தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு)
35. தலைமைப் பொறியாளர் (நிலத்தடி நீர்)
36. நீராய்வு நிறுவனம்
37. தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்)
38. தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்)
39. நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையம்
40. பாசன மேலாண்மைப் பயிற்சி நிறுவனம்
41. நில அளவை மற்றும் நிலவரி ஏற்பாட்டு இயக்குநர்
42. அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் (நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் நீங்கலாக)
43. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர்
44. சமூக நலத் துறை இயக்குநர்
45. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவு திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம்.

(இ) அரசு நிறுவனங்கள் :

1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
2. கோழி வளர்ப்பு நிறுவனம்
3. கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம்.

4. தமிழ்நாடு கிடங்குவசதிக் கழகம்
5. தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி
6. அண்ணா பல்கலைக் கழகம்
7. அனைத்துப் பல்கலைக் கழகங்கள்
8. தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியம்
9. அரசு இரப்பர் நிறுவனம்
10. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்
11. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்
12. தமிழ்நாடு கைவினைத் தொழில் வளர்ச்சி நிறுவனம்
13. தமிழ்நாடு சரிகை உற்பத்தி நிறுவனம்
14. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
15. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
16. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்
17. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
18. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்)
19. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)
20. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டிக்)
21. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)
22. தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்காட்)
23. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனம்.
24. தமிழ்நாடு கனிம நிறுவனம்
25. தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம்
26. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்
27. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
28. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்.
29. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.
30. சென்னை மாநகராட்சி
31. அண்ணா மேலாண்மைக் கல்வி நிறுவனம்
32. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
33. தமிழ்நாடு மின் வாரியம்
34. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்
35. பல்லவன் போக்குவரத்துக் கழகம்
36. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்



37. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்
38. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்
39. அண்ணா போக்குவரத்துக் கழகம்
40. ஜீவா போக்குவரத்துக் கழகம்
41. பாண்டியன் போக்குவரத்துக் கழகம்
42. இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்
43. நேசமணி போக்குவரத்துக் கழகம்
44. சோழன் போக்குவரத்துக் கழகம்
45. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்
46. சேரன் போக்குவரத்துக் கழகம்
47. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்
48. அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம்
49. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப்பணி நிறுவனம்.
50. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்
51. சேரன் பொறியியல் நிறுவனம்
52. சாலைப் போக்குவரத்து ஆராய்ச்சி நிறுவனம்.

## இணைப்பு 2.

**கணிப்பொறிகள் நிறுவப்படவுள்ள அரசுத் துறைகள் / அரசு நிறுவனங்களின் பட்டியல்.**

**அ) தலைமைச் செயலகம் :**

1. பொதுப்பணித் துறை

**ஆ) துறைத் தலைவர்கள் :**

1. தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்குநர்
2. வருவாய் நிருவாக ஆணையாளர்

**இ) அரசு நிறுவனங்கள் :**

1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
2. மதுரை மாநகராட்சி
3. நுகர்பொருள் வாணிபக் கழகம்

14— [1992 ஏப்ரல் 28

## சிறுசேமிப்புப் பற்றி பிரச்சாரம்

வினா எண். 8073—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறுசேமிப்பு பற்றிய பிரச்சாரம் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சிறுசேமிப்பை மக்கள் இயக்கமாக மாற்ற அரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா?

விடை—

(அ) சிறுசேமிப்பு பற்றிய செய்திகள் அனைத்து மக்களையும் சென்றடைய, செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டிகள், கையேடுகள் போன்ற பல்வேறு வகைகளில் விரிவான பிரச்சாரத்தை அரசு முனைப்புடன் செய்து வருகிறது. மேலும் மத்திய, மாநில அரசுகளால் நியமிக்கப்பட்டுள்ள 12,000 முகவர்கள் மாநிலமெங்கும் சிறு சேமிப்பை மக்களிடையே ஊக்குவித்து வருகிறார்கள். சிறு சேமிப்பு, நிகர வசூல் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டு வந்துள்ளது. எனவே, சிறு சேமிப்பு பற்றிய பிரச்சாரம் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையவில்லை என்ற கூற்று ஏற்புடையதல்ல.

(ஆ) வினா எழவில்லை

15—

## தமிழக முதல்வர் மீது லாரி மோதியது குறித்த வழக்கு.

வினா எண். 95—திரு. டி.எம். ரங்கராஜன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மாண்புமிகு தமிழக முதல்வர் மீது கடந்த ஆண்டு லாரியை விட்டு மோதிய லாரி ஓட்டுநர் மீது தொடரப்பட்ட வழக்கு அரசால் பைசல் செய்யப்பட்டதை மறு ஆய்வு செய்து விசாரித்து குற்றவாளிகளை தண்டிக்க அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

லாரி ஓட்டுநர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு [illegible]தாப்பேட்டை நீதிமன்றத்தில் நடைபெற்று நீதிமன்றத்தில் ரூ. 1,750 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. அரசால் பைசல் செய்யப்படவில்லை. மறு ஆய்வு செய்யும் உத்தேசம் இப்போதைக்கு ஒன்றும் இல்லை.

16—

## கமுதியில் குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண். 1119—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண். 2022, உள் துறை, நாள் 6–9–1990-ல் கமுதியில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. அந்நீதிமன்றம் கூடிய விரைவில் செயல்பட உயர்நீதிமன்றம் துரித ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

17—

## தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு.

Thiru M. Sundarado s : Will the Hon'ble Minister for Law be pleased to state :

(a) Whether the Government is committed to nominate only retired High Court Judges as Chairman and Vice-Chairman of the Legal Aid and Advisory Board; and

(b) the reasons thereof?

வினா எண். 1762—

விடை—

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஏ பிரிவின்படி, ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை அளிப்பதற்கு

''தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு'' என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இது சங்கப் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு விதிகளில், விதி 5-ன்படி, இக்குழுவின் தலைவராகிய ஆளுநர் அவர்கள், இக்குழுவின் முக்கிய ஆதரவாளரான உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை கலந்தாலோசித்து மாநில செயற்குழுவிற்கு தலைவர் மற்றும் துணைத் தலைவரை நியமிப்பார்கள். மேற்குறிப்பிட்டுள்ள விதியின்படி, உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருந்தவரோ அல்லது இருப்பவரோ, மாநில செயற்குழுவின் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ நியமனம் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார். இவ்விதிகளின்படி, தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் மாநில செயற்குழுவிற்கு தலைவர் மற்றும் துணைத் தலைவர் நியமிக்கப்படுகிறார்கள்.

18—

ஆலங்குடியில் நீதிமன்றம்

வினா எண். 2099—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் நீதிமன்றம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.





19—

Question No. 2505—THIRU S. RAJARAMAN : Will the Honourable the Minister foı law be pleased to state :

(a) How is the payment of telephone allowence to the Chairman and Vice-Chairman or the Legal Aid Board determined by the Local Fund Audit examining their accounts of the Board ?

(b) The steps to examine whether the phone charges are made only for the Legal Aid Board purposes by the Audit ?

விடை—

தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு

தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு, செயற்குழுவின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோரின் இருப்பிடங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்கு இரண்டு மாதங்களுக்கு 1,500 டெலிபோன் 'கால்கள்' (Calls) இலவசமாக அனுமதிக்கப்படுகிறது. இவர்களின் தொலைபேசியில் ஏற்படும் செலவினங்கள், பட்டியல்கள் தொலைபேசித் துறையிடமிருந்து பெறப்பட்டு, உள்ளாட்சி நிதிக்கணக்கு ஆராய்வாளரால் தணிக்கை செய்யப்படுகிறது.

20—

குடி உரிமைப் பாதுகாப்பு நீதி மன்றம்.

வினா எண். 2849—திரு. சோ. இராசாராமன் ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலத் தஞ்சை மற்றும் கீழத் தஞ்சை ஆகிய இரு மாவட்ட நீதித் துறை அதிகார வரம்பில் ஓர் குடி உரிமை பாதுகாப்பு நீதிமன்றம் மட்டும் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கீழத் தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக இந்நீதிமன்றம் அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்தஞ்சை என்பது தற்போதைய நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம். நாகப்பட்டினத்தில் குடி உரிமை பாதுகாப்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

21— [1992 ஏப்ரல் 28

**குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்.**

வினா எண். 3524—டாக்டர் தே. குமாரதாஸ் ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ;

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் தொகுதியில் கருங்கல் பகுதியில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், திட்டம் இந்த ஆண்டு துவக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இதுவரை கிள்ளியூர் தொகுதியில் உள்ள கருங்கல் பகுதியில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் கோரிக்கை எதுவும் பொதுமக்களிடமிருந்து பெறப்படவில்லை.

22—

**இராமநாதபுரத்தில் நீதிமன்றங்கள் அமைத்தல்.**

வினா எண். 3546—திரு. மு. தென்னவன் ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம், துணை நீதிமன்றம், தலைமை நீதிமன்றம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படும்?

விடை—

(அ) இராமநாதபுரத்தில் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் துணை நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) விரைவில் செயல்படும்.

23—

**மேட்டுப்பாளையத்தில் முன்சீப் கோர்ட் அமைத்தல்.**

வினா எண். 3771—செல்வி எல். சுலோசனா ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

(அ) மேட்டுப்பாளையத்தில் முன்சீப் கோர்ட் அமைக்க ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அரசின் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாக செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு, தற்போதைக்கு, நிதி நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

24—

**சைதாப்பேட்டை தாலுகா கோர்ட்டுக்கு புதிய கட்டிடம்**

வினா எண். 3927—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சைதாப்பேட்டை தாலுகா கோர்ட்டுக்கு புதிதாக கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

சைதாப்பேட்டையில் உள்ள நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டும் கருத்துரு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

25—

**திருவண்ணாமலையில் மாவட்ட நீதிமன்றம்**

வினா எண். 4039—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலைநகர் திருவண்ணாமலையில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விரைவில் அமைக்கப்படும்.

26—

அரவக்குறிச்சியில் துணை நீதிமன்றம்.

வினா எண். 4157—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரவக்குறிச்சியில் துணை நீதிமன்றம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) உயர்நீதிமன்றத்தின் கருத்துக்கள் கேட்கப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

27—

மதுராந்தகம் நீதிமன்றத்திற்கு நிலம் கையகப்படுத்துதல்.

வினா எண். 4177—திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மதுராந்தகத்தில் நீதிமன்றங்களுக்கு உரிய இடத்தைக் கையகப்படுத்தி கட்டிடங்களும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மதுராந்தகத்தில் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

28—

ஆலங்குடியில் சார்பு நீதிமன்றம்.

வினா எண். 4332—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

29—

பரமத்தியில் உரிமையியல் நீதிமன்றம்.

வினா எண். 4390—திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலூகா, பரமத்தியில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இது குறித்து உயர்நீதிமன்றம் பரிசீலனை செய்து வருகின்றது.

30—

மேட்டூர் அணையில் சப்-கோர்ட்.

வினா எண். 4869—திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.

மேட்டூர் அணையில் சப்-கோர்ட் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

உயர்நீதி மன்றத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

[1992 ஏப்ரல் 28

31—

கிருஷ்ணகிரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்

வினா எண் 5071—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு, நிதிநிலை காரணமாக தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

32—

வேதாரண்யத்தில் கிளைச் சிறைச்சாலை

வினா எண் 5420—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வேதாரண்யத்தில் கிளைச் சிறைச்சாலை ஒன்று அமைக்க அரசு முன் வருமா?

விடை—

இல்லை. இவ்வினாவுக்கு இடமில்லை.

33—

நாகப்பட்டினத்தில் தீண்டாமை ஒழிப்பு நீதிமன்றம்

வினா எண் 5421—திரு. பி. வி. இராஜேந்திரன் ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதிதாக அமையவுள்ள காயிதே மில்லத் மாவட்டத்திற்கு தீண்டாமை ஒழிப்பு நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு முன் வருமா?



992 ஏப்ரல் 28]

விடை

புதிதாக அமைப்பட்டுள்ள நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், நாகப்பட்டினத்தில் தீண்டாமை ஒழிப்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் அம்மாவட்டத்தில் தனியாக தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

திண்டுக்கல்—அண்ணா மாவட்ட தாலுகா தலைநகரங்களில் முன்சிப் கோர்ட்

வினா எண் 5551—திரு. எம். ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் தாலுகா தலைநகராயிருந்தும் எந்தெந்த தாலுகா தலைநகர்களில் முன்சிப் கோர்ட் மற்றும் குற்றவியல் கோர்ட் இல்லாமல் உள்ளன?

(ஆ) அங்கெல்லாம் கோர்ட் அமைக்க அரசிடம் கருத்து பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில், திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், நிலக்கோட்டை, வேடசந்தூர், நத்தம் ஆகிய ஆறு வட்டங்கள் உள்ளன. இவற்றில் வேடசந்தூர் மற்றும் நத்தத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லை. நத்தத்தில் குற்றவியல் நீதிமன்றம் இல்லை. நத்தத்தில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

37—

திட்டக்குடியில் உரிமையியல் நீதிமன்றம்

வினா எண். 5641—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மங்களூர் தொகுதி திட்டக்குடியில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

36—

வாலாஜாபேட்டை நீதிமன்றக் கட்டிடம்

வினா எண். 5915—திரு. சி. ஞானசேகரன் ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம், வாலாஜா பேட்டையில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வாலாஜாபேட்டையில் நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

மன்னார்குடி தாலுகாவில் சார்பு நீதிமன்றம்

வினா எண். 8403—திரு. டி. எம். ரங்கராஜன் ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடி தாலுகாவில் 'சப் கோர்ட்' அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடி தாலுகாவில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

38—

உத்திரகோசமங்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகம்

வினா எண். 1116—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திரு. உத்திரகோசமங்கையில் ஒரு புதிய சார் பதிவகம் தொடங்க கோரிக்கை அரசிற்கு வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) புதிய சார் பதிவகம் துவக்க ஆண்டுக்கு குறைந்தது 2,000 ஆவணங்கள் பதிவுக்கு தேவை என்ற நிலையில் திரு. உத்திரகோசமங்கையில் புதிய சார் பதிவகம் தொடங்க சாத்தியக் கூறு இல்லை.

39—

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா

வினா எண். 1347—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் மைக்கேல்பாளையம் ஊராட்சிக்குச் சேர்ந்த வேதகாரன்குட்டை பகுதியில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் கிராமம், புல எண்கள் 625/2, 620/4 மற்றும் 621/1 வேதகாரன்குட்டை என்று வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலங்களில் 60 ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்கண்ட நிலத்தை நத்தமாக மாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடவடிக்கை முடிந்ததும் மேற்கண்ட குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

40—

திருச்சி நகராட்சி ரஹ்மானியாபுரம் மக்களுக்கு இலவச மனைப் பட்டா.

வினா எண். 1788—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

திருச்சி நகராட்சி ரஹ்மானியாபுரம் பகுதியிலுள்ள வீடுகளுக்கு அடி மனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?''

விடை—

திருச்சி நகராட்சி ரஹ்மானியாபுரம் பகுதியில் 109 நபர்கள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான வீடுகளில் வாடகைக்கு குடியிருந்து வருவதால், அவ்வாடகை குடியிருப்புகளுக்கு அடி மனைப்பட்டா வழங்க இயலாது.

41—

ஆண்டாங்கொல்லை மக்களுக்கு குடிமனைப் பட்டா.

வினா எண். 1893—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டாங்கொல்லையில் குடியிருக்கும் அனைவருக்கும் குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறை செய்யவும் பட்டா வழங்கவும் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆண்டாங்கொல்லையில் 9 பேர் ஆக்கிரமணம் செய்துள்ள இடம் பொதுப்பணித் துறை பராமரிப்பில் உள்ள பாசன ஏரி புறம்போக்கு நிலமாதலால் இத்தலத்தில் வீட்டுமனை மற்றும் நில ஒப்படை எதுவும் செய்ய இயலாது.

42—

அதம்பை ஆதிதிராவிடர்களுக்கு பட்டா

வினா எண். 1972—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை வட்டம், ஆதிதிராவிடர்களுக்கு சர்வே எண். 117இல் ஏ. 1.92 சென்ட் நத்தம் புறம்போக்கில் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அரசின் பரிசீலனையில் இல்லை.



1992 ஏப்ரல் 28]

43—

இனாம் கோடாரங்குளம் கிராம நிலம்.

வினா எண். 2456—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இனாம் கோடாரங்குளம் கிராமத்தை, திருவாடுதுறை மஹாசந்நிதானம் பெயருக்கு வாங்காமல் தனிப்பட்ட நபர்பெயரில்வாங்கப்பட்டு இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இனாம் கோடாரங்குளம் கிராமத்தில் நிலவரித் திட்டம் அமுல் படுத்தப்பட்டு ரயத்துகளுக்கு பட்டா வழங்கப்பட்டது குறித்த வழக்கு இந்திய உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, உறுப்பினர் கேட்டுள்ள விபரங்களை இம்மன்றத்தில் தெரிவித்தால், அது நிலுவையில் உள்ள வழக்கின் தன்மையை பாதிக்கக்கூடும். எனவே, இது பற்றிய விபரங்களை தெரிவிக்க இயலாது.

44—

தனியார் நிலங்களில் வாழும் ஏழைகளுக்கு நிலம் சொந்தமாக்குதல்

வினா எண். 2485— டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் பல்லாண்டு காலமாக தனியார் நிலங்களில் வாழும் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு அந்நிலத்தை சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

45—

## ஆத்தூரை தனிக்கோட்டமாக ஆக்குதல்

வினா எண். 2504—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சேலம் வருவாய் கோட்டம் மிகப் பெரியதாக தலைவாசல், ஆத்தூர், ஏற்காடு, பனமரத்துப்பட்டி, வீரபாண்டி, சேலம்-1, சேலம் ஆகிய 7 சட்டமன்றத் தொகுதிகளையும், 3 நகராட்சிகளையும், 10 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டதாக உள்ளதால் ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்ட தனிக்கோட்டம் ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இக்கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

## திருவையாற்றில் வருவாய்த்துறை அலுவலகம்

வினா எண். 2681—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவையாறு நகரில் வருவாய்த்துறை அலுவலகம் அமைக்க அரசால் சுமார் 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அங்கு கட்டிடம் கட்ட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்தியது குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையாக இருப்பதாலும், இவை முடிவு பெற சில காலமாகுமென்பதாலும் புதிதாகக் கட்டிடம் கட்டக் கூடிய வாய்ப்புக்கள் தற்போது ஏதுமில்லை.





47—

## பினாமி நிலங்களைக் கைப்பற்றச் சட்டம்

வினா எண். 2883—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் பினாமி நிலங்களைக் கைப்பற்றி நிலமற்ற ஏழை மக்களுக்கு வழங்க வகை செய்யும் புதிய மசோதா கொண்டு வரப்படுமா ?

விடை—

3—10—1991 அன்று, ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

48—

## குப்பத்தேவன் மீனவர்களுக்குப் பட்டா

வினா எண். 3111—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்றை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பதேவன் மீனவர்களுக்கு நத்தம் சர்வே மூலமான செட்டில்மெண்ட் பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

49—

## சிவகாசியை தனி வட்டமாக அறிவித்தல்

வினா எண். 3323—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிவகாசியைத் தனி வட்டமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) மற்றும் (ஆ) இக்கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

50—

போடிநாயக்கனூரை தனித் தாலுக்காவாக அறிவித்தல்

வினா எண். 3552—திரு. தேனி வெ. பன்னீர்செல்வம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

விடை—

(அ) உத்தமபாளையம் தாலுகாவிலுள்ள போடிநாயக்கனூரை மையமாகக் கொண்டு கோடாங்கிப்பட்டி, இராஜசிங்காபுரம் பிர்க்காக்களை இணைத்து தனித்தாலுகாவாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமலுக்கு கொண்டு வரப்படும் ?

விடை—

(அ) இச்செயற் குறிப்பு ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுக்குப்பின் அரசால் முடிவெடுக்கப்படும்.

51—

பாப்பிரெட்டிப்பட்டியை வட்டமாக அறிவித்தல்

வினா எண். 3564—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பாப்பிரெட்டிபட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டத்தை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக்கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.



1992 ஏப்ரல் 28]

52

பட்டா பாஸ்புத்தக முறை அமல்படுத்துதல்.

வினா எண். 3962—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) '' பட்டா பாஸ் புத்தக '' முறையை அமல்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) 1983 ஆம் வருட தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள எல்லா நில உரிமைதாரருக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்க வழிவகை செய்கிறது. இந்த பட்டா காஸ் புத்தகத்தில் நிலங்களில் பயிர் செய்யும் நபர்களின் பெயர்கள், கூட்டுப் பட்டாதாரர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பங்கு, பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரி, செலுத்திய வரி விவரங்கள் நிலங்களின்மீதுள்ள வில்லங்கம் ஆகிய விவரங்களும் குறிப்பிடப்படுகின்றன. பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் பரீட்சார்த்த முறையில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் 1—10—1987 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இத்திட்டத்திற்குத் தற்போது சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இந்த வட்டங்களில் இத்திட்டம் செயல்படும் விதத்தை அரசு நில நிர்வாகத் துறையைக் கலந்து சீராய்வு செய்து வருகிறது. திருத்தணி மற்றும் குளித்தலை வட்டங்களில் பெற்ற அனுபவத்தை ஆய்வு செய்து தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

53—

சேலம் மாவட்டத்தைப் பிரித்தல்.

வினா எண். 3998—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

54—

## மேச்சேரியை வட்டமாக அறிவித்தல்.

வினா எண். 4017—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் மற்றும் ஓமலூர் தாலூக்காக்கள் பெரியதாக இருப்பதால் மேச்சேரியை மையமாகக் கொண்டு ஒரு புதிய தாலுக்காவை உருவாக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை :—

இக்கருத்தினை பரிசீலிக்கும் அவசியம் எழவில்லை

55—

## தனியார் கல்லூரி அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு.

வினா எண். 4027 திரு. கே. பி. ராஜு ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

" கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, கோவைபுதூரில் உள்ள காலி இடங்களை ஒரு தனியார் (CBM College) கல்லூரி ஆக்கிரமித்து வைத்துள்ளதை அரசு கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

விடை :—

(அ) கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், சுண்டக்காமத்தூர் கிராமத்தில் (கோவை புதூர்) சி.பி.எம். கலைக் கல்லூரியால் அரசு நிலங்கள் எவையும் ஆக்கிரமிக்கப்படவில்லை. எனவே

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



56—

## சின்னசேலத்தை வட்டமாக அறிவித்தல்.

வினா எண். 4227— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து சின்னசேலத்தை ஒரு வட்டமாக ஆக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம். எனில், அதன் விவரம் என்ன ?

விடை ;—

(அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

57—

## காரியாப்பட்டியை வட்டமாக அறிவித்தல்.

வினா எண். 4532 திருமதி வி. ஜி. மணிமேகலை ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அருப்புக்கோட்டைத் தொகுதியில் உள்ள காரியாப்பட்டியை தனித் தாலுகாவாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை ;—

(அ) மற்றும் (ஆ) இக்கருத்து அரசின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்குப்பின் அரசின் நிதி வசதிக்கேற்ப முடிவெடுக்கப்படும்.

58—

## பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா ஒதுக்கீடு.

வினா எண். 4595—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) சென்னை, மதுரை, கோவை போன்ற மாவட்டங்களில் பணியாற்றும் பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைப் போன்று பிற மாவட்டங்களிலும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனை கோரி மனுச் செய்யும் பத்திரிகை நிருபர்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ப நடைமுறை விதிகளின்படி வீட்டுமனை வழங்கப்படும்.

59—

**அருள்மிகு கள்ளழகர் கோவில் சார்பாக கிணறு வெட்ட புறம்போக்கு நிலம் குத்தகைக்கு விடுதல்.**

வினா எண். 4597—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், அழகர்கோவில் அருள்மிகு முருகன் கோயில் நிர்வாகம் தன் சொந்த செலவில் கோயிலுக்கு கிழக்கே ½ கி.மீ. தொலைவில் உள்ள ஆயத்தம்பட்டியில் கிணறு வெட்ட பஞ்சாயத்து புறம்போக்கு நிலத்தில் 20' × 20' என்ற அளவிற்கு நிலம் ஒதுக்கித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், ஆயத்தம்பட்டி கிராமம், புல எண் 5-இல் குளம் புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள 2.31 ஏக்கர் நிலத்தில் 1.03 ஏக்கர் நிலத்தை அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில் தேவஸ்தானத்திற்கு திருவிழாக் காலங்களில் பொது மக்களின் உபயோகத்திற்காக கிணறு நீர்த் தொட்டி அமைக்க நிலம் குத்தகைக்கு வழங்குவது தொடர்பான செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.



1992 ஏப்ரல் 28]

60—

**செய்யாறு தாலுகாவை இரண்டாகப் பிரித்தல்.**

வினா எண். 4692—திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு தாலுகா பெரியதாக உள்ளதால் இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

(இ) எந்தெந்த பிர்க்காக்கள் சேர்க்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

61—

**சாணார்பட்டி ஒன்றியத்தை நத்தம் தாலுகாவுடன் இணைத்தல்.**

வினா எண். 5141—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியைச் சார்ந்த சாணார்பட்டி ஒன்றியத்தை தற்போதுள்ள திண்டுக்கல் தாலுகாவிலிருந்து பிரித்து நத்தம் தாலுகாவுடன் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து முறையீடுகள் அரசுக்கு செய்துள்ளனரா ?

(இ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

[1992 ஏப்ரல் 28

62—

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண். 5194—திரு. டி. சுதர்சனம் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

63—

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண். 5273—திரு. ம. சின்னசாமி ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

64—

லால்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண். 5389—திரு. எம். தங்கவேல் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து மண்ணச்சநல்லூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

இத்தகைய செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

65—

வையங்குடி கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

வினா எண். 5476—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, வையங்குடி கிராமத்தில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா :

விடை—

ஆம்.

66—

கரும்புப் பண்ணைக் கழக நிலங்கள் விற்பனை.

வினா எண். 5601—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த ஆண்டுகளில் மூட முடிவு செய்யப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் உள்ள கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு சொந்தமான நிலங்கள் என்ன நெறிமுறைகளின்படி விற்பனை செய்யப்பட்டன ?

(ஆ) அப்படி விற்பனை செய்யப்பட்டவற்றில் முறைகேடுகள் மற்றும் பினாமி பெயர்களில் விற்பனை நடந்தது என ஏதேனும் முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) விற்கப்பட்ட நிலங்கள் சரியான முறை விலை மதிப்பீடு செய்யப்பட்டு விலை நிர்ணயிக்கப்பட்டனவா என்பது பற்றி அரசு ஆய்வு மேற்கொள்ள முன் வருமா ?

விடை—

விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

## விவர அறிக்கை.

தமிழ்நாடு முன்னாள் கரும்புப் பண்ணைக் கழகம் கலைக்கப்பட்டவுடன் அக்கழகத்திடமிருந்து மீளப்பெறப்பட்ட நிலங்கள், தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் கீழ் தகுதியான நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டன. ஒப்படை கோரி ஏராளமான மனுக்கள் வரப் பெற்றதால், ஒவ்வொரு நபருக்கும் 0.75 ஏக்கர் நன்செய் ரூ. 2,700 என்றும், 1.50 ஏக்கர் புன்செய் ரூ. 855 என்றும் நில மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு, தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உபரி நில விநியோக விதிகளின்படி ஒப்படை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இந்நேர்வில் ஒப்படைக்காக ஒப்படைதாரர்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையையும், ஒப்படை நிலங்கள் சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற் கொண்டு, நிலமதிப்புத் தொகையைக் குறைத்து, நன்செய் 0.75 ஏக்கருக்கு ரூ. 2,000 என்றும், புன்செய் 1.50 ஏக்கருக்கு ரூ. 700 என்றும் வசூலிக்க உத்திரவிடப்பட்டது. அதன்படியே ஒப்படைதாரர்களிடமிருந்து நில மதிப்புத் தவணைத் தொகை வசூலிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின்படி ஒப்படை செய்ததில் விதிமுறைகள் மீறுதல், முறைகேடுகள் நடந்ததாகத் தெரியவில்லை. இது சம்பந்தமாக மேல்முறையீட்டு மனுக்கள் ஏதும் உரிய மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் நிலுவையில் இல்லை. அரசுக்கு வரும் பல்வகை புகார் மனுக்கள் தொடர்பாக, அவ்வப்போது விசாரணை செய்து, மனுதாரர்களுக்குப் பதில் தெரிவிக்கப்படுகின்றது.

விதிமுறைகளின்படி ஒப்படை செய்யப்பட்ட நிலங்களுக்கு சரியாக விலைமதிப்பீடு செய்யப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இது பற்றி மேலும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

67—

வினா எண். 5602—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் மூடப்பட்ட அரசு கரும்புப் பண்ணை நிறுவனத்தின் நிலங்களை வாங்கியோரின் விவரம் என்ன?



1992 ஏப்ரல் 28]

(ஆ) அவர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலங்களின் அளவு என்ன?

(இ) அப்போதைய அரசு இதற்கென ஏதேனும் நெறிமுறைகள் நிர்ணயம் செய்ததா?

(ஈ) அந்த நிலங்களின் அனைத்து விற்பனையிலும் அந்த நெறிமுறைகள் பின்பற்றப்பட்டனவா?

விடை—

விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

(அ) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் கலைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக மீளப்பெறப்பட்ட 4,051.74 ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் கீழ் தகுதியான நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஒப்படை செய்யப்பட்டது. விற்பனை செய்யப்படவில்லை.

| | ஏக்கரில். |
|---|---|
| (1) மீள பெறப்பட்ட மொத்த நிலங்கள் .. | 4051.74 |
| (2) தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பு .. .. .. | 3871.53 |

## பயனடைந்தோர் விவரம்.

| பயனடைந்தோர் இனவாரியாக. | நபர்கள். | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு ஏக்கரில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதிதிராவிடர் .. .. .. | 3875 | 2906 |
| முன்னாள் இராணுவத்தினர் .. | 4 | 3 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் .. | 459 | 346 |
| பிற்படுத்தப்பட்டோர் .. | 837 | 617 |
| | 5175 | 3872 |

மீதமுள்ள 180.21 ஏக்கர் நிலங்கள், ஒப்படைக்க லாயக்கற்றதாகவும், தோப்பாகவும், தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை

நில விநியோகம்) விதிகளின் விதி 13-இன் கீழ் ஒதுக்கப்பட்ட நிலங்களும் மாற்றுப் பரிவர்த்தனை மூலம் கவரப்படும் நிலங்களுமாகும்.

(ஆ) தமிழ்நாடு கரும்புப் பண்ணை கழகத்திடமிருந்து மீளப் பெறப்பட்ட நிலங்கள் யாருக்கும் விற்பனை செய்யப்படவில்லை. அவை தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகள், 1965, பின்னர் திருந்தியவாறு விதிகளின்படி தகுதியான நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பு 3871.53 ஏக்கராகும்.

இ) ஒப்படைகோரி ஏராளமான மனுக்கள் வரப்பெற்றதால் ஒப்படைதாரருக்கு நன்செய்யாக இருந்தால் 1.50 ஏக்கர் நிலங்களும் ஒப்படை செய்யப்பட்டன. அவற்றிற்கு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோக) விதிகளின்படி, முறையே, ரூ. 2,700- மற்றும் ரூ. 855- நிலமதிப்புத் தொகையாக வசூலிக்கப்பட வேண்டும். இந்நேர்வில், ஒப்படைக்காக ஒப்படைதாரர்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையும், ஒப்படை நிலங்களை சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, நிலமதிப்புத் தொகையை குறைத்து நன்செய் 0.75 ஏக்கருக்கு ரூ. 2000 என்றும், புன்செய் 150. ஏக்கருக்கு ரூ. 700- என்றும் வசூலிக்குமாறு உத்திரவிடப்பட்டது. முன்னாள் கரும்புப் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் ஏனையோர்க்கும் 1990- ஆம் ஆண்டு மே மாதத்தில் பட்டா வழங்கப்பட்டது. அதன்படியே, ஒப்படைதாரர்களான ஆதிதிராவிடர், முன்னாள் கரும்புப் பண்ணை தொழிலாளர்கள், முன்னாள் இராணுவத்தினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் போன்றவர்களிடமிருந்து நிலக்கிரயத்தொகையை இருபது தவணைகளில் வசூலிக்கப்பட்டு வருகின்றது.

ஈ) ஒப்படை வழங்கப்பட்ட அனைத்து இனங்களிலும் உத்தரவின் நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட்டன.

68—

மாட்டுவண்டித் தொழிலாளர்ளுக்கு நிவாரண நிதி

வினா எண். 5961—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எதிர்பாராத விபத்துக்களில் மரணமடையும் மாட்டு வண்டித் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு முதல் அமைச்சா நிவாரண நிதி அல்லது அரசு நிதியிலிருந்து குறைந்தபட்சமாக





20 ஆயிரம் ரூபாய் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு மாட்டு வண்டித் தொழிலாளர் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

69—

திருச்சியில் விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாணையத்தின் கிளை.

வினா எண். 6124—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கிளை ஒன்றை திருச்சியில் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கிளை ஒன்றினை திருச்சியில் அமைக்கும் செயற் குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

70—

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினர்களின் பதவி நிலை.

வினா எண். 6126—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் கூடுதல் பீடங்களில் உள்ள துறை உறுப்பினர்களின் (Departmental members) பணித்தரத்தை இணை ஆணையர் நிலைக்கு உயர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

71—

பாசனக் கட்டண விகிதங்களை சீரமைத்தல்.

வினா எண். 8289—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மீது அரசு ஆய்வு முடித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

விடை—

(அ) இன்னும் அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

72—

கிராமப் பணியாளர் எண்ணிக்கை.

வினா எண். 8495—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் வருவாய்த்துறையில் பணியாற்றும் கிராமப் பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அவர்கள் பணி என்ன ?

(இ) அவர்களுக்கு அடையாள அட்டை ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா ?

(ஈ) அவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரி சீருடை வழங்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) தமிழகத்தில் உள்ள கிராமப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 31,302.



(ஆ) கிராமக் காவலர் (தலையாரி), கிராமப் பணியாளர் (வெட்டி), பாசனக் காவலர் (நீர்க்கண்டி) ஆகிய மூவரும் கிராமப் பணியாளர்கள் என்ற பொதுப் பெயருக்குள் அடங்குவர். இவர்கள் கிராம நிர்வாகத்தில் கிராம நிருவாக அலுவலரின் அனைத்துப் பணிகளிலும், அவருக்கு உதவியாக இருப்பர். இவர்கள் பகுதி நேரப் பணியாளர்களாவர்.

(இ) இல்லை.

(ஈ) இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

73—

பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள்.

வினா எண். 471—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், கட்டுமானப் பணி எப்பொழுது முடிவுறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

74—

வினா எண். 639—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அத்தாணி, குருவாரெட்டியூர், நெருஞ்சிப்பேட்டை, சிங்கம்பேட்டை, ஆலாம்பாளையம் போன்ற ஊர்களில் அரசினர் மாணவியர் மற்றும் மாணவர் இல்லங்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விடுதிகள் ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கேள்வியில் கண்டுள்ள அத்தாணி மற்றும் குருவாரெட்டியூரில் தற்சமயம் 3 மாணவ/மாணவியர் விடுதிகள் உள்ளன. மற்ற ஊர்கள் இவ்விரு ஊர்களுக்கும் அருகாமையில்

உள்ளதாலும் போதிய பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இல்லாததாலும் புதிய விடுதிகள் ஆரம்பிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

75—

வினா எண். 642—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அத்தாணி, முங்கில்பட்டி, ஆலாம்பாளையம் ஆகிய இடங்களில் மிக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்கள் புதியதாகத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதிய மாணவர் விடுதிகள் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

76—

## பின்தங்கிய மக்களுக்கு காலனி வீடுகள்

வினா எண். 1908—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த செக்கடிக் கொல்லையிலுள்ள மிகவும் பின்தங்கிய மக்களுக்கு (Denoitfied Communities) காலனிவீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

77—

வினா எண். 1924—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுபுளிக்காட்டில் வாழும் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு காலனிவீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

இல்லை.

78—

வினா எண். 2290—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல் காமராஜ்நகர் மிகவும் பின்தங்கிய வகுப்பு மக்களுக்கு வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

79—

வினா எண். 2291—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி ஊராட்சி வைரவன் காலனியில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

80—

வினா எண். 3164—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், துறையூரைச் சேர்ந்த வானியக்காட்டில் உள்ள மிகவும் பின்தங்கிய முத்திரையர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

81—

**பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.**

வினா எண். 4397—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியத்தில் பிற்படுத்தப் பட்ட மாணவ, மாணவியர்களுக்கு விடுதி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

82—

வினா எண். 5245—திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில், மீன் சுருட்டியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி அமைக்கும் பணி அர சின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

தற்சமயம் இல்லை.

83—

வினா எண். 6389—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை தொகுதியில், கந்தர்வகோட்டையில் பிற் படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் புதியதாக விடுதி அமைக் கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

கந்தர்வகோட்டையில் ஏற்கனவே சீர்மரபினர் மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் இயங்கி வருவதால், தனியே பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி தொடங்கும் செயற் குறிப்பு தற்பொழுது இல்லை.



1992 ஏப்ரல் 28]

84—

**நன்குடி வெள்ளாளர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.**

வினா எண். 8267—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சிதம்பரனார் மாவட்டத்தில் வசித்து வரும் நன்குடி வெள்ளாளர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன் வருமா ?

விடை—

நன்குடி வெள்ளாளர் சமூகத்தை மிகப் பிற்படுத்தப்பட் டோர் பட்டியலில் சேர்க்க தற்போது இயலாது.

85—

**பாணர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.**

வினா எண். 8268—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

'பாணர்' சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டி யலில் சேர்க்க அரசு முன் வருமா ?

விடை—

'பாணர்' சமூகத்தை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டி யலில் சேர்க்க தற்போது இயலாது.

86—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களுக்கு அரசு கலைக்கல்லூரி**

வினா எண். 29—திரு. இரா. நடேசன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களுக்கென அரசு கலைக் கல்லூரி அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

87—

அனைத்து மாணவர்களுக்கும் பிளஸ் 2 வரை இலவசக் கல்வி.

வினா எண். 99—திரு. டி.எம். ரங்கராஜன்; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

போதனா மொழி தமிழ், ஆங்கிலம் என்ற பாகுபாடு இல்லாமல் பிளஸ் 2 வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளித்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

88—

ஈச்சம்பட்டியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி.

வினா எண். 139—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம், ஆத்தூர் தொகுதி, ஈச்சம்பட்டியில் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

89—

ஆத்தூரில் பொறியியல் கல்லூரி.

வினா எண். 142—திரு. வெ. தமிழரசு ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆத்தூரில் பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



90—

தேவக்கோட்டையில் அரசு உயர்நிலைப்பள்ளி.

வினா எண். 212—திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், தேவக்கோட்டையில் அரசு உயர்நிலைப்பள்ளி புதியதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், விபரம் என்ன ?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

91—

நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை.

வினா எண். 215—திரு. ம. சின்னசாமி ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அரசின் அங்கீகாரம் பெறப்படாமல் உள்ள நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

92—

அரசு பெண்கள் கலைக் கல்லூரி.

வினா எண். 304—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு பெண்கள் கலைக் கல்லூரி இல்லாத மாவட்டங்கள் எத்தனை?

(ஆ) அக்கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிதாக ஏற்படுத்த அரசு முன்வருமா? [1992 ஏப்ரல் 28

விடை—

(அ) 12 மாவட்டங்களில் மகளிருக்கென அரசு கலைக் கல்லூரி இல்லை.

(ஆ) மற்ற மாவட்டங்கள் 6இல் தனியார் பெண்கள் கல்லூரிகள் உள்ளன. இந்த ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் அரசு பெண்கள் கல்லூரி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் திருவண்ணாமலை—சம்புவராயர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பெண்கள் கல்லூரி இல்லை. தனியார் முன் வந்தால் அரசு அனுமதி வழங்குவது பற்றி பரிசீலிக்கும்.

93—

## வால்பாறையில் கல்லூரி.

வினா எண். 312—டாக்டர் அ. ஸ்ரீதரன்; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வால்பாறை மலைப் பகுதியில் ஒரு கல்லூரி அல்லது தொழிற் கல்லூரி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

94—

## வேலூர் சத்துவாச்சாரியில் அரசு கலைக் கல்லூரி.

வினா எண். 425—திரு. சி. ஞானசேகரன்; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வேலூரில் உள்ள சத்துவாச்சாரி வீட்டு வசதி வாரியப் பகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஆண்கள் மற்றும் பெண்களுக்கென்று தனித் தனியாகத் தொடங்க அரசு முன் வருமா?



1992 ஏப்ரல் 28]

விடை—

அரசு முன் வராது. ஏனெனில் இப்பொழுது அவசியமில்லை.

95—

## அரியனந்தல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண். 475—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடித் தொகுதியில் அரியனந்தலில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) எந்த ஆண்டு தொடங்கப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

96—

## தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு நிரந்தர ஊதியம்.

வினா எண். 497—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொகுப்பூதிய அடிப்படையில் அரசுப் பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியம் பணியிடமாக அனுமதி வழங்கப்பட்டு, முதல் 2 ஆண்டுகளுக்கு தொகுப்பு ஊதியமும், அதன் பின்னர் இவ்வாசிரியர்களுக்கு உரித்தான ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

97 —

## வேலூரில் புதிய உயர்நிலைப் பள்ளி.

வினா எண். 499—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வேலூரில் புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

98 —

## மதுரை நாயக்கர் மற்றும் சுல்தான் காலத்து போர்க் கருவிகள்.

வினா எண். 532—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையை ஆண்ட நாயக்கர் மற்றும் சுல்தான்கள் காலத்தில் உள்ள போர்க் கருவிகள் சமீபத்தில் வைகை ஆற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

98—

## விவர அறிக்கை.

(அ) ஆம்.

(ஆ) மதுரையை ஆண்ட நாயக்கர் மற்றும் சுல்தான்கள் காலத்தைய சில போர்க் கருவிகளை மதுரை முனிச்சாலையைச் சேர்ந்த திரு. காமராஜ். என்பவர் வைகை ஆற்றிலிருந்து கண்டெடுத்து அப்பொருட்களை தம்முடைய வீட்டில் வைத்திருந்ததாகவும், பின்னர் கடந்த ஜூலை மாதம் இந்தப் போர்க் கருவிகளை மதுரை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் காப்பாட்சியர் அவர்களிடம் அன்பளிப்பாக அளிக்கப்பட்டு தற்போது பொது



1992 ஏப்ரல் 28]

மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். திரு. காமராஜ் என்பவர் அன்பளிப்பாக கொடுத்த போர்க் கருவிகளின் விவரம் பின்வருமாறு :

(1) ஒரு பித்தளைப் பிடியுடன் கூடிய வாள் (இது கான்ராஜ் கோட்டையினைச் சார்ந்த பீர் ராவுத்தர் மகன் நத்தர் சாகிப்பின் பட்டா என்று 16-ஆம் நூற்றாண்டைய எழுத்து வடிவைக் கொண்டதாய் பித்தளைப் பிடியில் பொறிக்கப்பட்டுள்ளது. இது பிள்ளையார் சுழியுடன் ‘ 2 ’ என்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இது மதுரை சுல்தானியர் காலத்தைச் சார்ந்ததாகும்.

(2) இரண்டு வாள்கள்—துருப்பிடித்த நிலையில் (நாயக்கர் கால கலையம்சம் மற்றும் கைப்பிடி அமைப்புகள்).

(3) ஒரு குத்தீட்டி.

(4) ஒரு ஈட்டியின் முனை.

மேலும் மதுரை அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர் 2—7—1991-ஆம் நாளன்று வைகையாற்றில் நாணயங்களை சேகரிக்க சென்றபோது இரண்டு பிச்சுவாக் கத்திகளும், உடைந்த வாளும், விஷ்ணு, விராஜி, முருகன், பிரம்மா, ரங்கனாதன், நர்தி, (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) மற்றும் சூரியக் கடவுள் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு) போன்ற சிற்பங்களும் கண்டெடுக்கப்பட்டு மதுரை அருங்காட்சியகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

99—

## ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 558—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழகத்திலுள்ள தொடக்கப் பள்ளி, நடுநிலை, உயர் நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறைகளைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தமிழகத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேநிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறைகளைப் போக்குவதற்கு, நிதி நிலைக்கேற்ப ஆண்டுதோறும் கூடுதல் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்படுகின்றன.

[1992 ஏப்ரல் 2

**100—**

உளூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.

வினா எண். 583—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை, உளூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்ட பூக்குளம் இடத்தை ஒதுக்கித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பூக்குளம் இடத்தை ஒதுக்கித் தருமாறு கூடுதல் மாவட்ட ஆட்சியருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. நிலமெடுப்பிற்கு கருத்துரு பெறப்பட்டதும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**101—**

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 614—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தவும், புதிய கட்டிடம் கட்டித் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**102—**

பனஞ்சேரியில் ஓராசிரியர் பள்ளி தொடங்கல்.

வினா எண். 625—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



**1992 ஏப்ரல் 28]**

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வளப்பிரமன்காடு ஊராட்சி, பனஞ்சேரியில் புதிதாக ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

**103—**

பேராவூரணியில் அரசு கலைக் கல்லூரி.

வினா எண். 631—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் ஒரு அரசு கலைக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

**104—**

நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 680—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், விளங்குளம் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

**105—**

தொழிற் கல்வி நிலையம் அமைத்தல்.

வினா எண். 705—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவனத்தில் ஒரு தொழிற்கல்வி நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

106—

## நூல் நிலையத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண். 713—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், சுற்றுப்புற கிராமங்களுக்கு மையமாக இருந்து வரும் நாச்சியார் கோவில் நூல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

நாச்சியார் கோவில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட நாச்சியார் கோவில் ஊராட்சி மன்றம் இலவசமாக காலி மனை வழங்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்தீர்மானத்தின் மீது வருவாய்த் துறையின் நுழைவு அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலி மனை பெறப்பட்டதும், நூலகக் குழுவின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

107—

## கிராமங்களிலுள்ள நர்சரி பள்ளிகள்.

வினா எண். 740—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நர்சரி பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்க ரூ. 25,000 கட்ட வேண்டுமென்ற அரசாணையின்படி கிராமங்களில் உள்ள நர்சரி பள்ளிகளால் இத்தொகை செலுத்துவது கடினமானதால் விதிவிலக்கு அளித்து தொகையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பரிசீலனையில் உள்ளது.



1992 ஏப்ரல் 28]

108—

## கள்ளக்குறிச்சியில் அரசு கலைக் கல்லூரி.

வினா எண். 749—திரு. ஆர்.பி. பரமசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கள்ளக்குறிச்சியில் அரசு கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

109—

## நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம்.

வினா எண். 783—திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் நகரத்திலுள்ள அரசு நூலகத்திற்குச் சொந்தமாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும் ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

110—

## அரசு ஆரம்பப்பள்ளி அமைத்தல்.

வினா எண். 839—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பள்ளப்பாளையத்தில் உள்ள மாணவ, மாணவியர் கல்வி பயில அரசு ஆரம்பப்பள்ளி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

பள்ளப்பாளையத்தில் மக்கள் தொகை மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் குறைவாக உள்ளதாலும் மேற்படி இடத்திலிருந்து 1.4 கி.மீ. தொலைவில் பள்ளிப்பாளையம் என்ற கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நடைபெற்று வருவதாலும், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை மேற்படி இடத்தில் துவக்குவதற்கு வாய்ப்பில்லை.

111—

குருவிக்கரம்பை அரசு மேல் நிலைப் பள்ளியில் காலியாக உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப நடவடிக்கை.

வினா எண். 849—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை அரசு மேல் நிலை பள்ளியில் காலியாக உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இப்பள்ளியில் காலிப் பணியிடம் தற்போது எதுவும் இல்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

112—

தமிழில் பி. எச்டி. படித்தவர்களை கல்லூரிகளிலுள்ள காலி (டங்களில் பணி அமர்த்தல்.

வினா எண். 886—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழில் பி.எச்டி. படித்த 125 பேரையும் பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் பல்கலைக் கழகம் கல்லூரிகளில் உள்ள காலி பணியிடங்களில் உடன் பணி அமர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

113—

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பி. எச்டி. பட்டம் பெற்றோரை பணி அமர்த்தல்.

வினா எண். 890—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்தியுள்ளதை மாற்றி பி. எச்டி. பட்டம் பெற்றோரையும், நிரந்தரமாகப் பணி அமர்த்தவும், அங்கு பல ஆண்டுகளாகப் பணிபுரியும் ஆய்வாளர்களை நிரந்தரமாக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உந்து பேராசிரியர்கள் ஓய்வு பெற்றபின் இருந்த அனுபவம் காரணமாக தொகுப்பூதியம் / மதிப்பூதியம் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குட்பட்ட திட்டங்களுக்காகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அத்திட்டங்கள் நிறைவு பெற்ற உடன் அவர்கள் குறிப்பிட்ட பணியில் இருந்து விடுவிக்கப்படுவர். மேற்படி திட்டப் பணிகளுக்கு பி. எச்டி. பட்டம் பெற்றவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்துவது இயலாத ஒன்றாகும். ஆகவே ஆய்வாளர்களை காலவரையறைக்குட்பட்ட திட்டப் பணிகளில் நிரந்தரம் செய்ய இயலாது.

தமிழ் ஆராய்ச்சியாளர்களை ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து விலக்களித்து பணியளித்தல்.

வினா எண். 891—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ் ஆராய்ச்சியாளர்கள் கல்லூரி ஆசிரியர் ஆகும் தகுதி பெற்றிருப்பதால் இதற்காக நடத்தப் பெறும் கல்லூரி ஆசிரியர் தகுதித் தேர்வினை (Screening test) நிறுத்தி அனைத்து ஆய்வாளர்களுக்கும் அத்தேர்விலிருந்து விலக்களித்து பணியளிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

115—

பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளியில் கணக்குப் பிரிவு தொடங்கல்.

வினா எண். 978—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளியில் கணக்குப் பிரிவு தொடங்கவும், கணித ஆசிரியர் நியமனம் செய்யவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இப்பள்ளியில் 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் உள்ளடக்கிய கணிதப் பிரிவைத் துவக்க பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளியில் கணித ஆசிரியர் 30-9-1991 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

116—

பூந்தமல்லியில் கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 1004—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையை அடுத்த பூந்தமல்லியில் கலைக் கல்லூரி துவங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கல்லூரி தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

117—

பென்னாகரம் தொகுதியில் பெண்கள் பாலிடெக்னிக் அமைக்கும் திட்டம்.

வினா எண். 1069—டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

(அ) பென்னாகரம் தொகுதியில் பெண்கள் பாலிடெக்னிக் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

118—

பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்.

வினா எண். 1082—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகளை மேம்படுத்த பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் (Inter-University Co-ordination Council) ஒன்றை நிறுவும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

சென்னை-600 008.

119—

பாபநாசம் நகரிலுள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி.

வினா எண். 1083—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் நகரில், அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாக கட்டிடம் கட்டித்தர அரசு முன் வருமா?

[1999 ஏப்ரல் 28

விடை—

(அ) மற்றும் (ஆ) ஹட்கோ கடன் உதவி மூலம் 1991-92ல் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள 64 பள்ளிகளுள் இப்பள்ளியும் அடங்கும்.

**120—**

மானியம் பெறாமல் இயங்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் வழங்கல்.

வினா எண். 1137—திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மானியம் பெறாமல் இயங்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக ஊதியம் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**121—**

சைதை தொகுதியிலுள்ள அரசினர் ஆசிரியர் கல்லூரி வளாகத்தில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 1326—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சைதை தொகுதியில் உள்ள அரசினர் ஆசிரியர் கல்லூரி வளாகத்தில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

**122—**

ஆலங்குளத்தில் அரசு கலைக்கல்லூரி அமைத்தல்.

வினா எண். 1327—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்றை அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான பணி எப்பொழுது துவங்கப் படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**123—**

அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 1339—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதியைச் சேர்ந்த கூடக்கரை கிராமம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியும் கட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

164944

(அ) இப்பள்ளிக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**124—**

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற நடவடிக்கை.

வினா எண். 1439—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) பரமக்குடி தொகுதி, அரியனந்தல், எம். நெடுங்குளம் ஆகிய ஊர்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

125—

**பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கூடுதல் கட்டிடம் கட்டுதல்.**

வினா எண். 1485—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

126—

**ஆத்தூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்தல்.**

வினா எண். 1505—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மேற்குப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தவும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து கிழக்குப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி ஒன்றை ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

127—

**திருத்துறைப்பூண்டியில் கலைக் கல்லூரி அமைத்தல்.**

வினா எண் 1531—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

128—

**திருத்துறைப்பூண்டி மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்களைப் புதுப்பித்தல்.**

வினா எண். 1533—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி துவங்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது அரசு கடும் நிதி நெருக்கடி நிலையில் இருக்கிறது. நிதி ஒதுக்கீட்டின்படி சில மராமத்துப் பணிகள் தேர்வின் அடிப்படையில் செய்யப்பட உள்ளன. மேற்கண்ட பள்ளியின் உடனடி மராமத்துப் பணிக்கான தகுதியின் அடிப்படையிலும் முன்னுரிமையின் அடிப்படையிலும் பழுதுப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

129— [1992 ஏப்ரல் 28

**எடையூர் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-2 படிக்கும் மாணவர்கள் அதே பள்ளியில் தேர்வு எழுத அனுமதி வழங்கல்.**

வினா எண். 1543—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் எடையூர் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-2 படிக்கும் மாணவர்கள் அதே பள்ளியில் தேர்வு எழுத அரசு அனுமதி வழங்குமா?

விடை—

எடையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மார்ச்/ஏப்ரல் 1992 மேல்நிலைத் தேர்வுக்கு புதிதாக தேர்வு மையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

130—

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்.**

வினா எண். 1571—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், தாமரங்கோட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தாமரங்கோட்டையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை 1991-92 கல்வி ஆண்டு முதல் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. (அரசு ஆணை நிலை எண் 921/கல்வி/நாள் 23—9—1991).

131—

**பரமக்குடியில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி.**

வினா எண். 1628—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

(அ) பரமக்குடியில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

132—

**சத்திரக்குடி மேல்நிலைப் பள்ளியில் வகுப்பு அறைகள் கட்டும் திட்டம்.**

வினா எண். 1681—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சத்திரக்குடி மேல்நிலைப் பள்ளியில் வகுப்பு அறைகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

133—

**பார்த்திபனூரில் மேல்நிலைப் பள்ளியில் மேலும் வகுப்பு அறைகள் கட்ட நடவடிக்கை.**

வினா எண். 1682—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் மேல்நிலைப் பள்ளியில் மேலும் வகுப்பு அறைகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/ இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டடமும் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந் நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

134—

**அனந்த கோபாலபுரத்திலுள்ள உயர் நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்.**

வினா எண். 1842—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அனந்த கோபாலபுரத்திலுள்ள உயர் நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/ இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

135—

**கீழக்குறிச்சி நடுநிலைப் பள்ளி.**

வினா எண். 1875—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம் கீழக்குறிச்சி நடுநிலைப் பள்ளியின் விளையாட்டுத்திடலுக்கு சொந்தமான இடத்தை ஒதுக்கித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

இல்லை.



136—

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்.**

வினா எண். 1900—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை வடக்கு நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை —

இல்லை.

137—

**உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்கல்.**

வினா எண். 1942—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக் கோட்டை ஒன்றியம், நடுவிக் கோட்டை உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

இல்லை.

138—

**புதிதாக உயர்நிலைப் பள்ளி தொடங்கல்.**

வினா எண். 1957—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை நகரத்தின் மக்கள் தொகை அதிகமுள்ள காமராஜர் புரத்தில் புதிதாக உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 91-92 ஆம் ஆண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

139—

புதிதாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கல்.

வினா எண். 1959—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டையில் புதிதாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

140—

நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண். 2005— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர்களுக்கு ஒரு நூல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை :—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர்களுக்கு நூல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. எனினும் அக் கிராமத்திற்கு அருகில் உள்ள வெட்டுவாக்கோட்டை கிளை நூலகத்துடன் இணைத்து செயல்படுத்தும் வகையில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



141—

பத்மநாபபுரம் தொகுதியில் ஆண்கள் கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 2059—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பத்மநாபபுரம் தொகுதியில் ஒரு ஆண்கள் கலைக் கல்லூரி தொடங்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

இல்லை

142—

கறம்பக்குடியில் புதிய பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்கல்.

வினா எண். 2096—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

143—

நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண். 2164—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி மேற்கு கோனார் தெருவில் ஒரு நூல் நிலையம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஒரு பகுதி நேர நூலகம் திறக்க தஞ்சை மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

144—

இடையாத்தி (கிழக்கு) தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண். 2197—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கிராமம், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் (ஜூனியர்) பணியிடம் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

145—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண். 2414—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோவில் ஒன்றியம், குளத்தூரிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

146—

ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா எண். 2415—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி, எட்டியவயலிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



விடை—

(அ) பரமக்குடி தொகுதி, எட்டிய வயலில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த பரிந்துரைகள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

147—

அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசுக்கு ரூ. 1 லட்சம் செலுத்த வேண்டியதை மாற்ற நடவடிக்கை.

வினா எண். 2493—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசுக்கு விண்ணப்பிக்கும்போது உள்ளூர் பொது மக்கள் ரூ. 25 ஆயிரம் அரசுக்கு செலுத்த வேண்டும் என்பது ரூ. 1 லட்சம் ஆக்கப்பட்டுள்ளதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

148—

ஆத்தூர் கலைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை.

வினா எண். 2498—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தலைவாசல் தொகுதியில் உள்ள ஆத்தூர் கலைக் கல்லூரியில் போதுமான வகுப்பறைகள் கட்டாததால் மாணவர்கள் சிரமப்படுவதால் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

ஆத்தூர் அரசு கலைக்கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான கருத்துரு ஏதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

149—

தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கல்.

வினா எண். 2558—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்துவது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

150

தேர்தல் காலங்களில் கட்சிக்கு வெளிப்படையாக வேலை செய்யும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை.

வினா எண். 2577—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் குறிப்பாக ஆசிரியர்கள் தேர்தல் காலங்களில் ஏதாவது ஒரு கட்சிக்கு வெளிப்படையாகவே வேலை செய்வதால் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வெளிப்படையாக ஒரு கட்சிக்கு தேர்தல் பணியாற்றுவது நிரூபிக்கப்பட்டால் அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வழிவகை உள்ளது.



1992 ஏப்ரல் 28

151—

கண்பார்வை இல்லாத மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து படிக்க நடவடிக்கை.

வினா எண். 2593—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கண்பார்வை இல்லாத மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் என்னும் திட்டத்தின்கீழ் எல்லா மாணவர்களுடனும் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை உருவாக்கவும் அதற்கான நிதி ஒதுக்கீட்டை ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மத்திய அரசின் இயலாதோர்க்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் என்னும் திட்டத்தின்கீழ் கண்பார்வை இல்லாத மாணவர்கள் எல்லா மாணவர்களுடனும் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு உள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 1. திருவள்ளுவர், 2. காஞ்சிபுரம், 3. திருவெறும்பூர், 4. பல்லடம், 5. கூடலூர் என்ற ஐந்து ஊராட்சி ஒன்றிய பகுதிகளும், 6. மதுரை மாநகராட்சி பகுதிகளிலும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககத்தின் மூலம் அமல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அமல்படுத்துவதற்கான நிதி மத்திய அரசால் கொடுக்கப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9.36 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

152—

ஆரம்பப் பள்ளி அமைத்தல்.

வினா எண். 2604—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் ஒன்றியம், கீழக்கரும்புளியூத்து கிராமத்திற்கு ஆரம்பப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆலங்குளம் ஒன்றியம், கீழக்கரும்புளியூத்து கிராமத்தில் ஆரம்பப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

153—

## உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 2645—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

154—

## ஓராசிரியர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 2667—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் எஸ். ஆர். பட்டினத்தைச் சேர்ந்த பள்ளி ஓடவயலில் ஓராசிரியர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

155—

## புதிதாக கிளை நூலகம் அமைத்தல்.

வினா எண். 2682—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் தாலுக்கா, திருப்புறம்பியம் ஊராட்சி மன்றத்தில் புதிதாக ஓர் கிளை நூலகம் அமைத்துத்தர அரசு முன் வருமா?



(ஆ) ஆம் எனில் எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

(அ) இவ்வூரில் கிளை நூலகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

156—

## ஓராசிரியர் பள்ளி தொடங்க நடவடிக்கை.

வினா எண். 2713—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழக்காடு மிகவும் பின் தங்கிய மக்களுக்கு ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மேற்படி செங்கமங்கலம் கீழக்காடு கிராமத்தில் ஓராசிரியர் பள்ளி தொடங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டால் விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

157—

## அரசு நிதி பெறாமல் பள்ளிகள் திறக்க முன்வரும் தனியார்களுக்கு அனுமதி வழங்கல்.

வினா எண். 2900—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) அரசு நிதியை எதிர்நோக்காமல் பள்ளிகள் திறக்க முன்வரும் தனியார்களுக்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு இதனை அமுல்படுத்த முன் வருமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1991-92 ஆம் ஆண்டில் தனியார் சுயநிதி பள்ளிகளை தொடங்க அரசு ஆணைகள் வழங்கியுள்ளன.

158—

திருக்களப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி.

வினா எண். 2934—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம் திருக்களப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி ஏற்படுத்தி தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

159—

குழுமூர், பிலோமினா நடுநிலைப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்த அளவில் ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண். 2955—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம் செந்துறை ஒன்றியம், குழுமூர், பிலோமினா நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்த ஆசிரியர் இல்லாததால் இப்பள்ளிக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

160—

ஓராசிரியர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 2989—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன் மேற்கில் ஓராசிரியர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மேற்படி குப்பத்தேவன் மேற்கு கிராமத்தில் ஓராசிரியர் பள்ளி தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

161—

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய கிளை நூலகங்கள் திறக்க நடவடிக்கை.

வினா எண். 3122—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகத்தின் கீழ் இதுவரை 5 கிளை நூலகங்களே உள்ளதால் 1991-92 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி, சுசீந்திரம், அழகியபாண்டியபுரம், கடுக்கரை ஆகிய ஊர்களில் புதிய கிளை நூலகம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

162—

உடையநாடு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.

வினா எண். 3162—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

[1992 ஏப்ரல் 28

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடைய நாடு உயர்நிலைப் பள்ளியில் இடவசதி பற்றாக் குறையாக இருட் பதனால் கூடுதல் கட்டிடம் கட்டி தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

163—

மஞ்சினி உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண். 3255— திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் (சேலம் மாவட்டம்) மஞ்சினி உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாகவும், முல்லைவாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை.

164—

விளையாடுமிடத்தை சீர்செய்தல்.

வினா எண். 3283—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நன்னிலம் மேல்நிலைப் பள்ளிக்கு இலவசமாக வழங்கப்பட்ட விளையாடுமிடத்தைச் சீர் செய்து மாணவர்களின் உபயோகத்திற்கு கொண்டு வர அரசு உடனடியாக நிதி ஒதுக்கி ஆவன செய்யுமா?

விடை—

விளையாட்டு உபரகணங்கள் வாங்கவும் மற்றும் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தவும் மைய அரசு வழங்கும் நிதியுதவியைப் பெறுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள பள்ளிகளுள் நன்னிலம் மேல்நிலைப் பள்ளியும் ஒன்றாகும். மைய அரசின் நிதியுவியைப் பெற்று விளையாடுமிடத்தை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1992 ஏப்ரல் 28]

165—

அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் அமைத்தல்.

வினா எண். 3285—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கொரடாச்சேரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு போதிய இடவசதி இல்லாமையால் அதற்கு புதிய வகுப்பறைகள் அமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

தற்போது இல்லை.

166—

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தொடங்க நடவடிக்கை.

வினா எண். 3289—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதி அகரதிருநல்லூர் ஊராட்சியில் ஓர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை உடன் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

நன்னிலம் தொகுதி, அகர திருநல்லூரில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

167—

உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளியாக்கல்.

வினா எண். 3306—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவெண்காட்டில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக அரசு மாற்றித் தருமா?

(ஆ) ஆம் எனில், 1991-92ல் மாற்றப்படுமா?

விடை—

(அ) இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த 1991-92 நிதி ஆண்டில் கருத்துருக்கள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

168—

திருமலைராயபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண். 3313—திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆத்தூர் (அண்ணா மாவட்டம்) தொகுதியில் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் உள்ள திருமலைராயபுரம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கட்டிட வசதி செய்து தர அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

169—

கல்லிடைக் குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தனிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 3337—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கென்று தனிக் கட்டிடம், கழிப்பறைகள மற்றும் விஞ்ஞானக்கூடம் ஆகியவை கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?





விடை

தற்போது இல்லை.

170—

பள்ளி மாணவர்கள் மின் உபகரணங்களைப் பயன்படுத்த மின்வசதி ஏற்படுத்தல்.

வினா எண். 3386—திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பள்ளி மாணவர்களுக்கு செய்முறை செய்வதற்கு அரசு அளித்த மின் உபகரணங்களைப் பயன்படுத்த மின் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

விடை—

அனைத்து உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மின் வசதி செய்துதரப்பட்டுள்ளது.

171—

விளாத்திக்குளத்தில் பெண்கள் பயில தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 3400—திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் அதிகமிருந்தும், பெண்கள் கல்லூரியில் பயில இயலாததால் விளாத்திக்குளத்தில் தொழில் நுட்பக் கல்லூரி அல்லது கலைக் கல்லூரி அமைப்பதற்கு அரசுமுன்வருமா ?

ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

172—

விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் வகுப்பறைகள் வசதிக்காக நிலையான கட்டிடங்கள் கட்டுதல்.

[1992 ஏப்ரல் 28

வினா எண். 3402—திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளாத்திக்குளம் தொகுதியில், விளாத்திகுளம் அரசு மேல் நிலைப் பள்ளியில் வகுப்பறைகள் வசதிக்காக நிலையான கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நடப்பாண்டில் பணி தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

173—

பெயர் பலகைகள் தமிழ்மொழியில் எழுத நடவடிக்கை.

வினா எண். 3424—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை நகரில் பல வணிக நிறுவனங்களில் பெயர்கள் ஆங்கில மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பெயர் பலகைகள் தமிழ் மொழியிலும் எழுதப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா?

விடை—

(அ) அறியும்.

(ஆ) 1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்ட விதி 15 மற்றும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவன சட்ட விதி 42-பி-யின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கடைகளிலும் மற்றும் நிறுவனங்களிலும் பெயர்ப் பலகைகள் கண்டிப்பாக தமிழில் எழுதப்பட வேண்டும் என்று அரசு வழிவகை செய்துள்ளது. மேற்கண்ட சட்ட விதிகளை கடைப்பிடிக்காத கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மீது தொழிலாளர் துறை ஆய்வர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1992 ஏப்ரல் 28]

மாணவர்களை சேர்க்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

180—

நிலக்கோட்டையில் அரசு பெண்கள் கல்லூரி.

வினா எண். 3873—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் அரசு பெண்கள் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

181—

தாமரைப்பாளையம் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றல்.

வினா எண். 3913—திருமதி கனிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கொடுமுடி ஒன்றியம், தாமரைப்பாளையம் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**182—**

ஆரணியில் அரசுக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 4035—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆரணி தொகுதியில் அரசு கல்லூரி ஒன்றை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**183—**

திருச்சி சட்டக்கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 4064—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்க்கு விடையளிப்பாரா:

திருச்சியில் ஓர் சத்திரத்தில் நடைபெற்று வரும் சட்டக் கல்லூரிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

திருச்சி சட்டக் கல்லூரிக்கென ரூ. 1.02 கோடி செலவில் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1992 ஏப்ரல் 28]

174—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கலைக் கல்லூரி தொடங்க நடவடிக்கை.

வினா எண். 3530—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரையிலும் அரசு கலைக் கல்லூரிகள் இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், கலைக் கல்லூரிகள் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

(அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) இல்லை.

175—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொறியியற் கல்லூரி அமைக்க நடவடிக்கை.

வினா எண். 3531—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொறியியற் கல்லூரி அமைத்துத் தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

(அ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

176—

புதுகுப்பம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 3750—திரு. எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்க்கு விடையளிப்பாரா:

வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில், புதுகுப்பம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அரசு நிரந்தர கட்டிடம் கட்டித் தர ஆவன செய்யுமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

தற்போது இல்லை.

177—

**தொடக்கப் பள்ளி அமைத்தல்.**

வினா எண். 3753— திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வானூர் தொகுதியில் மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்புத்துபட்டு காவடி கிராமத்தில் ஒரு தொடக்கப் பள்ளி அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

இல்லை.

178—

**தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கல்.**

வினா எண். 3754— திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வானூர் தொகுதியில் தென் கோடிபாக்கம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தித்தர அரசு முன்வருமா?

விடை—

மேற்படி தென்கோடிபாக்கம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

179—

**தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள்.**

வினா எண். 3791— திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகமெங்கும் இயங்கும் தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் 50 சதவீதம் அரசாங்கத்தின் மூலம்



1992 ஏப்ரல் 28]

184—

**சங்ககிரியில் தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல்.**

வினா எண். 4188— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சங்ககிரியில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

185—

**பெண்களுக்கு தனியாக வகுப்புகள் நடத்த நடவடிக்கை.**

வினா எண். 4215— திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசிபுரம் தொகுதியில் வெண்ணந்தூர் மற்றும் நாமகிரிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெண்களுக்குத் தனியாக வகுப்புகள் நடத்தப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) வெண்ணந்தூரில் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மாணவிகள் பிரிக்கப்பட்டு அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி தனியாகத் துவக்கப்பட்டு 11-12-1991 முதல் இயங்கி வருகிறது. நாமகிரிப்பேட்டை மேல்நிலைப் பள்ளியிலிருந்து பெண்களுக்கென தனியாக உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

[1992 ஏப்ரல் 24

**186—**

புதுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் அமைத்தல்.

வினா எண். 4216—திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசிபுரம் தொகுதியில் ஆர். புதுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**187—**

அரியலூர் அரசுக் கல்லூரியில் பட்ட மேல் வகுப்பு தொடங்கல்.

வினா எண். 4239—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், அரியலூரில் உள்ள அரசுக் கல்லூரியில் பட்ட மேல் வகுப்பும், பி. காம் பட்ட வகுப்பும் தொடங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

**188—**

நடமாடும் கம்ப்யூட்டர் பயிற்சியகம் ஏற்படுத்தல்.

வினா எண். 4262—டாக்டர் மு. சினியம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமப்புறத்தில் மாணவர்கள் கம்ப்யூட்டர் கல்வி பெற நடமாடும் கம்ப்யூட்டர் பயிற்சியகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**189—**

வெட்டன் விடுதியில் நூலகம் அமைத்தல்.

வினா எண். 4338—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட வெட்டன் விடுதியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

**190—**

பொறியியல் பட்டப் படிப்பில் இயந்திர பிரிவில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை.

வினா எண். 4381—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தினால் கிண்டி பொறியியல் கல்லூரியில் நடத்தப்பெறும் பகுதிநேர பொறியியல் பட்டப் படிப்பில் இயந்திர (Mechanical) பிரிவில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை 1991—92-ல் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**191—**

நரிக்குடியில் மருதுபாண்டியர் பாலிடெக்னிக் தொடங்க நடவடிக்கை.

வினா எண் 4521—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாண்புமிகு புரட்சித் தலைவர் நரிக்குடியில் மருதுபாண்டியர் பாலிடெக்னிக் தொடங்குவதாக சட்டப் பேரவையில் அறிவித்த திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ); தற்போது இல்லை.

**192—**

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த நடவடிக்கை.

வினா எண். 4584—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம்தொகுதி, நத்தம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வத்திப்பெட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களின் நலன் கருதி ஏற்கெனவே வத்திப்பெட்டியில் இயங்கும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) இதற்கான அரசு நிலமும் உள்ளதால் அங்கு அடுத்தக் கல்வி ஆண்டிலேனும் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**193—**

பள்ளி மருத்துவ அலுவலர்களை நிரந்தரம் செய்ய நடவடிக்கை.

வினா எண். 4674—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வித் துறையில் முதன்மைக் கல்வி அலுவலர்களின் கீழ் பணியாற்றும் பள்ளி மருத்துவ அலுவலர்களுக்கு (School Medical Officer) அரசின் பிற மருத்துவ அலுவலர்களுக்கு ஊதியம் வழங்குவதுபோல் இவர்களுக்கும் ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இயலாது.

(ஆ) ஏதுமில்லை.

(இ) எழவில்லை.

**194—**

நூலகங்களுக்கு அரசு மானியம்.

வினா எண். 4675—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் வாழும் பகுதியில் மக்களால் நடத்தப்பட்டு வரும் நூலகங்களுக்கு அரசு மானியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு மானியமாக மாதம் ரூ. 100 வழங்குமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) இந்நூலகங்கள் நூலகத் துறையின் மூலம் அரசு மானியம் பெற்று இயங்கப் பட்டவை அல்ல.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

195—

கன்னியாகுமரி முதன்மைக் கல்வி அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை.

வினா எண். 4676—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி சேது லஷ்மிபாய் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இருந்துவரும் முதன்மைக் கல்வி அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

196—

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடப் புத்தகங்களில் சேர்க்க நடவடிக்கை.

வினா எண். 4689—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடப் புத்தகங்களில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) அத்திட்டம் எப்போது முதல் அமுல் படுத்தப்படும்?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

197—

வேலப்ப நாயக்கன் புதூர், முள்ளுப்பட்டி ஆகிய இடங்களில் ஆரம்பப்பள்ளிகள்.

வினா எண். 4769—திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

உடுமலை வட்டம், வேலப்ப நாயக்கன் புதூர், முள்ளுப்பட்டி, பூச்சிமேடு ஆகிய இடங்களில் ஆரம்பப் பள்ளிகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மேற்படி இடங்களில் புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதற்காக செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

198—

குமரலிங்கம் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள்.

வினா எண். 4770—திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலை வட்டம், குமரலிங்கம் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் கட்டிடங்கள், பரிசோதனைச் சாலை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

199— [1992 ஏப்ரல் 28

குமரலிங்கத்தில் புதிதாக நூலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 4780— திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

உடுமலை வட்டம், குமரலிங்கத்தில் புதிதாக நூலகக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

உடுமலை வட்டம், குமரலிங்கம் என்ற ஊரின் மையப் பகுதியில் கிளை நூலகக் கட்டிடம் கட்ட காலி மனை இலவசமாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலவசமாகக் காலிமனை பெறப்பட்டவுடன் கிளை நூலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

200—

கோவை மாநகராட்சியில் உள்ள நேரு ஸ்டேடியத்தில் விளையாட்டுப் பயிற்சி.

வினா எண். 5015— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகராட்சியில் உள்ள நேரு ஸ்டேடியத்தில் அரசு சார்பில் விளையாட்டுப் பிரிவை ஏற்படுத்தி விளையாட்டு பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) கோவையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் ஏற்கனவே மாவட்ட விளையாட்டு மன்றம் அரசால் தோற்று



1992 ஏப்ரல் 28]

விக்கப்பட்டு ஓடுகளம், கூடைப்பந்து, வளைகோல், கால்பந்து மற்றும் கைப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

201—

பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களை மாற்றி அமைத்தல்

வினா எண். 5034 —திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

202—

கிளை நூலகம் அமைத்தல்.

வினா எண். 5113— திரு. எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமத்தில் கிளை நூலகம், அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

தற்போது இயலாது.

[1992 ஏப்ரல் 28

203—

### ஆரம்பப் பள்ளிகள் துவக்குதல்

வினா எண். 5175— திரு. வ. சத்தியமூர்த்தி ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1991-92 கல்வி ஆண்டில் புதிதாக ஆரம்பப்பள்ளிகள் துவக்கப்பட உள்ளதா ?

(ஆ) நடப்பாண்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பரிந்துரைக்கப்பட்ட செயற்குறிப்புகளை திருப்பி அனுப்பாமல் வரும் கல்வி ஆண்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஒரு கல்வியாண்டில் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பரிந்துரைக்கப்பட்ட செயற்குறிப்புகளை, அடுத்த கல்வியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் முறை நடைமுறையில் இல்லை. எனினும், 1992-93-ம் கல்வியாண்டில் புதிய ஊராட்சி ஒன்றியப்பள்ளிகள் துவங்குவதற்காகப் புதிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டால், அவற்றை பரிசீலனை செய்து புதிய ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகள் தொடங்க விதிகளின்படி தொடக்கக் கல்வி இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### பெண்கள் கல்லூரி அமைத்தல்.

204—

வினா எண். 5286—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பெண்கள் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா:

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

205—

### அரசு கல்லூரிகளில் Cosmotology Course தொடங்குதல்.

வினா எண். 5331—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் Cosmotology Course என்ற வகுப்பை அரசு கல்லூரிகளில் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

206—

### பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயர் சூட்டல்

வினா எண். 5341—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

டாக்டர் அம்பேத்காரின் 101-வது ஆண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரைச் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

தற்போது இயலாது.

[1992 ஏப்ரல் 28

207—

மாவட்டக் கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படுதல்.

வினா எண். 5377—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆசிரியர்களில் 'ஏ' பிரிவினர் மற்றும் 'பி' பிரிவினர் (A—Wing & B—Wing) இடையே எழுந்துள்ள சீனியாரிட்டி பிரச்சினையால் தலைமை ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் பல நிரப்பப்படாமல் உள்ளனவா ?

விடை—

அனைத்து தலைமை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. 88 மாவட்டக் கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள பணியிடங்களை அதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு நிரப்பப்படும்.

208—

பணிப்பாதுகாப்பு, தொகுப்பூதியம் ஆகிய விகிதங்களை மாற்றியமைக்க அரசுக்கு முறையீடு.

வினா எண். 5433—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணிப்பாதுகாப்பு, தொகுப்பூதியம் ஆகியவற்றின் விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென மாநில வயது வந்தோர் கல்வித் திட்ட மேற்பார்வையாளர் சங்கம் அரசுக்கு முறையீடு ஏதேனும் செய்ததா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட அரசின் முடிவு என்ன ?

விடை—

(அ) பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் துறையில் தற்போது மேற்பார்வையாளர் என்ற பதவியில் எவரும் பணியாற்றவில்லை. மேலும் மாநில வயது வந்தோர் கல்வித் திட்ட மேற்பார்வையாளர் சங்கம் என்று எந்தவித



1992 ஏப்ரல் 28]

சங்கமும் தற்போது இத்துறையில் இல்லை. எனவே பணிப் பாதுகாப்பு, தொகுப்பூதியம் ஆகியவற்றின் விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென மாநில வயது வந்தோர் கல்வித் திட்ட மேற்பார்வையாளர் சங்கம் அரசுக்கு முறையீடு செய்த விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

209—

சேம நல நிதிக் கணக்குக்கான "கணக்கு சீட்டு வழங்கல்"

வினா எண். 5434—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆசிரியர் சேம நல நிதிக் கணக்குக்கு வட்டி சேர்த்து கணக்குச் சீட்டு வழங்கப்படவில்லை என்று ஆசிரியர் சங்கங்கள் ஏதேனும் முறையீடு செய்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், இனியேனும் வட்டியும் சேர்த்து சேம நல நிதிக் கணக்குக்கான "கணக்குச் சீட்டு" வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆசிரியர் சேம நல நிதிக் கணக்குக்கான கணக்குச் சீட்டுகள் வட்டியுடன் சேர்த்து வழங்க சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

210—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண். 5488—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன் மகாதேவி தொகுதி, சேரன் மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பொட்டல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்த்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

211—

பட்டப்படிப்புகளை மேல் நிலைப் பள்ளிகளிலேயே கற்பித்தல்.

வினா எண். 5514—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பி.ஏ., பி.காம்., போன்ற பட்டப் படிப்புகளை மேல் நிலைப் பள்ளிகளிலேயே கற்றுத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

212—

அரசினர் கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 5621—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் நகரில் அரசினர் கலைக் கல்லூரி அமைக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதைப் பரிசீலனை செய்து விரைவில் கல்லூரி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

213—

ஆரணி தொகுதியில் கல்லூரி அமைக்க அனுமதி.

வினா எண். 5634—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆரணி தொகுதியில் கல்லூரி அமைக்க தனியார் துறையோ அல்லது சமூக நல அமைப்புகளோ முன் வந்தால் அரசு அனுமதி வழங்குமா ?

விடை—

ஆரணி தொகுதியில் உதவி பெறாத தனியார் கல்லூரி அமைக்க தனியார் நிறுவனமோ அல்லது சமூக அமைப்புகளோ விண்ணப்பித்தால் அரசின் கொள்கை முடிவிற்கேற்ப அது பரிசீலிக்கப்படும்.

214—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்குதல்.

வினா எண். 5719—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியதிற்குட்பட்ட கோபால்பட்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்க ஊர் மக்கள் செலுத்திய தொகை எவ்வளவு ?

(ஆ) அரசு நிர்ணயம் செய்தபடி மக்களின் பங்கு செலுத்தப்பட்டு நான்காண்டுகளாக அந்த பள்ளி துவங்க தாமதம் ஆவதன் விவரம் என்ன ?

விடை—

(அ) 1987–88 ஆம் கல்வி ஆண்டில் பொது மக்கள் பங்குத் தொகை ரூ. 22,500 அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 1990–91 ஆம் கல்வியாண்டில் அரசு பெண்கள் உயர் நிலைப் பள்ளி துவங்க அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

[1992 ஏப்ரல் 28

215—

## பகுதி நேர ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல்.

வினா எண். 5743—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நீண்டகாலமாக பகுதி நேர ஆசிரியராக பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) அரசு மற்றும் நிதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இரு பகுதி நேர பயிற்றுநர்களை மட்டும் படிப்படியாக முறையான ஊதிய விகிதத்தில் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) முதற் கட்டமாக 800 முழுக் கல்வி தகுதி பெற்ற இரு பகுதி நேர பயிற்றுநர்கள் முறையாக ஊதிய விகிதத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். மீதமுள்ள 1,037 இரு பகுதி நேர பயிற்றுநர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வருவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

216—

## பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்தல்.

வினா எண். 5894—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

217—

## சேம நல நிதி கணக்கு.

வினா எண். 5991—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் இயற்கை எய்திய ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்கு முடித்து உரிய தொகை வழங்குவதில் பெரும் தாமதம் ஆனதாக தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியிடமிருந்து முறையீடுகள் அரசுக்கு வந்தனவா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) இத்தகைய நல நிதிக் கணக்கு மற்றும் ஓய்வூதியம் பற்றி முடித்து வழங்குவதற்கான கால நிர்ணயம் ஏதேனும் வரையறுக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) முறையீடுகள் ஏதும் வரவில்லை. இருப்பினும் துரித நடவடிக்கை எடுக்க இயக்குநருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

(இ) சேமநல நிதிக் கணக்குத் தொகை வழங்க கால நிர்ணயம் ஏதும் குறிப்பாக வரையறை செய்யப்படவில்லை. இருப்பினும் ஓய்வு பெறும் முன்னரோ அல்லது மறு நாளிலோ வழங்கும் முறை பின்பற்றப்படுகிறது. ஓய்வூதியம் பொறுத்த வரை ஓய்வு பெற்ற மறுநாளே வழங்கப்பட வேண்டும் என்று அரசு கால நிர்ணயம் வரையறுத்துள்ளது.

218—

## கடல்துறைப் பொறியியற் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 6031—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) Whether the Government are taking steps to set up a Marine Engineering College in this State?

(b) the details thereof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 ஏப்ரல் 28

219—

ஆண்கள் கலைக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண். 6141—திரு. அ. பாப்பா சுந்தரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணப்பாறையில் ஆண்கள் கலைக் கல்லூரி தொடங்க செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

220—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண்: 6200—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர், மாம்பட்டு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

221—

அறிவியல் ஆய்வுக் கூடம் அமைத்தல்.

வினா எண். 6208—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப் பகுதிகளில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் அமைத்துத் தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப, கிராமப்புற, நகர்ப்புற உயர்நிலைப் பள்ளிகள் என்ற பாகுபாடுயின்றி, அனைத்துப் பள்ளிகளிலும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டவும், அறிவியல் உபகரணங்கள் வாங்கவும் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

222—

அறிவியல் ஆய்வுக் கூடத்தை விரிவுபடுத்துதல்.

வினா எண் 6209—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு ஆய்வுக்கூட சாதனங்கள் (Lab equipments) அளித்து அதை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

(அ) போளூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஏற்கனவே ரூ. 1 லட்சம் மதிப்புள்ள ஆய்வகப் பொருட்கள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

223—

ஆசிரியர்களை மாறுதல் செய்யும் செயற்குறிப்பு

வினா எண். 6225—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.

ஒரு தனியார் கல்லூரிக்கும் மற்றொரு தனியார் கல்லூரிக்கும் இடையே ஆசிரியர்களை Migration முறையில் அல்லது Transfer முறையில் மாறுதல் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஒரு உதவிபெறும் தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றொரு தனியார் கல்லூரிக்கு அதே பதவியில் நிரந்தர மாறுதல் மூலம் செல்ல விண்ணப்பித்தால் அவர்களை கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆணை பெற்று விடுவிக்கலாம் என உதவி பெறும் தனியார் கல்லூரி மேலாண்மைகளுக்கு அரசாணை ஏற்கனவேயே வழங்கப்பட்டு உள்ளது.

224—

பள்ளிக் கட்டிடங்கள் கட்ட தேசிய அளவில் குழு அமைத்தல்

வினா எண். 6235—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதன் தொடர்பாக தேசிய அளவில் குழு ஏதேனும் அமைக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அந்தக் குழு அரசுக்கு ஏதேனும் கருத்துரு அனுப்பியுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அது குறித்து அரசின் நிலை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

225—

பல்கலைக் கழக இணைப்பைப் பெறுவதற்கு முன்னரே துவங்கி நடத்தப்பட்ட கல்லூரிகள்.

வினா எண். 6247—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்கலைக் கழகத்தின் முறையான உரிய அங்கீகாரம் பெறுவதற்கு முன்னரே துவங்கி நடத்தப்பட்ட எந்தெந்த கல்லூரிகளின் மாணவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் உரிய தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டன?



(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) பல்கலைக் கழக இணைப்பை பெறுவதற்கு முன்னரே துவங்கி நடத்தப்பட்ட கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்ட புகார்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

226—

ஆரம்பப் பள்ளி அமைக்கும் திட்டம்.

வினா எண். 6310—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை தொகுதியில், மேட்டுப்பட்டியில் புதிய ஆரம்பப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

227—

பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண். 6350—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், குளத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட கோவில்பட்டி போன்ற கிராமங்களில் புதியதாக பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய கட்டிடம் கட்டப்படும் ?

விடை—

(அ) மற்றும்.

(ஆ) இல்லை.

228— [1992 ஏப்ரல் 28

ஆரம்பப் பள்ளி அமைத்தல்.

வினா எண். 6351—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், உளவயல் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி உருவாக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

விடை—

மேற்படி கந்தர்வகோட்டை ஒன்றியம், உளவயல் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

229—

ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 6352—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் மஞ்சம்பட்டி, முள்ளிக்காய்ப்பட்டி, உரியம்பட்டி போன்ற கிராமங்களில் ஏதேனும் ஒரு கிராமத்தில் ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

230—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 6384—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதியில் கல்லாக்கோட்டை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க 5 ஆண்டுகளுக்கு முன் அதற்குரிய வைப்புத் தொகை பொது மக்கள் சார்பில் செலுத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) முழுமையாக செலுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

231—

ஓராசிரியர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 6404:—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சா கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டிணம் ஊராட்சி, பூமுடிக்காட்டிற்கு ஒரு ஓராசிரியர் பள்ளி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மேற்படி புதுப்பட்டிணம் ஊராட்சியைச் சார்ந்த பூமுடிக்காட்டு கிராமத்தில் ஓராசிரியர் பள்ளி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

232—

தொழில் கல்வி முறைக்கு கூடுதல் உபகரணங்கள்.

வினா எண். 6441—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் மேல்நிலைப்பள்ளியில் உள்ள தொழில் கல்வி முறைக்கு கூடுதல் உபகரணங்கள் மத்திய அரசு உதவியுடன் கிடைக்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

233—

ஓராசிரியர் பள்ளி தொடங்குதல்.

வினா எண், 7043—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சா கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, அஞ்சூரணிக்காட்டில், ஒரு ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1991 ப்ரல் 28

விடை—

இல்லை.

234—

தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண். 7088—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆதனூர் கருப்ப மனையிலுள்ள தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

235—

நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண். 7099—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கீழ மணக்காடு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

236—

ஓராசிரியர் பள்ளி துவங்குதல்.

வினா எண். 7176—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், காலகம் ஊராட்சி, மியக்குடிகாட்டில் ஓராசிரியர் பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

237—

ஓராசிரியர் பள்ளி துவங்குதல்.

வினா எண். 7206—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சைமாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கூப்புளிக்காட்டில் ஒரு ஓராசிரியர்பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மேற்படி பேராவூரணி நகரம் கூப்புளிக்காட்டில் ஓர் ஓராசிரியர் பள்ளி தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

238—

தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண். 7249—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி பெரிய தெற்குக்காடு தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

239—

நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 7311—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூராணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

240—

## ஓராசிரியர் பள்ளி தொடங்குதல்.

வினா எண். 7339—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல் காட்டில் ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

மேற்படி கோரவயல் கிராமத்தில் ஓராசிரியர் பள்ளி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

241—

## உதவிக் கல்வி அலுவலரை அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தோடு இணைத்து செயல்பட வைத்தல்.

வினா எண். 7532.— திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கல்வித்துறையின் நேரடிக்கண்காணிப்பிலுள்ள ஒன்றியத்திற்கு ஒரு உதவிக்கல்வி அலுவலரை அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தோடு இணைத்து செயல்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

இல்லை.

242—

## உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துதல்

வினா எண். 7675—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியம் அகர ஆலம்பாடியில் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



விடை —

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

243—

## ஆசிரியர்களை மாற்றம் செய்தல்.

வினா எண். 7760—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வி ஆண்டின் இடையில் அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மாற்றம் செய்வதால் கல்வி போதிப்பு பாதிக்கப்படுவதாக அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கல்வியாண்டு துவக்கம் அல்லது முடிவில் ஆசிரியர்கள் மாற்ற வேண்டிய நிலையில் எதிர்காலத்தில் மேற்கொள்ள அரசு முன்வருமா ?

விடை —

(அ) அத்தகைய முறையீடுகள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

244—

## எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் கொண்டுவருதல்.

வினா எண். 7883—திரு. மு. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கொண்டு வரப்படும்?

விடை —

(அ) மற்றும் (ஆ) ஆம். வரைவு சட்டமுன்வடிவு தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மீது இறுதி முடிவு எடுக்கப்பட்டவுடன் பேரவை முன் அறிமுகம் செய்யப்படும்.

245—

தனியார் பள்ளிக்கென தனித்துறை ஏற்படுத்துதல்.

வினா எண். 812 — திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் தனியார் பள்ளிக்கென தனித்துறை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

இல்லை.

246—

8-ம் வகுப்பு பொதுத்தேர்வு துறை அலுவலர் நியமித்தல்.

வினா எண். 8121 — திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் 8-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு துறை அலுவலராக நடுநிலை பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

247—

பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களை மேற்பார்வையாளர்களாக நியமித்தல்.

வினா எண். 8122 — திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளில் தரமான கல்வி தரும் பொருட்டு மேற்பார்வைக்கு 10 பள்ளிகளுக்கு ஒருவர் வீதம் பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களை மேற்பார்வையாளர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

இல்லை. இருப்பினும் தற்போது அதிகாரிகள் மேற்பார்வையிட்டு வருகின்றனர்.



248—

நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்கள்.

வினா எண். 8125— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்களுக்கு வருவாய் மாவட்ட அளவில் 1—1—91-ல் முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உளளதா ?

விடை—

இல்லை.

249—

இராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு பிணவறை கட்டுதல்

வினா எண். 39 — திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு பிணவறை கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆம்.

250—

ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக்குதல்

வினா எண். 201 — டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

கருங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசு முன் வருமா ?

விடை —

கருங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

251—

வினா எண். 205 — டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கிள்ளியூர் தொகுதியில் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

கிள்ளியூர் தொகுதியில் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவ மனையாக மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

252—

காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை.

வினா எண். 447—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவையாறு தொகுதி சானிடோரியம் என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ள பெருமைவாய்ந்த காந்தி நினைவு காசநோய் மருத்துவமனையை அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவ மனையை அரசு எடுத்துக்கொள்வது பற்றி அரசு பரிசீலித்தது. மேலே சொன்ன மருத்துவமனையை அரசு எடுத்துக்கொண்டால் அரசுக்கு தொடர் மற்றும் தொடரா செலவினங்கள் பல லட்சங்கள் செலவாகும். அரசின், செலவினத்தில் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டிய இத்தருணத்தில் அரசின் நிதி நிலைமை இதனை ஏற்பதற்கு இடம் தராது என்று கருதப்பட்டு இம்மருத்துவ மனையை அரசு எடுத்துக்கொள்வது குறித்து செயற்குறிப்புகளை தக்க சமயத்தை எதிர்நோக்கி தள்ளிப்போடுவதைத் தவிர வேறு வழியில்லை என முடிவெடுத்துள்ளது.

253—

பரமக்குடி தாலுக்கா மருத்துவமனைக்கு மகப்பேற்றுப் பிரிவு அமைத்தல்.

வினா எண். 472—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தாலுகா பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனைக்கு 20 படுக்கைகள் கொண்ட மகப்பேற்றுப் பிரிவு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அ) இல்லை.

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

254—

தாய்சேய் நலவிடுதி ஏற்படுத்துதல்

வினா எண். 556—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் வெள்ளித்திருப்பூர், கோயில் நத்தம் தேவர்மலை என்ற இடங்களில் தாய்சேய் நலவிடுதி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) அந்தியூர் தொகுதியில் வெள்ளித்திருப்பூர் மற்றும் தேவர்மலை ஆகிய இடங்களில் தற்போது துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. கோயில் நத்தம் கிராமத்தில் 650 மக்கட்தொகை உள்ளது. இதனை உள்ளடக்கி, செங்குளம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே கோயில்நத்தத்தில் துணை சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கான சாத்திய கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

255—

அதிராம்பட்டினம் அரசு மருத்துமனைக்கு புதிய தளவாடங்கள்.

வினா எண். 561—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா அதிராம் பட்டினத்திலுள்ள அரசு மருத்துவமனையில் எக்ஸ்-ரே கருவி மற்றும் புதிய தளவாடங்கள் வழங்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

[1992 ஏப்ரல் 28

256—

அரசு தொழுநோய் துறையில் பணிபுரியும் மருத்துவ ஊழியர்களுக்கு சிறப்புச் சலுகைகள்.

வினா எண். 828—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கி.பி. 2,000 க்குள் தொழுநோயை அறவே ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அரசு இத்துறையில் பணிபுரியும் மருத்துவ ஊழியர்களுக்கு அதிக ஊதியம் மற்றும் சிறப்புச் சலுகைகள் அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

அரசு தொழுநோய் துறையில் பணிபுரியும் மருத்துவ ஊழியர்களுக்கு அதிக ஊதியம் மற்றும் சிறப்புச் சலுகைகளை ஏற்கனவே அரசு அளித்து வருகிறது.

257—

'Medical Legal' கேஸ்களுக்கு புதிய சட்டம்

வினா எண். 1035—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தனியார் மருத்துவமனைகளில் Medico Legal கேஸ்களை அனுமதித்து சிகிச்சை அளிப்பதற்கு புதிதாக சட்டம் ஏற்படுத்தப்படுமா ?

விடை—

இல்லை.

258—

போலி டாக்டர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

வினா எண். 1130—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

போலி சான்றிதழ்களை வைத்துக் கொண்டு டாக்டர் என்ற பெயரில் தனியாக மருத்துவம் செய்யும் போலி டாக்டர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய் செய்யுமா ?

விடை—

போலி டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

259—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 1184—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது ஏதும் இல்லை.

260—

மூவலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பித்தல்.

வினா எண். 1201—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தில் மூவலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தில் மூவலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 ஏப்ரல் 28

261—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 1202— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி பரமக்குடி ஒன்றியம் மேலாய்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) பரமக்குடி தொகுதி பரமக்குடி ஒன்றியம் மேலாய்க்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

262—

தொழுநோய் மறுவாழ்வு நிலையங்கள்

வினா எண். 1206— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழுநோய் மறுவாழ்வு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

263—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்

வினா எண் 1292— திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியில் தொளார் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தென்னாற்காடு மாவட்டம் தொளார் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

264—

திருச்செந்தூர் அரசினர் மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமித்தல்.

வினா எண் 1321— திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் அரசினர் மருத்துவமனையில் பெண் மருத்துவர் இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில், மகளிர் நோயியல் மற்றும் மகப்பேறு மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு முடித்த பெண் மருத்துவர் ஒருவர் 2—9—91 முதல் பணிபுரிந்து வருகின்றார்.

265—

## நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 1398—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மானாமதுரை தொகுதி, மணலூரில் ஆசியா குருஸ் மற்றும் புலியூரிலுள்ள தமிழ்நாடு குளோரைடு ஆகிய இரசாயன ஆலைகளில் வெளியேறும் கழிவு, நிலத்தடி நீரைக் கெடுத்து குடிதண்ணீர் கெட்டு பெரும் சுகாதாரக் கேடு விளைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

ஆம். மணலூரில் உள்ள ஆசியா குருஸ் அண்டு கெமிக்கல்ஸ் பிரைவெட் லிமிடேட் மற்றும் சயனபுரத்தில் உள்ள தமிழ்நாடு குரோமேட் லிமிடெட் ஆகியவைகளால் ஏற்படும் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

266—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 1419—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியம் அரியான் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியம், அரியான் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசுக்குப் பரிந்துரை எதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



267—

## கவுதக் குடியில் மகப்பேறு நிலையம் அமைத்தல்

வினா எண் 1436—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், கவுதக்குடியில் மகப்பேறு நிலையம் அமைக்க அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், கவுதக்குடியில் அரசாணை எண் 2031, சுகாதாரம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 17–10–1988-ன்படி ஏற்கனவே ஒரு துணை சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இங்கு ஒரு கிராம சுகாதார செவிலியர் பணியாற்றி வருகிறார். மேலும் கவுதக் குடி கிராமத்தின் துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில்தான் செயல்பட்டு வருகிறது. தற்போது இயங்கி வரும் வாடகைக் கட்டிடத்துக்கு எதிர்புறம் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தை சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது..

268—

## கழிவு நீர் சுத்திகரிக்க நடவடிக்கை

வினா எண் 1455—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் அருகில் குவாலிட்டி பேப்பர் மில்லில் இருந்து வெளியேறும் கழிவு நீர் வைகையில் கலந்து சுகாதாரக் கேடு விளைவிப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை :—

(அ) ஆம்.

[1992 ஏப்ரல் 28

(ஆ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மானா மதுரை தாலுகா திருபுவனத்தில் நெல்முடிக்கரையில் அமைந்துள்ள திருவாளர்கள் குவாலிட்டி பேப்பர் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட்மீது மாசு ஏற்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, கழிவு நீர் சுத்திகரிப்பு சாதனம் அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மாசு கட்டுப்பாடு வாரியம் இந்நிறுவனத்தை கண்காணித்து வருகிறது.

**269—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 1617—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பரமக்குடி தொகுதி மேலாய்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) பரமக்குடி தொகுதி மேலாயக்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதும் மில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**270—**

### காசநோய் தடுப்பு மருந்துகளின் விலையை குறைக்க நடவடிக்கை.

வினா எண். 1619—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காசநோய் தடுப்பு மருந்துகளின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) மருந்துகளின் விலைகளை குறைப்பது என்பது தேசிய அளவில் மத்திய அரசு செய்ய வேண்டும். ஆகவே மாநில அரசு செய்ய இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**271—**

### டி.பி. சானடோரியம் அமைத்தல்.

வினா எண். 1641—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் டி.பி. சானடோரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**272—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 1644—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**273—**

## தலைமைச் சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 1838—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரத்தில் தலைமைச் சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரத்தில் தலைமைச் சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**274—**

## சுகாதார நிலையம் துவக்குதல்.

வினா எண். 2012—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி கீழ்க் கொள்ளுக்காட்டில் சுகாதார நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி கீழ்க்கொள்ளுக்காட்டில் சுகாதார நிலையம் துவக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**275—**

## ஆரம்ப சுகாதர மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக்கும் திட்டம்.

வினா எண். 2043—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், எளம்பிள்ளை ஆரம்ப சுகாதார மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?





விடை—

சேலம் மாவட்டம், எளம்பிள்ளை ஆரம்ப சுகாதார மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக்கும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**276—**

## சத்திரக்குடியில் மகப்பேறு மருத்துவமனை நிறுவுதல்.

வினா எண். 2124—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சத்திரக்குடியில் மகப்பேறு மருத்துவமனை நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பரமக்குடி தொகுதி, போகலூர் கிராமத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமானது சத்திரக்குடியில் செயல்பட்டு வருகிறது.

**277—**

## பரமக்குடியில் நகர தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அமைத்தல்.

வினா எண். 2238—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் நகர தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இத்திட்டம் பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

278—

### இரத்த சேமிப்பு நிலையம் அமைத்தல்.

வினா எண். 2250—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

"தாலூகா மருத்துவமனைகளுக்கு நோயாளர் ஊர்தி வழங்கவும், இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

50 படுக்கைகளுக்கு மேல் உள்ள அனைத்து அரசு தாலுகா, தாலூகா அல்லாத மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் இரண்டு ஆம்புலன்ஸ் வேன்கள் வீதம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. ஆனால், நிதி நிலைமையை கருத்திற் கொண்டு இரண்டு கால கட்டத்தில் வழங்க அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி 1991–92 ஆம் ஆண்டு 28 ஆம்புலன்ஸ் வேன்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

43 வட்டத் தலைமை மருத்துவமனைகளில் தற்பொழுது இரத்த சேமிப்பு நிலையம் செயல்பட்டு வருகின்றது. நிதி ஆதாரத்திற்கேற்றவாறும், தேவைக்கேற்றவாறும் மற்றைய வட்டத் தலைமை மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு நிலையங்கள் அமைக்க பரிசீலிக்கப்படும்.

279—

### ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குதல்.

வினா எண். 2268—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா, மேலாய்க்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, மேலாய்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

280—

### காசநோயாளிகளுக்கு படுக்கை வசதி.

வினா எண். 2269—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் காசநோய் தடுப்புக் கழகத்தின் மூலம் காசநோயாளிகளுக்கு படுக்கை வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

281—

### அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியை அரசு பொறுப்பில் ஏற்றுக்கொள்ளுதல்.

வினா எண். 2371—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஏழை மாணவர்கள் டாக்டர் பட்டம் பெற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியை அரசு பொறுப்பில் ஏற்றுக் கொள்ள செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

282—

### கொசுத் தொல்லையை ஒழிக்க சிறப்புத் திட்டம்.

வினா எண். 2484—திரு. டி. சுதர்சனம் மற்றும் டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) சென்னை நகரத்தில் உள்ள கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கு (NMEP) போன்ற சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

283—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி.

வினா எண் 2570—திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொளசம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

284—

தாய்சேய் நல விடுதி தொடங்குதல்.

வினா எண் 2882— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடியில் தாய்சேய் நலவிடுதி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கோட்டாக்குடி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.



1992 ஏப்ரல் 28]

285—

இடையக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தரமாக மருத்துவர் பணியமர்த்துதல்.

வினா எண் 2947.—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், இடையகுறிச்சி கிராமத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தரமாக மருத்துவர் பணியமர்த்தவும் மருந்துகள் வழங்க வசதிகள் செய்யவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இரண்டு மருத்துவர்கள் செப்டம்பர் 1991 லிருந்து பணிபுரிந்து வருகிறார்கள். மருந்துகள் வழங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

286—

கழிவுநீரால் குடிநீர் பாதிக்கப்பட்டுள்ளதை தடுக்க நடவடிக்கை :

வினா எண். 3246— திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூரிலுள்ள சாயப்பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நிலைகளில் வெளியேற்றப்பட்டால் அதன் தன்மை பாதிக்கப்படுகிறது.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

287— [1992 ஏப்ரல் 28

பேரளம் அரசு மருந்தகத்திற்கு மருத்துவர் நியமனம்

வினா எண். 3290,—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதியில் பேரளம் அரசு மருந்தகத்தில் அனைத்து வசதிகள் இருந்தும், மருத்துவர்கள், செவிலியர், மருந்துகள் இல்லாத நிலையை உடன் பரிசீலித்து இம் மருந்தகம் சரிவர செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பேரளம் ஆரம்ப சுகாதார நிலையம் (முன்னாள் அரசு மருந்தகம்) இரண்டு மருத்துவர்கள், பெண் துணை செவிலியர் மற்றும் ஏனைய பணியாளர்கள் மற்றும் மருந்துகளுடன் சரிவர இயங்கி வருகின்றது.

288—

காசநோய் ஆராய்ச்சி பிரிவு அமைத்தல்.

வினா எண். 3316—திரு. வெ. பழனிசாமி:— மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருப்பூரில் காசநோய் ஆராய்ச்சி பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

விடை—

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

289—

குடும்ப நலத்திட்டத்தை அமல்படுத்துதல்.

வினா எண். 3318,—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

குடும்ப நலத்திட்டத்தை சிறப்பாக அமல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு எத்தனையாவது மாநிலமாக உள்ளது ?

விடை—

குடும்ப நலத்திட்டத்தைச் சிறப்பாக அமல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக திகழ் கிறது.

290—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுக்கா மருத்துவ மனையாக மாற்றுதல்.

வினா எண் 3739—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்க ளுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம், நகரம், ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கை வசதியுடன் அறுவை சிகிச்சை மற்றும் எக்ஸ்ரே வசதிகளடங்கிய தாலுகா மருத்துவமனையாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் மாற்றி அமைக்கப் படுமா ?

விடை—

(அ) நத்தம் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 32 படுக்கைகள் கொண்ட தாலுகா தலைமையிட மருத்துவ மனையாக இயங்கி வருகிறது. அறுவை சிகிச்சை மற்றும் எக்ஸ்ரே வசதிகள் ஆகியவை படிப்படியாக நிதிநிலையை கருத்தில் கொண்டு அமைக்கப்படும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

291—

கே. வி. குப்பம் அரசு மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக்குதல்.

வினா எண் 4006—திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் அரசு மருந்தகத்தை படுக்கை வசதியுடன் கூடிய, அரசு மருத்துவ மனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதி ஆண்டில் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டித் தரப்படுமா ?

விடை—

(அ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் அரசு மருந்தகத்தை படுக்கை வசதியுடன் கூடிய அரசு மருத்துவ மனையாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

292—

சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 4158— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், வேளங்கிப்பட்டு கிராமத்தில் சுகாதார நிலையம் அமைத்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், வேளங்கிப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

293—

போளூர் அரசு பொது மருத்துவமனையில் தோல் வியாதிப் பிரிவு ஏற்படுத்துதல்.

வினா எண் 4357—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் பொது அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை பிரிவு இரத்த சேமிப்பு நிலையம், தோல் வியாதிப் பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) காது, மூக்கு, தொண்டை பிரிவு, இரத்த சேமிப்பு நிலையம் மற்றும் தோல் வியாதி பிரிவு போன்றவற்றை போளூர் அரசு பொது மருத்துவமனையில் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

294—

டானிடா திட்டம்

வினா எண் 4522— திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) "டானிடா திட்டம்" காமராஜர் மாவட்டத் திற்கும் அறிமுகப்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) தற்போது உத்தேசம் இல்லை,

(ஆ) இக் கேள்வி எழாது.

295—

**பெரியார் நகர் புறநகர் மருத்துவமனைக்கு உள் இருப்பு வார்டுகள்.**

வினா எண் 4550— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் இருதயநோய், நரம்பியல் காசநோய், வயிற்றுப்போக்கு ஆகிய நோய்களுக்கான மருத்துவர்கள் தினசரி நோயாளிகளை பரிசோதிக்க நியமிக்கவும், இந்த நோய்களுக்கான தனித்தனியாக உள் இருப்பு வார்டுகள் ஒதுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை பெரியார் நகர் அரசினர் புறநகர் மருத்துவமனையில் தற்போது இருதயவியல், நரம்பியல் மற்றும் வயிற்றுப்போக்குக்கு சிகிச்சை பெறவரும் புறநோயாளிகள் தினசரி கவனிக்கப்படுவதில்லை. வாரத்திற்கு ஒருமுறை கவனிக்கப்படுகின்றார்கள். ஆனால் காசநோய்க்கு மட்டும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் சென்னை, சேத்துப்பட்டு எலும்புருக்கி நோய் ஆராய்ச்சி மைய மருத்துவர்களால் தினசரி கவனிக்கப்படுகின்றனர். இந்நோய்களுக்கான தனிப்பிரிவு இம் மருத்துவமனையில் இல்லை. பெரியார் நகர் அரசினர் புறநகர் மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்கவும், மேற்கண்ட நோய்களுக்கான தனியாக பிரிவுகள் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

296—

**அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலனஸ் வசதி**

வினா எண். 4851—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைளிப்பாரா :

(அ) அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?





விடை—

(அ) தற்போது வழங்க இயலாது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

297—

**மாவட்டந்தோறும் காசநோய் மருத்துவமனை அமைத்தல்**

வினா எண். 4977— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்டந்தோறும் காசநோய் மருத்துவமனை (T. B. Sanatorium) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

298

**மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுப்புகையினால் பாதிப்பு.**

வினா எண். 5037—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையினால் பொதுமக்கள் உடல்நலம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத்தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வாகனங்களிலிருந்து வெளிவரக்கூடிய புகையினை சோதனை செய்ய தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினை தமிழக அரசு பணித்துள்ளது. முதலில் சரக்கினை ஏற்றிச்செல்லும் பொது வாகனங்கள் ஆய்வுசெய்ய தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்துக்கொள்ளும்.

299—

கண்தானம் குறித்த பிரச்சாரத்தை தீவிரப்படுத்துதல்.

வினா எண் 5038— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்தானம் குறித்த பிரச்சாரத்தை தீவிரப் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) கண்தானம் குறித்த பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் தேசிய கண்தான இருவார விழா மாநில அரசுடன் இணைந்து, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. அப்பொழுது கண்தானம் குறித்த பிரச்சாரம் ஊர்வலம் மூலமாகவும், நிழல் படங்கள் மூலமாகவும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. மேலும், கண்தானம் செய்வதற்கான சுலோகங்கள் தொலைக்காட்சி மூலமாகவும் வானொலி மூலமாகவும் மக்களுக்கு ஒலிபரப்பப்பட்டு வருகிறது. புரட்சித்தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் மூலமாகவும் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

300—

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண். 5860— திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்களும், அலுவலர் குடியிருப்பும் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது 167 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டிடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள், அலுவலர் குடியிருப்புகள் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

301—

பழனி அரசு சித்த மருத்துவக் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 6088— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி நகரில் அரசு சித்த மருத்துவக் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடமும், மாணவர் விடுதியும் கட்டும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழனி அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி 1985 அக்டோபர் மாதம் தோற்றுவிக்கப்பட்டு அரசுக் கட்டிடம் இல்லாமையால் தனியார் வாடகைக் கட்டிடத்தில் 18-11-1985 முதல் இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கு இதர வசதிகள் மற்றும் மருத்துவமனையுடன் இணைந்து இயங்கும் வகையில் கட்டிடம் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வரைபடம் மற்றும் மதிப்பீட்டிற்காக சென்னை தலைமைக் கட்டிடக் கலைஞர் பொதுப்பணித்துறை அவர்களுடன் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநரகம் தொடர்பு கொண்டுள்ளது. அவை கிடைக்கப் பெற்றதும் கட்டிடம்

[1992 ஏப்ரல் 28

கட்ட இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநர் அரசின் ஏற்பளிப்புக்காக அனுப்பி வைப்பார். மாணவர் விடுதியும் இதில் உள்அடங்கும்.

303—

**"MADRAS EYE" என்ற கண்நோய் தடுப்பு நடவடிக்கை.**

வினா எண். 6261 — திரு. ம. சின்னச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) "MADRAS EYE" எனக் கூறப்படும் கண்நோய் வரக் காரணமென்ன :

(ஆ) அந்த நோய் வராமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) 'MADRAS EYE' என அழைக்கப்படும் நோய்க் கிருமிகள் காற்றின் மூலமாக பரவி, கண்ணில் நோய் உண்டாக்குவதாலும், இந்நோயால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகுவதாலும், அவர்கள் உபயோகிக்கும் கைக்குட்டை, சோப்பு, சீப்பு போன்ற இதர பொருட்கள் மூலமாகவும், இந்நோய் மிக எளிதில் வேகமாக பரவும். இந்நோய் துறைமுகத்தில் வந்து இறங்கும் மாலுமிகள் மூலமாக முதலில் ஏற்பட்டு, அவர்களிடமிருந்து பிறருக்கு எளிதில் வேகமாக பரவும் வாய்ப்பும் உள்ளது.

(ஆ) 'MADRAS EYE' வராமல் தடுக்க அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது.

303—

**கீழப்புனல் வாசலில் தாய்சேய் நலவிடுதி தொடங்குதல்.**

வினா எண். 7358— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் கீழப்புனல் வாசலில் ஒரு தாய்சேய் நலவிடுதி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

புனல் வாசல் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருவதால் கீழ்ப்புனல் வாசல் குக்கிராமத்தில், துணை சுகாதார நிலையம் அமைக்க அவசியமில்லை.

304—

**வால்பாறையில் Diploma in Pharmacy கல்லூரி கட்டுதல்.**

வினா எண். 7822—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறை சட்டமன்ற தொகுதியில் Diploma in Pharmacy கல்லூரி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

305 —

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை.**

வினா. எண் 7990—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல் நகரில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீரை சுத்திகரிக்க கூட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

திண்டுக்கல்லில் தொகுப்பாக அமைந்துள்ள தோல்பதனிடும் தொழிற்சாலைகளுக்குப் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

306—

## வனப்பகுதிகளை வேலி போட்டு பராமரித்தல்

வினா எண். 33—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான வனத்தை அளந்து வேலி போட்டு பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வனப்பகுதிகள் முழுவதிலும் வேலி போடுவது சாத்தியமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

307—

## போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

வினா எண். 285—திருவாளர்கள் மாண்புமிகு வி. கே. சின்னசாமி, மற்றும் என். ஆர். ராஜேந்திரன்: போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவது போல் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் வழங்கப்படுமா?

விடை—

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கும் அரசு ஊழியருக்கான திட்டத்திற்கும் சம்பந்தமில்லை.



1992 ஏப்ரல் 28]

308—

## போக்குவரத்துக் கழக தலைமை அலுவலக ஊழியர்களுக்கு வேலை நேரத்தை சீரமைத்தல்

வினா எண். 286. திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போக்குவரத்துக் கழகங்களில் தலைமை அலுவலக ஊழியர்களுக்கு 7 மணி நேர வேலையும், கிளை அலுவலக ஊழியர்களுக்கு 8 மணி நேர வேலையும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீராக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) 1989-ம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாகத்திற்கும் தொழிற்சங்க பேரவைப் பிரதிநிதிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தத்தின்போது எடுக்கப்பட்ட முடிவின்படி போக்குவரத்துக்கழக தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் நிர்வாகப் பணியாளர்களின் வேலை நேரம் 7.00 மணி நேரமாக குறைக்கப்பட்டது.

(ஆ) அடுத்த ஊதிய ஒப்பந்தம் வரை இது நடைமுறையில் இருக்கும்.

309—

## பழுதுபட்ட பேருந்துகளை சீர்செய்தல்.

வினா எண். 298—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பழுதடைந்துள்ள அரசுப் பேருந்துகளை சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

பழுதுபட்ட பேருந்துகளை உடனுக்குடன் சீர் செய்து தடங்களில் இயக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

[1992 ஏப்ரல் 28

310—

வினா எண். 315—திருமதி கே. மரியம் [illegible]உல் ஆசியா மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் அதிக அளவில் லாரிகள் இருப்பதால் அரசுக்கு பெரும் வருவாயை அளிக்கும் லாரி தொழிலை வளப்படுத்த ஒரு தனி வாரியம் அமைக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

311—

நஷ்டத்தில் இயங்கும் அரசு போக்குவரத்துக் கழகங்கள்.

வினா எண். 537—திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள 15 அரசு போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் ஓடுகிறதென்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) 1990–91 ஆம்ஆண்டு தமிழகத்திலுள்ள 15 போக்கு வரத்துக் கழகங்களில் 14 போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்கின.

(ஆ) போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் காலாண்டு காலமுறை ஏட்டின்படி பரிசீலிக்கப்பட்டு அவைகள் இலாபத்தில் இயங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன. அரசு எடுத்துள்ள பல்வேறு நட வடிக்கைகளின் விளைவாகவும், குறிப்பாக 16—10—91 முதல் பேருந்து பயணக் கட்டண விகிதங்களை மாற்றி அமைத்ததின்



1992 ஏப்ரல் 28]

விளைவாகவும் நடப்பு ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களின் இழப்பீடு கணிசமாக குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

312—

அத்தானி காலனி வரை பேருந்து வசதி.

வினா எண். 549—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் ஒன்றியம் அத்தானி செம்புளிச்சாம் பாளையம் வரை சென்று வந்த BGA என்ற பேருந்து நிறுத்தப் பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இப்பேருந்தை அத்தானி செம்புளிச்சாம் பாளையம் வழியாக அத்தானி காலனி வரை நீடித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்தடத்தின் சாலை பேருந்து இயக் கத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே அத்தானி காலனி வரை பேருந்து இயக்க இயலவில்லை.

313—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 730—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம் ஏரிப்புறக் கரை, கீழத்தோட்டம், ராஜாமடம் சின்ன ஆவிடையார்—கோவில் ஆண்டிவயல் ஆண்டிகாடு பள்ளத்தூர்—தில்லங்காடு செருபாலக்காடு வழியாக பேராவூரணி வரை நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

314—

பேராவூரணியிலிருந்து பழனிக்கு புதுக்கோட்டை வழியாக பேருந்து விடுதல்.

வினா எண். 731—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து புதுக்கோட்டை வழியாக பழனிக்கு ஒரு பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

315—

நாகூருக்கு பேருந்து வசதி.

வினா எண். 736—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து வேளாங்கண்ணி வழியாக நாகூருக்கு ஒரு பேருந்துவிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

316 —

பாதம்பெரியாள் கோவிலுக்கு பேருந்து வசதி.

வினா எண். 737—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து பாதம்பெரியாள் கோவிலுக்கு ஒரு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

317—

விடுமுறை நாட்களில் போதுமான பேருந்துகள் விட நடவடிக்கை.

வினா எண். 805—திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

விடுமுறை நாட்களில் சென்னையில் பேருந்துகள் குறைக்கப்படுவதால் பொதுமக்கள் சிரமப்படுவதைத் தவிர்க்க முன் போன்றே போதுமான பேருந்துகளை விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

விடுமுறை நாட்களில் போதுமான பேருந்துகளை விடுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

318—

மலைவாழ் மக்களுக்கு சாலை வசதி.

வினா எண். 845—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பாரஸ்டு செட்டில்மெண்டில் வாழும் மலைவாழ் மக்களுக்கு சாலை வசதிகள் அமைத்துக் கொடுக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை வசதி 1991-92-ல் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) அரசு அறியும்.

(ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியிலுள்ள காக்கயனூர் செட்டில்மெண்ட் வனச்சாலையை மேம்படுத்த ரூ. 3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளியும் கோரப்பட்டுள்ளது. பணி விரைவில் முடிக்கப்படும்.

[1992 ஏப்ரல் 2

319—

## சந்தனக் கடத்தலில் ஈடுபட்டுள்ள வீரப்பனைப் பிடிக்கச் செலவு.

வினா எண். 1071— டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சந்தனக் கடத்தல் திருட்டில் ஈடுபட்டுள்ள வீரப்பனைப் பிடிக்க இதுவரை அரசு எவ்வளவு செலவு செய்துள்ளது?

விடை—

சுமார் ரூ. 1,85,560.

320—

## மகளிருக்கென அதிக அளவில் தனிப் பேருந்துகள் விடுதல்.

வினா எண். 1129—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

டவுன் பஸ்களில் நெரிசல் காரணமாகப் பெண்கள் மிகவும் அவதியுறுவதால் மகளிருக்கென தனிப் பெருந்துகளை அதிக அளவில் விட அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

இல்லை. மகளிருக்கென தேவையான அளவு தனிப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

321—

## கலங்கரை விளக்கம் அமைத்தல்.

வினா எண்1169— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக் கரையில் கலங்கரை விளக்கம் (Light House) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

322—

## யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கும் திட்டம்.

வினா எண். 1367—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் அருகிலுள்ள ''ஒட்கநின்றான்'' பொத்தை என்ற மலைச்சாரலில் யூகலிப்டஸ் மரங்களை வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் அருகிலுள்ள ''ஒட்கநின்றான்'' பொத்தை என்ற மலைச் சாரலில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

323—

## டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 1454—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் டீசல் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

டீசல் வெட்டின் காரணமாக நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்து போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

[1992 ஏப்ரல் 28

324—

நன்னிலம் சோழன் போக்குவரத்துக் கழக பணிமனையை இயங்கச் செய்தல்.

வினா எண். 1553—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலத்தில் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ள சோழன் போக்குவரத்துக் கழக பணிமனையை இயங்கச் செய்ய அரசு முன்வருமா?

விடை—

ஆம். பணிமனை 18-10-1991 முதல் இயங்கி வருகிறது.

325—

பேராவூரணி—இராமேஸ்வரத்திற்கு தொலைதூர பேருந்து விடுதல்.

வினா எண். 1576—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரம் செல்ல தொலை தூரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

326—

பக்கிங்காம் கால்வாயை ஆழப்படுத்துதல்.

வினா எண். 1603—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992, ஏப்ரல் 28]

சென்னை நகரத்தினைச் சுற்றிலும் பக்கிங்காம் கால்வாயை ஆழப்படுத்த முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படுகின்றனவா?

விடை—

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது

விவர அறிக்கை

ஆம். (உறுப்பினர் பக்கிங்காம் கால்வாயை மேம்பாடு செய்வது குறித்துதான் வினா எழுப்பியுள்ளதாக கருதப்படுகிறது.)

வடக்கு பக்கிங்காம் கால்வாய் எலிபென்ட் கேட் முதல் ஆந்திரா எல்லை வரை மேம்பாடு செய்ய 596.50 இலட்சத்திற்கு அரசாணை எண். 2097, போக்குவரத்து, 26—11—1987-இல் 50 சதவீதம் மத்திய கடன் நிதி உதவியும், 50 சதவீதம் மாநில நிதியிலும் செய்யும் திட்டமாக அனுமதியளிக்கப்பட்டது. மேற்படி வடக்கு பக்கிங்காம் கால்வாய் மூன்று பகுதிகளாக மேம்பாடு செய்ய கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டது :—

| | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| (1) எலிபென்ட் கேட் முதல் எண்ணூர் தெற்கு லாக் வரை .. .. | 128.50 |
| (2) எண்ணூர் தெற்கு லாக் முதல் சிந்தாமணி லாக் வரை .. .. | 200.00 |
| (3) சிந்தாமணி லாக் முதல் ஆந்திரா எல்லை வரை .. .. .. | 268.00 |
| மொத்தம் .. | 596.50 |

மேற்கண்ட திட்டங்களில் எண்ணூர் லாக் முதல் சிந்தாமணி லாக் வரைக்கான மேம்பாட்டுப் பணி ரூ. 200 இலட்சத்திற்கு அரசினால் அனுமதியளிக்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1987 முதல் 1990 நவம்பர் முடிய ரூ. 101 இலட்சம் செலவிடப்பட்டது. மைய அரசு இத்திட்டத்தினை அமுல்படுத்த மார்ச்சு 1990-இல் ரூ. 32 இலட்சம் கடனாக அனுமதித்தது. கடந்த மூன்று வருடங்களில் இத்திட்டத்தினை அமுல்படுத்தலில் ஏற்பட்ட முன்னேற்றம் போதுமான திருப்தி அளிக்கவில்லை. எண்ணூர் ''சௌத்'' லாக்—சிந்தாமணிப் பகுதியினை அபிவிருத்தி செய்ய ஒப்பளிக்கப்பட்ட ரூபாய் 200 இலட்சத்தில் ரூ. 101 இலட்சம் செலவிடப்பட்ட போதிலும், கடந்த மூன்று வருடங்களில் ஆக்க வேலை 2 விழுக்காடுக்கும்

[1992 ஏப்ரல் 28

கீழ்ப்பட்ட அளவிலேயே நடைபெற்றுள்ளது. வேலைத் தளத்திற்கு எளிதாக செல்ல முடியாமை, தேவையான ஆட்கள் கிடைக்காமை ஆட்கள் மூலம் தூர் எடுக்கும் பணியில் ஏற்பட்ட சிரமங்கள், உணவு உறைவிடம் மற்றும் குடிநீர் கிடைக்காமை ஆகிய காரணங்களால் வேலையில் தொய்வு ஏற்பட்டதாக முதன்மை பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார். ஆக்கபூர்வ பணியில் எந்தவித முன்னேற்றமும் இத்திட்டத்தில் ஏற்படாமையால், இப்பணிக்காக ஒப்படைக்கப்பெற்ற பணியாளர்கள் (ஆண்டிற்கு பணியாளர் செலவு ரூ. 25 இலட்சம்) 31—1—1991 முதல் கலைப்பு செய்யப்பட்டனர். இத்திட்டம் அமுல்படுத்தப்படும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து இயக்குநர், மைய அரசின் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக் குழுமத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

327—

## தூத்துக்குடிக்கு இருப்புப்பாதை அமைத்தல்.

வினா எண். 1645—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரத்திலிருந்து வாலிநோக்கம் வழியாக தூத்துக்குடிக்கு இருப்புப் பாதை அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா ?

விடை—

இராமநாதபுரம்—வாலிநோக்கம்— தூத்துக்குடிக்கு புதிய இரயில் பாதை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

328—

## அன்னை சந்தியா அவர்கள் பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் அமைத்தல்.

வினா எண். 1747—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்னை சந்தியா அவர்களின் பெயரில் ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

இல்லை.

329—

## அரசுப் பேருந்துகள் நிறுத்தப்படுதல்.

வினா எண். 1748—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமங்கள்தோறும் விடப்பட்ட அரசுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டு அவை அனைத்தும் தனியாருக்கு விற்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

330—

## தக்கலையில் நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.

வினா எண். 2057—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

கன்னியாகுமரி மாவட்டத்தின் மையப் பகுதியான தக்கலைப் பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதியை அதிகப்படுத்த நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனையை அங்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

331—

தியாகிகளின் உறவினர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்குதல்

வினா எண். 2066—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

வயதான தியாகிகளைப் பேருந்துகளில் அழைத்துச் செல்வதற்கு தியாகிகளின் உறவினர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா?

விடை—

இல்லை.

332

சுந்தர்வக்கோட்டையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை தொடங்குதல்.

வினா எண். 2098—திரு. சி. சுவாமிநாதன்; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் சுந்தர்வக்கோட்டையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

333—

தலைக்கவசம் அணிவதைக் கட்டாயம் ஆக்குதல்.

வினா எண். 2236—டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் தலைக்கவசம் (Helmet) அணிவதை கட்டாயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இப்பொருள் குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

334—

சென்னை — இராமேஸ்வரம் விமானப் போக்குவரத்து தொடங்குதல்.

வினா எண். 2255—டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

"சென்னையிலிருந்து இராமேஸ்வரம் (வழி மதுரை) விமானப் போக்குவரத்துத் தொடங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

இராமேஸ்வரத்திற்கு விமானப் போக்குவரத்து தொடங்குவதற்கு இராமநாதபுரத்தில் விமான நிலையம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த தற்போது அவசியம் என்று கருதவில்லை.

335—

பேருந்து நிறுத்தம் அமைத்தல்.

வினா எண். 2341—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் காயாவூர் ஆதி திராவிடர் தெருவில் பேருந்து நிற்பதற்கு பேருந்து நிறுத்தம் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

கோரிக்கை இடத்தில் பேருந்து நிறுத்தம் வைக்கப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

336—

சந்தன மரங்களுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 2438 திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வனத் துறையினரால் சேகரிக்கப்பட்ட சந்தன மரங்களுக்கு உரிய விலை கிடைக்காமல் ஏலம் போகாமல் தேங்கிக் கிடப்பதின் காரணத்தை அரசு பரிசீலித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) வன இலாகாவினர் நிர்ணயித்துள்ள விலையைவிட சந்தன மரத் திருடர்கள் குறைந்த விலைக்குக் கொடுப்பதால் அரசு கிடங்கில் உள்ள மரங்கள் ஏலம் போகவில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) அதிகப்படியான சந்தன மரங்களைத் திருடர்களே திருடிச் சென்று விடுவதால் அரசாங்க பணத்தைச் செலவழித்து சந்தன மரம் பயிரிடுவதை அரசு தவிர்க்குமா ?

விடை—

(அ) சமீபத்தில் நடந்த வளைகுடாப் போரினால் உலகச் சந்தையில் ஏற்பட்ட விலைச்சரிவே சந்தன மர விற்பனையில் விளைந்த தேக்கத்திற்குக் காரணம். விற்பனையை அதிகரிப்பதற்கான உரிய நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) சந்தனக் கட்டைகள் ஏலம் போகாததற்கு முக்கிய காரணம் வளைகுடாப் போரினால் வெளிநாட்டுச் சந்தைகளில் சந்தனப் பொருட்களின் தேவையும் விலையும் குறைந்ததேயன்றி கடத்தல் சந்தன மரங்களினால் அல்ல.

(இ) பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதனால் சந்தன மரக் கடத்தல் வெகுவாகக் குறைந்து விட்டது. எனவே, சந்தன மரங்கள் திருடுபோக வாய்ப்புக்கள் இல்லை.

337—

ஏலக்காய் தோட்டங்கள் குத்தகைக்கு விடுதல்.

வினா எண் 2449—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை, களக்காடு ரேஞ்ச் பகுதியில் ஏலக்காய் தோட்டம் போட அரசினரால் ஏலக்காய் தோட்டங்கள் குத்தகைக்கு விடப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், யார் யாருக்கு விடப்பட்டன ?

(இ) அதன் மொத்த விஸ்தீரணம் என்ன ?

விடை

(அ) ஆம்.

(ஆ) திரு. எம். ஏ. சுப்பிரமணிய ராஜா, திருமதி எம். ஏ. பாஞ்சாலி அம்மாள் (லேட்), திருமதி எஸ். ஆர். மஞ்சம்மாள் ஆகியோருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

(இ) குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலங்களின் மொத்த பரப்பளவு 75 ஏக்கர்.

338—

வினா எண். 2450—திரு ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், களக்காடு ரேஞ்ச் பகுதி, ஏலக்காய் தோட்டம் குத்தகை முடிந்த பிறகு தோட்டங்களை அரசு எடுத்துக் கொண்டதா?

(ஆ) குத்தகை முடிந்த பிறகு அத்துமீறி அனுபவித்து வருகிறார்களா ?

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) களக்காடு சரகப் பகுதியில் குத்தகை காலம் முடிவடைந்த 14 தோட்டங்களில் 13 தோட்டங்களை அரசு தன் வசம் எடுத்துக் கொண்டது. மீதமுள்ள ஒரு தோட்டத்தின் குத்தகைதாரர் உச்ச நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்றுள்ளதால், அத்தோட்டம் அவர் பொறுப்பிலுள்ளது.

[1992 ஏப்ரல் 28

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

339—

வினா எண். 2451— திரு. ஆர். முருகையா பாண்டியன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், முண்டந்துறை ரேஞ்ச் பகுதி, சிவசைலம் ரேஞ்ச் பகுதியில் ஏலக்காய் தோட்டங்கள் குத்தகை முடிந்த பிறகும் அத்துமீறி அத்தோட்டங்களை அனுபவித்து வருகிறார்களா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

340—

நகரப் பேருந்துகளில் பெண் நடத்துநர்கள் நியமித்தல்.

வினா எண். 2470— டாக்டர் ஜி. ஆர். மாலா; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

நகரப் பேருந்துகளில் 30 சத விகிதம் பெண் நடத்துநர்கள் நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

பெண்களுக்கு நேரடி நியமனங்கள் மூலம் நிரப்பப்படும் அனைத்து காலியிடங்களிலும் குறைந்தது 30 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்ற விதிமுறையை நெருக்கி பிடிக்காவிட்டாலும், கூடுமான வரையில் மகளிரை நியமிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.



1992 ஏப்ரல் 28]

341—

அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு.

வினா எண். 2495— திரு. கே. கந்தசாமி; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அரசு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்புகளில் ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தை நிரப்பாமல் (General Category)-யில் நிரப்புவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்ட சதவிகித இட ஒதுக்கீட்டின்படி அரசு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

342—

ராஜபாண்டிக்கு பேருந்து விடுதல்.

வினா எண். 2597— திரு எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டையிலிருந்து கீழப்பாவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ராஜபாண்டிவரை ஒரு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

343—

பிரான்சேரி கிராமத்திற்கு பேருந்து வசதி.

வினா எண். 2599—திரு எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியத்தில் உள்ள பிராஞ்சேரி கிராமத்திற்கு பேருந்து வசதி இல்லாமையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) பிராஞ்சேரி விலக்கு வழியாக இரண்டு நகரப் பேருந்துகள் இயங்கி வருகின்றன.

344—

**புறநகர் பகுதிகளில் நவீன பேருந்து நிலையங்கள் அமைத்தல்.**

வினா எண். 2618—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சென்னை மாநகரில் நாளுக்குநாள் போக்குவரத்து நெரிசல் பெருகிக் கொண்டு வருவதால் புறநகர் பகுதிகளில் நவீன பேருந்து நிலையங்களை அமைத்துத்தர அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆம்.

345—

**தமிழ்நாட்டில் சுயநிதி—தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு பஸ் பாஸ் வழங்குதல்.**

வினா எண். 2619—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் சுயநிதி-தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு போக்குவரத்துப் பேருந்துகளில் பஸ் பாஸ் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவர்களுக்கு மீண்டும் பஸ் பாஸ் வழங்கிட அரசு முன்வருமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சுயநிதி தனியார் பாலிடெக்னிக் மற்றும் பொறியியற் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களுக்கும் 9—3—1992 நாளிட்ட அரசாணை எண் 1386 (போக்குவரத்து) இன்படி 50 சத விகிதம் சலுகைக்கட்டண பயணம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

346—

**போக்குவரத்துத்துறை ஊழியர்கள் இறந்தால் குடும்பத்துக்கு 60 ஆயிரம் ரூபாய் வழங்குதல்.**

வினா எண். 2675—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்கள் இறந்தால் குடும்பத்துக்கு ரூபாய் 60 ஆயிரம் வழங்குவது குறித்து அரசு ஆலோசனை செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் முழு விவரம் யாது ?

விடை—

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்கள் இறந்தால் குடும்பத்துக்கு 1—8—1991 முதல் ரூபாய் 60 ஆயிரம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு 40,000 ரூபாயை கருணைத் தொகையாக தொழிலாளர் வைப்புத் தொகை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் குறைந்த பட்சத் தொகையாக வழங்கப்படும். ரூ. 20,000-த்துடன் கூடுதலாக சேர்த்து 60,000 ரூபாயாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென ஒவ்வொரு பணியாளர்களிடமிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 1—8—1991 முதல் பிடித்தம் செய்யப்படும். மேலும் பணிக்காலத்தில் 1—9—1989 முதல் 31—7—1991 வரை இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ. 20,000 (இருபதாயிரம் ரூபாயை) ஏற்கெனவே தொழிலாளர் வைப்புத் தொகை காப்பீட்டுத் திட்டத்தில் அளிக்கப்பட்ட தொகையுடன் சேர்த்து கூடுதலாக 40,000 ரூபாயாக வழங்கப்படும். இதற்கு பிடித்தம் எதுவும் கிடையாது.

347—

## கடல்வழியில் பறக்கும் படகு விடும் திட்டம்.

வினா எண். 2677—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடல் வழியில் "பறக்கும் படகு" விடுவதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் முழு விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து நாகப்பட்டினம் வழியாக கன்னியாகுமரி வரை ஹைட்ரோ ஃபாயில் (பறக்கும் படகு) விடுவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டது. இந்த திட்டம் லாபகரமாக அமையாது என்று முடிவு செய்யப்பட்டு இத்திட்டம் அமுலுக்கு கொண்டுவராமல் கைவிடப்பட்டது.

348—

## கலங்கரை விளக்கம் அமைத்தல்.

வினா எண். 2775—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் இராஜாமடம் ஊராட்சியை சேர்ந்த கீழ்த்தோட்டம் மீனவர்களுக்கு கலங்கரை விளக்கம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

349—

## சோழன் போக்குவரத்துக் கழக பேருந்தின் நடைகள்.

வினா எண். 2795—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காடு வழியாகச் சென்று வரும் சோழன் நகரப் பேருந்து தடம் எண் 14-ஐ 10 தடவை செல்ல போக்குவரத்துக் கழகத் திடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

350—

## உடல் ஊனமுற்றவர்களுக்கு பேருந்தில் இலவச பஸ் பாஸ்.

வினா எண். 2828—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் பேருந்தில் இலவசமாகப் பயணம் செய்ய பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

ஊனத்தின் அளவினைக் கணக்கில் கொள்ளாது உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் பேருந்தில் இலவசப் பயணம் செய்ய பாஸ் வழங்க இயலாது.

351—

## சென்னை திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துதல்.

வினா எண். 2846—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையத்தில் போதிய இடவசதி இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து நிலையத்தில் பயணிகள் நெருக்கடியினைக் குறைப்பதற்கும், பயணிகளுக்கு போதுமான இடவசதியளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு இந்த இடத்தை சீரிய வகையில் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

352—

அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் புதிய பேருந்துகள் விடுதல்.

வினா எண். 2888—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சரியாக பராமரிக்கப்படாமல் மழைக்காலங்களில் ஒழுகுவதால் பயணிகள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆகஸ்டு 1991 நிலவரப்படி பழுதடைந்திருந்த 14 பேருந்துகளும் பழுதுபார்க்கப்பட்டு இயக்கப்படுகின்றன. மேலும் நடப்பு நிதியாண்டில் 80 புதிய பேருந்துகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

353—

ஆண்டிமடம்-செந்துறை ஒன்றியங்களுக்கு இடையே பேருந்து வசதி.

வினா எண். 2936—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஆண்டிமடம் தொகுதியில் செந்துறை, ஆண்டிமடம் இரண்டு ஒன்றியங்களையும் இணைக்கும் அளவிற்கு பேருந்து வசதியை செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆண்டிமடம்-செந்துறை ஆகிய இரண்டு ஒன்றியங்களுக்கும் இடையே போதுமான பேருந்து வசதிகள் உள்ளன.





354—

அரசு ரப்பர் கழகத்தால் டயர் தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண். 3117—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி தொகுதியில் அரசு ரப்பர் கழகத்தால் டயர் தொழிற்சாலை மத்திய அரசு உதவியுடன் தொடங்க அனுமதி அளித்தும் இதுகாறும் தொடங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 1991-92ம் ஆண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) கன்னியாகுமரி தொகுதியில் அரசு ரப்பர் கழகத்தால் டயர் தொழிற்சாலை மத்திய அரசு உதவியுடன் தொடங்க அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை.

355—

கீறிப்பாறை-சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்து விடுதல்.

வினா எண். 3133—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி தொகுதி கீறிப்பாறையிலிருந்து சென்னை நகருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்தைப் புதிதாக விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

356—

**உடல் ஊனமுற்றோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பயணச் சலுகைகள்**

வினா எண். 3196—திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(a) The details of travel concessions issued to the physically handicapped persons in this State by the Government and

(b) Whether the same concession is to be extended to the long distance buses?

விடை—

(a) மற்றும் (b) : விவர அறிக்கை அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

(அ) உடல் ஊனமுற்றோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பயணச் சலுகை பின்வருமாறு :—

(1) கண் பார்வையற்றோர் :

மருத்துவமனை, பள்ளி, பயிற்சி நிலையம், கல்லூரி, பணியிடம் மற்றும் அனைத்து இடங்களுக்கும் சென்றுவருவதற்கான அனைத்துப் பயணங்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ளவாறு கண் பார்வையற்றோருக்கு பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

(2) 20 வயது வரையுள்ள காது கேளாதோர்—உடல் ஊனமுற்றவர் :

மருத்துவமனை, பள்ளிக்கூடம் ஆகியவற்றிற்குச் சென்றுவர அரசு போக்குவரத்துக் கழகங்களில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) 15 வயது வரை உள்ள மாணவர்



களுக்கு அனுமதிக்கப்பட்டு வந்த இலவசப் பயணச் சலுகை கல்லூரி, பயிற்சி நிலையம் ஆகியவை சென்று திரும்ப 20 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

(3) மருத்துவமனை தவிர பள்ளிக்கூடம், பயிற்சி நிலையம், பணியிடம் சென்று திரும்பிவருவதற்கு 23 மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான நிறுவனங்களில் வழங்கப்படும் இலவச பயணச் சலுகை சமூக நலத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான எல்லா நிறுவனங்களிலும் கல்வி/பயிற்சி பெறும்/பணிபுரியும் மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் செல்லும் உதவியாளருக்கும் இப்பயணச்சலுகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இச் சலுகைகளை நீண்ட தூர பேருந்துகளில் அனுமதிக்க உத்தேசமில்லை.

357—

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடுதல்**

வினா எண். 3253—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூரிலிருந்து திருப்பதிக்கும், சென்னைக்கும் பெங்களூருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இல்லை.

358—

**மோட்டார் வாகனங்களில் கண்கூசும் முகப்பு விளக்குகள் உபயோகப்படுத்துவதை தடை செய்தல்**

வினா எண். 3264—திருமதி வி.ஜி. மணிமேகலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

The details of steps taken by the police administration to check burning of dazzling lights in vehicular traffic in Madras City

விடை—

சென்னை நகர காவல் ஆணையாளர் அவர்கள் 1989-ஆம் ஆண்டைய தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 405 உள்சரத்து (பி)-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு சென்னை நகரம் முழுவதும் 16-9-1991 முதல் மோட்டார் வாகனங்களில் கண்கூசும் முகப்பு விளக்குகள் உபயோகப்படுத்துவதை தடை செய்துள்ளார்.

359—

நிறுத்தப்பட்டுள்ள கிராமப்புற பேருந்துகளை மீண்டும் விட நடவடிக்கை

வினா எண். 3396—திருமதி என்.சி. கனகவல்லி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கிராமப்புறங்களுக்கு செல்லும் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பேருந்துகளை மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) டீசல் கட்டுப்பாடு காரணமாக அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் பேருந்து போக்குவரத்து முறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று. அதன் விளைவாக, சில பேருந்துகளை இயக்குவது நிறுத்தப்பட்டது. எனினும் தற்போது போக்குவரத்து அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கு இணங்க, 15-10-1991 முதல் டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்து விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி விளாத்திகுளம் தொகுதியிலும் நிறுத்தப்பட்ட பேருந்துகள் மீண்டும் இயக்கப்பட்டுள்ளன.



360—

''தில்லைநாயகம் குழு''வின் பரிந்துரைகள்.

வினா எண். 3407—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில போக்குவரத்து நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ''தில்லை நாயகம் குழு'' தனது அறிக்கையை அரசிடம் அளித்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் என்ன ?

விடை—

(அ) ஆம்

(ஆ) கிராமப் பகுதி புறநகர் மற்றும் நகரப் பகுதிகளில் போக்குவரத்து வசதி மேம்பாடு, போக்குவரத்து கழகங்களின் அமைப்பில் சீர்மை, பயணிகளின் வசதி மேம்பாடு, தொழிலாளர்களின் நலம், போக்குவரத்துக் கழகங்களின் நிதி வசதி, கட்டண மாற்றம் போன்ற பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து பரிந்துரைகள் அளித்துள்ளது.

361—

விமானம் மூலம் விதை தூவி காடு வளர்க்கும் திட்டம்.

வினா எண். 3420—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விமானம் மூலம் விதை தூவி காடு வளர்க்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

(இ) இத்திட்டத்தினால் விரும்பிய பலன் கிடைத்துள்ளதா?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) ஆம்

(ஆ) நடப்பாண்டில் இதற்கு ரூ. 117 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) விரும்பிய பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. விதைகள் தெளிக்கப்பட்ட பல பகுதிகளில் செடிகள் முதலில் அதிக அளவில் முளைத்து காணப்பட்டது. நடுவில் காணப்பட்ட வறட்சியின் காரணமாக ஒரு சில இடங்களில் அவைகள் காய்ந்தும் கருகியும் போயின. பொதுவாக திண்டுக்கல், சேலம், நீலகிரி போன்ற இடங்களில் விதை முளைப்புகள் நன்றாக காணப்படுகின்றன. வனப் பகுதிகளில் போடப்படும் விதைகளில் 5 முதல் 10 சதவீதம் வரை நல்ல முறையில் ஊன்றி வளர்ந்தாலே காடுகள் பசுமையினை அடைந்து விடும். வான்வழி மூலம் விதை தெளிப்பு பணிகளை மேற்கொள்வதால் அவ்வனப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட்டு கால் நடைகள் மேய்ச்சலை தடுத்து விடுவதால் அவ்வனப் பகுதிகள் பசுமையினை கொண்டதாக மாறிவிடும் என்ற நம்பிக்கை அதிகமாக காணப்படுகிறது.

362—

## சென்னை—புதுடெல்லிக்கு கூடுதல் இரயில்.

வினா எண். 3429—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சென்னையிலிருந்து புதுடெல்லி செல்ல மேலும் ஒரு இரயில் விடுமாறு மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

விடை—

இல்லை



1992 ஏப்ரல் 28]

363—

## நிறுத்தி வைக்கப்பட்ட நேசமணி போக்குவரத்துக் கழக வழித் தடங்களில் தனியார் பேருந்துகள் விடுதல்.

வினா எண். 3517—திரு இரா. நடேசன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகம் பல பேருந்து வழித் தடங்களில் பேருந்துகளை விடாமல் நிறுத்தி வைத்திருப்பதால் பொது மக்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நிறுத்தி வைக்கப்பட்ட வழித்தடங்களில் தனியார் பேருந்துகள் விட அனுமதி வழங்கப்படுமா ?

விடை—

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் அனைத்து வழித் தடப் பேருந்துகளும் தவறாமல் ஒழுங்காக வழக்கம்போல் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

364—

## காமராஜ் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைத்தல்.

வினா எண். 3535—டாக்டர் தே. குமாரதாஸ் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து காமராஜ் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு தொடங்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

365—

## சீர்காழி— சென்னை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து வசதி.

வினா எண். 3575 திரு. து. மூர்த்தி ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

பூம்புகார் சுற்றுலா மையமாக உள்ளதால் சீர்காழியில் இருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இல்லை.

366—

அவிநாசி—திருப்பூர் தனிப் பேருந்து வசதி.

வினா எண். 3767—டாக்டர் மு. சீனியம்மாள் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெரிசலான நேரங்களில் பேருந்துகளில் ஏறி தொழிலுக்கு அவிநாசியிலிருந்து திருப்பூர் செல்லும் பெண்களுக்காகவும் மாணவியர்களுக்காகவும் காலை 7—10 மணி, மாலை 4—10 மணி வரையும் தனிப் பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நெரிசலான நேரங்களில் பெண்களுக்காகவும் மாணவியர்களுக்காகவும் சிறப்புப் பேருந்துகள் அவிநாசியிலிருந்து திருப்பூருக்கு காலை 7.33 மற்றும் 8.35 மணிக்கும், திருப்பூரிலிருந்து அவிநாசிக்கு 5.07 மணிக்கும் 1—12-91 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

367—

வனப் பாதுகாப்பு பணிக்கு நவீன ரக துப்பாக்கி வழங்குதல்.

வினா எண். 3774—திரு. தி. சாத்தையா ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வனப் பாதுகாப்பு பணிக்கென்று பாரஸ்ட் ஸ்டேசன் வயர்லெஸ், மோட்டார் சைக்கிள், கைவிலங்கு, நவீனரக துப்பாக்கி ஏ.கே. 47, ஹெலிகாப்டர் ஆகியன வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) மற்றும் (ஆ) வனப்பாதுகாப்பு பணிக்கென்று வனக் காவல் நிலையங்கள் (பாரஸ்ட் ஸ்டேஷன்) அமைப்பது குறித்த கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்பு பணிகளுக்கு ஏற்கனவே மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மோட்டார் சைக்கிள்கள் தேவை எனக் கருதும் பட்சத்தில், அவற்றை வழங்க அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்படும். கட்டம் கட்டமாக வனப் பாதுகாப்புக்கென்று வயர்லெஸ் கருவிகள் வழங்கப்பட்டு அவை கோவை, நீலகிரி, பெரியார், சேலம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் முழுமையாக நன்கு இயங்கி வருகின்றன. இந்த ஆண்டும், வட ஆற்காடு—அம்பேத்கார் திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் திருச்சி மாவட்டங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது. வனக் குற்றவாளிகளை கைவிலங்கிட்டு அழைத்துச் செல்லுவதற்கென வனத்துறைக்கு கைவிலங்குகள் வழங்குவதற்கும், வனத்துறைப் பாதுகாப்பு பணியாளர்களுக்கு நவீன ரக ஏ. கே. 47 துப்பாக்கிகள் வழங்குவதற்கும் செயற்குறிப்பேதும் தற்போது அரசிடம் இல்லை. வனக் கண்காணிப்புப் பணிக்கென சிறு விமானத்தை (மைக்ரோ—லைட்) உள்பட வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

368—

வனத்துறைப் பணியாளர்களுக்கு இடர்பாட்டுப்படி வழங்குதல்.

வினா எண். 3778—திரு. தி. சாத்தையா ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

"மிகவும் ஆபத்து நிறைந்த பணிபுரியும் வனத்துறைப் பணியாளர்களுக்கு இடர்பாட்டுப்படி (Risk Allowance) வழங்கப்படுமா ?

விடை—

வனத் துறைப் பணியாளர்கட்கு இடர்ப்பாட்டுப்படி (Risk Allowance) வழங்கும் கருத்துரு அரசிடம் ஏதும் இல்லை.

369—

சந்தன மரங்களை தேசியமயமாக்குதல்.

வினா எண். 3780—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

சந்தனக் கட்டை திருட்டை ஒழிப்பதற்கு சந்தன மரங்கள் தேசிய மயமாக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

சந்தன மரங்களை தேசிய மயமாக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

விடை—

370—

புதிய வழித்திட்டம் தொடங்குதல்

வினா எண். 3782—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு போக்குவரத்துத் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராஜபாளையம் நகரிலிருந்து கோவில்பட்டி-எட்டையபுரம் வழியாக திருச்செந்தூர் செல்ல, இராஜபாளையம் திருச்செந்தூர் புதிய வழித்தடம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

371—

வினா எண். 3783—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராஜபாளையத்திலிருந்து சென்னைக்கும், பெங்களூருக்கும் புதிய பஸ் வழித்தடம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

இல்லை.

கள்ளச் சாராயத்தை ஒழித்தல்.

372—

வினா எண். 3973—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



[1992 ஏப்ரல் 28

கள்ளச் சாராயம் ஒழிக்கப்படுவதற்கு காவல்துறையையும் வருவாய்த் துறையையும் பொறுப்பேற்க வைத்திருப்பது போன்று, வன எல்லைக்குள் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதால் வன இலாக்கா அதிகாரிகளையும் பொறுப்பேற்க வைக்கப்படுமா?

விடை—

ஆம். வன எல்லைக்குள் சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைகளைத் தடுத்து ஒழித்திட அப்பகுதியில் பணிபுரியும் வனக்காவலாளர், வனக் காப்பாளர், வனவர், வனச்சரகர் ஆகியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும், தவறினால் குறைபாட்டிற்கு எச்சரிக்கையும், பின்னர் கண்டுபிடிக்கப்படும் குறைபாட்டிற்கு தற்காலிகப் பணி நீக்கமும் செய்யப்படும் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

373—

இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

வினா எண். 4022—திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

போடிநாயக்கனூர் தொகுதி தேவாரத்தில் இருந்த இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழக பணிமனை இட நெருக்கடி என்று காரணம் காட்டி போடிநாயக்கனூருக்கு மாற்றப்பட்டுள்ளதை அரசு மறு பரிசீலனை செய்து மீண்டும் தேவாரத்திலேயே பணிமனை அமைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தேவாரம் பணிமனை தேவாரத்தில்தான் இயங்கி வருகிறது. ஆகவே கேள்விக்கு இடமில்லை.

374—

புறம்போக்கு நிலத்தில் தென்னை, முந்திரிகன்று வளர்த்தல்.

வினா எண். 4151—செல்வி கோ. மல்லிகா ; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

[1992 ஏப்ரல் 28

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பால்வாத்துண்ணம் கிராமத்தில் சமூக நல காடுகள் மூலம் புறம்போக்கு நிலத்தில் தென்னை, முந்திரி கன்று வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் உள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பால்வாத்துண்ணம் கிராமத்தில் சமூக நல காடுகள் மூலம் புறம்போக்கு நிலத்தில் தென்னை முந்திரி கன்று வளர்ப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

375—

வனச் செல்வத்தைக் காப்பாற்ற நடவடிக்கை.

வினா எண். 4173 ஏ.—திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கள்ளத்தனமாக சந்தனக்கட்டைகளை கடத்தும்போது பிடிபடும் கட்டைகளின் மதிப்பில் இரண்டு விழுக்காடுகள் வனத் துறை அலுவலர்களுக்கு கொடுத்து ஊக்குவித்து வனச் செல்வத் தைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ரூ. 20,000 த்திற்கு மேல் மதிப்புள்ள சந்தனக் கட்டைத் திருட்டு மற்றும் கடத்தலைக் கண்டுபிடிக்கும் அல்லது அது குறித்து சரியான தகவல் தரும் வனத்துறை அலுவலர்களுக்கு, பிடிபடும் சந்தனக் கட்டையின் மதிப்பில் 5 விழுக்காடு, அதிக பட்சம் ரூ. 5,000 வரம்பிற்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

376—

சின்னசேலம் நகரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம்.

வினா எண். 4226—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;



1992 ஏப்ரல் 28]

(அ) தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலம் நகரில் தந்தை பெரியார் போக்குவரத்துத கழகக் கிளை அலுவலகம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

377—

பேருந்துகளில் புகை பிடிப்பதைத் தவிர்க்க நடவடிக்கை.

வினா எண். 4275—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேருந்துகளில் பயணம் செய்யும்போது புகை பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தும், இக்கட்டுப்பாடு சரிவர அமல்படுத்தாதது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைக் கண்டிப்புடன் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் புகைப் பிடிக்காமலிருக்கவும் அவ்வாறு புகை பிடிப்பதைத் தவிர்க்கவும், தடுக்கவும் தக்க நடவடிக்கைகள் போக்கு வரத்துக் கழகங்களினால் எடுக்கப்பட்டுள்ளன.

378—

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு.

வினா எண். 4276—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது காற்று மண்டலத்தில் ஒலி அளவு (Noise Pollution) அதிகரிப்பதால் சுற்றுப்புற சூழலில் பாதிப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

[1992 ஏப்ரல் 2

(ஆ) இதற்கு ஓரளவு காரணமாக உள்ள காற்று ஒலிப்பான்கள் (Air Horns) தடை செய்யப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நகர எல்லைக்குள் தடை செய்யப்பட்டுள்ளது.

379—

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இடவசதியை அதிகரித்தல்.

வினா எண். 4277—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கையை குறைத்து பயணிகளுக்கு இடவசதியை அதிகரித்து சிரமமில்லாமல் பயணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

கூடியவரையில் இருக்கைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு பயணிகள் சிரமமின்றி பயணம் செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

380—

## அரசு போக்குவரத்துத் துறையின் ஓட்டுனர்கள் கட்டாய ஓய்வு பெற்றால் அளிக்கப்படும் தொகை.

வினா எண். 4399—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அரசு போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் ஓட்டுனர்கள் 20 வருட பணிக்காலத்திற்கு பின்பு அல்லது 50 வயதிற்கு பின்பு கட்டாய ஓய்வு பெற்றால் ரூ. 7,500 கொடுப்பதை ரூ. 10,000 ஆக உயர்த்தும் நோக்கம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

381—

## போக்குவரத்துத் துறையினருக்கான மருத்துவ பட்டப்படிப்பில் இட ஒதுக்கீடு.

வினா எண். 4400—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

போக்குவரத்துத் துறையினருக்கான மருத்துவ பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒதுக்கப்படும் மாணவர் சேர்க்கையை (Admission) 30 விழுக்காடிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மருத்துவ பட்டப்படிப்பிற்கு போக்குவரத்துத் துறையைச் சார்ந்த ஊழியர்களின் குழந்தைகளுக்கு மொத்தமுள்ள 60 இடங்களில் 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பொறியியற் கல்லூரியில் மொத்தமுள்ள 180 இடங்களில் 90 இடங்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

382—

## சென்னை—திருவண்ணாமலை வெளியூர் தடத்தை செங்கம் வரை நீட்டித்தல்.

வினா எண். 4430—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து திருவண்ணாமலை வெளியூர் தடத்தை (122-பி) செங்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1992 ஏப்ரல் 28]

383—

**கிராமப்புற மாணவ, மாணவியர்கட்கு இலவச பஸ் பாஸ்.**

வினா எண். 4480—திரு. செ.து. வரதராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகட்கு கிராமப் புறங்களில் இருந்து பேருந்துகளில் செல்லும் மாணவ, மாணவியர்கட்கு இலவச பஸ் பாஸ் அல்லது சலுகை கட்டணம் அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கிராமப்புறங்களிலிருந்து பள்ளி செல்ல பேருந்துகளில் 50 சதவித கட்டணச் சலுகை அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மாணவர்களுக்கு தற்போது இலவசப் பயண அனுமதி வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

384—

**அவிநாசியில் ஜீவா போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.**

வினா எண். 4507—டாக்டர் மு. சின்னியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜீவா போக்குவரத்துக் கழகப் பணிமனையை அவிநாசியில் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிமனை எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): அவிநாசி, சேரன் போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்குள் இருப்பதால் அங்கு பணிமனை அமைக்க சேரன் போக்குவரத்துக் கழகத்தால் நிலத்தேர்வு செய்யப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட உடன் பணிமனை கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும்.



1992 ஏப்ரல் 28]

385—

**பெரியார் நகர்—திருவான்மியூர் வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள்.**

வினா எண். 4542—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை—பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து திருவான்மியூர் செல்லும் ஏ—29 பேருந்து தடத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் அத்தடத்தில் கூடுதலாக பல பேருந்துகளை இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

386—

**தாலுகா தலைநகரங்களில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு இலவச பஸ்பாஸ்.**

வினா எண் 4596—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்ட தலைநகரங்களில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு இலவச பஸ்பாஸ் வழங்கப்பட்டுள்ளது போல் தாலுகா தலைநகரங்களில் உள்ள நிருபர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1992 ஏப்ரல் 28

387—

உடுமலைப் பேட்டையில் 'சந்தை ஸ்பெஷல்' பேருந்துகள் இயக்கும் திட்டம்.

வினா எண். 4710—திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலைப் பேட்டையில் 'சந்தை ஸ்பெஷல் என்னும் அரசு பேருந்துகள் விடும் கருத்துருவை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : உடுமலைப் பேட்டையில் 'சந்தை ஸ்பெஷல்' பேருந்துகள் இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

388—

பாலப்பன் பட்டியில் சாலையோர விடுதி கட்டுதல்.

வினா எண். 4719—திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் உடுமலை வட்டம் பாலப்பன்பட்டியில் சாலையோர விடுதி ( Motel ) ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் உடுமலை வட்டம் பாலப்பன்பட்டியில் சாலையோர விடுதி கட்டும் செயற்குறிப்பு தற்போது எதுவும் இல்லை.



1992 ஏப்ரல் 28]

389—

ஆட்டோக்களில் மீட்டரை விட அதிகம் வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண்.4755—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் ஓடுகின்ற ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்பட்டிருந்தும், அதை விட அதிகம் வசூல் செய்வதைத் தடுக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

390—

குமணன் போக்குவரத்துக் கழகம் துவக்குதல்.

வினா எண். 4781—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து உடுமலையை தலைமையிடமாகக் கொண்டு குமணன் போக்குவரத்துக் கழகம் ஒன்று துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை.

391—

பாலப்பன்பட்டியில் சேரன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான புதிய குடியிருப்பு நகர் அமைத்தல்.

வினா எண். 4783—திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகே பாலப்பன்பட்டியில் (சி.டி.சி.) சேரன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான புதிய குடியிருப்பு நகர் நிர்மாணிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

392—

கறம்பக்குடி—சென்னை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண்.4802—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குடி தொகுதி கறம்பக்குடியிலிருந்து சென்னை சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) அரசு அறியும்.

(ஆ) அதனை மீண்டும் இயக்குவது பொருளாதார அடிப்படையில் உகந்தது அல்ல.

393—

நன்மங்கலம் சேரி தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதி ஆணை வழங்குதல்.

வினா எண். 4809—திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

29-4-1991-ல் தாம்பரம் வனத்துறை கல்குவாரி எண் 32-ஐ ஏலத்தில் எடுத்த நன்மங்கலம் சேரி தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதி ஆணை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1992 ஏப்ரல் 28]

விடை—

29-4-1991-ல் தாம்பரம் வனத்துறை கல்குவாரி எண். 32-ஐ ஏலத்தில் எடுத்த திருவாளர்கள் நன்மங்கலம் சேரி தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கத்திற்கு, அரசு ஆணை (நிலை) எண். 570, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள் 17-9-1991-ல் ஏலத்தினை காயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

394—

விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வாகன வசதி.

வினா எண். 4812—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்ல வசதியாக கிராமத்திலிருந்து குறைந்த கட்டணத்தில் வாகன வசதி செய்துதர அரசு போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த பொருட்களை கிராமத்திலிருந்து சந்தைக்கு எடுத்துச் செல்ல குறைந்த கட்டணத்தில் நகரப் பேருந்து அல்லது சிறப்புப் பேருந்து வசதியுள்ளது.

395—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகள்.

வினா எண். 5008—திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நான்குநேரி, வள்ளியூர், பணகுடி ஆகிய ஊர்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவு பேருந்துகளை நிறுத்தி செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நாங்குனேரி, வள்ளியூர், பணகுடி ஆகிய இடங்களில் நின்று செல்கின்றன.

[1992 ஏப்ரல் 28

396—

**கோயம்புத்தூர்—சென்னைக்கு படுக்கை வசதி கொண்ட விரைவுப் பேருந்து.**

வினா எண். 5044—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு படுக்கை வசதி கொண்ட விரைவுப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதில் இருந்து விடப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

397—

**மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு வரை இலவச பஸ் பாஸ் வழங்குதல்.**

வினா எண். 5024—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற இலவச பஸ் பாஸ் வசதியினை பத்தாம் வகுப்பு வரை உயர்த்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வி ஆண்டிலிருந்தே வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1992 ஏப்ரல் 28]

398—

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கூடுதல் பேருந்துகள் விடுதல்.**

வினா எண். 5035—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிதாக கரூரிலிருந்து, எர்ணாகுளத்திற்கும் பெங்களூருக்கும் கூடுதலாக சென்னைக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்துகள் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

399—

**வனப்பகுதியில் தார் சாலை அமைத்தல்.**

வினா எண். 5105—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சி தாளைக்கரை பிரிவில் இருந்து ஒசூர் வரை வனப்பகுதியில் தார் சாலை அமைக்க 1991-92-ல் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சி தாளைக்கரை பிரிவில் இருந்து ஒசூர் வரை வனப்பகுதியில் தார் சாலை அமைக்க 1991-92 ஆம் ஆண்டிற்கு தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1992 ஏப்ரல் 28

400—

நத்தம நகரில் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.

வினா எண் 5130—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் நகரில் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை கட்ட தேர்வு செய்யப்பட்ட 3 ஏக்கர் நிலம் ஒதுக்கித்தர அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவிற்கு அரசு இசைவு அளித்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், பணிமனை கட்டும் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

(இ) அதற்கான செலவு மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) நத்தம் வட்டம், வேலம்பட்டி கிராமத்தில் புல எண். 206/5-ல் உள்ள 1.14.0 ஹெக்டேர் நிலத்தை இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டுவதற்காக நிலம் ஒதுக்கித்தருவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் ஆணைகள் வழங்கப்பட்டவுடன் பணிமனை கட்டும் பணி துவங்கப்படும்.

(இ) நத்தத்தில் பணிமனை கட்டும் பணிக்கு உத்தேசமாக ரூ. 25 லட்சம் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

401—

மயில்கள் சரணாலயம் அமைத்தல்.

வினா எண். 5140—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களிக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியைச் சார்ந்த மாவட்ட சுற்றுலா மையமான திருமலைக்கேணியில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசுக்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளதா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) நத்தம் தொகுதியைச் சார்ந்த மாவட்ட சுற்றுலா மையமான திருமலைக் கேணியில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசுக்கு கோரிக்கை ஏதும் விடுவிக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

402—

பாப்பிரெட்டிப்பட்டியில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகக் கிளை பணிமனை அமைத்தல்.

வினா எண் 5170—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகக் கிளை பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

403—

அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 5171—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்—கிருஷ்ணகிரி (வழி) மொரப்பூர் தடத்தில் இயங்கிக் கொண்டிருந்த அண்ணா போக்கு வரத்துக் கழக பேருந்து நீண்ட நாட்களாக இயங்காமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) மற்றும் (ஆ) அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்குப் பதிலாக அன்னை சத்யா போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று சேலம்—கிருஷ்ணகிரி (வழி) பாப்பிரெட்டிப் பட்டி, மொரப்பூர் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது.

404—

திருவையாறு தொகுதியில் சோழன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைத்தல்.

வினா எண் 5264—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதியில் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்காக பணிமனை அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும் இன்னும் பணிமனை அமைக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருவையாறு தொகுதி திருக்காட்டுப்பள்ளியில் சோழன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி தொடர்பான நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு வருகின்றன. நில ஆர்ஜிதம் முற்றுப்பெற்று நிலம் சோழன் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதும் பணிமனை அமைக்கும் வேலைகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

405—

பாரஸ்டர்களுக்குப் பதவி உயர்வு.

வினா எண். 5292—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



1992 ஏப்ரல் 28]

பாரஸ்டர்களுக்கு 10 ஆண்டுகளுக்குள் பதவி உயர்வு வழங்கப்படுமா? அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் அடுத்த பதவிநிலைக்குரிய சம்பளம் வழங்கப்படுமா?

விடை—

குறைந்த பட்ச பொதுக் கல்வி தகுதியுடன், அரசால் நிர்ணயிக்கப்பட்ட இதர தகுதிகளையும் பெற்று 8 ஆண்டுகள் வனவர்களாகப் பணிமுடித்தவர்களுக்கும்/குறைந்த பட்ச பொதுக் கல்வி பெறாமல் இதர தகுதிகளைப் பெற்று 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கும் அவ்வப்பொழுது ஏற்படும் காலியிடங்களில் சரகர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு பதவி உயர்வு கிடைக்காமல் வனவர்களாக 10 ஆண்டுகள் பணி முடித்திருந்தால், அதிக ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்கப்படுகிறது.

406—

பொன்மலைப் பகுதியில் இரவு நேரப் பேருந்து விடுதல்.

வினா எண். 5312—திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்மலைப் பகுதியில் இரவு நேரப் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

ஏற்கனவே இயக்கப்பட்டு வருகிறது.

470—

சேலத்தில் சந்தனத் தைல தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண். 5313—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு

[1992 ஏப்ரல் 28

விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அதிக அளவில் சந்தனக் கட்டைகள் கிடைப்பதால் சேலத்தில் சந்தனத் தைல தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

408—

சில்வர் ஒக் மரங்கள் வெட்டப் படுவதை தடை செய்ய நடவடிக்கை.

வினா எண் 5315—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காட்டின் இயற்கை வளத்தினை பாதுகாக்கும் வகையில் விலையுயர்ந்த சில்வர் ஒக் மரங்கள் வெட்டப்படுவதை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஏற்காட்டில் இயற்கை வளத்தினை பாதுகாக்கும் வகையில் தனியார் நிலங்களில் உள்ள விலையுயர்ந்த சில்வர் ஒக் மரங்கள் வெட்டப்படுவதை முழுமையாக தடை செய்ய அரசிடம் திட்டங்கள் ஏதுமில்லை. எனினும், தமிழ் நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டம், 1949-ன் கீழும், தமிழ்நாடு மலைப்பகுதிகள் (காடுகள் பாதுகாப்பு) சட்டம், 1955-ன் கீழும் அறிவிக்கப்பட்டு, இந்த எஸ்டேட்டுகளில் உள்ள மரங்கள் வெட்டுவது முறைப்படுத்தப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 28]

409—

வீடுகள் கட்டும்போது பிளாஸ்டிக் கதவுகள், சன்னல்கள் பயன்படுத்த பிரச்சாரங்கள்.

வினா எண். 5316—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வனச் செல்வங்கள் அழிவதை தவிர்க்க வீடுகள் கட்டும்போது மரத்தால் ஆன கதவுகள், சன்னல்களுக்குப் பதிலாக பிளாஸ்டிக் கதவுகள், சன்னல்கள் பயன்படுத்த அரசு மக்களிடையே பிரச்சாரங்கள் மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) பிரச்சாரங்கள் மேற்கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

410—

பல்லவன் போக்குவரத்து ஊழியர்களுக்கு பொது விடுமுறை வழங்குதல்.

வினா எண். 5484—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் ஏனையப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பொது விடுமுறை வழங்குவதைப்போல் பல்லவன் போக்குவரத்து ஊழியர்களுக்கும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை சட்டம் மற்றும் விதிகளின்படி அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் விடுமுறை வழங்கப்படுகிறது. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

411—

அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக கிளை பணிமனை.

வினா எண். 5516—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் வட்டம் அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் கிளை பணிமனைக்கு நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணிமனை எப்போது தொடங்கப் படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக கிளை பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. அப்பணிமனை அடுத்த நிதி ஆண்டில் தொடங் கப்படவுள்ளது.

412—

மயிலாடுதுறை நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டுதல்.

வினா எண். 5520—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



413—

மோட்டார் சைக்கிள்களுக்கு பதிவு செய்தலை ரத்து செய்தல்.

வினா எண். 5629—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாலை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள 50-சிசி-க்கு குறைவான மொபட் மோட்டார் சைக்கிள்களுக்கு பதிவு செய்தலை (Registration) ரத்து செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

414—

Drive-in Restaurant அமைத்தல்.

வினா எண். 5791—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

ஆழியார் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் வால்பாறை நெடுஞ் சாலையில் சேரன் போக்குவரத்துக் கழகம் மூலம் Drive-in Restaurant அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

415—

வன விடுதி கட்டுதல்.

வினா எண். 5798—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

வெளி நாட்டு பயணிகள் தங்களுடைய நாட்டின் சுற்றுப்புறச் சூழல் அடிப்படையில் தங்க, வன விடுதி (Forest Lodge) வனத் துறையின் மூலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

416—

திருப்பத்தூர் — பெங்களூருக்கு பேருந்து விடுதல்.

வினா எண் 5798— திரு. ஏ, கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து பெங்களூருக்கு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை.

417—

போக்குவரத்துக் கழகங்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மேனேஜிங் டைரக்டர்களாக மீண்டும் நியமித்தல்.

வினா எண். 5933—திரு சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துக் கழகங்களில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மேனேஜிங் டைரக்டர்களாக மீண்டும் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

418—

சலுகை விலையில் டயர்கள் விற்பனை.

வினா எண்.5962—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பழைய டயர்களை டெண்டரின்றி போக்குவரத்துக் கழகங்கள் சலுகை விலையில் கோவை மாநகர தாழ்த்தப்பட்டோர் காலனி மற்றும் டயர் பொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு விற்க அரசாணை ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப்போது விற்கப்படாமல் நிறுத்தப் பட்டுள்ளதா ?

(இ) இதுபற்றி அரசு பரிசீலித்து மீண்டும் அந்தச் சங்கத்திற்கு சலுகை விலையில் டயர்கள் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

419—

போக்குவரத்து சமிக்ஞைகளை அமைத்தல்.

வினா எண்.6038—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

The grounds on which the Madras Police Administration place boards, such as, "School Zone" "No Parking", etc., at various streets ?

விடை—

1988 ஆம் ஆண்டைய போக்குவரத்து வாகனச் சட்டத்தின் பிரிவு 116 (1)-ன்படி அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு

தேவைப்படும் இடங்களில் போக்குவரத்து சமிக்ஞைகள் நிறுவப்படுகின்றன. மற்றும், 1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 371-படி சென்னை நகரில் மோட்டார் வாகன போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த ஒரு பொது இடத்திலும் போக்குவரத்து சமிக்ஞைகளை அமைக்க அனுமதி தரவோ அல்லது நிறுவுவதற்கு அனுமதி தரவோ, சென்னை நகர காவல் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சமிக்ஞை பலகைகளான பள்ளிப் பகுதி (School Zone) நோ பார்க்கிங்'' (No Parking) ஆகியன பொதுமக்கள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து தடையின்றி இருப்பதற்காக சென்னை நகரில் அமைக்கப்படுகிறது.

420—

படகுப் போக்குவரத்துத் திட்டம்.

வினா எண். 6069—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து தமிழகத்தின் கடற்கரை ஊர்களை அடையும் வகையில் சிறு கப்பல் அல்லது படகுப் போக்குவரத்துத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பாண்டிச்சேரி, கடலூர், தூத்துக்குடி, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மகாபலிபுரம் ஆகிய நகரங்களுக்கு இந்த படகுப் போக்குவரத்து ஏற்படுத்தப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஏற்கனவே சென்னையிலிருந்து நாகப்பட்டினம் வழியாக கன்னியாகுமரி வரை ஹைட்ரோஃபாயில் (பறக்கும் படகு) விடுவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டது. இந்த திட்டம் இலாபகரமாக அமையாது என்று முடிவு செய்யப்பட்டு இத்திட்டம் அமலுக்கு கொண்டு வராமல் கைவிடப்பட்டது.



421—

காற்று ஒலிப்பான்களைப் பயன்படுத்த தடை.

வினா எண். 6078—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகராட்சி எல்லைக்குள் காற்று ஒலிப்பான்களை (Air Horns) பயன்படுத்த தடை விதிக்கப்பட்டிருந்தும், இன்னும் காற்று ஒலிப்பான்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்படி தடையை மீறுபவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

விடை—

(அ) ஆம்.

(ஆ) தடையை மீறுபவர்கள் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

422—

மீட்டருக்கு மேல் வசூல் செய்யும் ஆட்டோ ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை.

வினா எண். 6085—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீட்டர் கட்டணத்திற்கு மேல் கூடுதலாக கேட்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், கடந்த 6 மாதங்களில் சென்னை நகரில் எவ்வளவு ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

[1992 ஏப்ரல் 28

(ஆ) சென்னை நகரில் கடந்த 6 மாதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரம் :—

1. மீட்டர் கட்டணத்திற்கு மேல் வசூலித்த ஓட்டுநர்கள் .. .. .. .. 22
2. மீட்டரை தவறுதல் செய்து வசூலித்த ஓட்டுநர்கள் .. 253
3. மொத்தம் வசூலித்த இணக்கத் தொகை. ரூ. 68,765

423—

**சந்தனக் கட்டைகளை கடத்தும் வாகனங்களை கைப்பற்றல்**

வினா எண். 6120—திரு. கி. தர்மலிங்கம் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வனத்துறை அதிகாரிகள் சந்தனக் கட்டைகளை வாகனத்துடன் கைப்பற்றும்போது அந்த வாகனங்களையும் பறிமுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

424—

**சந்தனக் கட்டைகள் ஏலம் விடுதல்.**

வினா எண். 6174—திரு. தா. வேடியப்பன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் தொகுதி, சந்தவாசல் வனத்துறை பொறுப்பில் சந்தனக் கட்டைகள் சரியான பாதுகாப்பில்லாமல் உள்ளதால் இதனை இடமாற்றம் அல்லது ஏலம் விடும் செயற்குறிப்பு அரசிற்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) சந்தவாசல் சரகத்தில் சந்தனக்கட்டை வழக்குகளில் கைப்பற்றப்பட்ட சந்தன கட்டைகள் வனத்துறையின் தகுந்த பாதுகாப்பில் உள்ளன. சந்தனமர வழக்குகள்



1992 ஏப்ரல் 28]

நீதிமன்றத்தில் முடியும் வரை அவற்றை இடமாற்றம் செய்யவோ ஏலம் விடவோ சட்டத்தில் இடம் இல்லை.

425—

**ஊரகப் பேருந்துகள் விடுதல்.**

வினா எண். 6268 — திரு. ம. சின்னசாமி : போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊரகப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்து வசதி பெறாத 1,000 மக்கள் தொகைக்கும் கூடுதலாக உள்ள கிராமங்களுக்கு பேருந்து வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

426—

**கந்தர்வக்கோட்டையில் மருதுபாண்டியர் போககுவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.**

வினா எண். 6355—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை தொகுதி கந்தர்வக்கோட்டையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பணிமனை அமைப்பிற்கான தகுந்த நிலம் தேர்வு செய்து கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் முடிவுற்று நிலம் பெற்றவுடன் பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1992 ஏப்ரல் 28

427—

வனத்துறை காடுகளில் மரங்களை வெட்ட அங்கீகாரம் அளிக்கும் குழு.

வினா எண். 6379 டாக்டர் அ. ஸ்ரீதரன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வனத்துறை சம்பந்தப்பட்ட காடுகளிலுள்ள மரங்களை வெட்டுவதற்கு அங்கீகாரம் கொடுக்க பரிசீலிக்கப்படுகின்ற குழுவில் அந்தந்த தொகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) வனத்துறை சம்பந்தப்பட்ட காடுகளிலுள்ள மரங்களை வெட்டுவதற்கு அங்கீகாரம் கொடுக்க தனியே எந்தவிதமான குழுவும் அமைக்கப்படவில்லை.

428 —

மல்லிபட்டினத்தில் துறைமுகம் அமைத்தல்.

வினா எண். 6613—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிபட்டினத்தில் துறைமுகம் அமைத்துத்தர மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

இல்லை.

429—

புதிய வழித்தடங்கள் ஏற்படுத்துதல்.

வினா எண். 6813—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அத்திமூர்-சேத்பட், அத்திமூர்-படவேடு, அத்திமூர்-திருவண்ணாமலை, அத்திமூர்-மேல் சோழங்குப்பம் (வழி) போளூர் போன்ற வழித்தடங்கள் புதியதாக ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

430—

புதிய வழித்தடங்கள் ஏற்படுத்துதல்

வினா எண். 6814—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர்-கேளூர், ஆரணி-கேளூர், வேலூர்-கேளூர் போன்ற வழித்தடங்கள் வார சந்தையான சனிக்கிழமை அன்று வார சந்தை வழித்தடம் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் கோரியுள்ளவாறு சந்தைப் பேருந்துகளை இயக்க தகுந்த நடவடிக்கைகளை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டுள்ளது.

431—

வனவிலங்கு சரணாலயத்தை நவீனப்படுத்துதல்.

வினா எண். 6816—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அமிர்தியில் உள்ள வனவிலங்கு சரணாலயம் நவீனப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

[1992 ஏப்ரல் 28

(இ) இதனை சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஈ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

(அ) அமிர்தியில் உள்ள வனவிலங்கு சரணாலயத்தை நவீனப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

(இ) இச்சரணாலயத்தைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஈ) இவ்வினா எழாது.

432—

**புரட்சித்தலைவர் பெயரில் திருவண்ணாமலை சம்புவாரயர் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துதல்.**

வினா எண். 6851—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துதல் என்ற அடிப்படையில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தி அதற்கு புரட்சித் தலைவர் பெயர் சூட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

433—

**சுதந்திரப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு இலவச பஸ் பாஸ்.**

வினா எண். 8056—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சுதந்திரப் போராட்ட மற்றும் ஐ.என்.ஏ. வீரர்களின் மனைவியர்க்கும் பேருந்துகளில் செல்ல இலவச பஸ் பாஸ் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

434—

**கடல் வாணிப வாரியம் அமைத்தல்.**

வினா எண். 8293—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறிய துறைமுகங்களை நிர்வகிக்க கடல் வாணிப வாரியம் அமைப்பது பற்றிய கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

435—

**துணிகள் கொள்முதல் செய்தல்.**

வினா எண். 194—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதியில், கோ-ஆப்டெக்ஸ் நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுத்த

[1992 ஏப்ரல் 2

கைத்தறித் துணி ஆர்டரின்படி, துணிகளைக் கொள்முதல் செய்யாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பள்ளிச் சீருடைகள் ஜனதா இரகத் துணிகள் தவிர மற்ற இரக கைத்தறித்துணிகளில் கொள் முதலில் தேக்கம் இல்லை. பள்ளி சீருடைகளில் உற்பத்தித் திட்டத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மீதமான வற்றை அக்டோபர் மாதத்தில் கொள்முதல் செய்யப்படும். ஜனதா ரக துணிகள் இப்போது கொள் முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

436—

அவிநாசியில் கூட்டுறவு நூற்பாலை துவக்குதல்.

வினா எண், 1108—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவிநாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை துவங்குவது குறித்து அரசின் செயல்திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நூற்பாலை தொடங்கப் பெறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

437—

இராமநாதபுரத்தில் நவீன நூற்பாலை ஏற்படுத்துதல்.

வினா எண், 1659— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன நூற்பாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன நூற்பாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரி சீலனையில் இல்லை.

438—

நூற்பாலை அமைத்தல்.

வினா எண். 1651 டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி சத்திரக்குடியில் நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

439—

நெசவாளர் காலனி உருவாக்கும் திட்டம்.

வினா எண். 1783— டாக்டர் ஜி, ஆர். மாலா : மாண்பு மிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சியில் மிகுதியாக வசிக்கும் நெசவாளர்களுக்கு காலனி உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா

விடை—

இல்லை.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

வினா எண். 2078— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்

[1992 ஏப்ரல் 28

களுக்கு விடையளிப்பாரா ;

(அ) 55 வயது அடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) அரசு அதன் மீது எடுத்த முடிவு என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லையென்ற போதிலும், ஏதேனும் ஒரு கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர் ஒருவர், 58 வயது அடையும் முன்னர், இறக்க நேரிடும் பொழுது, 10 ஆண்டு காலத்திற்கு அவருடைய குடும்பத்திற்கு மாதம் ரூ. 250 ஓய்வூதியமாக வழங்கப்படும் புதிய திட்டம், இந்த வருடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

441—

## கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்.

வினா எண். 2079 : டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

442—

## சிட்ட நூல் ஏற்றுமதியை தடை செய்தல்.

வினா எண். 2259— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பஞ்சு மற்றும் சிட்ட நூல் ஏற்றுமதியை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

பஞ்சு மற்றும் சிட்ட நூல் ஏற்றுமதிக் கொள்கை மத்திய அரசிற்குட்பட்டதாலும், மத்திய அரசு உள்நாட்டுத் தேவையை மதிப்பீடு செய்து மிகுதியை மட்டுமே ஏற்றுமதிக்காக அனுமதிக்கிறது. உள்நாட்டில் சமீபத்தில் சிட்டா நூல் விலை அபரிமிதமாக உயர்ந்துள்ளதினைத் தொடர்ந்து, பஞ்சு மற்றும் சிட்டா நூல் ஏற்றுமதியை தடை செய்யப்பட வேண்டும் என மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதற்கேற்ப மத்திய அரசு தற்பொழுது பஞ்சு ஏற்றுமதியை தடை செய்துள்ளது.

443—

## கூட்டுறவு ஆலைகள் மூலம் சிட்ட நூல் கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 2514—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு கூட்டுறவு ஆலைகள் மூலம் சிட்டா நூல் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மத்திய அரசின் துணி நூல் ஆணையர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மொத்த உற்பத்தியில் 50 சதவீத சிட்ட நூல் உற்பத்தி செய்து கைத்தறி தொழிலாளர்களுக்கு விநியோகித்து வருகிறது.

444—

## மடத்துக்குளத்தில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கிளை துவக்குதல்.

வினா எண். 4716—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கிளை ஒன்று உடுமலை வட்டம், மடத்துக்குளத்தில் துவக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

445—

மடத்தூரில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்.

வினா எண். 4980—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ;

உடுமலை வட்டம், மடத்தூரில், பாசன வசதியற்ற வறண்ட இப்பகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மடத்தூரில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் அரசிடம் இல்லை.

446—

கைத்தறி துணி தேக்கத்தைக் குறைக்க மத்திய அரசின் உதவித் தொகை.

வினா எண். 6239—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கைத்தறி தேக்கம் போன்றவற்றால் கைத்தறித் தொழிலில் நசிவு நிலை ஏற்படுவதைத் தடுத்து காப்பாற்ற மத்திய அரசு ரொக்க ஈட்டு உதவி அளித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

(இ) கடந்த 3 ஆண்டுகளில் மத்திய அரசு அளித்த உதவித் தொகை எவ்வளவு ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1975–76ஆம் ஆண்டு முதல் கைத்தறித் துணிகளின் தேக்கத்தைக் குறைக்கும் பொருட்டு கைத்தறித் துணிகளின் விற்பனைமீது மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து 20 சதவீதம் சிறப்பு தள்ளுபடி அளித்து விற்பனை செய்ய அனுமதியளித்து வருகிறது. இதற்கு மானியத் தொகையை 50: 50 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன. இத்தொகை 1975–76ஆம் ஆண்டு முதல் மத்திய அரசிடமிருந்து உதவித் தொகையாக முறையாகப் பெறப்பட்டு வருகிறது.

| (இ) ஆண்டு. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1988–89 .. .. .. .. | 2,169.10 |
| 1989–90 .. .. .. .. | 2,182.35 |
| 1990–91 .. .. .. .. | 2,979.00 |

இதில் முந்தய ஆண்டுகளுக்கான பாக்கித் தொகையும் அடங்கும்.

447—

மின் இணைப்பு வழங்குதல்

வினா எண். 15—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி பணம் கட்டியும் மின் இணைப்பு கிடைக்காமல் இருப்பது குறித்து அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்புகள் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி பணம் (காப்புத் தொகை) செலுத்தியுள்ள 1,274 விண்ணப்பதாரர்களுக்கான மின் கம்பிகள்

நீட்டிப்புப் பணி நடைபெற்று வருகிறது. 31–3–1992-க்குள் ழும் மனுதாரர்கள் அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கப்படும்.

448—

சாலை பராமரிப்பு.

வினா எண் 82—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் ஒன்றியத்தில், சண்முகாபுரத்திலிருந்து மருக்காலன்குளம் வரை உள்ள சாலை பழுதடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழுதுகள் சரிபார்க்கப்பட்டு வருகிறது.

449—

பழுதடைந்த அணைக்கட்டுகள் சீர்செய்தல்.

வினா எண் 197—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) காமராஜர் மாவட்டம், விருதுநகர் பகுதியிலுள்ள குல்லூர்சந்தை, வெம்பக்கோட்டை அணைக்கட்டுகள் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழுதடைந்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





450—

காவிரி நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 225— திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரூர் வட்டம், இனாம் கரூர் பேரூராட்சி, மண்மங்கலம் ஊராட்சிகளுக்கு காவிரி நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள இனாம் கரூர் பேரூராட்சிக்கு காவிரி நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 422.69 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரியத்தின் ஒப்புதலுக்குப் பின், அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள மண்மங்கலம் மற்றும் 34 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ. 128.52 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்பக் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரியத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

451—

மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 309 திரு. க. பழனிசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மின்சாரக் கம்பத்திற்கு தூரத்திலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது அந்த வீடுவரை நடப்படும் கம்பம், கம்பி மற்றும் தொழிலாளர் கூலி அனைத்தும் கட்டச் சொல்வதால் மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) தற்போதுள்ள வாரிய விதிகளின்படி வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க உள்ளாட்சியால் ( Local Bodies ) அங்கீகரிக்கப்பட்ட பொதுத் தெரு சாலைகளில் மின்பாதை அமைக்க ஆகும் மொத்த செலவையும் வாரியம் ஏற்கிறது. தனியார் நிலங்களில் மின்பாதை அமைக்க ஆகும் செலவை மட்டும் மின் இணைப்பை பெறுவோர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) இந்த விதிமுறைகளை ரத்து செய்யும் கருத்துரு எதுவும் ஆய்வில் இல்லை.

452—

கால்வாய்கள் தூர் எடுத்தல்.

வினா எண் 311—திரு. க. பழனிசாமி; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா :

மேட்டூர் கிழக்கு மேற்கு கால்வாய்கள் தூர் எடுத்து புதுப் பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

நடப்பு ஆண்டு, மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கரை வாய்க்கால்ல் இவ்வாய்க்கால்களுக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 3.50 இலட்சத்தில் அவசியமான இடங்களில் தூர் எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 3–8–1991 அன்று வாய்க்காலில் பாசனத் திற்கு தண்ணீர் விடப்பட்டுள்ளது.

453—

ராஜா வாய்க்காலை புதுப்பிக்கும் திட்டம்.

வினா எண் 331—திருமதி ப. சரஸ்வதி; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) கபிலர் மலை தொகுதியில் ஜேடர் பாளையத்தி திலிருந்து வரக்கூடிய ராஜா வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி ராஜா வாய்க்காலைச் சீரமைப்பதற்கு மதிப் பீடு தயாரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தச் சீரமைப்புப் பணியினைச் செய்வதற்கு ஆகும் செலவுகள் முழுவதையும் ஆயக் கட்டுதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அரசாணை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சீரமைப்புப் பணிக்கான மதிப் பீடு ரூ. 165 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு வருகிறது.

454—

ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் 377—திரு. வெ. தமிழரசு; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) 1990 ல் பகுதி 2 திட்டத்தின் கீழ் அனுமதி பெறப் பட்ட தளவாய்ப்பட்டி—மடம் சாலையில் உள்ள ஓடையில் பாலம் கட்டவும், கோபாலபுரம் அணைக்கட்டில் உள்ள ஆற்றில் பாலம் கட்டவும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) தளவாய்ப்பட்டி—மடம் சாலையில் கி.மீ. 1/2ல் பாலம் கட்டும் பணி மற்றும் கோபாலபுரம்—தாளையூத்துச் சாலையில் கி.மீ. 1/2 ல் பாலம் கட்டும் பணி ஆகிய இரண்டு பணிகளும் இதுவரை அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட பகுதி இரண்டு திட்டப் பணிகளில் இடம் பெறவில்லை. அதனால், இப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு எதுவும் பகுதி இரண்டு திட்டத்தில் செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

455

அணை கட்டுதல்.

வினா எண் 450—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலிருந்தும், திருச்சி மாவட்டத்தில் இருந்தும் மழைக் காலங்களில் பெய்கின்ற மழைத் தண்ணீர் வீணாக வாரியின் மூலமாகச் செல்வதைத் தடுத்து அணை கட்டி கால்வாய் வெட்டி செங்கிப்பட்டி பகுதியிலுள்ள ஏரிகளுக்கு பாசனத்திற்காக வழி செய்ய வேண்டுமென்று அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

456—

விளாத்துறை லிப்டிகேஷன் இயக்குதல்.

வினா எண் 518—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுக்காவில் உள்ள விளாத்துறை லிப்டிகேஷன் பல ஆண்டுகளாக பழுதடைந்து செயல்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இயங்க வைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.



457—

மடிச்சல் கால்வாய் வெட்டுதல்.

வினா எண் 519—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யார் இடதுகரை கால்வாயில் புதிதாக வெட்ட இருக்கும் மடிச்சல் கால்வாய்க்கு தொகை ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு.?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ). இக்கேள்விகளுக்கு இடமில்லை.

458—

பாலம் அமைத்தல்

வினா எண். 572—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆலங்குளம் ஒன்றியம், நெட்டூருக்கு அருகில் காசிக்கு வாய்த்தான் ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா :—

(ஆ) இவ்வாண்டு அத்திட்டம் நிறைவேற்றப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இப்பாலப் பணி ரூ. 1.90 இலட்சங்கள் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

459—

வினா எண். 576—திரு. எஸ். எஸ். இராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 ஏப்ரல் 28

(அ) ஆலங்குளம் ஒன்றியம், மாயாமான்குறிச்சியில் மாதுரான் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று (பகுதி-2) திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும்

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

460—

ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண். 581—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணி தொகுதியில் கடைமடைப் பகுதி விவசாயிகளின் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஏதுமில்லை.

461—

நீரேற்று நிலையம் அமைத்தல்

வினா எண். 611—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சேண்டாக்கோட்டை அருகில் ஓடுகின்ற மகாராஜசமுத்திரம் காட்டாற்றில் நீரேற்று நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம். விரிவான ஆய்வுக்குப்பின் நிதி ஒதுக்கீடு குறித்து ஆராயலாம்.



1992 ஏப்ரல் 28]

462—

வினா எண். 612—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முதல்சேரி பள்ளிக்கொண்டான் அருகில் ஓடுகின்ற மகாராஜசமுத்திரம் காட்டாற்றில் நீரேற்று நிலையம் அமைத்து ராஜாமடம் வாய்க்காலில் தண்ணீர் கொண்டு வர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம். விரிவான ஆய்வுக்குப்பின் நிதி ஒதுக்கீடு பற்றி ஆராயலாம்.

463—

வாய்க்கால் செப்பனிடல்

வினா எண். 619—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஆனந்தவள்ளி வாய்க்காலில் இருந்து பெரியகத்திக் கோட்டை ஏரிக்குத் தண்ணீர் விட வாய்க்காலைச் செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா:

விடை—

இல்லை.

464—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண். 653—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார்கோவிலில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா:

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

465—

பாலம் புதுப்பித்தல்

வினா எண். 655—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் களத்தூர் சி.எம்.பி-யில் பழுதடைந்துள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

466—

வினா எண். 656—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி CMF பாலத்தை புதுப்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

467—

மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண். 686—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி நவக்கொல்லை காலனிக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி நவக்கொல்லை காலனிக்கு தெரு விளக்கு பொருத்தக்கோரி குறிப்பிட்ட பஞ்சாயத்திடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை வரவில்லை. அவ்வாறு விண்ணப்பம் வருமாயின் இப்பணிகளுக்கான விண்ணப்ப பதிவு வரிசை அடிப்படையில், அப்பகுதி இலக்கீட்டிற்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க ஆவன செய்யப்படும்.

468—

வினா எண். 694—

திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு: விடையளிப்பாரா பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாவடி ஆதிதிராவிடர் காலனிக்கு மின்சார இணைப்பு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம் கோட்டாவடி ஆதி திராவிடர் காலனியில் ஒரு மேல் நிலை நீர்த் தொட்டிக்கு ஏற்கெனவே மின்இணைப்பு கொடுக்கப்பட்டு இயங்கி வருகிறது. ஆகவே இப்பகுதியில் மின்சார வசதி உள்ளது. குடிசைகளுக்கும் வீடுகளுக்கும் விண்ணப்பம் வரப்பெற்றால் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இக்காலனியில் நான்கு குழல் விளக்குகள் பொருத்தக் கோரி ஒரு விண்ணப்பம் வந்துள்ளது. ஏற்கெனவே சம்பந்தப்பட்ட மின்வாரிய பிரிவு அலுவலகத்தில் பல இடங்களில் தெரு விளக்குகள் அமைப்பதற்கான 394 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஆகவே இந்த விண்ணப்பம் வரும் ஆண்டுகளில் இலக்கீட்டிற்கேற்ற வரிசைப்படி எடுத்துக்கொள்ளப்பட்டு விளக்குகள் அமைக்கப்படும்.

[1992 ஏப்ரல் 28

469—

வினா எண். 696.—திரு. ஆர். சிங்காரம்,

மாண்புமிகு பொதுப்பணிதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?
பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளி கொண்டான் ஆதிதிராவிடர் காலனிக்கு மின்சார இணைப்புக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிகொண்டான் ஆதிதிராவிடர் காலனியில் இரண்டு தெருவிளக்குகள் பொருத்தி ஏற்கெனவே மின்வசதி அளிக்கப் பட்டுள்ளது.

மேலும் இக்காலனியில் 8 குடிசை மின் இணைப்புகளும் 4 வீட்டு மின் இணைப்புகளும் வழங்கப்பட்டு அவைகளும் இயக்கத்தில் உள்ளன. புதிய மின்இணைப்புக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

நெடுஞ்சாலை அகலப்படுத்துதல்.

470—

வினா எண் 699 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

அதிராமபட்டினத்திலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை



1992 ஏப்ரல் 28]

471 —

டிரான்ஸ்பார்மர்களை அதிகப்படுத்துதல்.

வினா எண். 795—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி நகராட்சியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதை முறைப்படுத்த டிரான்ஸ்பார்மர்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடி நகராட்சியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதை முறைப்படுத்த பரமக்குடி துணை மின் நிலையத்தில் உள்ள 3 எம்.வி.ஏ., மின்மாற்றிக்குப் பதிலாக 10 எம்.வி.ஏ. மின்மாற்றியை அமைப்பது மற்றும் ஆறு மின் மாற்றிகள் அமைத்து மின் அழுத்த நிலை சரி செய்யப்படுவது குறித்து செயற்குறிப்பு மின்வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

472—

மின்துறை ஊழியர்கள் இறந்தால் வழங்கப்படும் உதவித்தொகையை உயர்த்துதல்.

வினா எண். 994 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தமிழக மின்துறையில் பணியாற்றும் லயன்மேன் மற்றும் ஊழியர்கள் இறந்தால் வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மின்வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

473—

மின்கட்டணத்தைக் குறைத்தல்.

வினா எண் 997— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

விவசாயிகளின் விவசாயத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு வசூலிக்கப்படும் மின் கட்டணத்தைக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

474—

மின்துறையின் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குதல்.

வினா எண். 1001—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மின்துறையில் பல்லாண்டுகளாகப் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம்.

475—

அணை கட்டும் திட்டம்.

வினா எண். 1075—திரு. வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பென்னாகரம் தொகுதியில் காமராஜ்பேட்டை அருகே மத்தாளப்பள்ளத்தின் குறுக்கே அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா:

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

[அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் மத்தாளப்பள்ளத்தின் குறுக்கே இராமகொண்ட ஹள்ளி, கிராமம் அருகே நீர்த்தேக்கத் திட்டம் அமைப்பதற்கான முதல் நிலை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.



476—

வினா எண் 1076—டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னகரம் தொகுதி, நெருப்பூர் கிராமத்தில் ஆசாரி கிணற்றுப்பள்ளம் சிறிய அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்படுமா :

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

477—

கடற்கரை சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 1097—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடற்கரை சாலை விமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) அமைக்கப்பட்ட சாலையின் மொத்த நீளம் எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

விவர அறிக்கை.

(அ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள கிழக்கு கடற்கரைச் சாலையின் மொத்த நீளம் 737 கி.மீ. இதில் திருவான்மியூர் முதல் கடலூர் வரையுள்ள 167 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதி மட்டும் இரு வழித்தடமாக மேம்பாடு செய்ய ரூ. 53 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணி ஆப்கான்ஸ் பாலிங் இந்தியா என்ற ஒப்பந்தக்காரரிடம் 11-4-1991 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திலுள்ள 8 பாலங்களை திரும்பக் கட்டுவதற்கு ஆயத்தப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. ஓரிரு மாதங்களில் சாலைப்பணிகளும் துவங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இப்போது நில எடுப்பு வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. திருவான்மியூரிலிருந்து மாமல்லபுரம் பகுதியில் கி.மீ. 35 முதல் கி.மீ. 55 வரை (20 கி.மீ. தூரம்) மரக்காணத்திலிருந்து பாண்டிச்சேரி பகுதியில் கி.மீ. 120 முதல் 140 வரை (20 கி.மீ. தூரம்) ஒப்பந்த நிதிகளின்படி எடுத்து சாலை வேலை செயலாக்கப்படும். இதுவரை ரூ. 8.91 கோடி இத்திட்டத்திற்கு செலவாகியுள்ளது.

(ஆ) விடை 'அ' வில் குறிப்பிட்டுள்ள இப்பணிக்கு அரசு ரூ. 53 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டத்தை 4 ஆண்டுகளில் செயலாக்க ரூ. 75 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) ஓரிரு மாதங்களில் சாலைப்பணிகள் அமைக்கும் வேலை துவங்க இருக்கின்றன.

478—

சாலை பராமரித்தல்.

வினா எண் 1149—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியத்தில் முத்து கிருஷ்ணபேரியிலிருந்து துத்திகுளம் செல்லும் சாலை பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், உடனடியாக அச்சாலை பராமரிக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் கி.மீ. 0/0-20 வரையுள்ள பகுதி பழுதடைந்துள்ளது. இப்பகுதியை இந்த நிதியாண்டிலேயே புதுப்பிக்க சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன.

479—

ஏரியை பராமரித்தல்.

வினா எண் 1181—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை வட்டம், ஏரிபுறக்கரை பெரிய ஏரி, சின்ன ஏரியை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

480—

தெரு விளக்குகளுக்கு கூடுதல் மின் அழுத்தம்.

வினா எண் 1183—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 2

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை தெரு விளக்குக்கு கூடுதல் மின் அழுத்தம் (த்ரிபேஸ்) கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை பகுதியில் உள்ள ஒருமுனை மூன்று கம்பி மின்னூட்டியினை மும்முனை ஐந்து கம்பி முன்னூட்டியாக மாற்றும் பணி மேற்கொள்ளப் பட உள்ளது. இப்பணி முடிவுற்றவுடன் இப்பகுதியில் மின் அழுத்தம் இயல்பான நிலையை அடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

481—

மின் மோட்டார்களுக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 1250—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரியலூர் தொகுதி, ஏலாக்குறிச்சியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகளின் மின்மோட்டார்களுக்கு இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம், எனில் அதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) அரியலூர் தொகுதி ஏலாக்குறிச்சியைச் சுற்றி யுள்ள (திருமானூர் வட்டம்) கிராமங்களில் மின்மோட்டார் களுக்கு இந்த ஆண்டு (1991-92) இதுவரை 44 விவசாய மின்இணைப்புகள் இப்பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளன. தவிர தயார் நிலையினை பதிவு செய்துள்ள 91 மனுதாரர் களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது. மேலும் 40 மனுதாரர்கள் தயார் நிலையை பதிவு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகமொத்தம் 175 விவசாய மின் இணைப்புகள் இந்த ஆண்டு வழங்கப்படும்.

(ஆ) மேலே (அ) வில் உள்ளபடி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 28]

482—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் 1274—திரு. ச. புரட்சி மணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

விருத்தாசலத்திலிருந்து தொழுதூர் வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

483—

இந்திராகாந்தி குடியிருப்புக்கு மின் வசதி.

வினா எண் 1280—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி, கொத்தட்டை கிராமத்தை சார்ந்த இந்திரா காந்தி குடியிருப்புக்கு மின்விளக்கு வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மங்களூர் தொகுதி, கொத்தட்டை கிராமத்தைச் சார்ந்த இந்திராகாந்தி குடியிருப்புக்கு மின் விளக்கு அமைக்க சம் பந்தப்பட்ட பஞ்சாயத்திடமிருந்து விண்ணப்பம் ஏதும் இல்லை. விண்ணப்பம் வரப்பெற்றால் நடைமுறையிலுள்ள விதிகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்து விளக்குகள் அமைக்க ஆவன செய்யப்படும்.

434—

தடுப்புச்சுவர் கட்டுதல்.

வினா எண் 1351—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) அந்தியூர் ஒன்றியம், நெருஞ்சிப்பேட்டையில் ஆற்றின் ஓரமாய் கட்டியுள்ள வீடுகளில் ஆதிதிராவிட மக்கள் வசிக்க முடியாதபடி தண்ணீர் கசிவு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆற்றுக்கரையில் தடுப்புச்சுவர் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தடுப்புச் சுவர்களுக்கு அடியிலேயும் மற் பக்க வாட்டங்களின் அடியிலேயும் தண்ணீர் கசிந்து செல்லுமாகையால் தடுப்புச்சுவர் கட்டுவதின் மூலம் ஈரம் ஏறுவதை தடுக்க இயலாது. மேலும் ஆற்றுக் கரைக்கும், குடியிருப்புகள் இருக்குமிடத்திற்கும் இடையே போதுமான இடைவெளி இல்லாதபோது தடுப்புச்சுவர் கட்டுவது சில இடையூறுகளை ஏற்படுத்தும்.

485—

கிருதமால் நதி மேம்பாட்டுத் திட்டம்.

வினா எண் 1385—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருதுமால் நதி மேம்பாட்டுத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளின் நலன் கருதி அத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

விடை—

(அ) இந்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நிதிநிலைக்கு ஏற்ப இத்திட்டம் செயல்பட எடுத்துக் கொள்ளப்படும்.



1992 ஏப்ரல் 28]

486—

வைகை அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்துவிடுதல்.

வினா எண் 1391— திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வைகையாற்றில் குடிதண்ணீர் ஆழ் குழாய்களின் மூலம் எடுக்கப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து போனதால், வைகை அணைக்கட்டிலிருந்து குடி தண்ணீருக் காக தண்ணீர் திறந்து விடப்படுமா ?

விடை—

இல்லை.

487—

நடைபாதை அமைத்தல்.

வினா எண் 1416— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகர எல்லையில் NH 49-ல் ஐந்துமுனை ரோட்டிலிருந்து கிருஷ்ணா தியேட்டர் வரை ரோட்டின் இருபுறமும் நடைபாதை மற்றும் சாக்கடைக் கால்வாய் அமைக்கப்படுமா :

விடை—

1992-93 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புற சாலைகள்) கீழ் தேசிய நெடுஞ்சாலை 49-ல் கி. மீ. 72/4-74/8 மற்றும் 76/0-76/8 வரையுள்ள நகர்ப்புற எல்லையிலுள்ள சாலைப் பகுதிகளை மேம்பாடு செய்யும் பணி ரூ. 34 லட்சம் மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு, 1992-93-ம் ஆண்டுக்கு ரூ. 10 லட்சம் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வினாவில் குறிப்பிடப் பட்டுள்ள நடைபாதை மற்றும் சாக்கடை கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள முயற்சிக்கப்படும்.

[1992 ஏப்ரல் 28

488—

## அணைக்கட்டுத் திட்டம்.

வினா எண் 1468 — டாக்டர் வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், கட்டமன் கோட்டையில் மேலவெள்ளுர் அணைக்கட்டுத் திட்டம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு விரைந்து கட்ட நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மானா மதுரை வட்டம், மேலவெள்ளுர் வைக்கன்குடி ஆகிய கண்மாய்களுக்கு கிருதுமால் ஆற்றிலிருந்து தண்ணீரை திருப்பி விட அணைக்கட்டு ஒன்று கட்ட மதிப்பீடு 90-91 விலை விகிதப்படி ரூ. 21.11 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தற்போது தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) பொதுப்பணித்துறை அவர்களால் இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இத்திட்டம் இறுதியாக்கம் செய்யப் பட்டு மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு கிடைத்ததும் நில நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கப் படும். அரசின் பரிசீலனைக்குப்பின் ஒப்புதல் வழங்கியவுடன் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

489—

## கண்மாய்களுக்கு தண்ணீர் வழங்கல்

வினா எண் 1473— திரு. வ. மு. சுப்பிரமணியம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

(அ) திருப்புவனம் ஒன்றியத்தில் மணலூர் கண்மாயில் அடைப்புச் சட்டம் ( Shutters ) அமைத்துக் கால்வாய் மூலம், புதுக்குளம் மன்னாரெந்தல், இலந்தைக்குளம், மேலவெள்ளுர், அம்பலத்தாடி ஆகிய கண்மாய்களுக்கு தண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

490—

## பாலாற்று நீரைத் தேக்கி ஏரிகளில் நிரப்புதல்.

வினா எண். 4476, திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மழைக்காலங்களில் பாலாற்றில் ஓடும் தண்ணீரைத் தேக்கி, பக்கத்தில் இருக்கும் ஏரிகளில் நிரப்பிக் கொள்ளும் செயல் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

491—

## மேம்பாலம் கட்டுதல்.

வினா எண். 1536, திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[ 1992 ஏப்ரல் 28

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறை பூண்டியிலிருந்து மன்னார்குடி செல்லும் சாலையில் மேம்பாலம் கட்ட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

492—

## கால்வாய் அமைத்தல்.

வினா எண். 1743—திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

நாமக்கல் வட்டம், எருமைப்பட்டி வட்டாரம் வடவத்தூர் தலைமலை அருகிலுள்ள ஏரியை புதுப்பித்து கொல்லி மலையிலிருந்து கால்வாய் அமைத்து நீர்ப்பாசனத்திற்கு வகுதி செய்யப்படுமா ?

விடை—

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், எருமைப்பட்டி வட்டாரம், வடவத்தூர் கிராமம் தலைமலை அருகில் உள்ள பழைய குட்டையை ஏரியாக ரூ. 27.10 இலட்சம் செலவில் மாற்றியமைக்கும் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அலுவலகத்தின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் கொல்லிமலைகளில் இருந்து வரும் தண்ணீரை உத்தேசித்து வடவத்தூர் ஏரிக்கு கால்வாய் மூலம் எடுத்துச் செல்லும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

493—

## சாலை அமைத்தல்.

வினா எண். [illegible]—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டம் பாபநாசம் வழியாக திருவனந்த புரம் செல்லும் சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இச்சாலைப்பணி, மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம் 8-வது திட்டம் (1990-95 கீழ் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், மைய திட்ட ஆணையத்தினால் மேற்கு மலைத் தொடர்ச்சி அபிவிருத்தி திட்டம் 1991-92 கீழ் புதுப்பணிகள் எதற்கும் ஒப்புதல் அளிக்கப் படவில்லை.

494—

## மாம்பழத்துறை அணைதிட்டம் உருவாக்குதல்.

வினா எண். 1902—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை அணைத்திட்டம் உருவாக்கி விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை நிறைவேற்ற அரசு நட வடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இத்திட்டத்திற்கு பயன் செலவு விகிதம் குறைவாக இருப்பதால் அரசு கடித (நிலை) எண் [illegible], நாள்: 25—7—90-ல் கைவிடப்பட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

495—

## பாலம் கட்டுதல்.

வினா எண். 1954—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா திருமணஞ்சேரி அருகில் அக்கினியாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1991–92 ஆம் ஆண்டில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

496—

மின் இணைப்பில் முன்னுரிமை.

வினா எண். 2095— திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திருக்கும் விவசாயிகளுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதிகளடங்கிய ஆலங்குடி, ஆவுடையார்கோவில், அறந்தாங்கி ஆகிய வட்டங்களில் அமையும் குழாய்க்கிணறுகள் மற்றும் துளைக் குழாய்க்கிணறுகளுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை தர ஏற்கெனவே அரசின் ஆணை உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஆண்டின் இலக்கீட்டிற்குள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் தெரியப்படுத்தப்படும் அத்தகைய காவிரி டெல்டா பகுதியிலுள்ள குழாய் மற்றும் துளைக்குழாய்க்கிணறுகளுக்கும் மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் தரப்படுகிறது.

497—

மேம்பாலம் அமைத்தல்.

வினா எண். 2131— திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தருவை தாம்போகிபாலம் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

498—

மின் நிலையம் அமைத்தல்.

வினா எண்: 2254— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி நயினார் கோவிலில் மின்நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

499—

தார் சாலையாக்குதல்.

வினா எண்: 2380— திரு. ஆர் சிங்காரம் மாண்புமிகு: பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சீதாம்பாள் புரத்திலிருந்து கரம்பக்குடி வரை உள்ள நெடுஞ்சாலையை தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் சீதாம்பாள் புரத்திலிருந்து கரப்பக்குடி வரை உள்ள நெடுஞ்சாலையின் பெயர் பூவாளூர்-நெய்வேலி சாலை என்பதாகும். இது ஏற்கனவே, தார் சாலையாகத்தான் உள்ளது. இச்சாலையில் சில

இடங்களில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பராமரிப்பு நிதிநிலைக் கேற்ப வரும் ஆண்டுகளில் இச்சாலையில் பழுதுகள் சரி செய்யப்பட்டு பராமரிக்கப்படும்.

500—

## கடல்நீர் மின் திட்டம்.

வினா எண். 2387— திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

திருச்செந்தூர் பகுதியில் உள்ள குலசேகரப்பட்டினத்தில் கடல்நீர் மின் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

அமெரிக்காவிலுள்ள ''ஸீசோலார் பவர்'' என்ற நிறுவனம் கடல் அலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய தமிழ்நாட்டு கடற்கரைப்பகுதியில் 600 மெகவாட் திறன் கொண்ட ஒரு அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் செயற்கூறுகள் குறித்து ஆராய்ந்து இந்த கருத்துருவினைச் செயலாக்க இயலுமா என்பது குறித்து திட்ட அறிக்கை தயாரிக்குமாறு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தை அரசு கேட்டுள்ளது.

501—

## அழகாபுரி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர்.

வினா எண். 2421— திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) அண்ணா மாவட்டம் வேடசந்தூர் அருகில் அழகாபுரி என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள அணையில் இருந்து 1991–92 ஆம் ஆண்டாவது பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், அரவக்குறிச்சி தொகுதியில் எத்தனை ஏக்கர் பாசனம் பெறும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

502—

## பாபநாசம்-காரையார்-திருவனந்தபுரம் சாலை.

வினா எண். 2441— திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் காரையார் செல்லும் மார்க்கமாக திருவனந்தபுரத்தை (கேரளா) இணைக்கும் போக்குவரத்து பாதை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா? ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

இச்சாலைப் பணி மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம் 8வது திட்டத்தின் (1990–95) கீழ் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் மைய திட்ட ஆணையத்தினால் மேற்கு மலைத் தொடர்ச்சி அபிவிருத்தி திட்டம் 1991–92-ன் கீழ் புதுப் பணிகள் எதற்கும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

503—

## மாநில அரசு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண். 2465— டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஏராளமான மாநில அரசு அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களில் பெருமளவில் வாடகை அளித்து செயல்பட்டு வருவதால் பொதுப் பணித் துறையின் மூலம் அரசே சொந்தமாக கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப ஆண்டுதோறும் பொதுப்பணித் துறையின் மூலம் அரசு அலுவலகக் கட்டிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

504—

## பண்ணவயல் அக்னியாற்று அணை.

வினா எண். 2567— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணைவயல் அக்னியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மண் அணையை கான்கிரீட் அணையாக கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

505—

## திருநெல்வேலியில் ரயில்வே கேட் மூடுவதால் போக்குவரத்து பாதிப்பு.

வினா எண். 2632— திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி ஜங்ஷனின் வடக்கே உள்ள ரயில்வே கேட் தினசரி அடிக்கடி மூடுவதினால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது என்பது அரசுக்கு தெரியுமா?

விடை—

ஆம்.

506—

## பாசன வாய்க்கால் சீரமைப்பு.

வினா எண். 2657— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :





தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கீழத் தோட்டத்தின் அருகில் ஓடுகின்ற அக்னி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள காமராஜர் அணையில் இருந்து, இராசா மடம் (NRP) 21 பாசன வாய்க்கால் வரை சீரமைத்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

507—

## சாலை செப்பனிடல்.

வினா எண். 2680—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாபநாசம் தாலுக்கா, அண்டக்குடி—திருவைகாவூர் (வழி திருமண்டங்குடி, கூனஞ்சேரி) சாலை மிகவும் மோசமான நிலையில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அச்சாலையை சீர் செய்து செப்பனிட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இச்சாலையினை ஆண்டு பராமரிப்பு நிதியைக் கொண்டு பழுதுகளை சரிபார்த்து வாகனப் பேருந்து போக்குவரத்து இடையூறு இல்லாமல் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

508—

## தார்சாலையாக்குதல்.

வினா எண். 2809—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

கீழப்பாலூர் ஒன்றியம், முத்து கிருஷ்ணபேரியிலிருந்து கல்லுமுத்து வழியாக துத்திக்குளம் வரை உள்ள நெடுஞ் சாலையை மெட்டல் போட்டு தார் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 28

விடை—

ஆம்.

509—

ஏரி அமைக்கும் திட்டம்.

வினா எண். 2812—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம் சிறுவாச்சூர் வடக்கே ஏலந்தவாரி ஓடையையும் தேம்படி ஆற்றையும் இணைந்து ஏரி அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

விடை—

ஏலந்தவாரி ஓடையையும் தேம்படி ஆற்றையும் இணைத்து ஏரி அமைத்தால் சுமார் 50 ஏக்கருக்கும் மேலாக வனத்துறை நிலமும் மற்றும் செழிப்பான பட்டா நிலங்களும் ஆர்ஜிதம் செய்ய வேண்டும். மேலும் மூன்று கி.மீ. நீளத்திற்கு மண் அணை அமைக்க வேண்டும். பயன் செலவு விகிதமும் பொருளாதார ரீதியில் மிகக் குறைவாக அமையும், எனவே இவ்விரண்டையும் இணைத்து ஏரி அமைக்க போதுமான சாத்தியக் கூறுகள் இல்லை.

510—

ஆண்டி ஓடைத் திட்டம்.

வினா எண். 2826—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

இலால்குடி, அரியலூர் ஆகிய இரு தொகுதிகளுக்கும் மிகவும் பயனுள்ள ஆண்டி ஓடைத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

இத்திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1992 ஏப்ரல் 28]

511—

ஆற்று நீரைத் தேக்கி வைத்து நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம்.

வினா எண். 2899—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேக்கி வைக்காமல் வீணாகும் மழை மற்றும் ஆற்றுத் தண்ணீரை தேக்கி வைத்து நீர்ப் பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

கீழ்க்காணும் இரு திட்டங்கள் ஆய்வில் உள்ளன:

(1) மாம்பழத்துறையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

(2) முல்லையாற்றின் குறுக்கே அணைகட்டி ஒரு பகுதி நீரை கண்டன்சிறைக் கால்வாயில் திருப்பிவிட்டு கண்டன் சிறை குளத்தின் நீரை அதிகப்படுத்துதல்.

512—

மின்வசதி அளித்தல்.

வினா எண். 2940—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் சாத்தரப் பட்டு கிராமக் காலனியில் மின் வசதி ஏற்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

513—

ஏரி பராமரிப்பு.

வினா எண். 3105—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

[1992 ஏப்ரல் 28

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத் தேவன் பெரிய ஏரியையும் அகப்படிச்சான் பெரிய ஏரியையும், புல்டோசர் வைத்து பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை—

514—

வினா எண். 3191— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் காட்டுக்குளம் ஏரியிலிருந்து வரும் உபரி நீரை மேற்படி ஏரியில் ஒரு தேக்கம் கட்டி ஞாயகத்தி வயல் குளத்தில் விட்டு பாசனத்திற்கு பயன்பெறச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

515—

பொறியியல் பட்டதாரிகள்.

வினா எண். 3245—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொறியியல் பட்டதாரிகளை Enginee ring Service (I.A.S. and I.P.S.) போட்டிகளுக்கு தேர்ந்தெடுப்பதைப் போல) மூலம் தேர்ந்தெடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் எத்தகைய பதவியில் அமர்த்தப்படுவார்கள்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

516—

ஆண்டிப்பந்தல்— நன்னிலம் சாலை அகலப்படுத்துதல்.

வினா எண் 3286—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

திருவாரூர்—நன்னிலம் சாலையில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால் ஆண்டிப்பந்தல்—நன்னிலம் சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

517—

தடுப்புச் சுவர் அமைத்தல்.

வினா எண் 3299—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் மற்றும் தரங்கம்பாடி பகுதியில் விவசாய நிலங்களில் கடல்நீர் புகுந்து அப்பகுதி விவசாயம் பாதிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடன் தடுப்பு சுவர் அமைக்க ஆவன செய்யுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பூம்புகார் பகுதியில் பெருந்தோட்டம், அகரப் பெருந்தோட்டம் பகுதியிலும், வானகிரி பகுதியிலும் ஏற்கெனவே கடல்நீர் உட்புகுதலைத் தடுக்க கரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல் தரங்கம்பாடி பகுதியில் உப்பனார் மற்றும் தண்டலார் கடலில் கலக்கும் இடத்தில் கரை தாழ்ந்துள்ளது. இதனை பலப்படுத்தவும் வான்திங் மதகினை செப்பனிடவும் உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. கரைகள் அவ்வப்போது பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[1992 ஏப்ரல் 28

518—

பாலம் கட்டுதல்.

வினா எண் 3356— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் அமராவதி ஆற்றுப்பழைய பாலம் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் அடங்கிய ஒரு 'கார்ப்பரேட் பாடி' அமைத்து புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

519 —

பாலம் கட்டுதல்.

வினா எண் 3388 – திருமதி என். கனகவல்லி ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

விளாத்திகுளம் தொகுதியில் விளாத்திகுளத்திற்கு அருகில் வைப்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இல்லை.

520—

விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா எண் 3465—திரு. எம். தங்கவேல் ; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

'விவசாயத்திற்கு வழங்கும் மின்சார மோட்டார் சர்வீஸ் தற்போது 600 அடி இருந்தால்தான் வழங்கமுடியும் என்று இருக்கும் நிபந்தனையை விவசாயிகள் பயன் அடைகின்ற வகையில் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

சாதாரண வரிசைப்படி, விவாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்படி மின் கம்பத்திலிருந்து கிணற்றின் இடைவெளி பற்றி எந்தவித நிபந்தனையுமில்லை.

521—

பாலம் கட்டுதல்.

வினா எண் 3526 டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரைச்சாலைகளை இணைக்கின்ற விதத்தில் கீழமணக்குடி, மேல மணக்குடி இடையே பாலம் கட்டுப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

522—

சாலை அமைத்தல்.

வினா எண் 3781— திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை மைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) இராஜபாளையம் நகரின் நடுவே செல்லும் பிரதான சாலை குறுகியதாக இருப்பதாலும், வாகனங்கள் அதிகரித்து இருப்பதாலும், ஒரு புறவழிச்சாலை (Bye Pass Road) கொண்டாநேரிக் கண்மாய் வழியாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், செயல்திட்டம் எப்போது தொடங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திட்டம் எதுவும் இல்லை.

523—

அணைகள் கட்டுதல்.

வினா எண் 3790—திருமதி ப. சரஸ்வதி ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றில் மழைகாலத்தில் வெள்ளம் வந்து வீணாக கடலில் தண்ணீர் கலப்பதை தடுக்க சிறுசிறு அணைகள் கட்டி நிலத்தடி நீர்வரத்தை பெருக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

524 —

துணை மின் நிலையம் அமைத்தல்.

வினா எண் 3801—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியப் பகுதியில் குறைந்த அழுத்த மின்சக்தி உள்ளதால் அதனைச் சரிப்படுத்த வெம்பக் கோட்டையில் துணை மின்நிலையம் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1992–93 ஆம் ஆண்டில் நிறுவப்படும் என்று எதிர பார்க்கப்படுகிறது.

525—

நீர்த்தேக்கங்களை ஆழப்படுத்துதல்.

வினா எண். 3806—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை மற்றும் ஆனைக்குட்டம் நீர்த் தேக்கங்கள் ஆழப்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

526—

சிறுமலை அருவித் திட்டம்.

வினா எண். 3875—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில் சிறுமலை அருவித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்தை நிறைவேற்ற கொள்கை அளவில் அரசின் அனுமதி 13—12—1991-ல் வழங்கப்பட்டுள்ளது.

527—

மின் உற்பத்தித் திட்டங்கள்.

வினா எண். 3932—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்சார கட்டுப்பாட்டை போக்குவதற்கு எந்த எந்த புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன?

விடை—

1351.25 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் உடைய பத்து திட்டங்கள் கட்டுமான முன்னேற்றத்தில் உள்ளன. இவை 1995-ம் ஆண்டிற்குள் இயக்கத்திற்கு வர இயலும். மேலும், 2,000 ஆண்டு முடிவில் மின்சாரத் தேவையை எதிர்நோக்கி 2600 மெகாவாட் நிறுவு திறன் உடைய திட்டங்கள், செயல்குறிப்பில் உள்ளன. மற்றும் மத்திய துறை திட்டங்கள் மூலம் மின்வாரியம் அதன் மின் உற்பத்தி பங்கை பெறுகிறது. அன்றியும், தனியார் மற்றும் கூட்டுத்துறை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் உபரி மின் சக்தியும் தமிழகத்திற்குக் கிடைக்கும்.

528—

பாலம் கட்டுதல்.

வினா எண். 3947—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமானூர் ஒன்றியத்தில் அரண்மனைக்குறிச்சி—பாளையப்பாடி இரு கிராமங்களுக்கிடையே பாலம் ஒன்று கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.



[1992 ஏப்ரல் 28]

529—

பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர்.

வினா எண். 3957—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் பாசனத்திற்கு விடப்படும் தண்ணீரை பாசனக் கிணற்றில் விட்டு சிலர் திருப்பூர் சாயச்சலவை பட்டறைகளுக்கு விலைக்கு விற்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) அரசிற்கு தெரியப் பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

530—

இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

வினா எண். 4004—திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்பாடி தொகுதி, காட்பாடி இரயில்வே மேம்பாலம் புதிதாக கட்டும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) அதன் கட்டுமானப் பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இந்த இரயில்வே மேம்பாலத்தை புதிதாக கட்டுவதற்கு ரூ. 200 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது அப்பணி, இரயில்வே துறையினர் ஒப்பந்தப்புள்ளி கோரி அதை அங்கீகரித்த பின்னர் வேலை துவங்கப்பட வேண்டும்.

[1992 ஏப்ரல் 28

531—

"மோர்தானா அணை" கட்டும் திட்டம்

வினா எண். 4008—திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்பாடித் தொகுதியிலும் சேரும் குடியாத்தம் பகுதியில் உள்ள 'மோர்தானா அணை' கட்டும் திட்டம் நடப்பு நிதியாண்டில் பரிசீலிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மோர்தானா அணை கட்டும் திட்டத்திற்கு அரசு மே திங்கள் 90-ல் ஒப்புதல் அளித்து திட்ட வேலைகள் 1990–91 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டன. திட்டத்திற்கு தேவையான குடியிருப்பு இல்லங்கள் அலுவலகக் கட்டிடம், கிடங்கு ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன.

532—

மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண். 4018—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து மின் இணைப்பு வழங்கப்படுமா?

(ஆ) மின்கம்பி செல்லும் கம்பத்திற்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு (More Service) மின் இணைப்பு வழங்கும் திட்டம் உள்ளதா?

விடை—

(அ) உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து ஆண்டுதோறும் அரசினால் இலக்கு (target) நிர்ணயிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் (1991–92) 40,000 விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இந்த ஆண்டின் (1991–92) இலக்கான (target) 40,000 விவசாயப் பம்புசெட்டுகளில் 20,000 விவசாய பம்பு செட்டுகளுக்கு ஆன்லைன் (more service) ஒரு கம்பம்



1992 ஏப்ரல் 28]

(one pole extension) திட்டத்தின் கீழ் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

533—

அணை கட்டுதல்

வினா எண். 4068—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராஜபாளையத்தைச் சார்ந்த கணபதிசாஸ்தா கோவிலில் ஐந்து நதிகள் ஒன்று சேர்வதால் அங்கு அணை கட்டி மழை நீரைத் தேக்கி சுமார் 20,000 ஏக்கருக்கு பாசன வசதி செய்ய ஏதுவாக இத்திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆ எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

534—

வினா எண். 4171—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் தொகுதியில் ஜவ்வாது மலையிலிருந்து வரும் தண்ணீர் வீணாவதைத் தடுக்க குப்பநத்தம் கிராமத்தில் அணை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

[1992 ஏப்ரல் 28

535—

பாதை அமைத்தல்

வினா எண். 4182—திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், கொல்லிமலை செல்லும் வழியில் காரவள்ளியிலிருந்து சோளக்காடு வரை 70 வளைவுகள் உள்ளதால் அவ்வளைவுகளைக் குறைத்து பாதை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

536—

அணை பழுதுபார்த்தல்

வினா எண். 4232—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி வட்டம், தென்பண்ணை ஆற்றின் குறுக்கே எண்ணேகொள் புதூர் அணையைப் பழுதுபார்க்க மதிப்பீடு போடப்பட்டும், நிறைவேற்றாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதுபார்க்கும் பணி எப்போது தொடங்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் தொடங்கப்படும்.

537—

துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்

வினா எண். 4234—திரு. அ. தேவராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யார் தாலுக்கா, வாழ்குடை கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வாக்கடை (வாழ்குடை) கிராமத்தில் 33/11 கி.வோ. துணை மின்நிலையத்தை அமைக்கும் திட்டம் வாரியத்தின், மின்சாரம் செலுத்துதல் மற்றும் வழங்குதலுக்கான எட்டாவது ஐந்தாண்டுக்குரிய பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

538—

பாலம் கட்டும் திட்டம்.

வினா எண். 4248—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

நிலக்கோட்டைத் தொகுதியில் மஞ்சள் நதியும், மருதா நதியும் கலக்கும் இடத்தில் மீனாட்சிபுரம் அருகில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

539—

நாட்டாற்றில் உள்ள தலைப்பு இடமாற்றம் செய்தல்:

வினா எண். 4266—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

குத்தாலம் தொகுதி—குத்தாலம் ஒன்றியம், பருத்திக்குடி கிராமப் பாசன வாய்க்காலுக்கு நாட்டாற்றில் உள்ள தலைப்பு இடமாற்றம் செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

540—

## அணை கட்டுதல்

வினா எண். 4285—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் தொகுதியில் செண்பகத் தோப்பு அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டம், கமண்டலாற்றின் குறுக்கே ரூ. 1090 இலட்சம் செலவில் செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால் 5107.37 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 1587.97 ஏக்கர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிக்கவும் இயலும்.

541—

## மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண். 4339—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு முன்னுரிமை கொடுத்து புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதிகளடங்கிய ஆலங்குடி, ஆவுடையார் கோவில், அறந்தாங்கி ஆகிய வட்டங்களில் அமையும் குழாய்க் கிணறுகள் மற்றும் துளைக் குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை தர ஏற்கெனவே அரசின் ஆணை உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஆண்டின் இலக்கீட்டிற்குள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் தெரியப்படுத்தப்படும் அத்தகைய காவிரி டெல்டா பகுதியிலுள்ள குழாய் மற்றும் துளைக் குழாய்க் கிணறுகளுக்கும் மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் தரப்படுகிறது.





542—

## பாலம் கட்டுதல்.

வினா எண். 4340—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குடி தொகுதியில் திருமணஞ்சேரிக்குச் செல்லும் பாலம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டும் தாமதம் ஆவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்டுவதற்கு வேலைகள் எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

543—

## வாய்க்கால் வெட்டுதல்.

வினா எண். 4434—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டத்தில் விரிவாக்கப் பகுதியில் விடுபட்டுப் போன வடசித்தூர், கொண்டம்பட்டி வாய்க்காலை வெட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆம்.

[1992 ஏப்ரல் 28]

544—

சட்டக்கல்லூரி பராமரிப்புப் பணிகள்.

வினா எண். 4445—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, மில்லர்ஸ் சாலையில் உள்ள சட்டக் கல்லூரி மாணவர் விடுதி கட்டிடத்தில் பல்வேறு இடங்களில் விரிசல் ஏற்பட்டும் நாலைந்து ஆண்டுகளாக அவை சீர் செய்யப் படாமலும் ஆண்டுதோறும் செய்யப்படும் வெள்ளையடிக்கும் பணியும் நடைபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உரிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை மில்லர்ஸ் சாலையில் உள்ள சட்டக்கல்லூரி விடுதியின் புதிய கட்டிடத்தில் மட்டும்தான் மாணவர்கள் தங்கியுள்ளனர். மேற்படி கட்டிடத்தில் சட்டக் கல்வித் துறையால் கோரப்பட்ட சிறு சிறு பணிகள் யாவும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. சமையல் கூடம், உணவு அருந்தும் அறை ஆகியவற்றை பழுதுபார்க்க ரூ. 1,35,500 சிறப்பு நிதியாகப் பெற்றுத் தருமாறு சட்டக்கல்லூரி முதல்வரிடம் கோரப்பட்டுள்ளதாகத் தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நிதி பெற்றவுடன் பணிகள் எடுத்து முடிக்கப் படும். பழைய கட்டிடத்தில் தற்போது மாணவர்கள் தங்காததால் இவ்வாண்டு பழுதுபார்ப்பு வேலை மேற்கொள்ளப்படவில்லை.

545—

சித்தகறு பட்டணங்கால் திட்டத்திற்கான இயந்திரக் கூடம்.

வினா எண் 4468—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவட்டார் தொகுதியில் 1964 ஆம் ஆண்டில் சித்தரறு பட்டணங்கால் திட்டத்திற்காக ஒரு இயந்திரக் கூடம் செருப்பாலூரில் கட்டப்பட்டு எல்லாவிதமான உபகரணங்கள் இருந்தும் தற்போது அது செயல்படாமலும் பராமரிப்பில்லாமலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், இயந்திரக் கூடத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சித்தாறு—பட்டணங்கால் வேலை 1971—ல் முடிவடைந்ததும் இயந்திரங்கள் ஒவ்வொன்றாக பிற திட்டங்களுக்கு மாற்றப்பட்டு தற்போது அணை மற்றும் கால்வாய்கள் பராமரிப்பு உப கோட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனவே தனியாக இயந்திரக் கூடம் பராமரிக்கத் தேவையில்லை.

546—

பேருந்து வழித்தடத்தை அகலமாக்குதல்.

வினா எண் 4494—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்திய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையங்களான காஞ்சி, திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்து வழித்தடத்தை மேலும் அகலமாக்கித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

547—

துணை மின் நிலையம் நிறுவுதல்.

வினா எண் 4508—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிக்குடியில் துணை மின்நிலையம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) ஆம்.

[1992 ஏப்ரல் 28

(ஆ) 1992-93 ஆம் ஆண்டில் நிறுவப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

548—

பெத்தாங்குழி அணை கட்டும் திட்டம்.

வினா எண். 4583—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்தில் பெத்தாங்குழி அணை கட்டவேண்டுமென்ற திட்டத்தின்படி மதிப்பீடு செய்யப் பட்டும் மேல் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டிலேனும் அந்த அணை கட்டுவதற்கான பணிகள் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் சிக்கனமற்ற திட்டம் என்பதால் அரசால் கைவிடப் பட்டது.

549—

ரெட்டியப்பட்டி சின்ன அருவியில் அணை கட்டுதல்.

வினா எண். 4588—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் நத்தம் ஒன்றியம், ரெட்டியப் பட்டி ஊராட்சிப் பகுதியில் ஓடும் சின்ன அருவியில் அணை கட்டுதல் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டில் அந்த அணைக்கட்டும்



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) மேற்படி திட்டம் எதற்கும் மதிப்பீடு செய்யப்பட வில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

550—

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு காவிரி நீர் கொண்டு வரும் திட்டம்.

வினா எண். 4638—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதிக்கு கடந்த கால அரசுகள் எல்லாம் காவிரி நீர் புதுக்கோட்டை மாவட்டத்துக்கு கொண்டு வருவதை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்துக்கு காவிரி நீரைக் கொண்டு வரும் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பயன் செலவு விகிதம் (B.C. Ratio) 0.77:1 சிக்கனமாக இல்லாததாலும், காவிரி தண்ணீர் வரத்துத் தொடர்ந்து பிரச்சினையில் இருப்பதாலும் இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

551—

வெட்டன் விடுதியில் கடைகள் ஆக்கிரமிப்பு.

வினா எண். 4639—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள ஆலங்குடி கறம்பக்குடி செல்லூர் வழியில் வெட்டன் விடுதியில்

நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தில் கடைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் போக்குவரத்துத் தடங்கல் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அக்கடைகள் அகற்றப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

552—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண். 4657—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா ?

(அ) உடுமலை பழனி கொமரலிங்கம் வழியான 35 கி.மீ. சாலையை அகலப்படுத்த நடப்பு ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

553—

ஆக்கூர் கிராம இளமின் பொறியாளர் அலுவலகத்தை மாற்றுதல்

வினா எண். 4698—திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செய்யாறு வட்டம், ஆக்கூர் கிராமம் இள மின்பொறியாளர் அலுவலகத்தை கூழமந்தல் கிராமத்திற்கு மாற்ற அரசிடம் செய்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும் ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த நிதியாண்டின் (1991–92) இறுதிக்குள் மாற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

554—

மேல் அமராவதி மின் திட்டம்

வினா எண். 4709—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மேல் அமராவதி மின் திட்டம் விரைவில் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மேல் அமராவதி நீர் மின் திட்டத்துக்குத் தேவையான ஆனைமலை வனவிலங்குகள் சரணாலயத்தினுள் 42 எக்டேர் நிலப்பரப்பு உள்ளிட்ட 242 எக்டேர் வனப்பகுதியை ஒதுக்க வனத்துறை எதிர்ப்பு தெரிவித்தமையால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

555—

சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண். 4743—திருமதி. கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடுமுடி ஒன்றியம் தாமரைப்பாளையம் வழி கரூர் செல்லும் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1992 ஏப்ரல் 28

556—

காவிரியாற்றில் பாலம் அமைத்தல்

வினா எண். 4746—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடுமுடி ஒன்றியத்தில் காவிரியாற்றில் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திட்டம் ஏதுமில்லை.

557—

நல்லார் மற்றும் ஆனைமலையாறு அணைத்திட்டங்கள்.

வினா எண். 4766—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) உடுமலை அருகே தேவனூர்புதூர் அருகே நல்லார் அணை மற்றும் ஆனைமலையாறு அணை ஆகிய திட்டங்கள் நிதி ஒதுக்கீடு இன்மையால் நிலுவையில் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ரூ. 120 கோடி மதிப்பீடு உள்ள இத் திட்டங்களுக்கு உலக வங்கி உதவியுடன் நிதி ஆதாரம் பெற அரசு ஆவன செய்யுமா ?

(இ) இது குறித்து அரசின் நிலை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : ஆனைமலையாறு நல்லாறு திட்டங்களுக்கு முறையே ரூ. 5 கோடி ரூ. 3 கோடிக்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

558—

சாலை செப்பனிடுதல்.

வினா எண். 4787—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உடுமலை வட்டத்தில் நெடுஞ்சாலை துறையின் சாலைகள் பெரும்பகுதி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில் சாலைகள் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழுதுள்ள சாலைகளை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

559—

மேல்மட்ட பாலம் கட்டுதல்.

வினா எண் 4788—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

உடுமலை பழநி கொழுமன் வழியாக குதிரையாற்றில் குறுக்கே உள்ள தரைப் பாலத்தை அகற்றி மேல்மட்ட பாலம் (High level bridge) கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

தற்போது திட்டம் ஏதுமில்லை.

560—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 4789—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

உடுமலை அருகே ஓணாக்கல்லூரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

561—

சாலை செப்பனிடுதல்.

வினா எண் 4790—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குடி தொகுதி கறம்பக்குடியிலிருந்து மூவர் ரோடு, சின்னான்கோன் விடுதி, மணமடை வெட்டிகாடு வழியாக

தஞ்சாவூர் செல்கின்ற சாலை நீண்ட காலமாக பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**562—**

## மின் மோட்டார்களை அதிகரிக்க நடவடிக்கை.

வினா எண் 4795—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் 120 அடிக்குக் கீழ் சென்றுவிட்ட காரணத்தால் தற்போது இயங்குகின்ற மின் மோட்டார்களை 3-5 எச்.பி.யிலிருந்து 10 எச்.பி. யாக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி காரணமாக அல்லது வேறு எந்த காரணமாகவோ ஏற்கனவே உள்ள விவசாய மின் இணைப்புகளின் கூடுதல் பளு உள்ள மின் மோட்டார்களை அமைக்க விரும்பும் விவசாயிகள், தேவையான மின் பளுவினை குறித்து வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களின் பேரில், தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு, திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப, மின்வாரியம் ஒப்புதல் அளிக்கும்.

**563—**

## வெட்டன் விடுதியில் கடைகள் ஆக்கிரமிப்புகளை அகற்றல்.

வினா எண் 4804—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

ஆலங்குடி தொகுதி கறம்புக்குடி ஒன்றியத்திலுள்ள வெட்டன் விடுதியில் பேருந்து நிறுத்தம் இல்லாததால் நெடுஞ்சாலை





துறைக்குச் சொந்தமான இடத்தில் உள்ள கடைகளை அப்புறப்படுத்தி அவ்விடத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இவ்விடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இந்த இடத்தில் வழக்கம்போல் பேருந்துகள் நின்றுதான் செல்கின்றன.

**564—**

## மின் இணைப்பு வழங்கல்.

வினா எண் 4842—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் அம்மாப்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட சுந்தரம்பாளையம் காட்டுப் பகுதியில் வாழும் மக்கள் தங்கள் வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி தொகையினை மின் வாரியத்திற்கு கட்டியும் இதுகாறும் மின் இணைப்பு கொடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ). அந்தியூர் தொகுதியில், அம்மாபேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட சுந்தரம்பாளையம் காட்டுப் பகுதியில் மூன்று வீடுகளுக்கான மின் இணைப்புக் கோரி மனுக்கள் 13-6-1991 பெறப்பட்டு, 20-12-1991 அன்று மின் இணைப்பு தரப்பட்டுவிட்டது.

**565—**

## மழை நீரை கீழ்பவானி அணைக்கு திருப்பி விடுதல்.

வினா எண் 4888— திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கபினி அணையின் நீர்த்தேக்க பகுதிக்கு தமிழகத்தின் நீலகிரி மாவட்ட முதுமலைப் பகுதியிலிருந்து சுமார் 10 டி.எம்.சி. வரை மழை நீர் சென்று அடைவதை அரசு அறியுமா?

(ஆ) இந்த மழை நீரை வேறொரு வழியாக, கீழ்பவானி அணைக்குத் திருப்பி விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) தமிழ்நாடு முதுமலைப் பகுதிக்கு நீர்ப்பிடிப்பிலிருந்து நீர் ஏதும் கபினி அணைக்கு செல்வது இல்லை.

(ஆ) இல்லை.

566—

நெட்டூர் குளத்தின் கரை சீரமைத்தல்.

வினா எண் 4908—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஆலங்குளம் ஒன்றியத்தில் நெட்டூர் குளத்தில் கரை சீரமைக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கரையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வருகின்ற கோடை காலத்தில் குளத்தில் தண்ணீர் வற்றியவுடன் மராமத்து பணிகள் செய்து முடிக்கப்படும்.

567—

வடிகால் வசதி செய்தல்

வினா எண். 4924—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் தாலுகா, மெஞ்ஞானபுரம், செம்மறிகுளம் படுகையில் வடிகால் இல்லாமையால் குளத்தில் தண்ணீர் நிரம்பி வழியும் பொழுது ஏராளமான வாழை, நெல் பயிர்கள் வெள்ளத்தால் அழிந்து போனதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வடிகால் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்படுகைக்கு வடிகால் வசதி அமைப்பதற்காக சுமார் ரூ. 38.32 இலட்சத்தில் மதிப்பீடு கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்டம், ஆய்வு வட்டம், திருச்சி அவர்களது பரிசீலனையில் உள்ளது.

568—

குளங்கள் பராமரிப்பு செய்தல்

வினா எண். 4935—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த விளாத்திக்குளம் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக நீர்ப்பாசனக் குளங்கள் செப்பனிடப்படாமல் இருப்பதால் மழைக் காலங்களில் உடைப்பு ஏற்பட்டு விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படுவதால் குளங்களைப் பராமரிப்பு செய்ய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்ற ஆண்டுகளில் முடிக்கப்பட்ட பணிகள் தவிர இதரப் பணிகளுக்கு நிதி வசதியைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் பராமரிப்புப் பணிகள் செய்யப்படும்.

569—

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

வினா எண். 4998—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒரு பட்டாவுக்கு ஒரு சர்வீஸ் கனெக்ஷன் வழங்கப்பட்டுள்ள நிலையில் வறட்சி காரணமாக ஒரு குறிப்பிட்ட கிணற்றில் தண்ணீர் இல்லாததால் தண்ணீர் உள்ள அடுத்த கிணற்றி...

[1992 ஏப்ரல் 28

பம்பு செட்டை பயன்படுத்தி நீரை இறைத்தால் மின்சப்ளை துண்டிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தற்போதுள்ள வறட்சியை முன்னிட்டு ஒரு பட்டா நிலத்தில் வேறு ஒரு கிணற்றின் பம்பு செட்டை பயன்படுத்த அரசு அனுமதி வழங்குமா?

விடை—

(அ) மின்சார வாரியத்தின் முன் அனுமதி பெற்று மும்முனையுள்ள இரு வழி திறப்பான் மூலமாக (Triple pole Double throw switch) மின் இணைப்புக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தை கொண்டு தண்ணீர் உள்ள வேறு கிணற்றின் நீரை இறைத்தால் மின் சப்ளை துண்டிக்கப்படுவதில்லை.

(ஆ) வறட்சி காரணமாக ஒரு கிணற்றுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தை மும்முனை இரு வழி திறப்பான் மூலமாக (T.P.D.T. Switch) அதே நிலத்தின் தொடர்ச்சியாக மின் இணைப்புக் காரருக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள வேறு கிணற்றுக்கு வாரியத்தின் முன் அனுமதியுடன் பயன்படுத்திக்கொள்ள வாரியம் ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

570—

பாலம் கட்டுதல்.

வினா எண். 5041—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட குழித்துறை பாலம் கட்டுவதில் அதைச் சார்ந்துள்ள சாலை நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதில் பல்வேறு குறைகள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

வினாவில் குறிப்பிட்டுள்ளதுபோல் சம்பந்தப்பட்ட நிலங்களை இதுவரை கையகப்படுத்தவில்லை.



1992 ஏப்ரல் 28]

571—

தார்ச்சாலை ஆக்குதல்

வினா எண். 5045—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

நத்தம் தொகுதி சாணார்ப்பட்டி ஒன்றியத்தில் செங்குறிச்சி முதல் வேலாயுதம் பாளையம் வரையுள்ள சுமார் 8 கி.மீ தொலைவுள்ள மெட்டல் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

இல்லை.

572—

பயணிகள் விடுதியைப் புதுப்பித்தல்

வினா எண். 5101—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் பேரூராட்சியில் அமைந்துள்ள நெடுஞ்சாலை மூலம் கட்டப்பட்ட பழைய பயணிகள் தங்கும் விடுதியினை புதுப்பித்துக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

(அ) தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

573—

பயணிகள் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண். 5109—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியில் அம்மாபேட்டையில் பேரூராட்சி அலுவலகத்திற்கு பக்கத்தில் ஓர் பயணிகள் தங்கும்

[1992 ஏப்ரல் 28,

விடுதி கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) திட்டம் ஏதும் இல்லை.

574—

## தார்ச் சாலையாக்குதல்

வினா எண் 5122—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாணார்பட்டி ஒன்றியப் பகுதியில் உள்ள திண்டுக்கல் வட்டாணம் சாலை முதல் டி.வடுகப்பட்டி செல்லும் சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்ய கிராமச் சாலைகள் மேம் பாடுத் திட்டத்தின் கீழ் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சாலைப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

575—

## மேம்பாலம் கட்டுதல்

வினா எண். 5126 திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல்-வட்டாணம் மாவட்ட நெடுஞ்சாலையில் 2/4 கிலோ மீட்டரில் உள்ள லெவல் கிராசிங்கில் ரூ. 3.20 கோடி செலவில் மேம்பாலம் கட்ட மதிப்பீடு செய்து அரசுக்கு அனுப்பப் பட்ட கருத்துரு மீது அரசு நிதி ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக் கப்பட்டு விட்டதா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், மேம்பாலம் கட்ட மேல் நடவடிக்கை எப்போது துவங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இங்கு ரூ. 320.00 லட்சம் செலவில் மேம்பாலம் கட்டும் பணி தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

576—

## துணைமின் நிலையம் அமைத்தல்.

வினா எண் 5186 திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் தொகுதி, அனைத்து கிராம, நகரப் பகுதிகளிலும் இரவு நேரங்களில் மின்சார வழங்கல் மிக மிக குறைவாக உள்ளதால் பெரும்பாலானப் பகுதிகள் இருளில் மூழ்கியுள்ள நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) துணை மின்நிலையம் (Sub Station) அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது?

விடை—

(அ) வேதாரண்யம் தொகுதியில் சில பகுதிகளில் சிற்சில நேரங்களில் மின் அழுத்தம் சீராக இல்லை. அதனை சீர் செய்ய இங்கு ஒரு புதிய 33/11 கே.வி. துணைமின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) உப மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலத்தை கையகப்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன. நிலம் கையகப் படுத்தப்பட்டபின் உப மின் நிலைய பணிகள் துவங்கும்.

577—

வினா எண் 5199—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூந்தமல்லி தொகுதி, சென்னீர்குப்பம் கிராமத்தி லுள்ள 33 கி. வோல்ட் துணை மின்நிலையத்தை 110 கி. வோல்ட்

[1992 ஏப்ரல் 28

துணை மின்நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

578—

வினா எண் 5269—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கரூர், அரவக்குறிச்சி ஆகிய ஊர்களில் துணைமின் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா :

(ஆ) ஆம் எனில், அவைகள் எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

579—

வினா எண். 5374—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டை தொகுதி சித்தர்கல்நத்தம் அருகில் உபமின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.



1992 ஏப்ரல் 28]

(ஆ) துணை மின் நிலையத்திற்குத் தேவையான நிலம் தெரிவு செய்யப்பட்டு கையகப்படுத்திய உடன் (நிதிநிலைமைக்கேற்ப) மின்நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

580—

பயணியர் விடுதியை புதுப்பித்தல்

வினா எண். 5380—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

கரூர் வட்டம் நொய்யல் பயணியர் விடுதி பழுதடைந்திருப்பதை புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நொய்யல் பயணியர் விடுதி பழுதடைந்திருப்பதைப் புதுப்பித்துக் கட்ட ஒப்பந்தம் கோரப்பட்டுப் பணி விரைவில் முடிக்கப்படும்.

581—

டிரான்ஸ்பார்மர் அமைத்தல்

வினா எண். 5463—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மங்களூர் தொகுதி, புதுகுளம் கிராமத்தில் மின்சார டிரான்ஸ்பார்மர் அடிக்கடி பழுதாகி விடுவதால் புதியதாக டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

ஆம்.

582—

மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்

வினா எண். 5508—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த ஆண்டுகளில் மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்த குழு அமைக்கப்பட்டதா?

[1992 ஏப்ரல் 23

(ஆ) அக்குழு எந்த வகையில் செயல்பட்டு எந்தெந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது?

(இ) அவற்றிற்கென ஏதேனும் அரசு விசேஷமாக நிதி ஒதுக்கீடு செய்ததா?

(ஈ) ஆம், எனில் அவற்றின் விவரம், அதைக்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக்குழு அடிக்கடி கூடி மெரினா கடற்கரையை மேம்பாடு செய்யும் திட்டங்கள் குறித்து பல்வேறு துறையினருடன் விவாதித்து கடற்கரையிலிருந்த கடைகளை அகற்றவும், கிணறுகளை மூடவும், அதிக ஒளி உமிழும் (ஹாலஜன்) விளக்குகள் அமைக்கவும் காமராஜர் சாலையின் இருபுறமும் மரக்கன்றுகளை நடவும், கடற்கரை மணற்பரப்பை கீழ் மேலாக புரட்டவும் பரிந்துரை செய்துள்ளது.

(இ) ஆம்.

(ஈ) சென்னை மெரினா கடற்கரை மணற்பரப்பு ரூ. 2,70,000 செலவில் கீழ்மேலாக புரட்டப்பட்டுள்ளது மற்றும் கடற்கரை உட்புற சாலையில் அமைந்துள்ள மின் விளக்குகளை பராமரிக்க 1991—92-ஆம் ஆண்டிற்கு ரூ. 1,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

583—

## தரைப்பாலம் கட்டுதல்.

வினா எண். 5544—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி மருநூத்து கிராமத்திற்குச் செல்லும் சாலையின் இடையில் செல்லும் கூலங்கை ஆற்றில் அடிக்கடி காட்டாற்று வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் போக்குவரத்து பல நாட்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு உடனடியாக தரைப்பாலம் அல்லது உயர் மட்டப்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

584—

## மின்இணைப்பு வழங்கல்

வினா எண். 5584—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அண்ணாமடுவில் உள்ள 34 தொகுப்பு வீடுகளுக்கு மின்இணைப்பு வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 1991—92-ல் மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1992—93-ல் மின்இணைப்பு கொடுக்கப்படவுள்ளது.

585—

## உயர்மின் அழுத்தம் பாயும் மின் கம்பிகளால் விபத்துகள்

வினா எண். 5635—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஆரணி நகரில் அடுக்குமாடி வீடுகளுக்கு மேல் செல்கின்ற அதிக மின் அழுத்தம் பாயும் (High v l'age) மின் கம்பிகளால் விபத்துகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதால் அதனைத் தவிர்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

ஆரணி நகரில் அடுக்கு மாடி வீடுகளுக்கு மேல் எந்த இடத்திலும் உயர் மின் அழுத்தம் பாயும் மின் கம்பிகள் போடப்

படவில்லை. இதுவரையிலும் கட்டிடங்களுக்கும், மின்பாதைகளுக்கும் இடையே போதிய பாதுகாப்பு இடைவெளி இல்லாமல் விபத்துகள் ஏதும் ஏற்படவில்லை.

586—

Sedal Dam கட்டுதல்.

வினா எண். 5774—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சோலையார் அணையில் புதிதாக ஒரு Sedal Dam கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

587—

காடம்பாறை மின் உற்பத்தி நிலையம் தீப்பிடித்தது குறித்த அரசின் விசாரணை

வினா எண். 5775—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காடம்பாறை மின் திட்டம் தீப்பிடித்தது குறித்த அரசின் விசாரணை எந்த நிலையில் உள்ளது ?

விடை—

காடம்பாறை மின் உற்பத்தி நிலையம் தீப்பிடித்தது குறித்து ஓய்வுபெற்ற அரசு இரண்டு பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்தது. இக்குழு விசாரணையை முடித்து அறிக்கை ஒன்றை 1991, மே மாதம் அரசுக்குச் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு மின் வாரியத்தை அரசு கேட்டுள்ளது.





588—

சுரங்கப்பாதை அமைத்தல்.

வினா எண். 5922—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் வேலூரில் என். எச். 46 தேசிய நெடுஞ்சாலையில் சி. எம். சி. மருத்துவ மனை எதிரில் மக்கள் பாதுகாப்பாகச் செல்ல சுரங்கப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

(இ) எவ்வளவு தொகை மதிப்பீட்டில்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

589—

பேத்தமங்கலம் ஏரியில் அணை கட்டுதல்.

வினா எண். 5926—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாலாற்றில் பல ஆண்டுகளாக நீர் வராத காரணத்தால் நீர்வளம் குன்றியதைப் போக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே பேத்தமங்கலம் ஏரியில் அணை கட்டி உள்ள கர்நாடக அரசை ஆண்டுக்கு இருமுறை அணையைத் திறந்துவிட கோரும் செயற்குறிப்பு தமிழக அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

[1992 ஏப்ரல் 20]

590—

## சாலை சீர் செய்தல்.

வினா எண். 5944—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பட்டி—பழனி ரோட்டில் பலக்கனூத்து வரை சாலை பழுதடைந்து இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா

(ஆ) ஆம் எனில், அந்த ரோடு எப்போது சீர் செய்யப்படும்.

விடை :—

(அ) ஆம்.

(ஆ) இங்கு குறிப்பிட்டுள்ள ஒட்டன் சத்திரம்—செம்பட்டி சாலையில் நீளம் 32.00 கிலோ மீட்டர் ஆகும். இதில் 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார் தளத்தை புதுப்பிக்கும்படி திட்டமிடா பணிகள் திட்டத்தில்கீழ் நடப்பு ஆண்டில் செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் 4 கிலோ மீட்டர் தூரம் தார் தளம் புதுப்பிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள பகுதிகள் 31—3—1992-க்குள் முடிவடையும். மேலும் இச்சாலையில் 9.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பகுதிகளில் தார் தளம் புதுப்பிக்கும் பணி, மிகவும் பழுதடைந்த பகுதிகளை சீர் செய்யும் திட்டத்தில் செயலாக்குவதற்காக ஒப்பந்தம் கோரப்பட உள்ளன. இதற்கிடையில், மழையினால் ஏற்பட்டுள்ள குண்டும் குழிகளையும் சரி செய்வதற்கான நொடிபோடும் போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

591—

## அருகவல்லி ஓடைத் திட்டம்.

வினா எண். 5946—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்—மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி வத்தலகுண்டு பிர்கா தொப்பத்துப் பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அருகவல்லி ஓடைத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?



[1992 ஏப்ரல் 28]

விடை :—

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட இத்திட்டத்தின் தல வடிவமைப்பு மாறியதால் திட்ட செலவினம் மூல மதிப்பீட்டைவிட அதிகரித்தது. இத்திட்டத்தின் அதிக செலவினத்தை ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்க ஊரக வளர்ச்சித் துறை கோரப்பட்டது. இடையில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் 31—3—1990-ல் முடிவடைந்தது. எனினும், எஞ்சிய பணிகளை முடிவுக்குக் கொண்டு வர ரூ. 2.74 லட்சத்திற்கு, சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டது. இப்பணிகளை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

592—

## அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருதல்.

வினா எண். 5978—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது நலன் கருதி நிலங்களை அரசு கையகப்படுத்தும்போது அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய விதிமுறைகள் இல்லாததால்தான் தர்மபுரி மாவட்டம், கேலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தின் அமைப்புப் பணிகள் தடைப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அரசியலமைப்புச் சட்டம் 31 (இ) பிரிவில் உரிய திருத்தம் கொண்டுவர தமிழ்நாடு அரசு, மத்திய அரசை வலியுறுத்தி உரிய நடவடிக்கை எடுக்கச் செய்யுமா ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

593—

## ஏரிகள் சீரமைப்புப் பணிகள்

வினா எண் 5980—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) குறிப்பிட்ட பரப்பளவு இருந்தால்தான் பொதுப் பணித் துறை மூலம் சீர் செய்யலாம் என்ற விதிமுறை இருப்பதால் ஜமீன் ஏரிகள் மற்றும் பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள சிறு ஏரிகளில் சீரமைப்புப் பணிகள் நடைபெறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குறிப்பிட்ட விதிமுறையை தளர்த்த அரசு முன்வருமா ?

விடை :

(அ) மற்றும் குறிப்பிட்ட பரப்பளவு இருந்ததால்தான் பொதுப் ப்பணித்துறை மூலம் சீர்செய்யலாம் என்ற விதிமுறை இருந்தாலும் (ஆ) ஜமீன் ஏரிகள் மற்றும் பொதுப் பணித்துறையின் கீழுள்ள சிறு ஏரிகள் சீரமைக்கும் பணிகள் நடைபெறுவதற்கு தடையில்லை.

594—

தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கல்.

வினா எண், 6014—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் 1988-89 முதல் 1990-91 வரை தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்க நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கு எவ்வளவு ?

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு இவ்வாண்டுகளில் முழுமையாக மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டனவா ?

(இ) இல்லையெனில், எப்போது முழுமையாக செயல் படுத்தப்படும் ?

விடை :

(அ) 1988-89-ல் 265-ம், 1989-90-ல் 120-ம், 1990-1991-க்கு 243 மின் இணைப்புகளும் வழங்க இலக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28

595—

துணை மின் நிலையம்

வினா எண், 6058—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கோயம்பத்தூர் சீரநாயக்கன்பாளையம் துணை மின் நிலையத்தை கோயம்பத்தூர் மாநகராட்சி மின்சார இலாக்காவுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இருந்து இணைக்கப்படும் ?

விடை —

(அ) இது சம்பந்தமான திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

596—

செல்லப்பம்பட்டிக்கு முழுநேர மின் இணைப்பு

வினா எண். 6067—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், நாமக்கல் அருகே செல்லப்பம் பட்டியில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் மற்றும் இப்பகுதியில் முன்னூருக்கும் மேற்பட்ட சிறு தொழிற்சாலைகள் உள்ளதால் மின்சாரம் 24 மணி நேரமும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

செல்லப்பம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

597—

கோதாவரி—காவிரி ஆறுகளை இணைத்தல்.

வினா எண். 6110 —திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோதாவரி, காவிரி ஆறுகளை இணைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

598 —

## டிரான்ஸ்பார்மர்கள் அமைத்தல்

வினா எண் 6146—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கோயமுத்தூர் ஆர். எஸ். புரம், பெரிய கடைவீதி, ஒப்பனக்காரவீதி, வைசியாள்வீதி, ராஜவீதி, பூ மார்க்கெட், பொன்னையராஜபுரம், செல்வபுரம், ஆகிய முக்கிய நகரப் பகுதிகளில் புதிய மின் அழுத்தமுள்ள டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது எத்தனை சக்திகொண்டதாகப் பொருத்தப்படும் ?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) 1. ஆர். எஸ். புரம் ; (2) ஒப்பனக்கார வீதி ; (3) பூ மார்க்கெட் ; (4) பொன்னையராஜபுரம் ; (5) செல்வபுரம் ஆகிய இடங்களில் 250 கே. வி. ஏ., திறன் கொண்ட புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டுவிட்டன. கீழ்க்கண்ட மூன்று இடங்களில் 31-3-1992க்குள் 250 கே. வி. ஏ., திறன் கொண்ட மின்மாற்றிகள் நிறுவப்படும்.

1. பெரிய கடை வீதி ; (2) வைசியாள் வீதி ; (3) ராஜ வீதி.



599—

## பாலம் கட்டுதல்

வினா எண் 6211 திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போரூர் தொகுதி கனியம்பாடி ஒன்றியத்தில் காட்டுப் பூத்தூர் செல்லும் சாலையில் உள்ள பாலம் ( Culvert) உடைந்துள்ளதால் இதனை புதியதாக ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பயணியர் விடுதியை விரிவுபடுத்துதல்

600—

வினா எண் 6213—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் மையப் பகுதியான போளூரில் பயணியர் விடுதியை விரிவுபடுத்தி அதிக் குளிரூட்டும் சாதனம் பொருத்தப்படுமா

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்.

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சாலை செப்பனிடல்.

வினா எண். 6215 திரு. தா. வேடியப்பன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களம்பூர்—சந்தவாசல் (வழி ஒரிக்குப்பம்) சாலை பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்.

விடை—

(அ) திட்டம் எதுவும் தற்போது இல்லை.

(ஆ) பராமரிப்பு நிதி நிலையைப் பொறுத்து, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும்.

602—

சாலை செப்தனித்தல்

வினா எண் 6216— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போரூர் பகுதி— மூக்குரும்பை சாலை பழுதடைந்துள்ளதால் அதை செப்பனிட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

விடை—

(அ) திட்டம் எதுவும் தற்போது இல்லை.

(ஆ) பராமரிப்பு நிதி நிலையைப் பொறுத்து இச்சாலையைப் புதுப்பிப்பது குறித்து அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும்.

603—

தென்னகத்திலுள்ள ஆறுகளை இணைக்கும் திட்டம்.

வினா எண் 6230—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னகத்திலுள்ள ஆறுகளை இணைக்கும் திட்டம் குறித்து மத்திய அரசு மாநில அரசின் கருத்தை கேட்டு கடிதம் எழுதியுள்ளதா?—

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

604—

பெரும்பள்ளம் ஊரில் வசிக்கும் மக்களுக்கு மின் வசதி வழங்க நடவடிக்கை.

வினா எண் 6363—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியம் நெருஞ்சிப்பேட்டை பேரூராட்சியைச் சேர்ந்த பெரும்பள்ளம் ஊரில் வசிக்கும் மக்களுக்கு மின்வசதி வழங்க மின் வாரியம் மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இவர்களுக்கு தெருவிளக்கு மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரும்பள்ளம் கிராமத்திற்கு 16 தெரு விளக்குகளுக்கு மட்டும் மின் இணைப்பு கோரி மின் வாரியத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆண்டுக்கான இலக்கு ஏற்கனவே மூடிவுற்றதால் வரும் நிதியாண்டில் (1992-93) அரசின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்க ஆவன செய்யப்படும்.

605—

சாலை செப்பனிடுதல் :

வினா எண் 6372—திரு. சு. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக் கோட்டையில் சொக்கம்பேட்டை சாலை வெள்ளிபட்டிவாரி அணைக்கட்டின் ஆயக்கட்டு கண்மாய்களான வேட்டகுடி, புதுக்குளம் ஏரிகளில் நிரம்பி தண்ணீர் அடுத்தடுத்த ஏரிகளுக்கு செல்வதற்கு சொக்கம் பேட்டை சாலை வழியாக செல்வதால் சாலை பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், அதை தடுக்கும் வகையில் தடுப்பு சுவர் கட்டி அந்த சாலை பழுதடைவதைத் தடுக்க அரசு முன் வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

606—

**ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை.**

வினா எண். 6398—திரு. வெ. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(ஆ) பெரியார் மாவட்டம் பெஜலட்டி, ஓசூர் கொல்ல பாளையம், குட்டையூர் போன்ற ஊரில் வெட்டப்பட்ட ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க காலம் தாழ்த்துவதை அரசு அறியுமா?

(ஆ) உடன் மூன்று வழி மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) பெரியார் மாவட்டம் பெஜலட்டி, ஓசூர் கொல்ல பாளையம், குட்டையூர், போன்ற ஊரில் 'ஜீவன்தாரா' திட்டத்தின் கீழ் கிணறு வெட்டப்பட்டு மின் இணைப்பு கோருவதற்கான விண்ணப்பம் ஏதும் வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

607—

**நிருபர்கள் சங்கத்தினருக்கென ஒதுக்கித்தரப்பட்ட அலுவலகம் பழுது பார்த்தல்.**

வினா எண் 6511—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :—



1992 ஏப்ரல் 28]

(அ) சென்னை அரசினர் தோட்ட வளாகத்தில் நிருபர்கள் சங்கத்தினருக்கென ஒதுக்கித்தரப்பட்ட அலுவலகம் பல்லாண்டுகளாக பொதுப்பணித் துறையால் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசினர் தோட்ட வளாகத்திலுள்ள நிருபர் சங்க கட்டிடத்தில் ரூ. 23,500 செலவில் பழுது பார்ப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியை 31-3-1992க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

608—

**காற்றுமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம்**

வினா எண் 8063—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன

விடை—

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

(அ) ஆம்.

[1992 ஏப்ரல் 28

(ஆ) காற்றுமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் முதன் முதலில் தூத்துக்குடியில் முல்லைக்காடு கிராமத்தில் மொத்தம் 1, 1 மெகாவாட் திறன் கொண்ட 20 காற்று ஆலைகளுடன் 1986 ஜனவரியில் துவக்கப்பட்டு நன்முறையில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. மேலும் இத்திட்டம் முல்லைக்காடு (சிதம்பரனார் மாவட்டம்), கயத்தாறு (சிதம்பரனார் மாவட்டம்) முப்பந்தல் (கன்னியாகுமரி மாவட்டம்) புளியங்குளம் (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்) சுல்தான்பேட்டை (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் நிறைவேற்றப்பட்டு இதுவரை மொத்தம் 14,085 மெகாவாட் (6, 37, 74, 348 யூனிட்டுகள்) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட திட்டங்கள் 1991–92 மற்றும் 1992–93-ஆம் ஆண்டில் அமைக்கப்படுவதற்கு செயல்முறையில் உள்ளன :

**1991–92.**

| | | மெகாவாட். |
|---|---|---|
| 1. | கோட்டைகருங்குளம் (புளியங்குளம்) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்) | 1.5 |
| 2. | கயத்தாரில் கூடுதலாக (சிதம்பரனார் மாவட்டம்) | 1.5 |
| 3. | கங்கைகொண்டான் கயத்தாறு சுற்றி டிரான்ஸ்பார்மர்களில் இணைக்க ஒவ்வொன்றும் 55 கி.வாட் | 0.220 |

**1992–93-ல்.**

| | மெகாவாட் |
|---|---|
| கேத்தனூர் (கோவை மாவட்டம்) | 2 |
| பூலவாரி (கோவை மாவட்டம்) | 4 |
| முப்பந்தல் (கன்னியாகுமரி மாவட்டம்) | 6 |

**609—**

மாநகராட்சி விளையாட்டுத் திடல்.

வினா எண். 102—திரு. டி.எம். ரங்கராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?



1992 ஏப்ரல் 28]

''சென்னை 108 வட்டத்தில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் அமைந்துள்ள வட்ட அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றி, அங்கே விளையாட வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

அத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

610—

ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியின் கட்டிடத்தைப் பழுது பார்த்தல்.

வினா எண் 131—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுவாமிமலை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியின் (சுவாமிமலை மேற்கு) கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பித்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுவாமிமலை (மேற்கு) ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடம் சுவாமிமலை தேவஸ்தானத்திற்குச் சொந்தமானக் கட்டிடத்தில் இயங்கி வருவதால் அக்கட்டிடத்தை ஊராட்சி ஒன்றியம் மூலம் பழுது பார்க்க இயலவில்லை.

611—

தெருவிளக்குகள் பராமரிக்கும் பொறுப்பை மீண்டும் மின்சார வாரியத்திடம் ஒப்படைத்தல்.

வினா எண். 299—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்படைக்கப்பட்ட தெரு விளக்குகள் பராமரிக்கும் பொறுப்பை மீண்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடமே ஒப்படைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், குறைகளை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் தெரு விளக்குகள் பராமரிக்கும் பொறுப்பு மீண்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

612—

குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை

வினா எண் 398—திரு. இரா. தாமரைக்கனி : மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, துரிந்தாபுரம் ஒன்றியம், வேடந்தவாரி கிராமத்தில் பொதுமக்கள் குடிதண்ணீருக்காக சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், கலசப்பாககம் தொகுதி, துரிந்தாபுரம் ஒன்றியம், வேடந்தாவாரி கிராமம் பகுதி குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும். நடப்பு நிதியாண்டில், அறவே குடிநீர் வசதியற்ற இடங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதால், பகுதி குடிநீர் வசதி பெற்ற இக் கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் தற்போது ஏதுமில்லை. வரும் நிதியாண்டுகளில், முன்னுரிமைப்படியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படியும் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.



1992 ஏப்ரல் 28]

613—

பரமக்குடி நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண். 479—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

614—

சுப்பம்மாள் சத்திரத்தில் பெரிய குழாய்க் கிணறு அமைத்து, குடிநீர் வழங்க நடவடிக்கை.

வினா எண். 512—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கடலோரப் பகுதி சுப்பம்மாள் சத்திரத்தில் பெரிய குழாய் கிணறு அமைத்து தண்ணீரை கடலோரப் பகுதி மக்களுக்கு குடிநீராக வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

திட்டம் ஏதும் இல்லை.

615—

பேருந்து நிலையம் கட்டுதல்.

வினா எண். 523—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் காளை சந்தை பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

615—

மக்கள் நலப் பணியாளர்களுக்கு சம்பளம் உயர்த்தல்

வினா எண். 533—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள மக்கள் நலப்பணியாளர், நகர் நலப் பணியாளர்களுக்கும் சம்பளம் உயர்த்தப்படுமா?

விடை—

மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் நகர் நலப் பணியாளர்களின் பணியிடங்கள் நீக்கப்பட்டுவிட்டன. எனவே, இவ்வினாவிற்கு இடமில்லை.

617—

பாதாள சாக்கடைத் திட்டம்.

வினா எண். 577—திரு. ஆர். சிங்காரம் —மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

பட்டுக்கோட்டை வட்டம், அதிராம் பட்டிணத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

618—

ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்

வினா எண். 582—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூரில் வீடில்லாத ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

619—

தார்ச்சாலை அமைத்தல்.

வினா எண். 709—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி மேட்டுக்கொல்லை, கருப்பட்டிக் காடு கிராமத்திற்கு செல்லும் சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மிகவும் அத்தியாவசியமாகப் பயன்படக்கூடிய சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தார்ச் சாலையாக மாற்றப் படுகின்றன. இந்தச் சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லாத காரணத்தினால், இதனைத் தார்ச்சாலையாக மாற்ற தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1992 ஏப்ரல் 28]

620—

ஊராட்சிக் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 714—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோயிலுக்கு ஊராட்சிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா.

விடை—

நாச்சியார் கோவில் ஊராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான தகுந்த இடம் இல்லாததால் அக் கட்டிடம் கட்டும் வேலை நடப்பாண்டு திட்டத்தில் சேர்க்கப் படவில்லை.

621—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண். 717—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோவில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

எதுவும் இல்லை.

622—

ஆதிதிராவிடர்களுக்கு ஓட்டு வீடுகள்

வினா எண். 741, திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ;



1992 ஏப்ரல் 28]

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், செம்பியவரம்பல் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கு ஓட்டு வீடு கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடை மருதூர் ஊராட்சி ஒன்றியம், செம்பியவரம்பல் ஊராட்சியில் ஆதிதிராவிடர்களுக்கு ''காங்கிரீட் உறை'' போட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் நடப்பாண்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

623—

மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 743—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், பருத்திச்சேரி ஊராட்சிக்கு மேநிலைத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

தற்போது அரசிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை. வரும் நிதியாண்டுகளில், நிதிநிலைக்குத் தகுந்தாற்போல் திட்டம் கருத்தில் கொள்ளப்படும்.

624—

ஆதி திராவிடர்களுக்கு ஓட்டு வீடுகள்.

வினா எண். 745—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு ஓட்டு வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிபபு உள்ளதா?

[1992 ஏப்ரல் 28

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

625—

குடிநீர்த் திட்டங்களுக்கு பாதி கடன் பாதி மானியம் வழங்க நடவடிக்கை

வினா எண். 794—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நகராட்சியில் நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்களுக்கு முழுக் கடன்களுக்குப் பதில் பாதி கடனும், பாதி மானியமுமாக வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

நகராட்சியின் குடிநீர்த் திட்டங்களை 50% கடன், மீதமுள்ள 50%-ஐ மான்யமுமாகப் பெற்றுச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

626—

பரமக்குடி நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக மாற்றல்

வினா எண். 802—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

பரமக்குடி நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1992 ஏப்ரல் 28]

627—

வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீடு

வினா எண். 859—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

628—

வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீடு

வினா எண். 860— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்தரம் ஒன்றியம், பெருமகளூர் காமராஜர் நகர் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட்வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

[1992 ஏப்ரல் 28

629—

## வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு

வினா எண். 861—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், விளாங்குளம் வீடு இல்லாத ஆதி திராவிடர்களுக்குப் புதிய வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

630—

## வீடு இல்லாத ஆதி திராவிடர்களுக்கு வீடு

வினா எண். 862—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலக்காடு வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.



1992 ஏப்ரல் 28]

631—

## வீடு இல்லாத ஆதி திராவிடர்களுக்கு வீடு

வினா எண். 863—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பளுக்காடு வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

632—

## வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீடு

வினா எண். 864—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நெல்லியக்காடு வீடற்ற ஆதி திராவிடர் மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1992 ஏப்ரல் 28

633—

## வீடு இல்லாத ஆதி திராவிடர்களுக்கு வீடு

வினா எண். 865—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மணக்காடு வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்குப் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

634—

## வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீடு

வினா எண். 866—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் உடையநாடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்குப் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும். அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப் பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.



[1992 ஏப்ரல் 28

635—

## கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண். 1048—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறை கூட்டுக் குடிநீர் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்பொழுது நிறைவு பெறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : குழித்துறையாறு கூட்டுக் குடிநீர் திட்டம் முடிவுபெறும் தருவாயில் உள்ளது. தலைமைப் பணியிடத்தில் நீரேற்றும் மின்விசை மோட்டார் இயந்திரங்கள் (Pumpset) பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணி முடிவடைந்துள்ளது. 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணியில் குழாய் இணைப்புத் தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. நீர்பகிர்மானக் குழாய் பதிக்கும் வேலைகளில் வால்வு தொட்டிகள் கட்டும் பணி தவிர அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் அனைத்து பணிகளும் டிசம்பர் 1991-க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

636—

## பஞ்சப்பள்ளி அணையில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டம்

வினா எண். 1074—டாக்டர். வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதியில் பாப்பாரப்பட்டி பகுதிக்கு பஞ்சப்பள்ளி அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) பென்னாகரம் தொகுதியில் பாப்பாரப்பட்டி பகுதிக்கு பஞ்சப்பள்ளி அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

637—

ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு நிதி உதவி

வினா எண். 1020—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நிதி நிலைமை இல்லாததால் ஊராட்சிகளில் வளர்ச்சிப்பணிகள் தடைப் படுவதைத் தடுக்க அரசு நிதி உதவி செய்ய முன்வருமா ?

விடை—

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை நடப்பாண்டில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் என்று சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தெரு விளக்குகள், சாலை வசதிகள், குடிதண்ணீர் வசதிகளுக்கு என அரசால் ஒதுக்கப்படவுள்ளது. இது தவிர்த்து ஊராட்சிகளுக்கு வீட்டு வசதி இணைமான்யம், கைப்பம்புகள் மற்றும் விசைப் பம்புகளைப் பராமரிக்க 1991-92 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் சாலைகள் மேம்பாடு வடிகால் அமைத்தல் சிறிய குடிநீர்த் திட்டம், பம்புகள் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு திட்டத் தலைப்பின் கீழ் ரூ. 166.40 லட்சமும், தூசிபடியாச் சாலைகள் அமைத்தல், வீட்டுவரி இணை மான்யம், விவசாய நிலங்களின் மீதான வரி இணை மான்யம் ஆகிய திட்டத்தில் சேரா தலைப்பின்கீழ் ரூ. 80.80 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 247.40 லட்சங்கள் பேரூராட்சிகளுக்கு அரசு இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே, ஊராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள் தடைப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை.



1992 ஏப்ரல் 28]

638—

புதிய பேருந்து நிலையத்தில் அடிப்படை சுகாதார வசதி.

வினா எண். 1099—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணத்தில் சி.ஆர்.சி. டெப்போ அருகிலுள்ள புதிய பேருந்து நிலையத்தில், அடிப்படை சுகாதார வசதி, கழிப்பறை வசதி மற்றும் தார்சாலை வசதி போன்றவை இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) கும்பகோணத்தில் சி.ஆர்.சி. டெப்போ அருகிலுள்ள புதிய பேருந்து நிலையத்தில் அடிப்படைசுகாதார வசதி, கழிப்பறை வசதி மற்றும் தார் சாலை வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

639—

இரண்டாவது குடிநீர்த் திட்டம்.

வினா எண் 1112—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அவிநாசி, அன்னூர் ஒன்றிய மக்களுக்குப் பயன்படும் வகையில் இரண்டாவது குடிநீர்த் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டம் அவினாசி, அன்னூர் ஒன்றியங்களைச் சேர்ந்த பதினான்கு வழியோர ஊராட்சிகள் மற்றும் ஒன்பது வழியோர ஊராட்சிகள் முறையே பயன்படும் வகையில் டிசம்பர் 1992-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

**640—**

குடிநீர் வழங்க நடவடிக்கை.

வினா எண். 1118— திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாத பகுதி வகையைச் சேர்ந்த கிராமங்கள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், அவற்றுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அறவே செய்யப்படாத கிராமங்கள் 1990 மறு ஆய்வின்படி, ஆறு ஆகும்.

(ஆ) குடிநீர் வசதி அறவே இல்லாத 6 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி அளிக்க 1991-92 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. 5 குடியிருப்புகளுக்கு பணிகள் முடிவடைந்து குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு குடியிருப்பிற்கும் செப்டம்பர் மாத இறுதியில் (1991) பணிகள் நிறைவேற்றப்பட்டு, குடிநீர் வசதி அளிக்கப்படும்.

**641—**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்.

வினா எண். 1120—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் 1989—90 நிதி ஆண்டில் எத்தனை நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**50 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**



1992 ஏப்ரல் 28]

**642—**

ஏர்வாடி ஊராட்சியை நகரியமாக மாற்றும் திட்டம்.

வினா எண். 1122— திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம் ஏர்வாடி ஊராட்சியை நகரியமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

**643—**

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 1260— திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னார்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் மருதவல்லி என்ற கிராமத்திற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

வரும் நிதியாண்டில மருதவல்லி கிராமத்திற்கு மின்விசைக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**644—**

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 1262— திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் சிறுமங்கலம் என்ற கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த்திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 2

**விடை—**

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதி சிறுமங்கலம் கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த்திட்டம் ஏதும் இல்லை.

**645—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 1263— திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், நரசிங்கமங்கலம், எரப்பாவூர், வடகரை, தாழநல்லூர், கோனூர் போன்ற கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா—

**விடை—**

வரும் நிதியாண்டில், எரப்பாவூர், எரப்பாவூர் தெற்கு காலனி, எரப்பாவூர் வடக்குக் காலனி ஆகிய மூன்று குடியிருப்புகளை இணைத்து ஒரு குடிநீர்த் திட்டமும், வடகரை கிராமத்தில் ஒரு கையிறைப்பான் திட்டமும், கோனூர் காலனி கோனூர் கிழக்கு, கோனூர் மேற்கு ஆகிய மூன்று குடியிருப்புகளை இணைத்து ஒரு கூட்டுக்குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப் பட உள்ளன. நரசிங்கமங்கலம், தாழநல்லூர் ஆகிய கிராமங்களில் மின்விசை குடிநீர்த் திட்டங்கள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

**646—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண்.1264 — திரு. ச. புரட்சிமணி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், புலிகரம்பலூர், கண்டமத்தான் கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

**விடை—**

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புலிகரம்பலூர் கிராமம் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது. கண்டமத்தான் கிராமத்தில் தற்போதுள்ள குடிநீர் வசதிகள் போதுமானதால் இக்கிராமம் சேர்க்கப்படவில்லை.

**647—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண். 1265—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், புதுக்குளம், வையங்குடி, நாவலூர் போன்ற கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—**

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதி, கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதுக்குளம் கிராமம் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது. வையங்குடி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க ஆய்வு நடைபெற்று வருவதாலும், நாவலூர் கிராமத்தில் தற்போதுள்ள குடிநீர் வசதிகள் போதுமானதாக இருப்பதாலும், இக்கிராமங்கள் சேர்க்கப்படவில்லை.

**648—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1269—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதி, கழுதூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 28

விடை—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதி, கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

649—

### பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண் 1298—திரு.ச. புரட்சிமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் நகருக்கு பேருந்து நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

650—

### உரக்கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றல்.

வினா எண் 1299—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலூர் நகராட்சி கழிவுகளைச் சேகரித்து சதுப்பேரி கிராமத்தில் உள்ள உரக்கிடங்கில் கொண்டுபோய் சேர்த்து வைப்பதால் சுகாதாரக்கேடு ஏற்படுவதால் அந்த உரக்கிடங்கை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கு நகர எல்லைக்கு வெளியே சதுப்பேரி கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதாலும், விஞ்ஞான முறைப்படி உரம் தயாரிக்கப்படுவதாலும் சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, அந்த உரக்கிடங்கை மாற்றும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

651—

### குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 1338—திரு. சி. ஞானசேகரன்—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலூரில் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக உள்ள காரணத்தால் இக்குடிநீர் பஞ்சம் தீர அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

652—

### வீட்டுக்குள் தண்ணீர் புகாமல் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 1348—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அத்தாணி ஓடை மேட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் வீடுகளுக்குள் தண்ணீர் புகுவதால் மக்கள் குடியிருக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தண்ணீர் வீட்டிற்குள் புகாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அத்தாணி ஓடைமேட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளில் தண்ணீர் புகாமல் தடுக்க தடுப்புச் சுவரும், சாக்கடையும் கட்ட, தக்க நடவடிக்கை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

653—

குடிநீர் வசதியே இல்லாத கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண். 1450—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மானாமதுரை அருகில் கடமங்குளத்துக்கு வைகையிலிருந்து செல்லும் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர்க் குழாய் செல்லும் வழியில் குடிநீர் வசதியே இல்லாத கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மானாமதுரை அருகில் கடமங்குளத்துக்கு வைகையிலிருந்து செல்லும் குடிநீர்த் திட்டத்தில், குடிநீர் குழாய் செல்லும் வழியில் உள்ள 24 கிராமங்களில் 20 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 4 கிராமங்களில் 3 கிராமங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், ஒரு கிராமத்திற்கு உள்ளாட்சி ஒன்றியமும் குடிநீர் வசதி செய்து தந்துள்ளது.

654—

வினா எண். 1452—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருப்புவனத்தில் இருந்து அருப்புக்கோட்டை செல்லும் குடிநீர்த் திட்டத்தில், குடிநீர் குழாய் செல்லும் திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள குடிநீர் வசதியே இல்லாத கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

திருப்புவனம் ஒன்றியத்தில் மட்டுமல்லாது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலேயே குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள் எதுவும் இல்லை.



1992 ஏப்ரல் 28]

655—

சாலை சீர்செய்தல்.

வினா எண் 1522—திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம் கீவளூர் ஒன்றியத்தில் உள்ள ஆழியூர்-திருக்கண்ணங்குடி வழி, கீவளூர் புகை வண்டி நிலையம் வரை உள்ள சாலை சீர் கெட்டு போக்குவரத்து பாதித்திருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆழியூர்-திருக்கண்ணங்குடி (வழி), கீவளூர் புகை வண்டி நிலையம் வரை உள்ள சாலை நல்ல முறையில் உள்ளது போக்குவரத்து பாதிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

656—

கள்ளிக்கோட்டை குடிநீர்த்திட்டம்.

வினா எண். 1649—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி குடிநீருக்காக ஏற்படுத்தப்பட்ட கள்ளிக்கோட்டை குடிநீர்த் திட்டம் முடிவுறும் நிலையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

[1992 ஏப்ரல் 28

(ஆ) இத்திட்டத்திற்கான நீர்த் தலைப்பிடம் (Head works) நீர் உந்துக் குழாய்கள் (Plumping main) மற்றும் பகிர்மானக் குழாய்கள் (Distributi n mains) அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. 10 இலட்சம் லிட்டர்கள் கொள்ள ளவு கொண்ட மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் (Tamil Nadu Water Supply Construction Corporation Limited) ஒப்படைக்கப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் சுற்றுச் சுவர் (Side wall) கட்டும் பணி நடைபெற்று வருகிறது. திட்டத்தின் அனைத்துப் பணிகளும் ஜனவரி 1992-ல் முழுமையாக முடிக் கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அறிவித்துள்ளது.

657—

## பரமக்குடி தொகுதியிலுள்ள பேருந்து நிலையங்கள்.

வினா எண் 1709— டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதியிலுள்ள பேருந்து நிலையங்கள் எத்தனை ?

(ஆ) மேலும் சத்திரக்குடி, நயினார்கோவில், பார்திப னூர், எமனேஸ்வரம் ஆகிய இடங்களில் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி யில், பரமக்குடி நகராட்சியில் மட்டும் ஒரு பேருந்து நிலையம் உள்ளது.

(ஆ) பரமக்குடி தொகுதியிலுள்ள சத்திரக்குடி, நயினார் கோவில், பார்த்திபனூர், எமனேஸ்வரம் ஆகிய இடங்களில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏது மில்லை.

658—

## காவிரி ஆற்றிலிருந்து குடி நீர் வழங்க நடவடிக்கை.

வினா எண் 1789— டாக்டர் ஜி. ஆர். மாலா ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

திருச்சி வட்டம் கோ. அபிஷேகபுரம் பேரூராட்சியில் வசிக்கும் மக்களுக்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

திருச்சி மாவட்டம் கோ. அபிஷேகபுரம் பேரூராட்சிக்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் இந்த திட்டம் தற் போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

659—

## வடிகால் வசதி.

வினா எண் 1792— டாக்டர் ஜி. ஆர். மாலா ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா :

திருச்சியிலுள்ள அண்ணா நகரில் வடிகால் வசதி ஏற் படுத்த அரசு முன்வருமா ?

விடை—

திருச்சி நகராட்சி கேட்டுக் கொண்டால் அண்ணா நகரில் வடிகால் வசதி வைப்பு நிதித் திட்டமாக மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

660—

## போக்குவரத்து நெரிசலை தவிர்க்க நடவடிக்கை.

வினா எண் 1798— டாக்டர் ஜி. ஆர். மாலா ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) திருச்சி நகரின் புத்தூர் காய்கறி மார்க்கெட் முக்கிய சாலை அருகே அமைந்துள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற் படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போக்குவரத்திற்கு இடையூறு ஏற் படாமல் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாமல் சீரமைக்க மேற்படி காய்கறி மார்க்கெட்டை புத்தூர் சின்ன மைதானத்திற்கு மாற்ற முனைப்பான விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

661—

புதுக்கோட்டை நகரத்திற்கு திருச்சி காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

வினா எண். 1958—திரு. சி. சுவாமிநாதன், : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் பிரச்சினையுள்ள புதுக்கோட்டை நகரத்திற்கு திருச்சி காவிரியிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) திட்டத்தை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தக்காரர்களை நியமிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் ஜூன் 1993க்குள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு பயனுக்கு கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

662

மேட்டூர்-ஆத்தூர் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 2938—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:



1992 ஏப்ரல் 28]

மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டம் சேலம் நகராட்சியை ஒட்டிய பகுதியான அன்னதானப்பட்டி, சீலநாய்க்கன்பட்டி, சன்னியாசிக்குண்டு எருமாபாளையம் ஆகிய கிராமங்களுக்கும் விரிவாக்கப்படுமா ?

விடை—

மேட்டூர்-ஆத்தூர் குடிநீர்த்திட்டம் விரிவாக்கத்திற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

663—

நிலத்தடி நீர் வறண்டு ஆழ்துளை கிணறுகள் பயனற்றுவிட்டதை சீர்படுத்த நடவடிக்கை.

வினா எண். 2039—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் முழுவதும் சராசரியாக பெய்ய வேண்டிய மழையளவில் 75 சதவீதம் குறைவாக கடந்த மூன்று ஆண்டுகளாக பெய்வதால் நிலத்தடி நீர் வறண்டு ஆழ்துளை கிணறுகள்பயனற்று விட்டதை சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், என்ன திட்டங்கள் மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். வறட்சி நிவாரணத்திட்டம், கிராம குடிநீர்த் திட்டங்கள், நகர குடிநீர்த் திட்டங்கள், சிறப்பு குடிநீர்த் திட்டங்கள், உலக வங்கித் திட்டங்கள் முதலியன மேற்கொள்ளப்படும்.

664—

குடிநீர் வடிகால் வாரியத்தில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றுபவர்களை நிரந்தரம் செய்தல்.

வினா எண். 2176—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் நூற்றுக்கணக்கானவர்களை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் நபர்களை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

665—

இடையாத்தி ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண். 2299—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டப் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

ஐந்நூறு மக்கட்தொகைக்கு குறையாமலும் போதிய நிதி ஆதாரம் கொண்டதாகவும், வருவாய் கிராம எல்லைக்கு உட்பட்டும் உள்ள எந்தப் பகுதியையும் தனி ஊராட்சியாக அமைக்கலாம். ஆனால் இடையாத்தி ஊராட்சிக்குத் தேவையான நிதி ஆதாரம் இல்லாததால், அதனைப் பிரிக்கும் உத்தேசம் இல்லை.

666—

குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 2409—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலூகா போகலூர் ஒன்றியம். பி. இலந்தைக்குளம் கிராமத்தில் குடிநீர் இல்லாமல் மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை என்ன ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) மற்றும் (ஆ) பி. இலந்தைக்குளம் கிராமத்தில் ஒரு கையிறைப்பான் அமைக்கப்பட்டு போகலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இயங்கி வருகிறது. இக்கிராமம் பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும். மஞ்சூர்விலக்கு அருகில் உள்ள விவசாயப் பொறியியல் துறையைச் சேர்ந்த ஆழ்குழாய்க் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு இலந்தைக்குளம் மற்றும் நான்கு கிராமங்களைச் சேர்த்து ஒரு குடிநீர்த் திட்டம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

667—

பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண். 2572—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம். பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சத்திலிருந்து 16 இலட்சத்துக்குள் கடனுதவி பெற்று பேருந்து நிலையம் கட்டப்படவுள்ளது.

668—

இலவச பட்டா வைத்திருப்பவர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுத்தல்.

வினா எண். 2601—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம் பாலமடை கிராமத்தில் புல எண். 437-ல் இலவச பட்டா வைத்திருப்பவர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப் பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

669—

ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண். 2605—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழக்கரும்புளியூத்துக் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடப் பொதுமக்களுக்கு 30 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நாளில் கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால்வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

670—

பூங்கா நூலகம்.

வினா எண். 3130—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

(அ) நாகர்கோவில் நகராட்சியின் கீழ் இயங்கிவரும் பூங்கா நூலகம் (Park Library) இரவில் சமூக விரோதிகளின் புகலிடமாக இருப்பதால், அதை பொது நூலகத்துறையின் கீழ் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) நாகர்கோவில் நகராட்சியின் கீழ் இயங்கிவரும் சச்சி ஒத்தமா சர்.சி.பி. இராமசாமி ஐயர் நினைவு பூங்கா நூலகம் நல்ல முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அது இரவில் சமூக விரோதிகளின் புகலிடமாக இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

671—

முடச்சிக்காடு ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 3186— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சியை இரண்டாகப் பிரித்து கழனிக் கோட்டையை தனி ஊராட்சியாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

முடச்சிக்காடு ஊராட்சி, வீரியன்கோட்டை என்ற வருவாய்க் கிராமத்தைப் பிரிக்கும்போது உருவான சிறிய ஊராட்சி. எனவே, முடச்சிக்காடு ஊராட்சியையும் இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

672—

மணப்பாறை நகருக்கு காவிரி குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண். 3247—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை நகருக்கு காவிரி குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டப்பணி எப்போது முடிவுறும்

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டப்பணி ஜுன் 30, 1993-ல் முடிவுறும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

673—

கல்லிடைக்குறிச்சியை கோவில் பேரூராட்சியாக்கும் திட்டம்.

வினா எண் 3342—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியை "திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோவில்" பராமரிப்பின் கீழ் கோவில் பேரூராட்சியாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை

674— குடிநீர்த்திட்டம்

வினா எண் 3249— திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், துறையூர், பெரம்பலூர் ஆகிய ஊர்களுக்கு காவிரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, துறையூர் நகராட்சி மற்றும் பெரம்பலூர் ஊராட்சி ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் வடிகால் வாரியத்தால் அனுப்பப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டம் 1-4-1992-ல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.





675—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 3382—திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விளாத்திகுளம் தொகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அரசு நிறைவேற்றித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டம், சீவலப்பேரிக்கு அருகில் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு உத்தேச மதிப்பீடு ரூ. 1,529.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் ஒப்புதல் கிடைத்த பின்பு, நிர்வாக அனுமதி பெற வேண்டி அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அரசாணை கிடைத்த பின்பு திட்டம் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

676—

வீராணம் திட்டத்திற்காக வாங்கப்பட்ட சிமெண்டு குழாய்களை வேறு திட்டத்திற்குப் பயன்படுத்தல்.

வினா எண் 4074— திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வீராணம் திட்டத்திற்காக வாங்கப்பட்ட சிமெண்டு குழாய்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவற்றினை வேறு திட்டத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா:

விடை—

(அ) 10,586.

(ஆ) இக்குழாய்களை வேறு திட்டங்களுக்கு பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

677—

**பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்.**

வினா எண் 4191—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

678—

**பேரூராட்சிகளை பிரித்தல்.**

வினா எண். 4457—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நலிந்த பேரூராட்சிகளைப் பிரித்து சிறிய ஊராட்சிகளாக மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருச்சி மாவட்டம், குளித்தலை ஒன்றியத்தில் மருதூர், நங்கவரம் பேரூராட்சிகள் பிரிக்கப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

679—

**சங்கரராமநல்லூர் பேரூராட்சியை பிரித்தல்.**

வினா எண் 4713—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம், சங்கரராமநல்லூர் பேரூராட்சியை இரண்டாகப் பிரித்து இரண்டு ஊராட்சிகளாக அமைக்க அரசிடம செயற்குறிப்பு உள்ளதா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இப்பொருள் குறித்த முன்மொழி அரசுக்கு வரவில்லை. பொது மக்களிடமிருந்தும் கோரிக்கை எதுவும் வரவில்லை. எனவே இது குறித்து அரசிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

680—

**புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.**

வினா எண். 4798—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேருந்து நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆம். தற்போதைய பேருந்து நிலையத்தில் போதுமான வசதியில்லாததால், அனைத்து வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

681—

**மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.**

வினா எண். 5400—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மங்களூர் ஒன்றியம், கொட்டாரம் கிராமத்தில் தண்ணீருக்காக சுமார் 6 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருப்பதால் அக்கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியோடு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 ஏப்ரல் 28

**விடை—**

ஆம். மங்களூர் ஒன்றியம், கொட்டாரம் கிராமத்திற்கு குடிநீர் வழங்க 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 1992ம் ஆண்டுக்குள், திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

682—

**நிரந்தர குடி தண்ணீர் வசதி செய்தல்.**

வினா எண். 5470—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மங்களூர் தொகுதி, நிதிநத்தம் கிராம மக்கள் தண்ணீர் எடுக்க 3 அல்லது 4 கி.மீ. செல்ல வேண்டி இருப்பதால் அந்த கிராமத்திற்கு நிரந்தர குடி தண்ணீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

மங்களூர் தொகுதியில் உள்ள நிதிநத்தம் கிராமத்தில், வறட்சியின் காரணமாக, திறந்தவெளிக் கிணற்றை ஆதாரமாகக் கொண்ட, 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் இயங்க, போதிய நீர்வரத்து இல்லை. இக்கிராமத்திற்கு கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் போது, பிரதான குழாயிலிருந்து கிளைக் குழாய் மூலம் நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

683—

**உலக வங்கி உதவியுடன் மணப்பாறை நகருக்கு குடிநீர்த் திட்டம்.**

வினா எண். 6679—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணப்பாறை நகருக்கு உலக வங்கி உதவியுடன் காவிரி நீர் கொண்டு செல்லக்கூடிய குடிநீர் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும்?



1992 ஏப்ரல் 28]

(ஆ) அப்படி முடிவடையும் போது எத்தனை கிராமங்கள் பயனடையும்?

**விடை—**

(அ) இத்திட்டப் பணிகள் 1993 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு பெற்று பயனுக்குக் கொண்டு வரும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன

(ஆ) இத்திட்டம் முடிவடையும்பொழுது மணப்பாறை நகராட்சி மற்றும் 59 வழியோர கிராமங்கள் பயனடையும்.

684—

**சாலை ஓரங்களில் மாடுகளை வெட்டி விற்பதை தடுக்க நடவடிக்கை.**

வினா எண். 9322—செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல் பகுதியில் உரிமம் இல்லாமல் சாலை ஓரங்களில் மாடுகளை வெட்டி விற்பதை அரசு தடை செய்ய முன் வருமா?

**விடை—**

திண்டுக்கல் பகுதியில் உரிமம் இல்லாமல் சாலை ஓரங்களில் மாடுகளை வெட்டி விற்பதை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

685—

**நெல் சேமிப்புகிடங்கு கட்ட நடவடிக்கை.**

வினா எண். 134—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் வட்டம், மாத்தூர் மேற்கு ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் சேமிப்பு கிடங்கு கட்டுமான பணி தொடங்கி பல வருடங்கள் ஆகியும் கட்டுமான வேலை நடைபெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) தஞ்சாவூர் வட்டம், மாத்தூரில் நெல் சேமிப்பு கிடங்கு கட்டும் பணி ஏதும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் துவக்கவில்லை. ஏன் எனில், தஞ்சாவூர் வட்டத்தில், நீலகிரி தெற்கு தோட்டத்தில் ஏற்கனவே கிடங்கு ஒன்று உள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

686—

கோபிச் செட்டிபாளையம் கூட்டுறவு பண்டக சாலை.

வினா எண். 590—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப்பாளையம் கூட்டுறவு பண்டகசாலையில் உணவுப் பொருட்கள் கையிருப்பு இல்லாமல் தனியார் கடையில் பில்களை மட்டும் வாங்கிக் கொண்டு அதன் மீது 10 சதவீதம் லாபம் வைத்து பில் மட்டும் அரசினர் விடுதிகளுக்கு (ஆ.ந.) போட்டுக் கொடுத்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேற்குறித்த பண்டகசாலையில் கடைப் பிடிக்கப்பட்ட நடைமுறை அரசுக்குத் தெரியவந்த உடன் அந்த முறை நிறுத்தப்பட்டு விட்டது.

687—

உணவுப்பொருள் சேமிப்பு கிடங்கு கட்டும் திட்டம்.

வினா எண். 658—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார்கோவில் பகுதியில் உணவுப் பொருள் சேமிப்பு கிடங்கு கட்டும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?





விடை—

இல்லை.

688—

நாச்சியார்கோவிலில் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அமைத்தல்.

வினா எண். 663—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார்கோவிலில் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.

689—

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள செயலாளர்களுக்கு அரசு சம்பளம் வழங்கல்

வினா எண். 1688—டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

கூட்டுறவு சங்கங்களில் உள்ள செயலாளர்களுக்கு அரசு சம்பளம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

690—

இராமநாதபுரம் மாவட்டத்தில் விஞ்ஞான கிடங்குக் கட்டிடங்கள்.

வினா எண். 1689—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு எத்தனை விஞ்ஞான கிடங்குக் (Scientific godowns) கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) பரமக்குடியில் எந்த ஆண்டு கட்டப்படும்?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியில் 3,000 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டுள்ளது. மேலும் திருவாடானையில் 1,500 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) பரமக்குடியில் 1,500 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்ட மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு அனுமதி அளித்துள்ளது. மேற்படி கிடங்கு கட்டுவதற்கு உரப்புளி கிராமத்தில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

691—

பாளத்தளி கிராம அங்காடி.

வினா எண். 2335—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாளத்தளி கிராம அங்காடியை முழுநேரமும் இயங்குவதற்கு ஆவன செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாளத்தளி கிராம அங்காடியை முழுநேர அங்காடி ஆக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

692—

நிரந்தர கொள்முதல் நிலையம் மற்றும் சேமிப்புக்கிடங்கு அமைத்தல்.

வினா எண். 2611—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கும்பகோணம் தாலுகா, திருப்புறம்பியம் ஊராட்சி மன்றத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் புதிதாக நிரந்தர கொள்முதல் நிலையம் மற்றும் சேமிப்புக்கிடங்கு அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

693—

கீழத்தோட்டத்திற்கு தனியாக அமுதங்காடி.

வினா எண் 2658— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் இராசாமடம் ஊராட்சியை சேர்ந்த கீழத்தோட்டத்திற்கு தனியாக அமுதங்காடி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

694—

நடுவிக்காட்டில் அமுதம் அங்காடி அமைத்தல்.

வினா எண். 2661—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சியை சேர்ந்த நடுவிக்காட்டில் ஒரு அமுதம் அங்காடி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை

இல்லை.

695—

கீரிப்பாறையில் கூட்டுறவு வங்கியின் கிளை அமைத்தல்.

வினா எண். 3115—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

கன்னியாகுமரியில் மலைவாழ் மக்களின் ஆதிதிராவிட மக்கள் வாழும் பகுதியான கீரிப்பாறையில் கூட்டுறவு வங்கியின் கிளை திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

இல்லை.

696—

பச்சை வண்ண அட்டை முறையில் விவசாயிகளுக்கு கடன்.

வினா எண். 4437—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் குறுகியகால பயிர் கடன் முறையை மாற்றி (Green card) முறையில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

பச்சை வண்ண அட்டை (Green card) வழங்கி பயிர் கடன் உடனடியாக வழங்கும் திட்டம் (Instant Credit Delivery system) ஏற்கனவே அமலில் உள்ளது.

697—

குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசி.

வினா எண். 5633—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசிக்கு மானியம் கொடுக்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

698—

கீழக்கலங்கல் கிராமத்தில் விவசாயக் கூட்டுறவு சங்கம்.

வினா எண். 5114—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் கீழக்கலங்கல் கிராமத்தில் விவசாயக் கூட்டுறவு சங்கம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் உள்ள கீழக்கலங்கல் கிராமம், இப்போது ஊத்துமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டில் அடங்கி (Area of operation) உள்ளது. எனவே, அக்கிராம மக்கள் அந்த வங்கியின் மூலம் பயனடைந்து வருகின்றனர். ஆகையால் தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

699—

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தனி வர்த்தகர்களுக்கு வழங்குதல்.

வினா எண். 5368—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்குவதை (ரேசன் கார்டுகளுக்கு வழங்குவதை) தனி வர்த்தகர்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்தனவா ?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசின் நிலை என்ன ?

விடை—

(அ) அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்குவதை தனி வர்த்தகர்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வேலூர் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த தக்க நடவடிக்கை வேலூர் வருவாய்க் கோட்ட அலுவலரால் எடுக்கப்பட்டு வருகிறது. நிலங்கள் தயார் ஆன பிறகு, தொழிலாளர் ஆணையரின் பரிந்துரை பெறப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுடன் தகுதிவாய்ந்த பீடித் தொழிலாளர்களுக்கு ஹட்கோவிடமிருந்து கடன் வசதியும், மத்திய அரசிடமிருந்து உதவித் தொகையும் பெற்று வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

705—

பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்.

வினா எண். 1657—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் மகளிருக்கென்று தனிப் பயிற்சிப் பிரிவு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மகளிருக்கென தனிப்பயிற்சிப் பிரிவு அமைக்க செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

706—

நெசவாளர்களுக்கான கூலி நிர்ணயச் சட்டம்.

வினா எண், 1732—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கான கூலி நிர்ணயச் சட்டம் அமுலில் உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) அதைத் திருத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) நெசவாளர்களுக்கான கூலி நிர்ணயச் சட்டம் அமுலில் உள்ளது.

(ஆ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு 1989 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதியங்களை மாற்றி அமைக்க ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தறி பட்டு நெசவாளர்களுக்கு 1983-ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை அறிவிக்கை (Notification Method) முறையின் மூலம் மாற்றியமைப்பது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 6-12-1988 ஆம் நாளிட்ட அரசாணை எண். 2677 மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் தற்போது அமுலில் இருந்து வருகின்றன. இவைகளை அறிவிக்கை முறை மூலம் மறு நிர்ணயம் செய்யலாம் என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

707—

இடையாத்தி கிழக்கு ஆதிதிராவிடர் தெருவில் ஐ.டி.ஐ. தொழிற்கூடம்.

வினா எண் 2352—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கிழக்கு ஆதிதிராவிடர் தெருவில் ஒரு ஐ.டி.ஐ. தொழிற்கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 2

708—

**தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்கு பணிக்கேற்ற ஊதியம்**

வினா எண் 3384—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில், தீப்பெட்டி தொழிற் சாலைகளில் இரவு பகலாக பணியாற்றும் பெண்களுக்கு பணிக்கேற்ற ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா

விடை—

விளாத்திகுளம் தொகுதியில் உள்ள 6 தீப்பெட்டி தொழிற்சாலைகளில் 997 பெண் தொழிலாளர்கள் தினமு 8 மணி நேரம் பணியாற்றுகின்றனர். இத்தொழிற்சாலைகளி பெண்கள் மாலை 6 மணிக்கு மேல் பணியாற்றவில்லை அனைவருக்கும் 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின்படி அத்தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது

709—

**வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பெயர்களைப் பதிவு செய்து, காத்திருப்போர் எண்ணிக்கை.**

வினா எண் 3418—திரு. ஆர். சுப்புரத்தினம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு நிறுவனங்களில் தங்கள் பெயர் களைப் பதிவு செய்து கொண்டு, வேலைக்காக காத்திரு போர்களின் மொத்த எண்ணிக்கை 1-4-1991 தேதியி எவ்வளவு ?

(ஆ) இதில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக காத்திரு போர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) 32,44,202.

(ஆ) 19,29,081.



1992 ஏப்ரல் 28]

710—

**கே. சி. பி. தொழிற்சாலையின் கதவடைப்புப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை.**

வினா எண். 3539 டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ;

திருவொற்றியூர் பகுதியிலுள்ள கே. சி. பி. தொழிற் சாலை கடந்த 10 மாதங்களாக கதவடைப்புக்கு உள்ளாக்கப் பட்டு, 520 தொழிலாளர் குடும்பங்கள் பாதிகப்பட்டுள்ளதால் இப்பிரச்சினையைத் தீர்க்க அரசு வழிவகை செய்யுமா ?

விடை—

கே. சி. பி. நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்துத்தொழிலாளர் ஆணையர் இரு தரப் பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் பயனாக தற்போது அனைத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத் தைக் கைவிட்டு 7—10—1991 முதல் படிப்படியாக பணிக்குத் திரும்பி, நிறுவனம் தற்போது சுமூகமாக இயங்கி வருகிறது.

711—

**பஞ்சாலைத் தொழிலாளர்கட்கு 10% பிராவிடண்டு பண்ட் பிடித்தம் செய்ய நடவடிக்கை.**

வினா எண். 3980—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா :

பஞ்சாலை தொழிலாளர்கட்கு மற்ற துறை தொழிலாளர் கள் போன்று 10 சதவீதம் பிராவிடண்டு பண்ட் பிடித்தம் செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய மாநில அரசு முன்வருமா ;

விடை—

வருங்கால வைப்பு நிதிமண்டல 80ஆவது கூட்டத் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, மற்ற தொழிலாளர்களைப் போன்ற நெசவுத் துறை தொழிலாளர்களும் உயர் விகிதத்தில் (Enhanced rate) வைப்பு நிதி பங்கினை செலுத்த வேண்டு மென்ற செயற் குறிப்பினை பொருப்பாட்சிக் குழு முன்பும் (Central Board of Trustees) மைய அரசின் முன்பும் வைக்கும்படி

[1992 ஏப்ரல் 28

மைய வருங்கால வைப்பு நிதி ஆணையர் இவ்வரசால் கேட்டுக் கொள்ளப்பட்டார். அச்செயற் குறிப்பினை மைய தொழிலாளர் நல அமைச்சகம், மைய நெசவு அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து தற்போது பஞ்சாலைத் தொழில்களுக்கு 10 சதவீதம் (விழுக்காடு) விகிதத்தில் வைப்பு நிதி தொகை உயர்த்தத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளது.

712—

**மேட்டூர் வட்டத்தில் தொழிற்கல்விக் கூடம்**

வினா எண். 4012 திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

மேட்டூர் வட்டத்தில் ஒரு தொழிற்கல்விக்கூடம் உருவாக்கப்பட வேண்டும் என்பதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறதா ?

விடை:

மேட்டூர் வட்டத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

713—

**தங்க நகை செய்யும் தொழிலாளர்கள்**

வினா எண். 4056 திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோயமுத்தூரில் தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் அனைத்து உரிமைகளும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ;

(ஆ) நகைத் தொழிலாளர்கள் தொழிற் பயிற்சி பெற பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை

(அ) பொதுவாக ஸ்தாபன ரீதியில் தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்கு 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் பொருந்தும். தொழிலாளர்களின் எண்



1992 ஏப்ரல் 28]

ணிக்கை, பயன்படுத்தப்படும் மின்சக்தி ஆகியவைகளைப் பொறுத்து, 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (Factories Act ) அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்கூறிய இரு சட்டங்களின் மூலமாக தொழிலாளர்களின் வேலை நிபந்தனைகள், வேலைநாட்களுக்கான சம்பளம், வேலை பாதுகாப்பு, வேலை நேரம் ஆகியவைகள் தொழிலாளர் துணை ஆய்வாளர்களாலும் தொழிற்சாலை ஆய்வாளர்களாலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. எந்த நிறுவனங்களுக்கும் உட்படாத அமைப்பு ரீதியில் இல்லாத தங்க நகை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் அரசினால் 16—2—1990இல் மாற்றியமைக்கப்பட்டு அவைகள் அமுலில் உள்ளன.

(ஆ) இல்லை.

714—

**இராஜபாளையம் நகரத்தில் தொழிற் பயிற்சிக் கூடம்**

வினா எண். 4070—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

(அ) இராஜபாளையம் நகரத்தில் ஒரு தொழிற்பயிற்சிக் கூடம் (ஐ.டி.ஐ) அமைக்க அரசு ஆவன செய்யுமா ;

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை

(அ) இராஜபாளையத்தில் புதிதாக அரசினர் தொழிற் பயிற்சி நிலயம்அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

715—

**உடல் ஊனமுற்ற இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்களை நியமனம் செய்தல்.**

வினா எண். 4389—திருமதி ப. சரஸ்வதி : மற்றும் திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் காலியிடங்களில் உடல் ஊனமில்லாதவர்கல் பணியமர்த்தப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடல் ஊனமுற்றோரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இவ்வலுவலகங்களில், உடல் ஊனமுற்ற இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர்களை நியமனம் செய்ய, தேர்வாணையத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**716—**

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்ட உதவித் தொகை நிறுத்தப்பட்டதை மீண்டும் வழங்க நடவடிக்கை.**

வினா எண். 4446—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) '' புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் வேலைவாய்ப்பு தேடித்தரும் அலுவலகங்களில் பதிவு செய்தும் 5 ஆண்டுகளுக்கு மேல் வேலைவாய்ப்பு கிடைக்காதோருக்கு 3 நிலைகளில் ரூ. 50, ரூ. 75, ரூ. 100 மாதந்தோறும் அரசு அளித்த உதவித் தொகை நிறுத்தப்பட்டதை மீண்டும் அரசு பரிசீலித்து அந்த உதவித் தொகையை வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும் ?

விடை—

(அ) வேலைவாய்ப்பு கிடைக்காதோருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1—7—1980-இல் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**717—**

**சேலம் அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளியை பொறியியற் கல்லூரி வளாகத்திற்கு மாற்ற நடவடிக்கை.**

வினா எண். 4614—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) சேலம் அரசினர் மகளிர் கல்லூரி வசதிக்காக சேலம் அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளியை (ஐ.டி.ஐ.) அரசினர் பொறியியற் கல்லூரி வளாகத்திற்கு மாற்றப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை, சேலம் அரசினர் பொறியியற் கல்லூரி வளாகத்திற்கு மாற்றுவதற்கான கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**718—**

**புதுக்கோட்டை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.**

வினா எண். 4620—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்குரிய வேலைவாய்ப்பு அலுவலகம் தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டு வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை ஏதும் தற்போது இல்லை.

**719—**

**விவேகானந்தா கேந்திர ஊழியர்களுக்கு கூடுதல் ஊதியம் வழங்க நடவடிக்கை.**

வினா எண். 4679—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) கன்னியாகுமரி மாவட்ட விவேகானந்தா கேந்திர ஊழியர்கள் கூடுதல் ஊதியம் கேட்டு வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்ட விவேகானந்தா ராக் மெமோரியல் மற்றும் விவேகானந்தா கேந்திரா எம்ப்ளாயிஸ் யூனியன் எழுப்பிய பொதுக் கோரிக்கைகள் சம்பந்தமாக நாகர்கோவில் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) அவர்கள் நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி இரு தரப்பினரிடையே ஒரு இணக்கமான முடிவை ஏற்படுத்தியுள்ளார்.

720—

மகளிருக்கென தனி தொழிற்பயிற்சி மையம் அமைத்தல்.

வினா எண். 4758—திருமதி. கற்பகம் இளங்கோ : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

காரைக்குடி தொகுதியில் மகளிருக்கென தனி தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

காரைக்குடி தொகுதியில் மகளிருக்கென தனியாக தொழிற் பயிற்சி நி~லயம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

721—

மடத்துக்குளத்தில் மாநில தொழிலாளர் ஈட்டுறுதி காப்பக மருத்துவமனை அமைத்தல்.

வினா எண். 4776—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா



1992 ஏப்ரல் 28]

உடுமலை வட்டம், மடத்துக்குளத்தில் (E.S.I. Hospital) மாநில தொழிலாளர் ஈட்டுறுதி காப்பக மருத்துவமனை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

உடுமலை வட்டம், மடத்துக்குளத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

722—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நேர்காணல் கடிதங்கள் அனுப்புவதில் முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 5070—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைவாய்ப்புக் குறித்த நேர்காணல் கடிதங்கள் அனுப்புவதில் முறைகேடுகள் நடைபெறுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) அரசிடம் தகவல் ஏதுமில்லை.

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடு குறித்து பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை கவனிப்பதற்காக சிறப்புக் குழு (Special Squad ) ஒன்றை அரசு அமைத்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகத்தைச் சார்ந்த ஒரு துணை இயக்குநரும் மற்றும் ஒரு உதவி இயக்குநரும் சிறப்புக் குழுவின் பணிகளை கவனித்து வருகின்றனர்.

723—

தென்னகக் கட்டுமானத் தொழிற்சாலையில் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்தல்.

வினா எண். 5074—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) பட்டாபிராமிலுள்ள அரசு நிறுவனமான தென்னகக் கட்டுமானத் தொழிற்சாலையில் சுமார் 5 வருடங்களாகத் தற்காலிகத் தொழிலாளர்கள் பணிபுரிவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களது பணியினை நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இந்த நிறுவனத்தில் உள்ள தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளரால் ஆணையிடப்பட்டது. அதனை எதிர்த்து நிர்வாகம் மேல் முறையீடு செய்ததில், உயர்நீதிமன்றம் தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வாளரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை நிறுத்தி வைத்து (Stay Order) ஆணையிட்டுள்ளது.

724—

திண்டுக்கல் பகுதியில் தொழிற்பயிற்சி மையம் அமைத்தல்.

வினா எண் 5449— திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தோல் பொருள்கள் அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் ஈடுபடுவோருக்கு தொழிற் பயிற்சி தருவதற்காக அரசு உதவியுடன் சென்னையில் பயிற்சி மையம் ஒன்று இயங்குகிறதா ?

(ஆ) திண்டுக்கல் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் தோல் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் முனைவர்கள் பெருமளவில் இருப்பதால் அங்கும் ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) தோல் பொருள் சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவு ஏதும் சென்னையில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடத்தப்படவில்லை.

(ஆ) தற்போது திண்டுக்கல்லில் ஏற்கெனவே உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தோல் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு தொழிற் பிரிவுகள் இயங்கி வருகின்றன



1992 ஏப்ரல் 28]

இருக்கைகள்.

| | | |
|---|---|---|
| தோல் பொருள் உற்பத்தியாளர் | .. | 16 |
| காலணி உற்பத்தியாளர் | .. .. | 16 |

திண்டுக்கல்லில் இதற்கென தனியே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

725—

மாட்டு வண்டித் தொழிலாளர்கள்.

வினா எண். 5959—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாட்டுவண்டித் தொழிலாளர்கள் அரசுக்கு ஏதேனும் முறையீடு செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அவற்றின் மீது அரசின் முடிவு என்ன ?

விடை—

விவர அறிக்கை தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) திண்டுக்கல் கோபால் சமுத்திரம வடகரை, எம். ஜி. ஆர். நகரிலுள்ள மாட்டுவண்டி தொழிலாளர்களின் கூட்டமைப்பு கடந்த 23—1—1990 அன்று அன்றைய முதலமைச்சர் அவர்களிடம் 21 கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினை வழங்கியது. இம்மனுவில் 5 கோரிக்கைகள் மட்டும்

[1992 ஏப்ரல் 28

தொழிலாளர் துறையைச் சார்ந்தவை. ஏனைய கோரிக்கைகளின் பகுதி நகல்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்துறையைச் சார்ந்த 5 கோரிக்கைகள் மற்றும் அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை வருமாறு :—

கோரிக்கை எண். 1 : அரசு மாட்டுவண்டித் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனி வாரியம் அமைக்க வேண்டும்.

சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வாரியம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தவிர, மேற்குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைத்தால் அரசுக்கு மிகுந்த செலவினம் ஏற்படும். மேலும் தனி வாரியம் அமைப்பதற்கான அவசரத் தேவை இருப்பதாகத் தோன்றவில்லை.

கோரிக்கை எண் 2 : மாட்டுவண்டித் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

தொழிலாளர் பட்டியல் என்று தனியாக எதுவும் அரசால் பராமரிக்கப்படவில்லை. மாட்டுவண்டித் தொழிலாளர்கள் தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள் எதன் கீழும் வரமாட்டார்கள். இவர்களில் மாட்டுவண்டி வைத்து வாடகைக்கு பணி செய்பவர்களும் இருக்கிறார்கள். தங்கள் வேலைகளுக்கு மாட்டுவண்டி வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். மாட்டு வண்டி வைத்து தானே பணி செய்பவர்களும் இருக்கிறார்கள். சொந்த மாட்டு வண்டி வைத்து சம்பள ஆள்வைத்து வேலை வாங்குபவர்களும் இருக்கிறார்கள். இந்நிலையில் அவர்களுக்கெனத் தனிச் சட்டம் இயற்றுவதோ அல்லது இருக்கிற சட்டங்களில் ''தொழிலாளர்'' என்ற சொல் விளக்கத்தில் அவர்களைச் சேர்ப்பதோ இயலாது என அரசு கருதுகிறது.

கோரிக்கை எண் 3 : தொழிலின்போது விபத்து நேரிட்டு இறந்தால் நிவாரணமாக ரூ. 15,000 உடனடியாக கொடுக்கப்பட வேண்டும்.

மற்றும்

கோரிக்கை எண். 4 : விபத்துக்குள்ளாகி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புனர்வாழ்வும், மறுவாழ்வும் அளிக்க அரசு திட்டம் தீட்ட வேண்டும்.



1992 ஏப்ரல் 28]

விபத்து உதவித் திட்டம் மாட்டுவண்டித் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் விலங்குகள் இ[illegible] செல்லும் வண்டியோட்டிகள் விபத்தில் இறந்தாலோ அல்லது இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் இழந்தாலோ/செயலற்றுப்போனாலோ அல்லது இரண்டு கண்களை இழந்தாலோ அல்லது ஒரு கால் மற்றும் ஒரு கை முழுமையாக செயலற்றுப் போனாலோ அல்லது மின் அதிர்ச்சியில் இறந்தாலோ ரூ. 10,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் பெற வழி வகை உள்ளது. மேலும் விபத்துககளில் ஏற்பட்ட இழப்பிற்கு தகுந்தாற்போல் ரூ. 7,000 வரை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பெற வழிவகை உள்ளது.

கோரிக்கை எண் 5 : மாட்டுவண்டித் தொழிலாளர்களுக்கு 50 வயதுக்கு மேல் பணி செய்ய இயலாது. 50 வயதான அனைத்து மாட்டுவண்டித் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

அமைப்பு ரீதியிலுள்ள (Organised) தொழிலாளர்களுக்குக் கூட ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. மாட்டுவண்டித் தொழிலாளர் அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர்களாவார்கள் ( Unorganised Labour ). எனவே, 50 வயதுக்கு மேற்பட்ட மாட்டுவண்டித் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்க தற்போது நடைமுறைச் சாத்தியம் இல்லை. எனினும், முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தின் கீழும், முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டத்தின் கீழும், மற்றும் முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டத்தின் கீழும் மாட்டுவண்டித் தொழிலாளர்களும் ஆதரவற்றவர்களும், உற்றார் உறவினர்கள் இல்லாமல் இருக்கும் பட்சத்தில் 65 வயது உள்ளவராக இருப்பின் உதவித் தொகை பெற வாய்ப்புள்ளது.

726—

## Unorganised Labour ஆக பணிபுரியும் ஏழைத் தொழிலாளர்களுக்கு காப்புறுதி மற்றும் ஓய்வு கால நிதியுதவி.

வினா எண் 5987—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணிப்பாதுகாப்பு சட்ட ரீதியாக பெற முடியாமல் Unorganised Labour ஆக பணிபுரியும் ஏழைத் தொழிலாளர் நலன் கருதி 1984இல் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட

[1992 ஏப்ரல் 28

தமிழக அரசின் ஒழுங்கு படுத்தப்படாத துறைகளின் பணியாளர் காப்புறுதி மற்றும் ஓய்வு கால நிதியுதவித் திட்டத்தை மீண்டும் அமல் நடத்த அரசு பரிசீலிக்க முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அத்திட்டம் எப்போது செயல் படுத்த அரசு உத்தேசித்துள்ளது ?

விடை—

(அ) அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கென கொண்டு வரப்பட்ட சிறப்புத் திட்டத்தை மீண்டும் பரிசீலிக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

727—

ஆலடிக்காட்டில் தொழிற்பயிற்சி மையம்.

வினா எண் 6476—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி ஆலடிக்காட்டில் தொழிற்பயிற்சி மையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

728—

போளூரில் தொழிற்பயிற்சி கூடம் அமைத்தல்.

வினா எண் 6819—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட மையப் பகுதியான போளூரில் அரசின் தொழிற் பயிற்சிக்கூடம் (ஐ.டி.ஐ.) அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

729—

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் குறிப்பிட்ட பணிக்கு பதிவு செய்தவர்களுக்கு, வேறு துறைகளிலும் தேர்வு செய்தல்.

வினா எண். 8068—திரு. வே. பழனிசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் குறிப்பிட்ட பணிக்கு பதிவு செய்தவர்களுக்கு அத்துறையில் வேலை வாய்ப்பு வந்தால் மட்டும் அனுப்புவதல்லாமல் வேறு துறையில் இணையான வேலை வாய்ப்பு வந்தாலும் அவர்களை தேர்வு செய்து அனுப்ப அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் குறிப்பிட்ட பணிக்குப் பதிவு செய்த மனுதாரர்களுக்கு அத்துறையில் மட்டுமல்லாமல், தகுதியான வேலை வாய்ப்புகள் பிற அரசுத் துறைகளில் இருந்தும் தெரிவிக்கப்படும்போது விதிமுறைகளின்படி வேலை வாய்ப்பு அலுவலகங்களால் வேலையளிப்பவர்களுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

730—

வால்பாறையில் தொழிலாளர் நல மையம் அமைத்தல்.

வினா எண். 8076—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒசூர், ராஜபாளையம், கோவை ஆகிய நகரங்களில் அமைக்கப்படவிருக்கின்ற தொழிலாளர் நல மையங்களைப் போல் வால்பாறையிலும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

(1992 ஏப்ரல் 82

விடை—

(அ) ஓசூர், ராஜபாளையம், கோவை மற்றும் வால்பாறை ஆகிய நகரங்களில் ஏற்கனவே தொழிலாளர் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

731—

புவனகிரி தொகுதியில் சென்ட் தொழிற்சாலை..

வினா எண். 346—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் மல்லிகைச் செடி அதிகமாகப் பயிர் செய்யப்படுவதால் அங்கு சென்ட் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

732—

விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் டிராக்டர்.

வினா எண். 500—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் டிராக்டரை கொடுத்து உழவுத் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள வாடகைத் தொகையினை குறைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.



1992 ஏப்ரல் 28]

733—

அவிநாசியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்.

வினா எண் 1240—டாக்டர் எம். சீனியம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

''அவிநாசியில் விவசாயப் பெருமக்களுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படுமா ?''

விடை—

''அவிநாசியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1—12—1973 முதல் செயல்பட்டு வருகின்றது''.

734—

உரக்கிடங்கு அமைத்தல்.

வினா எண் 1690—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உரக்கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உரக்கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் வேளாண்மைத் துறை மூலம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

735—

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 2087—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

[1992 ஏப்ரல் 28

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

736—

வேளாண்மை பொறியியல் பட்ட தாரிகளுக்கு வேலைவாய்ப்பு

வினா எண். 3132—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள 400—க்கும் அதிகமான வேளாண்மைப் பொறியியல் B.E. Agri. பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தமிழ்நாட்டிலுள்ள வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

737—

விளாத்திகுளம் தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

வினா எண் 3383—திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் தொகுதியில் மல்லி (தனியா) அதிகமாக பயிரிடப்படுவதால் இதற்கு உரிய விலை விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு ஒழுங்குமுறை கூட்டுறவு விற்பனைக் கூடம் அமைக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்க முடியும்?



1992 ஏப்ரல் 28]

விடை—

விளாத்திகுளத்தில் 5—1—1976 முதல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்பட்டு வருகிறது. பருத்தி, மிளகாய் வற்றல், உளுந்து, நிலக்கடலை போன்றவை இங்கு அறிக்கையிடப்பட்ட விளைபொருட்கள். இங்கு மல்லி அறிக்கையிடப்படாத விளைபொருளாக இருந்தாலும், விற்பனைக்கு வந்தால் சேவையின் அடிப்படையில், நல்ல உயர்ந்த விலைக்கு விற்றுத் தரப்படுகிறது.

738—

வேளாண்மை விளைபொருள் விலை நிர்ணயக் கமிஷன் அமைத்தல்.

வினா எண் 3432—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாநில அளவில் ''வேளாண்மை விளைபொருள் விலை நிர்ணயக் கமிஷன்'' ஒன்றுஅமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

739—

இடுபொருள் வேளாண்மை கிடங்கு அமைத்தல்.

வினா எண் 3816—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனத்தில் இடுபொருள் வேளாண்மை கிடங்கு அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

740—

விவசாய பொருட்கள் மார்க்கட்டிங் கமிட்டி மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை.

வினா எண் 4131—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகள், விவசாயப் பொருட்களை அரசு மார்க்கட்டிங் கமிட்டிக்கு விற்பனை செய்யாமல், தனியார் மண்டி கடைகளுக்கு விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுத்து மார்க்கட்டிங் கமிட்டி மூலம் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை —

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகளின் விளைபொருட்களை செம்மையாகவும் முழுமையாகவும், ஒழுங்குமுறை விற்பனைக் கடைகள் மூலமாக விற்க, தேவையான அனைத்து நடவடிக்கையும் எடுக்குமாறு வேளாண்மை விற்பனை இயக்குநருக்கு உத்தரவுகள் இடப்பட்டுள்ளன.

741 —

துணை விற்பனை மையங்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் செயல்பட நடவடிக்கை.

வினா எண் 4336 —திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —



1992 ஏப்ரல் 28]

ஆலங்குடி தொகுதியில் உள்ள ரெகுநாதபுரம், மழையூர், வெட்டன் விடுதி போன்ற இடங்களில் வேளாண்மைத் துறையின் சார்பில் துணை விற்பனை மையங்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் செயல்பட அரசு வழிவகை செய்யுமா?

விடை —

ஆலங்குடியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சொந்த கட்டிடத்தில் வாரத்தில் ஐந்து நாட்கள் செயல்பட்டு வருகிறது. ரெகுநாதபுரம், மழையூர், வெட்டன் விடுதியில் உள்ள விவசாயிகள் ஆலங்குடி விற்பனைக் கூடத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். வரத்துக்கள் மிகவும் குறைவாதலால் புதிதாக துணை விற்பனைக் கூடங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

742—

காரைக்குடியில் வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மையம் அமைத்தல்.

வினா எண் 4415—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

காரைக்குடியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை

743—

காரைக்குடியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 4420—திருமதி கற்பகம் இளங்கோ ; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

காரைக்குடியில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

தற்போது உத்தேசம் இல்லை.

[1992 ஏப்ரல் 28

744—

ஊரக சாலைகள் மேம்படுத்தும் திட்டம் காமராசர் மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துதல்.

வினா எண் 4525—திருமதி வி.ஜி. மணிமேகலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) Roads to Marketing Centre Scheme under World Bank Agriculture Scheme-ஐ காமராசர் மாவட்டத்திற்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை—

(அ) உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தை காமராசர் மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

745—

மழை நீரை தேக்க கசிவு நீர்க்குட்டை அமைத்தல்.

வினா எண் 4570—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி பைத்தூரிலிருந்து ஆத்தூர் நோக்கி வரும் கோதையாற்றில் வரும் மழை நீரை தேக்க ஒரு கசிவு நீர்க்குட்டையும், அரசநத்தம் ஊராட்சி ஊராண்டிவலசு தலையூத்தில் ஒரு கசிவு நீர்க்குட்டையும் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோதையாற்றில் கசிவு நீர்க்குட்டை வேளாண்மைப் பொறியியல் துறையால் அமைக்கவும், அரசநத்தம் ஊராட்சி, ஊராண்டிவலசு தலையூத்தில் கசிவு நீர்க்குட்டை அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.



1992 ஏப்ரல் 28]

746—

கூட்டுறவு முறையில் ஆழ்குழாய் அமைத்தல்.

வினா எண் 708—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆலங்குடி மிகவும் வறட்சியாகி நிலத்தடி நீர் குறைந்து கொண்டே போய்க்கொண்டிருப்பதால் விவசாயத்தைப் பெருக்கும் வகையில் கூட்டுறவு முறையில் ஆழ்குழாய் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

வேளாண்மைப் பொறியியல் துறையைப் பொறுத்தமட்டில் ஆலங்குடி பகுதியில் கூட்டுறவு முறையில் ஆழ்குழாய் அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

747—

விளை நிலங்களை தனியார் மனையிடங்களாக விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 4759—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளை நிலங்களை தனியார் மனையிடங்களாக விற்பதால் விவசாயம் செய்யும் நிலப்பரப்பு குறைவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

[1992 ஏப்ரல் 28

748—

சொட்டுநீர்ப்பாசன முறையை தீவிரப்படுத்தல்.

வினா எண். 5337—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) தமிழகத்தில் சொட்டு நீர்ப்பாசன முறையை தீவிரப் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1991-92ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப்பாசனத்தை யும், தெளிப்பு நீர்ப்பாசனத்தையும் தமிழகத்தில் பிரபலப் படுத்த விவசாயிகளை கவரும் வகையில் தமிழக அரசு ரூ. 40.00 இலட்சம் மானியத் தொகையாக அரசாணை எண். 612, வேளாண்மை (வே.பொ.4) துறை, நாள் 14-11-1991 மூலம் வழங்கியுள்ளது.

மேலும், மத்திய அரசு தற்போது தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி அதிகரிக்கும் நோக்குடன் தமிழ்நாட்டிற்கு ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது. இத்தொகை சொட்டு நீர்ப்பாசன முறையை விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களுக்கு உபயோகப்படுத்து வதற்கு மான்யமாக 50 விழுக்காடு அளவுக்கு கொடுக்கப்படும்.

749—

வேளாண்மை டெப்போக்களில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 5423—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேளாண்மை இடுபொருட்கள் மானிய விலையில் வழங்குவதில் குறிப்பாக வேதாரண்யம் தொகுதியில் வேளாண்மை டெப்போக்களில் நடக்கும் முறைகேடுகளை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) வேதாரண்யம் தொகுதியில் வேளாண்மைக் கிடங்கு களில் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்குவதில் முறை கேடுகள் நடப்பதாகப் புகார் ஏதும் இதுவரை அரசிடம் பெறப் படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

750—

மல்லிகைப் பூவினைக் கொள்முதல் செய்ய நடவடிக்கை.

வினா எண். 5424—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வேதாரண்யம் பகுதியில் விளையும் பணப்பயிரான மல்லி கைப் பூவின் அபிவிருத்திக்கு வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்ட பலன் மற்றும் கொள்முதலுக்கு அரசு நட வடிக்கை மேற்கொள்ளுமா :

விடை—

மல்லிகைப் பூவின் வளர்ச்சிக்கான பணிகளை தோட்டக் கலைத் துறை கவனித்து வருகிறது. அதற்கான ஆராய்ச்சிகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது. மல்லிகை பூவினைக் கொள்முதல் செய்ய அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

751—

சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் தார்ப்பாய் வழங்கல்.

வினா எண். 5427—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்ட சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் தார்ப்பாய்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா :

விடை—

நடப்பு நிதி ஆண்டில் (1991–92), வேளாண்மைத் துறை மூலமாக தார்ப்பாய்கள், மானிய விலையில் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. இனிவரும் நிதி ஆண்டிலும் (1992–93), இவ் வித திட்டம் பரிசீலனையில் இல்லை.

[1992 ஏப்ரல் 28

752—

வேளாண்மைக் கிடங்கு அமைத்தல்.

வினா எண். 5428—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் வேளாண்மைக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

இல்லை.

753—

காய்கறி விதை உற்பத்தி மையம் திறக்க நடவடிக்கை.

வினா எண். 5430—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, கத்திரிப்புலம் கிராமத்தில் காய்கறி விதை உற்பத்தி மையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

வேதாரண்யம் தொகுதி, கத்திரிப்புலம் கிராமத்தில் காய்கறி உற்பத்தி மையம் திறக்க தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

754—

வேளாண்மைத் தகவல் மையங்களின் பணிகள்.

வினா எண். 5590—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் தகவல் மையங்களில் வரையறுக்கப்பட்ட பணி விவரங்கள் என்ன?



1992 ஏப்ரல் 28]

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் இத்தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன?

(இ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் இத்தகு தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) (1) தகவல் மையங்களில் களப் பணியாளர் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய தொழில் நுட்பச் செய்திகள் பற்றிய தகவல் அளிக்கப்படுகிறது.

(2) கருத்தரங்கு, இருவாரப் பயிற்சி, பணிமனைக் கட்டம், முன்பருவப் பயிற்சி மற்றும் பொருட்காட்சி முதலியன இங்கு நடத்தப்படும்.

(3) இத்தகவல் மையங்களில் உள்ள பயிற்சி அரங்கில் முன்னேற்ற விவசாயிகள், தொடர்பு விவசாயிகள் ஆகியோருடன் குழு கலந்தாய்வு நடத்தும்.

(4) வேளாண்மைத் தொழில் நுட்பச் செய்திகளில் ஏற்படும் சந்தேகங்களை போக்கும் வண்ணம் இவ்வலுவலக தொழில் நுட்ப வல்லுநர்களின் உதவியைக் கொண்டு, பல வகையான பயிர்களில் பின்பற்றும் சாகுபடி முறைகள், பூச்சி நோய் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், போட்டோ விவரங்கள், செய்திகள், மாதிரிகள் மற்றும் தகவல் சாதனங்களின் மூலம் விவசாயச் செய்திகள் வெளிப்படுத்தப்படுகிறது.

(ஆ) அனைத்து மாவட்டங்களிலும் 80 தகவல் மற்றும் பயிற்சி மையங்கள் உபகோட்ட அளவில் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன.

(இ) ஆம். திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில், நிலக்கோட்டை மற்றும் பழனி ஆகிய உபகோட்டங்களில் இத்தகு தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

755—

விவசாயிகளுக்கு விதைக் கடலை பருவ காலத்தில் வழங்க நடவடிக்கை.

வினா எண். 5848—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

[1992 ஏப்ரல் 28

எண்ணெய்வித்துக்கள் துறை மூலம் விவசாயிகளுக்கு விதைக்கடலை பருவ காலத்தில் வழங்கப்படாமல் காலதாமதம் செய்யப்படுவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இனிவருங்காலங்களில் காலதாமதம் தவிர்க்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

756—

**விவசாயிகளுக்கு நேரடியாக வீரிய விதைகள் வழங்க நடவடிக்கை.**

வினா எண். 5970—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல் உட்பட தரம் மிக்க உணவுத் தான்ய வீரிய விதையில் மானிய விலையில் தற்போது அரசு, விவசாயிகளுக்கு வழங்கும் முறையில் குறைபாடுகள் இருப்பதால், தனி வியாபாரி களை விவசாயிகள் நாடுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு, நேரடியாக அரசு விவசாய (தாலுகா) கிடங்குகளிலிருந்து வழங்க முன்வருமா ?

விடை—

(அ) விதைகளை அரசு வழங்கும் முறையில் குறைபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

757—

**வேளாண்மைத் துறையில் நவீன யுத்திகளைக் கையாளுதல்.**

வினா எண். 5971—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



1992 ஏப்ரல் 28]

வேளாண்மைத் துறையில் நவீன யுத்திகளைக் கொண்டு செயல்படுத்த அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை களின் விவரம் என்ன ?

விடை—

மத்திய நிதி உதவியுடன் கூடிய சிறப்பு திட்டங்களில் நவீன உத்திகள் செயல்படுத்தப்படுகிறது. நவீன கண்டு பிடிப்புகளை விவசாயிகள் தெரிந்துகொள்ளும் பொருட்டு, விவசாயிகளுக்குத் தனியாகவும், விவசாய தொழிலாளர்களுக்குத் தனியாகவும், பயிற்சி முகாம்களில் வகுப்புகளும் மற்றும் செயல் விளக்கங்களின் மூலம் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. ஒருங் கிணைந்த அரிசி உற்பத்தி திட்டம் மற்றும் சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம்இவைகளின் கீழ் மாவட்டங்களில், நவீன தொழில் நுட்பங்கள் நிரூபணமாக செய்து காட்டப்படுகின்றது. தரமான விதை, நுண்ணுரங்கள், பயிர் பாதுகாப்பு கருவிகள் வேளாண்மைக் கருவிகள் போன்றவை விவசாயிகளுக்கு மான்ய விலையில் வழங்கப்படுகின்றது. ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நவீன தொழில் நுட்பங்களை செயல் விளக்கமாக விளக்கப்படுகிறது. இதற்காக உபயோகப்படுத்தப்படும் விவசாயின் நிலத்திற்காக விவசாயிக்கு மான்யமும் கொடுக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் உலக வங்கியின் உதவியுடன் வேளாண்மை விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், வானொலி தொலைக்காட்சி மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் விவசாய பயிர்கள் பற்றிய செய்திகளுடன், பண்ணைத் தொழில் களுக்கான நவீன தொழில் யுக்திகளும் விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகின்றன.

758—

**தனியார் விவசாய பண்ணைகளுக்கு அரசு சலுகைகள்.**

வினா எண். 5972—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் விவசாயப் பண்ணைகளுக்கு அரசு சலுகைகள் ஏதேனும் அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) தனியார் விவசாயப் பண்ணைக்கு அரசு சலுகைகள் ஏதும் அளிக்கப்படுவது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

759—

புதிதாக மேலும் விவசாயக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 5973—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக மேலும் விவசாயக் கல்லூரிகள் துவங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

760—

வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு சலுகைகள்.

வினா எண். 5975—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு சலுகைகள் ஏதேனும் அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

(இ) சூறாவளிக் காற்றினாலும் பெரு மழையாலும் இழப்புகளுக்கு ஆளாகும் வாழைச் சாகுபடியாளர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்கிறதா ?

விடை—

(அ) ஆம்.



1992 ஏப்ரல் 28]

(ஆ) தோட்டக் கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப் படும் வளர்ச்சித் திட்டங்களின் மூலம் வாழைக் கன்றுகள் 50 சதவீதம் மானிய விலையில் வாழைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

(இ) இல்லை.

761 —

பழக்கன்றுகள் உற்பத்தி செய்ய தனியாக அரசு தோட்டக்கலைப் பண்ணை அமைத்தல்.

வினா எண். 6012—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் பழக்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கென தனியாக அரசு தோட்டக்கலை பண்ணை ஒன்று அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு அந்தப் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் ரெட்டியார் சத்திரத்தில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ) இப்பண்ணையமைக்க 5.33 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த திண்டுக்கல்—அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப் பண்ணையில், மா, பலா, கொய்யா போன்ற செடிகள் உற்பத்தி செய்து மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய கருதப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 28

762—

விவசாயக் கிடங்கைப் பிரித்தல்.

வினா எண். 6139—திரு. அ. பாப்பாசுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— :

(அ) குளித்தலையில் இருந்து விவசாயக் கிடங்கைப் பிரித்து நங்கவரத்தில் அமைக்க செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கும் :

விடை—

(அ) ஏற்கனவே குளித்தலை மற்றும் நங்கவரத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் செயல்பட்டு வருவதால், குளித்தலையிலிருந்து வேளாண்மை விரிவாக்க மையத்தைப் பிரித்து நங்கவரத்தில் அமைக்க அவசியமில்லை.

(ஆ) எழுவில்லை.

763—

கடந்த மூன்று ஆண்டுகளில் வறட்சியின் காரணமாக உற்பத்தி பாதிப்பின் மதிப்பு விவரம்.

வினா எண். 6527—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் வறட்சி, பருவ மழை போதுமான அளவு இல்லாமல் போதல் மற்றும் ஆற்றுப்பாசன நீர் பற்றாக்குறை ஆகியவற்றினால் குறுவை மற்றும் சம்பா சாகுபடி எவ்வளவு ஹெக்டேர் நிலங்களில் பாதிப்பு ஏற்பட்டது?

(ஆ) அவற்றின் காரணமாக உற்பத்தி பாதிப்பு மற்றும் அவற்றின் மதிப்பு விவரம் என்ன :

விடை—

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 28]

விவர அறிக்கை.

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் குறுவை சம்பா பருவ நெல் சாகுபடி பரப்பு பாதிப்பு பின்வருமாறு :—

| வருடம். | பரப்பு இழப்பு (லட்சம் எக்டர்) குறுவை. | சம்பா. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1988–89 ... ... | 0.56 | 1.50 | 2.06 |
| 1989–90 ... ... | 0.69 | 1.81 | 2.50 |
| 1990–91 ... .. | 0.18 | 3.54 | 3.72 |
| மொத்தம் .. | 1.43 | 6.85 | 8.28 |

எனினும் குறுவை, சம்பா பருவ உற்பத்தி பாதிப்பு அந்தந்த ஆண்டுகளில் நவரை பருவத்தில் ஓரளவுக்கு சரி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 3 ஆண்டுகளில் மொத்த பரப்பு/உற்பத்தி ஒப்பு விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. | நெல் இயல்பு பரப்பு. (இலட்சம் எக்டரில்). | நெல் சாகுபடி பரப்பு. (இலட்சம் எக்டரில்). | நெல் பரப்பு இழப்பு. | அரிசி உற்பத்தி இழப்பு. (லட்சம் மெட்ரிக் டன்). | மதிப்பீடு (லட்சம் ரூபாயில்). * |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1988–89 | 21.00 | 18.81 | 2.19 | 6.64 | 20418.0 |
| 1989–90 | 21.00 | 19.63 | 1.37 | 4.23 | 15228.0 |
| 1990–91 | 21.00 | 18.73 | 2.27 | 6.98 | 26175.0 |
| | | | 5.83 | 17.85 | 61821.0 |

* அரசு கொள்முதல் விலையில்.

[1992 ஏப்ரல் 28

764—

நெல் மற்றும் கரும்பு கொள்முதல் விலை நிர்ணயம் செய்தல்.

வினா எண். 6529—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த மூன்றாண்டுகளில் நெல் மற்றும் கரும்பு கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

விடை—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் நெல் மற்றும் கரும்பிற்கு கொள்முதல் விலையை அரசு அந்தந்த ஆண்டே அறிவித்துள்ளது.

(ஆ) எழாது.

765—

பாமாயில் உற்பத்தி செய்யும் மரங்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் வளர்க்க நடவடிக்கை.

வினா எண். 6684—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாமாயில் உற்பத்தி செய்யும் மரங்கள் விளைவிப்பதற்கு ஏற்ற கடற்கரை ஓரங்கள் மிகுந்த தென்னாற்காடு மாவட்டத்தில் அம்மரங்களை வளர்க்க முன்னுரிமை அளிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) முதல் சட்டமாக ஏற்கனவே மைய அரசின் வல்லுனர்களின் குழு ஒன்று தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து பல இடங்களை பார்வையிட்டு உள்ளது.



அந்த நிபுணர் குழுவினர் பரிந்துரைகளின் பேரில், திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் பாமாயில் மரங்கள் பயிரிடப்பட உள்ளன. தண்ணீர் வசதி அதிகமாக உள்ள வேறு இடங்களில் இந்த மரங்கள் நடுவதை விரிவுபடுத்தி பரப்பும் போது தென்னாற்காடு மாவட்டமும் கருத்தில் கொள்ளப்படும்.

766—

கரும்பு உற்பத்தி விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை.

வினா எண் 7425—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு உற்பத்தி விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்வதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

767—

சிறு விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கல்

வினா எண் 8166—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழக சிறு குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

சிறு மற்றும் குறு விவசாயிகள் மானிய விலையில் உரம் வாங்க அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது.

768—

## வேளாண்மை விரிவாக்க கிடங்குகள்

வினா எண் 8468—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி சானார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களுக்கான வேளாண்மை விரிவாக்க கிடங்குகளில் பயிர் பாதுகாப்பு மருந்துகள், உரம் போதுமான இருப்பு இல்லாமலிருப்பதாக விவசாய சங்கங்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

769—

## சென்னை, அண்ணாநகர் மனைகளில் கூடுதல் விலை விதித்தது குறித்த நடவடிக்கை

வினா எண் 534—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, அண்ணாநகர் தல வீட்டுமனைகளுக்குக் கூடுதலாக விலை விதித்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேற்கு சென்னை புறநகர் திட்டத்திலுள்ள (அண்ணாநகர் திட்டப்பகுதி) நிலத்தின் விலையை இறுதியாக்கும்பட்சத்தில் ஏற்பட்ட மேல் விலையின்பேரில்



ஒதுக்கீடுதாரர்களுக்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கும் ஏற்பட்ட வழக்கில் நியமிக்கப்பட்ட நடுவர் உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டி அவர்கள் அளித்த அறிக்கையில் நிலத்தின் விலை மனைக்கு ரூ. 7,000 என குறைக்கப்பட்டது. அவ்வறிக்கையை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பதிவு செய்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலத்தின் விலையை ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து வசூலிக்குமாறு வாரியத்தின் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

770—

## வீடு கட்ட வீட்டுவசதி வாரியத்திடமிருந்து கடன்

வினா எண் 3090—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம் ஜீவா நகர் மக்களுக்கு வீடுகட்டி கொடுக்க 17 பேருக்கு வீட்டுவசதி வாரியத்திலிருந்து கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

771 —

## பத்திரிகையாளர் சொந்தக் குடியிருப்புகள் அமைக்க கூட்டுறவு சங்கம்

வினா எண் 4447—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பத்திரிகையாளர் சொந்தக் குடியிருப்புகள் அமைக்க கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இந்தச் சங்கத்திற்கு அரசு மானியம் அல்லது கடனுதவி அளித்துள்ளதா?

விடை.—

(அ) ஆம்.

(ஆ) சென்னையிலுள்ள பத்திரிகையாளர்கள் சொந்தக் குடியிருப்புகள் அமைக்கும் நோக்கத்துடன் ''சென்னை பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்'' என்ற பெயரில் சங்கம் ஒன்று 29-8-1988 ல் பதிவு செய்யப்பட்டு 24-9-1988 முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான திருவான்மியூர் விரிவாக்கம் பகுதியில் உள்ள 5.5 ஏக்கர் நிலத்தினை மேற்படி சங்க உறுப்பினர்களுக்கு வீடுகட்டும் காரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தின் மேம்பாட்டிற்காக ரூ. 20 இலட்சம் தொகையை அரசு மானியமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு வழங்குவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

772—

## சென்னைத் தீவுத்திடலில் கட்டிடங்கள் கட்டுவதை தடுக்க நடவடிக்கை

வினா எண் 4609—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சென்னைத் தீவுத்திடலில் கட்டிடங்கள் கட்டினால் சென்னை நகருக்கு நல்ல காற்று கிடைக்காத காரணத்தால் மத்திய ராணுவ இலாகா தொடர்ந்து கட்டிடங்கள் கட்டி வருவதை தடுக்க தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

விடை—

விவர அறிக்கை தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அண்ணா சாலை அபிவிருத்தி திட்டத்தின்படி முத்துசாமி பாலத்திலிருந்து தெற்கு புறமாக செல்லும்போது தீவுத்திடலில் அண்ணாசாலையின் இருபுறமும் அமைகிறது. தீவுத்திடல் பகுதியில் சென்னைப் பெருநகர வளர்ச்சி முழுமைத்திட்டத்தின்படி பலமாடிக் கட்டிடங்கள் (அதாவது நான்கு தளங்களுக்கு மேற்பட்ட கட்டிடங்கள்) கட்டப்பட வகை செய்யப்படவில்லை. அண்ணாசாலைக்கு மேற்கிலும், இருப்புப்





பாதைக்கு கிழக்கிலும் அமையும் தீவுத்திடல் பகுதி பொதுக் காரியங்களுக்கான பகுதி என வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மட்டும் கட்டிடங்கள் அமைந்துள்ளன. தற்போது கட்டப்பட்டுள்ள கட்டிடங்களினால் நல்ல காற்று வீசுவது தடைப்படவில்லை. அண்ணாசாலைக்கு கிழக்கிலும், கடலுக்கு மேற்கிலும் உள்ள இடைப்பட்ட தீவுத்திடல் பகுதி திறவிடம் மற்றும் பொழுதுபோக்கு பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கட்டிடங்கள் ஏதும் கட்டப்படவில்லை. எதிர்காலத்தில் இப்பகுதியில் கட்டிடங்கள் ஏதும் அமையுமானால் காற்று வீசுவது ஓரளவுக்குத் தடை செய்யப்படும்.

திறவிடம் மற்றும் பொழுதுபோக்கு பகுதியாக வரையறுக்கப்பட்ட இப்பகுதியில் ராணுவ இலாகா கட்டிடங்கள் ஏதும் கட்ட முற்பட்டால் இப்பகுதியில் கட்டிடங்கள் கட்டாமலிருக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

773

## பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்

வினா எண் 5556—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டுவசதி சொசைட்டிக்கான வீட்டுமனைக்காக அரசு நிலம் ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) அதற்கான விலையில் அரசு கொடுத்துள்ள சலுகை விவரம் என்ன?

(இ) அந்த வீட்டுவசதி சொசைட்டி வீடுகள் கட்ட அரசு மானிய உதவி ஏதேனும் அளித்துள்ளதா?

விடை—

(அ) ஆம் சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு சென்னை கொட்டிவாக்கத்தில் உள்ள 5.50 ஏக்கர் நிலத்தினை அரசு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஆ) மேற்கண்ட சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்த நிலத்தின் விலை (மற்றும்) நில மேம்பாட்டு கட்டணம் ரூ. 99.25 லட்சமாகும். நில மேம்பாட்டு கட்டணத்தின் ஒரு பகுதியாக ரூ. 20 லட்சத்தை மானியமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு வழங்குவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இல்லை

[1992 ஏப்ரல் 28

774—

**புதிய வீட்டமைப்புத் திட்டத்தின்கீழ் நத்தம் நகரில் கட்ட உத்தேசிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை**

வினா எண் 5619—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .

(அ) புதிய வீட்டமைப்புத் திட்டத்தின்கீழ் பெருமளவில் வீடுகள் கட்ட எந்தெந்த நகரம் பேரூராட்சி மற்றும் நகரியம் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளன ?

(ஆ) அதற்காக உத்தேச செலவு மதிப்பீடு செய்யப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், நத்தம் நகரில் கட்ட உத்தேசிக்கப்பட்ட வீடுகள் எண்ணிக்கையும், உத்தேச செலவு மதிப்பீடும் எவ்வளவு?

விடை—

(அ) சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட நகர் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன :—

1. வத்தலக்குண்டு, 2. ஒட்டன்சத்திரம்,

3. பழனி.

(ஆ) தற்போது ஒட்டன்சத்திரம் நகரப்பகுதியில் மட்டும் 48 குறைந்த வருவாய்ப் பிரிவு மற்றும் 188 நடுத்தர வருவாய்ப் பிரிவு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 263.41 இலட்சத்தில் மதிப்பீடு ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. வத்தலகுண்டு மற்றும்பழனிநகரங்களில் வீடுகள் கட்டும் பணியை மேற்கொள்ள, நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) தற்போது நத்தம் நகரப்பகுதியில் வீடுகள் கட்டும் திட்டம் எதுவும் வீட்டுவசதி வாரியத்தின் கையிருப்பில் இல்லை



1992 ஏப்ரல் 28]

775—

**குடிசைவாழ் மக்களின் பல்வேறு கோரிக்கைகள்.**

வினா எண் 6121—திரு. எம். ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைவாழ் மக்களின் பல்வேறு கோரிக்கைகள் கொண்ட முறையீடு சென்னை குடிசைப்பகுதி மக்கள் அமைப்பு (M.S.F.O.) அரசுக்கு சமர்ப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) சென்னை குடிசைப்பகுதி மக்கள் அமைப்பு அரசுக்கு 13 கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளது. அக் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

776—

**சென்னை நகரில் வாரிய வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு மீண்டும் குடியிருப்புக்கள் அளித்தல்.**

வினா எண் 6543—திரு. எம. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடிசை மாற்று வாரியத்தால் நடப்பு நிதியாண்டில் சென்னை நகரில் வாரிய வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மறு முறையீட்டினை பரிசீலித்து மீண்டும் அவர்களுக்கு குடியிருப்புக்கள் அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளிலிருந்து அண்மையில் யாரும் வெளியேற்றம் செய்யப்படவில்லை.

53—135—53

[1992 ஏப்ரல் 28

777—

நடுவுக்காட்டில் குழந்தைகள் காப்பகம் அமைத்தல்

வினா எண் 704—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உரூர் ஊராட்சியைச் சேர்ந்த நடுக்காட்டில் குழந்தைகள் காப்பகம் ஒன்றை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

778—

முதியோர் இல்லம் அமைத்தல்,

வினா எண் 1205—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதியோர் இல்லம் அமைக்கப்படுமா ?

விடை—

முதியோர் இல்லம் ஏதும் தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைப்பதற்கு இல்லை.

779—

வால்பாறையில் குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.

வினா எண் 1374—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வால்பாறையில் சமூகநலத்துறை மூலம் குழந்தைகள் நலக் காப்பகம் ( Early Child Care Cente.) ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

780—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பார்வையற்றோர் மறுவாழ்வு நிலையம் ஏற்படுத்துதல்.

வினா எண்—1420 —டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பார்வையற்றோர் மறுவாழ்வு நிலையம் ஏற்படுத்த அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

781—

ஆதரவற்றோர் பள்ளிகள்

வினா எண் 1421—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆதரவற்றோர் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் சொந்தக் கட்டிடம் இல்லாத பள்ளிகளின் விவரம் என்ன ?

விடை—

(அ) இராமநாதபுரத்தில் அரசு குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) இராமநாதபுரம் அரசு குழந்தைகள் காப்பகம் மருத்துவத் துறையினைச் சார்ந்த அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தினை காலி செய்யக் கோருவதால் காப்பகத்திற்கு வாடகை கட்டிடம் பார்க்கப்பட்டு வருகிறது.

[1992 ஏப்ரல் 28

782—

குணமடைந்த தொழு நோயாளிகளின் மறுவாழ்விற்காக அரசு தனித் திட்டங்கள்.

வினா எண் 1488—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

முறையாக சிகிச்சை பெற்று குணமடைந்த தொழு நோயாளிகளின் மறு வாழ்விற்காக அரசு தனித் திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்குமா ?

விடை—

தற்போது இல்லை.

783—

பால்வாடிக்குப் புதிய கட்டிடம்

வினா எண் 2343—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கு காவக்காரன் தெருவில் உள்ள பால்வாடிக்குப் புதியக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?—

விடை—

இல்லை.

784

பால்வாடி பள்ளி தொடல்க நடவடிக்கை

வினா எண் 2528—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பட்டத்தூரணி வடக்கில் ஒரு பால்வாடி பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

785—

பால்வாடி பள்ளி அமைத்தல்.

வினா எண் 2562—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் படப்பனார் வயல் வடக்கிற்கு ஒரு பால்வாடி பள்ளி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்போதைக்கில்லை.

786—

முதியோர் உதவித்தொகை விண்ணப்பித்த ஒரு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை.

வினா எண் 2576—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முதியோர் உதவித்தொகைக்காக விண்ணப்பித்து பல மாதங்கள் ஆகியும் உதவித்தொகை வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) விண்ணப்பித்த ஒரு மாதத்தில் உதவித்தொகை கிடைக்க அரசு வழிவகுக்குமா?

விடை—

(அ) மூன்று மாதத்துக்கொரு முறை முதியோர் உதவித் தொகைக்காக வரும் விண்ணப்பங்களனைத்தையும் பரிசிலித்து அதற்கேற்ப எண்ணிக்கையை உயர்த்தி அரசு ஆணை வெளியிடுகிறது.

(ஆ) பரிசீலனை செய்ய வேண்டி உள்ளதால் ஒரு மாத கால அளவு என்பது போதாது.

[1992 ஏப்ரல் 28

787—

பால்வாடி அமைத்தல்.

வினா எண். 2607—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியத்தில் காட்டாம்புளி கிராமத்தில் பால்வாடி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

தற்போதுள்ள நிதி நிலை நெருக்கடியில் புதிய மையம் எதுவும் அமைத்துக்கொடுக்கும் செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

788—

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 2780—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங் கோட்டை ஆதி திராவிடர் தெருவில் பாலர் பள்ளி ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

789

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 2.71—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சியை சேர்ந்த மிலாரிக்காட்டில் ஒரு பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

790—

தென்னூர் காலனியில் தனிப் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 2925—திரு. ஆர். தங்கராஜ் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், தென்னூர் காலனியில் தனிப்பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயமில்லை.

791—

வடுகபாளையம் கிராமத்தில் பாலர் பள்ளி.

வினா எண் 2939—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், வடுகபாளையம் கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

792—

ஆர். கே. நகரில் பாலர் பள்ளி.

வினா எண் 3002—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம், ஆர். கே. நகரில் பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயமில்லை.

[1992 ஏப்ரல் 28

793—

சம்பை பட்டினத்தில் சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம்.

வினா எண் 3017—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பை பட்டினத்தில் சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம்.

794—

மேட்டுக் கொல்லையில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 3101—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி மேட்டுக்கொல்லைக்கு பாலர் பள்ளி ஒன்று அமைத்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

795—

கணேசபுரத்தில் பாலர் பள்ளி.

வினா எண் 3109—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம். கணேசபுரத்தில் பாலர் பள்ளி ஒன்று அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28

796—

குப்பத்தேவன் மேற்கில் பாலர் பள்ளி.

வினா எண் 3113—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன் மேற்கில் பாலர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

797—

சத்துணவு மையம் தொடங்கல்.

வினா எண் 3183 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதி கரம்பை மேற்கு ஆதி திராவிடர் தெருவில் சத்துணவு மையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

798—

Central Council Office for Childwelfare

3263 Thirumathi V.G. MANIMEGALAI :

Will the Hon'ble the Minister for Social Welfare be pleased to state—

(a) Whether the Central Council for Child Welfare have opened its Offices at Pasumpon Muthuramalinga Thevar, Kamaraj etc., districts, and

(b) If so, the details thereof.

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

799—

**தனியார் தொழிற்சாலைகளில் பெண்களுக்கு 30 சதவீதம் வேலை கொடுக்க சட்டம்.**

வினா எண் 3868 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தனியார் நடத்தும் தொழிற்சாலைகளில் பெண்களுக்கு 30 சதவீதம் வேலை கொடுக்க சட்டம் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

தற்சமயம் இல்லை.

800—

**கலப்புத் திருமண தம்பதிகளுக்கு பரிசுத் தொகை.**

வினா எண் 4089 திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசு கலப்புத்திருமண உதவித் திட்டத்தின் கீழ் கலப்பு மணம் புரியும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.5,000 எந்த ஆண்டு நிர்ணயம்செய்யப்பட்டது?

(ஆ) இத்தொகையை உயர்த்தித் தருவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா:

விடை—

(அ) 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின் கீழ், கலப்பு மணம் புரியும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ. 5,000 நிர்ணயம் செய்யப்பட்டது.

(ஆ) இல்லை.

801—

**பால்வாடி அமைத்தல்.**

சுண்ணாம்புக்குப்பத்தில்

வினா எண். 4106—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சுண்ணாம்பு குப்ப கிராமத்திற்கு தனியாக பால்வாடி அமைத்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?



விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

802—

**சேந்திரக்கிள்ளையில் சத்துணவுக்கூடம் அமைத்தல்.**

வினா எண். 4159—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சேந்திரக்கிள்ளை காலனியில் தனியாக சத்துணவுக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இல்லை.

803—

**குடும்பக் கட்டுப்பாட்டிற்கு சத்துணவு அமைப்பாளர்களை பயன்படுத்தல்.**

வினா எண். 5051—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆட்களைக் கொண்டு வர சத்துணவு அமைப்பாளர்களை பயன்படுத்தாமல் இருக்க அரசு முடிவெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) சத்துணவுப் பணியாளர்களுக்கு தனிப்பட்ட வகையில் இலக்கு எதுவும் வரையறுக்காமல் அவர்களின் சேவையை குடும்பநலத் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

804—

**ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித்திட்டம்.**

வினா எண். 5053—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 28

(அ) ஆதரவற்ற பெண்கள் உதவிநலத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகையை திருமணத்திற்கு முன்பாகவே கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில். விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணைப்படி திருமணத்துக்கு முன்னால்தான் தர வேண்டும். ஏதாவது காரணங்களால் பின்னால் கிடைக்கிறது என்று தெரிவித்தால் ஆவன செய்யப்படும்.

805—

சமூக நலத்துறைக்கான ஆலோசனைக் குழுவில் பிற்படுத்தப் பட்டவகுப்பு பெண்களை நியமித்தல்.

வினா எண். 5296 திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சமூக நலத்துறைக்கான ஆலோசனைக் குழுவில் அரசு நியமித்த உறுப்பினர்களுடன் மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த 6 பெண் உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும் என மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) அப்படி ஏதும் அரசுக்கு தகவல் வரவில்லை.

806—

சத்துணவு மையங்களில் சிறப்பாக பணியாற்றுபவர்களுக்கு பரிசளித்தல்.

வினா எண். 5359—திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

சத்துணவு மையங்களில் சிறப்பாக பணியாற்றுபவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பரிசளித்து சிறப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர் மற்றும் உதவியாளர்களில் சிறந்தவர்களை ஒவ்வொரு வருடமும் தேர்ந்தெடுத்து ஒரு மாத மதிப்பூதியம் பரிசாக வழங்க வேண்டும் என்ற அரசாணை (பல்வகை) எண். 920, பொதுத் (முகுசதி) துறை, நாள் 30-4-1986-ல் அரசு ஏற்கனவே ஆணை வெளியிட்டுள்ளது.

807—

கல்வித்துறை நிர்வாகத்தில் சத்துணவுத் திட்டத்தினை செயல்படுத்தும் திட்டம்.

வினா எண். 5361—திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் இயங்கி வருகின்ற சத்துணவுத் திட்டத்தில் பயனடையும் பள்ளி குழந்தைகளுக்கு சீருடை, இலவச காலணி புத்தகம் ஆகியவை கல்வித் துறையினரால் வழங்கப்படுவதால், முன்போலவே கல்வித் துறை நிர்வாகத்தில் சத்துணவுத் திட்டத்தினை செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா:

விடை—

இல்லை.

808—

பணிபுரியும் பெண்களுக்கு அரசு தங்கும் விடுதி.

வினா எண். 5509—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணிபுரியும் பெண்களுக்கான அரசு தங்கும் விடுதிகள் எங்கெங்கு செயல்படுகின்றன?

(ஆ) அவற்றிற்காக அரசு செலவிடும் தொகை எவ்வளவு?

(இ) மாவட்ட தலைநகர்தோறும் இத்தகு அரசு பெண்கள் தங்கும் விடுதிகள் அமைக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை :—

(அ) பணிபுரியும் பெண்களுக்கான அரசு தங்கும் விடுதிகள் கீழ்க்காணும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன :

சென்னை (அடையாறு) திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, ஒசூர், கடலூர், புதுக்கோட்டை.

(ஆ) மேற்படி பணிபுரியும் பெண்கள் விடுதிக்காக கடந்த ஆண்டில் (1990-91) ரூ. 7,18 இலட்சம் செலவிடப் பட்டது, இந்த நிதியாண்டில் (1991-92) ரூ. 6.62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

(ஈ) எழவில்லை.

809—

சத்துணவு மையங்கள் அமைத்தல்.

வினா எண். 5575—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் 1989–90, 1990–91 முதல் ஆரம்பிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் மலைவாழ் மக்கள் நலத்துறை மூலம் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள் அமைக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சத்துணவு மையங்களும் குழந்தைகள் நல மையங்களும் எப்போது ஆரம்பிக்கப்படும்?



விடை—

(அ) மற்றும் (ஆ) : பள்ளி சத்துணவு மையங்கள் ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படும். குழந்தைகள் நல மையங்களைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிதி நிலை நெருக்கடியில் உடனடியாக ஆரம்பிக்க இயலாது.

810—

கால்நடை வளர்ப்பதற்கு கடன் வழங்கல்.

வினா எண். 5779—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் Dairy Unit -ன் கீழ் Socio Economic Programme மூலம் கால்நடை வளர்ப்பதற்கு கடன்களும் மானியங்களும் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

இல்லை.

எனினும் மத்திய சமூக நல வாரியத்திடமிடந்து நிதியுதவி பெற்று மாநில சமூக நல வாரியம் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகள் போன்றவர்களுக்கு பண்ணை அமைக்க மானியம் மற்றும் கடன் உதவி செய்து வருகிறது.

811—

வால்பாறையிலுள்ள ஏழைப் பெண்களுக்கு சுருக்கெழுத்து மற்றும் தொழிற் கல்வி ஏற்படுத்தல்.

வினா எண். 5800—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சமூக நல வாரியத்தின் மூலம் வால்பாறையிலுள்ள ஏழைப் பெண்களுக்கு சுருக்கெழுத்து மற்றும் I.T.I. New Vocational Training Programme மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

சிறப்பாக பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள் ஏழைப் பெண்களுக்கு தொழிற்கல்வி அளிக்க முன்வந்தால் மாநில சமூக நல வாரியம் போதிய நிதி உதவி அளிக்க முன் வரும்.

82—

குழந்தைகள் சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண். 5843—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள நவாப்பேட்டை கிராமத்திற்கு குழந்தைகள் சத்துணவு மையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

83—

சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண். 5844— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சின்னாண்டி குப்பத்தில் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்போது இருக்கும் நிதி நிலை நெருக்கடியில் புதியதாகச் சத்துணவுக் கூடம் அமைக்கும் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.



814

சத்துணவு அமைப்பாளர்கள்.

வினா எண். 5912—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், சத்துணவு அமைப்பாளர்களை குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் நபர்களை அழைத்து வர கட்டாயப்படுத்துவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

வினாவில் குறிப்பிட்டுள்ளது போல் சத்துணவு அமைப்பாளர்களை குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் நபர்களை அழைத்து வர ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கட்டாயப்படுத்துவதில்லை.

815—

உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வண்டி.

வினா எண். 6004—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சமூக நலத்துறையால் உடல் ஊனமுற்றோருக்காக இலவசமாக அளிக்க மூன்று சக்கர சைக்கிள் வண்டிகளைத் தயாரிக்க மாமல்லபுரத்தில் ஒரு தொழிலகம் அமைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அந்தத் தொழிலகம் தற்போது செயல்படுகிறதா?

விடை—

(அ) மாமல்லபுரம் செல்லும் வழியில் [illegible] என்னும் இடத்தில் இந்தத் தொழில் கூடம் உள்ளது.

(ஆ) மற்றும் (இ): இங்கு ஊனமுற்றவர்களுக்குத் தேவையான மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி போன்றவைகளும், மேஜை, நாற்காலி அலமாரி போன்றவைகளும் தயாரிக்கப்படுகின்றன. ஊனமுற்ற நபர்களுக்கு (Fitter, Welding) போன்ற வேலைகளில் இங்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்தத் தொழிலகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**816—**

**முதியோர் உதவித் தொகை கேட்டு காத்திருப்போர் எண்ணிக்கை.**

வினா எண். 6114—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகம் முழுவதும் முதியோர் உதவித் தொகை கேட்டு காத்திருப்போர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை உயர்த்த அரசு முன் வருமா?

விடை—

(அ) 30-9-1991 நிலவரப்படி, 11,690 பேர் இவர்களுக்கும் உதவித் தொகை வழங்க பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

**817—**

**சத்துணவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புற குழந்தைகளுக்கு கல்வி போதித்தல்.**

வினா எண். 6184—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களின் குழந்தைகளுக்கு எல்.கே.ஜி., யூ.கே.ஜி. போன்ற கல்வி போதிக்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ)+ குழந்தைகள் நல மையங்களில் 2+வயது முதல் 4+ வயது வரையுள்ள குழந்தைகளுக்கு காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை முன்பருவக் கல்வி குழந்தைகள் நல அமைப்பாளரினால் போதிக்கப்படுகின்றது.

**818—**

**சத்துணவு மையம் அமைத்தல்.**

வினா எண். 6422—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆதனூரில் சத்துணவு மையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

**819—**

**சத்துணவு கூடங்களை சீர்செய்தல்.**

வினா எண். 6682—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள அத்தியாநல்லூர் சத்துணவுக் கூடங்களை சீர்செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தொழில் அதிபர்கள், தொண்டு நிறுவனங்கள், நன்கொடையாளர்கள் ஆகியோர் சத்துணவுக் கூடங்களைத் தத்தெடுத்துப் பழுது பார்க்கும் திட்டத்தின்

இல் இந்த மையங்களை சீர்செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

820.—

சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண். 6750—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துப்பட்டினம் ஊராட்சி பூமுடிக்காட்டில் ஒரு சத்துணவுக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை.—

தற்போது இல்லை.

821.—

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 7032—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பொக்கன் விடுதி தெற்கில் ஒரு பாலர் பள்ளி அமைத்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

தற்போது இல்லை.

822.—

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 7042—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?





தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் தொந்து புளிக்காட்டில் பாலர் பள்ளி ஒன்று அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை.—

தற்போது இல்லை.

823.—

சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண். 7205—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புக்கரம்பை ஊராட்சி மேற்குடிக்காடு தொடக்கப்பள்ளியில் சத்துணவு மையம் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை.—

இந்தத் தொடக்கப் பள்ளியில் சத்துணவு வழங்குவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுவிட்டது.

824.—

சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண். 7305—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு சத்துணவு கூடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

தற்போது இல்லை.

[1992 ஏப்ரல் 28

825—

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 7359—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு—சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் மாவுடுகுறிச்சி ஊராட்சி நாடகாட்டில் ஒரு பாலர் பள்ளி ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

826—

குழந்தைகள் நல சத்துணவு மையங்கள் தொடங்கல்.

வினா எண். 7368—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி கிழக்கிடம், மேற்கிலும் குழந்தைகள் நல சத்துணவு மையங்கள் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

827—

சத்துணவுக் கூடங்களின் குறைகளைக் கண்டறிய திடீர் சோதனை குழுக்கள் அமைத்தல்.

வினா எண். 7441—திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

(அ) சத்துணவுக் கூடங்களில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகளைக் கண்டறிய மாவட்ட அளவில் திடீர் சோதனை குழுக்கள் அமைக்க அரசு முன்வருமா?



1992 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில் எப்போது அவை அமைக்கப்படும்.

விடை—

(அ) மாவட்ட ஆட்சியாளரும் மற்ற அரசு அலுவலர்களும் திடீர் சோதனையை ஏற்கனவே செய்து வருவதால், இதற்கென தனிக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

828—

சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண். 7514—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) புவனகிரி தொகுதி சித்தேரி காலனியில் சத்துணவு மையம் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

829—

சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண். 7520—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குமாரமங்கலம் ஊராட்சியில் அடங்கிய சிதம்பரநாதன்பேட்டை கிராமத்திற்கு சத்துணவுக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

830—

சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண். 7604—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய சித்தேரி காலனிக்கு டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

831—

சத்துணவுத் திட்டத்திற்கு வெளிநாடுகள் உதவி.

வினா எண். 8062—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு வெளிநாடுகள் உதவி செய்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தாய்மார்களுக்கும், 0-6 வயதுள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து, சுகாதார, முன்பருவக் கல்வி முதலியன அளிக்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்துக்கு உலக



வங்கியும், இதே போன்ற ஒரு திட்டத்திற்கு செங்கை- எம்.ஜி.ஆர். மாவட்டத்துக்கு சுவீடன் நாடும் உதவி செய்கின்றன. பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டத்துக்கு எவ்வித வெளி நாட்டு உதவியும் இல்லை.

832—

பள்ளிக் குழந்தைகளுக்கு தோல் செருப்புக்குப் பதில் ரப்பர் செருப்பு வழங்கல்.

வினா எண். 8086—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சீருடைகளை துணியாகவும், தோல் செருப்புக்குப் பதிலாக ரப்பர் செருப்பும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

833—

சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சத்துணவு மையத்தில் உணவருந்தும் குழந்தைகள்.

வினா எண். 8464—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு–அம்பேத்கார், தென்னாற்காடு மாவட்டங்களில் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சத்துணவு மையத்தில் உணவருந்தும் குழந்தைகள், மாணவர்கள் எண்ணிக்கை மற்ற மாவட்டங்களை விட அதிகமாக காட்டப்பட்டு வந்துள்ளதைப் பற்றி அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

விடை—

ஆம்.

834—

## ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்தல்.

Question No. 8562—Dr. Beatrix D' Souza: Wil the Hon. the Minister for Social Welfare be pl ased to State :

(a) Wnether the Government will consider extension of pree Noon Meals Scheme to poor children in Anglo-IndianSchool ; and

(b) If so, the details thereof ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்ததில் மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்க வேண்டாம் என்று முடிவெடுத்துள்ளது.

835—

## மகளிர் தங்கும் விடுதிகள் அமைத்தல்.

வினா எண். 8942—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

அரசு மகளிர் தங்கும் விடுதிகள் மாவட்டத் தலைநகர் தோறும் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

பணி புரியும் பெண்கள் தங்கும் விடுதிகளை மாவட்டத் தலைநகர் தோறும் அமைக்கும் திட்டம் இப்போதைக்கு இல்லை.



836—

## Proposal to rehabilitate the street children.

வினா எண். 9460—டாக்டர் பீட்ரிக் டிசோசா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) Whether there is any proposal with the Government to rehabilitate street children ; and

(b) Will the Government fund private agencies who undertake to look after street children?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம்.

837—

## கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் தங்க உறைவிடம்.

Question No. 9461—Dr. Beatrix D' Souza : Will the Hon'ble Minister for Social welfare be pleased to state :

Whether there is any proposal for providing temporary shelters for battered wives and their children?

விடை—

கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்கள் மூலமாகவும், பல்வேறு தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் தங்க உறைவிடம் அளிக்கப்பட்டு வருகிறது.

838—

## பரமக்குடியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி.

வினா எண். 297—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட நிதி ஒதுக்கியும் இன்னும் கட்டாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பரமக்குடி அரசு மாணவியர் விடுதிக்குக் காட்டு பரமக்குடி கிராமத்தில் சர்வே எண். 128/1-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டிடம் கட்ட " தாட்கோவிடம் " ஒப்படைக்கப்பட்டது. விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கு " டெண்டர் " விடப்பட்டதில் தம்முடைய மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து இராமநாதபுரம் அணைக்கட்டு மற்றும் கால்வாய் ஏரியா, லேபர் காண்டிராக்டர்கள் கூட்டுறவு சங்கம் என்ற அமைப்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடுத்து உறுத்துக் கட்டளைகளைப் பெற்றுள்ளது. இதனால் கட்டிட வேலை துவங்க முடியாத நிலையில் உள்ளது.

839—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண். 371—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டத்தில் பர்கூர் ஊராட்சியில் கால் நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

840—

## I.T.D.P. திட்டத்தின் கீழ் மலைவாசிகள் மக்களுக்கு வீடுகள்.

வினா எண். 378—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், பெரிய கல்ராயன மலைவாசிகள் உள்ள தால்வள்ளம், கிளக்காம்பாடி, குன்னூர் ஆகிய ஊர்களுக்கு இந்த ஆண்டு I.T.D.P திட்டத்தில எவ்வளவு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது?



(ஆ) எப்போது வேலை தொடங்கும்?

விடை—

(அ) சேலம் மாவட்டம், பெரியகல்ராயன் மலைப் பகுதியில் உள்ள தால்வள்ளம், கிளக்காம்பாடி மற்றும் குன்னூர் ஆகிய இடங்களில் 1991—92ம் ஆண்டு பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் 5 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

(ஆ) வீடுகள் கட்டப்படும் இடங்களைச் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்வு செய்தபின் வீடுகள் கட்டும் பணி தொடங்கப்படும்.

841—

## ஆதி திராவிட காலனிக்கு மின்வசதி.

வினா எண். 394—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் ஒன்றியம் கிழக்கலங்கல் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் காலனிப் பகுதிக்கு மின்வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தென்காசி வட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் கிழக்கலங்கல் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனி பகுதிக்கு மின்வசதி செய்திட மேற்படி காலனியில் வசிக்கும் ஆதிதிராவிடர் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மின்வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மின் வாரியத்தில் தற்சமயம் மின் உபகரணங்கள் போதிய இருப்பு இல்லை. உபகரணங்கள் வரப் பெற்றதும் மின் இணைப்பு வழங்கப்படும்.

[1992 ஏப்ரல் 28

842—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கலைக் கல்லூரி ஆரம்பித்தல்.

வினா எண். 539—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் கலைக் கல்லூரி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லூரிகள் எதுவும் இத்துறையால் நடத்தப்படுவதில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இத் துறையின் கீழ் கலைக் கல்லூரி ஆரம்பிக்க வாய்ப்பில்லை.

843—

பல்நோக்குக் கூட்டுறவு மலைவாழ் மக்கள் சங்கம் அடைந்த இலாபம்.

வினா எண். 589—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்தியமங்கலம் தொகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவு மலைவாழ் மக்கள் சங்கம் கடந்த 1989 முதல் 1991 வரை அடைந்த இலாபம் எவ்வளவு?

(ஆ) இலாபத் தொகையினை ஆதிவாசிகளுக்குப் பிரித்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) சத்தியமங்கலம் மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ( LAMP Society ) 1989—90ல் ரூ. 3.74 இலட்சம் வரையில் நட்டம் அடைந்தது. ஆனால் 1990—91ல் ரூ. 1.22 இலட்சம் இலாபம் ஈட்டி, முந்தைய ஆண்டு நட்டத்தினை ரூ. 2.52 இலட்சமாக குறைந்துள்ளது.

(ஆ) இலாபமீட்டும் ஆண்டுகளில் பழங்குடியினர் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்கள் பெற்ற கூலியின் அடிப் படையில் போனஸ் வழங்கப்பட்டு வருகிறது.



1992 ஏப்ரல் 28]

844—

ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட தனியார் நிலங்களைக் கையகப்படுத்தல்.

வினா எண். 594—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் 1990-91-ல் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட தனியார் நிலங்களைக் கையகப்படுத்த அரசு ஒதுக்கிய தொகை முழுமையும் செலவு செய்யப்படாமல் அர சுக்குத் திருப்பி அனுப்பியதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தனியார் நிலங்களை கையகப்படுத்தி ஏழை ஆதிதிராவிடர்களுக்குப் பிரித்துக் கொடுக்க அரசு புதிய திட்டம் வகுத்துள்ளதா?

விடை—

(அ) 1990-91-ம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக தனியார் நிலங்களைக் கையகப் படுத்த ரூ. 215.13 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் உண்மையில் ரூ. 285.88 இலட்சங்கள் செலவு செய் யப்பட்டு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது ஒதுக்கீட்டுத் தொகைக்கு மேல் ரூ. 70.75 இலட்சங்கள் கூடு தலாக செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆதிதிரா விடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக அரசு ஒதுக்கிய தொகை ஏதும் அரசுக்குத் திருப்பி அனுப்பும் நிலை எழ வில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

845—

அரசினர் மாணவர் இல்லம்.

வினா எண். 597—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டத்தில் அத்தாணி என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் மாணவர் இல்லம் தொடர்ந்து நடைபெறாமல் விடுதி மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், அத்தாணியில் 1990-91 ஆண்டின் பகுதி 2 திட்டமாக மாணவர் விடுதியை 2—10—1990 முதல் திறக்கப்பட முடிவு செய்யப்பட்டது. ஆனால், உணவுப் பொருள்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் உடனே கிடைக்காத காரணத்தால், இவ்விடுதி 5—10—1990 முதல் திறக்கப்பட்டு, தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வருகிறது.

846—

ஆதிதிராவிடர் தெருவிற்கு மின் இணைப்பு.

வினா எண். 721—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ரெண்டாம்புளிக்காடு நாணத்திடல் ஆதிதிராவிடர் தெருவிற்கு மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் ரெண்டாம்புளிக்காடு கிராமம் நாணத்திடல் பகுதி ஆதிதிராவிடர் தெருவில் மின் கம்பமும் மின் இணைப்பும் ஏற்கனவே உள்ளது.

847—

கால்நடை வளர்ப்பதற்கு கடன்கள்.

வினா எண். 1038—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வால்பாறை மலைப்பகுதியில் உள்ள மக்களுக்கு கால்நடை வளர்ப்பதற்கு கடன்களும் மான்யங்களும் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வால்பாறை மலைப்பகுதியில் உள்ள மக்களுக்கு கால் நடை வளர்ப்பதற்கு கடன்களும் மான்யங்களும் வழங்க அரசு ஆவன செய்யும்.



1992 ஏப்ரல் 28]

848—

ஆதிதிராவிடர் மகளிர் விடுதி ஏற்படுத்தல்.

வினா எண். 1291—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ;

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் நகரில்ஆதிதிராவிடர் மகளிர் விடுதி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

849—

ஆதி திராவிடர் மாணவர் விடுதி.

வினா எண். 1329—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி ஊத்துமலை கிராமத்தில் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆலங்குளம் தொகுதி ஊத்துமலை கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கட்ட செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

850—

வால்பாறையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்தல்

வினா எண். 1373—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் பயன் பெறும் வகையில் வால்பாறையில் செவிலியர் பயிற்சிக் கல்லூ

[1992 ஏப்ரல் 28

" தாட்கோ " மூலமோ அல்லது ஏதேனும் சேவை நிறுவனம் மூலமோ ( Voluutary Organisation ) ஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

851—

பொது நிறுவனங்களில் 18 சத விகிதம் தாழ்த்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பு.

ஆ வினா எண் 1565—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு திதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு பொது நிறுவனங்களிலும் 18 சத விகிதம் தாழ்த்தப் பட்டோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற வகையில் அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை—

பொதுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் ஆதி திராவிடர் வகுப்பினருக்கென்று தனியாக 18 சத விகிதம் இட ஒதுக்கீடும், பழங்குடியினர்களுக்கென்று தனியாக 1 சத விகிதம் இட ஒதுக்கீடும் செய்து, அரசு ஆணை (நிலை) எண் 1090, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22-6-1909 ஆணைகள் பிறப்பித்துள்ளது. இடஒதுக்கீடு பற்றிய அரசு ஆணைகள் அனைத்தையும் எல்லா அரசு பொது நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும் என்று நிதித்துறையும் (Finance B.P.E. Department) ஏற்கனவே ஆணைகள் வெளியிட்டுள்ளது. எனவே இதுபற்றி அரசு தனியே ஆணைகள் பிறப்பிக்க வேண்டியதில்லை.

852—

கால்நடை மருந்தகங்களுக்கு இரவுக் காவலர் நியமித்தல்.

வினா எண் 1585—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

"கால்நடை மருந்தகங்களுக்கு இரவு காவல் பணிக்கு காவலர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?"



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

853—

ஆதிதிராவிடர் மாணவர் விடுதி.

வினா எண் 1677—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரத்தில் அரசினர் கலைக்கல்லூரிக்கு ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இராமநாதபுரத்தில் அரசினர் கலைக்கல்லூரி ஆதி திராவிடர் மாணவர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. தற்போது விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டு வதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

854—

ஆதிதிராவிடர் பெண்கள் விடுதி.

வினா எண் 1679—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பார்த்தி பனூரில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தேவை இடவசதி மற்றும் நிதி நிலைமைக்கேற்ப முடிவு செய்யப்படும்.

[1992 ஏப்ரல் 29

**855—**

மாடுகள் வாங்க கடன் வழங்கல்.

வினா எண் 1686—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

"மாடுகள் வாங்க மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

**856—**

கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைத்தல்

வினா எண் 1687—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா:

விடை—

இல்லை.

**857—**

கால்நடை மருத்துவமனை தொடங்கல்.

வினா எண் 1715—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

"இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?"

விடை—

நடப்பாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவ சாத்தியக்கூறுகள் இல்லை.



1992 ஏப்ரல் 28]

**858—**

கால்நடை தீவனத்தை தயாரித்து வழ்ங்க நடவடிக்கை

வினா எண் 1719—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை தீவனத்தைத் தயாரித்து வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கால்நடைகள் அதிகமுள்ள மாவட்டந்தோறும் இத்திட்டம் அமுல்படுத்தப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) தற்போது இல்லை.

**859—**

கூட்டுறவு பால் சொசைட்டி தொடங்கல்.

வினா எண் 1916—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த குரங்கொல்லையில் கூட்டுறவு பால் சொசைட்டி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை

இல்லை.

**860—**

கால்நடை மருத்துவமனை துவக்க நடவடிக்கை.

வினா எண் 1934—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுபுளிக்காட்டில் ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

இல்லை.

861

கால்நடைட் மருந்தகம் தொடங்க நடவடிக்கை.

வினா எண் 1967— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

''தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை (வ) கிராமத்தில் கால்நடை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை

இல்லை.

862—

கால்நடை மருத்துவ மனை அமைத்தல்.

வினா எண் 1994—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா : ?

தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ)-ல் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

863—

கால்நடை மருந்தகம் தொடங்கல்.

வினா எண் 2013— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங் கோட்டை (தெ) ஊராட்சி அனந்தகோபாலபுரத்தில் ஒரு கால் நடை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

864—

கால்நடை மருத்துவமனை தொடங்கல்.

வினா எண்.2014—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வ) ஊராட்சி கீழக்கொள்ளுகாட்டில் ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

865—

தானியங்கி பால் நிலையங்கள்.

வினா எண். 2064 : திரு. எம். சுந்தரதாஸ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தானியங்கி பால் நிலையங்களிலுள்ள முன்னாள் இராணுவத்தினரான ஒப்பந்தக்காரர்கள் பல ஆண்டுகளுக்கு தொடர அனுமதிக்கப்படுகின்றனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

(இ) புதியவர்களை நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) முன்னாள் இராணுவத்தினருக்கு ஆறு மாதங்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் அளிக்கப்படுகிறது. அவர்களின் செயல்பாடுகளைப் பொறுத்து ஒப்பந்தத்தை நீட்டிக்கவோ, நீக்கவோ செய்யப்படுகிறது. இதுவரை 361 ஒப்பந்தக்காரர்கள் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் 135 நிலைய ஒப்பந்தக்காரர்களில் 49 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) தற்போது பணிபுரியும் ஒப்பந்தக்காரர்களின் விவரம்:

| | | |
|---|---|---|
| 5 1/2 ஆண்டுகளுக்குமேல் | .. | 05 |
| 5 ஆண்டுகளுக்கு மேல் | .. | 04 |
| 4 ஆண்டுகளுக்கு மேல் | .. | 12 |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | .. | 33 |
| 2 ஆண்டுகளுக்கு மேல் | .. | 26 |
| 1 ஆண்டுக்கு மேல் | .. | 28 |
| 1 ஆண்டுக்குள் | .. | 27 |
| மொத்தம் | .. | 135 |

பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1980 | .. | .. | .. | 7 |
| 1981 | .. | .. | .. | 13 |
| 1982 | .. | . | . | 15 |
| 1983 | . | . | . | 16 |
| 1984 | . | . | .. | 23 |
| 1985 | .. | .. | .. | 25 |
| 1986 | .. | .. | .. | 48 |
| 1987 | .. | .. | .. | 26 |
| 1988 | .. | .. | .. | 54 |
| 1989 | .. | .. | .. | 48 |
| 1990 | .. | .. | .. | 37 |
| 1991 | .. | .. | .. | 49 |

(இ) காலியிடங்கள் ஏற்படும்போதும் அல்லது ஒப்பந்தம் நீக்கம் செய்யும்போதும் ஏற்கனவே முன்னாள் இராணுவத்தினர் நல வாரியத்திடமிருந்து பெறப்பட்ட நபர்களில் தேர்வு செய்யப்பட்டு நிலுவையிலுள்ள முன்னாள் இராணுவத்தினர் புதிதாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.



866—

## தானியங்கி பால் நிலையங்கள்

வினா எண். 2065—திரு எம். சுந்தரதாஸ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) சென்னை நகரில் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே தானியங்கி பால் வழங்கும் நிலையத்தை நடததும் ஒப்பந்தக்காரர்களான முன்னாள் இராணுவத்தினரைப் பற்றிய விவரம்.

(ஆ) இந்த தானியங்கி நிலையங்களை நடத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரே ஒப்பந்தக்காரர் எத்தனை ஆண்டுகள் பணியாற்றுகிறார்கள்? அதன் விவரமென்ன ?

விடை—

(அ) சென்னை மாநகரில் மொத்தமுள்ள 135 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களின் ஒப்பந்தக்காரர்களான முன்னாள் இராணுவத்தினரில் 54 பேர்கள் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே தானியங்கி நிலையத்தை நடத்தி வருகின்றனர்.

(ஆ) இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களை எத்தனை பேர் தொடர்ந்து எவ்வளவு காலத்திற்கு நடத்தி வருகின்றனர் என்ற விவரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒரு வருடத்திற்குள்ளாக | .. | 27 நபர்கள் |
| 2. | 1 வருடத்திற்கு மேல்<br>2 வருடத்திற்குள்ளாக | .. | 28 நபர்கள் |
| 3. | 2 வருடத்திற்கு மேல்<br>3 வருடத்திற்குள்ளாக | .. | 26 நபர்கள் |
| 4. | 3 வருடத்திற்கு மேல்<br>4 வருடத்திற்குள்ளாக | .. | 33 நபர்கள் |
| 5. | 4 வருடத்திற்கு மேல்<br>5 வருடத்திற்குள்ளாக | .. | 12 நபர்கள் |
| 6. | 5 வருடத்திற்கு மேல்<br>5 ½ வருடத்திற்குள்ளாக | .. | 4 நபர்கள் |
| 7. | 5 ½ வருடத்திற்கு மேல் | .. | 5 நபர்கள் |
| | மொத்தம் | .. | 135 நபர்கள் |

[1992 ஏப்ரல் 28

867—

## புசுப்பண்ணையை அபிவிருத்தி செய்தல்

வினா எண். 2148— திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கொருக்கையில் குறைந்து வரும் பசுப்பண்ணையை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

868—

## ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் கல்லூரி ஏற்படுத்தல்

வினா எண். 2245— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

869—

## கூட்டுறவு பால் வழங்கும் சொசைட்டி அமைத்தல்

வினா எண். 2319—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கிழக்கு ஆதிதிராவிடர் தெருவில் கூட்டுறவு பால் வழங்கும் சொசைட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

870—

## ஆதிதிராவிடர் பள்ளி அமைத்தல்

வினா எண். 2365—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதி திராவிடர்களுக்கு ஆதி திராவிடர்பள்ளி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

871—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண். 2369—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்தளியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

872—

## வடசென்னிமலை கல்லூரி வளாகத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண். 2499—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசினர் கல்லூரி ஆதி. திரா. மாணவர் விடுதி கல்லூரியிலிருந்து 6 கி.மீ. தூரத்தி

லுள்ள ஆத்தூரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதால் வடசென்னிமலை கல்லூரி வளாகத்திலேயே அவ்விடுதி கட்டப் படுமா?

விடை—

வட சென்னிமலையில் வாடகைக்கு கட்டிடம் கிடைக்கப் பெறாததால் இந்த விடுதி ஆத்தூரில் தற்போது இயங்கி வருகின்றது. வடசென்னிமலை அரசுக் கல்லூரி வளாகத்தில் போதிய இடம் உள்ளதால் இந்தக் கல்லூரி விடுதியை கல்லூரி வளாகத்திற்குள்ளேயே கட்டுவதற்குத் தேவையான இடத்தைக் கேட்டுப்பெற, கல்லூரி நிர்வாகத்துடன் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

873—

காப்பாற்ற குறைந்த விலையில் கால்நடைத் தீவனங்கள்

கால்நடைகளைக் காப்பாற்ற குறைந்த விலையில் கால்நடைத் தீவனங்கள்

வினா எண். 2512—திருமதி கே. மரியம்-உல்-ஆசியா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

1991 ஆம் ஆண்டு பாசன வசதிகள் தவிர பிற பகுதிகளில் குடிநீரின்றி கடுமையான வறட்சி இருப்பதால் அப்பகுதிகளில் கால்நடைகளைக் காப்பாற்ற குறைந்த விலையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கால்நடை தீவனங்கள் வழங்கப்படுமா?

விடை—

கடுமையான வறட்சி பற்றி அரசுக்கு தகவல் இல்லை. அந்நிலை ஏற்படுமானால் ஆவன செய்யப்படும்.

874—

துணை கால்நடை மருத்துவமனை கட்டித்தர நடவடிக்கை

வினா எண். 2546—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன் காட்டில் துணை கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

இல்லை.

875—

பண்ணவயலில் கால்நடை துணை மருந்தகம்

வினா எண் 2565—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணவயலில் ஒரு கால்நடை துணை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

876—

ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா

வினா எண் 2609—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) கும்பகோணம் தாலுக்கா, 99 திருப்புறம்பியம் ஊராட்சி மன்றத்தில் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருப்புறம்பியம் கிராமத்தில் 105 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக புல எண் 290/1 மற்றும் புல எண் 10-ல் கூடுதலாக 1.69.0 எக்டேர் நன்செய் நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

877—

## கால்நடை கிளை மருந்தகம் அமைத்தல்.

வினா எண் 2610—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், திருப்புறம்பியம் ஊராட்சி மன்றத்தில் புதிதாக ஓர் ''கால்நடை கிளை மருந்தகம்'' அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம் திருப்புறம்பியத்தில் ஏற்கனவே ஒரு கிளை நிலையம் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

878—

## சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2653—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

879—

## கால்நடை துணை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 2671—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா;

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வெளிமடத்தில் ஒரு கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

இல்லை.

880—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 2757—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடியில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

881—

## கால்நடை மருத்துவமனை கட்டிடம் கட்டுதல்

வினா எண் 2782— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலி காட்டிற்கு கால்நடை மருத்துவமனை கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?.

விடை

இல்லை.

882

## பாலின் விற்பனை விலையைக் கூட்டுதல்.

வினா எண் 2805—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பாலின் விற்பனை விலையைக் கூட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை

(அ) மற்றும் (ஆ) நிர்வாக செலவு மற்றும் இடு பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றை கணக்கில் கொண்டு பாலின் விற்பனை விலை தற்பொழுது லிட்டருக்கு ரூ.1 வீதம் 25-1-1992 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே பதப்படுத்திய பாலின் விலை லிட்டருக்கு 5.90 ஆகவும், நிலைப்படுத்திய தானியங்கி நிலையம் மூலம் விற்கும் பாலின் விலை லிட்டருக்கு ரூ. 6.ஆகவும் 25-1-1992 முதல் அமுலில் உள்ளது.

883

## கால்நடை கிளை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 2848—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், இன்னம்பூர் ஊராட்சி மன்றத்தில் ஓர் கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத்தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

884—

## கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தல்

வினா எண் 3037—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

விடை—

இல்லை.



885—

## தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நுழைவுத் தேர்வு முன்பயிற்சி மையத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வினா எண் 3417—திரு. ஆர். சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகில இந்திய போட்டித் தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட மாணவப்களுக்கு பயிற்சி அளிக்கும் நுழைவுத் தேர்வு முன் பயிற்சி மையத்தில் ( Pre Examination Training Centre) மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துமாறு மைய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அகில இந்திய போட்டித் தேர்வுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முன்தேர்வுப் பயிற்சி மையத்தில் தற்போது அங்கிகரிக்கப்பட்ட ஆண் மற்றும் பெண் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 60 ஆகும். இந்த எண்ணிக்கையை 100 ஆக உயர்த்த மாநில அரசு மைய அரசிடம் கோரியுள்ளது. மைய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

886—

## நரிக்குறவர், வண்ணார் மற்றும் நாவிதர் இனத்தவரை தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 3974—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிக்குறவர், வண்ணார் மற்றும் நாவிதர் இனத்தவரை தாழ்த்தப்பட்டவர்களாகவோ, பழங்குடியினராகவோ கருதி சலுகைகள் பெற தகுதி படைத்த நலிந்த பிரிவினர் என்பதை அரசு கொள்கையளவிலாவது ஏற்றுக் கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கமைய அரசுக்குப் பரிந்துரைக்கபட்டுள்ளது. இது குறித்து மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. வண்ணார் மற்றும் நாவிதர் இனங்களைத் தாழ்த்தபட்டோர் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது பற்றி ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு அரசால் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட வில்லை.

887—

## தேர்வு முன்பயிற்சி மையத்தை மதுரையில் ஏற்படுத்துதல்

வினா எண் 4032—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது சென்னையில் இருக்கும் அகில இந்தியப் பணிகளுக்கான ''தேர்வு முன்பயிற்சி மையம் (Pre Exemination Training Centre )'' போன்ற நிலையத்தை மதுரை நகரில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னையில் ஏற்கனவே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவர்களுக்காக அகில இந்திய பணிகள் தேர்வுகளுக்கான முன்னோடி பயிற்சி மையம் ( Pre Examinaticn Training Centre ) ஒன்று இயங்கி வருகிறது. மேலும், மதுரை தியாகராஜர் கல்லூரியில் இம் முன்னோடி பயிற்சி நிலையத்திற்கான இணைப்புப் பகுதி நேர மையம் ஒன்று ஏற்கனவே இயங்கி வருகிறது. எனவே, மதுரையில் தனியாக மேலும் ஒரு முன்னோடி பயிற்சி நிலையம் ஏற்படுத்த இயலாது.

888—

## ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் அமைத்தல்

வினா எண் 4043 செல்வி கோ. மல்லிகா ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குறியாமங்கலம் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் அமைத்துத்தர அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உரிய முறையில் மனு செய்து கொண்டால் நட வடிக்கை எடுக்கப்படும்.

889—

## ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு பயிற்சியும் உதவித்தொகையும் வழங்கல்.

வினா எண் 4101—திரு. ஆ. சுப்புரத்தினம் ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் களுக்கு பயிற்சியும் உதவித் தொகையும் வழங்கும் திட்டம் தற்போது அமலில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பேர் களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவி செய்யப்படுகிறது?

(இ) ஆண்டு ஒன்றுக்கு இதன் மூலம் எவ்வளவு செலவா கிறது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாநில அரசின் நிதியிலிருந்து 1988 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் 17 வழக்கறிஞர்களுக்கும், சிறப்பு மத்திய நிதி உதவியிலிருந்து 1990-ஆம் ஆண்டில் தொடங் கப்பட்ட திட்டத்தின்கீழ் 37 வழக்கறிஞர்களுக்கும் உதவி செய்யப்படுகிறது.

(இ) இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் .. ரூபாய் 59,000 செலவாகிறது.

[1992 ஏப்ரல் 28

890 —

காலநடை மருவத்துமனை தொடங்கல்.

வினா எண் 4136—செல்வி கோ. மல்லிகா ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், சேந்திரக்கிள்ளையில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) இது பற்றி கருத்துருக்கள் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

891—

ஆடு, மாடு கூட்டுறவு சொசைட்டி ஏற்படுத்துதல்.

வினா எண். 4152—செல்வி கோ மல்லிகா ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வேளங்குப்பட்டு கிராமத்திற்கு ஆடு, மாடு கூட்டுறவு சொசைட்டி ஏற்படுத்தித் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கால்நடை பராமரிப்புத் துறையின் சிதம்பரம் கோட்ட உதவி இயக்குநருக்கு உரியமுறையில் மனு செய்துக் கொள்ளலாம்.



1992 ஏப்ரல் 28]

892—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கல்.

வினா எண் 4263—டாக்டர் மு. சீனியம்மாள் ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசித் தொகுதி, அன்னூர்கெம்மநாயக்கன் பாளையத்தில் அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டும் இது வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

893—

தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டுமனைப்பட்டா.

வினா எண் 4377—டாக்டர் மு. சீனியம்மாள் ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு நிலம் கையகப்படுத்தியதை தனியார் தடையாணை நீதிமன்றம் மூலம் பெறுவதைத் தடுத்து, அந்நிலத்தில் மனைப்பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

தனி நபர்களுக்குரிய சொத்துரிமை, அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். எனவே, நில உரிமையாளர்கள் அரசமைப்புச் சட்டத்தின் வரம்புக்குட்பட்டு தங்கள் உரிமையை நிலை நாட்ட நீதிமன்றத்தை நாடும்போது அவர்களின் அந்த அடிப்படை உரிமையைச் சட்டப்படி தடை செய்ய இயலாது.

[1992 ஏப்ரல் 28

894—

**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மயானச்சாலை வசதி.**

வினா எண். 4378—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மயானமும், மயானச் சாலை வசதியும் ஏற்படுத்தித் தர சட்டம் இயற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இயற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

895—

**பால்பண்ணையில் பால் விநியோகம்.**

வினா எண் 4407—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காரைக்குடியில் உள்ள ஆவின் பால்பண்ணையில் பால் விநியோகம் செய்வதில் தட்டுப்பாடு நிலவி, பொதுமக்கள் பால் கிடைக்காமல் அவதிப்படுவதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்பொழுது பால் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது.

896—

**தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி**

வினா எண் 4413—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

காரைக்குடியில் இந்திய ஆட்சிப் பணித் துறைக்கு (I.A.S.) தேர்வு எழுதும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சிக் கொடுக்கும் நிறுவனம் துவங்க அரசு முன்வருமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

தற்பொழுது ஒரு முன்னோடி பயிற்சி நிலையம், சென்னையில் இயங்கி வருகிறது. அம்முன்னோடி தேர்வுப் பயிற்சி நிலையத்திற்கு இரண்டு இணைப்பு மையங்கள் மதுரையிலும், திருச்சியிலும் உள்ளன. எனவே காரைக்குடியில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தற்போது மதுரை தியாகராஜர் கல்லூரியில் அல்லது திருச்சிராப்பள்ளி நேஷனல் கல்லூரியில் உள்ள இணைப்பு மையத்தில் சேர்ந்து அகில இந்தியப் பணிகளுக்கான நுழைவுத் தேர்வு எழுத பயிற்சி பெறலாம். காரைக்குடி போன்ற சிறிய நகரங்களில் ...னியாக முன்னோடி பயிற்சி முன்தேர்வு மையம் ஏற்படுத்த இயலாது.

897

**கால்நடைக் கிளை மருத்துவமனை**

வினா எண். 4643—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள கீழ்க்கலங்கல் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் கீழ்க்கலங்கல் கிராமத்தில் ஏற்கனவே ஒரு கேந்திர கிராம கிளை நிலையம் செயல்பட்டு வருவதால் மேலும் ஒரு கிளை மருத்துவமனை அமைக்க செயற்குறிப்பு இல்லை.

898—

**தாட்கோ அலுவலகம் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு கடன்.**

வினா எண் 4734—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ அலுவலகம் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு கடன் வழங்குவதில் பயனாளிகள் தேர்விற்கு விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா ?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1. தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவராகவும், ஏற்கனவே அரசுத் திட்டங்களின் கீழ் உதவி பெறாதவராகவும் இருக்க வேண்டும்.

2. தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் பயனாளிகள் செயல்படுத்தவிருக்கும் திட்டம் போதுமான வருவாய் ஈட்டித் தரக் கூடியதாக இருக்க வேண்டும்.

899—

ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண் 4835—திரு. எம். தனபால் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் சட்ட மன்றத் தொகுதியில் அடங்கிய தையூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) செங்கை எம். ஜி. ஆர். மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இதற்கான முன்மொழிவினை ஜனவரி 199?-ல் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பியுள்ளார் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இப்பொருள் குறித்து [illegible] மட்டக் குழுவில் முடிவு செய்யப்பட்டு அரசுக்கு வந்[illegible] [illegible] பரிசீலனை செய்யப்படும்.



992 ஏப்ரல் 28]

00—

களக்குடி கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை.

வினா எண் 4866—திரு. எஸ். எஸ். இராமசுப்பு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், களக்குடி கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

01—

தோல் பதனிடும் தொழிற்சாலை.

வினா எண் 4942—திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

"விளாத்திகுளம் தொகுதியில் வாழும் ஆதி திராவிடர்களுக்கு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைத்துத் தரப்படுமா ?

விடை—

விளாத்திகுளம் தொகுதியில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

02—

ஆதிதிராவிடர் அரசினர் மாணவர் மாணவியர் இல்லம்.

வினா எண் 4948—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம் குருவாரெட்டியூரில் ஆதிதிராவிடர் அரசினர் மாணவர், மாணவியர் இல்லம் 1991–92ல் திறக்க அரசு ஆணைப் பிறப்பிக்கப்படுமா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

செயற்குறிப்பு இல்லை.

903—

ஆட்டுப் பண்ணை புதுப்பித்தல்.

வினா எண் 5021— திரு. வெ. தமிழரசு, : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் அருகே கூட்டு ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள அரசு ஆட்டுப்பண்ணை நீண்ட காலமாக செயல்படாமல் உள்ளதோடு, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமும், பல அதிகாரிகளும் கொண்ட இப்பண்ணை மிகுந்த நஷ்டத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை புதுப்பித்து மீண்டும் செயல் முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் அருகே கூட்டு ரோட்டில் உள்ள அரசு சின்னசேலம் ஆட்டுப்பண்ணை ஆரம்பிக்கப்பட்ட 1957 ஆம் ஆண்டு முதற்கொண்டு இன்றுவரை பல கூடுதல் பிரிவுகள் தொடங்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

904—

வினா எண் 5046—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் ஆடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் சரிவர இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணிகளின் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் அருகே கூட்டு ரோடில் உள்ள அரசு சின்னசேலம் ஆட்டுப்பண்ணை ஆரம்பிக்கப்பட்ட 1957 ஆம் ஆண்டு முதற்கொண்டு இன்று வரை பல கூடுதல் பிரிவுகள் தொடங்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

905—

அரசினர் உறைவிடப்பள்ளி ஏற்படுத்துதல்.

வினா எண் 5104—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், தாளவாடி ஒன்றியத்திற்குட்பட்ட மாவநத்தம், காளி திம்பம் போன்ற பகுதி ஆதி திராவிடர் குழந்தைகளின் நலம் கருதி காளி திம்பம் என்ற இடத்தில் ஓர் அரசினர் உறைவிடப் பள்ளியை 1991-92-ல் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆதிதிராவிடர்களின் குழந்தைகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்படுவதில்லை. பழங்குடியினரின் குழந்தைகளுக்கு மட்டுமே உண்டு. உறைவிடப் பள்ளிகள் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் பழங்குடியினர் இருந்தால் தேவையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

906—

வினா எண் 5107—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில், கேர்மாளம் அப்ரோட்டில் ஆதி திராவிடர்கள் வசிக்கும் காலனியில் ஓர் அரசினர் உறைவிடப் பள்ளி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 ஏப்ரல் 28

விடை—

ஆதிதிராவிடர் குழந்தைகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகள் இத்துறையால் நடத்தப்படுவதில்லை. பழங்குடியினரின் பிள்ளைகளுக்கு மட்டுமே உண்டு. உறைவிடப் பள்ளிகள் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

907—

ஆதிவாசிகளுக்கு சாலை மற்றும் குடிநீர் வசதி.

வினா எண் 5314—திரு. கே. கந்தசாமி ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மலைகளில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கு விளக்கு வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்க மத்திய அரசு மாநில அரசுக்கு நிதியுதவி செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

908—

கால்நடை மருந்தகம் அமைத்தல்.

வினா எண் 5317—திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம் தெடாவூரில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் எனன் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

909—

ஜெர்சி மாட்டுப்பண்ணை அமைத்தல்.

வினா எண். 5319 டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வால்பாறையில் ஜெர்சி மாட்டுப் பண்ணை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

910—

சீந்திவளையர் இன மக்கள்

வினா எண். 5355—திரு. பி. வி. இராஜேந்திரன் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் தொகுதி, கோடியக்காடு கிராமத்தில் வசித்து வரும் சீந்திவளையர் இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): (சீந்திவளையர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக அக்கோரிக்கையை மானிடஇயல் வல்லுனர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைக்காக அரசு அனுப்பியுள்ளது. ஆனால் இக்குழு திருத்தியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திருத்தி அமைக்கப்பட்டவுடன் அக்குழுவுக்கு இக்கோரிக்கை அனுப்பப்பட்டு அதன் பரிந்துரை பெறப்படும். அப்பரிந்துறைக்கேற்ப உரிய நடவடிக்கை அரசால் தொடரப்படும்.

[1992 ஏப்ரல் 28

911—

பால்பண்ணை அமைத்தல்.

வினா எண். 5376—திரு. ம. சின்னசாமி ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

அமுல் என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட் நிறுவனம் போல் பால்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஏற்கனவே அதேபோன்ற பால்பண்ணை இணையம் ''ஆவின்'' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது.

912—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண். 5414—திரு. பி. வி. இராஜேந்திரன் ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், அருந்தவம்புலம் மற்றும் கள்ளிமேடு ஆகிய கிராமங்களில் தனித்தனியே கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அருந்தவம்புலம் என்னும் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்கும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் அதே ஒன்றியத்தைச் சேர்ந்த கள்ளிமேடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று துவக்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

913—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 5417—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வேதாரண்யம் தொகுதி, கரியாம்பட்டினம் கிராமத்தில் அரசு கால்நடை மருந்தகம் அமைக்க முன்வருமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

இல்லை.

914—

கால்நடை மருந்தகங்களை அதிகரிக்கும் திட்டம்.

வினா எண் 5418—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பெருகிவரும் கால்நடைகளை பராமரிக்கவும், பாதுகாக்கவும் விதிமுறைகளைத் தளர்த்தி கால்நடை மருந்தகங்களை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஆம்.

915—

ஆட்டுப்பண்ணை அமைத்தல்

வினா எண் 5624—திரு. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மலைகள் சூழ்ந்த நத்தம் தொகுதியில் ஆடுகள் பெருமளவில் வளர்க்கும் சாத்தியக்கூறுகள் இயற்கையாக இருப்பதால் அப்பகுதியில் ஆடு வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு ஆட்டுப்பண்ணை ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்பொழுது நத்தம் தொகுதியில் ஆடு வளர்ப்புப் பண்ணை துவக்கும் உத்தேசம் இல்லை.

916—

ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா

வினா எண். 5691—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) நத்தம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க 1985–86 முதல் இதுவரை ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு ?

[1992 ஏப்ரல் 28

(ஆ) கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் இன்னமும் பிரித்து வீட்டுமனைப்பட்டா வழங்காமல் ஏதேனும் நிலங்கள் உள்ளதா?

(இ) அவற்றைப் பிரித்து எப்போது பட்டா வழங்கப்படவிருக்கிறது?

விடை—

(அ) (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

(அ) நத்தம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க 1985-86 முதல் இதுவரை மொத்தம் 4.42.0 ஹெக்டேர் நிலம் கையகம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ): 1. நத்தம் தொகுதியில் உள்ள சிறுகுடி நத்தம் கிராமத்தில் சர்வே எண். 533/6பி1-ல் 0.46.0 ஹெக்டேர் நிலம் 19 ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டு விட்டது.

2. செல்லப்பநாய்க்கன்பட்டி கிராமத்தில் சர்வே எண். 103/2பி 2இல் 0.36.5 ஹெக்டேர் நிலம் 14 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டு விட்டது.

3. ஊராளிப்பட்டி கிராமத்தில் புல எண். 277/4 இல் 0.40.5 ஹெக்டேர் நிலம் 16 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டு விட்டது.

4. நத்தம் வேலாம்பட்டி கிராமத்தில் சர்வே எண் 324, மற்றும் பல சர்வே எண்ணில் 2.38.0 ஹெக்டேர் நிலம் 130 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இந்நில ஆர்ஜிதத்தை எதிர்த்து நில உரிமையாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 13593/90 முதல் 13595/90இல் வழக்கு தொடர்ந்து, தடையாணை பெற்றுள்ளார். அந்த தடையாணையை அகற்றவும் வழக்கினை எதிர்க்கவும் அரசு வழக்கறிஞர் அறிவுறுத்தப்பட்டுள்ளார், வழக்கின் இறுதி முடிவு அரசுக்கு சாதகமாக முடிந்த



1992 ஏப்ரல் 25]

வுடன் தொடர் நடவடிக்கை எடுத்துப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பணிக்கப்படுவார்கள்.

5. வத்திப்பட்டி, ரெட்டியபட்டி கிராமத்தில் சர்வே எண் 303/1ஏ-வில் 0.81.0 ஹெக்டேர் நிலம் 37 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. அவார்டு பாஸ் செய்யும் நிலையிலுள்ளது. விரைவில் பட்டா வழங்கப்படும்.

917—

## புல் பண்ணை அமைத்தல்

வினா எண் 5711—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி ஒன்றியம் கூவதூத்துக் கூட்பட்ட குரும்பப்பட்டியுள்ள சிறுமலை அடிவாரப் பகுதியில் சுமார் 100 ஏக்கருக்கும் மேல் உள்ள புல் வளர்க்கக்கூடிய தரிசு நிலத்தில், அரசு புல் பண்ணை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

புல்பண்ணை அமைக்க இயலாது.

918—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 5721—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம் செவல்பட்டி கிராமத்தில் பெருமளவில் கால்நடைகள் இருப்பதால் அங்கு கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கையாது?

[1992 ஏப்ரல் 28

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

919—

கால்நடைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 5765—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கால்நடைகளை அதிகமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வேதாரண்யம் தொகுதியில் கால் நடைப் பண்ணை அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

இல்லை.

920—

பால் உற்பத்தி நிலையம் அமைத்தல்

வினா எண் 5794—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறையில் பால் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

921—

பால் பண்ணை அமைத்தல்

வினா எண் 5845—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம் கரூரில் பால்பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

திருச்சி மாவட்டம் கரூரில் மூன்றாம் பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 68 இலட்சம் செலவில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

922—

ஆதி திராவிடர்களுக்கு தரமான கன்றுகள் வழங்கல்

வினா எண் 5941—திரு. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிட மக்களுக்கு தரமான கன்றுகள் மானியத்தோடு இவ்வாண்டு எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டன?

(ஆ) ஒரு கன்றின் விலை என்ன ?

விடை—

(அ) 1990-91ஆம் ஆண்டில் மொத்தம் 12 பேர்களுக்கு கொடுக்கப்பட்டன.

(ஆ) ஒரு கன்றின் விலை ரூ. 1,350

923—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 6575—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

" தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழைக்கத்தேவனில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?"

விடை—

இல்லை.

924—

வினா எண் 6954—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேதுபாவாசத்திரத்தில் கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

925—

ஆதி திராவிட மாணவர்களுக்கு இலவச உடைகள்

வினா எண் 5956—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வி ஆண்டு துவக்கத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு எத்தனை ஜோடி இலவச உடைகள் வழங்கப்படுகின்றன ?

(ஆ) தற்போது வழங்கப்படும் இலவச உடைகள் எண்ணிக்கையை உயர்த்தக்கோரி பரிந்துரைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசின் முடிவு என்ன ?

விடை—

(அ) கல்வி ஆண்டு துவக்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவியருக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 10ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவ, மாணவியருக்கும் இரண்டு ஜோடி இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன.



(ஆ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

926—

தாலுகாதோறும் ஆதி திராவிடர் நல அலுவலகம்.

வினா எண் 5963—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாவட்டந்தோறும் செயல்படுவதைப்போல, தாலுகாதோறும் ஆதி திராவிடர் நல அலுவலகம் செயல்படச் செய்வது பற்றி ஏதேனும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

927—

காடுபடுபொருட்களை விற்பனை செய்தல்.

வினா எண் 5976—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) மலைவாழ் பழங்குடியினர் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்து காடுபடுபொருட்களை பகிரங்க ஏலம் மூலம் அல்லாமல் நேரடி விற்பனை செய்ய வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

928—

நடமாடும் கால்நடை மருந்தகம் அமைத்தல்.

வினா எண் 6000—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் '' நடமாடும் கால்நடை மருந்தகம்'' (Mobile Animal Husbandary Medical Centre) ஏதேனும் செயல்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் 50 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

929—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 6098—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பரா:

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பெத்தநாய்க்கன் பாளையம் ஒன்றியத்தில் முத்துக்கவுண்டனூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

தற்போது வாய்ப்பு இல்லை.

930—

பாலிதீன் பைகளில் பால் விநியோகம்.

வினா எண் 6176—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் தொகுதி களம்பூர் மற்றும் சந்தவாசல் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் அதிக அளவு பால் உற்பத்தி



செய்யப்படுவதால் பால் விநியோகம் பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): போளூர் தொகுதியைச் சேர்ந்த களம்பூர் மற்றும் சந்தவாசல் ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் பொதுவாக 100 அல்லது 200 மில்லி லிட்டர் பால் மட்டுமே வாங்குவதால், இந்த அளவுக்கான பாலை பாலிதீன் பைகளில் அடைத்து வழங்குவது இயலாது.

931—

செயற்கை கருவூட்டல் கால்நடை நிலையத்திற்கான அலுவலகம்.

வினா எண் 6338—திரு. எம். ஆண்டி அம்பலம்; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அண்ணா மாவட்டம், நத்தம் நகரில் உள்ள செயற்கை கருவூட்டல் கால்நடை நிலையத்திற்கான அலுவலகம் அமைக்க வேண்டுமென அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

932—

பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 6439—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

''தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் ஆதி திராவிடர் தெருவில் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

933—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 6453—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முதுகாடு ஊராட்சி முதுகாட்டில் உதவி கால்நடை மருத்துவமனை ஒன்று அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

934—

கூட்டுறவு பால் பண்ணை அமைத்தல்.

வினா எண் 7077—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சி பூலாங்கொல்லையில் கூட்டுறவு பால்பண்ணை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

935—

கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 7952—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை தொகுதி வாராப்பூர் பஞ்சாயத்துக்குட்பட்ட வாராப்பூரில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

936—

கால்நடைகளுக்கு வெக்கை நோய் வராமல் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 8066—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடைகளுக்கு வெக்கைநோய் எதனால் ஏற்படுகின்றது ?

(ஆ) அந்நோய் வராமல் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

வெக்கைநோய் நச்சுத்தன்மை வாய்ந்த நுண்ணுயிர் கிருமிகளால் உண்டாகும் ஒரு கொடிய தொற்றுநோய். முதலாவதாக இந்நோய் பசு, எருமை ஆகிய இனங்களில் தோன்றும். மேலும் இந்நோய் கால்நடைப் பணியாளர்களின் துணிகள், பாத்திரங்கள் மூலமும் புல் பண்ணைகள் மற்றும் காட்டில் வாழும் மான்கள் மூலமும் கால்நடைகளில் ஏற்படலாம்.

தமிழ்நாடு அரசு, வெக்கைநோய்த் தடுப்புத் திட்டத்தை 5—3—1965 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை மத்திய அரசிடமிருந்து பெற்று, வெக்கைநோயைத் தடுக்கவும் மேலும் பரவாமலிருக்கவும், வெக்கைநோய் தடுப்புச் சாவடிகள் ஏற்படுத்தியும் மற்றும் எல்லையோர கண்காணிப்புக் குழுக்களைப் பலப்படுத்தி

யும் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது 26 மாவட்டக் குழுக்கள் 10 கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் 10 சோதனைச் சாவடிகள் வெக்கைநோயைத் தடுக்க இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. கால்நடை பராமரிப்புத்துறை மூலம், கால்நடைகளுக்கு வெக்கைநோய் தடுப்பூசி போடும் பணியும் முறைப்படி மேற்கொள்ளப்படுகிறது.

937—

Insurance-cum-Retirement Benefit Special Scheme for Fishermen.

வினா எண் 441—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு மீனவளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீனவர்களுக்கான (Insurance-cum-Retirement Benefit Special Scheme) மீண்டும் கொண்டு வரப்படுமா?

(ஆ) இல்லையெனில் அத் திட்டத்தில் சேர்த்து பணம் கட்டியவர்களுக்கு அப்பணத்தைத் திருப்பித்தர அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): இத்தகைய திட்டம் ஏதும் இதுவரை நடைமுறையில் இல்லை. எனவே, மீனவர்களிடம் இதற்காக பணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

938—

மீனவர்களுக்கு நாட்டுப்படகு வாங்க நடவடிக்கை.

வினா எண் 1165—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக 1984 ஆம் வருடம் பங்குத் தொகை தலா ரூ. 400 வீதம் நாட்டுப் படகு வாங்கித் தருவதாக வசூல் செய்தபிறகு, இதுவரை அதுகுறித்து நடவடிக்கை எடுக்காதது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

தெரியும். ஒப்பளிக்கப்பட்ட மானியத் தொகையில் ரூ. 1,45,500 மீனவர்களுக்கு கண்ணாடி இழைப் படகுகள் மற்றும் வலைகள் ஆகிய மீன்பிடி சாதனங்கள் வழங்கப்பட்டன. ஆனால்



நாட்டுப் படகு கட்டுவதற்கு மானியத்தொகைக்கு ஈடாக வங்கிக் கடன் கிடைக்கப்பெறாத காரணத்தினால் படகுகள் கட்ட இயலாமல் திட்டம் கைவிடப்பட்டது. நாட்டுப் படகு மற்றும் வலைகள் வழங்குவதற்கு அச்சங்கம் உறுப்பினர்களிடமிருந்து ரூ. 400 வீதம் பங்குத் தொகையாக வசூலித்துள்ள தொகை சங்கக் கணக்கில் உள்ளது.

939—

கடல்வாழ் உயிரின காட்சி சாலை அமைக்கும் திட்டம்

வினா எண் 2247— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமேஸ்வரத்தில் கடல்வாழ் உயிரின காட்சிசாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

940—

மீனவர் காலனி கட்டுதல்.

வினா எண் 3025—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் புதிய மீனவர் காலனி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

941—

வினா எண் 3147—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவன் ஊராட்சி, சோமநாத பட்டினம் மீனவர்களுக்கு 40 காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

இல்லை.

942—

மீனவர்களுக்கு சலுகைகள்.

வினா எண் 4741—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மற்ற மீனவர்களுக்கு அரசால் கொடுக்கப்படுகிற எல்லா சலுகைகளும் குமரி மாவட்ட உள்நாட்டு மீனவர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மீன்துறையினால் மீனவர்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களும் சலுகைகளும் தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் ஒரே சீராகவே உள்ளன. கன்னியாகுமரி மாவட்ட உள்நாட்டு மீனவர்களுக்கும் இதர மாவட்டங்களில் உள்ள உள் நாட்டு மீனவர்களுக்கும் அளிக்கப்படும் சலுகைகளில் வேறுபாடு ஏதுமில்லை.

943—

வினா எண் 4939—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

விளாத்திக்குளம் தொகுதியில் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

944—

மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பரிந்துரை.

வினா எண் 5125—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் ஒன்றியம் மாம்பட்டியில் உள்ள கோமுட்டி குளத்தில் மீன் வளர்ப்போர் தாமரை இலை எடுப்போர் இடையே



1992 ஏப்ரல் 28]

ஏற்பட்ட சட்ட ஒழுங்கு பிரச்னை தீர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோமுட்டி குளத்தில் மீன் வளர்ப்போர் மற்றும் தாமரை இலை பூ பறிப்பவர்களிடையே ஏற்பட்ட தகராறு தீர கோமுட்டி குளத்தில் மீன்வளர்ப்பதை தற்காலிகமாக ஒரு வருடத்திற்கோ அல்லது அடுத்த ஊராட்சி தேர்தல் நடக்கும் வரையிலோ எது முந்தையதாக இருக்குமோ அதுவரையில்நிறுத்தி வைக்கலாம் என்றும் அதன்பிறகு அக்குளத்தில் மீன் வளர்ப்போரைத் தொடர்ந்து மீன் வளர்க்க அனுமதிக்கலாம் என்றும் அவ்வாறு அனுமதிக்கும்போது குளத்தில் தாமரை இலை மற்றும் பூவின் மதிப்பையும் சேர்த்து மீன் வளர்ப்பிற்காக குத்தகைத் தொகையை வசூலிக்கலாமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மீன்துறை ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்டது அப்பரிந்துரை மாவட்ட ஆட்சித் தலைவரால் ஏற்கப்பட்டது. அதன்படி கோமுட்டி குளத்தில் மீன் வளர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் அக்குளத்தில் மீன்வளர்ப்பவர் அதனை ஆட்சேபித்து திண்டுக்கல் முன்சீப் கோட்டில் இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார்.

945—

மீனளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்.

வினா எண் 5763—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகுமீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மீனவர்கள் நலன் பாதுகாக்கப்படுவதற்காக மீனளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு உடன் தேர்தல் நடத்த முன் வருமா?

விடை—

ஆம்.

[1992 ஏப்ரல் 28

946—

இறால் வளர்ப்பு நிலையம்.

வினா எண் 5764—திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலோர மீனவப் பகுதியான வேதாரண்யம் பகுதியில் மீன் சினைப்பண்ணை இறால் வளர்ப்பு நிலையம் மற்றும் இறால், மீன்குஞ்சு பொறிப்பு மாதிரி நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கடலோரப் பகுதியான வேதாரண்யம் பகுதியில் மீன் சினைப் பண்ணை, இறால் வளர்ப்பு நிலையம் மற்றும் மீன்குஞ்சு மாதிரி நிலையங்கள் அமைக்க, சுற்றுப்புற சூழ்நிலை தடை மற்றும் நிலநீரின் தன்மை காரணமாக வாய்ப்பு ஏதுமில்லை.

947—

மீன் காட்சியகம் அமைத்தல்.

வினா எண் 5828—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வால்பாறை தொகுதி அக்காமலை நீர்வீழ்ச்சியின் ஓரத்தில் மீன் காட்சியகமும் மீன் விற்பனை நிலையமும் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) வால்பாறை தொகுதி அக்காமலை நீர்வீழ்ச்சியின் ஓரத்தில் மீன் காட்சியகமும், மீன் விற்பனை நிலையமும் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

948—

மீனவர்களுக்கு கப்பல் படையினரால் ஏற்படும் தொல்லைகளை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 6555—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

"தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம் மல்லிப்பட்டினத்தில் தங்கி உள்ள கப்பல் படையினர் மீனவர்களை பல தொல்லைக்கு உள்ளாக்குவதைத் தடுக்க மைய அரசை வற்புறுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இது குறித்து திட்டம் ஏதும் இல்லை.

949—

மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல்.

வினா எண் 6618—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

மீனவர்கள் கடலில் தொழில் செய்யும்போது இறந்தால் வழங்கப்படும் உதவித் தொகையை, காலம் தாழ்த்தாது இறந்த மூன்று மாதத்திற்குள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இறந்த மீனவரின் வாரிசுதாரர்கள் தாமதமின்றி ஆவணங்கள் பெற்று வழங்கினால் உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

950—

மீன் வளர்ப்பு நிலையம் அமைத்தல்.

வினா எண் 6671—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் பகுதி வசூர் கிராமத்தில் உள்ள குளத்தில் மீன் வளர்ப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

(அ) வசூர் கிராமத்தில் நிலவுகின்ற சூழ்நிலைகள் மீன் வளர்ப்புக்கு ஏற்புடையதாக இராத காரணத்தால் மீன் வளர்ப்பு நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

951—

## இறால் வளர்ப்பு நிலையம்.

வினா எண் 8153—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி கடலோரப் பகுதியில் இறால்குஞ்சு வளர்ப்பு நிலையமும் இறால் மீன்குஞ்சு பொறிப்பு நிலையமும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

952—

## மீனவர்களுக்கு உதவித்தொகை.

வினா எண் 8154 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்க... வினாவிற்கு விடையளிப்பாரா :

கடலில் தொழில் செய்யும்போது இறந்தால் சம்பந்தப் பட்ட கூட்டுறவு மீனவர் சங்கச் சான்றிதழுடன் மட்டும் உதவித் தொகையை வழங்க வகை செய்யும் சட்டம் இயற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

இத்தகைய சட்டம் இயற்ற வழியில்லை.



953—

## நலிவடைந்த நிலையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு உதவ தனிவாரியம்

வினா எண் 98—திரு. டி.எம். ரங்கராஜன் : மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

நலிவடைந்த நிலையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு உதவுகின்ற வகையில் தனி வாரியம் அமைத்திட அரசு பரிசீலனை செய்யுமா ?

விடை—

இல்லை.

954—

## மார்த்தாண்டம் காப்பிக்காடு.

வினா எண் 515—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்திலுள்ள Industrial Estate (காப்பிக்காடு) பல ஆண்டுகளாக இயங்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தொழிற்கூடங்கள் பெற்றவர்களுக்கு போதுமான உற்பத்தி ஆணைகள் இல்லாததாலும், நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாகவும் உற்பத்தியை நிறுத்தி வைத்துள்ளார்கள். இச்சூழ்நிலையில் அரசு நடவடிக்கை எதுவும் எடுக்கும் நிலைமை ஏற்படவில்லை.

955—

## கெமிக்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 758—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலையில் கிடைக்கும் கடுக்காய் கொட்டையைப் பயன்படுத்தி சின்ன

சேலம் பகுதியில் கெமிக்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

956—

சிறுதொழில்கள் தொடங்க பதிவு செய்தவர்கள்

வினா எண் 1095—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1990–91-ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக சிறுதொழில்கள் தொடங்க பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டது?

விடை—

(அ) மற்றும் (ஆ) மாவட்ட வாரியாக சிறு தொழில்கள் தொடங்க பதிவு சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தவர்களில் நிரந்தர பதிவு சான்றிதழ் பெற 15,700 பேரும் தற்காலிக மாக பதிவு சான்றிதழ் பெற 51,645 பேரும் ஆவர். அதில 14,914 பேருக்கு நிரந்தரமாகவும் 49,095 பேருக்கு தற் காலிகமாகவும் சிறுதொழில் தொடங்க சான்றிதழ் வழங்கப் பட்டது.

957—

சிறுதொழில்கள் தொடங்க பதிவு செய்தவர்கள்.

வினா எண் 1770—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணவாளக்குறிச்சியிலுள்ள ஐ.ஆர்.இ. நிறுவனத் தின் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்திக் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுகின்ற சிறு தொழில்கள் நடுத்தரத் தொழில்கள் பற்றிய தகவல்கள் என்ன ?

(ஆ) ஏனைய தொழில்கள் பற்றிய தகவல்கள் என்ன?



விடை—

(அ) ஏதும் இல்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சியி லுள்ள ''இந்தியன் ரேர் எர்த்ஸ்'' நிறுவனத்தால் ஒரு ''டைட்டானியம் டை ஆக்ஸைடு'' தொழிற்சாலை துவங்கு வதற்காக இடம் தேர்வு செய்வது உட்பட பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியாக இந்தத் தொழிற்சாலை வ.உ. சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள குதிரை மொழி என்னும் இடத்தில் அமைக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்தொழிற்சாலை துவங்குவது கைவிடப்பட்டது.

958—

விளாத்திகுளம் தொகுதியில் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 3391—திருமதி என். கனகவல்லி : மாண்பு மிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

விளாத்திகுளம் தொதியில் கோடைக்காலப் பயிர்களான அவுரி, நித்தியகல்யாணி அதிகமாகப் பயிரிடப்படுவதால் இப் பயிர்களைப் பயன்படுத்த இங்கு தொழிற்சாலை அமைக்கப் படுமா ?

விடை—

இல்லை.

959—

வினா எண் 3395—திருமதி என். கனகவல்லி : மாண்பு மிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் தொகுதியில் பனை அதிகமாக இருப்பதால் பனை வெல்லம் தயாரித்தல், பனை ஓலையில் அழகு சாதனங்கள் தயாரிக்கும் சிறுதொழிற்சாலைகள் அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆமெனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

விடை—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் பனை வெல்லம் மற்றும் பனை ஓலை அழகு சாதனங்கள் தயாரிக்கும் சிறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

960—

## கிராமங்களில் தகவல் மையம் ஏற்படுத்துதல்

வினா எண் 4259—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கிராமங்களில் தொடங்க வேண்டிய தொழில் இயந்திரங்கள் தொடர்பான விபரம் முதலீடு திரட்டுதல், நிர்மானித்தல் ஆகிய விவரங்கள் அளிக்கும் தகவல் மையத்தை கிராமங்களில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

இல்லை.

961—

## பாக்கம் கிராம பாலித்தீன் மெல்லிழைக்கோணி ஆலைத் தொழிலாளர்கள்

வினா எண் 4424—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் தொகுதியில் பாக்கம் கிராமத்தில் பாலித்தீன் மெல்லிழைக்கோணி ஆலை கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதைத் திறந்து தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலையளிக்க அரசு முன்வருமா ?





விடை—

இதற்கான திட்டம் ஏதும் இல்லை.

962—

## முந்திரித் தொழிற்சாலை தொடங்கும் திட்டம்.

வினா எண் 4629—சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள கந்தர்வக்கோட்டை, ஆதனக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் முந்திரி அதிகமாக விளைவதால் முந்திரி தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

963—

## உடுக்கம்பாளையத்தில் Rubberised Coir Unit அமைத்தல்

வினா எண் 4651—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலைப் பொள்ளாச்சிப் பகுதியில் பெருமளவில் உற்பத்தியாகும் தென்னைநாரைப் பயன்படுத்தி Rubberised Coir Unit ஒன்று உடுக்கம்பாளையத்தில் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

சென்னை-600 009. 164944

[1992 ஏப்ரல் 28

964—

## ஆதரவற்ற இஸ்லாமியப் பெண்களுக்கு நிதியுதவி செய்யும் திட்டம்.

வினா எண் 4682—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வக்ப் வாரியம் மூலம் ஆதரவற்ற இஸ்லாமியப் பெண்களுக்கு நிதியுதவி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் கீழ் 1990–91-ல் உதவி பெற்றோர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

965—

## முந்திரிக்கொட்டை தொழிற்சாலை தொடங்கும் திட்டம்.

வினா எண் 4707—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆலங்குடி தொகுதியில் முந்திரிக்கொட்டை அதிகமாக உற்பத்தியாகி வெளியிடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதால் அங்குள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.

966—

## கைவினைப் பொருட்கள் தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 4817—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 28]

காரைக்குடி தொகுதியில் பனைமரம் ஏறுகின்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் பனை ஓலையைக் கொண்டு தயாரிக்கும் கைவினைப் பொருட்கள் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

பனை ஓலைப் பொருள்கள் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

967—

## தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 4818—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

காரைக்குடி தொகுதியில் வேப்பங் கொட்டை அதிகம் கிடைப்பதால் அதை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் தொகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அதைச்சார்ந்த தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

இல்லை.

968—

## ரப்பர் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

வினா எண் 4822—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் தொகுதியில் நம்மியந்தல் கிராமத்தில் ரப்பர் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

969 —

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் மேம்பாட்டிற்காக அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை.

வினா எண் 5559—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கதர் மற்றும் கிராமத் தொழில்கள் மேம்பாட்டிற்காக அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை மிகக்குறைந்த அளவு என்று கூறப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இனியேனும் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யவும், கிராமத் தொழில்கள் மேம்பாடடைய நவீன யுக்திகளைப் பயன்படுத்திச் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை—

(அ) அரசு கதர் கிராமத் தொழில்களை ஊக்குவிக்க ஒவ்வொரு ஆண்டும் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

(ஆ) அனுமதிக்கப்படும் நிதி உதவி நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி கதர் கிராமத் தொழில்கள் ஊக்குவிப்பதற்காகவும் செலவழிக்கப்படுகிறது.

970—

காதி கிராப்ட் விற்பனைக் கூடங்கள்.

வினா எண் 5618—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் காதி கிராப்ட் விற்பனைக் கூடங்கள் எத்தனை இயங்குகின்றன?



(ஆ) தென் மாவட்டங்களில் பெரியோர்களில் பெரும்பாலோர் கதர் உடுத்தும் பழக்கமுள்ளவர்களாக இருப்பதால் ஒவ்வொரு தாலுகா தலைநகர்களிலும் காதி கிராப்ட் விற்பனைக்கூடம் துவங்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 178 காதி கிராப்ட்டுகள் இயங்குகின்றன.

(ஆ) ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் காதி கிராப்ட்டுகள் திறக்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

971—

உலமாக்களுக்குப் பென்ஷன்.

வினா எண் 5728—திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் விண்ணப்பம் செய்த எல்லா உலமாக்களுக்கும் பென்ஷன் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எல்லா உலமாக்களுக்கும் பென்ஷன் கிடைக்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் உள்ள தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வக்ப் நிறுவனங்கள் மற்றும் பள்ளி வாசல்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிரம்பிய, வறிய நிலையில் உள்ள உலமாக்கள், ஓய்வூதியம் வேண்டி அரசுக்கு விண்ணப்பித்துள்ள எல்லோருக்கும் முதுநிலைப்படி (Seniority) அவ்வப்போது ஏற்படும் காலியிடத்தில் அல்லது அரசு கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் அனுமதிக்கும் இடத்தில் அவரவர் வரிசை முறைப்படி ஓய்வூதியம் வழங்கப்படும்.

53;135—64

[1992 ஏப்ரல் 28

972—

வினா எண் 6107—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உலமாக்கள் ஓய்வுகால ஊதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

விடை—

(அ) 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு உலமாக்களின் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மோதினார், பேஷ்இமாம் மற்றும் அரபி மொழி ஆசிரியர் உட்பட 1,200 பேர் பயனடைந்து வருகின்றனர். 1991-92-ஆம் ஆண்டுக்கு, கூடுதலாக 100 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவிருக்கின்றது.

(ஆ) ஓய்வூதியம் கோரிய 357 தகுதியான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

973—

பனைப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையங்கள்.

வினா எண் 6254—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பனைப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையங்கள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) இத்தகு நிலையம் எந்த நெறிமுறைகளின்படி அமைக்கப்படுகிறது ?

(இ) நத்தம் தொகுதியில் பனைமரங்கள் ஏராளமாக இருப்பதால் அங்கும் இத்தகு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குலவண்ணிகபுரத்தில் தேசிய அளவில் பனைப் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு மூலம் ஆரம்பித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1992 ஏப்ரல் 28]

(ஆ) பனைத் தொழில் மேம்பாட்டிற்கான ஆராய்ச்சி நடத்தவும், நவீன கருவிகளுடன் விஞ்ஞான முறைப்படி கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

(இ) நத்தம் தொகுதியில் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிப்பது சம்பந்தமாக தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் தனியாக விரிவான ஆய்வு செய்யும்.

974—

புதிதாக தொழில் முனையும் பெண்களுக்கு சிறப்புப் பயிற்சி.

வினா எண் 7744—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதிதாக தொழில் முனையும் பெண்களுக்கு சிறப்புப் பயிற்சி அரசு அளிக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு இந்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது ?

(இ) இதனால் நடப்பு ஆண்டு வரையில் பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) 1991-92 ஆம் ஆண்டு முதல் சிறப்புப் பயிற்சி அரசு பெண்களுக்கு அளிக்கிறது.

(ஆ) பெரியார், பசும்பொன் தேவர், இராமநாதபுரம், தென் ஆற்காடு, காமராசர், திருச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை, நீலகிரி, திண்டுக்கல் அண்ணா, தஞ்சாவூர், சேலம், கோவை, தர்மபுரி ஆகிய திருவண்ணாமலை, வட ஆற்காடு, கோவை, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் டெக்னிகல் அண்டு கன்சல்டன்சி நிறுவனம், சென்னை, சிறுதொழில் சேவை நிலையம், மதர் திரேசா பல்கலைக் கழகம், சென்னை, எஸ். சி. ஏஸ். கோத்தாரி அகடெமி, சென்னை, ஆகிய பயிற்சி கொடுக்கும் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு அரசு ரூ. 10.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் 800 பெண் தொழில் முனைவோர்கள் பயனடைவார்கள்.

975—

## கதர் பவன் மற்றும் காதி கிராப்ட் நிறுவனங்களில் விற்பனை.

வினா எண், 7888—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கதர் பவன் மற்றும் காதி கிராப்ட் நிறுவனங்களில் தரமான பொருட்கள் இருந்தும் விற்பனை குறைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விற்பனையை அதிகரிக்க அரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கதர் விற்பனை நிலையங்களில் கதர் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறதே தவிர குறையவில்லை.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

## (இ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

## தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 2559—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் சொர்ணக்காடு தொடக்கப் பள்ளியின் ஆசிரியர் பற்றாக்குறையை போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியத்தில் உள்ள சொர்ணக்காடு ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் (ஜூனியர்) பணியிடம் வழங்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.



—

வினா எண் 2712—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் செங்கமலம் ...யர் தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையை போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி ஒன்றியத்தில் உள்ள செங்கமலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் (ஜூனியர்) பணியிடம் வழங்கப்பட்டு ஆணை இடப்பட்டுள்ளது.

—

## தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் நியமிக்க நடவடிக்கை.

வினா எண் 3140—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் தொடக்கப்பள்ளியில் 2 ஆசிரியர் இருந்ததில் ஒரு ஆசிரியர் மட்டும் தான் இருப்பதால் மற்றொரு ஆசிரியர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

திருவத்திதேவன் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ஒரு தலைமை ஆசிரியர் பணியிடமும் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடமும் உள்ளது. அதில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றியவர் மாறுதலில் வேறு ஒன்றியத்திற்குச் சென்றதால் அப்பணியிடம் 18—6—1991 முதல் காலியாக இருந்தது. அப்பணியிடம் 4—10—1991-ல் ஒரு வழி மாறுதல் மூலம் நிரப்பப்பட்டுவிட்டது. எனவே மேற்படி பள்ளியில் தற்போது பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

4—

## ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமித்தல்.

வினா எண் 5098—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், கொத்தட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) ஆவன செய்யும்.

(ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் கொத்தட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் (ஜூனியர்) பணியிடம் வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

5—

## ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கல்.

வினா எண் 5535—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம் பந்தல் பஞ்சாயத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

6—

## ஆசிரியர்கள் வியாபாரம் மற்றும் சிட்பண்ட் நடத்துவதை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 5916—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் ஆசிரியர்கள் தற்போது வியாபாரம் செய்தல், சிட்பண்ட் நடத்துதல் போன்ற பணிகளில் ஈடு படுவதால் சரிவர கல்வி போதிப்பதில்லை என்பதையும் அதனால் கல்வித் தரம் குறைந்துவிட்டது என்பதையும் அரசு அறியுமா ?

(ஆ) அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



விடை—

(அ) மற்றும் (ஆ) இது குறித்து புகார்கள் ஏதும் பெறப் படவில்லை. அவ்வாறு பெறப்பட்டால் அதைத் தடுக்க விதிகளின்படி ஆசிரியர்களின் மீது நடவடிக்கை எடுக்க இயலும்.

7—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 1045—திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1991–92ஆம் நிதி ஆண்டில் விளவங்கோடு தாலுக் காவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1991–92ஆம் நிதியாண்டில் விளவங் காடு தாலுக்காவில், ஆரம்ப சுகாதார நிலையம், ஆரம்பிப் பதற்கான செயற்குறிப்பு இயக்குநகரத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அரசுக்கு அது குறித்து செயற்குறிப்பு கிடைக்கப் பெற்றதும், மேற்கண்ட இடத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

## மருத்துவ ஆய்வாளர் பதவிகளை நிரப்ப நடவடிக்கை.

வினா எண் 4189ஏ—டாக்டர் வெ. சரோஜா ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் மருத்துவ ஆய்வாளர்கள் பதவியை (Drug Inspectors) உடனே நிரப்பிட அரசு முன்வருமா ?

விடை—

தற்பொழுது மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையில் காலியாக உள்ள 23 மருந்து ஆய்வாளர் பதவிகளை நிரப்பு வதற்கு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் தேர்வு

நடத்தியது. மேற்படி தேர்வினை எதிர்த்தும், அத்தேர்வின் மூலம் மருந்தாய்வாளர் பதவிக்கு நபர்கள் தேர்ந்தெடுப்பதை நிறுத்தக் கோரியும் இந்திய பார்மஸி பட்டதாரிகள் சங்க செயலர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இதற்கிடையில் திரு. அறிவழகன் மற்றும் இரண்டு நபர்கள் உயர்நீதிமன்றத்தில் மேற்படி தேர்வுக்கு எதிராக ரிட் மனு தாக்கல் செய்ததின் பேரில் தேர்வாணையம் நடத்திய தேர்வின்படி மேல் நடவடிக்கை எடுக்க உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. மேற்படி உயர்நீதிமன்றம் விதித்த இடைக்கால தடையை நீக்கக் கோரியும், ரிட் மனுவை தள்ளுபடி செய்யக் கோரியும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் உயர்நீதி மன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடை நீக்கப்பட்டப் பின்னரே இம்மாநிலத்தில் காலியாக உள்ள மருந்து ஆய்வாளர் பதவிகளை நிரப்ப இயலும்.

9—

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் GEM என்ற திட்டம் அறிமுகப்படுத்த நடவடிக்கை.**

வினா எண் 4684— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் GEM ( Global Environmental Maintenance ) என்று அழைக்கப்படும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப் படவிருக்கும் பணிகளின் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து 1984 முதல் GEMS (Global Environmental Monitoring Scheme) திட்டத்தில் பங்கேற்கின்றது. இந்தத் திட்டத்தில் காவேரி ஆறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

காவேரி ஆற்றிலிருந்து முசிறி, மேட்டூர், பள்ளிபாளையம் ஆகிய மூன்று இடங்களில் ஆற்று நீர், பரிசோதனைக்காக எடுக்கப்படுகிறது. இது தவிர, முசிறி ஆழ்குழாய் கிணற்று நிலத்தடி நீரினை பரிசோதிக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.





மேற்கூறிய இடங்களிலிருந்து நீரின் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மாதிரிகள் பொதுவாக, ரசாயன ற்றும் உயிரியல் தன்மைகள் அறிய பரிசோதிக்கப்படு ன்றன.

நீர் மாதிரிகளின் ஆய்வறிக்கைகள் ஒன்று திரட்டப்பட்டு வ்வொரு காலாண்டிற்கும், மத்திய மாசு கட்டுப்பாடு ாரியம், புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தமிழ்நாடு ாசு. கட்டுப்பாடு வாரியம் காவேரி நீர் மாசுபடுதலை டுக்கவும், கட்டுப்படுத்தவும் எல்லா நடவடிக்கைகளையும் டுத்து வருகின்றது.

0—

**நகரப் பேருந்து தடம் எண் 12-ஐ 10 தடவைகள் இயக்க நடவடிக்கை.**

வினா எண் 2739— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பாக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு டையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருவிக்கரம்பை அரசினர் மேல்நிலைப்பள்ளி வழியாகச் செல் ும் சோழன் பேருந்து (நகரப் பேருந்து) தடம் எண் 12-ஐ, ) தடவைகள் செல்லவும், பள்ளி நேரத்திற்கு ஏற்றவாறு யக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி–சேதுபாவாசத்திரம் வழி குருவிக்கரம்பை ரசினர் மேல்நிலைப் பள்ளி வழியாக தற்பொழுது காலை ரண்டு நடைகளும், மாலை இரண்டு நடைகளும் இயக்கப் டுகின்றன. மாலையில் பள்ளி நேரத்திற்கு இதே பேருந்து நல்லியடிக்காடு என்னும் ஊருக்கு இயக்கப்படுகிறது. தனை மாற்றி கோரிக்கையில் உள்ளவாறு இயக்கினால் நல்லியடிக்காடு செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்க க்கு இடையூறாக அமையும். தவிரவும் தற்போதுள்ள பருந்து வசதிகளே போதுமானது என்று கருதப்படு றது.

11—

## நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 2880—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிக்கொண்டான் ஊராட்சியில் உள்ள செட்டிகாட்டிற்கு பயணிகள் நிழற்குடை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா —

விடை—

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக இந்த நிதி ஆண்டில் நிழற்குடை அமைக்கும் திட்டம் இல்லை.

12—

## நகரப் பேருந்து தடம் எண் 11—ஐ , 8 நடைகள் விட நடவடிக்கை.

வினா எண் 3155—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு கைவினை வயல் முடச்சிக்காடு வழியாக செல்லும் சோழன் நகரப் பேருந்தை தடம் எண் 11—ஐ 8 சிங்களாக விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மேற்படி வழித்தடம் மிகவும் அதிகமான சுற்றுவழி தடமாகும். நேரடிப் பயணம் செய்யும் பயணிகளின் பயண நேரம் அதிகரிப்பதுடன் கூடுதல் கட்டணமும் செலுத்த வேண்டியிருக்கும். எனவே, தடம் எண் 11-ஐ, 8 நடைகள் இயக்குவது இயலவில்லை. எனினும் அதனை 4 நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



13—

## சென்னை பெரியார் நகர் பேருந்து நிலையத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டுதல்.

வினா எண் 4546—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பெரியார் நகர் பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் எழுப்பவும், தனியார் வாகனங்கள் நுழைவதை தடைசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் நகர் பேருந்து நிலையத்தைச் சுற்றிலும் சிமெண்ட் கான்கிரீட் தூணுடன் கூடிய வலைக்கம்பி வேலி ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டதால், தனியார் வாகனங்கள் பேருந்து நிலையத்திற்குள் நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது மதில் சுவர் கட்டும் மதிப்பீடு ஏதும் இல்லை என்பதால் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்து தற்பொழுது நடவடிக்கைகள் ஏதும் இல்லை.

14—

## சென்னை நகரில் போக்குவரத்து அறிவிப்புப் பலகை பொருத்த நடவடிக்கை.

வினா எண் 6037—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(a) Whether the Police Administration has stopped placing name boards such as "NO PARKING" "SCHOOL ZONES" in Madras City ?

(b) If not, why such boards are not placed ?

விடை—

(அ) சென்னை நகரில் போக்குவரத்து அறிவிப்புப் பலகைகள் பொருத்துவதை, சென்னை நகரக் காவல்துறை நிறுத்தவில்லை,

(ஆ) தேவைப்படும் பொழுதெல்லாம் மேற்கூறிய போக்குவரத்துப் பலகைகள் பொருத்த, நகரக் காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

15—

கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்ட திருப்பூர் ஜீவா பேருந்தின் நடத்துநரை மீண்டும் பணியமர்த்த அனுமதி.

வினா எண் 6928—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், திருப்பூர் ஜீவா பேருந்தில் பணி செய்து கொண்டிருந்த நடத்துநர் ஒருவர் ஒரு கட்சி வேட்பாளராக அந்தியூரில் நிறுத்தப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவருக்கு எப்போது மீண்டும் நடத்துநர் பணி வழங்கப்பட்டது ?

(இ) இதற்கு அரசின் அனுமதி பெறப்பட்டதா ?

விடை—

(அ) பெரியார் மாவட்ட, ஜீவா போக்குவரத்துக் கழகம் திருப்பூர் கிளையில் பணி செய்து கொண்டிருந்த நடத்துநர் ஒருவர் ஒரு கட்சி வேட்பாளராக அந்தியூரில் நிறுத்தப்பட்டது அரசுக்கு தெரியும்.

(ஆ) அவருக்கு 24–8–1989 ஆம் தேதியன்று மீண்டும் நடத்துநராக ஜீவா போக்குவரத்துக் கழகத்தில் பணி வழங்கப்பட்டது.

(இ) மீண்டும் அவரை பணி அமர்த்த அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

16—

தார்ச்சாலையாக்கல்

வினா எண் 152—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதிக்கு உட்பட்ட கல்லுத்தொட்டி, வெள்ளிவிளாகம், மாமூட்டுக்கடை வரையுள்ள சாலை பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா ?





(ஆ) ஆம் எனில், தார்ச்சாலையாகச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை தார்ச்சாலையாக மாற்றுவதற்கு ரூ. 6 இலட்சம் தேவைப்படுகிறது. இவ்வேலையை 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் அல்லது சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

பாலம் அமைத்து போக்குவரத்து வசதி செய்தல்.

வினா எண் 156—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், மத்திக்கோடு ஊராட்சியில் மத்திகோடு-வெள்ளியாவிளை இணைப்புச் சாலையில் பாம்பூரி வாய்க்கால் கரை கட்டி, பாலம் அமைத்து போக்குவரத்து வசதி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

விடை—

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது கீழ்க்கண்டவாறு இரண்டு சாலைகளாக உள்ளது :

(1) மத்திக்கோடு பாம்பூரி வாய்க்கால் சாலை கி.மீ. 0/0—1/2.

(2) வெள்ளியாவிளை—பாம்பூரி வாய்க்கால் சாலை கி.மீ. 0/0—1/6.

இவ்விரண்டும் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றிய சாலைகளாகும்.

(1) மத்திக்கோடு பாம்பூரி வாய்க்கால் சாலை கி.மீ. 0/0—1/2.

இச்சாலையில் கி.மீ. 0/0—0/9 வரை உள்ள பகுதி கல்தளமாகும். மீதமுள்ள பகுதி கி.மீ. 0/0—1/2 வரை மண் சாலையாக உள்ளது. இதனில் கி.மீ. 0/9—1/2 வரை

யிலும் சாலையின் இடது பக்கத்தில் பாம்பூரி வாய்க்காலில் தடுப்புச் சுவர் கட்டி சாலையை அகலப்படுத்திடவும் கி.மீ. 1/2-ல் ஒரு பாலம் கட்டவும் வேண்டும். இச்சாலை வேலை 1991–92 ஆம் வருடத்தில் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்பட வில்லை. எனவே, இவ்வேலையினை 1991–92 ஆம் வருடத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலோ அல்லது சிறப்பு தன்னிறைவுத் திட்டத்திலோ சேர்த்து செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இச்சாலையினை மேம்படுத்தி வாய்க்கால் கரை கட்டி பாலம் அமைக்க உத்தேசமாக ரூ. 7 இலட்சம் தேவைப்படும்.

2. வெள்ளியாவிளை—பாம்பூரி வாய்க்கால் சாலை கி.மீ. 0/0–1/6 :

கி.மீ. 0/0–1/6 வரையுள்ள இச்சாலையில் கி.மீ.0/0–1/0 வரை (1 கி.மீ.) தார்ச்சாலையாக மாற்ற 1991–92ஆம் வருடத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ 1.65 லட்சம் மதிப்பீட்டில் வேலை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 0.6 கி.மீ. தூரம் சாலையினை சீர்செய்ய 1991–92 ஆம் வருடத்தில் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. எனவே 1992–93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலோ அல்லது சிறப்பு தன்னிறைவுத் திட்டத்திலோ இவ்வேலையினை சேர்த்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

18—

## ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் 1998—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ) ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

அதம்பை (தெ) ஆதிதிராவிடர் காலனியில் குடியிருப்போரிடமிருந்து 12—4—1990 அன்று ஒற்றை விளக்கு கோரி 20 விண்ணப்பங்கள் இப்பகுதி மின்வாரிய அலுவலகத்தில் வந்துள்ளன. இவ்விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதி ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படும்.



19—

## தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் 2563—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணைவயல் ரயில்வே கேட்டுக்கு வடக்குத் தெருவிற்கு தெரு விளக்கு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணைவயல் ரயில்வே கேட்டுக்கு வடக்குத் தெருவிற்கு தெரு விளக்கு அமைக்க விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படவில்லை.

20—

## ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் 2638—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள ஒற்றை வீடுகளுக்கு மின் விளக்கு அமைத்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூரைச் சார்ந்த ஆதிதிராவிடர் காலனியில் 11—10—1991-ல் 20 குடிசைகள் மின் விளக்குகளுக்கு 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின்கீழ் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட பகுதியில் இலவச மின்வசதி வேண்டி ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் இதுவரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

[1992 ஏப்ரல் 28

21—

மீனவர் காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண் 2656—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராசாமடம் ஊராட்சியைச் சேர்ந்த கீழ்த்தோட்டம் மீனவர்களின் காலனிக்கு மின் இணைப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

கீழ்த்தோட்டம் மீனவர் காலனியில் வீட்டு மின் இணைப்புகள் கேட்டு விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை. இந்த காலனியில் ஒரு தெருவிளக்கு பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது. இவ்விளக்கு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

22—

படித்துறை கட்ட நடவடிக்கை.

வினா எண் 2740—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிமடம் வெங்கிடாங்குளத்திற்கு கடைசி போவதற்கு வடிகால் அமைக்கவும் இரண்டு படித்துறை கட்டவும் ஆண்டிகுளத்திற்கு இரண்டு படித்துறை கட்டவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

23—

தெரு விளக்கு வசதி

வினா எண் 2932—திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், சிறுவச்சேரி கிராமத்தில் கட்டப்பட்ட காலனி வீடுகளுக்கு மின்சார விளக்கு



1992 ஏப்ரல் 28]

கள் தெரு விளக்குகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் சிறுவச்சேரி கிராமத்தில் வீட்டுக் குடியிருப்பு காலனி என்று ஏதும் தனியாக இல்லை. ஆயினும் அரசு செயற்படுத்தும் என். ஆர். இ.பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 21 சிறிய வீடுகளுக்கு குடிசை மின் இணைப்பு திட்டத்தின் கீழ் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. தவிரவும் 15 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 36 குடிசை மின் இணைப்பு சிறுவச்சேரி காலனியில் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் 5 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு மற்றும் குடிசையின் இணைப்பு விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

24—

வினா எண். 2973ஏ—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காடு பிள்ளையார் கோவிலுக்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காடு பிள்ளையார் கோவிலுக்கு தெருவிளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படவில்லை.

25—

வினா எண். 2987—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களுக்கு தெரு விளக்கு விஸ்தரிப்பு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஏற்கனவே இரு (1 × 40 வாட்) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் எரிந்து வருகின்றன. கூடுதல் விளக்குகளுக்கான விண்ணப்பங்கள் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படவில்லை.

26—

சி.எம். பி. வாய்க்காலை சீரமைத்தல்.

வினா எண். 3041—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீதியங்கோட்டை அக்ரகாரத்திலிருந்து துறையூர் ஆதிதிராவிடர் தெரு வரையில் உள்ள சி.எம்.பி. வாய்க்காலைச் சீரமைத்து ரிவிட்மெண்ட் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

27—

ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண். 3056—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மரக்காவலசை ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு போட்டு தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மரக்காவலசை கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.



28—

அந்தோணியார்புரம் கடல் ஓரத்தில் தடுப்புச் சுவர்

வினா எண். 3067—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரம் கடல் ஓரத்தில் தடுப்பு சுவர் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

29—

சாலை சீரமைத்தல்.

வினா எண். 3497—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன்சத்திரத்திலிருந்து செம்பட்டி வரையிலான மதுரை செல்லும் சாலை பழுதடைந்துள்ளதால் அதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இச்சாலையில் கீழ்க்கண்ட பகுதிகளை 11 கி.மீ. தூரத்திற்கு தார் தளத்தை புதுப்பிக்கும்படி திட்ட மிடாப் பணிகள் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது (கி.மீ. 7 முதல் 9 முடிய கி.மீ. 10 முதல் 12 முடிய, கி.மீ. 12 முதல் 15 முடிய மற்றும் கி.மீ. 16 முதல் 20 முடிய) இதில் 4 கி.மீ. தூரம் தார் தளம் புதுப்பிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள பகுதிகள், 31—3—1992-க்குள் முடிவடையும். மேலும் இச்சாலையில் 9.2 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகளில் தார் தளம் புதுப்பிக்கும் பணி மிகவும் பழுதடைந்த பகுதிகளை சீர் செய்யும் திட்டத்தில் செயலாக்குவதற்காக ஒப்பந்தப் கோரப்

படவுள்ளன. இதற்கிடையில் மழையினால் ஏற்பட்டுள்ள குண்டும், குழிகளையும் சீர் செய்வதற்கான நொடி. போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

30—

## மேனிலைத் தொட்டி அமைத்தல்

வினா எண். 691—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சி விடுதியில் மேனிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

ஆம். உள்ளது. திருவோணம் ஒன்றியம், பத்திரங் கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கா. உஞ்சி விடுதி கிராமப் 920 மக்கட் தொகையை கொண்டதாகும். மறு ஆய்வின்படி பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாகும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தரும் பொருட்டு நடப்ப நிதியாண்டில் திட்டம் சேர்க்கப்பட்டு உள்ளது.

31—

## போர்வெல் அமைத்தல்

வினா எண். 1986—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை (தெ)-ஐச் சேர்ந்த நேதாஜி நகருக்கு ஒரு போர்வெல் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை (தெ)-ஐச் சேர்ந்த நேதாஜி நகர் குடியிருப்பிற்கு 1990-91-ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது போதுமான குடிநீர் வசதி உள்ளது. அதனால் புதிதாக போர்வெல் போட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே இது தொடர்பாக செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.





32—

## தெரு விளக்கு விஸ்தரிப்பு.

வினா எண். 2516—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், படப்பனார் வயல் வடக்கில் தெரு விளக்கை விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், படப்பனார் வயல் வடக்கில், கூடுதலாக தெருவிளக்குகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

33—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண். 2698—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சியில் உள்ள பழுதுபட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாவடுகுறிச்சி ஊராட்சியில் 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்கி வருகின்றன. இவைகளில் மாவடுகுறிச்சி கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கேட் வால்வ் ( Gate valve ) பழுதாகும் நிலையில் இருந்தது. இது சரி செய்யப்பட்டு, தற்சமயம் இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது.

34—

ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தி சாலை அமைத்தல்.

வினா எண். 2742— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலி காட்டிற்கும் கூடலி வயலுக்கும் இடையில் உள்ள மண் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இச்சாலை 1 கி.மீ. நீளமுடையது. இதனை சிகப்புக் கப்பிச் சாலையாக மாற்றிட ரூபாய் 1.00 இலட்சம் செலவாகும் தற்சமயம் இவ்வேலையை மேற்கொள்ள திட்டம் எதுவுமில்லை

35—

மண் சாலையை கப்பிச்சாலையாக மாற்றுதல்

வினா எண். 2749—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமி உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றிய கோட்டாகுடியிலிருந்து ஆதிதிராவிடர் தெரு வழியா கம்பயங்கண்ணி செல்லும் மண் சாலையை கப்பிச் சாலையா மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கோட்டா குடியிலிருந்து ஆதிதிராவிடர் தெரு வழியா கம்பயங்கண்ணி செல்லும் மண்சாலை 2.6 கி.மீ. நீளமுடை இனம் பிரிக்கப்படாத சாலையாகும். இதனை கப் சாலையாக மாற்றிட ரூ. 3.50 லட்சம் செலவாகும். தற்போ இதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை,





36—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 2928—திரு. இரா. தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், சாலக்கரை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. சாலக்கரை, சூரப்பள்ளம் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து, சூரப்பள்ளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணற்றிலிருந்து நீர் சாலக்கரை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 19.000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு செயல்படுகிறது. தற்போது இத்திட்டம் ஆண்டிமடம் ஊராட்சி மன்றத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

37—

வினா எண். 2944—திரு. இரா. தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம்; இடையக்குறிச்சி மேற்கு தெருவிற்கு புதிதாய் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. இடையக்குறிச்சி (மேற்கு) குடியிருப்பிற்கு 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 1990-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு தொடர் பராமரிப்பிற்காக ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

38—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுது பார்த்தல்**

வினா எண். 2950—திரு. இரா. தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், செந்துறை ஒன்றியம், பொன் பரப்பி காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பொன்பரப்பி காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை. இந்தக் காலனியில் தற்சமயம் 2 (இரண்டு) கைப்பம்பு திட்டங்கள் இயங்கி வருகின்றன.

39—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.**

வினா எண். 2776—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்னரெட்டவயல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அடிக்கடி பழுதுபடுவதால் அதை நிரந்தரமாக பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் ரெட்டவயல் ஊராட்சியைச் சேர்ந்த சின்ன ரெட்ட வயல் மேல்நிலை தொட்டியை 21—11—1991-ஆம் தேதி அன்று ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 2,311 செலவில் சீர் செய்யப்பட்டு அது தற்சமயம் நன்கு இயங்கி வருகிறது. மேலும் சில பழுதுகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு வருகிறது.



40—

**மரக்காவலசையில் தெரு விளக்கு விஸ்தரித்தல்.**

வினா எண். 3158—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மரக்காவலசையில் ஒரு தெரு விளக்கு விஸ்தரித்து கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் மரக்காவலசை ஊராட்சியில் 82 தெரு விளக்குகள் உள்ளன. மேற்படி ஊராட்சியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு கொடுக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

41—

**குடும்ப அட்டை வழங்கும் திட்டம்.**

வினா எண். 2659—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராசாமடம் கீழத் தொட்டத்தில் குடும்ப கார்டு இல்லாதவர் களுக்கு குடும்ப கார்டு வழங்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் இராசாமடம் கீழத்தொட்டத்தில் குடும்ப அட்டை இல்லாதவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றால் 100 சதவிகிதம் சரிபார்ப்புக்குப் பின் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

42—

**அமுதம் அங்காடிக்கு நிரந்தரக் கட்டிடம்.**

வினா எண். 3163—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றிய மரக்காவலசை அமுதம் அங்காடிக்கு நிரந்தர கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

வினாக்கள்—விடைகள்

[1992 ஏப்ரல் 28

விடை—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதலில் ஈடுபட்டுள்ளதால் அமுதம் நியாய விலைக் கடைகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தவில்லை. இப்பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் தான் அத்தியாவசிய பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. சேதுபாவாசத்திர ஒன்றியம் மரக்காவலசை கிராமத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அமுதம் அங்காடிகள் எவையும் நடைபெற வில்லை என்பதால் அங்கு நிரந்தர கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

43—

போலி ரேஷன் அட்டைகளை அகற்றுதல்

வினா எண். 4087—திரு ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தற்போது புழக்கத்தில் இருக்கும் போலி ரேஷன் கார்டுகளை கண்டறிந்து அகற்றும் முயற்சி எந்த அளவிற்கு பலனளித்துள்ளது ?

விடை—

மாநிலம் முழுவதும் உள்ள போலி குடும்ப அட்டைகளைக் களைய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.—

(அ) போலி குடும்ப அட்டைகளை களைதல் பணிக்காக, பணியாளர்களுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) குடும்ப அட்டை பொது ஆய்வு வினாப் படிவம் வாயிலாக குடும்ப அட்டைதாரர்களின் வருமானம் மற்றும் இதர விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது; மற்றும்

(இ) நியாயவிலைக் கடையிலுள்ள 'அ' பதிவேடுகளை வாக்காளர் பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்க்க அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளால் போலி குடும்ப அட்டைகளை அகற்றும் முயற்சி நல்ல பலனளித்து வருகிறது. 1991-ஆம் ஆண்டு 5,23,757 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன.



199 ஏப்ரல் 28]

44—

'ஜீவா இல்லம் பற்றிய விவரம்

வினா எண். 8258—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் தொழிலாளர் நல வாரியத்தால் அமைக்கப்பட்ட 'ஜீவா' இல்லத்தில் தங்க அதிகபட்ச நாட்கள் என வரைமுறை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

(இ) இவ்வில்லத்தில் சில தொழிற்சங்கத் தலைவர்கள் மாதக் கணக்கில் தங்குவதும் இதனால் பலருக்கு தங்கும் வசதி அத்தியாவசியமான நேரத்தில் கிடைக்காமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஈ) ஆம் எனில், அதனை நிர்வகிக்கும் வாரியத்தின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) சென்னை நகரில் தொழிலாளர் நல வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள 'ஜீவா' இல்லத்தல்' தங்க அதிகபட் நாட்கள் குறித்து விதிமுறைகள் உள்ளன.

(ஆ) அவ்விதிமுறைகளின்படி, ஒரு தொழிற்சங்க பிரதிநிதி அலுவல் நிமித்தம் ஒரு தடவையில் 3 நாட்களுக்கு மட்டும் தங்கலாம். 3 நாட்களுக்கு மேலும் தங்க வேண்டியிருந்தால், அறைகள் காலியிருப்பின் ஒதுக்கீடு செய்யப்படும்.

(இ) ஜீவா இல்லத்தில் தொழிற்சங்க தலைவர்கள் மாதக் கணக்கில் தொடர்ந்து தங்குவதில்லை.

(ஈ) இவ்வினாவிற்கு இடமில்லை.

45—

உழவர் பயிற்சி மைய துவக்கம்

வினா எண். 5525—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறையில் அரசு உழவர் பயிற்சி மையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை. மயிலாடுதுறை தற்போதைய நாகப்பட்டிணம் காயிதே மில்லத் மாவட்டத்தைச் சார்ந்தது. மயிலாடுதுறையில் தனியாக உழவர் பயிற்சி மையம் துவங்க 1992—93-ஆம் ஆண்டில் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தஞ்சாவூர் மாவட்டம், சாக்கோட்டையில் தற்போது இயங்கி வரும் உழவர் பயிற்சி நிலையமே நாகப்பட்டிணம் காயிதே மில்லத் மாவட்ட விவசாயிகளின் தேவைகளையும் தொடர்ந்து பூர்த்தி செய்யும்.

(ஆ) எழாது.

46—

பாலர் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம்.

வினா எண். 2747—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டான் ஊராட்சியைச் சேர்ந்த செட்டிக் காட்டிற்கு பாலர் பள்ளிக்கு நிரந்தர கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தர சேர்க்கப்பட்டுள்ளது.

47—

சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைக்கு ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டுத் தொகையை உயர்த்துதல்.

வினா எண். 6535—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவு திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைக்கு மளிகை சாமான்கள், சமையல் எண்ணெய், காய்கறி வகைகள் விறகு ஆகியவற்றிற்காக ஒதுக்கப்படும் சராசரி தொகை எவ்வளவு ?



1992 ஏப்ரல் 28]

(ஆ) விலைவாசி உயர்வுக்கேற்ப 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசீலித்து ஒதுக்கீட்டுத் தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

(அ) 0.13 காசு.

(ஆ) தற்போதுள்ள நிதி நிலையில் இம்மாதிரி 6 மாதத்திற்கு ஒரு முறை உயர்த்த இயலாது.

48—

பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 6627—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் கிராமத்தில் ஒரு பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை.

49—

ஆதிதிராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் அமைத்தல்.

வினா எண் 6744—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முனுமாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு சமுதாயக்கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

50—

**ஆதிதிராவிடர்களுக்கு கல்யாண மண்டபம் கட்டிக் கொடுத்தல்.**

வினா எண் 7287—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு கல்யாண மண்டபம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

51—

**பட்டா வழங்குதல்.**

வினா எண் 5244—திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் பட்டிணம் மனையை இனாம் ஒழிப்புச் சட்டம் 26163-ன் கீழ் மறு விசாரணை நடத்தி சட்டப்படி அனுபவிப்பவருக்கே பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி வேதாரண்யம் பட்டிணம் கிராமம், ஆர். எஸ. என். 175-ல் அடிமனைக்கு தேவஸ்தான பெயரிலும், கட்டிடப் பகுதிக்கு கட்டிட உரிமையாளர் பேரிலும் பட்டா அனுமதிக்கப்பட்டு ஆணைகள் 1976-78 லேயே பிறப்பிக்கப்பட்டன. ஆனால் கட்டிட உரிமையாளர்கள் கட்டிடங்கள் கூடிய மனைகளுக்கும் சேர்த்து பட்டா வழங்கிட வேண்டுமென்றும், தன்னிச்சை அதிகாரத்தை மேற்கொண்டு (Suo motu Power) மறு விசாரணை நடத்தி பட்டா வழங்கிட கோரிக்கை விடுத்துள்ளார். இக்கோரிக்கை நன்கு பரிசீலிக்கப்பட்டது. நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசு ஆகியோர்களுக்கு தன்னிச்சையாக விசாரணை மேற்கொள்ள சட்டத்தில் வழிவகையில்லை. இதுகுறித்து, சட்ட திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



52—

**தேயிலைத் தோட்ட நிலப் பரப்புகளை சர்வே செய்தல்.**

வினா எண் 5821—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் நடத்தும் தேயிலைத் தோட்ட நிலப்பரப்புகளை சர்வே செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் நடத்தும் தேயிலைத் தோட்ட நிலப்பரப்புகளை சர்வே செய்யும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) மலைக் கிராம அளவைப் பணி திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் வால்பாறை வட்டம் ஆனைமலையில் மலைக் கிராமம் அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இம்மலையில் உள்ள தனியார் தேயிலைத் தோட்ட நிலப் பரப்புகளும் அளவை செய்யப்படும்.

53—

**பின்தங்கிய வகுப்பினர் விடுதி அமைத்தல்.**

வினா எண் 1839—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சி அனந்தகோபாலபுரத்தில் பின்தங்கிய வகுப்பினர் விடுதி ஒன்றை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்சமயம் ஏதுமில்லை.

54—

முத்தரையர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்குதல்.

வினா எண் 6707—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சி பூலாங் கொல்லையில் குடியிருக்கும் மிகவும் பின் தங்கிய வகுப்பினரான முத்தரையர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

55—

உடுமலை—கணியூர் வழித்தடத்தில் கூடுதல் பேருந்து விடுதல்.

வினா எண் 4718—திரு கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

உடுமலை—கணியூர் டவுன் பஸ் ரூட் எண் 30 செல்லும் பகுதியில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால் மேலும் ஒரு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

உடுமலை நகர சேரன் வழித்தட எண். 30 உடுமலை—கணியூர் என்ற வழித்தடத்தில் சேரன் போக்குவரத்துக் கழகம் ஏற்கனவே ஒரு பேருந்தினை தினசரி 16 நடைகள் என இயக்கி வருகின்றது. தற்போதைய போக்குவரத்துத் தேவைக்கு இதுவே போதுமானதாக உள்ளது.



56—

வால்பாறையில் தேயிலை நாற்று நட்டுள்ள பரப்பளவு

வினா எண். 5820—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வால்பாறை பகுதியிலுள்ள TANTEA நிறுவனத்தில் எத்தனை ஏக்கரில் தேயிலை நாற்று நடப்படுகிறது?

விடை—

வால்பாறைப் பகுதியில் டேன்டீ நிறுவனம் இதுவரை தேயிலை நாற்றுக்களை நட்டுள்ள பரப்பளவு வருமாறு :—

| | | | | | எக்டேர். |
|---|---|---|---|---|---|
| 1990–91 | .. | .. | .. | .. | 8.0 |
| 1991–92 | .. | .. | .. | .. | 89.5 |
| மொத்தம் | .. | .. | .. | .. | 97.5 |
| 1992–93இல் நட உத்தேசித்துள்ளது | .. | | | | 420.0 |

57—

மின்துறை அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடம்

வினா எண். 995—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, குருவிக்கரம்பை, பெருமகளூர், திருச்சிற்றம்பலம் ஆகிய மின்துறை அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 21

58—

தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு

வினா எண். 999—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆதி திராவிடர் தெருவிற்கு ஊராட்சி தெருவிளக்கு இணைப்பின்போது சீனியாரிட்டியில் சலுகை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்பொழுது நடைமுறை விதிகளின்படி ஆதி திராவிடர் காலனிகளில் அமைக்கும் தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக்க சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் தீர்மானம் நிறைவேற்றி உரிய படிவத்தில் அப்பகுதி மின்வாரிய பிரிவு அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆண்டுதோறும் நிதிநிலை ஒதுக்கீட்டிற்கேற்ப தெருவிளக்கு அமைக்க இலக்கீடு நிர்ணயிக்கப்படுகிறது. விண்ணப்பத்தின் பதிவு வரிசை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இப்பதிவு வரிசைக்கிரமத்தை மாற்றி முன்னுரிமை அடிப்படையில் ஆதி திராவிடர் காலனி தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு தர அரசு விதிகள் இல்லை.

எனினும், ஆதி திராவிடர் காலனிகளுக்கு தெருவிளக்கு அமைக்க ஆகும் முழுச் செலவினை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து செலுத்த முன்வருமானால் முன்னுரிமை பார்க்காமல் (சீனியாரிட்டி பார்க்காமல்) இலக்கீட்டிற்கு மிஞ்சி தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு தர இயலும்.

59—

செருபாலக்குளம் பராமரிப்பு

வினா எண். 1577—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பேராவூரணி சப்டிவிஷன் அலமதிக்காடு கிராமத்திலுள்ள செருபாலக்குளத்தைப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

60—

மின்சார லயனை சாலை ஓரத்தில் மாற்றியமைத்தல்

வினா எண் 1869—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி ஆலடிக்காட்டில் போடப்பட்ட மின்சார லயின் வீடுகளுக்கருகே இருந்து ஆபத்தை விளைவிப்பதால் அந்த மின்சார லயனை சாலை ஓரத்தில் மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், 'சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் ஊராட்சி, ஆலடிக்காட்டிலுள்ள வீடுகளுக்கு, வீடுகளில் எதிர்ப்புறம் நடப்பட்டுள்ள மின் கம்பங்களிலிருந்து செல்லும் மின்னூட்டியிலிருந்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதால் மின்சார கம்பங்கள் மற்றும் மின்னூட்டியினை சாலை ஓரத்தில் மாற்றுவதற்கு இயலாது. பாதுகாப்பு நட டிக்கைக்காக, மின்னூட்டிகளுக்கு பாதுகாப்பு வலைகள் விரைவில் கட்டுவதற்கு ஆவண செய்யப்பட்டுள்ளது.

61—

ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு

வினா எண் 1884—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கீழக்கொள்ளுக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்குப்போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா— ;

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கீழக்கொள்ளுக்காடு ஆதி திராவிடர் காலனியில் ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புக்கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை. அவ்வாறு வருமாயின் அவைகள் ஆய்வு செய்யப்பட்டு குடிசை மின் இணைப்புப் பெற தகுதி பெறும்

விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

62—

## வாய்க்கால் பராமரிப்பு

வினா எண் 2172—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்திக் குளத்திற்கு அக்னி ஆற்றிலிருந்து வரும் வாய்க்காலைப் பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

63—

## தெருவிளக்கு அமைத்தல்

வினா எண். 2183—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மேற்கு) வண்ணாங்கொல்லைக்கு புதிதாக தெருவிளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா —

விடை—

இடையாத்தி (மேற்கு) வண்ணாங்கொல்லைக்கு தெரு விளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் தற்போது நிலுவையில் இல்லை.

64—

வினா எண் 2184—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மேற்கு) ஆதி திராவிடர்களுக்கு தெரு விளக்கு அமைத்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

இடையாத்தி (மேற்கு) ஆதி திராவிடர் தெரு பகுதியில் 25 வீடுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு மின் வசதி ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதியில் தெரு விளக்குகள் வேண்டி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

65—

வினா எண் 2979—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி, புதுக்குடியிருப்பின் ஊருக்குள் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பிற்கு 20 தெரு விளக்குகள் பொருத்தக்கோரி 17—5—88 அன்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இவை தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 31—3—993க்குள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

66—

வினா எண் 3010—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம், துறையூர் ஞாயகத்தி வயலுக்கு தெரு விளக்கு விஸ்தரிப்பு கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மரக்காவலசை பஞ்சாயத்தைச் சார்ந்த ஞாயகத்தி வயலில் 8 தெரு விளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இந்தப்பணி சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு, மேற்குறிப்பிட்ட பகுதியில் 8 தெரு விளக்குகள் 31—3—93க்கு முன்னர் பொருத்தப்படும்.

67—

## மின் இணைப்புகான கட்டணத்தைக் குறைத்தல்.

வினா எண் 3047—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு வீடுகளுக்கு மின் இணைப்புக்கு ரூ. 850 திடீரென்று உயர்த்தப்பட்டதை குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

வீடுகளுக்கு புதிய மின் இணைப்பிற்காக விண்ணப்பித்துள்ளவர்களிடம் மின் வாரியம் 15—6—1991 அன்று அல்லது இந்த தேதிக்குப் பிறகு புதியதாக மின் இணைப்பு வழங்கப்பட உள்ளவர்களிடம் மேம்பாட்டுக் கட்டணமாக (Development Charges ) ரூ. 500 வசூலித்து வந்தது. பிறகு வந்த வேண்டுகோளின்படி, சிறிய மற்றும் ஏழைகளின் வீடுகளுக்கு (மின் அளவியின் அடிப்படையில்) மேம்பாட்டுக் கட்டணத்தை ரூ. 250 ஆகக் குறைத்து வாரியம் 7—10—1991 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையின்படி 10—10—1991 அன்று அல்லது இந்த தேதிக்குப் பிறகு புதியதாக மின் இணைப்பு வழங்கப்பட உள்ளவர்கள் மேற்கூறிய குறைந்த மேம்பாட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

68—

## தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 3073—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேது சாலையில் இருந்து கொள்ளுக்காடு அந்தோணியார்புரம் வரை வெற்றுச்சாலை ஓரத்தில் தெரு விளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுசாலையிலிருந்து அந்தோணியார்புரம் வரை வெற்றுச்சாலையில் தெரு விளக்குகள் அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படவில்லை.



69—

## காந்தி நகர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போடுதல்

வினா எண் 3094—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் காந்தி நகர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்குப் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பெருமகளூர் நகரம் காந்தி நகர் காலனியில் குடிசைகளில் குடியிருப்போர்களிடம் இருந்து இருபது (20) குடிசை விளக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த இருபது விண்ணப்பதாரர்களுக்கு மின் வசதி வழங்க தாழ்மின்னழுத்த பாதை நீட்டிப்புப் பணிகள் 8 கம்பங்களை நிறுவி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் 111 விண்ணப்பங்கள் 30-6-1989 முதல் நிலுவையில் உள்ளன.

குடிசை இணைப்புகள், விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் வழங்கப்படுவதால், இந்த இருபது (20) குடிசைகளுக்கு வரும் ஆண்டுகளில் அப்பகுதி இலக்கீட்டிற்கேற்ப மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படும்.

70—

## காங்கேயன் கால்வாய் சீரமைக்கும் பணி

வினா எண். 3344—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடனாநதி அணை ஆயக்கட்டின் கீழ் காங்கேயன் கால்வாய் சீரமைத்தல் பணி, உலக வங்கி ஆதரவுத் திட்டத்தின் கீழ் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

71—

தனியார் ஆக்கிரமித்திருக்கும் தடிக்காரன்கோணம் சாலையிலுள்ள மரங்களை மீட்க நடவடிக்கை.

வினா எண் 3521—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தடிக்காரன்கோணம் சாலையில் உள்ள மரங்களைத் தனியார் ஆக்கிரமித்து வைத்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். இது தொடர்பாக, பத்மநாபபுரம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. வழக்கில் தீர்ப்புரை பெற்றதும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

72—

சாலை சீரமைப்பு

வினா எண் 3654—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, திருவம்பலபுரம் வழி உலகரட்சகபுரம் கடற்கரை சாலை செல்லும் ரோடு வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதால் அதை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

73—

பாசன வசதி செய்தல்.

வினா எண் 4049—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், சேந்திரக்கிள்ளை கிராமத்தில் மானம்பாத்தான் வாய்க்கால் மூலம் பாசன வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) பாசன வசதி செய்துதரப்பட்டுள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

74—

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் சிதம்பரம் நகருக்கு மாற்றுதல்.

வினா எண் 4577—திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், சேத்தியாதோப்பு அணைக்கட்டு கால்வாய் திட்டப் பராமரிப்புக்கென உள்ள மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் தஞ்சாவூரிலும், செயற்பொறியாளர் அலுவலகம் மயிலாடுதுறையிலும் இயங்கி வருவதை அப்பகுதிக்கு அருகில் உள்ள சிதம்பரம் நகருக்கு மாற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) அத்தகைய கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

விவசாய மின் இணைப்பு கொடுத்தல்

வினா எண் 5823—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

செங்கல் சூளை வைக்க தொழிற்சாலை மின் இணைப்புகள் பெற்ற இடங்களை மீண்டும் விவசாயம் செய்யும்போது தொழிற்சாலை மின் இணைப்புகளை மாற்றி விவசாய மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா.

[1992 ஏப்ரல் 28

விடை—

தற்போதுள்ள மின்வாரிய விதிகளின்படி, தொழிற்சாலை உபயோகத்திற்காக (எல். டி. டாரிப் IV) பெறப்பட்ட மின் இணைப்புகளை விவசாய மின் இணைப்புகளாக (எல்.டி. டாரிப் V) மாற்ற அனுமதி வழங்க இயலாது.

ஆனால், தற்போதுள்ள வாரிய உத்திரவுகளின்படி, விவசாயிகள் வாரியத்தின் முன் அனுமதி பெற்று தங்களது விவசாய மின் இணைப்புகளைப் பயன்படுத்தி கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து செங்கல் தயாரித்துக் கொள்ளலாம். செங்கல் தயாரிக்கும் காலத்தில் மின் அளவி வைத்து மின்சாரம் கணக்கிடப்பட்டு தொழிற்சாலைக்கான மின் உபயோகத்தின் அடிப்படையில் (எல்.டி. டாரிப் IV) மின் கட்டணம் வசூலிக்கப்படும். விவசாயிகள் தங்கள் மின் இணைப்புகளை மீண்டும் விவசாயத்திற்கு மட்டும் பயன்படுத்த விரும்பினால் மின் அளவி அகற்றப்பட்டு விவசாய உபயோகத்திற்கு மீண்டும் இலவச மின்சாரம் வழங்கப்படும்.

76—

## பாசன கால்வாய்களுக்கு சிமெண்ட் லைனிங்.

வினா எண் 5977—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்படி பாசன நீர் கால்வாய்களுக்கு சிமெண்ட் லைனிங் செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா.

(ஆ) ஆம் எனில், இதுவரை எந்தெந்த நீர்ப்பாசன கால்வாய்கள் சிமெண்ட் லைனிங் செய்யப்பட்டுள்ளன.

(இ) மணிமுத்தாறு கால்வாயும் அவற்றில் ஒன்றாக பரிந்துரைக்கப்பட்டதா?

(ஈ) ஆம் எனில், மேற்படி கால்வாயில் அந்தப் பணி செய்யப்பட்டு விட்டதா.

விடை—

(அ) தேசிய நீர் நிர்வாகம் திட்டத்தின்படி சீரமைப்புப் பணிகளுக்காக எடுக்கப்படும் பாசன நீர்க்கால்வாய்களுக்கெல்லாம் சிமெண்ட் லைனிங் செய்வதற்கு வழிவகை செய்யப்படவில்லை;



1992 ஏப்ரல் 28]

என்னும் சில குறிப்பிட்ட பகுதிகளில், அதாவது கசிவு நீர் அதிகமாக இருக்கும் பகுதிகளிலும், லைனிங் பழுதடைந்த பகுதிகளிலும், கால்வாயின் தலைப்புப் பகுதிகளிலும் சிமெண்ட் லைனிங் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) சாத்தனூர் அணையின் இடதுபுறக் கால்வாயில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடங்களில் 11.3 கி.மீ. தூரத்திற்கு சிமெண்ட் லைனிங் செய்யப்பட்டுள்ளது. மேலும், அமராவதி பிரதான மற்றும் துணைக் கால்வாய்களில் 1 கி.மீ. தூரத்திற்கு சிமெண்ட் லைனிங் செய்யப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(ஈ) மேற்படி கால்வாயில் சிமெண்ட் லைனிங் செய்வதற்கு பதிலாக (Sloped random rubble masonry) லைனிங் கி.மீ. 4.00 முதல் கி.மீ. 5.00 வரை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 80 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 20 விழுக்காடு பணிகள், வரும் அடைப்பு காலத்தில் 1992ஆம் ஆண்டு ஏப்ரல்–மே மாதங்களில் செய்யப்பட்டுவிடும்.

77—

## மயான சாலை அமைத்தல்

வினா எண். 920—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குரட்டூர் ஆதி திராவிடர் மயான சாலை அமைக்க அரசின் செயற்குறிப்பு உள்ளதா

விடை —

குரட்டூர் கிராம ஆதி திராவிடர்கள் புல எண் 2 இல் 30 குடும்பங்களாக வசித்து வருகின்றனர். மயானம் புல எண். 14/3இல் உள்ளது. மயானத்திற்கு செல்வதற்கு தற்பொழுது புறம்போக்கில் சாலை உள்ளது. இச்சாலை சீர் அமைக்க வண்டிப்பாதை புறம்போக்கில் உள்ள புல எண்கள் 8/13, 8/12, 9/9 9/16, 10/5, 15/3 ஆகியவற்றில் சாலை கப்பி போடவும், புல எண் 15/2, 14/2 ஆகியவற்றில் உள்ள புஞ்சை தரிசு பாதையில் கப்பி போடவும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றுச் செய்யப்பட உள்ளது. நடப்பு நிதியாண்டிற்கு இன்னும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

[1992 ஏப்ரல் 28

78—

## குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண். 1587—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம், காமராஜ் நகர் மக்களுக்கு ஒரு குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. பெரியநாயகிபுரம் கிராமம், பெரியநாயகிபுரம் ஊராட்சி, பேராவூரணி ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். காமராஜ் நகர் என்று ஒரு தனி குடியிருப்பு கிடையாது. காமராஜ் நகர் விஸ்தரிப்பு பகுதியாகும். பெரியநாயகிபுரம் கிராமத்திற்கு விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தரப்பட்டு தற்போது செயலாக்கத்தில் உள்ளது. மேலும் 3 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து இந்தியா மார்க் 2 கைப் பம்பு பொருத்தப்பட்டு உள்ளது. இது மறு ஆய்வின்படி பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாகும். சிறப்பு கிராமக் குடிநீர்த் திட்டம் (கை பம்பு) திட்டத்தின்கீழ் ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரப்பட்டு உள்ளது. மேலும் ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

79—

## மின் மோட்டார் பழுதுபார்த்தல்

வினா எண். 1877—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், கீழக்குறிச்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள மோட்டாரைப் பழுதுபார்த்து குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மின் மோட்டார் பழுதுபார்க்கப்பட்டு தற்போது திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.



1992 ஏப்ரல் 28]

80—

## கோவில் குளத்தைப் பராமரித்தல்

வினா எண். 1918—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகு புறிக்காடு ஆதி திராவிடர் தெரு கோவில் குளத்தை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் நிதி நிலையை அனுசரித்து செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

81—

## மயானச் சாலை அமைத்தல்

வினா எண். 1940—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் கொண்டிகுளம் மக்களுக்கு மயானச்சாலை அமைக்கவும், தகரக் கொட்டகை போட்டுக் கொடுக்கவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கொண்டிக்குளம் மயானச்சாலை கி.மீ. 0.8 நீளமுடைய இனம் பிரிக்கப்படாத சாலையாகும். இதனை கிராவல் சாலையாக்க ரூ. 0.4 இலட்சம் செலவாகும். இவ்வேலையை எடுத்துச் செய்திட தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

82—

வினா எண். 2015—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) கீழக்கொள்ளுக்காடு மக்களுக்கு மயானச்சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பாதரங்கோட்டை வடக்கு, கீழக்கொள்ளுக்காடு மக்களுக்கு மயானச்சாலை மற்றும் தகரக்கொட்டகை அமைத்திட தற் சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

83—

## சாலை சீரமைப்பு

வினா எண் 2286—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சிக் குச் செல்லும் சாலையை சீர் செய்து தார்ச்சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், குறிச்சிக்குச் செல்லும் சாலை 2 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதில் 1 கி.மீ. கருங்கல் ஜல்லி சாலையும், 1 2 கி.மீ. மண்சாலையுமாக அமைந்துள்ளது. இச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்றிட ரூ. 2 இலட்சம் செலவாகும். இச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற அரசி டம் தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

84—

வினா எண். 2350—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சியை சேர்ந்த சித்தாதிக் காட்டிலிருந்து பின்னவாசல் வழியாக மணக்காடு செல்லும் சாலையை பராமரித்து தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் பின்னவாசல் ஊராட்சியைச் சேர்ந்த சித்தாதிக் காட்டிலிருந்து பின்னவாசல் வழியாக மணக்காடு செல்லும் சாலை 5 கி.மீ. நீளமுடைய ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதில் 3 கி.மீட்டர் நீளம் கருங்கல் ஜல்லி சாலையாகவும், 2 கி.மீ. நீளம் மண் சாலையாகவும் உள்ளது. இச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்றிட ரூ. 5 இலட்சம் செலவாகும். இச்சாலையை மேம்பாடு செய்ய தற் சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

85—

## மயானச் சாலை அமைத்தல்

வினா எண். 2406—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி பாண்டி கண்மாய் கிராமத்திற்கு மயானச்சாலை வசதி கோரி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடி தொகுதி பாண்டிக் கண்மாய் கிராமத்திற்கு மயானச்சாலை வசதி அமைப்பதற்கு 1.6 கி.மீ. நீளத்திற்கு நஞ்சை நிலத்தை கையகப்படுத்தி சாலை அமைக்க வேண்டியுள்ளது. இது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

86—

## சாலை மராமத்து செய்தல்

வினா எண் 2522—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் சித்துக்காடு சித்தாதிக்காடு வழி அம்மையாண்டி சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 28

விடை—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் சித்துக்காடு வழி அம்மையாண்டி சாலையின் நீளம் 6 கி.மீ. ஆகும். அதில் 2 கி.மீ. கருங்கல் ஜல்லியாகவும், 2 கி.மீ. சிகப்புக் கப்பியாகவும், மீதமுள்ள 2 கி.மீ. மண் சாலையாகவும் உள்ளது. இச்சாலையைச் செப்பனிட ரூ. 3 இலட்சம் செலவாகும். இதில் 2 இடங்களில் ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்ட வேண்டியுள்ளது. இவ்வேலைகளை செய்திட அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

87—

கப்பிச் சாலையாக்குதல்

வினா எண். 2533—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், படப்பனார் வயல் ஊருக்குள் சல்லும் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், படப்பனார் வயல் ஊருக்குள் செல்லும் சாலை 1 கி.மீ. நீளமுள்ள சிகப்புக் கப்பிச் சாலையாகும். இதனைச் செப்பனிட ரூ. 80,000 செலவாகும் இதனைக் கப்பிச் சாலையாக்க செயற் குறிப்பு ஏதுமில்லை.

88—

குடிநீர் வழங்கல்

வினா எண் 2598—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மானூர் ஒன்றியம் பிரான்சேரி கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க இணைப்பு கொடுத்தும் குடிநீர் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

(அ) பிரான்சேரி குடிநீர் திட்டம் 10/90இல் நிறைவேற்றப்பட்டு, 4/91 வரை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் நீராதாரம் கோவில்பட்டி குடிநீர் திட்டத்தின் நீருந்து குழாய் ஆகும். 4/9 இல் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டதாக கோரிக்கை வந்ததும் காற்றுப்போக்குகளில் ( Air valves ) உள்ள அடைப்புகள் சரி செய்யப்பட்டு, 7/91 முதல் 9/91 வரை குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்றது. மீண்டும் 10/91இல் குடிநீர் விநியோகம் சீராக இல்லை. கோவில்பட்டி செல்லும் நீர் உந்து குழாய்களில் நீர் அழுத்தம் குறைவாக உள்ளதே இதற்கான காரணமாகும்.

(ஆ) எனவே, பிரான்சேரி கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க தனியே நீரேற்றி அமைக்க மதிப்பீடு தயாரித்து அதி விரைவுத் திட்டத்தின்கீழ் (crash programme ) பணிகளை நிறைவேற்றத் தக்க நடவடிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

89—

கப்பிச் சாலை அமைத்தல்

வினா எண் 2704—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணியிலிருந்து மாவடு குறிச்சி வழியாக ஆவணம் செல்லும் ஆனந்தவல்லிபுரம் வாய்க்கால் கரையில் கப்பிச் சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பேராவூரணியிலிருந்து மாவடுக்குறிச்சி வழியாக ஆவணம் செல்லும் ஆனந்தவல்லிபுரம் வாய்க்கால் கரை சாலை 7.6 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலை. இதில் 4 கி.மீ. கப்பிச் சாலை மீதி 3.5. கி.மீ. கிராவல் சாலை, இதனை கப்பிச் சாலையாக மாற்றிட ரூ. 4.5 இலட்சம் செலவாகும். இதனிடையே பாலம் ஒன்று ரூ. 3.00 இலட்சம் செலவில் கட்டப்பட வேண்டும். இதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

90—

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

வினா எண் 2825—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மக்கள் நலப் பணியாளர்களால் சர்வே செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன் பயனாளிகள் பட்டியலை அரசு ரத்து செய்யுமா ?

விடை—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குள் உள்ளவர்களை கணக்கிடுமாறு மக்கள் நலப் பணியாளர்களுக்கு கூறப்பட்டது. அதன் பின்னர் ஊர்நல அலுவலர்களைக் கொண்டுதான் இப்பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்ற சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. எனவே, இத்திட்டத்தின்கீழ் கடன் பெறும் பயனாளிகள் பட்டியல் ஊர்நல அலுவலரால் கிராம சபை மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட கையேட்டில் கூறியவாறு தயார் செய்யப்பட்டது. ஆகையால் பட்டியலை ரத்து செய்யும் நிலை ஏற்படவில்லை.

91—

## தார்ச்சாலை அமைத்தல்

வினா எண். 2953—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் சூரக்குழி அகரம் சாலையை தார்ச்சாலையாக அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய சூரக்குழி-அகரம் சாலையை 1990-91இல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2.73 இலட்சத்தில் தார்ச்சாலையாக அமைக்க அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.





92—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுதுபார்த்தல்

வினா எண். 3044—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கைவனவயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதாக இருப்பதால் அதை உடன் பழுதுபார்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர், மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியைச் சேர்ந்த கைவனவயல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ. 6,023 செலவில் ஊராட்சி நிதியிலிருந்து பழுதுபார்க்கப்பட்டு தற்போது அது நன்கு இயங்கி வருகிறது. எனவே, இது குறித்த செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

93—

## மேற்குபட்டரைகுன்று குளத்தை பராமரித்தல்.

வினா எண். 3091—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பதேவன் மேற்குபட்டரைக்குன்று ஊராட்சி குளத்தைப் பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

குப்பதேவன் ஊராட்சி மேற்குபட்டரைக்குன்று குளத்தைப் பராமரிக்க இவ்வாண்டில் திட்டம் எதுவுமில்லை. 1992-93ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பராமரித்துக் கொடுக்க ஆவன செய்யப்படும்.

[1992 ஏப்ரல் 28

94—

மோட்டார் பழுதுபார்த்தல்

வினா எண். 3832— திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி சமூகரெங்கபுரம் பஞ்சாயத்தில் கட்ட நேரியில் குடிநீர் மோட்டார் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ராதாபுரம் தொகுதி சமூகரெங்கபுரம் ஊராட்சி கட்ட நேரியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின்சார மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்போது நல்ல நிலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, இது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

95—

வினா எண். 3865— திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட செட்டிகுளம் பஞ்சாயத்தில் புதுமனை பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

96—

ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 3642— திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

ராதாபுரம் தொகுதி செட்டுக்குளம் பஞ்சாயத்தில் செம்பாடு பகுதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



1992 ஏப்ரல் 28]

விடை—

செம்பாடு பகுதியில் அதிவிரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Programme) ஒரு கையிறைப்பான் அமைத்து தற்போது தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்க செயற்குறிப்பு இல்லை.

97—

வினா எண். 3647— திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட திருவம்பலபுரம் பஞ்சாயத்தில் பாக்குநேரி அருகே ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட திருவம்பலபுரம் ஊராட்சியைச் சேர்ந்த பாக்குநேரியில் ஏற்கெனவே ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு அது நன்றாக இயங்கி வருவதால் அந்த கிராமத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது இல்லை.

98—

ஆதி திராவிடர் கல்லூரி மாணவர்கள் விடுதி

வினா எண். 2074— டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதி திராவிடர் கல்லூரி மாணவர்கள் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை கூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ; இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் இயங்கி வரும் ஆதி திராவிடர் கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை 50லிருந்து 70 ஆக உயர்த்தி கடந்த 10—12—1991 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

99—

## ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்குதல்.

வினா எண். 4162—செல்வி கோ. மல்லிகா ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சேந்திரக்கிள்ளை காலனிக்கு ஆதி திராவிடர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு ஆவன செய்யப்படும்.

100—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண். 7790—செல்வி கோ. மல்லிகா ; மாண்புமிகு மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள புதுக்குப்பம் மீனவர் கிராமத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவை சேர்ந்த புதுக்குப்பம் மீனவர் கிராமத்தில் நடப்பு ஆண்டில் (1991-92) 86 வீடுகள் கட்டி வழங்கிட அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வீடுகள் கட்டுமானப் பணி தொடங்கிட ஏதுவாக உடனடியாக தளங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத் திடம் ஒப்படைத்திட கடலூர் மண்டல மீன்துறை உதவி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். வீடொன்றுக்கு



ரூ. 12,380 வீதம் முதல் தவணைத் தொகை மீன் துறை ஆணையர் அலுவலகத்தினின்று திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூருக்கும் அனுப்பப்பட்டுவிட்டது. விரைவில் கட்டுமானப் பணி துவக்கப்படும்.

101—

## பட்டா வழங்குதல்.

வினா எண் 6552—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டிணத்தில் நத்தம் புறம்போக்கை சர்வே செய்தும் பட்டா வழங்கப்படாததை உடன் பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி வட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் நத்தம் நில அளவைப் பணி முடிக்கப்பட்டு நில அளவை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நில அளவை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பெறப்பட்டதும் தனி வட்டாட்சியர் நியமிக்கப்பட்டு, நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பட்டா வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

102—

## வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தை டாக்டர் அம்பேத்கார் என மாற்றும் செயற் குறிப்பு.

வினா எண். 7191—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் என்றிருப்பதை டாக்டர் அம்பேத்கார் என்று டாக்டர் பட்டத்தை சேர்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

103—

தொடக்கப்பள்ளி தொடங்குதல்.

வினா எண். 2552—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிமன்காடு ஊராட்சி பனஞ்சேரியில் ஒரு தொடக்கப்பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை

மேற்குறிப்பிட்ட பனஞ்சேரி கிராமத்தில் புதிதாக ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி துவங்குவது குறித்த கருத்துக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

வீரவநல்லூர் அரசு பாரதியார் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குநர் நியமித்தல்.

வினா எண். 5978—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் அரசு பாரதியார் மேல்நிலைப்பள்ளியில் உடற்கல்வி இயக்குநர் பதவிக்கு ஆள் நியமிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பதவி நிரப்பப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 ஏப்ரல் 28]

105—

வேதாரண்யம் நகர நூல் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 5744—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் நகரிலுள்ள நூல் நிலையம் சொந்தக் கட்டிடத்தில் இயங்க பேரூராட்சி இடமளித்தும் இதுவரை கட்டிடம் கட்டப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்டப்படும் ?

விடை—

(அ) அரசு அறியும்.

(ஆ) வேதாரண்யம் பேரூராட்சியின் தீர்மானம் எண் 176, நாள் : 9–8–1989-ன்படி நூலகக் கட்டடம் கட்ட தீர்மான படிவில் காலி மனை பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பேரூராட்சி பத்திரப் பதிவு செய்து நூலக ஆணைக் குழுவிற்கு அந்நிலத்தை மாற்றம் செய்து தந்தவுடன் ரூ. 2 இலட்சம் செலவில் ,200 சதுர அடி பரப்பளவில் நூலகக் கட்டடம் கட்டும் பணி துவக்கப்படும்.

106—

மூடச்சிக்காடு தாய்சேய் நல விடுதிலை இயங்க வைத்தல்.

வினா எண். 3065—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மூடச்சிக்காட்டில் உள்ள தாய் சேய் நல விடுதியை இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

முடச்சிக்காடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இல்லை. இக் கிராமத்திற்கு 3 கி. மீ. தொலைவில் கழனிக் கோட்டை துணை சுகாதார நிலையமும், 5 கி. மீ. தொலைவில் ஊமத்தநாடு ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளதால் தற்போது முடச்சிக்காட்டில் தாய்சேய் நல விடுதி துவக்க அவசியமில்லை,

[1992 ஏப்ரல் 28

**107—**

வாய்க்கால் மராமத்து செய்தல்.

வினா எண். 2276—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புலிகாடு ஊராட்சி பில்லங்குழி ஏரிக்கு, குறிச்சி ஏரியில் இருந்து வரும் 3 நி. வாய்க்காலை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

அத்தகைய செயற் குறிப்பு அரசிடம் இல்லை. சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுதாரர்களே மராமத்து செய்துகொள்ள வேண்டும்.

108—

தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 2359—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டையைச் சேர்ந்த வழுதலை வட்டத்திற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டையைச் சேர்ந்த வழுதலை வட்டத்தில் 4 தெரு விளக்குகள் நன்கு இயங்கி வருகின்றன. வழுதலை வட்டத்தையும் சேர்த்து, வாட்டாத்திக்கோட்டை ஊராட்சியில் பல்வேறு பகுதிகளில் 15 தெரு விளக்குகள் பொருத்தக் கோரி 6—5—87-ல் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. சிறப்பு தன்னிறைவு திட்டத்தின் கீழ் 31—3—93-க்குள் இவ்விளக்குகள் பொருத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது.



1992 ஏப்ரல் 28]

109—

ஏரி பராமரிப்பு.

வினா எண். 2519—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆண்டாகோட்டை அருகன்குளம் பெரிய ஏரியை புல்டோசர் வைத்து பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

110—

ஏரி பராமரிப்பு.

வினா எண். 2566—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல், சோனாடுகாத்தான் ஏரியை புல்டோசர் வைத்து தூர் எடுத்து கரையை உயர்த்திக் கட்டி, மதகுகளை புதுப்பித்து செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

111—

வினா எண். 2784—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சர்வேந்திர ராஜபட்டிணம் ஊராட்சியைச் சேர்ந்த பள்ளி ஓடை வயல் ஏரிக்கு வரும் வாய்க்காலை செப்பனிட்டு தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

[1992 ஏப்ரல் 28

112—

**சம்பைப்பட்டிணம் அம்மாபள்ளிவாசலுக்கு மின் இணைப்பு**

வினா எண். 3030—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டிணம் அம்மாபள்ளிவாசலுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லையாதலால் உடன் மின் இணைப்பு தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டிணம் அம்மா பள்ளிவாசலுக்கு மின் இணைப்பு அமைக்க கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

113—

**அடைக்கத்தேவன் அணைக்கட்டிலுள்ள உடைப்பை அடைத்தல்.**

வினா எண். 3032—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கதேவன் அணைக்கட்டிலிருந்து வெளியில் வரும் இடத்தில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை அடைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பூசமடத்தான் ஏரிகளுக்கு வழங்கு வாய்க்கால் துவக்கத்தில் இடப்புறம் ஒரு உடைப்பு ஏற்பட்டு அது முற்றிலும் அடைக்கப்பட்டு விட்டது.



1992 ஏப்ரல் 28]

114—

**தெரு விளக்கு விஸ்தரிப்பு.**

வினா எண். 3084—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம், ஆர். கே. நகரில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம், ஆர். கே. நகரில் 10 (பத்து) தெரு விளக்குகள் பொருத்தி, ஏற்கனவே மின்வசதி வழங்கப்பட்டு விட்டது. விளக்குகள் நன்றாக இயங்கி வருகின்றன. மேற் குறிப்பிட்ட பகுதியில் கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

115—

**மின் கட்டணம் வசூலித்தல்.**

வினா எண். 3110—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கணேசபுரத்திற்கு வந்து முன்பு வசூல் செய்தது போல மின் கட்டணத்தை வசூல் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

116—

**சாலைகள் சீரமைத்தல்.**

வினா எண். 3805 திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிவகாசி—விருதுநகர், சிவகாசி—சாத்தூர், சிவகாசி—ஆலங்குளம், சிவகாசி—கழுகுமலை ஆகிய சாலைகள் அகலப் படுத்தப்பட்டு சீரமைக்கப்படுமா ?

[1992 ஏப்ரல் 28

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் திட்டம் ஏதுமில்லை. ஆனால் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

117—

வாய்க்கால் மராமத்து.

வினா எண். 5224— திரு. பி. வி. இராஜேந்திரன் ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் தொகுதியினை பாசன வசதியடையச் செய்யும் பெரிய வடிகால் வாய்க்காலான மானங்கொண்டான் ஆறு தூர்ந்து போய் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆமெனில், தூர் வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) தூர்ந்து உள்ள இடங்களில் வரும் கோடையில் மராமத்து வேலைகள் செய்யப்படும்.

118—

தத்தனூர் கருப்பங்கால் ஓடைத் திட்டம்.

வினா எண். 5255— திரு. கே.கே. சின்னப்பன் ; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தத்தனூர்— கருப்பங்கால் ஓடைத் திட்டப் பணி முடிவு பெறாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ? எப்போது அப்பணி முடிவு பெறும் ?

விடை—

(அ) ஆம்.



1992 ஏப்ரல் 28]

(ஆ) முடிவு பெறாமல் மீதமுள்ள பணிகளை சிறப்பு சிறு பாசனத் திட்ட தலைப்பினில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

119—

மக்கள் நலப்பணியாளர்கள் நியமனம்.

வினா எண். 1017— திரு. ஆர். ஈஸ்வரன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பலர் பதிவு செய்து இருந்தும் மக்கள் நலப்பணியாளர் நியமனம் செய்யப்பட்டபோது தகுதி உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்காமலும் வெளியிலிருந்தும் பணி அமர்த்தியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மறு பரிசீலனை செய்து முறைப்படி பணியமர்த்த அரசு முன் வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மக்கள் நலப் பணியாளர் பதவிகள் தற்போது நீக்கப்பட்டு விட்டதால் இக்கேள்விக்கு இடமில்லை.

120—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 1855—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி மேலக்கொள்ளுக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை —

இல்லை. மேலக்கொள்ளுக்காடு குடியிருப்பு, பாதரங்கோட்டை வடக்கு ஊராட்சி, திருவோணம் ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். இதன் மக்கட் தொகை 560 ஆகும். மறு ஆய்வின்படி இந்த குடியிருப்பு பகுதியாக செயலாக்கப்பட்டது

ஆகும். 1981-82 ஆம் ஆண்டு ஓர் இந்தியா மார்க் 2 கைப் பம்பு திட்டம் அமைத்து தரப்பட்டு உள்ளது. தற்போதைய மக்கட் தொகைக்கு இது போதுமானதாக இல்லை. எனவே, வரும் நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக் கட்டித் தர திட்டம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

121—

வினா எண். 1888—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) கிராமத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. பாதரங்கோட்டை (தெற்கு) குடியிருப்பு திருவோணம் ஒன்றியம் சுமார் 1,100 மக்கட் தொகையை கொண்டதாகும். மறு ஆய்வின்படி இக் குடியிருப்பு பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமம். 1981-82 ஆம் ஆண்டு குறைந்தபட்சம் தேவைத் (எம்.என்.பி.) திட்டத்தின் கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 12 பொதுக் குடிநீர் குழாய்களுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. தற்போதைய மக்கட் தொகைக்கு இது போதுமானதாக இல்லை. எனவே, வரும் நிதியாண்டில் இக்குடியிருப்பிற்கு முழுவதுமாக குடிநீர் வசதி பெற விஸ்தரிப்பு திட்டம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

122—

வினா எண். 1920—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு ஆதி திராவிடர்களுக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. கழுகுபுளிக்காடு (ஆதி திராவிடர்கள்) ஒரு தனிக் குடியிருப்பு இல்லை. கழுகுப்புளிக்காடு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இதன் மக்கட் தொகை 3,000 ஆகும்.



1987 ஆம் ஆண்டு இக்குடியிருப்புக்கு ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 2,500 மீ. நீளத்திற்கு பகிர்மானக் குழாயும், 19 பொதுக்குடிநீர் குழாய்களுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் அனுமதிக்கப்பட்டு நடைமுறையில் செயலாகத்தில் உள்ளது. இதில் ஆதிதிராவிடர்களுக்கு பொதுக் குழாய் மூலம் குடிநீர் வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

123—

## ஆற்றுக்கரைச் சாலையை கப்பிச்சாலையாக்குதல்.

வினா எண். 1980—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி வல்லம்பக் கொல்லையிலிருந்து கா. உஞ்சிய விடுதி வரை செல்லும் ஆற்றுக்கரை சாலையைக் கப்பிச்சாலையாக மாற்றி ஒன்றிய சாலையாக அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை ஊராட்சி, வல்லம்பக் கொல்லையிலிருந்து கா. உஞ்சிய விடுதி வரை செல்லும் ஆற்றுக்கரை சாலையில் 2.6 கி.மீ. தூரத்திற்கு மண் வேலை செய்து கருங்கல் கப்பிப்போட ரூ. 3.4 லட்சம் செலவாகும். போதுமான நிதி வசதி இல்லையாதலால் இச்சாலையை தற்சமயம் மேம்பாடு செய்ய செயற் குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை.

124—

## கப்பிச் சாலையாக்குதல்.

வினா எண். 2162—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) கோனார் தெருவிலிருந்து, வண்ணாங்கொல்லை வழியாக நெய்வேலி தென்பாதி சாலை வரை உள்ள சாலையைக் கப்பிசாலையாக மாற்றி 3 கல்வெட்டு கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி (மே) கோனார் தெருவிலிருந்து, வண்ணான் கொல்லை வழியாக நெய்வேலி தென்பாதி செல்லும் சாலை 2 கி. மீ. தூரம் உள்ள ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதனை கப்பிச் சாலையாக மாற்றி 3 சிறு பாலங்கள் (கல்வெட்டுகள்) அமைத்திட ரூ. 2.00 இலட்சம் செலவாகும். இவ்வேலைகளை தற்சமயம் செய்திட செயற் குறிப்பு ஏதும் இல்லை.

125—

தார்ச் சாலையாக்குதல்.

வினா எண் 2174—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கு கோனார் தெருவில் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி (மே) கோனார் தெருவில் செல்லும் சாலை 1½ கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலையாகும். தற்சமயம் மேற்கண்ட சாலையை தார்ச் சாலையாக மாற்றிட செயற் குறிப்பு ஏதுமில்லை.

126—

சாலை அமைத்தல்.

வினா எண் 2196—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிலிருந்து கோவிலுக்குச் சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிலிருந்து கோவிலுக்குச்





செல்லும் ஊராட்சி சாலை 0.8 கி.மீ. நீளம் உடையது. இவ்வேலையை செய்திட ரூ. 0.3 லட்சம் செலவாகும். தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

127—

ஊராட்சிக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டி அமைத்தல்.

வினா எண் 2279—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி சித்தாதிக் காட்டிற்கு தொலைக்காட்சிப் பெட்டியும் வானொலிப் பெட்டியும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள், அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளை தெரிவு செய்தார்கள். தனியாக இக்குடியிருப்புக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சிகளே வாங்கிக் கொள்ளலாம்.

128—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்த்தல்.

வினா எண் 2330—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பூவலூரைச் சேர்ந்த நெய்வவிடுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் குழாய்களும் அடிக்கடி பழுதடைவதால் அதனை பழுது பார்த்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 28

விடை—

பூவலூரைச் சேர்ந்த நெய்வவிடுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்க்கப்பட்டு தற்சமயம் எவ்வித தடையுமின்றி நீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

129—

மண் சாலையை கப்பிச் சாலையாக்குதல்.

வினா எண். 2730—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புலிக்காடு எண். 203 பைங்காட்டு வயலுக்கு செல்லும் மண் சாலையை செங்கப்பி சாலையாக மாற்றும் ஏற்பாடு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கழுகுப்புலிக்காடு எண். 203 பைங்காட்டு வயலுக்குச் செல்லும் மண்சாலை 3 கி.மீ. நீளமுடைய இனம் பிரிக்கப்படாத சாலையாகும். இதில் 1 கி.மீ. செங்கப்பிச் சாலையாக உள்ளது. மீதி மண் சாலையாகும். இச்சாலையில் அமைந்துள்ள இரண்டு குழாய் பாலங்கள் கட்டி செங்கப்பிப் போட ரூ. 2.00 லட்சம் செலவாகும். இதற்கு தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

130—

மயானக் கொட்டகை அமைத்தல்.

வினா எண். 2770—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தாம்பரங்கோட்டை தெற்கைச் சேர்ந்த மஞ்சவயல் கரிசக்காடு மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



1992 ஏப்ரல் 28]

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தாம்பரங்கோட்டை தெற்கைச் சேர்ந்த மஞ்சவயல் கரிசக்காடு மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டித்தர ரூ. 13,500 செலவாகும். இவ்வேலையை எடுத்துச் செய்ய தற்போது செயற்குறிப்பு இல்லை. எதிர்வரும் ஆண்டுகளில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்ட ஊராட்சி பங்குத் தொகை ஒதுக்கீட்டிலிருந்து முன்னுரிமையில் அடிப்படையில் இவ் வேலையை எடுத்துச் செய்யப்படும்.

131—

கப்பிச் சாலையாக்குதல்.

வினா எண் 2868—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜமடம் ஊராட்சியை சேர்ந்த கீழ்த்தோட்டத்தில் இருந்து மீனவர் காலனிக்குச் செல்லும் சாலையை செப்பனிட்டுக் கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ராஜமடம் ஊராட்சியைச் சேர்ந்த கீழ்த்தோட்டத்தின் இருந்து மீனவர் காலனிக்குச் செல்லும் சாலை 1 கி.மீ. நீளமுள்ள இனம் பிரிக்கப் படாத மண் சாலையாகும். இதனை செங்கப்பிச் சாலையாக மாற்ற சுமார் ரூ. 60,000 செலவாகும். இதனை எடுத்துச் செய்திட தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

132—

ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 2968—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு காமாட்சியம்மன் கோவில் தெருவில் உள்ள 30 ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

133—

## சாலை பழுதுபார்த்தல்.

வினா எண். 3625—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, மண்ரோடு கஸ்தூரிரங்கபுரம் - பள்ளிவாசல் முதல் பொன்னத்தி வரை பழுதடைந்துள்ளதை சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த கஸ்தூரி ரங்கபுரம் ஊராட்சிக்குட்பட்ட பள்ளிவாசல் முதல் பொன்னத்தி வரையுள்ள சாலையினை 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 4,100 மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

134—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 3649—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, விஜயாபதி மகூதி அருகில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

விஜயாபதி மகூதிக்கு அருகில் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. 1991-92-ல் விஜயாபதியில் ஒரு மின்விசைக் குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட இருக்கிறது.



135—

## துணை வேளாண்மை கிடங்கு அமைத்தல்.

வினா எண் 7108—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூரில் துணை வேளாண்மை கிடங்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

136—

## அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஆண்களுக்கு விடுதி கட்டுதல்.

வினா எண். 5524—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் வெளியூர்களில் இருந்து வந்து அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஆண்களுக்கு விடுதி ஒன்றினைக் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

தற்போது இல்லை.

137—

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

வினா எண் 6542—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைவாழ் மக்களுக்கு கணவன்-மனைவி பெயரில் கூட்டாக இலவச மனைப்பட்டா வழங்கவும், அவர்களின் வீடுகளை அவர்களே கட்டிக்கொள்ளத் தக்க அளவு நிதியுதவி அரசு வழங்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அது பற்றி பரிசிலனை செய்துள்ளதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

138—

சத்துணவுக் கூடத்திற்கு நிலையான கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 3156—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேதுபாவாசத்திரத்தில் சத்துணவுக் கூடம் நிலையான கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை.

139—

கூட்டுறவுச் சங்கம் மூலம் சத்துணவுக் கூடத்தில் காய்கறிகள் வாங்குதல்.

வினா எண் 5901—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சத்துணவு கூடத்தில் காய்கறிகள் கூட்டுறவுச் சங்கம் மூலம் வாங்கப் பெறுகிறதா ?

விடை—

சத்துணவு மையங்களுக்கு அருகில், காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தால் காய்கறிகளின் தரம், விலை. இவற்றைப் பொறுத்து, முன்னுரிமை கொடுத்து வாங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



140—

அரசினர் மாணவர், மாணவியர் இல்லங்கள் திறக்க நடவடிக்கை.

வினா எண். 635—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில், சென்னம்பட்டி, நெருஞ்சிப் பேட்டை, ஆலாம்பாளையம், மூங்கில்பட்டி போன்ற இடங்களில் அரசினர் மாணவர், மாணவியர் இல்லங்கள் திறக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடுதிகள் திறக்கப்படும் ?

விடை—

(அ) ஆலாம்பாளையம் என்ற இடத்தில் மாணவர் விடுதி திறக்க 30—10—1991 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) பிற இடங்களில் விடுதிகள் திறப்பது பற்றிய செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

141—

காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 2113—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் காட்டு நாயக்கன் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு (பாம்பு பிடிப்பவர்கள்) காலனி வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியில் 23 குடும்பங்களில் 100 நபர்கள் பாம்பு பிடிப்பவர்கள் உள்ளனர். இவர்கள் காட்டு நாயக்கர்கள் அல்லர். அவர்கள் காட்டு நாயக்கன் வகுப்பினர் அல்லது இருளர் வகுப்பினர் என்பதற்கான ஆதாரங்கள் யாதும் கிடையாது. பரமக்குடி பகுதியில் காட்டு நாயக்கர் வகுப்பைச் சார்ந்த குடும்பங்கள் யாதும் இல்லையாதலால், வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

142—

## ஆதி திராவிடர் மாணவியர் விடுதி துவக்குதல்.

வினா எண். 2145—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் மாணவியர்கள் விடுதி துவங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், கோட்டூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி துவங்குவதற்கு ஏற்கனவே ஆணையிடப்பட்டு, இவ்விடுதி 27—1—1992 முதல் செயல்படுகிறது.

143—

## காலனி வீடுகளை பழுதுபார்த்தல்.

வினா எண் 3061—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் உடையநாடு ஆதிதிராவிடர் காலனி இடிந்து போன, பழுதுபட்ட காலனி வீடுகளை, பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அரசு ஆணையின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகள் தாங்களாகவே சொந்தச் செலவில் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பயனாளிகளுக்கு வீடுகளை ஒதுக்கும்போதே தெளிவுபட எடுத்துக் கூறப்பட்டு உடன்பாட்டுப் பத்திரத்தில் அவர்களின் இசைவும் பெறப்படுகிறது. இலவசமாக கொடுக்கப்பட்ட வீடுகளைப் பழுதுபார்ப்பதையும் அரசே



மேற்கொண்டால் புதிய வீடுகள் கட்டி வழங்க நிதி வசதி இல்லாமல் போய்விடும் என்பதால் பழுது பார்க்கும் பணிகளையும் அரசே மேற்கொள்வதற்கான திட்டம் ஏதும் இல்லை.

144—

## ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளி மாணவர் விடுதிக்கு தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண் 4100—திரு. ஆர். சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிகள் அனைத்திலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளனவா ?

விடை—

இல்லை.

145—

## மெட்டல் சாலை அமைத்தல்.

வினா எண் 4297—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் வடக்குகாடு விதைப்பண்ணை வழியாக கல்ராயன் மலைக்கு செல்லும் பாதை மிகவும் பழுதடைந்து இருப்பதால் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச்சாலை அல்லது மெட்டல் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மேற்படி சாலை சேலம் மாவட்டத்தில் பழங்குடி மக்கள் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மலைப் பகுதிகளான ஏற்காடு மலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன் மலைப் பகுதிகளில் அமையாததால், இச்சாலையைப் பழங்குடி மக்கள் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலாது.

[1992 ஏப்ரல் 28

146—

மாணவியர் விடுதி துவக்குதல்.

வினா எண். 4326—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குடி தொகுதியில் கொத்தமங்கலம் கிராமத்தில் மாணவியர் விடுதி துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

147—

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் அலுவலகக் கட்டிடம்.

வினா எண். 6022—திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிர்வாக அலுவலக கட்டிடம் சென்னையில் மாதவரத்தில் கட்டப்படவுள்ளதா ?

(ஆ) அது குறித்த விவரங்கள் யாவை ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 133.31 ஏக்கர் நிலம் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைசெய்யப்பட்டு, வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நிதிநிலைமைக்கேற்ப சிறிது சிறிதாக பல்கலைக் கழக கட்டிடங்கள் கட்டப்பட உள்ளது.



1992 ஏப்ரல் 28]

148—

ஆதிதிராவிடர் காலனிகள் பழுதுபார்த்தல்.

வினா எண். 6313—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை ஒன்றியம் மங்களத்துப் பட்டியலில் ஆதிதிராவிடர் காலனிகள் அனைத்தும் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த காலனிகளை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணையின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகள் தாங்களாகவே சொந்தச் செலவில் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டுமாதலால், பழுதடைந்த அவர்களது வீடுகளைச் சரி செய்வது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

149—

தார்ச் சாலை பராமரித்தல்.

வினா எண் 6971—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், சின்னமனை கடற்கரை சாலையை தார் சாலையாக மாற்றியும், மல்லிப்பட்டினம் வரை தார் சாலை பராமரித்து தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. ஆயினும் அதற்கான வாய்ப்பு குறித்து மீன் துறை ஆணையர் ஆய்வு செய்து வருகிறார்.

[1992 ஏப்ரல் 28

150—

**தொழில் மையத்தின் மூலம் பதிவு செய்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள்.**

வினா எண் 3514—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் மையத்தின் மூலம் பதிவு செய்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அதில் இப்போது எத்தனை தொழிற்சாலைகள் இயங்காமல் இருக்கின்றன?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 30—9—1991 முடிய சிறுதொழில் தொடங்க நிரந்தரமாகப் பதிவு செய்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள்—2765.

(ஆ) அதில் இயங்காத தொழிற்சாலைகள்—741.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110 இன் கீழ் அறிக்கைகள் அளித்தல்

**(அ) மதுரை மணியாச்சி மீட்டர் கேஜ் இரயில் பாதையை அப்புறப்படுத்தக் கூடாது என்று மத்திய அரசைக் கோருதல்—முதலமைச்சரின் அறிக்கை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றியமையாத ஒரு பிரச்சினை பற்றி —(குறுக்கீடு) அடுத்து உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் —மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிவிப்புக் கொடுக்க பேரவை விதி 110-ன் கீழ் அனுமதி கோரியுள்ளார்கள். பேரவை விதி 110-ன்



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

கீழ் அந்த மிக இன்றியமையாத முக்கிய அறிவிப்பை பேரவைக்கு வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல், மதுரை-தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டத்தை அமல்படுத்தும் போது ஏற்கனவே மதுரை-மணியாச்சி இடையே உள்ள மீட்டர் கேஜ் லைனை அப்புறப்படுத்தி அகலப்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவு நமது மாநிலத்தின் தென் மாவட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் இடையே மணியாச்சி வழியாக உள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதையை அப்புறப்படுத்தி அகலப்படுத்தினால் தூத்துக்குடி—திருநெல்வேலி பகுதியிலிருந்து தற்போது நேரடியாக சென்னை வந்து சேரும் 9 ரயில்கள் ரத்து செய்யப்படுவதுடன் சென்னை வரும் பயணிகள் கூடுதலாக 104 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் பிரயாண நேரம் மட்டுமின்றி இரயில் கட்டணமும் கூடுதலாகும். பிராட்கேஜ் லைன் அமைத்துக் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் ஏற்கனவே இருக்கின்ற வசதிகளை இழக்க வேண்டும் என்ற முடிவு தான் ஏற்புடையதாக இல்லை. இதுகுறித்து மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கடந்த 11-2-92 அன்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. சி. கே. ஜாபர் ஷெரீப் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மதுரைக்கும் மணியாச்சிக்கும் இடையேயுள்ள மீட்டர் கேஜ் லைனை அப்புறப்படுத்தாமல் அப்படியே வைத்துக் கொண்டு திட்டமிட்டவாறு பிராட்கேஜ் லைனையும் தனியாக அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். மத்திய ரயில்வே அமைச்சர் அவர்கள் 20-4-92 தேதியிட்ட பதில் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள குறிப்பில் மீட்டர் கேஜ் லைன் பிராட்கேஜ் லைனாக அகலப்படுத்தப்படும் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. மீட்டர் கேஜ் லைனைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பது அதன் மூலம் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை தென் மாவட்ட மக்களைப் பெரிதும் பாதிப்பதாகவும் அவர்களுக்கு கூடுதல் பயண நேரத்தையும் கூடுதல் பிரயாணச் செலவையும் ஏற்படுத்துவதாக அமைவதோடு தற்போது இருக்கின்ற வசதிகளைக் குறைப்பதாக இருப்பதால் இது குறித்து மத்திய அரசை அணுகி தற்போதுள்ள மீட்டர் கேஜ் லைனை அகலப்படுத்தாமல் தனியே ஒரு பிராட்கேஜ் லைனை அமைக்க வேண்டும் என்று எங்கள் அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. டி. வேலையா அவர்களும் ஒரு ஸ்பெஷல் மென்ஷனாக இங்கே தெரிவிக்க வேண்டுமென்று என்னிடத்தில் அனுமதி கோரியிருந்தார்கள். அதைவிட அரசாங்கமே முன்வந்து இத்தகைய நடவடிக்கை எடுப்பது இன்னும் அந்தப் பிரச்னையை வலிவுபடுத்துவதாக இருக்கும் என்று கருதிய காரணத்தால் அரசாங்கம் இப்போது அறிக்கை வைத்திருக்கிறது. (குறுக்கீடு) இந்த 110-வது விதியில் விளக்கம் கூடாது. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களுடைய பிரயாண சங்கடங்களை மத்திய அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவருவதாக இந்த அவைக்கு வாக்கு அளித்துள்ளதற்கு நான் தென் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு நிச்சயமாக தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதினால் நிச்சயமாக இதற்கு நல்லதொரு முடிவு வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமரோடு தொடர்பு கொண்டு இதை தனிப்பட்ட முறையிலே தென் மாவட்ட மக்களுக்குச் செய்கின்ற சலுகையாக இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட விவசாயக் கடன்களை 30-6-1992-க்குள் செலுத்துவோருக்கு அரசு ஊக்கத் தொகைகள் வழங்கும் திட்டம்—முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது அவைக்கு பேரவை விதி 110-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கி விவசாயக் கடன் சுமை குறைப்பு பற்றிய தமிழ்நாடு அரசின் புதிய ஊக்கத் திட்டம் பற்றிய ஒரு அறிவிப்பினை இப்போது செய்ய விரும்புகிறேன்.

தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கவும், கூட்டுறவு வங்கிகளைக் காப்பதோடு அவற்றின் பயன்பாட்டை விரிவாக்கவும் பல்வேறு கருத்துக்களை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.





தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள் வட்டி மற்றும் அபராத வட்டியை உரிய காலத்தில் செலுத்த வேண்டிய நிலையில் இருப்பதோடு அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் தொடர்ந்து அதிகரித்து அவர்களால் அவற்றைத் திருப்பிக் கட்ட இயலாத நிலை உள்ளது. மேலும் உரிய காலத்தில் கடன்களைத் திரும்ப வசூல் செய்யாததால் கடன் வழங்கும் வங்கிகள் மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து மீண்டும் கடன் பெற்று விவசாயிகளுக்கு கடன் அளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையையே இந்த நிலை பலவீனப்படுத்தி விடுகின்ற பின்னணி எழுந்து உள்ளதால் அரசு இதில் தலையிட்டு விவசாயிகள் செலுத்த வேண்டிய விவசாயக் கடன்கள் வட்டி மற்றும் அபராத வட்டிகளை முழுமையாகத் தள்ளுபடி செய்து அவர்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டும் என மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தபோது இதனைப் பரிவோடு அரசு பரிசீலனை செய்யும் என்று நான் தெரிவித்தேன். அந்த உறுதிமொழியின் தொடர் நடவடிக்கையாக இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனை செய்தது.

மாநிலத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் விவசாயக் கடன்கள் அனைத்துக்கும் நாம் தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 'நபார்டு' அதாவது National Bank for Agriculture and Rural Development நிறுவனத்தைத் தான் எதிர்நோக்கியிருக்கிறோம். எனவே கூட்டுறவு வங்கிகள் 'நபார்டு' நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும், வகுக்கும் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டே செயல்படவேண்டிய கட்டாய நிலை உள்ளது. 'நபார்டு' நிறுவனம் விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் தொகைகளைத் தள்ளுபடி செய்யும் போது வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற நல்ல பழக்கம் விரைவில் மறைந்துவிட வழி வகுக்கும் என்றும் இதனால் கடன் வசூல் பெருமளவு பாதிக்கப்படுவதுடன் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கவே முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது என்றும், அது மட்டுமின்றி உண்மையிலேயே வசதியுள்ளவர்கள் கூட இது போன்ற தள்ளுபடி சலுகைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்க இது அவர்களை ஊக்குவிக்கும் என்றும் தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு இத்தகைய தள்ளுபடியினால் எந்த வகையிலும் பாதிக்கக் கூடாது என்பதில் 'நபார்டு' நிறுவனம் மிகவும் கண்டிப்பாக உள்ளது. அவ்வாறு கூட்டுறவு வங்கிகளைப் பாதிக்கின்ற வகையில் தள்ளுபடி எதுவும் செய்யப்பட்டால் நபார்டு நிறுவனம் மாநிலத்திற்கு வழங்கி வரும் கடன்

உதவியை முற்றிலுமாக நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளது. இருந்தபோதிலும் கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில், தேவையான உதவிகளைச் செய்யவும் அதே நேரத்தில் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு எந்தவிதத்திலும் பாதிக்கப்படாத வகையில், ''நபார்டு'' நிறுவனத்தின சட்டதிட்டங்களும் நிபந்தனைகளும் மீறப்படாத வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கவும் அரசு முடிவு செய்தது. தமிழக விவசாயிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கி, முழுமையாக உதவி செய்து, அவர்கள் தங்களது கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களை கடன் சுமையிலிருந்து முழுமையாக விடுவிப்பதுடன் கூட்டுறவு வங்கிகளும் முழுமையாக தங்களின் வசூல் குறியீட்டை எய்தி, தொடர்ந்து கடன்கள் வழங்கும் தகுதியைப் பெறக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அரசு பின்வரும் முடிவினை எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–50

தமிழக விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் வட்டி மற்றும் அபராத வட்டி முழுவதையும் வருகின்ற 30—6—1992க்குள் திருப்பிச் செலுத்த உதவும் வகையில் அரசு பின்வரும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடும்.

இந்தத் திட்டத்தின்கீழ் 1—7—1991 அன்று இருந்த நிலவரப்படி, குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களில் தவணை கடந்த அசல் தொகையையும் அதன் பிறகு 1—7—1991 முதல் 30—6—1992 வரையுள்ள காலத்தில் வசூலிக்கத் தகுதியாகும் தொகைகள் அனைத்தையும் விவசாயிகள் 30—6—1992க்குள் தவறாது செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்தும் விவசாயிகளுக்கு 1—7—1991 அன்று உள்ள நிலவரப்படி தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசே அவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஊக்கத் தொகைத் திட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் மத்திய காலச் கடன்களுக்கு மட்டுமே பொருந்தும். இந்த ஊக்கத்தொகை ஒவ்வொரு விவசாயிக்கும் காசோலை, செக் மூலமாக நேரடியாக வழங்கப்படும். அரசு வழங்கும் இந்த ஊக்கத் தொகையை விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய பாக்கிகளுக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விவசாயிகள் 1—7—1991 அன்று இருந்த நிலவரப்படி, தவணை கடந்த அசல், அதன்பின் 30—6—1992 வரை



சூலிக்கத் தகுதியான அனைத்துத் தொகைகளையும் செலுத்தும்
ட்சத்தில் அரசு 1—7—1991 அன்று நிலவரப்படி தவணை
டந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை
ரசு, விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி விவசாயி
ள் மூலமாக வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த
ற்பாடுகள் செய்யப்படும். மேலும் 1—7—1991 அன்று நிலு
வயில் இருந்த தவணை கடந்த வட்டி மற்றும் அபராத
ட்டியை 1—7—1991க்குப் பிறகு செலுத்திய விவசாயிகளுக்கும்
தற்கு ஈடாக ஊக்கத் தொகை இந்தத திட்டத்தின்கீழ் வழங்கப்
டும். (மேசையைத் தட்டும் ஒலி) குறுகிய கால மற்றும் மத்திய
ாலக் கடன்கள் மீது 1—7—1991 அன்று நிலவரப்படி நிலுவை
ல் இருக்கும் தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டித்
தாகைகளுக்கு சமமான தொகையை நேரடியாக விவசாயி
ளுக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ்
காடுக்க 69.07 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். (மேசை
யத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திலே
ள்ள 13 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்பதை
க்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
ட்டும் ஒலி) இந்தப் புதிய திட்டத்தை அரசின் நிதிநிலைமை
டுமையாக இருக்கும் தற்போதைய சூழ்நிலையிலும் தமிழக
வசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்
ங்கள் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நீண்ட நாட்களாக
டன் சுமையால் தத்தளித்துவரும் தமிழக விவசாயப் பெருங்குடி
க்களின் கடன் சுமையில் ஒரு பகுதியையேனும் எங்கள் அரசு
ற்றுக்கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்வதுடன் அவர்கள் வள
டன் வாழ வழிவகுத்து உள்ள இந்தத் திட்டத்தை இம் மாமன்
த்தில் அறிவித்ததில் பெருமை அடைந்துள்ளேன் என்பதைத்
தரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-53

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
றுப்பினர்கள் என்ன சந்தேகங்களை இங்கே எழுப்பப் போகி
ார்கள் என்பதை உணர்ந்து, எனக்குத் தெரிந்த விளக்கங்களை
ங்கே கூறலாம் என்று இருக்கிறேன். விவசாயிகள், Short
erm Loan, Medium Term Loan, Long Term Loan என்று
ன்று வகையான கடன்களைப் பெற்று இருப்பார்கள். இந்தச்
லுகை லாங்டேர்ம் லோனுக்குப் பொருந்தாது. ஏனெனில்
ாங் டேர்ம் லோன் பெற்ற விவசாயிகள் பெரும்பாலும் வசதி
டைத்தவர்களாக இருப்பார்கள். டிராக்டர்கள் போன்ற
சதிகளைப் பெறுவதற்காக இந்த லாங் டேர்ம் கடன்களைப்
பற்றிருப்பார்கள். உண்மையிலேயே ஏழைகளாக இருப்பவர்கள்
டன் சுமையால் பாதிக்கப்பட்டவர்கள் ஷார்ட் டேர்ம்
ற்றும் மீடியம் டேர்ம்லோன்களைப் பெற்ற விவசாயிகளே ஆவர்.

எனவே, நபார்டைப் பொறுத்தவரை, 'தள்ளுபடி' என்பதையே சொல்லக்கூடாது; அந்த வார்த்தையையே பயன்படுத்தக் கூடாது என்று மிகவும் கண்டிப்பாக உள்ளது. எனவே, அரசு தள்ளுபடி செய்வதற்கில்லை. தள்ளுபடி செய்வதற்கு மாறாக ஊக்கத் தொகையை அரசாங்கம் வழங்குகிறது. எனவே, 30-6-1992-க்குள் விவசாயிகள் 1-7-1991 வரை இருந்த பாக்கி மற்றும் 30-6-1992 வரை வசூலுக்குத் தகுதியாகும் தொகை இதில் உள்ள அசலை அவர்கள் கட்டிவிட வேண்டும். அப்படி அவர்கள் கட்டினார்கள் என்றால் அவர்கள் பெயருக்கே அரசாங்கம் காசோலைகளைத் தயார் செய்து ஏற்கனவே அந்த கோஆப்பரேட்டிவ் இன்ஸ்டிடியூஷன்ஸ்-அந்த பேங்குகளுக்கு அனுப்பி வைக்கும். அந்த விவசாயி தன்னுடைய அசல் தொகையைச் செலுத்துவதற்கு வரும்பொழுது இந்தச் சலுகை, இந்த ஊக்கத் தொகைக்கான செக் அவருக்கு அங்கே கொடுக்கப்படும். அந்த விவசாயி அதனை என்டார்ஸ் செய்து அந்தப் பேங்குக்குக் கட்டிவிட வேண்டும். ஆக, வட்டி, தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டி இதற்கான தொகையை அரசு காசோலையாக வழங்கும். அதை அந்த விவசாயியே வங்கிக்கு வந்து பெற்றுக் கொண்டு என்டார்ஸ் செய்து அந்தப் பேங்குக்கு வழங்கிவிட வேண்டும். ஏற்கனவே சிலபேர்கள் முழுவதையும் கட்டியிருப்பார்கள். அவர்களுக்கும் இந்தச் சலுகை உண்டு. அவர்களும் அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வே. தம்புசாமி : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விளக்கத்திற்குப் போகக் கூடாது. நன்றி தெரிவிப்பது மாதிரி இருந்தால் தான் இருக்கலாம். விதி ரொம்பத் தெளிவாக இருக்கிறது. திரு. தம்புசாமி.

திரு. ஜி. பழனிசாமி : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, உட்காருங்கள்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்திய கால, குறுகிய காலக் கடனுடைய வட்டி, அபராத வட்டி தள்ளியிருப்பதற்கு நம் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நீண்ட காலக் கடன் என்கிற பெயரால் இரண்டரை ஏக்கர் உள்ள சிறு விவசாயிகளுக்கு ஆயில் பம்பு செட்டுகள் வழங்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி இரண்டரை, அல்லது ஒரு



ஏக்கர் நிலம் பெறுவதற்கு நிலவளவங்கியின் மூலம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. சிறிய விவசாயிகள் பட்டியலிலே இவர்கள் இருக்கிறார்கள். இதனால் அந்த பம்பு செட், நீர் இறைக்கின்ற ஆயில் என்ஜின் வழங்கியது, சிறு விவசாயிகள் அந்த நிலத்தை வாங்குவதற்காக வழங்கியிருக்கக் கூடியது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். நீங்கள் நேரடியாக உள்ளே போய் விளக்கம் கேட்கக் கூடாது. விதி நமக்கு இடம் தரவில்லை. 110-இன் கீழ் ஒரு அறிக்கையை வைக்கிறபோது நீங்கள் நன்றி தெரிவிக்கலாம் அல்லது இந்த இந்த நபர்கள் பாதிக்கப்படவில்லை என்கிற ஒரு கருத்தைச் சொல்வதுமாதிரி, அதோடு நின்று கொள்ளலாம். நீங்கள் ஒரு விளக்கம், விரிவான விளக்கம், ஒரு டிபேட்டுக்கே போகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை. நன்றி என்ற அந்த அளவோடு முடித்துக் கொள்ளலாம். அதுதான் நல்லது இதிலே. (குறுக்கீடு) அதற்குக்கூட விதி இடம் தரவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் எழுப்பிய சந்தேகத்திற்கு, எழுப்பிய கேள்விக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். அதாவது லாங் டேர்ம் லோன்ஸ் பெற்ற விவசாயிகள் ஒரு சொத்தைப் பெறுவதற்காக, சில அஸெட்ஸை ஏற்படுத்திக் கொள்வதற்காகத்தான் இந்தக் கடன்களை வாங்கியிருப்பார்கள். அதாவது ஒரு பம்பு செட், ஒரு டிராக்டர், இதுபோன்ற அஸெட்ஸை ஏற்படுத்திக் கொள்வதற்காகத்தான் வாங்கியிருப்பார்கள். எனவே, அது தனிப்பட்ட ஆதாயம்; தனியாருடைய ஆதாயம் என்று ஆகி விடுகிறது.

ஆனால், உண்மையிலேயே ஏழைகளாக இருக்கின்ற விவசாயிகள் கிராப் லோனைப் பெறுகிறார்கள், அது ஒரு ஆண்டுக்கு. அது ஷார்ட் டேர்ம் லோன். அதேபோல, மத்திய காலக் கடன். இதில் நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், எந்தெந்த விவசாயிகள் லாங் டேர்ம் லோன்களைப் பெற்றிருக்கின்றார்களோ அவர்கள்கூட ஷார்ட் டேர்ம் லோனைப் பெற்றிருப்பார்கள்; கிராப் லோனைப் பெற்றிருப்பார்கள். மத்திய காலக் கடனையும் பெற்றிருப்பார்கள். அந்தக் கடன்களுக்கெல்லாம் நாம் (மேசையைத் தட்டும் ஒலி) அபராத வட்டியும், வட்டித் தொகையும் கொடுக்கிறோம் அல்லவா; எனவே லாங் டேர்ம் லோன் பெற்ற விவசாயிகள் பெரும்பாலும் கிராப் லோனையும் பெற்றிருப்பார்கள். அவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைவார்கள் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி. உள்ளே போகக் கூடாது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருந்த குறுகிய கால, மத்திய காலக் கடன்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்கின்ற இந்தக் கொள்கையை, 'தள்ளுபடி' என்கின்ற அந்தப் பெயரைச் சொல்லாமல் அவர்களுக்கு 'ஊக்கத்தொகை' என்கின்ற அடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் டெக்னிக்கலாக 'நாபார்ட்' வங்கி விதித்த நிபந்தனைகளுக்கு, ஒரு வழிவகை காணுகிற வகையிலே, இப்படி ஒரு நலலத் திட்டத்தை அறிவித்திருப்பதை, இதுவரை யாருமே, நமமுடைய இந்திய மாநிலங்களில எதுவுமே செய்ய முடியாத சலுகையை விவசாயிகளுக்குக் கொடுத்து (மேசையைத் தடடும் ஒலி) விவசாயிகளைக் காப்பாற்றுகிற வகையிலே அவர்களுககு இந்தச் சலுகையை அறிவித்திருப்பதை, விவசாயப் பெருமக்கள் சார்பிலே மனமார. வரவேறகிறேன்: பாராட்டுகிறேன். அதிலே, நிலவள வங்கிகளைப் பொறுத்தமட்டிலே ஒரு சிறிய கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வேண்டாம்: அதற்கு மேலே போகிறீர்கள: நன்றி சொலவதோடு நிறுத்தினால் சரி. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமனறத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு சட்டமன்றத்திலே பலமுறை கோரிக்கை கொடுத்து, விவசாயிகளின் சங்கம் அனைதது விவசாயிகளின் சங்கம் கோரிக்கை கொடுத்து, இந்தப் பிரச்சினையை நீண்ட காலமாக கடந்த அரசு கவனிக்காமல் ஏமாற்றி, பிறகு அதையும் அந்த 70 கோடியையும் தமிழக அரசு கட்டி, மீண்டும் அந்தத் தொலலைக்கு வரும்போது, 'நாபார்டு 'க்கு நாம் சொல்கிற. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இல்லை. இல்லை. அதிலே போக வேண்டாம். 'நாபார்டு ' பற்றி சொன்னால், நம்முடைய பேரவையிலே விவாதித்தது வெளியிலே போகும்.

திரு. ஆர். சிங்காரம் ; இதற்கு நான் 'மென்ஷன்' கொடுத்திருக்கிறேன். அதை நீங்கள் சொல்லவில்லை. 'மென்ஷன்' பிளேஸ் பண்ணுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறேன்.





அதே நேரத்திலே எங்களுடைய உணர்வைப் புரிந்து கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி என்ற வார்த்தையை தள்ளுபடி செய்துவிட்டு, 'நபார்டு' சொன்ன கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மிக நாகரிகமாக ஊக்கத்தொகை என்ற வகையிலே அதைப் புகுத்தி, நம்முடைய விவசாயிகளுக்கெல்லாம் 'அவார்டு' கொடுக்கிற வகையிலே, விவசாயிகளினுடைய கண்ணீரைத் துடைத்து, கட்டிய அபராதத்தை தள்ளுபடி செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை விவசாயிகளின் சார்பிலேயும், சட்டமன்ற மாமன்ற உறுப்பினர்களின் சார்பிலேயும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி நீங்கள் விவாதத்திற்கு உள்ளே போகக் கூடாது. (குறுக்கீடு இல்லை, விவாதம் கூடாது என்று விதி இருக்கிறது. அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நீண்டகால கோரிக்கை. பல அரசுகள் விவசாயிகளினுடைய கடன்களைத் தள்ளுபடி செய்யாமல் நிலுவையில் வைத்து வந்தது. இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வட்டி, அபராத வட்டி அனைத்தையும் தள்ளுபடி செய்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. தேதியை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–7–1991 முதல் 30–6–1992 முடிய இதைக் கட்டிவிட்டால், அபராத வட்டி இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவருடைய முடிவுக்கு நான் மாறாக சொல்லவில்லை. அநேகமாக இந்த ஆண்டைப் பொறுத்த வரையில், காலத்தோடு ஜூன் மாதம் 12-ஆம் தேதி தண்ணீர் தரப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அதைவிட இன்றையதினம் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள். நல்ல விளைச்சல் வரும். இந்த 30—6—1992 என்பதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சின்ன பரிசீலனை செய்தால் செப்டம்பர் மாதம் வரை, 30 ஆம் தேதி வரையிலும் கொடுத்தால் நிச்சயமாக குறுவை கிராப்பின்போதாவது அந்த விவசாயிகள் அவசர்வத்தோடு கொடுப்பதற்கு முன்வருவார்கள் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர அவர்களை, நான் கேட்டுக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையிலே இருக்கிற பல்வேறு தரப்பினருடைய கோரிக்கைகளை ஏற்று, இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளினுடைய சிரமங்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கோடு, அசல் தொகையினை முழுமையாகச் செலுத்துகிற அத்தனை பேருக்கும் வட்டியையும், அபராத வட்டியையும் குறுகிய கால மத்தியக்கால கடன்களைப் பொறுத்த வரையில் முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு அவர்களுக்காக அரசாங்கமே ஊக்கத் தொகையாக அந்த வட்டியையும் அபராத வட்டியையும் செலுத்துவதாக அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதற்காக அரசாங்கத்திற்கு, எதிர்க்கட்சியின் சார்பிலே மட்டுமல்லாமல், தமிழகத்திலே இருக்கிற அனைத்து விவசாயிகளின் சார்பிலேயும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதைப் பொறுத்த வரையில், அது சாத்தியப்படுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அதிலே இருக்கிற சிரமங்கள் எனக்குத் தெரியும். நபார்டு '' நேஷனல் பேங்க் ஃபார் அக்ரிகல்சர் அண்டு ரூரல் டெவலப்மெண்ட் அவர்கள் சில விதிகளை வகுத்து இருக்கிறார்கள். அதிலேயிருந்து பெறுகின்ற கடனையோ அல்லது அவர்கள் தருகின்ற ஊக்கத் தொகையினையோ பெறுவதற்கு அதிலே ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றதா என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும், விவசாயிகள் ஜூன் மாதத்திலே பயிர் செய்து பிறகு கட்டுவதற்கு ஏதுவாக இருக்கின்ற வகையிலே, செப்டம்பர் வரையில் தள்ளிவைக்க முடியுமா என்பதைப் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகளுடைய துயரைத் துடைக்கின்ற வகையில் இந்தப் புரட்சிகரமான திட்டத்தை அறிவித்திருக்கிற தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) இரண்டு ஸ்பெஷல் மென்ஷன்கள் இருக்கின்றன. அதற்கு அடுத்து ப்ரிவிலெஜ் இஷ்யூ எடுக்க இருக்கிறேன். (குறுக்கீடு). அந்த நேரத்திலே நீங்கள் அதைச் சொல்லலாம். அது சம்பந்தமாகத்தான் வருகிறது. அந்த நேரத்திலே உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன். முதலிலே ஸ்பெஷல் மென்ஷன். ப்ரிவிலெஜ் இஷ்யூ வந்து, ரெகுலர் அஜெண்டா ஆரம்பிக்கும்போது வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : நான் ஸ்பெஷல் மென்ஷன் கொடுத்திருந்தேன். தயவு செய்து நீங்கள் எடுத்துக் கொண்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று வேறு இரண்டு பிரச்சினைகளை எடுக்கிறோம். அதற்கு அடுத்து, நீங்கள் மென்ஷன் பண்ணுவதற்கு வாய்ப்பு அளிக்கிறேன்.

## 3. சிறப்புக் குறிப்புகள்

### (அ) சென்னை, இராதாகிருஷ்ணன் நகரிலுள்ள வ.உ.சி. முன்னேற்றச் சங்கம் இடிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து :—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு உ. பலராமன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. இரா. நடேசன், திரு. பெ. பொன்னுசாமி, திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மற்றும் திரு. டி. சுதர்சனம் ஆகியோரும், சென்னை நகரின் ஆர். கே. நகர் பகுதி, வ.உ.சி. நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியப்பகுதியில் உள்ள வ.உ.சி. மன்றம் இடிக்கப்பட்டதாக உள்ள பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று என் அனுமதியைக் கேட்டு இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் .

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால், வட சென்னை, தண்டையார்பேட்டைப் பகுதியில் தனி நபர் ஒருவர் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் காரணமாக, அந்தப் பகுதியிலே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. 1964ஆம் ஆண்டிலே இருந்து இராதா

கிருஷ்ணன் நகர் வ.உ.சி. நகரிலே, வ.உ.சி. நகர் தேசிய சங்கம் என்கிற பெயரிலே ஒரு சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராசர் காலத்திலே இருந்து அந்தச் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சங்கம் அரசு பதிவு பெற்ற சங்கமாக இருக்கிறது. அந்தச் சங்கம் தனிப்பட்ட நபர் ஒருவருக்குச் சொந்தமானது என்று பாவித்து தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1990 ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியம் ஒரு எச்சரிக்கை நோட்டீஸ் அவர்களுக்கு அனுப்பி வைத்தது. அந்த எச்சரிக்கை நோட்டீஸை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்திலே ஒரு 'ரிட்' பெட்டிஷன் தாக்கல் செய்யப்பட்டது. அந்த 'ரிட்' பெட்டிஷனுக்குக் கீழே W.M.P. 20586 of 990 in W.P. No. 13340 cf 1990 மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த டபிள்யூ.எம்.பி. யிலே கனம் நீதிபதி அவர்கள், குடிசை மாற்று வாரியத்திற்குக் கீழ்க்கண்ட ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்திற்குட்பட்டு அந்த இடம் இருந்து, அந்த இடத்தை தனி நபர் யாராவது ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளலாம், என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அதிலே பெயரையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ராமதாஸ் என்பவரது தனிப்பட்ட வீடாகவோ கடையாகவோ இருந்தால் அகற்றிவிடலாம் என்று ஹைகோர்ட் அன்றைய தினம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

அதனையேற்று, அன்றையதினம் குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக இருந்த திரு. சிரியாக், ஐ.ஏ.எஸ். அவர்கள் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு, அங்கே தனி நபர் ஆக்கிரமிப்பு இல்லை; சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது; வ.உ.சி. நகர் முன்னேற்றச் சங்கம் என்ற பெயரிலே அங்கே சங்கம் இருக்கிறது என்று அவர் குடிசை மாற்று வாரியக் கோப்பிலே அதைக் குறிப்பிட்டிருப்பதோடு, பரிந்துரையும் செய்திருக்கிறார். அந்தக் குடிசைமாற்று வாரியத்தினுடைய கருத்துக்குப் பிறகு இன்றைய தினம் அந்தப் பகுதி நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சருடைய தொகுதியிலே இருக்கிறது. அவர்களும் அது குறித்து ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். குடிசைமாற்று வாரியமும் ஆலோசனை வழங்கியிருக்கிறது. அந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு, அன்றைய தினம் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்னாலே சில பேர் இந்தப் பிரச்சினையை முழுவதுமாக மறந்துவிட்டு அங்கே வ.உ.சி. நகர் 1452/ஏடி பிளாக்கிலே வசிக்கின்ற சாந்தி என்பவர் மேற்படி சங்கக் கட்டிடம் இருக்கின்ற இடம் தனியார் ஒருவருக்குச் சொந்தம் என்று கூறி, ராமதாஸ் என்பவருக்கு எதிராக ஒரு ஆணையை "சிட்டி சிவில் கோர்ட்" ஜட்ஜிடமிருந்து அட்டாச்மெண்ட் ஆர்டர் பெற்றிருக்கிறார்.



An attachment order has been obtained from City Civil Judge The
Court has ordered attachment against immovable property for violating
the Injunction Order என்று சொல்லி உத்தரவு பெற்றிருக்கிறார்கள்
அப்படி அவர்களுக்கு ஆணை பிறப்பிக்க அந்த கோர்ட்டுக்கு அதி
காரம் இருக்கிறதா என்பதே சந்தேகமான ஒன்று. அவர்களுக்கு
அதற்கு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதற்கும்
என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்
டிருந்தாலும் கூட இந்தச் சங்கம் அண்மைக் காலத்தில் வந்த
சங்கம் அல்ல. ராம்தாஸுக்கும் அந்தச் சங்கத்திற்கும் என்ன
சம்பந்தம் என்றால் ராம்தாஸ் அந்தச் சங்கத்தின் உறுப்பினர்.
ராம்தாஸ் அந்தச் சங்கத்தில் பொதுச் செயலாளராக இருக்கிறார்.
ஆனால் அந்தச் சங்கத்தினுடைய தலைவர் மதுரை அவர்கள்
கடந்த 28 ஆண்டுகாலமாக அந்தச் சங்கத்திற்குத் தலைவராகப்
பணியாற்றிக் கொண்டிருப்பவர். அவர்தான் இந்தப் பகுதிக்கு
வ.உ.சி. நகர் என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கை
வைத்து அன்றையதினம் மெட்ராஸ் ஹவுசிங் யூனிட் நிர்வாக
அதிகாரியாக, அட்மின்ஸ்ட்ரேட்டிவ் ஆஃபீஸராக இருந்த
ராமச்சந்திர ராவ் அவர்களிடத்திலிருந்து பதில் பெற்றிருக்கிறார்.

The State Housing Board, in its Resolution No. 532 dated
23-12-1965, has resolved to name theSeniammankoil Lane tenemental
area in Tondiarpet as V.O.C. Nagar, as desired by the residents of the
area என்று 1966-ம் ஆண்டு ராமச்சந்திரராவ் அவர்கள் அன்றைக்கே
திரு. மதுரைக்கு எழுதி இருக்கிறார். எனவே இது தனிப்பட்ட
நபருக்குச் சொந்தமான இடம் இல்லை என்பது நிச்சயமாக
ஊர்ஜிதம் ஆகிறது. இவர்கள் தவறான ஒரு ஆணை பெற்றது
மட்டுமல்லாமல் அட்டாச்மெண்ட் என்று சொல்லிவிட்டு
'டெமாலிஷன்'-இல் அங்கே ஈடுபட்டிருக்கிறார்கள்.

Attachment does not necessarily mean that there should be demo
lition. Not only that. Just becausey ou have got an order for attach
ment, you cannot demolish. Now, they havelndulged In demolltlon.
ஆகவே அந்தப் பகுதியை முழுவதுமாக ஆக்கிரமிப்பதற்கு
முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முழுவதுமாகக் கட்டி
டமாக இருந்ததை, ஆர். சி. கட்டிடமாக இருந்ததை இடித்துத்
தள்ளி இருக்கிறார்கள். இடித்துத் தள்ளியதோடு மட்டும்
அல்லாமல் இன்றையதினம் அந்த நபர் அந்தப் பகுதியில் ஆக்கிர
மிப்பு செய்து இருக்கிறார். 40 ரவுடிகள் துணையோடு.
அங்கே போய் ரவுடிகளை வைத்துக் கொண்டு அதைச் செய்திருக்
கிறார்கள். சில அதிகாரிகள் தவறுக்குத் துணை போய் இருக்
கிறார்கள். அந்த அதிகாரிகளின் துணை காரணமாக, அந்தப்
பகுதி மக்கள் முழுவதுமாகத் திரண்டும் கூட அவர்களால் அந்த
ரவுடிகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதிகாரிகள்

அவர்களுக்குத் துணை போய் இருக்கிறார்கள். குறிப்பாகக்
காவல் துறையினர் துணை போய் இருக்கிறார்கள். காவல்
துறையினர் சொல்வதெல்லாம் அவர்கள் உத்தரவு பெற்றிருக்
கிறார்கள் என்பது. நிச்சயமாக உத்தரவு இல்லை. அந்த
உத்தரவு சங்கத்திற்கு எதிரான உத்தரவு அல்ல. அந்த
உத்தரவு ராமதாஸ் என்பவருக்கு எதிராகத் தரப்பட்ட உத்தரவு.
அந்த இடம் ராமதாஸுக்குச் சொந்தமான இடம் இல்லை.
அந்த இடத்தில் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே
நான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்
வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆக்கிரமிப்பை
அகற்றி மீண்டும் பழையபடி வ.உ.சி. முன்னேற்றச் சங்கமாக
அந்தச் சங்கம் இயங்குவதற்கு வழிவகை காண வேண்டும் என்று
அரசை உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு வீட்டு வசதி
மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பலராமன்,
திரு. தண்டாயுதபாணி, திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு.
நடேசன், திரு. பொன்னுசாமி, திரு. சிங்காரம், திரு. ராமசுப்பு
ஆகியோர் இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை இங்கே எழுப்பி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்
பினர்கள் குறிப்பிட்டுள்ள இடம் ஆர். கே. நகரில் உள்ள
வ.உ.சி. நகரில் கதவு எண் 1452-க்கு அருகில் உள்ள குடிசை
மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடமாக இருந்து கொண்டு
இருக்கிறது. இந்தக் கதவு எண். 1452 என்ற இலக்கத்தில்
வசிப்பவர் திருமதி சாந்தி என்பவர். இவருக்கும் அந்த
ராம்தாஸ் என்பவருக்கும் சில வழக்குகள் நடைபெற்றதாக
குறிப்புகள் கூறுகின்றன. இருந்தபோதிலும் கடந்த திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில் திரு. ராமதாஸ் அவர்களுக்கு
குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக ஒரு நோட்டீஸ் விடப்
பட்டது. குடிசை மாற்று வாரியத்தின் நிலத்தை காலி செய்து
கொடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. திரு. ராம்தாஸ்
என்பவர் தாம் கையகப்படுத்தியுள்ள நிலத்தை உடனடியாகக்
குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும்
என்று கோரி இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கிறது இதற்கு
முன்பாக திரு. ராம்தாஸ் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு
போட்டிருந்தார். அதன் எண். ஓ. எஸ். 5906/90 நாள்
26-6-1990. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதாகக் குறிப்புகள்
கொடுக்கப்பட்டிருக்கின்றன.





மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல்
அதிகாரிகள் துணையோடு முறைகேடாக, அந்த இடத்தில் எந்த
விதமான உத்தரவும் இல்லாமல் ஒரு தனிப்பட்ட நபர் அந்தக்
கட்டிடத்தை இடித்து, முறையான முடிவெடுக்க விடாமல்,
முடிவு எடுக்கப்படாமல் தனிப்பட்ட முறையில் இப்படி சட்டத்
திற்கு புறம்பான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று
சொன்னால் நிச்சயமாக குடிசை மாற்று வாரியம் அந்த நிலத்தைத்
திரும்பப் பெறுவதற்கும், அதில் நியாயம் வழங்குவதற்கும் உட
னடியாக நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியைக் கூறுகிறேன்.

முற்பகல் 11-15

<u>ஆ) சுயநிதி பாலிடெக்னிக் ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்புக்
கோரி உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. எஸ். பீட்டர்
அல்போன்ஸ், திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் சுயநிதி பாலி
டெக்னிக்குகள் ஆசிரியர்கள் சிலர் உண்ணாவிரதம் இருப்பது
பற்றிய ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு
வந்திருக்கின்றார்கள். அதை எழுப்ப அனுமதித்திருக்கிறேன்.
திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கோவை 'சங்கரா' திருமங்கலம் 'தன
பாண்டியன்' மற்றும் மலையடிகுறிச்சி 'கோமதியம்மாள்'
ஆகிய பாலிடெக்னிக்குகளிலே வேலை பார்த்து வந்த சுமார் 70
ஆசிரியர்கள் 8, 9 ஆண்டுகளாக வேலை பார்த்தவர்கள்.
திடீரென்று வேலை நீக்கம் செய்யப்பட்டு 6 மாத காலமாக
வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த சுயநிதி பாலிடெக
னிக்குகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அலுவலர்களுக்கு
பணி நிரந்தரம் வேண்டும், பணி பாதுகாப்பு வேண்டும் என்கின்ற
கோரிக்கையினை வைத்து பல்வேறு கட்டங்களாகப் போராடி
வருகின்ற ஆசிரியர்கள், கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணா
விரதம் இருந்தவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு
சுமார் 64 பேர்கள் சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்
பட்டிருக்கின்றார்கள். இந்த ஆசிரியர்கள் அரசிடமிருந்து
சம்பளம் உயர்வோ அல்லது வேறு எந்தவிதமான சலுகைகளை
யோ எதிர்பார்க்கவில்லை. அரசு தலையிட்டு தங்களுக்குப்
பணி பாதுகாப்பும், பணி நிரந்தரம் செய்வதற்கு வழிவகை
செய்ய வேண்டும் என்று கேட்கின்ற அதே நேரத்தில்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 ஏப்ரல் 28

4 ஆண்டுக்காலமாக தேர்வு பணி செய்து வந்து .அவர்களுக்கு தொழில் நுட்ப இயக்குநரால் ஊதியம் வழங்கப்படாமல் இருந்து வருகிறது என்பது குறித்தும், எம். ஏ., எம். எஸ்ஸி., பி. டெக்., பி. ஈ. படித்தவர்கள் மாதம் 400 ரூபாய்க்கு வேலை பார்க்கின்ற பரிதாபம் இங்கே நடந்துகொண்டிருக்கிறது. அதையும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருந்து இன்றையதினம் சிறையிலே அடைக்கப் பட்டிருக்கிறார்கள். பல்வேறு புதிய நல்ல சலுகைகளை தொடர்ந்து கல்வி மானியக் கோரிக்கையின் போதும், தற்போது கொண்டுவரப்படுகின்ற சட்டங்கள் மூலமும் செயல்படுகின்ற நமது அரசு அந்த சுயநிதி பாலிடெக்னிக்குகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை பரிவோடு பரிசிலித்து அவர் களுக்கு பணி நிரந்தரம் செய்வதோடு மட்டுமல்லாமல் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கின்ற அவர்களை விடுதலை செய்வதற்கு கருணையோடு தமிழக அரசு முன்வரவேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்பிரச்சினையை திரு. ஜி. பழனிசாமி அவர்களும், டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களும் எழுப்பியதாக சேர்த்துக்கொள்ளப்படுகிறது. மாண்பு மிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய நிதி பாலிடெக்னிக்குகளில் 3 பாலிடெக்னிக்குகளில் இதுபோன்ற பிரச்சனைகள் இருந்து வருவதை அந்த பாலிடெக்னிக்குகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் மற்ற ஆசிரியர்கள் சங்கங்களும் என்னுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறார்கள். அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப் பற்றி கல்வித்துறை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. சுய நிதி பாலிடெக் னிக்குகள் அரசாங்கத்திடமிருந்து எந்த நிதி உதவியையும் பெறுவதில்லை. அதில் ஓரளவுக்கு அவர்களே சுதந்திரமாக இயங்கு கிற சூழ்நிலை ஏறபடுத்தப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் அந்த பாலிடெக்னிக்குகள் விதிக்கப்பட்டிருக்கின்ற சில விதிகளை அவர்கள் பின்பற்றி நடந்தாகவேண்டும். குறைந்த சம்பளம் தருவதாக இருந்தாலும் அல்லது வேறு வசதிகள் இங்கே இல்லாமல் இருந்தாலும் அல்லது ஆசிரியர்களை இந்த மாதிரியான நிலைமைகளுக்கு ஆளாக்குவதாக இருந்தாலும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தகைய சுயநிதி பாலிடெக்னிக்குகள் அரசினுடைய ஆதரவை இழக்கவேண்டிய நிலைமையும் வரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே உரிய நடவடிக் கைகளை எடுத்து அந்த பாலிடெக்னிக்குகளை அரசு கட்டுப் படுத்தும் என்ற உறுதியை தந்து அந்த ஆசிரியர்கள் பிரச்சினையை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 28]

<u>(இ) கமுதி தொகுதியில் கல்லூரி மாணவர்கள்மீது போடப் பட்டுள்ள வழக்கை வாபஸ்பெற வேண்டியதன் அவசியம் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் 24 ஆம் தேதி அவருடைய தொகுதியிலே நடந்த ஒரு துப்பாக்கிச் சூடு பற்றிய பிரச்சனையைக் கொடுத்திருக்கிறார் கள். அன்றையதினம் வேறு பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டு அவை யின் நேரம் நெடுநேரம் ஆகிய காரணத்தினாலே அதை எடுத்துக் கொள்ளமுடியவில்லை. அது தொடர்ந்து வருகிறபோது, அன்று வேறு பிரச்சினை இருந்ததால், அந்தப் பிரச்சினையில் அந்த அளவுக்கு அவ்வளவு பதட்டம் இல்லை என்கின்ற காரணத்தினால் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. (குறுக்கீடு) திரு. ஆர். சிங்காரம் அவர்களும் இந்தப்பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கத்தின் கவனத்திற்கு மட்டும் இதை நீங்கள் கொண்டுவரலாம். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, என்னுடைய தொகுதியான கமுதியில், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி மாணவர்களுக்கும் இங்கே இருக்கின்ற நம்முடைய எம். பி. டி. சி. பஸ் ஊழியர்களுக்கும் இடையில் நடந்த தகராறின் காரணமாக போலீசார், 22 ஆம் தேதி அந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது; 23 ஆம் தேதி போலீஸ் அதிகாரிகள் சென்று மாணவர்களை அவர்களுடைய கல்லூரிக் குள்ளே நுழைந்து அடித்து 9 மாணவர்களுக்கு மிகப் பயங்கரமான காயங்கள் ஏற்பட்டு அவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரியிலே இருக் கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

முற்பகல் 11-20

அதுமட்டுமல்லாமல் அந்த மாணவர்கள் மீது 307 செக்சனில் வழக்குகள் வேறு தொடரப்பட்டிருக்கிறது. இது எல்லாம் மாணவர்கள் மீது தவறா, போலீஸ் மீது தவறா அல்லது எம். பி. டி. சி. பஸ் ஊழியர்கள் மீது தவறா என்கிற நிலைமைகளை எல்லாம் ஆராய்வதை விட மாணவர்கள் என்பவர்கள் ஒரு வர்க்க ரீதியானவர்கள் அல்ல என்ப தையும் நாம் உணர வேண்டும். ''கடிதோச்சி மெல்ல எறிக'' என்ற திருவள்ளுவர் வாக்குப்படி மாணவர்கள் ஒரு வேளை தவறு செய்திருந்தால் கூட அவர்களை மிகப் பக்குவமாக அணைத்துச் செல்கின்ற ஒரு முறையை இதிலே பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தயவுசெய்து மாணவர்கள் மீது போட்டிருக்கின்ற 307 செக்சன், அதைப்போன்ற வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்று, மாணவர்களிடையேயும், போலீஸ் அதிகாரிகளிடையேயும், எம். பி. டி. சி. ஊழியர்களிடையேயும் ஒரு சுமுகமான நிலையை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய அரசை கேட்டுக்கொண்டு நான் முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

4. சில பத்திரிக்கையாளர்கள் அவையைப் புறக்கணிக்கப் போவதாக வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு 4 கட்சிகளின் சார்பிலேயும் ஒரு கருத்தை குறிப்பிட விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இல்லை, உங்கள் சார்பிலே என்று சொல்லுங்கள். தாங்கள் மட்டுமே, ஒரே கரு உறுப்பினர் இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே தான் நீங்கள் இதைச் சொல்ல முடியுமே தவிர, மற்றக் கட்சிகள் சார்பில் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வராது.

திரு. ச. இராமச்சந்திரன்; ஒரு வேண்டுகோள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்

திரு. எஸ், ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கட்சிகளின் சார்பிலே நான் ஒரு பிரச்சினையை எழுப்புகிறேன், என்று சொன்னால் 4 கட்சிகளும் ஒன்றாக இணைந்து நாங்கள் இந்த சட்டசபையிலே இயங்கப்போகிறோம் என்று உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கவேண்டும். அப்போது தான் 4 கட்சிகள் சார்பில் 5 கட்சிகள் சார்பில் அல்லது 2 கட்சிகள் சார்பில் ஒரு உறுப்பினர் பேசமுடியும். உறுப்பினர் எந்த கட்சியைச் சார்ந்திருக்கிறாரோ அந்த கட்சியின் சார்பிலேதான் பிரச்சினையை எழுப்ப முடியுமே தவிர மற்ற கட்சிகளின் சார்பிலே சேர்ந்து எழுப்புவதாக இருந்தால் அவர்கள் ஓர் அணியாக ஒன்று சேர்ந்து உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்க வேண்டும், நேற்றைய தினம் கூட நண்பர் 4 கட்சிகளின் சார்பில் என்று தெரிவித்து விட்டு வெளிநடப்புச் செய்தார்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்புச் செய்ததற்கு சரி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Submission must be made separately.

ஆக, 4 கட்சிகளும் ஒன்றாக இணைந்து இருப்பதாக தங்களுக்கு ஏதேனும் எழுத்து மூலமாக அறிவிப்பு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான், ஏற்கனவே வராததால்தான் அவர் சொன்ன உடனேயே 4 கட்சிகளின் சார்பில் நீங்கள் கருத்துத் தெரிவிக்க முடியாது, உங்கள் கட்சியின் சார்பில் ஒரே ஒரு உறுப்பினராக இருக்கிற தாங்கள் உங்களுடைய கருத்துக்களை மட்டும் சொல்லலாம் என்று நான் சொன்னேன்.

டாக்டர் தே குமாரதாஸ் : தனித் தனியாகச் சொல்லி நேரத்தை வீணடிக்கக் கூடாது என்பதால்தான் அப்படி சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்லலாம். எங்களுடைய 4 கட்சிகளுடைய கருத்துக்களையும் சேர்த்து நான் சொல்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம். 4 கட்சிகளின் சார்பில் என்று சொன்னார். அது முடியாது என்பதற்காகச் சொன்னேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய திருத்தத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அண்மைக் காலமாக சட்ட மன்றத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும், பத்திரிக்கைகளுக்கும் ஒரு மோதல் வளர்ந்து வருகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த மோதலும் இல்லை. நான் நேற்றைய தினம் தெளிவாகச் சொன்னேன். (குறுக்கீடு) இல்லை. எந்த மோதலும் இல்லை. With all respect to the Supreme Court respecting the supremacy of the Court. அதேமாதிரி நம்மையும் அவர்கள் மதிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் விட்டேனே தவிர, இந்த அவையிலேகூட சிறு சிறு பிரச்சினைகளுக்கு கோர்ட் நடவடிக்கைகள் பற்றிய விவாதம் எழுந்தபோது அவைகளை எல்லாம் இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலே வேண்டாம் என்று நீக்கியிருக்கிறேன். எனவே, மோதலுக்கு எந்த நேரத்திலேயும் நாம் இடம் கொடுக்கவேயில்லை. மோதல் இருக்கிறது என்று நீங்கள் உறுதிப்படுத்து

வதனால் சொல்கிறேன். மோதலே இல்லை. நம்முடைய நிலையை நாம் தெளிவுபடுத்துகிறோம். கோர்ட்டினுடைய நிலையை அவர்கள் தெளிவுபடுத்தலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மோதல்' என்ற அந்த வார்த்தையை பயன்படுத்தியிருக்கக்கூடாது என்று கருதுகிறேன். அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேல், நீங்கள் மோதலை உருவாக்கிவிடாமல் இருந்தால் சரி என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில பத்திரிகை நண்பர்கள் அவையைப் புறக்கணிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றிய சில வேண்டுகோள்களைத் தெரிவிக்க இருக்கிறேன் என்று தான் என்னிடத்தில் அனுமதி கேட்டீர்கள். அதைச் சொன்னால் போதும் என்று நினைக்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு பொருளில் சொல்லவில்லை. ஆங்கிலத்தில் நினைத்ததை தமிழில் சொன்னதால் வந்தது அது. இன்றைக்கு பத்திரிக்கையாளர்கள் புறக்கணிப்பு என்றும் நான் பத்திரிக்கைகளில் பார்த்தேன். தங்களுடைய உத்தரவின்படி நம்முடைய சட்டமன்றம் யாருக்கேனும் கட்டுப்பட்டிருக்கிறது என்றால் அது தமிழ்நாடு மக்களுக்குத்தான். உச்ச நீதிமன்றத்திற்கோ மற்றவர்களுக்கோ கட்டுப்பட வேண்டுமென்ற அவசியம் நிச்சயமாக இல்லை. நம்மைவிட people are more sovereign than the legislature ஆகையினாலே, நாம் பார்க்க வேண்டியது மக்களுடைய கண்ணோட்டம் என்ற அடிப்படையில்தானே தவிர பத்திரிக்கைகளைப் பொறுத்தவரையில் சில பொதுவான பத்திரிக்கைகள் இருக்கின்றன.

முற்பகல் 11-25

சில பத்திரிகைகள், கட்சி சார்பான பத்திரிகைகளாக இருக்கின்றன. சில பத்திரிகைகள் கட்சிப் பத்திரிகைகளாகவே இருக்கின்றன. சில பத்திரிகைகள் எதையாவது எழுதி, ரொம்ப தரம் கெட்ட முறையிலும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் மக்கள் நன்கு அறிகிறார்கள். யார் யார் என்ன எழுதுகிறார்கள் என்பதை அவர்கள் தெளிவாக அறிந்துகொண்டு அதற்கேற்பத் தான் தீர்ப்பு அளிக்கிறார்கள் என்பதையும் நாம் பார்த்து வருகிறோம். ஆகையினால் தமிழ்நாட்டு மக்களுடைய ஒரு எண்ணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரும் இன்றோடு முடிகிற காரணத்தாலே, நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஏற்கெனவே இந்த மன்றம் சில பத்திரிகைகளுக்கு—இல்லஸ்டிரேட்டட் வீக்லி, முரசொலி, கோவை



மாலைமுரசு போன்ற பத்திரிகைகளுக்கு பிடி வாரண்ட் அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய மன்றம் மறுபரிசீலனை செய்து எச்சரிக்கையோடு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதோடுமட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையிலே என்னைப் பொறுத்தவரையில் நான் இந்த மன்றத்திற்கும், தங்களுக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது, இந்தக் கூண்டு நம்முடைய சட்டசபைக்கு வேண்டாம் என்பதுதான். எத்தனையோ வருஷமாக இருக்கிறோம். 1967-லே இருந்து பார்க்கிறோம். இந்தக் கூண்டு என்பது, இங்கே கொண்டு வைக்கப்பட்டது என்பது நம்முடைய சட்டமன்றத்திற்குத் தேவையில்லை என்பதைத் தங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் நேற்று அளித்த தீர்ப்பிலே, ''வேறுவிதமாகப் பார்த்துக் கொள்வோம்'' என்பதைப்பற்றிக்கூட தவறான விளக்கம் பத்திரிகைகளிலே தரப்படுகின்றன. ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, தாங்களும் இந்த மன்றமும் மறுபரிசீலனை செய்து ஒரு எச்சரிக்கையோடு அவர்களை விட்டு விட்டு, இந்தச் சூழ்நிலைக்கு எல்லாம் ஓர் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of clarification முன்னாள் அமைச்சரும், இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருவருமான திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்கிறேன். அவர்களிடமிருந்து ஒரு கருத்துத் தெளிவும் எதிர்பார்க்கிறேன். கடந்த 10 நாட்களாகவே பத்திரிகைகளில் சில செய்திகள் ஏதோ இந்த அவைக்கும், பத்திரிகை உலகத்திற்கும் ஒரு மோதல் இருப்பதைப்போன்றதொரு சூழ்நிலையை உருவாக்க சிலபேர் முயற்சித்து வருவதை நாம் பார்க்கிறோம். அவர் உபயோகித்த வார்த்தைகளில்கூட எங்களுக்கு உடன்பாடு இல்லை. இன்று காலையிலேகூட நான் உங்களைச் சந்தித்தேன். இந்த வாரம் வந்த பத்திரிகையிலே ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். காங்கிரசுக்கு ஒரு கோடி ஜெயலலிதா லஞ்சம் என்று போட்டு, அதை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரிடம் மொத்தமாகக் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும் இங்கே இருக்கிற சில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு அந்தப் பணம் பகிர்ந்து கொடுக்கப்பட்டு, அதிலே எனக்கு 5 இலட்சம் கொடுக்கப்பட்டதாகவும், இதிலே வராத உறுப்பினர்கள் தங்களுக்கும் அந்தப் பணம் வேண்டுமென்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரிடம் போராடி வருவதாகவும், அந்தப் பணத்தைக் கொடுக்கமாட்டேன் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த சக உறுப்பினர்களை மிரட்டி வருவதாகவும் செய்தி வந்திருக்கிறது. இந்தப் பத்திரிகை ஏறக்குறைய ஒரு இலட்சம் காப்பி போவதாகச் சொல்கிறார்கள். இந்த அவதூறுகளை நாங்கள் எப்படிச்

சொல்வது? யார் மத்தியிலே போய் நாங்கள் விளக்கிச் சொல்வது? அல்லது அதற்கு என்ன முடிவு? சில பத்திரிகைகளில் தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதிய பத்திரிகைகள்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுகிறார்கள். நாங்கள் எல்லாம் நாளை எங்கள் ஊரில் உள்ள First Class Magistrate Court-க்குப் போய் ஒரு Defarmation Suit போட்டு, அந்த Defarmation Proceeding-ல் 500 I.P.C. முடிந்து வருவதற்குள் என்னுடைய பதவிக் காலம் முடிந்துவிடும். இன்று காலை ஒரு நபர் பத்திரிகையிலே அந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு என்னிடம் தொடர்புகொண்டு 5 இலட்சத்தில் எனக்குக் கொஞ்சம் எங்களுக்குத் தரக்கூடாதா என்று கேட்டார். இதற்கு எங்கே முடிவு? இன்றையதினம் பத்திரிகையினுடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதாக மேடைகளிலே பிரசங்கம் செய்து, தலையங்கம் எழுதும் பத்திரிகைகள், அவர்களுடைய சார்பாக இந்த அவையிலே பேசும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு முதலிலே வழி சொல்லட்டும். நான் சில விஷயங்களுக்குள் வர விரும்பவில்லை.

முற்பகல் 11-30

திரு. சந்திரசேகர் பற்றிய சம்பவம் நடக்கிறபோது நான் இளம்பரிதிக்கு அருகில் இருந்தேன். இளம்பரிதிக்கு அடுத்த இடம் என்னுடைய இடம். திரு. சந்திரசேகர் வரவில்லை என்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் மட்டுமல்ல, பார்வையாளர்கள் மாடத்திலே இருந்த ஒவ்வொரு நிருபர்களும் அறிவார்கள். அவர்கள் ஒரு திட்டம் போட்டு, சந்திரசேகர் வரவில்லை என்ற செய்தியை அவர்கள் வந்து சாட்சியளிக்க முன்வருவார்களா? அல்லது பத்திரிகையிலே முதல் பக்கத்தில் செய்தியைப் போட்டு, நிச்சயமாக அந்தப் பத்திரிகையிலே சொல்லப்பட்ட செய்தி தவறு, நாங்கள் அனைவரும் மன்றத்திலே பத்திரிகையாளர்கள் கேலரியில் இருந்தோம், சந்திரசேகர் வந்தது என்பது பொய்ச் செய்தி என்று அறிவிக்க முன்வருவார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு நிறைந்த அனுபவம் பெற்றவர்கள். ஒரு முன்னாள் அமைச்சர். நிறைய விஷயம் தெரிந்தவர்கள். உலக நாடுகள் சபை வரை போய் தமிழகத்தினுடைய சாதனைகளைப் பற்றி எல்லாம் சொல்லக் கூடிய வாய்ப்பு பெற்றவர்கள். உங்களுக்குத் தெரியும். நீங்கள் அதை ஆணித்தரமாகச் சொல்லி அந்தப் பத்திரிகைச் செய்தி பொய் என்று சொல்ல முன் வருவீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) நமக்கு எவ்வளவு கடமை இருக்கிறதோ அதைப்போல அந்தப் பத்திரிகை



ளுக்கும் கடமை இருக்கிறது. நம்மைப் பார்த்து அவர்கள் வ்வளவு உரிமைகள் எதிர்பார்க்கிறார்களோ அதே உரிமைளை நாமும் எதிர்பார்க்கிறோம். எனவே அப்படிப்பட்ட சுமுகமான சூழ்நிலை வருவதற்கு, அதற்கு ஏற்பாடு செய்வதற்கு முன்னாள் அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் முன்ரவேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு அமைறேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைர் அவர்களே, எதை எழுதுகிறார்கள் என்பது மட்டுமல்ல, ார் எழுதுகிறார்கள் என்பதையும் மக்கள் பார்க்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. என்னைப் பற்றிக்கூட ஒரு வாரப் பத்திரிகையில், ான் ஸ்விஸ் பாங்கில் பணம் போட்டு வைத்திருக்கிறேன் என்று ழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: கொஞ்சம் இருங்கள் ஒரு செகண்ட். I Wont take more than half a minute மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு என்று சொல்லிவிடுகிறேன். அவர் ஸ்விஸ் பாங்கில் பணம் போட்டு வைத்திருக்கிறார் என்று எழுதியிருப்பதற்கும், இன்றைய தினம் ஒரு பத்திரிகையில் இந்த செய்தி வந்திருப்பதாகச் சொல்லப்படுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் செயல்படுகின்ற நேரத்தில், சுதந்திரமாக தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு உரிமை இருக்க வேண்டும். நானோ அல்லது என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களோ எந்தச் சட்டமுன்வடிவை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும், எந்த மானியக் கோரிக்கை மீது எப்படிப் பேசவேண்டும் என்பதையெல்லாம் எங்களுடைய கட்சி நிர்ணயம் செய்கிறது. நானாக சொல்லி எதையும் செய்வதில்லை. அப்படி நிர்ணயம் செய்கிற நேரத்தில், கட்சி நண்பர்களிடத்தில் பேசுகிற நேரத்தில், என்னுடைய எண்ணத்திலே இப்படிப்பட்ட ஒரு அபாண்டம். வெளியில் பரப்பப்பட்டு இருக்கிறது. என்பதற்காக நான் என்னுடைய கருத்தை மாற்றிக்கொள்வேனேயானால் நான் இந்த அவையில் சுதந்திரமாகச் செயல்படவில்லை என்றுதான் பொருள். இப்போது அங்கே வெளியிடப்பட்டிருக்கிற செய்தி எதைக் குறிப்பிடுகிறது என்று சொன்னால் நாங்கள் இந்த அவையில் சுதந்திரமாகச் செயல்பட முடியாது. மிரட்டுகிறார்கள் என்று அர்த்தம். "Blackmail. It is nothing but Blackmail" அரசாங்கத்தின் ஒரு நடவடிக்கையை நான் வரவேற்றுப் பேசினால், அரசாங்கத்திடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு அதைச் செய்தேன் என்று சொல்வது நிச்சயமாக அவை ரிமை மீறிய செயலாகும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நிச்சயமாக இனத அவை உரிமை மீறல் பிரச்சினையாக எழுப்ப

விரும்பவில்லை. எழுப்ப வேண்டாம் என்று நினைக்கிறேன். இதை இதோடு விட்டுவிடலாம் என்றாலும் கூட, நண்பர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்களும் மற்றவர்களும் அதற்கு விளக்கம் தரவேண்டும். இது போன்ற சட்டப் பேரவையிலே உறுப்பினர்கள் சுதந்திரமாக நடந்து கொள்வதற்கும், சுதந்திரமாக செயல்படுவதற்கும் தடையாக வருகின்ற செய்திகளை என்ன செய்வது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றி, பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்படி பரிவோடு பரிசீலிப்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதற்கெல்லாம் என்ன பரிகாரம் என்பதை நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் விளக்க வேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொண்டது, உரிமைப் பிரச்சினையே கூடாது என்பதல்ல. உரிமைப் பிரச்சினை எழுப்பலாம். அவர்களை எச்சரிக்கையோடு விட்டுவிடலாம் என்று தான் நான் கேட்டுக் கொண்டேனே தவிர, வேறல்ல. ஆகையினால் நல்ல நிலத்திலே பயிரோடு களையும் தோன்றுகிறது. ஆனால் களையை எடுக்கிறோம் என்று சொல்லி பயிரை எடுத்துவிடக் கூடாது. களையைப் பார்த்து எடுக்க வேண்டியது தான். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால், வார்னிங் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எந்தப் பயிருக்கும் துளி கூட சேதாரம் செய்திடவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். களைகளுக்கு வேண்டுமானால், நீங்கள் செய்திருக்கிற சேதாரம் அப்படிச் செய்திருக்கிறீர்கள்; இப்படிச் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லலாமே தவிர, ஒரு துளி கூட் பயிருக்கு நாம் சேதம் விளைவிக்கவில்லை. மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ''சென்னைப் பத்திரிகையாளர்கள் யூனியன்'', ''சென்னை நிருபர்கள் சங்கம்'', ''தென்னிந்திய பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு'', ''சென்னை பிரஸ் கிளப்'' ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒரு அறிக்கையை வெளியிட்டிருப்பதாக செய்தித்தாள்களில் பார்த்தோம். அந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நமது முறையீடுகளை ஏற்காமல், ''இல்லஸ்ட்ரேட்ட் வீக்லி'', ''முரசொலி'', ''கோவை மாலை முரசு'' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள், நிருபர்களுக்கு எதிராக சட்டப்பேரவைத் தலைவர் நடவடிக்கைகளைத் தொடர முடிவு செய்துள்ளதைக் கண்டித்து இப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படுகிறது என்றும், மற்றைய பத்திரிகையாளர்களுக்கும் வேண்டுகோள் விடுகின்ற முறையில் இந்த



அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றார்கள். இந்த அவைக்கு வருவதும் வராததும் அல்லது நிலைத்து வருவதும் நிலைத்தே வராமல் இருப்பதும், புறக்கணிப்பதும், நிலைத்து புறக்கணிப்பதும் அவரவர் விருப்பத்தைச் சார்ந்தது. அவர்களைக் கட்டுப்படுத்த நாம் இல்லை. ஆனால் இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், பத்திரிகை ஆசிரியர்களுக்கு, நிருபர்களுக்கு எதிராக சட்டப் பேரவைத் தலைவர் நடவடிக்கைகளைத் தொடர முடிவு செய்துள்ளதைக் கண்டித்து, புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

ஆக இங்கே முடிவை ஏற்கவில்லை. சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்த முடிவை நாங்கள் ஏற்கவில்லை, நாங்கள் ஆதரிக்கவில்லை, நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னால் கூட பரவாயில்லை. முடிவு செய்துள்ளதை கண்டித்து புறக்கணிப்புப் போராட்டம் என்றால், பேரவைத் தலைவர் முடிவு செய்துள்ளதை கண்டிக்கிறபோது, இந்த அவையிலே பேரவைத் தலைவர் அவர்களுடைய முடிவை யார் மறுத்தாலும், எதிர்த்தாலும் அதுவே உரிமை மீறிய ஒன்று என்று சொல்லும்போது, பேரவைத் தலைவர் முடிவு செய்துள்ளதை கண்டித்து புறக்கணிப்பு போராட்டம் என்று அவர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆக இதிலே பேரவைத் தலைவர் என்பது எழுவாய்; கண்டிப்பது என்பது பயனிலை; முடிவு செய்துள்ளது என்பது செயபடு பொருள். முடிவை அல்ல அவர்கள் எதிர்ப்பது. பேரவைத் தலைவர் செய்துள்ள முடிவை நாங்கள் கண்டிக்கிறோம் என்று சொல்லுவது இருக்கிறதே அதுவே உரிமை மீறிய பிரச்சினையாகும். அதை உரிமை மீறிய பிரச்சினையாக நாம் ஆக்கப் போவதில்லை. ஆனாலும் கூட அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னால் பத்திரிகைகளுடைய ஆசிரியர்களுக்கு எதிராக கைது வாரண்ட் பிறப்பித்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது; தமிழ்நாட்டு பத்திரிகை சுதந்திரத்தை ஒடுக்க மறைமுகமாக செய்யப்படும் முயற்சியே இது என்று காரணங்களைச் சொல்லி அவர்கள் எதிர்ப்பு வாரண்ட் பிறப்பித்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எந்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும் நாம் ஏனோ தானோ என்று காரண காரிய விளக்கம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கவில்லை. இங்கே குறிப்பிட்ட 3 பத்திரிகைகள் இந்த அவையின் உரிமையை மீறுகின்ற வகையில் தவறு செய்திருக்கின்றன என்று சுட்டிக் காட்டி, தவறு செய்திருக்கிறார்களா இல்லையா என்பதற்கு விளக்கங்கள் தாருங்கள் என்று நேராக கூப்பிட்டு, கூப்பிட்டும் வராமல், தவறு என்று ஒப்புக்கொள்ளாமல், அதற்காக வருத்தம் தெரிவிக்காமல், அதற்குப் பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கப்

படாமல் இருக்கிற அவர்கள் மீது, அவர்கள் செய்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற வகையில், அவர்களுடைய செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிற வகையிலும் அதனையொட்டி எடுக்கப்படுகிற நடவடிக்கைகளையொட்டித்தான் அவை உரிமைக் குழு நடவடிக்கை எடுத்திருக்கிறதே தவிர, செய்தித் தாள்களின் மீது பொதுவாக எந்தத் தடையும் விதிக்கவில்லை என்பதை நேற்றே நான் குறிப்பிட்டேன். அவர்களை ஒடுக்க என்று எந்தச் சட்டமும் நிறைவேற்றப்படவில்லை; எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை; யாரும் அச்சுறுத்தப்படவில்லை; யாரும் பயமுறுத்தப்படவேயில்லை. எந்த வகையிலே அவர்கள் மீறினார்கள் என்பதை இந்த அவையிலே எடுத்துச் சொல்லி, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அவை உரிமைக் குழு விதிமுறைகளின்படி நடந்து, அவை உரிமைக் குழுவை அவர்கள் புறக்கணித்ததன் காரணமாக அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இந்த அவையில் கொண்டு வந்து வைத்து இந்த அவையிலே ஏக மனதாக நிறைவேற்றப்பட்டு—எந்த பரிந்துரையை இந்த அவைக்கு எடுத்து வைத்தோமோ எந்தப் பரிந்துரையை இந்த அவை நிறைவேற்றித் தந்ததோ அதைத் தான் தாங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறீர்கள் ஆணையின் மூலமாக. ஆகவே அந்த வகையிலே செய்யப்பட்ட ஒன்றே தவிர வேறு ஒன்றுமல்ல. வாரண்ட் பிறப்பித்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது என்று அவர்கள் சொன்னாலும், அது முறைப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையே தவிர இப்படி ஒரு முடிவை எடுத்து தமிழ்நாட்டு பத்திரிகை சுதந்திரத்தை ஒடுக்கவில்லை. பத்திரிகைகளுடைய சுதந்திரத்தை எந்த ஆணையின் மூலம் ஒடுக்க இருக்கிறோம்? எந்த கருத்துக்களின் அடிப்படையில், எந்த சொற்களின் அடிப்படையில் நாம் ஒடுக்க இருக்கிறோம்? நாம் எந்த ஆணையையும் பிறப்பிக்கவில்லை. அதைத்தான் சொல்ல வேண்டும்.

அவர்கள் எழுதியவைகளுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோமே தவிர, இன்னும் செய்யக் கூடாது, உரிமை கிடையாது என்று எந்த இடத்திலும் நாம் எடுத்துச் சொல்லவில்லை. ஆனால் அப்படி இருந்தும் அவர்கள் புறக்கணிக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய பொறுப்பு. அப்படி இருந்தும் கூட பொறுப்பு உணர்ச்சியோடு, கடமையாற்றுகிற தன்மையோடு இந்த அவைக்கு, இந்த அவையிலே இருந்து பணியாற்றுவதற்கு 51 நிருபர்களுக்கு நாம் அனுமதி அளித்து, இந்த அவையினுடைய நடவடிக்கை குறிப்புகளை எடுக்க அனுமதி அளித்திருக்கிறோம். அந்த 51 நிருபர்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதியிலே 2... நிருபர்கள் இன்றைக்கு வருகை தந்து அந்த சங்கத்தினர் கேட்டுக் கொண்டார்கள் என்றாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் பொறுப்புணர்ச்சியோடு, கடமை உணர்ச்சியோடு இன்று வந்து இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையின் நடவடிக்கை குறிப்புகளை அவர்கள் எடுக்கிற அளவிற்கு வந்தமைக்காக அவர்



களுடைய பொறுப்புணர்ச்சியையும், இந்த பத்திரிகைகளுடைய கடமை உணர்ச்சியையும் நான் மிக மிகப் பாராட்டுகிறேன். போற்றுகிறேன், வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன்.

முற்பகல் 11–40

ஆக இதிலே (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன், தினத்தந்தி, தினமலர், தொலைக்காட்சி, ரேடியோ சென்னை, நமது எம்.ஜி.ஆர்., மக்கள் குரல், மாலை மலர், நியுஸ் டுடே, தினத்தூது, விடுதலை, அகில இந்திய ரேடியோ, புது டில்லி, அதிர்ஷ்டம், ஐ.என்.பி.ஆர்., எக்னாமிக்ஸ் டைம்ஸ், வெற்றிமாலை, விடிவெள்ளி, தமிழரசு (தமிழ்), தமிழரசு (ஆங்கிலம்), பிற்பகல், மணிச்சுடர், மக்கள் நேசன், ஆகியவற்றினுடைய பிரதிநிதிகள் பெருந்தன்மையோடு வந்து இருப்பதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். (மேசையை தட்டும் ஒலி). புறக்கணித்தவர்கள் நம்மையும், இந்த அவையையும் கண்டிக்கிறார்கள். நான், பத்திரிக்கை ஆசிரியர்களை பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்; வரவேற்கிறேன் இங்கே. ஆக, இந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே பார்க்கின்றபொழுது, அவர்கள் இங்கே எவ்வளவோ பிரச்சினைகளை நாம் எடுத்துச் சொல்லியும்கூட (குறுக்கீடு) முசல்மான் என்ற பத்திரிக்கை நிருபரும் வந்து இருக்கின்றார்கள்—இங்கே ஏற்பட்டு இருக்கிற பிரச்சினை அவை உரிமைக்குழு, அவை உரிமைக்குழுவினுடைய தீர்மான அடிப்படையிலே உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு எடுக்கப்பட்டதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியது போன்றும், மாண்புமிகு உறுப்பினர் ராமச்சந்திரன் அவர்கள் கூறியது போன்றும், ஆளும்கட்சியினராகட்டும் அல்லது அரசியலிலே ஈடுபட்டு இருப்பவர்களேயாகட்டும், பத்திரிகைகள் எவ்வளவோ எழுதுகின்றன. அவைகளை எல்லாம் பற்றி நாம் கவலைப்படவில்லை. இங்கே எடுக்கப்பட்டு இருக்கிற நடவடிக்கைகள் இங்கே வீற்றிருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைப்பற்றியும், அமைச்சர் பெருமக்களைப் பற்றியும், இங்கே வீற்றிருக்கிற உறுப்பினர் பெருமக்களைப் பற்றியும் எவ்வளவோ தாறுமாறாகவும், இல்லாதது பொல்லாதவைகளை எல்லாம் புனைந்தும் இழித்தும் பழித்தும் ஏசியும் தூற்றியும் மிகக் கேவலமாகவும் தாழ்ந்த முறையிலும் எவ்வளவோ பத்திரிகைகள் எழுதிக்கொண்டிருக்கின்றன. அவைப்பற்றி இந்த அவையிலே நாம் எந்தக் கவலையும் பட்டு, அது அவரவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டியது என்ற அளவிலேதான் விட்டு இருக்கிறோம்; இந்த அவையினுடைய

உரிமை மீறப்பட்டு இருக்கிறது; களங்கப்படுத்தப்படுகிறது. அதற்கான காரண காரிய விளக்கங்களை எல்லாம் நேற்று நான் எடுத்து சொன்னேன்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்களே எவ்வளவு கவலைப்பட்டு அந்த பிரிவில்லேஜ், அவை உரிமைகளுக்கான தன்மைகளை விளக்கியிருக்கிறார் என்பதை எல்லாம் எடுத்துக்காட்டினேன். அதற்கு அந்த எடுத்துகாட்டுக்களை எல்லாம் காட்டினேன். பில்' என்று போடுவதற்கு பதிலாக 'ஆக்ட்' என்று போட்டுவிட்ட ஒரே காரணத்திற்காக கூண்டிலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுகின்ற அளவுக்கு நிலைமை எல்லாம் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னேன். எல்லா பத்திரிகைகளும் பெரும் பெரும் பத்திரிகைகளினுடைய ஆசிரியர்கள் எல்லாம்கூட வருத்தம் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வருத்தத்தையும் மன்னிப்பையும் தங்களுடைய இதழ்களில் எழுதுவதாகச் சொல்லி வெளியிட்டு இருக்கிறார்கள் என்று நேற்று நான் விரிவாக எடுத்துச்சொன்னேன். நாங்கள் எல்லாம் கூட அவை உரிமைக்குழுவிலே இருந்து நான் கிட்டத்தட்ட 22 ஆண்டுக்காலமாக அவை உரிமைக்குழுவிலே இருந்து கொண்டுதான் இருக்கிறேன். 1967-லிருந்து அவை உரிமைக் குழு உறுப்பினராக தொடர்ந்து இருந்து வருகிறேன். எல்லாவற்றையும் நான் கவனித்து வருகிறேன். நாங்கள் பேசியதைக்கூட, அவர்கள் எவ்வளவு பெரிய தவறுகள் செய்தாலும் எழுதப்பட்டது தவறுதான், தவறு நிகழ்ந்துவிட்டது வருந்துகிறோம், என்று வருத்தத்தை வந்து எதிரிலே சொல்லி இருப்பார்களேயானால் இந்த மூன்று பத்திரிக்கைகளினுடைய நிருபர்களும் விடப்பட்டு இருப்பார்கள்; ஆசிரியர்களும் விடப்பட்டு இருப்பார்கள். நேரே வருவதற்கு அவர்களுக்கு முடியவில்லை என்றால், நீதிமன்றம் எப்படி நீதித்தன்மையினுடைய அடிப்படையை கொண்டு இருக்கிறதோ, அவ்வளவு நீதித்தன்மையை இந்த மாமன்றமும் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). இந்த மாமன்றம் நிருவாகப் பொறுப்பை மட்டும் வைத்து இருக்கவில்லை; ஜுடிஷியரி பவரும் இதற்கு உண்டு. ஆகவே தான், மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே ஒருவரை தண்டிக்கவும் அவரை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சிறையிலே தள்ளுவதற்கும் ஜட்ஜுக்கு, நீதிபதிக்கு என்ன தன்மை உள்ளதோ அது அவர்களுக்கும் உண்டு. ஒரு கோர்ட்டிலே இருந்து எந்த பத்திரிகை ஆசிரியரையாவது கூப்பிட்டு வரமாட்டேன் என்று சொன்னால் கோர்ட் விட்டுவிடுமா? எனக்கு வேலை இருக்கிறது நான் வர மாட்டேன் என்று சொன்னால், நீதிபதி விட்டுவிடுவாரா?



என் இஷ்டப்படி தான் வருவேன் என்று சொன்னால் விட்டுவிடுவாரா? நீதிமன்றத்தினுடைய பொறுப்பை நாங்கள் ஏற்றுச் கொள்ளமாட்டோம்; அதனுடைய தீர்ப்பை நாங்கள் எடுத்துக் கொள்ளமாட்டோம்; எங்கள் விருப்பப்படிதான் நடப்போம் என்று சொன்னால் விட்டுவிடுவாரா? நீதிமன்றத்திற்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும், செலுத்த வேண்டுமோ, அவ்வளவு மதிப்பும் மரியாதையும் இந்த அவைக்கு அவர்கள் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறியதன் காரணமாகத்தான், வருத்தம் தெரிவித்து இருந்தால் பெரிய பெரிய வழக்குகளிலே எல்லாம் வருத்தம் தெரிவித்ததற்கு நாடாளுமன்றத்தில் எப்படி அவர்கள் எல்லாம் விட்டு இருக்கிறார்கள் என்றெல்லாம் கூட நேற்று 55 வழக்குகளையும் நான் படித்து காண்பித்தேன். ஒன்றிரண்டு வழக்குகளில் தான் 'ரெப்ரிமாண்ட்', கூண்டிலே ஏற்றி வைத்து அவர்களைக் கண்டிக்கிற அளவுக்கு வந்தது. மற்றவர்கள் எல்லாம் வருத்தம் தெரிவித்தார்கள்; விட்டுவிட்டோம். மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள் விட்டுவிட்டோம். பிளிட்சில் போட்டார்கள் இதைச் செய்திருக்கலாம். ஆனால் முறைப்படித்தான் நாம் செய்தோமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

முற்பகல் 11–45

அவர்கள் என்ன எழுதினார்கள்? இந்த மன்றம் தரம் தாழ்ந்து விட்டது. இந்த மன்றத்திலே அறிவாளிகள் இருந்து பணியாற்றிய இடத்திலே இப்போது சண்டை சச்சரவு போடுகிறவர்கள் இருக்கிறார்கள் ...... என்ன 234 பேருமா? இந்த மன்றம் தாழ்ந்து விட்டது என்றால் இதிலே இருக்கிற 234 பேரும் சேர்கிறது. குறிப்பிட்டு சொல்வார்களேயானால் அது வேறு. ஆனால் அத்தனை பேரையும் சேர்த்து இப்போது அப்துல்லா காந்தி அவர்கள் முறை தவறி நடந்தார். ஒழுக்கம் இல்லாமல் நடந்தார். அவர் குடித்து விட்டு இருந்தார் என்று சொல்லி, அப்துல்லா காந்தியை குறை சொன்னால் சரி. காந்தியார் குடும்பமே மோசம் என்றால் —அதற்காக காந்தியார், கஸ்தூரிபா காந்தி அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகள்——ஒருவன் தவறு செய்ததற்காக காந்திக்கே அந்தக் குற்றச்சாட்டை சாட்டலாமா? நான் எப்போது சண்டை போட்டேன். (சிரிப்பு) 25 வருடங்களாக இருக்கிறேன். (சிரிப்பு) நான் யாரை இழுத்தேன்? யாருடன் சண்டை போட்டேன்? யாரைப் பிடித்து அடித்தேன்? (சிரிப்பு) இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் யார்? (சிரிப்பு) இங்கே வீற்றிருப்போர்கள் அத்தனை பேரும் பத்திரிகை ஆசிரியர்களும் பத்திரிகை பொறுப்பாளர்களும், தான். மாண்புமிகு முதலமைச்சரிலிருந்து, என்னிலிருந்து—நான் நாள் பத்திரிகை

ஆசிரியராக இருந்திருக்கிறேன். கிழமை பத்திரிகை ஆசிரியராக இருந்திருக்கிறேன். மூன்று, நான்கு, நாள் பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் ஆசிரியர். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் ஆசிரியர். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆசிரியர். மாண்புமிகு அரங்கநாயகம் ஆசிரியர். மாண்புமிகு இராமச்சந்திரனும் ஆசிரியர். இருந்தும் இப்படி பேசலாமா என்பது தான் எங்களுக்கு இருக்கிற தன்மைகள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிரியர்களுடைய பொறுப்புகளை எல்லாம் உணராமல் இருக்கிறோமா? ஆகவே தான் குறிப்பிட்டு சொல்லட்டும். இந்த அவையே இழந்து விட்டது. இந்த அவையே சண்டை சச்சரவுக்கு வந்து விட்டது என்றால், அவையினுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்பது தான் பிரச்சினையே தவிர — இண்டிவிஜிவலாக ஒரு தாமரைக்கனி அடித்தார், அவர் ஒழுக்கம் கெட்டவர் என்று சொல்லட்டும். ஒன்றிரண்டு பேர் தவறு செய்கிறார்கள் என்றால் பெயரைச் சுட்டிக்காட்டி சொல்லட்டும், அவர்கள் பாடு, அவர்கள் பாடு உரிமைப் பிரச்சினை பாடு. அவையையே சேர்த்து இழித்து, பழித்து பேசுகிற அளவுக்கு பெருமை பெற்ற, புகழ் பெற்ற — இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி என்று இதற்கு பெயர். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி என்று பெயர் வைத்துக் கொண்டு, இப்படி இருக்கும்போது — வந்து ஒரு வருத்தம் தெரிவியுங்கள் என்றால் அதற்கு வருத்தம் தெரிவிப்பதற்கு இல்லாமல் — இன்றைய கூட்டத்தில் குமரி முரசு பத்திரிகை நிருபரும் வந்திருக்கிறார். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தவகையிலே ஒரு 200 தென்னை மரங்கள் இருக்கிற இடத்தில், 2 பனை மரம் 3 பனை மரம் இருக்கிறது என்றால் அந்த பனை மரங்கள் மூன்று என்று சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர, அதற்கு பெயர் தென்னந்தோப்பு என்று தான் சொல்ல வேண்டுமே தவிர, 3 பனைமரங்கள் இருக்கிறதால் அந்தத் தோப்புக்கு பெயரே பனந்தோப்பா? ஆகவே ஒருவர், இரண்டு பேர் முறைதவறி நடக்கிறார்கள் என்பதற்காக அந்தப் பெயரை, இந்த அவை முழுவதையும் சேர்த்து இந்த அவையிலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களையும் சேர்த்து குற்றம் சாட்டுகிற அளவுக்கு வருகிறபோது உரிமைப் பிரச்சினை என்று வருகிறது. ஆகவே தான் உரிமைப் பிரச்சினையாக எடுத்தோமே தவிர, எந்தப் பத்திரிகைகள் மீதும் இப்போதும் நமக்கு காழ்ப்புணர்ச்சி இல்லை.

அவர்கள் கூட மாண்புமிகு பேரவைத் தலைவருடைய செயலை கண்டித்து புறக்கணிக்கிறோம் என்கிறார்கள். இதுவே உரிமைப் பிரச்சினைக்கு உரியது தான். ஆனால் நாம் உரிமைப் பிரச்சினை எடுப்பதாக இல்லை. ஆனால் அவர்கள் உணர





வேண்டும் என்பது தான். அவர்களை உள்ளபடியே கண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் கூட கிடையாது. ஆனால் இப்படிப்பட்ட பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் — நால் 55 வழக்குகளை நேற்று சுட்டிக்காட்டினேனே — சுராஜுசியாவை கூண்டிலே நிறுத்தியபோது புறக்கணிக்க செய்தார்களா பாராளுமன்றத்திலே நிருபர்கள் எல்லாம்? மற்றவர்கள் எல்லாம் கண்டிக்கிறபோது, அந்த 55 பேருக்கு மன்னிப்பு கேட்டபோது, அந்த மன்னிப்பு, கேட்க வைத்த போது, கூண்டிலே ஏற்றியபோது, அந்த பத்திரிகை நிருபர்கள் நாடாளுமன்றத்தை வேறு பல இடங்களை புறக்கணிக்க செய்தார்களா? இந்த ஆட்சியைபொறுத்து, இந்த ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கிற பெயர், புகழ் ஆகியவற்றுக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று சில பேர் தனியாக இருந்து சிலபல காரியங்களைச் செய்து வருவதன் விளைவாக, எதையும் செய்யலாம், எப்படியும் செய்யலாம் என்ற அளவுக்கு — 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பார்கள். அந்த அளவுக்கு எதையும் செய்யலாம் என்கிற அளவுக்கு இல்லை. இதே நிலைமையை இதைவிட பெரிய காரியங்கள் நடந்தபோது பத்திரிகை நிருபர்கள் புறக்கணிக்கவா செய்தார்கள்? ஆகவே தான் புறக்கணிக்காமல் பொறுப்புணர்ச்சியோடு இங்கே வருகை தந்த அத்தனை பேரையும் மனதார இந்த அவையின் சார்பாக பாராட்டியிருப்பதே, பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் புறக்கணிக்கின்றனவே என்ற ஆதங்கம் தான். நான் கழிவேர் இரக்கம் கொள்வதை விட வேறு என்ன செய்ய முடியும்? ஆகவே, அவர்களுடைய நிலைமையைப் பற்றி அந்த அளவுக்குதான் சொல்கிறோம்.

முற்பகல் 11-50

அது மட்டுமல்லாமல், சட்டப்பேரவையின் இந்த கடுமையான, நியாயமற்ற நடவடிக்கைகள் — எப்படி நியாயமற்ற நடவடிக்கைகள்? நான் நியாயம் என்று வாதாடுவதற்குத் தயாராக இருக்கிறேன். பத்திரிகையாளர் சங்கத்தினுடைய தலைவர்களும் மற்றவர்களும் எல்லாம் வந்து வேண்டுமானால் ஒரு டிபேட் வைத்துக் கொள்வோம். பொது மக்கள், அறிவாளிகள் கூடட்டும், முறைப்படி, சட்டப்படி, விதிப்படி நாங்கள் நடக்கிறோம் என்பதை நான் வாதாடத் தயார். பத்திரிகை நிருபர்கள் வந்து இப்படி எழுதுவது நியாயம்தான், வராமல் இருந்தது நியாயம்தான், புறக்கணித்தது நியாயம் தான்என்று வாதாடட்டும். வேண்டுமானால், அப்படி ஒன்றை ஏற்பாடு பண்ணுவோம். பத்திரிகையாளர் சங்கமே வேண்டுமானால் ஏற்பாடு பண்ணட்டும், நான் வருகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அதுமட்டுமல்ல,

"The expression freedom of Press has been defined 'free to hold opinion, to receive and to impart information through the printed word without any interference from any public Authority.' But freedom

carries with it responsibilities and cannot be absolute in a Democracy or for that matter in any Organised Human Society. In the words of Prime Minister Jawaharlal Nehru " freedom like everything else and more than everything else carries certain responsibilities and obligations and if these responsibilities and obligations and disciplines are lacking then it is no freedom, whether an individual indulges in it or a group or a newspaper or anyone else''. என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சுதந்திரம் உண்டு. அந்தச் சுதந்திரத்திற்கு பொறுப்புணர்ச்சியோடு பொறுப்புக்களும் உண்டு. அந்தப் பொறுப்புக்கள் தவறும்போது, அங்கே சுதந்திரம் என்பதற்கு இடமில்லை என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தக் காரணங்களை வைத்துத் தான் உள்ளபடியே, நடவடிக்கை எடுக்கப்பட்டதையோ, சில ஆசிரியர்களை சிறைக்கு அனுப்புவதையோ, அவர்களைத் தண்டிப்பதையோ நாம் மகிழ்ச்சியோடா செய்கிறோம். மகிழ்ச்சியினுடைய விளைவாகவா நாம் செய்கிறோம். ஆனால் வருத்தத்துடன் தான் செய்கிறோம். வேதனைப்பட்டுத்தான் செய்கிறோம், இந்த நிலைக்கு வந்ததே என்று.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிடும்போது, கூண்டு இங்கே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். வரவேண்டும் என்று நாம் ஆசைப்படவில்லையே. இந்த 3 பத்திரிகையாளர்கள் தான், இந்தக் கூண்டை கொண்டுவந்து வை என்று சொல்கிறார்கள். அதற்கான சூழ்நிலையை உருவாக்கினார்கள். கூண்டு இப்போது அல்லவா செய்யப்பட்டது. இது, இப்போது, அவர்களுக்காக பெரிய மனது வைத்து, இதற்கு வேறு செலவு பண்ணி, இருக்கிற செலவு போதாது என்று சொல்லி, இந்தக் கூண்டுக்கு வேறு செலவு பண்ணி , கொண்டு வந்து வைக்கிற அளவிற்கு, 3 பத்திரிகையாளர்கள் செய்ததினுடைய விளைவு எங்கெங்கே போகிறது, அதனுடைய விளைவுகள் என்ன ஆகிறது,

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி, இந்த 3 பேர்களும், வருத்தங்கள் என்று அந்த மூன்று சொற்களைச் சொல்லத் தவறியதினுடைய விளைவாக, இன்றைக்கு உச்சநீதிமன்றத்திலே கருத்து தெரிவிக்க, நாம் கருத்து தெரிவிக்க, அவர்கள் உரிமையை அவர்கள் காப்பாற்ற, நம்முடைய உரிமையை நாம் காப்பாற்ற, இடையில் இருக்கிற மக்களுக்கு எம்லாம் என்ன என்று புரியாமல் இருக்க, எது சரி என்று தெரியாமல் இருக்க, இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம், 3 பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய தவறுகளை உணர்ந்து இந்த அவையினுடைய பெருமை, மற்றவை



களைக் காப்பாற்றி இருப்பார்களானால், இந்த நிலைமைக்கு வரவேண்டிய அவசியமே இருக்காது. இப்போது புறக்கணிக்க வேண்டிய அவசியமும் இந்தப் பத்திரிகையாளர்களுக்கு இருந்து இருக்காது. நம்மைக் கண்டிக்கிறார்கள். இப்படி செய்யக் கூடாது, இதைச் செய்ய வேண்டும் என்று. இவ்வளவு சொல்கிறபோது, இன்றைக்குப் புறக்கணித்த பத்திரிகையாளர்கள் எல்லாம் இந்த 3 பத்திரிகையாளர்களைப் பார்த்து, நீங்கள் எழுதியது தவறு, இப்படி எழுதியிருக்கக்கூடாது கண்டிக்கிறோம் என்று ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா ? நம்மைக் கண்டிக்க முடிகிற பத்திரிகையாளர்கள், இந்த இல்லஸ்ட்ரேடட் வீக்லியையோ, முரசொலியையோ, அல்லது கோவை மாலை முரசையோ, இப்படி எழுதியிருப்பது தவறு, மரபுக்கு ஏற்றது அல்ல என்று கண்டித்தார்களா, எழுதினார்களா, குறிப்பிட்டார்களா, அல்லது சுட்டிக்காட்டினார்களா ? அவர்களைச் சொல்லவில்லை. இந்த அரசைக் கண்டிக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்த முடிவைக் கண்டிக்கிறார்கள். ஆகவே, இந்தச் சுதந்திரத்தை ஒடுக்கப் பார்க்கிறோம் என்று குற்றம் சாட்டுகிறார்கள். இந்தச் சட்டப் பேரவை கடுமையாக நடந்து கொள்கிறது என்கிறார்கள். நடவடிக்கைகள் எடுத்த—பேரவையினுடைய நடவடிக்கைகள் எதிர்க்க வேண்டியதாக இருக்கிறது என்று எல்லாம் எழுதுகிறார்கள். அவைகளை எல்லாம் நாடு, மற்றவைகள் எல்லாம் உணர வேண்டும்.

இப்போதும் நாம், நியாயமாகவும், நிதானமாகவும்தான் சென்று கொண்டிருக்கிறோமே தவிர, இடையில் நாங்கள் பேசுகின்றபோது கூட சொன்னோம், மன்னிப்புக் கேட்டால் விட்டுவிடலாம் என்கிற அளவிற்கும், மன்னிப்பு எழுதியிருக்கிறார், விட்டுவிடலாம் என்ற அளவிலேதான் எண்ணினோம். ஆனால், நேராக வந்து நாங்கள் மன்னிப்பு கேட்க மாட்டோம் என்கிற அளவிற்கு, அதற்கான அளவிற்கு பத்திரிகைகளிலே வெளியிடமாட்டோம் என்கிற அளவிற்கு வந்தபோதுதான் மறுபடியும் மாற்றிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஒரு பத்திரிகை கேட்டிருக்கிறது, முதலிலே ஒரு கமிட்டி முடிவு செய்தது, பிறகு மாற்றிக் கொண்டது என்று. கடைசியில் இருக்கிற சில பைண்டிங்ஸ் என்னவோ, அதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, இடையிலே என்ன என்பதைப் பார்க்கக் கூடாது. முதலிலே கூட நாங்கள் ஒரு முடிவைப் பண்ணலாம். உள்ளபடியே அவர்களை நாங்கள் 4 மாதத்திற்கு சிறைத் தண்டனைக்கு அனுப்பலாம் என்று கூட, கமிட்டி பேசிக் கொண்டிருக்கும்போது, முடிவு பண்ணலாம். 4 மாதம் சிறைத் தண்டனைக்கு ஒருவரை அனுப்பலாம் என்று முடிவு செய்து விட்டு, கடைசியில் நாங்கள் பைண்டிங்சை எழுதும்போது, வேண்டாம், அவரை மன்னித்து விட்டுவிடலாம், மன்னிப்பு கேட்டால் போதும் என்று திருத்திக் கொண்டால், அந்தமுடி

எதிர்ப்பீர்களா ? முதலிலே அவரை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னீர்கள், ஏன் அவர்களுக்கு மறுபடியும் வருத்தம் தெரிவிக்க இடம் கொடுத்தீர்கள் என்று கேட்பார்களா என்றால் அப்போது கேட்க மாட்டார்கள். ஆனால் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொன்ன ஒருவருக்கு, முதலில் தண்டனை அளித்து விட்டு பிறகு வருத்தம் தெரிவிப்பதை, அதை நேரிலே வந்து சொல்ல வேண்டும் கூண்டிலே ஏறி சொல்ல வேண்டும் என்று சொன்னால், தப்பு முதலிலே அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு அதை மாற்றிக் கொள்ள விட மாட்டோம் என்று சொல்வார்களா ? முதலிலே நீங்கள் என்ன சொன்னீர்களோ அதன் பிரகாரம் செய்யுங்கள் என்று சொல்வார்களா ?

முற்பகல் 11—55

இரண்டாவதாக அவை உரிமைக்குழுவின் நடவடிக்கைகளை ஒவ்வொன்றையும் பார்த்து கிரிடிசைஸ் பண்ணுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. இப்படித்தான் நடக்க வேண்டும் என்று டைரக்ட் பண்ணுவதற்கும் யாருக்கும் உரிமை இல்லை. ஆகவே தான் அது முடிவு அறிவிக்கும். அந்த முடிவை இந்த அவை ஏற்றுக் கொண்டு அதன்படிதான் நடக்கிறோம். இப்போதும் சொல்லுகிறேன். பத்திரிகை உலகத்திற்கும் நமக்கும் எந்தவித தகராறும் கிடையாது. எந்தவித எதிர்ப்பான நடவடிக்கையோ, சட்ட திருத்தமோ, தாக்கீதோ, ஆணையோ எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையில், இல்லாத நிலையை உருவாக்கக் கூடாது. ஒன்றை மட்டும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். திராவிட இயக்கத்தை பொறுத்தவரைக்கும் பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்கள் ஆகட்டும், அவருக்கு பின்னால் இந்த இயக்கத்தை வளர்த்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆகட்டும், அவருக்கு பின்னால் இந்த இயக்கத்தை தொடர்ந்து நடத்தி மக்களுடைய செல்வாக்கையும் புகழையும் பெற்று திகழ்ந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் ஆகட்டும், அதற்கு பிறகு இந்த பொறுப்புகளை எல்லாம் ஏற்று மக்களுடைய அன்பையும் அரவணைப்பையும் பெற்று நடத்தி செல்லுகிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஆகட்டும் பத்திரிகையினுடைய ஆதரவின் பேரிலா இந்த இயக்கம் வளர்ந்தது. அவ்வளவு பத்திரிகைகளுடைய முழு எதிர்ப்பையும் மீறித்தான் பகுத்தறிவு தந்தை பெரியார் வளர்ந்தார்கள். நான் சவால் விடவில்லை. ஸ்டேட்மென்ட் ஆப் பேக்ட்டை தான் சொல்லுகிறேனே தவிர வேறு அல்ல. அவ்வளவு எதிர்ப்பையும் மீறித்தான் வளர்ந்தது. இழித்து சொல்லி பழித்து பேசி, கொஞ்சம் நஞ்சமாகவா நடந்தது. பத்திரிகைகள் கூட அந்தக் காலத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் 1½ மணி நேரம் அழகாக இந்த அவையிலே பேசினால்



கூட 'மிஸ்டர் அண்ணாதுரை ஆல்சோ ஸ்போக், என்று போடுவார்கள். நாங்கள் அதைக் கண்டே ரொம்பவும் மகிழ்வோம் அண்ணா என்ற பெயர் வந்துவிட்டதே என்று. சினிமாவிலே கூட ஒருவர் தம்பியாக இருக்கிறவன் மூத்தவனைப் பார்த்து அண்ணா என்று சொல்லி விட்டால் உடனே நாங்கள் கை தட்டுவோம். அவன் வேறு ஒன்றிற்காக அண்ணா என்று சொல்லியிருந்தாலும் கூட அண்ணா என்ற பெயர் வந்து விட்டதே என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி (சிரிப்பு). அப்படி இருந்த காலத்தை எல்லாம் தாண்டித் தாண்டி தான் வந்திருக்கிறோம். ஏன் 1925—ல் பெரியார் அவர்களை ஆதரித்ததா பத்திரிகை உலகம். கம்யூனல் ஜி.ஓ. வந்தபோது பத்திரிகை உலகம் ஆதரிக்கச் செய்ததா ? பெரியார் அவர்கள் தீவிர பிரச்சாரம் செய்தபோது பத்திரிகை உலகம் ஆதரிக்கச் செய்ததா? இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டம் நடந்தபோது பத்திரிகை உலகம் ஆதரவு தந்ததா ? ஆகவே மக்கள் மன்றம்தான் மிக மிக முக்கியம். அந்த மக்கள் மன்றத்தினுடைய தீர்ப்பு நம்மிடத்திலே இருக்கிறது. ஆகவே பத்திரிகைகள் நியாயமாக நடக்க வேண்டும் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்ற அளவுக்குத்தான் நாமும் விரும்புகிறோமே தவிர, இப்போதும் சண்டை கிடையாது, சச்சரவு கிடையாது. அந்த சுமூகமான சூழ்நிலையை இங்கே இருக்கிற பெரிய பத்திரிகைகளும் முக்கியமான பத்திரிகைகளும் சேர்ந்து கெடுக்க வேண்டாம். அது நிலவட்டும், முறைகள் நிலவட்டும் மேற்கொண்டு வளரட்டும். ஜனநாயக சூழ்நிலை நிலவட்டும். அண்ணா அவர்கள் இங்கே இந்த மன்றத்திலே பேசும்போது ஒரு முறை அழகாகச் சொன்னார்கள். 'Justice should not be wounded and wounds should not b: Justified, நியாயங்கள் எக்காரணம் கொண்டும் காயப்படுத்தப்படக்கூடாது. காயங்கள் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்தப்படக்கூடாது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் நான் என்னுடைய பத்திரிகை நண்பர்களுக்கு புறக்கணித்த பத்திரிகை நண்பர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது இதையே தான். நியாயங்கள் எக்காரணம் கொண்டும் காயப்படுத்தக் கூடாது, காயங்கள் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்தக் கூடாது என்ற வேண்டுகோளை மட்டும் விடுத்து எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் ஆணவத்தின் அடிப்படையிலோ அதிகாரத்தின் அடிப்படையிலோ ஆதிக்கத்தின் அடிப்படையிலோ எதையும் எடுக்கவில்லை. இந்த மன்றம் நமக்கு பிறகும் வளர்ந்து நின்று நிலவவேண்டும். என்றைக்கும் தமிழக சட்டமன்றப் பேரவை பெருமையையும், புகழையும் மதிப்பையும் மரியாதையையும் பெற்று திகழ வேண்டும் என்று இந்த மன்றத்திற்காக பரிந்து பேசுகிறோமே தவிர, தனிப்பட்ட விளக்கம் இல்லை என்று சொல்லி, ஆகவே நான், எடுத்திருப்பது நியாயம் தான் என்பதை நிலைநாட்டி அமர்கிறேன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெருவந்த செய்யாமை' என்பதை அவை முன்னவர் அவர்கள் நன்கு அறிவார்கள். கொடுக்கின்ற தண்டனை மக்கள் மன்றத்திலே அச்சத்தை விளைவிக்கக் கூடாது. மக்கள் மன்றத்தைப் பொறுத்தவரையிலும் சொல்லுகிறேன். நான் அபிப்பிராயப்படுவது — எச்சரிக்கை செய்து இந்தப் பிரச்சினையை முடிப்பதை உண்மையிலேயே தமிழ்நாடு வரவேற்கத்தான் செய்யும். நம்முடைய சட்டமன்றத்தினுடைய மதிப்பு அதன் மூலம் உயரத்தான் செய்யும். ஆகவே கொடுத்த தண்டனையை மறு பரிசீலனை செய்ய அவை முன்னவர் அவர்கள் முன் வருவார்களா ?

நண்பகல் 12—00

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மக்கள் மன்றத்தினுடைய மதிப்பைப் பெறுகின்ற அளவிற்கு இருக்கவேண்டுமென்றார்கள். நாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் மக்கள் மன்றத்தினுடைய நூற்றுக்கு நூறு மதிப்பைப் பெறுகின்ற அளவிற்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் சிறப்பாகவும், செம்மையாகவும் இருப்பதன் காரணமாகத்தான் மக்கள் மன்றத்தினுடைய நம்பிக்கையைப் பெற்றுத்தான் இந்தப் பக்கத்திலே முழுக்க உட்கார்ந்து இருக்கிறோம். அந்தப் பக்கத்திலேயும் முழுக்க உட்கார்ந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் கவலைப்படுவதிலே அர்த்தம் இருக்கிறது. மக்கள் எங்களை விட்டு போய்விடுவார்களோ என்று அவர் கவலைப்படுகிறார். கவலை. வேண்டாம். மக்கள் எங்களை விட்டு இன்னும் 20, 25 வருடத்திற்குப் போக மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலை வரவில்லை. மிகத் தெளிவாக இருக்கிறது. எங்களையும் அவரையும் பார்த்தாலே அதைப் புரிந்து கொள்ளலாம் என்கிற அளவிற்கு தெரிவித்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிற உணர்வுகளை முழுமையாக நானும் ஏற்றுக் கொள்கிறேன். இதில் மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல பத்திரிகை உலகினரைப் பயமுறுத்த வேண்டும் அல்லது அச்சுறுத்த வேண்டுமென்பதற்ாக நான் இந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை முதலாவதாகத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உறுப்பினர் இதுவரையிலே இல்லாத கூண்டு இப்



போது நம்முடைய அவைக்கு வேண்டாம் என்று சொன்னார். ஆனால் இந்த அவையில் கடந்த காலத்தில் அவரும் உறுப்பினராக இருந்திருக்கிறார். அவரே பல்வேறு உரிமைப் பிரச்சினைகளைக் கொண்டு வந்திருக்கிறார். அது அவையிலே விவாதிக்கப்பட்டு, அந்த உரிமைப் பிரச்சினைக்கு உரியவர்களை விளக்கம் கேட்ட நேரத்தில், பல்வேறு நேரங்களில் விளக்கம் கேட்கின்ற அந்தக் கட்டத்திலேயே இது தவறு என்று வருகிற காரணத்தால் நாங்கள் வருத்தம் தெரிவிக்கிறோம் அல்லது மன்னிப்பைக் கோருகிறோம் என்றுதான் இதுவரையிலேயும் எழுதியிருக்கிறார்கள். பல்வேறு பத்திரிகைகளை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு இங்கேயிருந்து பேரவைத் தலைவர் விளக்கம் கேட்டவுடன் அந்த விளக்கத்திற்கு பதில் எழுதுகிறபோதே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட ஒரு பகுதி வெளியிடப்பட்டிருந்தாலும், நடக்காத ஒரு சம்பவம் குறிப்பிடப்பட்டிருந்தாலும், சில தவறான தகவல்கள் மீது நாங்கள் அவ்வாறு எழுதிவிட்டோம், அதற்காக அவையிடம் மன்னிப்பைக் கோருகிறோம் அல்லது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு பேர், உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினை அனுப்பப்பட்டபோது, உரிமைக் குழுவிற்கு சாட்சியம் அளிக்க வந்த நேரத்தில் அங்கே வந்து மன்னிப்பு கேட்டிருக்கிறார்கள். இதுதான் இதுவரையிலேயும் இந்த அவையினுடைய சரித்திரமாக இருந்து வந்திருக்கிறது. நான் முதலிலே சொன்னேன். பார்த்த பார்வையிலேயே முரசொலி பத்திரிகை தவறு செய்திருக்கிறது என்பது தெளிவாகிறது. கோவை மாலை முரசு பத்திரிகை தவறு செய்திருக்கிறது என்பது தெளிவாகிறது என்று இருந்தாலும், அவர்களிடத்திலே விளக்கம் கேட்டு, அதற்குப் பிறகு என்னுடைய முடிவைச் சொல்கிறேன் என்று விளக்கம் கேட்ட நேரத்திலே நாங்கள் எழுதியிருப்பது சரிதான் என்றுதான் முரசொலி பத்திரிகை விளக்கம் கொடுக்கிறது. மாலை முரசு பத்திரிகை அது தலைப்பு கொஞ்சம் பெரிதுபடுத்தப்பட்டு விட்டது. எனவே இவ்வாறு பெரிதுபடுத்தாமல் இருக்குமாறு எங்களுடைய ஆசிரியர் குழுவை இனிமேல் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். எனவே இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுங்கள் என்றார்கள் பெரிதுபடுத்தியதற்கு என்ன என்கிற பிரச்சினையை அவர்கள் எழுதவில்லை. அவர்கள் பின்னர் உரிமைக் குழுவிற்கு வந்த நேரத்திலாவது இப்படி இருக்கிறதே, இதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறீர்களா என்று திரும்பத் திரும்ப உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். கேட்டபோதும் நாங்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னார்கள். அவர்களே தலைப்பு பெரிதுபடுத்தப்பட்டிருக்கிறது என்று எழுதியிருக்கிறார்களே, அதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டுமா, வேண்டாமா? இதுவரையிலே இல்லாத கூண்டு வந்திருக்கிறது என்று மட்டும் வருத்தப்படுகிறீர்களே,

இதுவரையிலேயும் இந்த அவையிலே நடக்காத சம்பவமாக செய்த தவறுக்கு நாங்கள் இந்த அவையிலே வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று பிடிவாதமாக சிலர் பேசிக் கொண்டிருப்பது நியாயமா? அதையும் நீங்கள் சொல்ல வேண்டும். இவ்வளவு நாளாக இல்லாத முறையில் இரண்டு பத்திரிகையாளர்கள் நாங்கள் வருத்தம் தெரிவிக்க முடியாது என்று சொல்கிறார்கள். அது தவறுதான் என்று நீங்கள் குறிப்பிட்டிருந்தால் சரிதான்.

பிற்பகல் 12-05

'இல்லஸ்டிரேடட் வீக்லி' ஆசிரியரை உரிமை குழுவிற்கு வருமாறு மூன்று தபால் எழுதியிருந்தாலும், நான் அதனால் வரவில்லை. இதனால் வரவில்லை என்று திரும்பத் திரும்ப சாக்குப்போக்குச் சொல்கின்ற நிலைமைதான் இருந்ததே தவிர, அவைக் குழு முன்னர் வந்து சாட்சி சொல்கிற நிலைமை இல்லை. இன்றைக்கு கூண்டு—இதுவரை இல்லாத கூண்டு வர வேண்டாம் என்று சொல்கின்ற நீங்கள், இதுவரையிலே இப்படி நாம் அழைத்து எவரும் வராமல் இருந்தது இல்லை. இந்த ஆசிரியர் மட்டும் வராமல் இருப்பது கண்டிக்கத்தக்கது என்று சொல்லியிருக்கிறீர்களா? எனவே இதுவரையிலும் இல்லாத கூண்டு இன்றைக்கு ஏன் வருகிறது என்று சொன்னால், இதுவரையிலே இல்லாத முறையும், இப்படி 1, 2 பத்திரிகைகள் திட்டமிட்டு இந்த அவையை அவமதிக்க வேண்டும் என்கிற நிலையில் இந்த 6, 7 மாதங்களாக அவர்கள் நடந்து வருகின்ற தன்மையின் காரணமாகத்தான் இதுவரையிலே இல்லாத கூண்டு இன்றைக்கு இங்கே கொண்டு வந்து நிறுத்த வேண்டிய அவசியத்தை உருவாக்கிவிட்டார்கள். அந்த 2, 3 பேர் உருவாக்கியதே தவிர அதற்காக நீங்கள் வருந்தியிருக்க வேண்டும். இதுவரையிலே இல்லாத கூண்டை இங்கே கொண்டு வந்து நிறுத்துவதற்கு ஆளாக்கிவிட்டார்கள் அந்த மூவரும் என்று அவர்கள் மீது வருந்தி இருந்தால் அதிலே அர்த்தம் இருக்கிறது. இதுவரையிலேயும் இல்லாத முறையில் அந்த 3 பேர் நடந்திருக்கிற காரணத்தினாலேதான் அந்த கூண்டு இன்றைக்கு வந்திருக்கிறது. அந்தக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்துவது என்பது குறைந்த பட்ச தண்டனைதான் என்பதை நான் முதலிலே சொல்லியிருக்கிறேன்.

"Where the offence is not so grave as to warrant the committal of the offender he is generally directed to be reprimanded".

ரொம்ப அதிகம் இல்லை என்று கருதுகின்றபோதுதான் இந்தத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இவர்கள் செய்திருக்கின்ற தவறு மிகப் பெரிய தண்





டனைக்குரிய குற்றம் என்பதை நீங்கள் இந்த நேரத்திலாவது ஏற்றுக்கொண்டாக வேண்டும். அவ்வளவு பெரிய தவறுக்கு ரொம்ப சாதாரண சம்பவத்திற்குக் கொடுக்கின்ற தண்டனையைத்தான் நாம் இன்றைக்குக் கொடுத்திருக்கிறோம். எனவே பெரிய தண்டனை என்பதைப்போல சில பத்திரிகைகள் எழுதிக் கொண்டிருப்பதை ஊக்குவிப்பதைப் போல உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்து தெரிவித்திருக்கக்கூடாது என்று மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் நான் பேசுகின்றபோது இந்தத் தண்டனை என்பது குறைந்த தண்டனை என்பதையும் சொல்லி விட்டு முதலமைச்சர் அவர்களைத் திட்டமிட்டு சில பத்திரிகைகள் அவதூறு பரப்புகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன என்பதையும் சொல்லி விட்டு, ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்பதில் திட்டவட்டமாக, உறுதியாக இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டுவிட்டு ஏற்கனவே பீகார் மாநிலத்திலேயும், உத்திரப் பிரதேசம் மாநிலத்திலேயும் எழுந்த பிரச்சினை, முதலமைச்சரைக் குறிப்பிட்டு அவதூறு பரப்பிய காரணத்தாலே எழுந்த பிரச்சினை, அந்தப் பிரச்சினையிலேதான் அவர்களை கைது செய்யுமாறு வாரண்ட் அனுப்பப்பட்டது. ஆனால் இங்கே இந்த அவையை அவமதித்த குற்றத்திற்காக இன்றைக்கு சம்மன் செய்யப்பட்டு, சம்மனுக்கு வராத காரணத்தால் வாரண்ட் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லி விட்டு அங்கேயெல்லாம் முதலமைச்சரைக் குறை கூறி, குற்றம் கூறி அவமதித்த காரணத்தால் அப்படிப்பட்ட பேச்சை அவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பின்னர் அதை வெளியிட்ட காரணத்தால் எழுந்த பிரச்சினை என்பதையும் சொல்லி விட்டு, ஆனால் இங்கே முதலமைச்சரை இழித்தும், பழித்தும் பேசுகின்ற எந்தப் பத்திரிகையின் மீதும் நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் சொல்லியிருக்கிறேன். அடுத்துச் சொல்கின்றபோது, அப்படி நடவடிக்கைதான் எடுக்க வேண்டும் என்று வந்தால் வேறுவிதமாக நடவடிக்கை எடுத்துத்தான் தண்டனை கொடுக்க வேண்டிவரும் என்றும் நான் சொன்னேன் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதில் திட்டவட்டமாக இருக்கிறார். இது குறைந்த பட்சத் தண்டனை என்றும் சொல்லி விட்டு, முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும் என்று விரும்பியிருந்தால் அல்லது நாம் எடுக்க வேண்டும் என்கிற முடிவுக்குப் போகிறபோது வேறுவிதமான தண்டனைதான் கொடுக்க வேண்டிவரும் என்று நான் சொல்லியிருந்தேன். அதைச் சொன்னதற்கு அடுத்து சொன்னேன், அந்தப் பிரச்சினையில் வேறுவிதமான தண்டனைதான் கொடுக்க வேண்டிவரும். ஆனால் முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு என் மீது இருக்கின்ற பிரச்சினையை விட்டுவிடுங்கள் என்று சொன்ன

காரணத்தினாலே விட்டிருக்கிறோம். வேறுவிதமான நட வடிக்கை எடுக்கப் போகிறோம் என்று நான் உறுதியாகச் சொல்லியிருப்பதைப் போல இன்றைய தினம் புகழ் பெற்ற பத்திரிகைகள் அதைக் கட்டம் போடுகிற நிலைமையிலே தான் இருந்து கொண்டிருக்கின்றன. நான் சொல்கிறபோது முதலமைச்சர் கூடாது என்பதில் திட்டவட்டமாக இருக்கிறார், எந்த நடவடிக்கையும் என் மீது இருக்கின்ற பிரச்சினைக்காக வேண்டாம் என்பதை சொல்லியிருக்கிறார் என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னதற்குப் பிறகும் அதற்கு ஒரு 'பாக்ஸ்' செய்தி கிடையாது. முதலமைச்சர் இந்த அளவுக்குப் பெருந்தன்மை யோடு தன் மீது இழித்தும், பழித்தும் பேசுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதில் மிகத் தீர்மானமாக இருக் கிறார் என்பதற்கு —நான் சொன்னதற்கு 'பாக்ஸ்', கிடையாது அந்த வேறுவிதமான நடவடிக்கை என்பதற்கு மட்டும் இப்படி ஒரு பெரிய பாக்ஸ் கட்டி " They descive som: thing else" என்று

பிற்பகல் 12-10

நான் சொன்னதாகப்போட்டிருக்கிறார்கள். போட்டு, இவை இவை களில் எல்லாம் அந்த அளவுக்குப் பத்திரிகை உலகத்தின் மீது பாயத் தயாராகிக் கொண்டு இருக்கிறோம் என்பதைப் போல காட்டுகிறார்கள். அந்தச் செய்தியிலே கூட நான் திரும்ப, திரும்ப பிரஸ் என்பது — பத்திரிகை என்பது Fourth Estate என்று போட்டு இருக்கிறார்கள். அந்த Fou.th Estate என்று கூட அதைக் கருதவில்லை எங்களிலே நீங்கள் அடங்கியிருக்கிறீர்கள். இந்த எஸ்டேட்டுக்குள்ளேயே இருக்கிறீர்கள் என்றுதான் நான் பல்வேறு நேரங்களில் சொல்லியிருக்கிறேன். பத்திரிகையாளர் களை நம்மை விட்டு பிரித்து இன்னொரு எஸ்டேட் என்று கூட நான் கருதவில்லை. " House declares war on Fourth Estate " என்கிற அளவுக்குச் செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தச் செய்தியை கடைசியில் முடிக்கிறபோது some other என்பதற்கு அவர்கள் ஒரு விளக்கத்தைப் போட்டிருக்கிறார்கள். It will only be proper if some action.

அதற்குப் பிறகு அவர்கள் விளக்கம் பிராக்கட்டில் (other than moving privilege motions) is taken aganist those who slander the Chief Minister ro erd என்று இவர்களாகக் கற்பனை செய்து கொண்டு நான் இந்த அவையில் குறைந்த பட்சத் தண்டனையான பிரிவிலெஜ் கமிட்டி அறிக்கை மீது எழுந்த நடவடிக்கைக்குக் கொடுக்கின்ற தண்டனையாகக் குறிப்பிட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் வேண்டாம் என்று பிடிவாதமாகக் கூடாது என்று திட்ட வட்டமாக அறிவித்த காரணத்தால் நாங்கள் அந்த அளவுக்கு விட்டு இருக்கிறோம். வேறு விதமான நடவடிக்கை என்பதை



பிராகெட்டிற்குள்ளே பிரிவில்லெஜ் கமிட்டிக்கு அனுப்புகிற நடவடிக்கையைத் தவிர வேறு நடவடிக்கை என்கிற அளவுக்கு அவர்களாகக் கற்பனை செய்துகொண்டு ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்ட அதே ஆங்கில நாளேட்டில் அதாவது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரி கையிலே நேற்று நடைபெற்ற சம்பவங்களை ஒட்டி என் னைப் பற்றியும் ஒரு கற்பனைச் செய்தியை வெளியிட்டு இருக் கிறார்கள். தாங்கள் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களை வெளியேற்றினீர்கள். வெளி யேறும்படி உத்தரவிட்டீர்கள். அவர்கள் வெளியேற மறுத்த தால் காவலர்களை அழைத்து வெளியேற்றும்படிக் கூறினீர் கள். அப்போது உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியிலே லாபியிலே பத்திரிகையாளர்களைச் சந்திக்கப் போவதாகச் சொன்னாராம். அதனை அடுத்து அவர்கள் வெளியே சென்ற பிறகு சில பத்திரிகை நிருபர்கள் வெளியே சென் றார்களாம். அவர் அங்கே லாபியிலே பேட்டி அளிக்கிறார் என்பதை அறிந்து—An agitated Chief Minister was seen conversing heatedly with the Assembly Secretary; திரு. ஜானகிராமன் அவர்கள் என்று எழுதியிருக்கிறார்கள். அப்போது, திரு. திருநாவுக்கரசு வெளியேற்றப்பட்டபோது அவர் லாபியிலே நிருபர்களைச் சந்திக்கப்போகிறார் என்ற செய்தியும் எனக்குத் தெரியாது. சில நிருபர்கள் அவரை பேட்டி காண லாபிக்குச் சென்றார்கள் என்ற செய்தியும் தெரியாது. அப் போது நேரம் கடந்து விட்டதால் அசெம்பிளி செகரட்டரி திரு. ஜானகிராமன் அவர்கள் என்னிடத்தில் இதை இப்போதே எக்ஸ்டண்டு செய்து முடிக்கலாமா அல்லது லன்ச்சுக்கு ஒரு இடைவெளி விட்டு பின்னர் பிற்பகலில் மீண்டும் கூடலாமா என்று கேட்டுக் கொண்டு இருந்தார். அதைப்பற்றிதான் நான் அவரிடம் பேசிக் கொண்டு இருந்தேன். இதனை அவர்கள் கற் பனை செய்து திரு. திருநாவுக்கரசு வெளியே பத்திரிகையாளர் க்ளைச் சந்தித்து ஏதோ கூறப்போகிறார் என்று மிரட்டல் விட்டதால் முதலமைச்சர் பதட்டம் அடைந்து, கலக்கம் அடைந்து எதையோ பேசிக்கொண்டு இருந்தார், அசெம்பிளி செகரட்டரி யோடு என்று கற்பனையான செய்தியை வெளியிட்டு இருக் கிறார்கள். இது தான் வர, வர இந்தப் பத்திரிகையின் வாடிக் கையாகி விட்டது. இந்த குறிப்பிட்ட பத்திரிகையின் வாடிக் கையாகி விட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையினுடைய விதியே
அவையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அவையினு
டைய லாபியிலோ இந்தப் பேரவை வளாகத்திலோ இருந்து
பத்திரிகையாளர்களைச் சந்திக்கக் கூடாது. வெளியேற்றப்படு
கிறார்கள் என்றால் இந்த வளாகத்திற்குள்ளே இல்லாத அள
வுக்கு வெளியேற்றப்படுகிறார்கள் என்றுதான் பொருள். எனவே
அப்படி வெளியேற்றப்படுகிறவர்கள் லாபியிலே இருந்து
பத்திரிகையாளர்களைப் பார்ப்பது என்பதும் தவறு, பத்திரிக்
கையாளர்கள் போய் அவர்களைச் சந்தித்துப் பேட்டி காண்
பது என்பதும் தவறு என்பதை நான் சொன்னதேகூட எனக்கு
சார்ஜெண்டாக இருக்கிறவர் உடனடியாகச் சொல்லியதால்தான்
அவர் அந்தப் பக்கமாகப் போகிறார், பிரஸ்காரர்களும்
போகிறார்கள் என்று சொன்ன உடன் நான் இந்த விதியைத்தான்
நினைவுபடுத்தினேன். இதிலே முதலமைச்சர் அவர்கள்
அறிவுறுத்தி ஏதோ அஞ்சி, நடுங்கி—அவர் இந்த அவையிலே
நேருக்கு நேராக அவர் எழுப்பிய வாதங்களுக்கு எல்லாம்
பதில் சொல்லுகிற அளவிலே தான் (மேசையைத் தட்டும்
ஒலி) நேற்றைய தினம் விவாதம் நடந்தது. நேற்று என்ன
நடந்தது என்பதும், உங்களுக்குத் தெரியும்— எனவே,
அவர் வெளியே போய் சொல்கிற கருத்துக்கள் ஏதோ தன்
மீது விபரீதமாக வந்து விடும் என்று அவர் பதட்டம் அடைய
வேண்டிய அவசியம் இல்லை. இங்கே எழுப்புகிற அத்தனை
பிரச்சினைகளுக்கும் இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர்கள்,
மற்ற விவரங்கள் எல்லாம் தெரிந்த உறுப்பினர்கள் அடிக்கடி
குறுக்கிட்டு அவர்களிடத்திலே கேட்ட அந்த நிகழ்ச்சிகள்
நேற்றே நடந்தன. எந்தப் பதட்டத்திற்கும் முதலமைச்சர்
அவர்கள் ஆளாகவில்லை. அதற்கு மேற்கொண்டு பதட்டம்
அடைய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பத்திரிகை
எழுதுகிறது. அப்படி எழுதியும் விட்டு, ஏதோ இந்த அவை
அவர்கள் மீதும் போருக்குத் தயாராகி விட்டது என்று செய்தி
போடுகிறார்கள்.

பிற்பகல் 12-15

அதற்காகத்தான் நான் இதனைத் தெரிவித்தேன். எனவே,
நம்மைப் பொறுத்தமட்டில் இன்னும் பத்திரிகைத் துறையினரை
மதிப்பதில், பத்திரிகைத் துறையினரை நம்மோடு இணைத்து
நாட்டுக்கு, நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதில்,
உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, நமக்கும் மேலே
எல்லா மேலாண்மையும் படைத்தவர்கள் பொதுமக்கள்தான்
என்கிற உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள்,
அவர்களைப் போய் நமக்கு வேண்டாதவர்கள் என்று
கருத வேண்டிய அவசியமே இல்லை. எனவே
இந்த பேரவையைப் பொறு[illegible]



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

நடவடிக்கை என்பது அவர் சொன்னதைப்போல, இரண்டு,
மூன்று பேர் இதுவரையிலேயும் இந்த அவையின் வரலாற்றிலே
இல்லாத முறையில் தவறும் செய்துவிட்டு, தவறுக்கு வருத்தம்
தெரிவிக்கவும் மாட்டோம் என்பதில் பிடிவாதமாக இருந்து
கொண்டு இந்த அவையையும் அவமதிக்கிற சூழ்நிலையிலே
சென்ற காரணத்தாலேதான் இந்த நடவடிக்கைகளை நாம்
மேற்கொண்டோம்.

நாம் மேற்கொண்ட நடவடிக்கை என்பது மிகக் குறைந்த
பட்சத் தண்டனை என்பதற்குரிய நடவடிக்கைதான். அந்தக்
கூண்டுதான் ரொம்பக் குறைந்த பட்சத் தண்டனை என்று
இருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று
நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொன்னால் அதற்குப்பிறகு,
5 நாளோ, 10 நாளோ, 15 நாளோ, இரண்டு மாதமோ,
6 மாதமோ உள்ளே தள்ளுங்கள் என்று சொல்கிறீர்களோ என்று
தான் நான் கருதவேண்டி இருக்கிறது. ஏனென்று சொன்னால்,
இதுதான் குறைந்த தண்டனை, இதை மறுபரிசீலனை
செய்யுங்கள் என்று சொன்னால், அந்தக் குறைந்ததிலிருந்து
கொஞ்சம் கூட்டுங்கள் என்று சொல்கிறீர்கள் என்றுதான்
பொருள்பட வேண்டும். எனவே, நாம் வழங்கியிருக்கிற
தண்டனை என்பது, இந்த அவை எடுத்திருக்கிற நடவடிக்கை
என்பது, இந்த அவைக்கு இருக்கக்கூடிய உரிமையைப்
பாதுகாத்து, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக
எடுத்த நடவடிக்கை. எனவே, அந்த நடவடிக்கைக்கு,
உறுப்பினர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும்,
வேறுவிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்,
இந்தத் தண்டனையைக் கூட்ட வேண்டும் என்பது
போன்ற மறுபரிசீலனைக்குக் கூட இடம் வேண்டாம் என்று
மட்டும் நான் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தண்ட
னையை அவர்கள் வந்து ஏற்றுக் கொண்டாலே போதும்.
அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்காக, நான் வழங்
கியிருக்கிற இந்தக் குறைந்த பட்சத் தண்டனைக்காக, பேர
வைத் தலைவர் எடுத்திருக்கிற நடவடிக்கையே தவறான நட
வடிக்கை, பேரவைத் தலைவர் அறிவித்து இருக்கிற அறிவிப்பே,
தவறான அறிவிப்பு, அவர் எடுத்திருக்கிற முடிவுகள் அனைத்தும்
தவறானவை என்பது போன்று பொருள்படுகிற வகையில்,
பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகளைக் கண்டித்து
இன்றைக்கு அவையைப் புறக்கணிக்கிறோம் என்று சில பத்தி
ரிகையாளர்கள் வராமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதுதான்.
இருந்தாலும்கூட, அவர்கள் மீது எந்தக் கோபமும் இல்லை.
அவர்கள், ஏன் இந்த முடிவுக்குப் போனார்கள் என்பது தெரிய
வில்லை. ஆனால், சிலர் வரவில்லையே தவிர, பலர் இங்கே
வந்து இருக்கிறார்கள். இந்த அவையினுடைய நடவடிக்கைகள்,
தமிழக மக்களுக்கு நம்மைவிட எல்லா மேலாண்மையும் பெற்றி
ருக்கிற மக்களுக்குச் சென்று சேரத்தக்க வகையில், செய்தி

களைக் கொண்டு சேர்க்கிற பத்திரிகையாளர்கள் பலர் இங்கே
வருகை தந்திருக்கிறார்கள். அவர்களுக்காக என்னுடைய நன்றி
யைப் பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

இதிலே சுமுக உறவு பத்திரிகையாளர்களோடு என்றென்
றைக்கும் நமக்கு இருந்திடும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே
தெரிவித்து, இந்த பத்திரிகை சுதந்திரம் போய்விட்டது, சுதந்
திரம் போய் விட்டது என்பதற்கு இன்றைக்குக் கூட
முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்த ஒரு
கருத்து, நீங்களெல்லாம் ஏற்றுக்கொண்டால், இன்றைக்கு
திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னாரே, இதைப்
போன்ற வெளியிலே சொல்வதற்குக்கூட நா கூசுகிற வகையில்
சில செய்திகளை வெளியிடுகிற சில மஞ்சள் நாளேடுகள் பெருத்து
வரக்கூடிய ஒரு சூழ்நிலை வளர்ந்து கொண்டு இருக்கிறது,
இன்றைக்கு இப்படியெல்லாம் எழுதுகிறார்கள், ஒரு கோடி என்
கிறார்கள், அவருக்கு 5 இலட்சம், இவருக்கு 10 இலட்சம்,
இவருக்கு 7 இலட்சம் என்றெல்லாம் எழுதிக் கொண்டிருக்கக்
கூடிய பத்திரிகைகளையெல்லாம் தடுக்க வேண்டும் (மேசையைத்
தட்டும் ஒலி) என்கிற ஒரு நிலை வேண்டுமானால், அதற்குரிய
ஒரு சட்டத் திருத்தத்தை புரட்சித் தலைவர் அவர்
களே கொண்டுவர வேண்டுமென்று கருதி இருந்தார்கள், அவர்
போன்ற ஒரு சட்டத் திருத்தம், நீங்கள் எல்லோரும் ஏற்றுக்
கொண்டால், இங்கே கூட கொண்டு வரலாம் என்று சொன்
னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் கொண்டுவரப்
போகிறேன் என்று அவர்கள் என்றைக்கும் சொல்லவில்லை.
புரட்சித் தலைவரேகூட இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க செய்
திகளை வெளியிடுகிற பத்திரிகைகளுடைய நடவடிக்கைகளைக்
கட்டுப்படுத்துவதற்கு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று
அவரேகூட கருதி இருந்தார். இப்போது நீங்கள் எல்லோரும்
விரும்பினால், எல்லோரும் ஏற்றுக்கொண்டால் அப்படிப்பட்ட
ஒரு சட்டத் திருத்தத்தைக்கூடக் கொண்டு வரலாம் என்று
சொன்னதற்கு, அவர்கள்தான் ஏதோ பத்திரிகைகளுக்கு விரோத
மாக ஒரு பெரிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கும் இன்றைக்கு
ஆயத்தமாக இருக்கிறார்கள்; அதை வாபஸ் வாங்கவேண்டும்
என்றுகூட இன்றைக்குச் சில பத்திரிகையாளர்கள் சங்கம் என்
கிற பெயரில் ஒரு செய்தி வந்திருக்கிறது. பத்திரிக்கையாளர்களுக்கு
இருக்கிற உரிமை என்பது, இப்படி அவர் 1 கோடி வாங்கினார்,
இவர் 15 கோடி வாங்கினார், 10 கோடி வாங்கினார் என்று
எழுதுவது ஒருபுறம் இருந்தாலும் இந்த அவையினுடைய நடவடிக்
கைகளில் ஈடுபடுகிற உறுப்பினர்களுடைய நடவடிக்கைகளுக்கு
உள் நோக்கம் கற்பிக்கிற வகையில் இன்றைக்கேகூட முதலமைச்
சரவர்கள் அறிவித்த ஒரு அறிவிப்பை இங்கேயிருக்கிற உறுப்பினர்
திரு. பழனிசாமி அவர்களும் சரி, திரு. தம்புசாமி அவர்களும்
சரி ஆதரித்தார்கள், வரவேற்கிறோம், நன்றி தெரிவிக்கிறோம்
என்று சொன்னார்கள். நாளைக்கு இதே பத்திரிகைக்காரர்கள்,





ஆளுக்கு பத்து இலட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு வரவேற்றார்
கள் என்று எழுதமாட்டார்களா, இன்றைக்கு எதிர்க்கட்சித்
தலைவரை எழுதுகிறவர்கள்.

எனவே, இதைத் தடுப்பதற்கு என்ன வழி? புரட்சித்
தலைவரவர்கள் கொண்டு வர நினைத்தார்கள், இப்பொழுது
நீங்களெல்லாம் சேர்ந்து—அவர்கள் சொன்ன வார்த்தை—
— நீங்கள் அனைவரும் சேர்ந்து ஒருமுகமாக அப்படிச் சட்டம்
வேண்டும் என்று கருதினால் கொண்டு வர இருக்கிறேன் என்று
சொன்னால், பத்திரிகை உலகத்திற்கு எதிராகப் போர் தொடுக்கத்
தயாராக இருக்கிற அவருடைய அந்த அறிவிப்பைத் திரும்பப்
பெறவேண்டும் என்று சொல்கிறார்கள் என்றால் இங்கே
என்ன பில்லா இன்ட்ரடியூஸ் செய்தார்கள்? நீங்கள் எல்லாம்
ஏற்றுக்கொண்டால் கொண்டு வருவதற்கு நான் தயார் என்று
சொன்னார்கள். நீங்களெல்லாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று
என்றைக்குச் சொல்லப் போகிறீர்கள்? நாளைக்கு இதே மாதிரி
ஒரு பத்திரிகைக்காரர் எழுதினால் அதற்குப் பிறகு நீங்களும்
சேர்ந்து சொல்லப் போகிறீர்கள்.

எனவே, இந்தச் சூழ்நிலைகள் எல்லாம், ஒரு ஜனநாயக
நாட்டில் இருக்கக்கூடாது என்று, இன்று, நேற்றல்ல; மறைந்த
பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், அவர் பேச்சுரிமை
எழுத்துரிமை வேண்டுமென்று சொன்ன அளவிற்கு வேறு
யாரும் சொல்லியிருக்க முடியாது. பேச்சுரிமை, எழுத்துரிமை
இந்தத் தேசத்திற்கு வேண்டுமென்று சொன்ன பண்டித நேரு
பெருமான் அவர்களே தெரிவித்ததாக, 'Kaul and Shekdhar'
-இல் தெரிவித்திருக்கிற கருத்து ஒன்றை மட்டும் கோடிட்டுக்
காட்ட விரும்புகிறேன்.

"..Freedom carries with it responsibilities and cannot be absolute
in a democracy or for that matter in any organised human Society.
In the words of Prime Minister Jawaharlal Nehru 'freedom like
everything else and more than everything else carries certain responsi-
bilities and obligations and if these responsibilities and obligations
and disciplines are lacking then it is no freedom, whether an
individual indulges in it or a group or a newspaper or anyone else'.

அவர்களுக்கு இருக்கிற கடமையை மறந்து, எங்களுக்கு
இருக்கிற பேச்சுரிமை, எழுத்துரிமை என்கிற வகையில்
யார் ஈடுபட்டாலும்—even—பத்திரிகையாகவே இருந்தாலும்
அது பேச்சுரிமை, எழுத்துரிமை என்கிற அந்தத் தலைப்பிலே,
வராது என்பதைத் தெள்ளத் தெளிவாகப் பண்டித நேரு
பெருமகனார் அவர்கள் அன்றைக்கே, எழுத்துரிமை வேண்டும்,
பேச்சுரிமை வேண்டும் என்று சொன்ன பெருமகன் சொன்னதா
கும்.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

அந்தவகையிலேதான் இந்த அவையும், இன்றைக்குப் பேச்சுரிமை, எழுத்துரிமை என்பது நமக்கு இருக்கக்கூடிய கடமையை, உரிமையை மதிக்கக்கூடிய அளவிலே இருக்கும்வரையிலேயும் நாமும் அதை அந்த அளவு வரையிலேயும் அனுமதிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, இதன் காரணமாக இந்தப் பேரவையின் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கவேண்டுமென்று முடிவு செய்த பத்திரிகையாளர்கள் தங்களுடைய முடிவைத் திரும்பப் பெற்று, ம்றுபரிசீலனை செய்துகொள்ள வேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்''.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபொழுது, சில தரக்குறைவான பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை மக்கள் நம்புவதில்லை; இத்தகைய பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளில் உண்மையில்லை என்பது மக்களுக்கே புரிகின்றது என்று குறிப்பிட்டார்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது உண்மையாகாது. இது எப்படி, எந்த அளவிற்கு, யாரைப்பற்றிச் செய்திகள் வெளியிடப்படுகின்றனவோ அவர்களை எந்த அளவிற்குப் பாதிக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட ஒரேயொரு உதாரணத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

மாநில அளவில் ''Prohibition Propaganda Committee'' மதுவிலக்குப் பிரச்சாரக் குழு ஒன்றினை இந்த அரசு அமைத்துள்ளது. அதன் முதல் கூட்டத்தை நான் கூட்டினேன். அப்பொழுது அதில் இடம் பெற்றுள்ள ஒரு மிகப் பிரபல கலைஞர், வயதில் முதிர்ந்தவர், அவர் பேசுகின்றபொழுது எம்.எல்.ஏ.க்களைப் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்தார். ஏன், இப்படி எம்.எல்.ஏ.-க்களைப் பற்றிச் சொல்கிறீர்கள் என்று நான் கேள்வி கேட்டேன் 'ஜூனியர் விகடன்' பத்திரிகையில் வந்திருக்கிறது, அதில் படித்தேன் என்று அந்த அம்மையார் பதில் அளித்தார். அப்பொழுது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் குறிப்பிடுகின்ற அந்தக் கலைஞர் வயதில் முதிர்ந்தவர். உலக அனுபவம் பெற்றவர்.

பிற்பகல் 12-25

அவர் உலகத்தைப் பல கோணங்களிலிருந்து பார்த்தவர். அவரேகூட 'ஜூனியர் விகடன்' பத்திரிகையில் வருகிற செய்தியை வேதவாக்கு என்று நம்புகிற அளவில் இருக்கிறார் என்



1992 ஏப்ரல் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

றால், மற்ற சாமான்ய மக்களைப் பற்றி நாம் என்ன சொல்வது? எனவேதான் கூறுகிறேன். இத்தகைய பத்திரிகைகளில் வேண்டுமென்றே இட்டுக்கட்டி வருகிற செய்திகளை யாரும் நம்புவதில்லை என்று கூறுவதற்கில்லை. திட்டமிட்டு இப்படிப்பட்ட செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின்மீது, இத்தகைய பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடம் இல்லையா; எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றனவே என்று கேட்கிறார்கள். வழக்குப் போடலாமே; நீதிமன்றங்களின் மூலமாக சந்திக்கலாமே என்று கேட்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பத்திரிகை என்னைப் பற்றிய ஒரு தவறான செய்தியை ஒரு வாரம் வெளியிடுகிறது. அதற்கான மறுப்புக் கடிதத்தை அனுப்புகிறேன். ஒரு வழக்கையும் தொடருகிறேன். தொடர்ந்து, அடுத்த வாரம் அதேபோல் இன்னொரு கதை வருகிறது. இப்படி ஒவ்வொரு வாரமும் வேண்டுமென்றே ஒவ்வொரு வார இதழிலும் என்னைப் பற்றிய அவதூறு செய்திகளை வெளியிடுவது என்ற குறிக்கோளை வைத்துக்கொண்டு ஒரு பத்திரிகை, செய்திகளை வெளியிடுகிறது என்றால், எத்தனை வழக்குகளைப் போட முடியும்? எத்தனை மறுப்புக் கடிதங்களை அனுப்ப முடியும்? இதற்கெல்லாம் என்ன முடிவு? எனவேதான் இதற்கெல்லாம் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும்; இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட, ஏதாவது ஒரு வழியை நாம் சிந்திக்க வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்தேன். ஆனால், அந்த நடவடிக்கை எல்லோருடைய ஆதரவையும் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் நான் குறிப்பிட்டேன்.

## 3. <u>சிறப்புக் குறிப்புகள்</u> (தொடர்ச்சி)

### <u>(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து</u>

<u>திரு. ச. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இதிலே வேண்டாம்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது 'பாயின்ட் ஆப் ஆர்டர்'; டிபரண்ட் சப்ஜெக்ட். என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதி சுற்றுப் பயணம் பற்றி எனக்குத் தெரிந்த உண்மைகளை......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதிலே நீங்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்தீர்கள். அதிலே உரிமை மீறல் என்பதற்குரிய 'பிரைமா-பேசி' இல்லை என்று நான்

உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். இது என்னிடத்தில் நீங்கள் வந்து அறையிலே கேட்கவேண்டிய பிரச்சினையே தவிர அவையிலே எழுப்ப வேண்டிய பிரச்சினை அல்ல. இது உரிமை மீறல் பிரச்சினை என்று நான் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று தங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறபோது அதிலே பிரச்சினை வேண்டாம். (குறுக்கீடு) இல்லை அதிலே வேண்டாம். (குறுக்கீடு) தாங்கள் கொடுத்திருந்தீர்கள். தாங்கள் கொடுத்திருந்ததை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது, அதனுடைய உள்கோப்புகளைப் பார்க்கிறபோது, அது உரிமை மீறல் இல்லை என்று வருகிற காரணத்தினால் அதை நான் நிராகரித்து, உங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அதைப் பற்றிய விவரத்தை என்னிடத்திலே அறையிலேதான் கேட்க வேண்டும்.

உரிமை மீறல் பிரச்சினை; திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தன்னிலை விளக்கம் என்ற முறையிலேதான் கேட்க விரும்புகிறேன். எனக்கு கடிதம் காலையிலேதான் வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நீங்கள் தன்னிலை விளக்கம் என்று தனியே கேட்டிருந்தால், அது வந்திருக்கலாம்; அது தன்னிலை விளக்கம் என்று தனியாக வந்திருக்கும். இது உரிமைப் பிரச்சினை என்று வந்ததால் நான் சொன்னேன். ஆகவே, தன்னிலை விளக்கம் என்பது பிறிதொரு நேரத்தில் கொடுத்து (குறுக்கீடு) அது முடிந்தபின் கேட்டதால், இன்று உங்களை நான் அனுமதிக்க முடியவில்லை. இதை இன்னொரு சந்தர்ப்பத்திலே நீங்கள் கேட்டிருந்தால், நான் அனுமதித்திருப்பேன். திரு. ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன், நேற்று நீங்கள் கொடுத்தீர்கள்; காரணத்தை நான் சொல்ல முடியும். அதை இன்று நீங்கள் கேட்கிறீர்கள்; நானும் சொல்கிறேன். (குறுக்கீடு) கொடுத்தீர்கள்; அதை நான் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறேன். திரு. டி. எம். ரங்கராஜன்.



திரு. ச. இராமச்சந்திரன் : தங்களுடைய தீர்ப்பை எதிர்த்து, நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் வெளிநடப்புச் செய்தார்.)

## 5. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) 25—3—1992 ஆம் நாளன்று அவையில் முதலமைச்சர் பேசியதைத் திரித்து 6–4–1992 ஆம் தேதியிட்ட 'ஸ்டேட்ஸ்மென்' இதழில் வெளிவந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை. திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை நேரம் இந்த அவையிலே பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பற்றியும், பத்திரிகைகள் இந்த அவையை மீறிய செயல்களுக்காக அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் விவாதம் நடைபெற்றது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமர வேண்டும்.

திரு. டி. எம். ரங்கராஜன் : அதேபோன்று, நான் உங்களுடைய கவனத்திற்கு 'ஸ்டேட்ஸ்மென்' என்று டெல்லியிலே இருந்து வரக்கூடிய ஒரு ஆங்கில நாளேடு, 6—4—1992 அன்று ஒரு செய்தியினை வெளியிட்டிருக்கிறது. அந்தச் செய்தி, நம்முடைய அவையிலே நடக்காத ஒன்றைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது. அந்தச் செயல், இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயலாக இருப்பதனால், நான் அந்தப் பத்திரிகையின் மீதும், அதனுடைய நிருபர் திரு. எஸ். ராஜப்பா மீதும் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதற்கு, எனக்குத் தாங்கள் அனுமதி அளித்ததற்கு மிக்க நன்றி. 6—4—1992 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையிலே இதுபோன்ற ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளில் அமர வேண்டும்.

திரு. டி. எம். ரங்கராஜன் : "There is no other political leader in the entire country as much maligned in the media as I am," moaned Ms. Jayalalitha, the AIADMK Cheif Minister of Tamil Nadu, in the state Assembly on March 25 while dropping a bomb shell about her intention to bring forward legislation to shackle the Press.

To illustrate her point, Ms.Jayalalitha said a Tamil magazine had published the photograph of a bungalow, claiming to be hers. "I have not even seen that bungalow", she maintained."

என்ற செய்தியை வெளியிட்டு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலே மார்ச் மாதம் 25-ஆம் தேதி பேசுகின்றபோது பத்திரிகையைப் பற்றி, அதுவும் ஒரு வாரப் பத்திரிகையைப் பற்றி, அது தன்னைப் பற்றி எப்படி பொய்யான செய்திகளையெல்லாம் வெளியிடுகிறது என்று அந்தப் பத்திரிகையினுடைய பெயரைக் குறிப்பிடாமல் இங்கே சொன்னார்கள். அந்தச் செய்தி நம்முடைய மாநிலத்தி லிருந்து வெளிவருகின்ற 'மக்கள் குரல்' (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாறு அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மார்ச் மாதம் 26-ம் தேதி மக்கள் குரல் இதழிலே அது வந்திருக்கிறது. அதையும் தங்க ளுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இத் தகைய தாக்குதலில் தமிழகத்திலே, இந்தியாவிலே, அதிகமாகப் பாதிப்புக்கு உள்ளாகியது என்னைவிட வேறு யாரும் இருக்க முடியாது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதா ரணத்திற்கு, ஒரு வாரப் பத்திரிகையில் வெளியூரிலே இருக் கின்ற ஒரு வீட்டின் படத்தைப் போட்டு—இது தான் அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் சபையிலே ஆற்றியது—ஆனால் அன்றைக்கு அவர்கள் அது எந்தப் பத்திரிகை என்று அந்தச் செய்தியிலே குறிப்பிடவில்லை. அவர்கள் பேசும்போதும் சொல்லவில்லை. அதையும் நான் அவையினுடைய குறிப்பிலே பார்த்தேன். ஆனால், இந்த 'ஸ்டேட்ஸ்மென்' நாளிதழ் 6—4—1992-லே 'நக்கீரன்' என்ற வாரப் பத்திரிகை என்று குறிப்பிட்டு, அந்த 'நக்கீரன்' நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வீட்டின் படத்தைப் பிரசுரித்து இருப்ப தாகக்கூறி, அந்தப் படத்தை வெளியிட்டு இருக்கிறது. இந்தச் செய்தி உண்மையான செய்தி தானா என்று நான்





ஆராய முற்படுகின்றபோது, இதைத் தொடர்ந்து, 'நக்கீரன்' வார இதழிலே நான் பார்க்கின்றபோது, 15—6—1991-ஆம் நாளிட்ட 'நக்கீரன்' நாளிதழிலே "ஹைதராபாத் பங்க ளாவிலே ஜெயலலிதா" என்று ஒரு படத்தைப் போட்டு, இதுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பங்களா என்று ஒரு படத்தைப் போட்டிருக்கிறது. அது 15—6—1991 நாளிட்ட 'நக்கீரன்' பத்திரிகையிலே வந்திருக் கிறது. அந்த பங்களாவைப் பார்க்கின்றபோது, ஒரு புதருக்கு நடுவே ஒரு பாழடைந்த கட்டிடம்தான் தெரிகிறது. அதைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

அதைத் தொடர்ந்து 4—1—1992 அன்று 'நக்கீரன்' வார இதழிலே மற்றொரு படம் போடப்பட்டிருக்கிறது. அந்தப் படமும் ஹைதராபாத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பங்களா என்று சொல்லிப் போடப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த பங்களாவைப் பார்க்கின்ற போது என்னுடைய மயிலைத் தொகுதியிலே இருக்கின்ற ஒரு 'ப்ளாட்'டை எடுத்துப் போட்டிருக்கின்றார்கள் என்பது எனக்கு நிச்சயமாகப் புலப்படுகின்றது. இந்தச் செய்தியை தான் 'ஸ்டேட்ஸ்மென்' நாளிதழ் 6—4—1992 நாளிட்ட தன்னுடைய பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது. அவ்வாறு வெளியிடுகின்றபோது ஒரு படத்தையும் போட்டிருக்கின்றது. இந்தச் செய்தியை வெளியிட்ட 'ஸ்டேட்ஸ்மென்' உண்மை யான, 'நக்கீரன்' எந்தப் படத்தைப் போட்டிருந்ததோ, அதாவது 15—6—1991-லே போடப்பட்டதையோ அல்லது 4—1—1992-லே போட்ட படத்தையோ போட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக ஒரு புதிய கட்டிடத்தைப் போட்டு, மக்களைக் குழப்புகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது என்ப தனை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கின்றேன். ஏன் என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தப் பத்திரிகை என்றே குறிப்பிடவில்லை. அது மட்டுமல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுகின்ற போது, 'அதுபோன்ற பங்களாவை நான் பார்த்ததே இல்லை' என்று சொல்லியிருக்கின்ற நேரத்தில், எல்லோரையுமே குழப்பி இசை திருப்ப வேண்டுமென்று இட்டுக்கட்டி, மாண்புமிகு முதல்வா அவர்கள்மீது மாசு கற்பிக்கின்ற வகையிலே இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது என்பதனை நான் தங்களுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதே நேரத்தில் இந்த மாதிரி பொய்யான செய்தியை வெளியிடுவதனால் இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயலாக அது ஆகிறது.

பிற்பகல் 12—35

கான்ஸ்டிட்யூஷனை எடுத்துக் கொண்டோமேயானால் Legislature, Judiciary and the Executive are the three creators of the Constitution.'

ஆர்ட்டிக்கிள் 105-லேயும், ஆர்ட்டிக்கிள் 194-லேயும் பார்லிய மென்ட் மற்றும் சட்டமன்றங்களினுடைய உரிமைகள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்ட்டிக்கிள் 191 (ஏ) ஃப்ரீடம் ஆஃப் ஸ்பீச் பற்றிப் பேசுகிறது. இந்த ஃப்ரீடம் ஆஃப் ஸ்பீச் என்பது நம்முடைய அவையினுடைய உரிமைக்கு ஒடுங்கிய ஒன்றுதான்.

"The fundamental right guaranteed under Article 19(1)(a) is subject to Article 194 (3)"

என்று சுப்ரீம் கோர்ட் ஒரு ப்ரெஸ் கொடுத்த வழக்கில் கூறி இருக்கிறது. அதையும் நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சர்ச்லைட் எடிட்டர் திரு. சர்மா அவர்கள் தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் இவ்வாறு கூறி இருக்கிறது.

'Article 19 guarantees to all Citizens freedom of Speech and expression but does not Specifically or Separately provide for liberty of the Press. It has, however, been held that the liberty of the press is implicit in the freedom of Speech and expression which is conferred on a citizen.

Further, being only a right flowing from the freedom of Speech and expression, the liberty of the press in India Stands on no higher footing than the freedom of Speech and expression of a citizen and no privilege attaches to the press as such, that is to say, as distinct from the freedom of the citizen.'

இதிலிருந்து நமக்கு ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஃப்ரீடம் ஆஃப் ஸ்பீச் என்பது சிட்டிஸனுடைய ரைட்டுக் உட்பட்டதுதான். ஒரு சாதாரண குடிமகனுக்கு இங்கே இருக்கிற அதே உரிமைத்தான் இந்த ப்ரெஸ்க்கும் இருக்கிறது அதைக் கருத்தில் கொண்டுதான் சுப்ரீம் கோர்ட் தெரிவிக்கிறது.

The provisions of Article 19(1)(a) which are general, must yield to Article 194 (1) and the latter part of its clause (3) which are special.

என்று சொல்லப்பட்டிருப்பதால் ஃப்ரீடம் ஆஃப் ஸ்பீச் இந்த அவையினுடைய உரிமைக்கு உட்பட்ட ஒன்றுதான். ஆகவே ஃப்ரீடம் ஆஃப் ப்ரெஸ் என்பதை வைத்துக்கொண்டு இந்த அவையைக் களங்கப்படுத்த பத்திரிகைகள் நினைப்பது மிகவும் தவறானதாகும்.





அதுமட்டுமல்லாமல் 'Just as every person possesses the freedom of speech and expression, every person also possesses a right to his reputation which regarded a property. Hence, nobody can so use his freedom of speech or expression as to induce another's reputation'

என்றும் சுப்ரீம் கோர்ட் சொல்லியிருப்பதால் இந்த ஃப்ரீடம் ஆஃப் ப்ரெஸ் என்பதை வைத்துக்கொண்டு இந்த பத்திரிகைகள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையோ அல்லது இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களின் உரிமையையோ அவமதிக்க இயலாது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே மாதிரி பார்லிமென்டரி ப்ராக்டீஸ் அண்ட் ப்ரொசீஜர் என்று கௌல் அண்ட் ஷக்தர் எழுதிய புத்தகத்தில் ஃப்ரீடம் ஆஃப் ஸ்பீச் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

'But when debates or proceedings of the House or its committees are reported mala fide or there is wilful misrepresentation or suppression of speeches of particular members, it is a breach of privilege and contempt of the House and the offender is liable to punishment',

என்றும் கூறப்பட்டிருக்கிறது. இங்கே இந்த ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையில் வேண்டுமென்றே வில்ஃபுல் மிஸ் ரெப்பரசன்டேஷனாக, ஒரு கெட்ட எண்ணத்துடன் அதாவது 'மேலாஃபைடியுடன் suppressing the main facts, they have come out with an article. Hence, they have committed contempt of the House என்பதால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்த அவையினுடைய உரிமை மீறிய செயலாகும் என்று தங்கள் முன்னால் வைத்து இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று தங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கராஜன் அவர்கள் ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை மீது கொடுத்திருக்கின்ற இந்த உரிமை மீறல் பிரச்சினையில் உறுப்பினர் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையிலும், கொடுத்துள்ள ஆவணங்களின் அடிப்படையிலும் நான் ஆய்ந்து பார்த்ததில், மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே இதில் உரிமை மீறல் இருக்கிறது என்பது தெளிவாகிறது. எனவே மேலெழுந்தவாரியாகப் பார்க்கிற சூழ்நிலையிலேயே உரிமை மீறல் வெளிப்படுவதால் பேரவை விதி 226-ல் பேரவைத் தலைவருக்கு உரிய அந்த அதிகாரத்தின்படி இதை நேரடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்து இது பற்றி ஆய்ந்து அறிக்கை அளிக்குமாறு தெரிவிக்கிறேன்.

[1992 ஏப்ரல் 2

6. "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா" முன்னாள்
கட்டுரையாளர் கே. பி. சுனில், "முரசொலி" ஆசிரியர் மற்று
"கோவை மாலை முரசு" ஆசிரியர் ஆகியோரை பேரவை
கூடாதபோது கைது செய்தால் பேரவைத் தலைவர் முன்
ஆஜராகச் செய்யும்மாறும் பேரவைக் கூடும்போது அவர்களை
பேரவைமுன் பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று ஆ
ராகச் செய்யுமாறும் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய தினப்
பேரவையின் அலுவல்கள் முடிவடைகின்ற போதிலும்
பேரவையின் முடிவிற்கு இணங்க திருவாளர்கள் சுனில், இல்லஸ்ட்
ரேட்டட் வீக்லி, முன்னாள் எழுத்தாளர் திரு. எஸ். செல்வம்
ஆசிரியர், முரசொலி, திரு. சுந்தர், ஆசிரியர், கோவை மாலை
முரசு ஆகியோரை கைது செய்து இந்தப் பேரவைக்கு அவர்களைக்
கண்டிப்பதற்காக அழைத்து வரவேண்டும் என்று என்னால்
பிறப்பிக்கப்பட்ட பிடி ஆணையின் படி பேரவைக் கூட்டம்
இல்லாத நாளில் அவர்கள் கைது செய்யப்பட்டால் தொடர்ந்து
பேரவை கூடும் நாளில் பேரவைமுன் ஆஜர்படுத்துவதற்கான
ஆணையினைப் பெறுவதற்காக என்முன் ஆஜர்படுத்தப்பட
வேண்டும் என்று காவல் துறையினருக்கு அறிவுறுத்தப்படுகிறது
மீண்டும் பேரவை கூடும் எந்த நாளில் அவர்களைப் பேரவைமுன்
அழைத்து வரவேண்டுமென்பதற்குரிய கட்டளையை அப்போது
நான் பிறப்பிப்பேன். அதற்கேற்றவாறு காவல் துறை
அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

5. உரிமைப் பிரச்சினைகள். (தொடர்ச்சி)

(ஆ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் 12—2—1992 ஆ
தேதிய "ஜூனியர் விகடன்" பத்திரிகையில் பேரவை
நடவடிக்கைகளைத் திரித்து கருத்துக்கள் கூறியதாக
கூறப்படுவது பற்றிய பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இந்தப் பேரவையை அவமதிக்
கின்ற வகையிலேயும், அவருக்கு இருக்கின்ற உரிமையைமறுக்கி
வகையிலேயும், பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகளுக்கு
உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையிலேயும் ஒரு பத்திரிகையில் கரு
துக்கள் கூறியதைக் குறிப்பிட்டு பேரவை உறுப்பினர், டாக்
தே. குமாரதாஸ் அவர்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சி
தலைவர் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை
எழுப்பியிருந்தார். அவர் இந்தப் பிரச்சினையை எழுப்பி



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

உடனே பேரவை உறுப்பினர் என்கின்ற வகையில் அதற்கான விளக்கம் அளிக்க டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அவர் அந்த அனுமதியை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளாது உரிமை மீறல் பிரச்சினைக்குத் தொடர்பு இல்லாத பல்வேறு பிரச்சினைகளைத் தொடர்ந்து வற்புறுத்த ஆரம்பித்ததன் விளைவாக "உங்களுக்கு ஏதேனும் விளக்கம் அளிக்க விருப்பம் இருந்தால், எழுத்து மூலமாக எனக்கு அதை அளிக்கலாம்" என்று நான் அப்போது ஆணை பிறப்பித்து இருந்தேன். அந்த ஆணை செயலாளர் மூலம் அவருக்கு அனுப்பப்பட்டு இருந்தும்கூட, இரண்டு முறை நினைவூட்டுக் கடிதங்களுக்குப் பின்னர்தான் அவருடைய பதிலுரையை எனக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்தார். எனவே ஓரளவுக்கு நாள் கழித்து எடுத்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் எழுத்து மூலமாகக் கொடுத்த பதிலுரையிலும் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பிய நாளைக்கு பின்னர் நடந்த பல்வேறு அரசியல் சம்பவங்களை எல்லாம் அதன்மீது திணித்து, பல்வேறு உள்நோக்கங்களைக் கற்பிக்கின்ற வகையில் அவர்கள் தன்னுடைய பதில் உரையைக் கொடுத்திருக்கிறார்கள். எந்த வகையிலேயும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "அவர் பேரவையின் உரிமையை மீறி இருக்கிறார்" என்று எழுப்பிய பிரச்சினைக்கு நேரடியான பதில் அதில் இல்லாத காரணத்தினால், எந்த வகையிலும் அந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கில்லை என்று தெரிவித்து, பேரவை விதி 226-ன் கீழ் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் தன்னுடைய கட்டுரையில் எழுதிய சம்பவங்கள் எந்த அளவுக்குப் பேரவையின் அவை உரிமை மீறிய செயல் என்பதை ஆய்ந்து அதற்குரிய எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் பேரவைக்கு அறிக்கையாக அளிக்குமாறு உரிமைக் குழுவினைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக்கொண்டு இப்பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி வைக்கிறேன்.

(இ) பேரவைத் தலைவர் ஏற்கனவே தீர்ப்பளித்த பிரச்சினை பற்றி "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா" ஏப்ரல் 24—மே 1 இதழில் அதன் ஆசிரியர் அனில்தர்க்கார் வெளியிட்டுள்ள செய்திகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இல்லஸ்ட்ரேட்டட் பத்திரிகையின் ஆசிரியரான அனில் தர்க்கர் அவர்களைப் பெருந்தன்மையோடு நாம் இங்கே கூண்டிலே வந்து தண்டனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற தண்டனையைக் குறைத்து எச்சரிக்கையோடு விடுத்ததற்குப் பின்னரும் எந்தப் பிரச்சினைக்காக அவை உரிமைப் பிரச்சினை வந்ததோ, அதே பிரச்சினையை திரும்ப தன்னுடைய பத்திரிக்கையிலே எழுதி அவையை அவமதிக்கிற வகையிலேயும், அவைத் தலைவருடைய பெருந்தன்மையான அந்த தண்டனையைக்

குறைத்த செயலைக்கூட கேலியும் கிண்டலும் செய்து எழுதி இருப்பதானது, அவை உரிமை மீறலுக்குரிய செயலாகத் தான் மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்றபோதே தெளிவாகத் தெரிகிற காரணத்தினால், அந்த இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா ஆசிரியர் அனில் தர்க்கர் அவர்கள் இரண்டாவது முறையும் பேரவையை அவமதிக்கின்ற வகையில் செய்திருக்கின்ற அந்தச் செயலை ஆழ்ந்து பரிசீலித்து, ஆய்ந்து பேரவைக்கு அறிக்கை அளிக்குமாறு பேரவை விதி 226-ன் கீழ் இந்தப் பிரச்சினையைப் பேரவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

பிற்பகல் 12-45

## 7. கவன ஈர்ப்பு.

**(அ) அறிவொளி இயக்கம் கல்வி அறிவின் அவசியத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு மாறாக அரசியல் பிரச்சாரம் செய்வது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வ. சத்தியமூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' அறிவொளி இயக்கம் கல்வி அறிவின் அவசியத்தை பிரச்சாரம் செய்வதற்கு மாறாக, அரசியல் பிரச்சாரம் செய்வது குறித்து '' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

### விவர அறிக்கை.

தமிழகத்தில் அறிவொளி இயக்கம் அதாவது முழு எழுத்தறிவு திட்டம் 1991—92 முதல் பின்வரும் ஏழு மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது :—

1. புதுக்கோட்டை மாவட்டம்
2. காமராசர் மாவட்டம்
3. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
4. திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்
5. வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம்
6. கன்னியாகுமரி மாவட்டம்
7. மதுரை மாவட்டம்.





அறிவொளி இயக்கப்பணி தொண்டுள்ளம் படைத்த மாநில, மைய அரசுப்பணியாளர்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ஆகியோரின் உதவியுடன நடத்தப்பட்டு வருகிறது. எழுத்தறிவு இயக்கப் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் அவர்களது திறமையை மதிப்பிட்டு எழுத்தறிவுப் பணியில் உள்ள அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேற்படி தொண்டர்கள் வேறுபட்ட தொண்டு/சேவை நிறுவனங்களை சார்ந்தவர்கள் என்ற போதிலும் அறிவொளி இயக்கப் பணியில் எல்லாத் தரப்பினருடன் ஒருங்கிணைந்து எவ்வித கட்சி சார்பற்றவர்களாகவும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்படுகின்றனர். 16—12—1991 மற்றும் 17—12—1991-ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அறிவொளி இயக்க தொண்டர்களை தேர்வு செய்யும்போது அரசியல் மற்றும் வேறுபட்ட கொள்கை சார்ந்தவர்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தியிருந்தார். இது தொடர்பாக அறிவொளி இயக்க பணியில் ஈடுபடுத்தப்படும் தொண்டர்களை தேர்வு செய்யும் முன்பு குறிப்பிட்ட அரசியல் கொள்கை மற்றும் கட்சி சார்புள்ள நபர்கள் ஈடுபடாதவாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எச்சரிக்கையுணர்வுடன் செயல் படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இது குறித்து உறுதி அளித்துள்ளனர்.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட அறிவொளி இயக்க குழுவிற்குத் தலைவர் என்பதால் அந்தந்த மாவட்ட அறிவொளி இயக்கத்தில் பயன்படுத்தப்படும் பிரச்சார வாசகங் கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மிக கண்ணியத்துடன் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அறிவொளி இயக்கத்தில் பணியாற்று கின்ற ஆசிரியர்கள் அந்த வகையில் உண்மையில் பணியாற்று கின்றார்களா என்பதை நாங்கள் கண்ணுறும்போது அதில் வேறு பாடு இருக்கிறது. விவர அறிக்கையில் எல்லா தரப்பினர் களுடனும் ஒருங்கிணைந்து எவ்வித கட்சி சார்பற்றவர்களாக அற்பணிப்பு உணர்வுடன் செயல்படுகின்றனர் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் சாயல்குடி என்ற நகரில் அறிவொளி இயக்கப் பணிக்காக ஒரு விழாவை ஏற்பாடு செய்கின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பிரமுகர்களையும், வேறு சில கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களையும் மட்டும் அதில் சிறப்புரை ஆற்றுவார்கள் என்று போட்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவரைகூட அதில் சிறப்புரை ஆற்றுவதற்காக போடவில்லை.

[1992 ஏப்ரல் 28

அதுமட்டுமல்லாது, ஏழ்மை—வளமை, முதலாளி—தொழிலாளி அரசியல்-ஆட்சி என்ற வகையில் ஒரு கொள்கைப் பிரசாரம்போன்ற அவர்களுடைய கலை நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன ஆகவே இதை கண்காணித்து நாட்டில் விஷம பிரச்சாரம் பரவிவிடாமல் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கம் என்பது எழுத்தறிவு பரப்புகின்ற பணி சம்பந்தமானது ஆகும். எழுத்தறிவு இல்லாமல் இருக்கின்ற லட்சக் கணக்கான மக்களை முழுவதும் எழுத்தறிவு பெற செய்வதற்காக அறிவொளி இயக்கம் என்கிற பெயரில் பல்வேறு மாவட்டங்களில் இந்தப் பணியை நாம் ஆரம்பித்து இருக்கிறோம். சென்ற ஆண்டு புதுக்கோட்டை, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி கட்டபொம்மன், வடஆற்காடு—அம்பேத்கார், கன்னியாகுமரி, மதுரை ஆகிய 7 மாவட்டங்களில் இந்த இயக்கமானது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில், எழுத்தறிவு இயக்கத்தில் படிக்காதவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு எழுத்தறிவு ஊட்டுவது என்பது ஒரு சிரமமான காரியம் ஆகும். ஆகவே தான், சமூக சேவை மனப்பான்மை உள்ள பொறுப்பில் இருக்கின்றவர்கள் அல்லது பொறுப்பிலே இல்லாத தொண்டு மனப்பான்மை கொண்டவர்களை எல்லாம் நாம் ஒருங்கிணைத்து, அவர்களை எல்லாம் வைத்து இந்த மொழி எழுத்தறிவை அவர்கள் பெற செய்கிற இந்த முயற்சியிலே ஈடுபடுத்துகிறோம். இது அனைத்து இந்திய ரீதியிலே நடைபெறுகிற ஒரு பேரியக்கம் ஆகும். அப்படிச் செய்கின்றபோது பல்வேறு கொள்கையைச் சார்ந்தவர்கள் கூட இதிலே ஈடுபடுகிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அத்துணை பேரும் எழுத்தறிவு இயக்கத்தை நோக்கமாகக் கொண்டு மக்கள் எழுத்தறிவை பெற செய்வதற்கான பணியில் தான் ஈடுபட வேண்டுமே தவிர, தங்கள் சொந்த கொள்கைகளையோ, கருத்துக்களையோ பிரச்சாரம் செய்வதற்காக அறிவொளி இயக்கத்தை பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. அதற்கு நாம் இடம் கொடுக்கவும் முடியாது. அப்படிப்பட்ட நிலையில் தான் மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய கவனத்திற்கு சில பிரச்சினைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். யாரும், குறிப்பிட்ட ஒரு கட்சியைச் தான் அந்த நிகழ்ச்சிகளுக்கு அழைப்பது அல்லது குறிப்பிட்ட கட்சிகளை அழைப்பது இல்லை என்கிற ஒரு நிலை இருக்குமானால் அவர்கள், அரசியல் அடிப்படையில் அறிவொளி இயகத்தைச் சார்ந்தவர்கள் செயல்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது. அப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் அரசாங்கப் பதவியிலே இருப்பார்களானால் அவர்கள் மீது விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தொண்டு மனப்பான்மையோடு அவர்கள் வந்து இங்கே பணியாற்றுபவர்களாக இருந்தால், அவர்களுடைய சேவை அத்தோடு போதுமென்று சொல்லி, அவர்களை அனுப்பிவிட அரசாங்கம் நட-



1992 ஏப்ரல் 28] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

பிற்பகல் 12-50

வடிக்கை எடுக்கும். அடுத்து இதிலே மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது இந்தப் பிரச்சாரத்திலே கலை அம்சம் பொருந்திய நாடகங்கள், தெருக்கூத்து, வில்லுப் பாட்டு போன்றவைகள் எல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் மூலம் சமுதாயத்திலே வன்முறையைத் தூண்டக் கூடிய அளவுக்கு பிரச்சாரம் நடைபெற்று வருவதாக அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு, பக்கத்திலே இன்னொரு அமைச்சர் பதில் சொல்லும்போது நீங்களே அவர்களை அனுப்பிவிட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: அறிவொளி இயக்கம் சம்பந்தமாக கலை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு போன்றவைகள் நடைபெற்று வருகின்றன. அதை உருவாக்கும் பொறுப்பிலே இருக்கிறவர்கள் சமுதாயத்தில் வன்முறையைத் தூண்டுகிற விதத்தில், வன்முறையைப் பரப்புகின்ற விதத்தில், ஒரு பிரிவினர் மீது இன்னொரு பிரிவினர் கோபப்படுகின்ற விதத்தில், விரோதம் பாராட்டும் விதத்தில், தவறான பேதங்களை உண்டு பண்ணும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இடம் பெறச் செய்யாதபடி பார்த்துக்கொள்ளும்படி பொறுப்பிலே இருக்கிறவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய அங்கீகாரம் பெறாமல் எந்த நிகழ்ச்சியும் அறிவொளி இயக்கம் சம்பந்தமாக நடைபெறக் கூடாது என்று சொல்லியிருந்தோம். இப்போது நாங்கள் எடுத்திருக்கிற முடிவு, அது சம்பந்தமான இயக்குநர் அனுமதி இல்லாமல், அங்கீகாரம் இல்லாமல் எந்தவிதமான கலை நிகழ்ச்சிகளும் தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கம் சம்பந்தமாக நடைபெற கூடாது என்று அரசு முடிவெடுத்து இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1—1½ மாதத்திற்கு முன்பு திருச்சியில் பேருந்து நிலையத்தில் ஒரு பேருந்தில் அமர்ந்திருக்கின்ற போது ஒரு சிறுவன் வந்து ஒவ்வொரு பயணியின் இருப்பிடத்திலும் ஒரு துண்டுச் சீட்டை வைத்துவிட்டுச் செல்ல, பின்னால் ஒரு இளைஞன் வந்து, நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளாகியும் அறிவைப் பெறவில்லை, யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற அறிவு வாக்காளர்களுக்கு இல்லை, தேர்தல் கால கட்டத்தில் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து விட்டு, ஊழல் ஆட்சி இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது, ஆகவே ஊழலை அகற்ற வரும் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதைப் புரிந்துகொள்ள அறிவைப் புகட்ட நிதி உதவி செய்யுங்கள் என்று

பிச்சை எடுத்தார்கள். இதை அறிவொளி இயக்கம் என்ற பெயரில், கௌரவமான பிச்சைத் தொழிலைப் பேருந்துகளில் செய்வதை நான் கண்ணாரக் கண்டேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கம் சம்பந்த மாகச் செய்யப்பட்ட பிரச்சாரத்திலே கூட கொஞ்சம் உண்மை இருக்கிறது. 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சரான நேரத்தில் 500 மையங்களை எழுத்து அறிவுக்காக ஆரம்பித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்புக்கு வந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் இந்த மையங்களை மூடினாரே தவிர, முதியோர் கல்வி தர வேண்டும், மக்கள் எழுத்தறிவு பெற வேண்டும், அவர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களோ அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளக்கூடிய அறிவைப் பெற வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கவில்லை. அதைத் தடுத்து விட்டார்கள். 1977-ல் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு மிகச் சிறப்பான முதியோர் கல்வியை ஆரம்பித்து, 3 ஆம் இடத்திலே இருந்த தமிழ்நாட்டை 2 ஆம் இடத்திற்குக் கொண்டு வரச் செய்து, ஐக்கிய நாடுகள் சபை அளவிலான பரிசைக்கூட தமிழ்நாடு முதியோர் கல்வி வாரியம் பெற்றுள்ளது. இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அதை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு மத்திய, மாநில அரசுகள் முயற்சி எடுத்து, நடத்தி வருகின்ற இயக்கம் தான் அறிவொளி இயக்க மாகும். இது உண்மையான எழுத்தறிவு தருகின்ற இயக்க மாகும். இந்த முயற்சியிலே 7 மாவட்டங்கள் சென்ற ஆண்டு எடுக்கப்பட்டன. இந்த ஆண்டு 7 மாவட்டங்கள், மீதி அடுத்த ஆண்டு எடுக்கப்பட இருக்கின்றன. ஆகவே இது சம்பந்தமாக ஈடுபாடு கொள்கின்றவர்கள், இதற்கு உதவி செய்ய முன் வரு கிறவர்கள் இந்த இயக்கம் வெற்றி பெறச் செய்வதற்கான அந்த அடிப்படையில் ஈடுபட வேண்டுமே தவிர, இதைப் பயன்படுத்தி தங்களுக்கு ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கின்ற அளவுக்கு வருவார்களேயானால் அப்படிப்பட்டவர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

## (ஆ) பேராவூரணியிலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றப் போவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர். அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ஆர் சிங்காரம்.



திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணியில் இயங்கி வரும் நெல் ஆராய்ச்சி நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றப் போவது குறித்து'' மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் டவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

1959-வது ஆண்டிலிருந்து தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் களர் உவர் நெல் இரக மேம்பாட்டுக்காக ஒரு ஆராய்ச்சித் திட்டம் பேராவூரணியில் மேற்கொள்ளப்பட்டு அதனுடைய விளைவாக 1968-ல் பி.வி.ஆர். 1 என்ற ஓரு இரகம் வெளியிடப்பட்டது. பிறகு இது தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் வசம் பட்டுக்கோட்டை விவசாயப் பண்ணையின் மேற் பார்வையில் இருந்தது. 1—4—1981 ஆம் வருடம் ஆராய்ச்சி நிலையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டு தொடர்ந்து பட்டுக்கோட்டை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது திருச்சியில் களர் உவர் ஆராய்ச்சி மையம் மேம்படுத்தப்பட்டு எல்லா ஆய்வு வசதிகளுடனும் இருப்பதனால் இந்த ஆராய்ச்சி நிலையம் மட்டும் பேராவூரணியிலிருந்து 1991 ஆம் வருடம் திருச்சிக்கு மாற்றப்பட்டது. இதனால் பேரா வூரணிக்கு ஏற்ற களர் உவர் தாங்குத் தன்மை கொண்ட இரகங் களை உருவாக்கவும் மேலும் நல்ல வேளாண் ஆய்வு முடிவுகள் எடுக்கவும் வாய்ப்புகள் அதிகமாகிறது. இப்போது 36 ஆராய்ச்சி மையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியபடி இந்த விவர அறிக்கையை நான் பார்த்தேன். விவர அறிக்கையில் பேராவூரணியில் இயங்கி வருகின்ற அந்த ஆராய்ச்சி நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக் கிறார்கள். இந்த மையம் 1959-ல் பேராவூரணியில் ஆரம்பிக்கப் பட்டது. 1968-ல் பி.வி.ஆர். அதாவது பேராவூரணி-1 என்ற ஒரு இரக நெல் அங்கே கண்டுபிடிக்கப்பட்டு, வெளியிடப்பட்டது. அப்படிப்பட்ட செல்வாக்கு மிகுந்த, விளம்பரமான பேராவூரணி நெல்-1 கண்டுபிடிக்கப்பட்ட அந்த ஆராய்ச்சி நிலையத்தைத் தொடர்ந்து பேராவூரணியில் வைப்பதற்கு மாண்புமிகு அமைச் சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் களர் உவர் ஆராய்ச்சி செய்வதற்காக 1959 ஆம் ஆண்டில் ஓர் ஆராய்ச்சி நிலையம்

தொடங்கப்பட்டது. அங்கே பி.வி.ஆர். இரகம் 1 என்பது 1968-லே கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ஆராய்ச்சி மையம் செயல்படுகின்ற இடமான 5.2 ஏக்கர் நிலம் புறம்போக்கு நிலம். அதற்கு மேற்கொண்டு அங்கே நிலம் எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. அடுத்து, களர் உவர் ஆராய்ச்சி செம்மையாக, சீரிய முறையிலே நடைபெறுவதற்கு திருச்சி அருகிலே உள்ள குமர பெருமாள் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. எனவே அந்த மையத்திலே களர் உவர் நிலங்களுக்கு வேண்டிய இரகங் களைக் கண்டுபிடித்து வெளியிட முடியும் என்று அரசு முடிவு செய்து, 1991 செப்டம்பர் மாதம் முதல் அந்த ஆராய்ச்சி மையத்தை மாற்றியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். 1959-லே தொடங்கப்பட்ட அந்த ஆராய்ச்சி மையம் தற்போது, 1991 செப்டம்பரில் மாற்றப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பேராவூரணியில் அமைக்க முயற்சிக்க வேண் டும். அதே நேரத்தில் நம்முடைய தமிழகத்தினுடைய முத லமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத் தில் புதிது புதிதாக ஆராய்ச்சி செய்து, ஏழை எளிய மக்களுக்கு பல செயல் திட்டங்களைத் தீட்டுகின்ற இந்த அரசின் வேளாண் மைத்துறை அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேராவூரணி என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கிருந்து ஒவ்வொன்றாக மாற்றி விட்டார்கள். மின்சார வாரியத்தில் இருந்த ஓ. அண்ட் எம். அலுவலகம் மாற்றப்பட்டது நான் காங்கிரஸ் உறுப்பினர் என்ற காரணத்தால். அதைப்போல சூப்பர் மார்க்கெட் மாற்றப்பட்டது. அதைப் போல இன்னும் பல அலுவலகங்கள் பேராவூரணியில் இருந்து மாற்றப்பட்டன. அதைப்போன்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இந்த ஆராய்ச்சி நிலையம் மாற்றப்படுவது குறித்து பேராவூரணி மக்கள் மத்தியில் மிகப் பெரிய அதிருப்தி ஏற்படக்கூடும் என்ற ஐயத்தில்தான் நான் இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னிடத்தில் நேரில் சொல்லும் போது ஆராய்ச்சி நிலையம் அங்கே வைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்து, பேரா ஊரணியில் அந்த ஆராய்ச்சி நிலையத்தை வைக்க அரசு நட வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முறை சட்டமன்றத்திற்கு உறுப் பினராக வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர் கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி காலத்திலே அவர்களுக்கு வேண்டிய திட்டங்களை எல்லாம் அந்தப் பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். குறிப்பாக பட்டுக்கோட்டை அருகில் இருந்த தென்னை ஆராய்ச்சி மையத்தைக்கூட மாற்றக்கூடிய சூழ்நிலையிலே, சிங்காரம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அங்கே அமைத்திருக் கிறார்கள். ஆனால் பேராவூரணியில் நடைபெற்று வருகின்ற இந்த ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய சாத்தியக்கூறு இல்லை என்பதால்தான் அதை மாற்றியிருக் கிறோம் என்பதை நம்முடைய சிங்காரம் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கை களை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 50 முதல் 74 வரையிலான அறிக்கை களை (25 அறிக்கைகள்) பொதுக் கணக்குக் குழுவின் தலைவ ராகிய நான் இப்பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இல்லாத காரணத்தால் அறிக்கைகளின் அச்சிடப்பட்ட பிரதி களுக்குப் பதிலாக படியெடுக்கப்பட்ட பிரதிகள் (டம்மி ரிப் போர்ட்ஸ்) வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக் காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு கிடைத்தவுடன் இவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பொது நிறு வனங்களின் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 56வது அறிக்கை முதல் 80-வது அறிக்கை வரையிலான அறிக்கைகளை

இப்பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக நகல் எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் அறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவையின் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும். அடுத்து எல்லாத் துறையிலும் வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய புரட்சித் தலைவியின்.

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம் வைக்கிறேன் என்றால் போதும்.

2. விதி 110 இன்கீழ் அறிக்கைகள் அளித்தல்—(தொடர்ச்சி)

(இ) ஆட்டோ சங்கர் உட்பட சிலர் சிறையிலிருந்து தப்பியோடியது குறித்து இஸ்மாயில் கமிஷன் அளித்த அறிக்கை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்—சட்ட அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110—ன் கீழ் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவர்கள் அந்த அறிக்கையை இப்போது பேரவைக்கு அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் கைதிகள் ஆட்டோ சங்கர் மற்றும் நால்வர் தப்பியது தொடர்பாக நீதிபதி எம். எம். இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விவரம்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில், சென்னை மத்திய சிறையிலிருந்து 20/21—8—1990 அன்று விசாரணை சிறைவாசி சங்கர் மற்றும் இதர நால்வர் தப்பியது குறித்து விசாரணை செய்த நீதிபதி எம். எம். இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையில், சுற்றுப்புற காரணங்களும், சிறைத்துறை அதிகாரிகள் சிலர் அசட்டையாக இருந்ததோடு தப்பியவர்களுக்கு உதவியாக இருந்ததும் காரணம் என தெரிவித்துள்ளார். மேலும் விசாரணைக் கைதிகள் தப்பிச் செல்லாமல் இருப்பதற்காக வரையறை செய்யப்பட்ட சிறை விதிகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை மத்திய சிறை தற்போது அமைந்துள்ள சுற்றுப்புற சூழல்கள், மேற்கண்ட சிறைவாசிகள் தப்பிச் செல்ல ஏதுவாக அமைந்த பல்வேறு காரணங்களில் ஒன்றாகும். சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புழல்



என்னும் இடத்தில் புதிதாக மத்திய சிறையொன்று நவீன முறையில்; எல்லா பாதுகாப்பு அமைப்புகளுடனும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்சமயம், இங்கு இலங்கை அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். எனவே சென்னை மத்திய சிறையினை புழலுக்கு மாற்றுவதற்கு சிறிது காலமாகும்.

சென்னை மத்திய சிறையில் போதுமான அளவு மின் விளக்கு வசதிகள் செய்யப்படவில்லை என விசாரணைக் கமிஷன் தெரிவித்துள்ளது. ஆனால் தற்போது இந்தக் குறை நீக்கப்பட்டு தகுந்த அளவு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டன.

சிறை அதிகாரிகள், சிறைகளில் பின்பற்ற வேண்டிய விதி முறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நிர்வாகத் தவறுகளைப் பொறுத்தமட்டில் கைதிகள் தப்பிச் சென்ற நிகழ்வு நடந்தவுடனேயே சிறை கண்காணிப்பாளர் மற்றும் சிறை அதிகாரிகள் உட்பட 13 பேர் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டனர். இதற்கிடையில் கைதிகள் தப்பிச்செல்ல தீவிர உடந்தையாக இருந்த 3 நபர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதற்கிடையில், பாதிக்கப்பட்டவர்களில் சிலர், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்திற்குச் சென்று, மேற்படி தீர்ப்பாயத்தின் உத்தரவின் அடிப்படையில் கண்காணிப்பாளர் திரு. செல்லத்துரை, சிறை அலுவலர் திரு. முனிவேலு ஆகிய இருவரின் பணிநீக்கத்தையும் ரத்து செய்து, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டனர். ஆனால் திரு. செல்லத்துரை கடலூர் மத்திய சிறையின் கண்காணிப்பாளராகவும் திரு. முனிவேலு சேலம் மத்திய சிறை அதிகாரியாகவும் இன்று பணியாற்றுகின்றனர். மீதமுள்ள 11 அலுவலர்கள் தற்காலிக பணி நீக்கத்தில் இன்றும் உள்ளனர்.

விசாரணைக் கமிஷன் விசாரணைக்கு குந்தகம் விளைவிக்கும் என்ற காரணத்தால், மேற்சொன்ன அதிகாரிகள் மற்றும் சிறைக் காவலர்கள் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கைகளும், கிரிமினல் வழக்குகளும் விசாரணைக் கமிஷன் அறிக்கை எதிர்பார்த்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. விசாரணைக் கமிஷன் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுவிட்டதால், கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் துறை நடவடிக்கையும். கிரிமினல் நடவடிக்கையும் தொடரப்படுவதோடு அதிதீவிரப்படுத்தப்படும்.

சிறைகளின் பாதுகாப்பு மற்றும் காப்பு பொறுப்புகளை தீவிரமாக்குவதற்காக சிறைத்துறை அலுவலரால் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. சென்னை மத்திய சிறையின் விழிப்புணர்ச்சி மற்றும் பணிப் பொறுப்புகளை நன்கு உணர்ந்த

கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தவிரவும் இம் மாநிலத்தில் உள்ள அனைத்து 8 மத்திய சிறைகளிலும் மின் சமிக்ஞை மற்றும் சங்கு ஒலி ( Electror ic Alarm Sec.uity Syst.m ) போன்ற நவீன கருவிகளை வழங்க அரசு அனுமதித்துள்ளது.

பிற்பகல் 1—05

அரசு எடுத்துள்ள மேற்கண்ட நடவடிக்கைகள் சிறைகளிலிருந்து கைதிகள் தப்பிச் செல்வதை தடுக்க வெகுவாக உதவும். சுருங்கக் கூறின், கமிஷன் அறிக்கையில் கண்ட பரிந்துரைகளை அரசு ஏற்று உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க அரசு முயலும் என இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 9. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்.)

### (அ) மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்தல். தொடர்ந்து பல்வேறு சட்டமுன் வடிவுகள் இருந்தாலும் பேரவையின் அலுவல் நேரத்தை 1—30—க்கு மேலும் நீட்டித்து, தொடர்ந்து முடித்து விடலாம் என்ற கருத்து பரவலாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே தொடர்ந்து சட்டமுன்வடிவுகள் அனைத்தும் நிறைவேற்றப் படும்வரை அவை நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்து அதற்கேற்றவாறு ஒவ்வொரு சட்டமுன்வடிவின் மீதும் கருத்துக் கூறுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கொஞ்சம் நேரத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1992). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992—ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1992)* ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

---

* 27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவில் நடக்
கின்ற விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக
கலந்து கொண்டு கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத்
தந்தமைக்கு தங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன். இந்த சட்டமுன்வடிவின் ஷரத்துக்களின் சாதக, பாதக
ங்களைச் சொல்வதற்கு முன்னால் ஓட்டு மொத்தமாக எங்கள்
கட்சி இந்த சட்டமுன்வடிவை வரவேற்கிறது என்று சொல்லி
அதிலே உள்ள சாராம்சங்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களை
சுருங்கச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக தமிழக அரசினுடைய போக்குவரத்துக் கொள்
கையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இருந்த குழப்பமான நிலை
மாறி ஒரு தெளிவான சிந்தனைக்கு அரசு வந்திருக்கிறது என்பதை
இந்தச் சட்டமுன்வடிவு காண்பிக்கிறது. இந்த தெளிவான சூழ்
நிலையைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த போக்கு
வரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் நெஞ்சார
பாராட்டுகிறேன்.

அந்தத் தெளிவான சூழ்நிலை இன்றைய தினம் காலம்,
உலகம் போய்க் கொண்டிருக்கிற திசையை நோக்கி தாங்களும்
செல்ல வேண்டும் என்ற உணர்வு இந்த அரசுக்கு இருக்கிறது
என்பதை காண்பிக்கிறது. கடந்த ஆட்சி பத்தாண்டுகளிலே. தமிழ்
நாட்டிலே இருக்கின்ற அத்தனை போக்குவரத்துகளையும் தேசிய
மயமாக்கப்போகிறோம் என்ற கொள்கை அறிவிப்பு செய்தவுடன்
இந்த மன்றத்தில் நாங்கள் எல்லாம் .கேட்டோம் எதற்காக
அப்படி அறிவிப்புச் செய்கிறீர்கள் என்று. அப்போது ஒவ்வொரு
ஆண்டும் ஒவ்வொரு மாவட்டமாக நிறைவேற்றப் போகிறோம்
என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டத்திலே எந்தெந்த
ஆண்டு நிறைவேற்றப் போகிறீர்கள் என்று இப்போதே அறிவித்
துவிடுங்கள் என்று நாங்கள் கேட்டபோது அவர்கள் அதைச்
சொல்வதற்குத் தயாராக இல்லை. ஆங்கிலத்திலே சொல்வார்கள்
'The sword of demccle, என்று சொல்லி எப்போதும் தொங்குகிற
வாளாக விட்டிருந்தார்கள். பஸ் போக்குவரத்து உரிமையாளர்கள்
முன் நிரந்தரமாக தொங்குகிற வாளாக அதை காண்பித்து அரசிய
லுக்காக அதை பயன்படுத்துகிற சூழ்நிலை மாறி இந்த அரசு
இப்படித்தான் நினைக்கிறது, இந்த அரசு இப்படித்தான் போகப்
போகிறது என்பதை தெளிவாகச் சொல்லுகிற மனோ தைரியத்தை
இந்த அரசு பெற்றிருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

எங்களுடைய மத்திய அரசு அறிவித்துள்ள புதிய பொரு
ளாதாரக் கொள்கை ஒரு தெளிவான சிந்தனையோட்டத்தை
இந்த நாட்டுக்குத் தந்திருக்கிறது. அதாவது முழுவதுமாக நாட்டு

டமையாக்கப்பட வேண்டும் என்ற கருத்து மட்டுமல்ல, தனியார் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதுமல்ல, இரண்டும் a mutual co-existence supplementing one another. இரண்டு துறைகளுமே பொது மக்களுக்கு சேவை செய்வதற்கு ஒன்றை ஒன்று வெகுவாக முனைந்து ஒரு ஆரோக்கியமான போட்டி 'healthy competition' வரவேண்டுமென்று எண்ணுகிற அடிப்படையிலே இன்றைய தினம் இந்த நாட்டினுடைய பொருளாதாரப் பார்வை போய்க் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் அரசு போக்குவரத்துத் துறை மிகப்பெரிய பூதமாக செயல்பட்டாலும்கூட, தனியார் போக்குவரத்து மிக குறைவான அளவிலே அனுமதிக்கப்பட்டிருந்தாலும் கூட—It will provide a safety valve to the Transport System owned by the State Government. அந்த முறையிலே இந்த 'சேஃப்டி வால்வ், நல்ல முறையிலே செயலாற்ற வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள். ''நாய் எந்த நிறத்தில் இருந்தால் என்ன, நாய் கருப்பாய் இருந்தால் என்ன, வெள்ளையாய் இருந்தால் என்ன, அது ஒரு முயலை பிடித்தால் சரி'' என்று சொல்லுவார்கள். அது போல தேசியமயமாக்கப்பட்ட துறையாக இருந்தாலும் சரி அல்லது தனியார் துறையாக இருந்தாலும் சரி, மக்களுடைய சேவைக்கு முழுமையாக பயன்பட வேண்டும் என்பதுதான் இன்றைய புதிய சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலே இந்தச் சட்டமுன்வடிவை நான் மனதார ஆதரிப்பேன்.

அதே நேரத்தில் புதிய வழித்தடங்களை தனியார்களுக்குக் கொடுக்கின்றபோது, வேலையில்லாத பட்டதாரிகள், 'வார் விடோஸ்' அதாவது யுத்தத்திலே உயிரிழந்த வீரர்களின் மனைவிகள் பற்றும் எக்ஸ்சர்வீஸ்மென், முன்னாள் இராணுவ வீரர்கள், ஃபிசிகலி ஹேன்டிகேப்ட்களுக்கு உடல் ஊனமுற்றவர்கள் அன்–எம்பிளாய்டு கிராஜுவேட்ஸ் போன்றவர்களுக்கு அல்லது தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்குக் கூட முன்னுரிமை கொடுப்பதைப் பற்றிக் கூட நீங்கள் சிந்திக்கவேண்டும். அதே நேரத்தில் புதிய கொள்கையை அமல்படுத்தும்போது, நிறைய தனியார் பேருந்துகள் ஓட ஆரம்பிக்கின்றபோது, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் அவர்களுக்கும் ஒரு ஆரோக்கியமான போட்டி வளர வேண்டும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் அந்தப் பகுதியிலே போட்டியிடுகின்றபோது அங்கே பொது மக்களுடைய வசதி எந்தவிதத்திலேயும் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கான முறைகளையும் இந்த சட்டத்திருத்தத்தை அமல்படுத்துகின்றபோது அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இந்த சட்டமுன்வடிவினை வரவேற்று அமைகின்றேன். நன்றி. வணக்கம்.

**பிற்பகல் 1–10**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **திரு. ஜி. பழனிசாமி.**



திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையின் மூலமாக தனியார்களுக்கு கோர்ட்டினுடைய தீர்ப்பின்படி ரூட்டுகளை விடுகிற இந்த சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதுபோன்ற தனியார்கள் — முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலிருந்தபோது பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லி, அன்று ஆட்சியிலிருந்தபோது, அவர்கள் கொண்டு வந்து இருக்கிற சட்டத்தை எதிர்த்து தனியார் பஸ் உரிமையாளர்கள் கோர்ட்டுகளுக்கு சென்றார்கள். ஆனால், தற்போது உயர்நீதிமன்றம் அவர்களுக்கு விடப்பட்டு இருக்கக்கூடிய அந்த ரூட்டுகளை ஒப்படைக்க வேண்டும், உரிமையை விட வேண்டுமென்று சொல்லி ஒரு தீர்ப்பினை இன்றைய தினத்திலே வழங்கி இருக்கிறது. ஆனால், இதற்கு அரசு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் இந்த சட்டத் திருத்தத்திலே கொண்டு வரப்பட்டு இருக்கிறது. குறிப்பாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், ஏற்கனவே, இதற்கு முன்பாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆம்னி பஸ்களுக்கு எல்லாம் இருக்கைக் கட்டணத்தை உயர்த்தினார்கள். அதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் இன்றைக்கு குறைத்து இருக்கிறது.

பொதுவாக அரசு துறையிலே ஓடிக்கொண்டு இருக்கிற பஸ் போக்குவரத்து கழகங்கள் அவர்களுடைய வரவு–செலவு திட்டத்திலே கொள்கையை அறிவிக்கிறபோது, மக்களுடைய நலன்களைக் கருதி, ஓடிக்கொண்டிருக்கிற அந்த பஸ்கள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கிறது, ஆகையால் பல்வேறு கிராமப் புறங்களுக்கு பஸ்களை விடவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே கூட நான் பல்வேறு துறைகளிலே, போக்குவரத்து கழகங்களிலே சென்று, சம்பந்தப்பட்டு இருக்கிற அதிகாரிகளைக் கேட்கிறபோது அவர்கள் சொல்கிறார்கள், தனியாருடைய போக்குவரத்து பஸ்கள் நல்ல வருமானம் வரக்கூடிய நல்ல சாலைகளிலே அவைகள் எல்லாம் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அரசு பேருந்துகள், சாலைகள் சரியில்லாத இடங்களிலே ஓடிக்கொண்டு இருக்கின்றன. அவர்களுடைய ஸ்பேர் பார்ட்ஸ் எல்லாம் உடையப் போகிறது, டையர்கள் சீக்கிரமாக தேய்கிறது ; வருமானம் கூட குறைகிறது ; பயணிகள் கூட அதிகமாக ஏறுவதில்லை. இந்தச் சூழ்நிலையில் இதன் மூலம் அரசு பேருந்துகளுக்கு நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அப்படிப் பார்க்கிறபோது தனியார்களுக்கு இதுபோன்ற ரூட்களை அரசு விடுவதற்கு முன்வந்திருப்பது, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூட மீண்டும் வாய்ப்பே இல்லாத அளவிலே இன்றைக்கு அனுமதித்துவிடும். ஆகையால், நீங்கள் உயர்நீதிமன்றத்தை காரணம் காட்டி அனுமதித்தால், முழுமையாக அரசினுடைய போக்குவரத்துக் கழகம் படிப்படியாக தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுப்பது போன்ற பின்னணி விளைவுகள் ஏற்படும்

என்பது இந்த சட்டமுன்வடிவின் மூலம் புலப்படுகிறது. ஆகையால்தான் இந்த சட்டமுன்வடிவில் தனியாருக்கு வழங்கக் கூடிய உரிமையிலிருந்து, நீங்கள் மேற்கொண்டும் உச்ச நீதி மன்றத்துக்கு செல்ல வேண்டுமே தவிர அவர்களுக்கு நீங்கள் வாய்ப்பு அளிக்கக் கூடாது என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதைப்போல இப்போது பல்வேறு கிராமங்களுக்கு பஸ்கள் விடமுடியாத சூழ்நிலை இருக்கிறது. இதிலே இலாப-நஷ்டம் பார்ப்பதைவிட, மக்களின் நலனில் அக்கறை கொண்டு, இந்தப் போக்குவரத்தை அரசு கழகங்கள் ஏற்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவில் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 1.15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவு குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இப்போது கலப்பு பொருளாதாரம் என்று சொல்கிறோம். தனியாரும் பஸ் ஓட்டுகிறார்கள். அதற்கு முழுமையாக நாம் இனிமேல் நமக்கு இருக்கிற ரூட்டுகளை கொடுப்போமானால் அது சரியாக வராது. ஆனால் பல இடங்களில் நம்முடைய பஸ் ஓடிக் கொண்டிருந்தாலும், கிராமப்புறங்களில் ஓடிக்கொண்டிருந்தாலும், அவையெல்லாம் இலாபகரமாக இல்லையென்று நம்முடைய குறிப்புகள் எல்லாம் சொல்கின்றன. இப்படி இலாபகரமாக இல்லாததற்கே காரணம் நம்முடைய பஸ்கள் சரியாக இல்லையென்பதுதான். அந்த பஸ் போகிற ரோடும் சரியாக இல்லை. இந்தச் சூழ்நிலையில்தான் அதிலே ஏறுவதற்கு கூட ஜனங்களுக்கு அச்சமாக இருக்கிறது. ஆகவே தனியார்களுக்கு சில ரூட்டுகளைக் கொடுத்து, அவர்களும் பஸ் ஓட்டினால், அதற்கும் இதற்கும் ஒரு போட்டி மனப்பான்மை ஏற்பட்டாலாவது நம்முடைய அதிகாரிகள் அந்த பஸ்களை ஒழுங்காகச் செய்வதற்கான ஒரு நிலைமை உருவாக்கப்படும். ஆகவே, இப்போது தனியார்களுக்கு கொடுப்பதில் எஸ்.சி.—க்கு எத்தனை சதவீதம் கொடுத்திருக்கிறோம்? அப்படி யாராவது மனு போட்டிருக்கிறார்களா என்றால்—ஓரே ஒரு நபர் ஆறுமுகம் என்று நினைக்கிறேன்—சேலத்தில் இருக்கிறார். அவருக்கு ஒன்று கொடுத்திருக்கிறோம். அந்த மாதிரி தனியாரில் கூட பெண்களுக்கு—சில பேர் தொழில் செய்ய வருவார்களானால் அந்தப் பெண்களுக்கும், அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ அல்லது கணவனை இழந்த பெண்கள் அல்லது படித்து



விட்டு வேலை இல்லாமல் இருக்கிற பெண்கள்—அப்படி வந்தால் அவர்களாலும் நடத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர்களோ, அமைச்சர் அவர்களோ பெண்களால் நடத்த முடியுமா என்றால், அதற்கு தகுந்த ஆட்களைப் போட்டு விட்டால் நடத்தலாம். ஆகவே, பெண்கள் கேட்டாலும் சரி அல்லது ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் கேட்டாலும் சரி, அவர்களுக்கெல்லாம் இந்தத் துறையில் பெர்மிஷன் கொடுக்கிற நிலைமை உருவாகுமானால், இந்த இரண்டுக்கும் போட்டி மனப்பான்மை இருந்தால்தான் பஸ்ஸும் ஒழுங்காக இருக்கும், அந்த ரூட்டும் ஒழுங்காக இருக்கும். ஆகவே, இந்த பஸ் ஓட்டுவதற்கு முன்பு, பெர்மிட் கொடுப்பதற்கு முன்பு (மணியடிக்கப் பெற்றது) இந்த ரோடுகளை சரிபண்ணுவதற்கான நிலைமை உருவாக வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் இரு கருத்துக்களை இங்கே கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்கு காரணங்களை இங்கே எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் நேரத்தில் ஒரு வாக்குறுதியை அளித்தார்கள். அதாவது தன்னை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எந்தக் கொள்கையை போக்குவரத்துத் துறையில் கடைபிடித்தார்களோ அதையே நானும் கடைபிடிப்பேன் என்று வாக்குறுதியை அன்றைக்கு தந்தார்கள். இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் இந்த வாக்குறுதிக்கு சட்டப் பூர்வமாக வடிவம் கொடுக்கவே இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் அவர்கள் அதற்கு மாறாக செயல்பட்ட காரணத்தால் இன்றைக்கு அவர்கள் எல்லாம் அரசியல் அரங்கத்திலிருந்து அகற்றப்பட்டு மூலையிலிருந்து வெறும் முனகல் சத்தம் மட்டும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தேசியமயம் தான் எங்கள் கொள்கை என்று அவர்கள் தெருவெங்கும் முழங்கினார்கள். தேசியமயம் என்பது அவர்கள் ஆட்சிக் காலத்தில் 'சாத்தான் ஓதிய வேதமாக' இருந்ததே தவிர அது அன்றைக்கு அமல்படுத்தப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்ய பிரபந்தமாக'

இன்றைக்கு தேசியமயக் கொள்கையில் இடம் பெற்றிருக்கிறார்
கள் என்பதை பின்னால் நான் கோடிட்டுக்காடட கடமைப்
பட்டிருக்கிறேன்.

சமுதர்மம் என்பது தேசியமயம் என்பது அவர்களால்
அன்றைக்கு வெறும் சப்த ஜாலங்களாக பயன்படுத்தப்பட்டது.
ஆனால் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களுடைய ஆட்சியில் அவையெல்லாம் நடைமுறைப்படு
தப்பட்டு நெறிமுறைப்படுத்தப்பட்டு இன்றைக்கு தங்கத்
தலைவியின் ஆட்சியில் தனியார்களுக்கு இதுவரையிலும் பஸ்
ரூட்கள் தரப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெளிவு
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20.

1973-ஆம் ஆண்டு சர்க்காரியா புகழ் சரித்திர நாயகன்
அறிவித்த கொள்கையின் காரணமாக தமிழகத்திலே தனியார்
பேருந்து உரிமைகள் எல்லாம் அந்தந்த தொழிலிலிருந்து அகற்
றப்பட்டு, அதனால் புதிய பேருந்து உரிமையாளர்களுக்கு
வழங்கப்பட்ட காலம் ஒரு காலம் என்பதை நீங்கள் மறந்து
விடக்கூடாது. அத்தகைய வகையில் உருவாக்கப்பட்ட 1973-
ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு செல்லும் என்று உச்சநீதிமன்றத்
தாலும் 1983-வது ஆண்டிலே உறுதி செய்யப்பட்டதால்,
பொதுமக்கள் நலனைக் கருத்திலே கொண்டு புரட்சித்தலைவர்
ஆட்சியிலே 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணப் பேருந்துகள்
ஒப்பந்தப் பேருந்துகள் கையகப்படுத்துதல் திருத்தச் சட்டம் ஒன்று
கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்திலேதான், 5 அதற்குக்
குறைவாக எண்ணிக்கை உள்ள பயணப் பேருந்துகளை இயக்க
அனுமதி பெற்றிருந்த பேருந்து உரிமையாளர்களுக்கு 1973-ஆம்
ஆண்டு சட்ட விதி முறைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, பேருந்து உரிமையாளர்கள் தொடர்ந்து
புதிதாக பேருந்துகள் அனுமதிகளைப் பெறவும், அவர்கள்
அனுமதி கால அளவு முடிவு அடையும்போது, அவர்கள் அதனை
புதுப்பித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால்,
மதுரை, குமுளி பேருந்து வழித் தடங்களைப் பற்றித் தொடரப்
பட்ட வழக்கு உச்சநீதிமன்றம் அறிவித்த அனைத்து
வழித் தடங்களிலும், ஏற்று அளிக்கப்பட்ட திட்டத்தின்
அடிப்படையில், இணைப்பு இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள,
அல்லாத தனியார் எவரும் பயணப் பேருந்துகள் இயக்கலாகாது
என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் காரணமாக
பெரும்பாலான தனியார் உரிமையாளர்கள், தங்களின்
பேருந்துகளை தொடர்ந்து இயக்க முடியவில்லை. மேலும்
தனியார் பேருந்துகள் அனைத்தும் கையகப்படுத்த அரசிடத்திலே
நிதி வசதி இல்லாத காரணத்தால், பயணிகளின் நலனைக்
கருத்திலே கொண்டு, 1987-ஆம் ஆண்டு மோட்டார் வாகனச்
சட்டம், நாள் 13-11-1987 அன்று அண்ணா தி.மு.க.





அரசினால் நிறைவேற்றப்பட்டு 1989-வது ஆண்டு குடியரசுத்
தலைவரிடத்திலே ஒப்புதல் பெறப்பட்டது. ஆனால் தமி
ழகத்தின் அரசியலில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக மீண்டும்
ஆட்சிப் பொறுப்புக்கு வரும் வாய்ப்பைப் பெற்ற தி.மு.க.
அரசு தேசியமயக் கொள்கையின் ஏகபோக பிரதிநிதிகளாக
தங்களை பிரசுரித்துக் கொண்டு குடியரசுத் தலைவருடைய
அங்கீகாரம் பெற்ற, 1987-ஆம் ஆண்டு சட்டத்தையும் ஏற்க
மறுத்து அதை ரத்து செய்தார்கள். உண்மையில் அவர்கள்
தேசியமயக் கொள்கையின் ஆதரவாளர்களா என்றால், இல்லவே
இல்லை. அவர்கள் தேசியமயக் கொள்கையிலே மட்டுமல்லாமல்,
தேசத்திற்கே எதிரானவர்கள். தேசத்தின் அரசியல் சட்டத்
தையே அவமரியாதை செய்தவர்கள். அதனால்தான்,
தேசியமயக் கொள்கையின் போக்கிலிருந்து அவர்கள் மாறு
பட்ட கருத்துக்களை கொண்டு இன்றைக்கு தனியார்களுக்குப்
பெர்மிட்டை சில நேரங்களிலே வழங்கினார்கள். நாட்டுடைமைத்
தத்துவத்தை நாவினிக்கப் பேசிவிட்டு, வீட்டுடைமையை விரி
வாக்கம் செய்து கொண்டிருந்த தி.மு.க.வில் சமதர்மம்
என்பது எப்போதோ வருகிற குழாய் நீராக இருந்தது. ஆனால்
எங்களுடைய இதயதெய்வம், 20-ஆம் நூற்றாண்டின் இணை
யற்ற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில், சமதர்மம்
என்பது கொட்டுகின்ற குற்றால நீர் வீழ்ச்சியைப் போல இன்
றைக்கு நிகழ்ந்து கொண்டு இருக்கிற காட்சியை நாம் பார்த்துக்
கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதனால்தான், 1991-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் புவி
ஆளப் பிறந்த பெண்ணரசி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, 1987-ஆம் ஆண்டு வகுக்கப்
பட்ட கொள்கை பொதுவாகப் பின்பற்றுவதை இந்த
அரசின் கொள்கையாக இருக்கும் என்று அறிவித்
தார்கள். அந்த அறிவிப்பின்படி, இந்தச் சட்ட முன்வடிவு
இங்கே வந்திருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக,
பொதுமக்கள் நலனைக் கருத்திலே கொண்டு, தனிப்பட்ட
பேருந்து உரிமையாளர்கள் தற்போது இயக்கி வருகிற வழித்
தடங்களிலே, அவர்கள் தொடர்ந்து பேருந்துகளை இயக்
கலாம்.

அதுமட்டுமல்ல, அவர்களுடைய வழித் தடங்களிலே
மேலும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட திட்ட வழித்தடங்களிலே
மாறுதல்கள் கோரினால், அதாவது அரசால் வரையறுக்கப்படும்
நிபந்தனைகளின்படி மட்டுமே அனுமதிக்கப்படும் என்று
எல்லாம் இந்தச் சட்ட முன்வடிவிலே வகை செய்யப்பட்டு
இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இனி புதிதாக யாருக்கும் எந்தக் காரணத்தைக் கொண்டும், பெர்மிட் வழங்கப்படமாட்டாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் விதிமுறைகளில், 1977-ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்ததாக கருத்திலே பெறவேண்டும். இதற்கு எல்லாம் மேலாக, புதிய பெர்மிட்டுகள் கோரி பல்வேறு அதிகார அமைப்புக்கள் முன்னால் நிலுவையில் உள்ள அனைத்து வழக்கு களும் செயல்திறனற்றதாக கருதப்படும் என்று இந்தச் சட் டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 1-25.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிறபோது அவர்கள் தேசியமயக் கொள்கைவை 1973-லே கொண்டு வந் தார்கள். கொண்டு வந்ததற்குப் பிறகு நூற்றுக்கணக்கான புதிய வழித் தடங்களை வழக்கு மன்றத்தாலோ அல்லது அவர் களாலோ கொண்டுவந்து தேசியமயக் கொள்கைக்கு குழி தோண்டி புதைத்தார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இன்றைய வரையிலும் ஒரு தனியாருக்காவது ஒரு பேருந்து வழித் தடங் களைக் கூட கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே திட்ட வட்டமாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே தனியாருக்கு இந்த போக்கு வரத்துத் துறையிலே இருக்கிற பேருந்துகளை விடக் கூடாது என்று சொல்கின்ற கம்யூனிஸ்டு இயக்கத்தைப் பார்த்துக் கேட் கிறேன். மேற்கு வங்காளத்தில் தனியாருக்கு பர்மிட் வழங்கப் படவில்லையா ? அதேபோன்று கேரளாவிலே தனியாருக்கு பர்மிட் வழங்கப்படவில்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே கோடிட்டுக் காட்டினால் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலும் தெளிவான முடிவை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களிலேதான் புதிய வழித் தடங்கள் இயக்கப்பட வேண்டுமே தவிர, தனி யாரிடத்திலே ஒப்படைக்கின்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிடை யாது என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த நான் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிடுகின்றபோது சாலைகள் சரியாக இல்லை, பழமையான பேருந்துகளை இயக்குகிறோம் என்று குறிப் பிட்டார்கள். இந்திய நாட்டினுடைய வரலாற்றினை நாம் புரட்டிப் பார்க்கின்ற போது தமிழகத்திலே ஒரு சரித்திரம் இருக்கிறது.



தேசியத்திலே வழங்கப்படுகிற தேசிய விருதை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, முதன் முதலிலே 11 தேசிய விருதுகளை இந்திய தலைநகரத்திலே வழங்கினார்கள். அதிலே 7 தேசிய விருதுகளைப் பெற்றிருக்கிற பெருமை தமிழகத்தின் வரலாற்றில் புரட்சித்தலைவியுடைய ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். வேறு மாநிலங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது போக்குவரத்துக் கழகங்களிலே இயக்கப் படுகின்ற பேருந்துகள் இந்தக் காட்டிலும் வேறு ஏதாவது ஒரு மாநிலத்தில் சிறப்பாக இருக்கிறது என்று யாராவது கோடிட்டுக் காட்டினால்—கோடிட்டுக் காட்டமுடியுமா என்பதை நான் இந்த நேரத்தில் கேள்விக்குறியாக அவர்களுக்கு வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆக இந்த திருத்த சட்டத்தோடு நம்முடைய அரசு பொறுப் பேற்றதற்குப் பிறகு 512 வழி தடங்களில் இன்றைக்கு புதிய பேருந்துகளை விட்டிருக்கிற பெருமைக்குரியவராக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக் கிறார்கள். அத்தோடு மட்டுமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே, கிராமப்புறங்களில் பேருந்துகள் விடவேண்டுமென்று சொன்னபோது நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக வருகின்ற 1992—ஆம் ஆண்டு ஆயிரம் மக்கள் ஜனத்தொகை எங்கே இருக்கிறார்களோ, அங்கே எல்லாம் பேருந்து விடுகிறேன் என்று புரட்சித் தலைவி அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்களே, இந்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் அண்ணல் காந்தி அவர்கள் கண்டார்களே, அந்தக் கனவுகளை நிறைவேற்றுகின்ற வகையில் இந்தியா கிராமத்தை நோக்கித்தான் செல்லவேண்டுமென்று குறிப்பிட்டார்களே, அந்த கிராம ராஜ்யம் வளர்கின்ற அளவிற்கு இந்த போக்குவரத்துத் துறையிலே இன்றைக்கு மாற்றத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே போக்குவரத்துத் துறையை பொறுத்தவரையிலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்களே, உடனடியாக இங்கே இருக்கிற தனியாருடைய பேருந்துகள் அனைத்தையும் எடுத்தாக வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்களே, அதற்கு எங்கே நிதி இருக்கிறது? இருக்கின்ற பழைய பேருந்துகளை புதுப்பிப்பதற்கு நம்முடைய போக்குவரத்துத் துறையிலே நிதி பற்றாக்குறை இருக்கிறது. பல்வேறு வழித்தடங்களிலே போக்குவரத்துத் துறையை இயக்கியாக வேண்டும். ஆகவே தனியாரிடத்திலே இருக்கின்ற பேருந்துகள் அனைத்தையும் எடுப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. எதிர்காலத்திலே படிப்படியாக இந்த அரசு தேசிய மயக் கொள்கையிலே தேயாமல் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு அரசாகத்தான் இந்த அரசு இருக்கிறது

[திரு. கே. செங்கோட்டையன் [1992 ஏப்ரல் 28

என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரையிலும் தேசிய கொள்கையிலேயிருந்து ஒரு அடிகூட நழுவாமல் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற பாங்கினை இன்றைக்கு நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் 1973-லே தேசிய மயக்கொள்கை என்று அறிவித்ததற்குப் பிறகு அவர்கள் ஏன் தனியாருக்கு பர்மிட்டுகளை வழங்கினார்கள் என்பதை நான் உங்கள் மூலமாக அவர்களுக்குக் கேள்விக் கணையைத் தொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த அரசைப் பொறுத்த வரையிலும் தெளிவான கொள்கை முடிவுகளை இன்றைக்கு வைத்துக் கொண்டிருக்கிற இந்த அரசுக்கு நீங்கள் குறிப்பிட் டிருக்கிறீர்களே அதுபோல் அல்லாமல் உங்கள் கருத்துக்களை இந்த அரசு தேசிய மயக் கொள்கையாக இருந்தாலும், தனியாராக இருந்தாலும் சரி, எந்தெந்தத் துறையை யாரிடத்திலே ஒப்படைப்பது என்ற தெளிவான முடிவை மேற் கொள்கிற ஒரு முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர், நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், இன்றைக்கு இது சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். அதற்கு விளக்கத்தையும் நான் இந்த நேரத்திலே தந்திருக்கிறேன். இந்தச் சட்டமுன் வடிவை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறி, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



பிரிவுகள் 2 முதல் 11 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) வழக்குரைஞர் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1992) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1992) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும், துணைத் தலைவர் அவர்களே, 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிய (திருத்த) சட்டத்தை குறித்து காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எனது கருத்துக்களை எடுத்துவைக்க அனுமதி தந்த உங்களுக்கு முதற்கண் எனது நன்றியை நான் செப்பிக்கொள்கிறேன். இங்கே 1987-ஆம் ஆண்டு புரட்சி தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் வழக்குரைஞர்கள்பால் கருணை வைத்து ஒரு சட்டத்தை இம்மாமன்றத்திலே இயற்றினார்கள். ஆனால் இந்தச் சட்டத்தை பின்னாலே வந்த அரசு ஏற்க தவறியதோடு அந்த வழக்குரைஞர்கள்பால் சரியான முறையிலே கருத்து வைக்காமலும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற தவறி விட்டார்கள் ஆகவேதான் இந்தச் சட்டத்தை செயல்படுத்தி நிறைவேற்றும் முகத்தான் இன்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சில திருத்தங்களை கொண்டு வந்து இங்கே வழக்குரைஞர்கள் பால் அன்பினை செலுத்தி—அவரும் ஒரு வழக்குரைஞர் என்ற முறையில் அதையும் உணர்ந்து அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சிறிய சட்டத்தை, திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதற்காக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் நன்றியைச் சொல்லி இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் இந்த திருத்தச் சட்டத்திலேயும் சில குறைகள் இருக்கின்றன.

(@) 23—4—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



காரணம் இது ஏற்கெனவே 1987-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட
சட்டம் செயல்படாமல் அப்படியே இருந்துவந்ததற்கான
காரணத்தை இந்த அரசு சற்று ஆராய வேண்டும்.

இப்போது கொண்டுவந்திருக்கிற இந்த அமென்ட்மென்ட்டில்
28-வது செக்ஷன் என்ற ஒன்றை சேர்த்திருக்கிறீர்கள்.
பொதுவாக அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுவார்கள்.
சட்டம் ஒரு இருட்டறை அதிலே வக்கீலின் வாதம்தான்
விளக்கு என்று சொல்லுவார்கள். அப்படி விளக்காக விளங்கிக்
கொண்டிருக்கிற அந்த வழக்குரைஞர்கள் சமுதாயம்
இப்போது நலிந்தும் நசித்தும் கிடக்கிறது. இதை இந்த அரசு
நன்றாக அறியும். நாடும் நன்றாக அறியும். இந்தச்
சூழ்நிலையில் ஏற்கெனவே 1987 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட
சட்டத்தில் இருக்கக்கூடிய ஷெட்யூல் அப்படியே இருக்கிறது.

இந்த ஷெட்யூலின் படி இங்கு ஓராண்டு அனுபவம் பெற்ற
வழக்குரைஞர்கள் ஒருவேளை அந்தத் தொழிலை விடுவார்
களேயானால் அல்லது இறப்பார்களேயானால் ஒரு ஆயிரம்
என்றும் 10 ஆண்டுகள் வழக்குரைஞர்கள் தொழிலை பெற்ற
வர்கள் இறப்பார்களேயானால் 10 ஆயிரம் என்றும் 30
ஆண்டுகள் வழக்குரைஞர்கள் தொழிலை செய்திருந்தால்
30 ஆயிரம் என்று தான் நஷ்டஈடு கொடுப்பதற்கு
வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த
28-வது செக்ஷனை நீங்கள் சேர்த்து அவ்வப்போது இது
மாற்றி அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.
பொதுவாக இப்படிப்பட்ட அறிவிப்புகள் அவ்வப்போது வரும்
என்று சொன்னாலும் அது வருவது கிடையாது. பல ஆண்டுகள்
ஆனாலும் அது செயல்முறைக்கு கொண்டுவராமல் காலம்
தாழ்த்தப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு சட்டத் துறை
அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலிக்கவேண்டும்.
ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே 2 முறை நீங்கள்
பேசுகிறபோது சொல்லியிருக்கிறீர்கள். ஒரு முறை நானே இந்தப்
பிரச்சினையை எழுப்பிய போது ரூ. 1 லட்சம் வரை
வழக்கறிஞர்கள் இறப்பார்களேயானால் நிதி உதவி
அளிப்பதற்கு நாங்கள் வழிவகை செய்கிறோம். என்று இம்மா
மன்றத்திலேயே நீங்கள் பரிசீலிப்பதாக சொல்லியிருக்கிறீர்கள்.
அடுத்து ஒருமுறை பேசுகிறபோது 60 ஆயிரம் கொடுப்
பதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள்.
ஆகவே அப்படி சட்ட அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே
அறிவித்தபடி அந்தத் தொகையை கொடுக்க வேண்டும்
என்று சொன்னால் அந்த ஷெட்யூலை நீங்கள் திருத்தினால்
தான் வழக்குரைஞர்களில் ஒருவர் இறப்பார்களேயானால்
ரூ.60 ஆயிரம் கொடுப்பதற்கான வழிவகைகளை காணமுடியும்.
இல்லாவிட்டால் ஷெட்யூலை நீங்கள் திருத்தாமல் அவ்வப்
போது அரசு நோட்டிபிகேஷன் மூலமாக அதை அறிவிப்
போம் என்று சொல்லுவீர்களேயானால், சில நேரங்களிலே

நீங்கள் அறிவிக்காமலேகூட இருந்துவிட வாய்ப்பு இருக்கிறது. 5 ஆண்டுகள் ஆனாலும்கூட அறிவிப்புகள் வராமலேகூட போய்விடும். ஆகவே அதையெல்லாம் தடுக்கும் வகையில் தயவு செய்து சட்ட அமைச்சர் அவர்கள் இந்த ஷெட்யூலை திருத்தி ஒரு வழக்குரைஞர் 30 ஆண்டுகள் 20 ஆண்டுகள் தொழில் நடத்தி இறந்து போனால் 1 லட்சம் ரூபாய் வரையில் உதவி அளிக்கப்படும் என்ற வகையில் அந்த ஷெட்யூலை திருத்துவதற்கு முன் வரவேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து பொதுவாக அட்வகேட் அசோசியேஷனிலேயும் பார் அசோசியேஷனிலும் மெம்பராக இருப்பவர்கள் கட்டாயமாக இந்த வெல்பர் பண்டுக்கு உறுப்பினர்களாக ஆகி பணத்தை செலுத்தவேண்டும் என்ற ஒரு விதியையும் நீங்கள் இணைக்க வேண்டும்.

பிற்பகல் 1-35

இப்போது பல்லாயிரக்கணக்கான வழக்குரைஞர்கள் தமிழகத்திலே பணிபுரிந்தாலும் அவர்கள் வழக்குரைஞர் தொழிலிலே ஈடுபட்டு இருந்தாலும் அவர்கள் இந்த அட்வகேட் வெல்பேர் பண்ட் ஆக்ட்டிலே பணத்தைச் செலுத்தாமல் உறுப்பினர் ஆகாமல் இருக்கிறார்கள். அது 20, 25% கூட இன்னும் வந்து சேரவில்லை. ஆகவே ஒரு கண்டிப்பான ஒரு விதிமுறை இதிலே இருக்குமேயானால்தான் வழக்குரைஞர்களை இந்த வெல்பேர் பண்ட் ஆக்ட்டிலே உறுப்பினர்களாகச் சேர்க்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். நமக்கும் நிதி உதவி அளிப்பதற்கு அது ஏதுவாக இருக்கும். அதேபோல அரசு மானியமும் நீங்கள் இதிலே சற்று வழங்க வேண்டும். நீங்கள் ஏற்கனவே இந்தச் சட்டத் திருத்தத்திலே இரண்டு ரூபாய் வில்லையை மட்டும் பிரிண்ட் செய்து கொடுப்பதற்கான வழிவகைகளை கண்டிருக்கிறீர்கள். அப்படி வழிவகை காண்பீர்களானால் வழக்குரைஞரே வந்து ரூபாயைச் செலுத்தி அந்த இடத்திலே ஒட்டக் கூடிய ஸ்டாம்ப் தான் அது அரசு மானியம் ஏற்கனவே 1987-ஆம் ஆண்டில் சொல்லப்பட்டு இருக்கக் கூடிய அந்தச்சட்டத்தில் கவர்ன்மெண்ட் கிராண்ட்டை பற்றியும் சொல்லியிருக்கிறது ஆனால் நீங்கள் அந்த கவர்ன்மெண்ட் கிராண்ட் எவ்வளவு என்பதை இந்த இடத்திலே எடுத்துச் சொல்லி அதற்கும் ஒரு வழிமுறையை நீங்கள் காண வேண்டும் என்பதை மெத்த பணிவோடு எடுத்துச் சொல்லி மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அவர் ஒரு வழக்குறைஞர் என்ற முறையிலே நிச்சயமாக வழக்குறைஞர்களுடைய குறைகளை அறிந்தவர் என்ற காரணத்தினாலும் நான் சொன்ன இந்த கருத்துக்களை இணைத்து சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று பணிந்து வேண்டி, இந்த வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
வழக்குறைஞர் நல நிதிய சட்டத் திருத்த சட்டமுன்வடிவில்
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சிறந்த
கருத்துக்களை நல்கி யிருக்கிறார்கள். இந்த சட்டமுன்
வடிவு இந்த மாமன்றத்தினுடைய ஒப்புதலுக்கு வந்து இருப்
பதினுடைய நோக்கமே 1987-ஆம் ஆண்டு போற்றுதற்குரிய
நம்முடைய டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சிக் காலத்திலே 25,000 வழக்குறைஞர்களுடைய வாழ்க்
கையில் ஒளி விளக்கை ஏற்ற வேண்டுமென்ற தூயநோக்கோடு
கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்த சட்ட முன்வடிவில்
சில இன்னடிகுவஸிஸ்—சில குறைகள் இருந்த காரணத்தி
னாலும், தொடர்ந்து தி.மு.க. ஆட்சி தொடர்ந்து பொறுப்
புக்கு வந்த காரணத்தினாலும் போற்றுதற்குரிய டாக்டர்
புரட்சித் தலைவர் அவர்கள் கண்ட கனவு கனவாகவே போய்
விட்டது. இன்றைக்கு அவருடைய வாரிசாக திகழ்கின்ற
போற்றுதற்குரிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித்
தலைவி அவர்களுடைய காலத்தில் அது சீரமைக்கப்பட்டு,
செம்மைபடுத்தப்பட்டு, முழுமைபடுத்தப்பட்டு தமிழகத்திலே
இருக்கின்ற 25,000 வழக்குரைஞர்களுடைய வாழ்க்கைக்கு
ஒரு ஆதாரத்தை நல்ல ஒரு பிடிப்பை இந்த சட்டமுன்வடிவ
நல்க வந்திருக்கிறது. ஆனால் அதிலே அரசு எவ்வளவு ஆர்
வம் காட்டுகிறதோ, அந்த அளவுக்கு வழக்குரைஞர்கள்
ஆர்வம் காட்டுகிறார்களா என்றால் இல்லை என்று மன
ஆதங்கத்தோடு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கி
றேன். இந்த வழக்குரைஞர் நல நிதியில்—இது வழக்குரை
ஞர்களுக்காக ஏற்பட்ட நிதி, திட்டம். ஆனால் இந்தத்
திட்டத்திற்கு இந்த வழக்குரைஞர்கள் போதுமான ஆதரவு
நல்கியிருக்கிறார்களா என்றால் இதுவரையிலும் 3,400 பேர்
தான் உறுப்பினர்களாகவே ஆகியிருக்கிறார்கள். ஒருமுறை
இதே மாமான்றத்தில் நம்முடைய மாண்புமிகு வேலூர் சட்ட
மன்ற உறுப்பினர் பேசுகின்றபோது கூட நான் சொன்னேன்.
வேலூரிலே வழக்குரைஞர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?
எத்தனை பேர் உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள் என்று
கேட்ட நேரத்திலே அவருக்குள்ள சாதுர்யத்திலே சமாளித்தாரே
தவிர அவர் நியாயமான விளக்கத்தை அன்றும் சொல்ல
வில்லை. இன்னும் சொல்லவில்லை. நாளையும் சொல்ல
மாட்டார். காரணம் அவர் வேகமாக பேசிவிட்டு—ஒரு
திட்டம் என்றால் அது வழக்குரைஞர்களுக்காக. நாளைய
தினம் வழக்குரைஞர்களுடைய குடும்பத்திலே ஏதாவது
நொடிவு ஏற்பட்டால், அவர்களுடைய குடும்பத்திலே ஒரு
விபத்து ஏற்பட்டுவிட்டால், அந்த வழக்குரைஞர்களுடைய
வாழ்க்கையிலே ஏதாவது ஒரு சோதனை ஏற்பட்டுவிட்டால்
உதவுகிற நோக்கத்தோடு தான் இந்தத் திட்டத்தை அன்று
புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார். இன்றைக்கு
முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அதனைத் தொடர்ந்து

சீரமைத்துக் கொண்டு வந்திருக்கிறார். எனவே, நான் வழக்குரைஞர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இதற்கு முந்தைய சட்டத்திலேயிருந்த குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கிறது. முந்தைய சட்டத்தில் வழக்குரைஞர் நல நிதி முத்திரை வில்லைகள் நீதிமன்றக் கட்டணத்தோடு ஸ்டாம்பு பீயோடு ஒரு வக்காலத்து நாமாவிற்கு ஒரு ரூபாய் தான் அன்றைக்கு அளித்து வந்தார்கள். அது இன்றைக்கு 2 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் முந்தைய திட்டத்தில் 30 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்குத் தான் வழக்கறிஞர்கள் பயன்படக்கூடிய வகை இருந்தது. இந்தப் புதிய முயற்சியின் காரணமாக 60 ஆயிரம் ரூபாய் வரையிலும் கொடுக்கலாம் என்று இதை நிறைவேற்ற பார் கவுன்சில் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-40

மாண்புமிகு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டம் என்பது அரசு செயல்படுத்துகின்ற திட்டம் அல்ல. உங்களுக்காக இருக்கிற, வழக்கறிஞர்களுக்காக ஒரு அமைப்பு இருக்கிறதே 'பார் கவுன்சில் ஆப் தமிழ்நாடு' அதனுடைய பொறுப்பில் இருக்கிறது. அதற்கு ஒரு டிரஸ்டு கமிட்டி இருக்கிறது. அதிலே அட்வகேட் ஜெனரல் இருக்கிறார். அதிலே கவர்ன்மெண்டு பிளீடர் இருக்கிறார். அதைப்போல உங்களைப் போன்ற வழக்கறிஞர்கள் சில பேர் உறுப்பினர்கள் என ஒரு குழு இந்த நிதியை பாதுகாத்து, சேகரித்து, எந்த எந்த வழக்கறிஞர்களுக்கு என்ன என்ன துன்பங்கள் வருகிறதோ அவர்களுக்கு உரிய நேரத்தில் கொடுக்கின்ற பொறுப்பு அவர்களிடத்திலே இருக்கிறது. இன்றைக்கு அரசினுடைய ஒரே ஒரு செயல் அதற்கு சட்ட வடிவம் கொடுப்பது. அதற்கு அதிகாரம் பெற்று தருவது எங்களுடைய பொறுப்பு. இன்றைக்கு இங்கே இருக்கிற மாமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று ஒரு ரூபாய்க்குப் பதிலாக 2 ரூபாய் ஸ்டாம்பு ஒட்டலாம், 30 ஆயிரம் ரூபாயை, 60 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சமாக நீங்கள் முடிவு எடுத்தால், முடிவு எடுக்க வேண்டியது நீங்கள். யார்? வழக்கறிஞர்கள். நீங்கள் கொடுக்கிற பணத்தை நீங்களாக சீரமைத்துக் கொள்ளவேண்டும்.

இன்றைய தினம் அந்த பார் கவுன்சிலிலே இருக்கிற பணத்தினுடைய அளவு பற்றி இங்கே விவரங்கள் இருக்கின்றன. அந்த விவரத்தின்படி ஏறத்தாழ அவர்களுடைய கையிருப்பில் 15 லட்ச ரூபாய் இன்றைக்கு இருக்கிறது. By way of Selling Advocates Welfare Fund Stamps— ஸ்டாம்பு விற்றதன் மூலமாக 8 லட்ச ரூபாயும்,— By way of enrolment fee for the above 3,340 members— அந்த 3,340 உறுப்பினர்கள் சேர்ந்தார்கள் அல்லவா, அவர்கள் அளித்தது ஏறத்தாழ 7 லட்ச ரூபாய் சேர்ந்து ஏறத்தாழ



15 லட்ச ரூபாய் இன்றைக்கு கையிருப்பில் வைத்து இருக்கிறார்கள். இந்த 3,340 வழக்கறிஞர்களே ஒரு 15 லட்ச ரூபாயை திரட்ட முடியும் என்றால் 25 ஆயிரம் வழக்கறிஞர்கள் மனதார, உளப் பூர்வமாக, இந்தத் திட்டதிற்கு ஆதரவு நல்குவார்களானால், கணிசமான அளவுக்கு நிச்சயமாக நிதி வரும். அப்படி வருகின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் ரூபாய் 30 ஆயிரமோ, 40 ஆயிரமோ, 60 ஆயிரமோ அல்ல தேவையான அளவுக்கு நீங்களே முடிவு எடுக்கலாம். ஆக இதனை மனதில் வைத்துக் கொண்டு தயவுசெய்து உறுப்பினர்களைச் சேர்க்கின்ற பணியில் இன்றைக்கு இந்த சட்டமன்றத்தினுடைய வாயிலாக அரசு உங்களுக்கு அதிகாரத்தைப் பெற்று தந்திருக்கிறது. ஒரு ரூபாய்க்கு பதிலாக 2 ரூபாய்; ஒவ்வொரு வக்காலத்திலும் ஒவ்வொரு வழக்கறிஞர்களும் நீதிமன்றத்திற்கு அது கோர்ட்டாக இருந்தாலும் சரி, டிரிபியூனலாக இருந்தாலும் சரி வேறு எந்த கோர்ட்டாக இருந்தாலும் வக்காலத்துப் போட்டால் 2 ரூபாய். அந்த 2 ரூபாய் பார் கவுன்சிலுக்குச் செல்கிறது. அந்த டிரஸ்டு போர்டு அதை கவனிக்கிறது. பாதிக்கப்பட்ட வழக்கறிஞர்களுக்கு நீங்கள் விரும்புகிறவர்களுக்கு முடிவு எடுத்து நல்கலாம். ஆக அந்தப் பணியைத் தான் இன்றைக்கு செய்ய வேண்டிய கடப்பாட்டில் இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இறுதியாக ஒரு கருத்து. வழக்கறிஞர்களுக்கு சம்மந்தம் என்ற காரணத்தாலே இன்றைக்கு வழக்கறிஞர்கள் 25 ஆயிரம் பேர் அதில் இருக்கிறார்கள் என்றால் அதில் உறுப்பினர் ஆவதிலே அவர்கள் சுணக்கம் காட்டுகிறார்கள். ஆனால் சில நேரங்களில் போராட்டங்கள் என்றால், கிளர்ச்சிகள் என்றால், இன்றைக்கு பத்திரிகைகளில் பார்க்கிறோம். அம்பாசமுத்திரத்திலே இருக்கிற வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம். ஆம்பூரில் இருக்கிற வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம், குடியாத்ததில் இருக்கிற வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் என்று ஒரு தொழிற்சங்க வாதியைப் போல, ஒரு தொழிற்சங்கம் போல இன்றைக்கு வழக்கறிஞர்களுடைய அந்த சங்கங்கள் ஈடுபடுவது உகந்தது அல்ல என்பதை ஒரு வழக்கறிஞர் என்ற வகையிலே அந்த மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் நீங்கள் உண்ணாவிரதம் இருப்பதினாலேயே பிரச்சினை தீராது, நீங்கள் அணுக வேண்டியது அரசாங்கத்தை; நீங்கள் அணுக வேண்டியது உயர்நீதிமன்றத்தை ; நீங்கள் அணுகவேண்டியது பார் கவுன்சில் ஆப் தமிழ்நாட்டை ; இந்த மூன்று அரங்கங்கள் தான் உங்களுக்கு நியாயத்தைப் பெற்றுத் தருமே தவிர, நீங்கள் சாதாரண ஒரு தொழிலாளிபோல, ஒரு விவசாயி போல, பொதுமக்கள் போல, கிளர்ச்சிகளிலே ஈடுபட்டு, உண்ணாவிரதத்திலே ஈடுபட்டு, சட்டம் ஒழுங்குப்

பிரச்சினையைக் கிளப்புவதனாலே பிரச்சினைகள் தீருமா என்றால், தீராது, ஏனென்றால் இந்தச் சட்ட வழக்கறிஞர் தொழில் என்பது, it is a noble profession.

பிற்பகல் 1-45

இன்னும் சொல்லப்போனால் அது ஒரு கண்ணியமான தொழில். அதற்கென வரையறுக்க அட்வகேட்ஸ் ஆக்ட் இருக்கிறது. Legal Practices Act இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் ஒரு லிட்டிகென்டுக்காக ஒரு கான்ட்ராக்சுவல் ஆப்ளிகேஷன். நீங்கள் ஒரு கட்சிக்காரனிடத்திலே பணம் வாங்குகிறபொழுது என்ன சொல்லுகிறீர்கள்? நான் உனக்காக வாதாடுகிறேன் என்று சொல்லிவிட்டு அந்த வழக்கு வருகின்றபொழுது, தெருவிலே உண்ணாவிரதம் இருந்தால் அது எப்படி நியாயமாகும்? கான்ட்ராக்சுவல் ஆப்ளிகேஷன். பணம் வாங்குகிறீர்கள். எதற்கு? வாதாடுவதற்கு. வாதாடுகிற நேரத்திலே இன்றைக்கு இந்தக் கட்சிக்காரனுக்காக உண்ணாவிரதம் இருக்கிறீர்களா என்றால் இல்லை. உங்களுக்காக இருக்கிறீர்கள். இது நாட்டிலே பரவி வருகிறது. நீங்கள் கேட்கலாம், அரசாங்கம் தலையிடக்கூடாதா என்று, அரசாங்கம் தலையிடுகிறது. ஆனால் எங்கள் கவனத்திற்கு எங்கே வருகிறது. நோட்டீஸ் வருகிறதே தவிர எங்களுக்கு எங்கே பெட்டிஷன் வருகிறது? பத்திரிகையிலே பார்க்கிறோம், வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் என்று. பிறகுதான், நாங்களாகக் கேட்கிறோம். இன்றைக்கு திருநெல்வேலியிலே உண்ணாவிரதம்: அம்பாசமுத்திரத்திலே உண்ணாவிரதம். செங்கோட்டையிலே உண்ணாவிரதம் அல்லது இந்த இந்த ஊர்களில் உண்ணாவிரதம் என்று இருக்கிறது. உண்ணாவிரதம் எதற்கு என்று கேட்டால், அங்கே நீதிபதிக்கும் வழக்கறிஞர்களுக்கும் மனத்தாங்கல் என்று சொல்லுகிறார்கள். நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும் மனத்தாங்கல் என்றால் அதை நீதிமன்றத்திலே இருக்கிற சீஃப் ஜஸ்டிஸ்னிடம் சொல்லி, அவர்களை மாற்ற முயல வேண்டுமே தவிர, அங்கே ஒரு தொழிற்சங்கம் போல ஒரு விவசாய சங்கம் போல அல்லது வேறு அமைப்புகள் போல,— தொழிலாளி அல்லது விவசாயிக்கு ஸ்டிரைக் செய்ய உரிமை உண்டு. அது அடிப்படை உரிமை — உண்ணாவிரதம் இருக்கிறீர்கள். இந்த அரசு ஒரு responsive Government போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு என்பது, Responsive Government. நீங்கள் சொன்ன பிரச்சினைகளில், எந்தப் பிரச்சினையை நாங்கள் கவனிக்காமல் விட்டோம்? எங்கள் கவனத்திற்கு வந்த பிறகு எந்த மாறுதல் செய்யாமல் இருந்தோம்? இன்னும் சொல்லப் போனால் 10 மாதங்களிலே எத்தனை (குறுக்கீடு) நான் பேசிய பிறகு தயவுசெய்து கடைசியிலே பேசுங்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் உண்டு. நானும் நிறைய சொல்ல இருக்கிறேன். எத்தனை நீதி மன்றங்கள், கடந்த மூன்று ஆண்டுகளாக, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இருந்த



நீதிமன்றங்களெல்லாம் இன்றைக்கு திறக்கப்பட்டு இருக்கிறதே: இன்றைக்கு ஹைகோர்ட்டினுடைய அனெக்ஸ் ரூ. 6 கோடியில் திறக்கப்பட்டு அதன் காரணமாக மதுரையிலே உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவே வர இருக்கிறதே, டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுகள் ஸ்ரீவில்லிப்புத்தூரில் வர இருக்கிறதே. காமராஜர் மாவட்டத்தினுடைய நீதி மன்றமாக, சிவகங்கையிலே வர இருக்கிறதே: தூத்துக்குடியிலே வர இருக்கிறதே, இவைகள் எல்லாம் யார் காலத்தில்? (மேசையைத் தட்டும் ஒலி) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலேயுள்ள திருப்பத்தூரிலே, Special court for sandalwoods', யார் காலத்திலே வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல இன்றைக்கு கோத்தகிரியில், நீலகிரி மலையிலே யார் காலத்தில் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இதோ, அக்கா, அமைதியாக ஆழ்ந்து இருக்கிறாரே அவரது தொகுதியில், நிலக்கோட்டையிலே, 10, 12 வருடங்களுக்குப் பிறகு ஒரு மகாமகத்திற்குப் பிறகு வந்ததே, யார் காலத்தில்? (மேசையை தட்டும் ஒலி) கொடைக்கானலிலே வந்ததே, யார் காலத்தில்? தேன்கனிக்கோட்டையிலே வர இருக்கிறதே; யார் காலத்தில்? இவைகளையெள்ளாம் எதற்காக நான் சொல்கிறேன் என்றால், இது ஒரு responsive Government போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நீதித் துறையை ஒரு சிறந்த, அழகிய, முன்மாதிரியான துறையாக, ஒரு ஜனநாயக நாட்டில் அதிலும் ஒரு வெல்ஃபேர் ஸ்டேட்டில், உணவு கொடுக்க வேண்டும்; உடை கொடுக்க வேண்டும் இருப்பிடம் கொடுக்க வேண்டும். These are the three fundamentals. அதைப்போலத்தான் நீதியும், அந்த நீதியைக் கொடுப்பதிலேதான் துரிதமாக இருக்கிறார்கள். விரைவாக இருக்கிறார்கள். இதையெல்லாம் எதற்காக வழக்கறிஞர் சகோதரர்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலமாகச் சொல்கின்றேன் என்றால். நாங்கள், We are responsive. நீங்கள் பிரச்சினைகளை எங்கள் இடத்தில் சொல்லுங்கள். அந்தப் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம். அதை விட்டுவிட்டு அறையிலே பேசவேண்டிய பிரச்சினைகளை நீங்கள் அம்பலத்திலே உண்ணாவிரதம் இருந்தால் அதனால் பிரச்சினை தள்ளித்தான் போவதற்கு வாய்ப்பு இருக்கிறதே தவிர பிரச்சினைகள் தீர வாய்ப்பு இருக்காது.

பிற்பகல் 1-50

எனவே, இன்றைக்கு வழக்கறிஞர்களுக்கு ஏறத்தாழ 25,000 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்விலே திருவிளக்கு ஏற்ற போற்றுதலுக்குரிய புரட்சித்தலைவி அவர்கள் இந்தச்சட்டத்திலே சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தைத் தெளிவாக நீங்களெல்லாம் உணர்வீர்கள். இந்தத் திருத்தத்தை ஆதரித்து, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, அந்த 25,000 வழக்கறிஞர்களுடைய குடும்பங்களுக்கு நீங்கள் திருவிளக்கை ஏற்ற உதவ வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: தலைவரவர்களே, ஒரேயொரு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ரொம்பப் பேசி விட்டீர்கள்; அமைச்சரும் நிறையப் பதில் சொல்லியிருக்கிறார்கள் மணி 1-50.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' க் கோருகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். தீர்மானம் நிறைவேறியது. ஏற்போரே அதிகம்

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள்.

(அ) வரி வழக்கு தனித் தீர்ப்புமன்றச் சட்ட முன்வடிவு, 1992. (ஆ. செ,)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்புமன்றச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1992) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) (தொடர்ச்சி).

(இ) வரி வழக்கு தனித் தீர்ப்புமன்றச் சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1992). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

---

27-4-1892ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கே. கந்தசாமி

திரு. கே. கந்தசாமி ; * *

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் தனி தீர்ப்பாயம்— தமிழகத்திலே விற்பனை வரிக்கு நாம் வரியை வாங்குகிறோம். அந்த வரியை வாங்கி வைத்துக் கொண்டு, வியாபாரிகள் க ்டுவதில்லை. பிறகு உச்ச நீதி மன்றத்திற்கு போகிறார்கள் : ்யர் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். அங்கேயெல்லாம் போவதால், வருடக் கணக்கிலே வழக்குகள் முடிவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி நீங்கள் பேசியது, அடுத்த சட்டமுன்வடிவில் வருகிறது. அதிலேதான் நீங்கள் பேசயிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; ஆகையால், தனி தீர்ப்பாயம்— ஒரு மன்றம் அமைக்கலாமா? அதை அமைப்பதற்கு அனுமதி கேட்கிறோம். அதற்கு அனுமதி தருவதா இல்லையா என்பதைப் பற்றி நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கே. கந்தசாமி, இந்த சட்டமுன்வடிவின் மீது பேசுகிறீர்களா? அடுத்த சட்டமுன்வடிவா?

திரு. கே. கந்தசாமி : அடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையில் அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அதிகமாகப் பேசவில்லை என்றாலும்,





இதை நீங்கள் வரவேற்பீர்கள் என்பதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதிலே நானும் பேசாமல் நிறைவேற்றலாம் என்று எண்ணினாலும்கூட, இதை இப்போது நாம் ஏன் எடுத்துக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், இதைப் போல தமிழ்நாடு நிலச் சீர்திருத்த சிறப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் இருக்கிறது : Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal அது ஏன் வந்தது என்றால், நில சம்பந்தமான வழக்குகள் எல்லாம் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று பல ஆண்டுகள் அங்கே நின்று விடுகின்றன. உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற வழக்குகளிலே, இன்றைக்கு 1982-ஆம் ஆண்டு வழக்குதான், வருகிறது. இப்படி ஒரு Tamil Nadu Land Reforms Special Appllcate Tribunal கொண்டு வந்ததினால்— இப்போது உங்களுக்கு ஒன்றை உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் 10— 12— 1991-இல் அன்றைக்கு தலைவராக நீதிபதி திரு. ராமலிங்கம் வந்தபிறகு, இந்த 4 மாதங்களில் மட்டுமே முடிவு செய்யப்பட்ட வழக்குகள் 275. பல்வகை மனுக்கள் 225. விரைவிலே முடிக்க இருப்பவை 100. இன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் 1982-இல் உள்ள வழக்குகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப் போலத்தான் வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும். என்பதற்காக வருகிற போது— நான் நீண்ட நேரம் சொல்லா விட்டலும், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்,— உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள், விற்பனை வரியைப்பற்றி—11,171, அரசுக்கு வரவேண்டிய வரி அதிலே 248 கோடி ரூபாய். உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் 173. அதற்கு வர வேண்டிய பணம் 29 கோடி ரூபாய். அதேபோல, இன்றைக்கு லாட்டரி சீட்டிலே வரவேண்டியது 150 கோடி ரூபாய். இதைச் சொல்வதற்குக் காரணம், வியாபாரிகள் வியாபாரம் செய்கிறார்கள்; வரி வசூலிக்கிறார்கள். அந்த வசூலிக்கிற பணம், அரசுக்குச் சொந்தமானது; அரசுக்குச் சொந்தமானப் பணத்தை வசூல் செய்து, அதை வைத்துக் கொண்டு அதற்குப் பிறகு ஏன் அவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்கிறார்கள் என்றால், நீதிமன்றம் சென்றால் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்துத்தான் தீர்ப்பு வரும். அதற்குள் 4 கோடி, 5 கோடி வைத்துக் கொண்டிருந்தால், அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு 'ரொட்டேஷன்' செய்கிறார்கள். இதை நீங்கள் கவனிக்க வேண்டும். அரசினுடைய பணத்தை வைத்துக் கொண்டு, அதை அவர்கள் முறைகேடாக வைத்துக் கொண்டு, அவ்வாறு செய்வதனால் அரசுக்கு வர வேண்டிய பணம் வராது இருப்பதனால்தான் இதை உடனடியாக முடித்து, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயையும், வியாபாரிகளிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் வசூல் செய்ய வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதைத் தெரிவித்து இதை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 25 முடிய மற்றும் இணைப்பு பட்டியலில் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 25 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவுவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்க்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மான பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.



பிற்பகல் 2-00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 35/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/1992). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 36/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி :

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1934 ஆம் ஆண்டு., அன்றைய தினம் சென்னை இராஜதானியின் முதலமைச்சராக இருந்த மூதறிஞர்

*27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

[திரு. கே. கந்தசாமி] [1992 ஏப்ரல் 28

இராஜாஜி அவர்கள் முதன் முதலாக மதுவிலக்கை அமல்படுத்திய போது விற்பனை வரியை நாட்டுக்கு அறிமுகம் செய்தார். மதுவிலக்கினால் ஏற்பட்ட வரி இழப்பை ஈடு செய்கிற இந்த விற்பனை வரியை, சரியாகப் பெறவேண்டியர்களிடத்தில் பெற்றால் தான் ஏழைகளின் வாழ்வு உயர நலத் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்த முடியும். விற்பனை வரியைச் செலுத்தும் கெபாசிடி இருக்கின்றவர்கள்கூட வரி மோசடி செய்வது பரவலாக உள்ளது. வரி செலுத்தாமல் மோசடி செய்கின்றவர்கள் மீது கடுமையான வழக்குகள் போட்டு தனி நீதிமன்றங்களில் விசாரிக்க வேண்டும். ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட உணவு விடுதிகளுக்கு ஆடம்பர விற்பனை வரி விதிப்பதில் தவறு எதுவும் இல்லை. ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட உணவு விடுதிகளுக்கும், நட்சத்திர ஓட்டல்களுக்கும் வசதி படைத்தவர்கள் செல்லுகிறார்கள். வசதி படைத்தவர்களுக்கு வரி விதிப்பது நியாயமானதுதான். ஆனால், அதே சமயம் சாதாரண ஏழை மக்களும், நடுத்தர மக்களும் சாப்பிடுகின்ற உணவு விடுதிகளில் சாப்பிடுகின்றவர்கள் மீது விற்பனை வரி விதிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். நடுத்தர ஓட்டல்களில் விற்பனை வரி விதிக்கின்றபோது பொதுமக்களிடமிருந்து வாங்கிய வரியைச் சரியாக அரசாங்கத்திற்குச் செலுத்துவதற்கான அளவுகோல் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுமக்களிடமிருந்து வாங்கப்படும் வரியை ஓட்டல் சொந்தக்காரர்கள் அரசாங்கத்திடம் செலுத்தாமல் தாங்களே வைத்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. சாப்பிட்டவர்கள் செலுத்திய வரியை பில் வாரியாகக் கணக்கிட்டு அதனை வாங்குகின்ற வாய்ப்பு நடைமுறை ரீதியாக விற்பனை வரி அதிகாரிகளுக்கு உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்குப் பதிலாக பஸ்களில் சீட்டுக்கு இவ்வளவு வரி என்று விதிப்பதைப் போலவும், சினிமா தியேட்டர்களில் 'கம்பவுண்டிங் டாக்ஸ்' விதிப்பதைப் போலவும் ஓட்டல்களுக்கு இவ்வளவு வரி விதிக்கலாம் என்ற முறையில் வரி விதிக்க அரசு முன்வரவேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, இந்த சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு, இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1992). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1992)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவின் கீழ் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக, வேறு மாநிலங்களில் ஆவணங்களைப் பதிந்து வைப்பவர்கள் இங்கே நம்முடைய மாகாணத்தில் உள்ள முத்திரைத் தீர்வை அடிப்படையில் அவைகளை முறைப்படுத்தி அவைகளுக்கு முத்திரைத் தீர்வை அளிப்பதற்காக இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அதுமட்டுமல்லாமல் வெளி மாநிலங்களுக்குச் சென்று பதிவதைத் தடை செய்வதற்கும்தான் இது வந்திருக்கிறது. அந்த வகையில் வந்திருக்கின்ற இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

* 27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



அதே சமயத்தில் இவ்வாறு பத்திரங்களைப் பதிவு செய்வதற்காக வெளி மாநிலங்களுக்கு ஏன் நம்மவர்கள் செல்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். நம்முடைய மாநிலத்தில் முத்திரைத் தீர்வை அதிகமாக இருப்பதும், வேறு மாநிலங்களில் உள்ள தீர்வை குறைவாக இருப்பதும் ஒரு முக்கியமான காரணமாகும். அந்த மாநிலங்களில் இருப்பதைப்போல் இருந்தால் இங்கே இருந்து சென்று அங்கே பத்திரங்களைப் பதிவு செய்வது என்பது குறைவாகக் காணப்படும். அது மட்டுமல்லாமல் இங்கே இவ்வாறு முத்திரைத் தீர்வை அதிகமாக இருக்கின்ற நிலைமையில் பலர் ரெஜிஸ்ட்ரார் ஆஃபீஸ்-க்குச் சென்று பல ஆவணங்களைப் பதிவு செய்வதே கிடையாது. இப்படி பதிவு ஆகாததால் நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய முறையான வருமானம் வராமலே இருக்கிறது. பல கிராமங்களை எடுத்துக் கொண்டால் பல்வேறு பகுதியில் உள்ள மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் இதற்கு ஒரு நல்ல முடிவெடுத்து குறைவான அளவுக்கு அந்த முத்திரைத் தீர்வை என்பதை வசூலிக்க வேண்டும். வேறு மாநிலங்களில் இருப்பதைப் போல் இல்லை என்றாலும் கூட கொஞ்சமாவது குறைத்து அதனை முறைப்படுத்துவார்களேயானால் இங்கேயுள்ள வருமானம் கூடும், இங்கே உள்ள மக்கள் முறையாகச் சென்று தங்களுடைய ஆவணங்களை, நிலங்களைப் பதிவு செய்வதற்கும் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு இங்கே பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி:

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரை சட்டத் திருத்த மசோதா மீது பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாகப் பத்திரங்களின் விலை ஆண்டுதோறும் கூடி வருகிறது. அதனால் நிலம் வாங்குகிற விவசாயிகள் மிகவும் சிரமப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பத்திரங்களைப் பதிவு செய்வதில் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் தேவையான ஊழியர்கள் இல்லாததுதான்.

[திரு வே. தம்புசாமி] [1992 ஏப்ரல் 28

அதனால்தான் காலதாமதம் ஆகிறது. ஆகவே அதைப் பற்றிப் பரிசீலித்து எதிர்காலத்தில் அதிகமான ஊழியர்களை அங்கே நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நிலத்தினுடைய தரம் என்பதைப் பொறுத்த வரையில் எந்தக் கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் இரண்டு வகை, மூன்று வகை இருக்கிறது. அந்தத் தரத்தின் அடிப் படையில்தான் கிஸ்தி அதாவது நிலவரி வசூலிக்கப்படுகிறது. ஆனால் அரசைப் பொறுத்த வரையில் அந்த கிரய மதிப்பீடு என்பது ஒரே சீராக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 2 ரூபாய் ஒன்றரை ரூபாய் அல்லது மூன்று ரூபாய் கிஸ்தி கட்டக்கூடிய நிலத்திற்கும், 10 ரூபாய், 15 ரூபாய் கிஸ்தி கட்டக்கூடிய நிலத்திற்குடம் தர வித்தியாசம் இருந்தாலும் கூட அவற்றுக்கான கிரய மதிப்பீட்டை அரசு அறிவிக்கிற போது ஒரே சீராக அறிவித்திருக்கிறது. இதனால் உயர்ந்த தரத்திற்குரிய நிலத்திற்குரிய அதே தொகையை குறைந்த தரம் உள்ள நிலத்திற்கும் நிலத்தை விலைக்கு வாங்கக்கூடிய விவசாயிகள் கட்ட வேண்டி இருக்கிறது. அதாவது அதிகமான தொகை விவசாயிகள் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படு கிறது. அப்படி அவர்கள் கட்டாத நிலை ஏற்படுகிறபோது அவர்கள் தனி அதிகாரி மூலம் விசாரிக்கப்படுவதற்காக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு அதன் காரணமாக நீண்ட காலம் ஆகி பல நாட்கள் அந்த விவசாயிகள் அலைய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே நிலத்தின் தர வாரியாக கிரய மதிப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பத்திரங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு என்பது ஏற்படுகிறது. தட்டுப்பாடு இருக்கிறதோ இல்லையோ விவசாயிகள் அதனைப் பெறுவதற்கே சிரமமாக இருக்கிறது. அதனால் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது. அதைப் போக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதிக முத்திரை தாள்கள் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பதுக்கி வைத்து விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் முழுமைக்கும் மையமாக இருக்கக்கூடிய கீவளூரில் ஒரு பதவி அலுவலகம் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு பேச வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.



1992 ஏப்ரல் 28]

பிற்பகல் 2-10

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் :

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசுப்பு அவர்கள் பேசுகிறபோது, இதை வரவேற்று பேசிய அதே நேரத்திலே, மற்ற மாநிலங்களில் இதைவிட குறைவாக பத்திரம் பண்ணுவதற்கு கட்டணம் இருப்பதனால் தான் செல்கின்றார்கள் என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் வழி காட்டியில்லை. எப்படி எப்படி, எந்த எந்த இடத்திற்கு எவ்வளவு தீர்வை ? எந்த எந்த இடத்திலேயுள்ள நிலத்திற்கு என்ன கிரையம் என்பது இல்லை. ஆகவே முன்பெல்லாம் செல்லவில்லை, இப்போதுதான் செல்கிறார்கள். அதுவும் பெரும்பாலும் இந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் அங்கேயிருந்து வந்தத னாலேயே அங்கே செல்கிறார்கள். அப்படி செல்வத னாலே நமக்கு வருகிற நஷ்டத்தை குறைப்பதற்குத்தான் இந்த சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறது. மற்ற தைப் பற்றியும், அருகாமையிலே இருக்கின்ற மற்ற மாநிலத் தைப் பற்றியும், மற்ற மாநிலங்களைப் பொறுத்து எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்வதற்கு அரசு எண்ணுகிறது. அதை ஆராய்ந்து நம்முடைய மக்க ளுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் கூறுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். ஓது விலை அதிகரிப்பு என்று. ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது என்று சொன்னார்கள். ஆண்டுக்கு ஆண்டு பத்திர செலவு அதிகரிப் பது இல்லை. ஆண்டுக்காண்டு விலைவாசி ஏறிக்கொண்டே போகிறபோது, நிலத்தின் விலை ஏறுகிற போது, கட்டுமான விலை ஏறுகிறபோது, நகரங்களில் நிலங்கள் விலை ஏறுகிறபோது அந்த விலையின் மீதுதான் நாம் பத்திர விலையையும் வைக் கிறோமே தவிர பத்திர விலையை அதிகப்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் பதிவிலே காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். காலதாமதம் ஆகாமல் இரண்டு தினங் களுக்குள் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக் கிறது. குறிப்பாக இங்கே மாலநிலத்தில் எங்காவது எந்த பகுதியிலேயாவது அலுவலகத்திலேயாவது காலதாமதம் ஆகிறது என்று தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், எங்களுக்கு முத்திரைத் தாள் கிடைக்க வில்லை பதுக்கி வைக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். முத்திரை தாள் தேவைக்கு அதிகமாக தமிழ்நாடு பூராவும் இருக்கிறது. அந்த முத்திரை தாள் அதிகமாக உற்பத்தி ஆகிறது மட்டுமல்லாமல், அது எங்கேயோ பதுக்கி வைத் திருக்கிறார்கள் என்று போன சட்ட பேரவையிலே நீங்கள் சொன்னதின் பேரில் 5,000 பேர்கள், 4,000 பேர்கள் புதிதாக முத்திரைத் தாள் விற்பதற்கு போட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று வருகிறபோது, எங்கெங்கோ வழக்குகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். வழக்குகள் இருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் என்று கூறுகிறபோது அவர்கள் முத்திரைத் தாள் வாங்கி பதிவு செய்கிற போது பதிவு அலுவலகத்திலே ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டு அந்தத் தொகைக்கு முத்திரைத் தாள் வாங்கவில்லை என்பதற்காக அந்த விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு அதற்கு ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு ஓரிடத்திலே இருந்து கொண்டு அந்த விவசாயிகளை அழைக்கிறார்கள். அது தொடர்ந்து ஒரு மாதம், 2 மாதம் அலைய வேண்டிய நிலை இருக்கிறது. அதைத் தான் தவிர்க்க வேண்டும் என்று நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்த விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கேட்டேன். அப்படி அல்ல. எந்த எந்த நிலம், அதற்கு என்ன என்ற வழிகாட்டி இருக்கின்றது. ஆனால் அந்த வழிகாட்டியிலே இந்த நிலத்திற்கு இவ்வளவுதான் பத்திரம் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு குறைவாக யாராவது பத்திரம் வாங்கி விட்டால் குறைவாக பத்திரம் வாங்குவதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற பதிவாளர்கள் இவ்வளவுக்கு பத்திரம் வாங்க வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாது வாங்குபவரோ விற்பவரோ குறைத்து வாங்கலாம். குறைத்து வாங்கினால் அதையும் வாங்குபவரே அதைப் பதிவு செய்வார்கள், ரிஜிஸ்டர் செய்வார்கள். செய்துவிட்டு அதை மேற்பார்வை பார்ப்பதற்காக டெபுடி கலெக்டர் ரேங்கில் ஒருவரை போட்டிருக்கிறோம். அவர்களிடத்திலே இந்த பத்திரத்தை அனுப்பிவிடுகிறார்கள். அனுப்பிய பிறகு அதை அந்த ஆர்.டி.ஓ. லெவலில் போட்டிருக்கிற



அதிகாரி இந்த இடத்திற்கு வந்து பார்த்து, ஸ்தலத்திற்கே நேரடியாக வந்து பார்த்து அருகிலே உள்ள நிலங்களை எல்லாம் விற்கப் கேட்டு அறிந்து, அவைகள் எல்லாம் என்ன விலைக்கு விற்கப் பட்டிருக்கிறது என்று பார்த்து அதற்குப் பிறகு முடிவு செய்வார்கள். அப்படி முடிவு செய்வதில் காலதாமதம் ஆகிறது என்றால் அந்த கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். ஆயிரம், இரண்டாயிரம் பேறு இருக்கிற இடங்களில் எங்காவது ஒரு தவறு இருக்கத்தான் செய்யும். தவறே நடக்கவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் தவறு எங்கேயாவது இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அந்தத் தவறை நிவர்த்தி செய்வதற்கு, நீக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லி, என் உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்.)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்.)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

இங்கே கல்வித்துறை சம்பந்தப்பட்ட 6 சட்ட முன்வடிவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கருத்துக்களைச் சொல்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தமாகச் சொல்லி விட்டால் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்துக்களைக் கூறுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமுன்வடிவு 24, 25, 26, 27, 28, 29 ஆகியவற்றின் மீது தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையின் போது எல்லா பில்களுக்குமான கருத்துக்களுக்கும் சேர்த்து தன்னுடைய பதிலுரையை வழங்குவார். அதன் பின்னர், ஒவ்வொரு சட்ட முன்வடிவும் தனித்தனியே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்கு பிரச்சினையை கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறேன். மைக் வேலை செய்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு சிகப்பு விளக்கு எரிய மறுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, எங்களுக்கு எல்லாம் கேட்கிறது. (சிரிப்பு.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக இந்த ஒலிப் பெருக்கியை பயன்படுத்துகிற காரணமாக இந்த ஒலிப் பெருக்கி வேலை செய்ய மறுக்கிறது. (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடிக்கடி நான் உங்களை அழைக்காமலே கூட பட்டனை அழுத்திக் கொண்டிருக்கிற காரணத்தாலே வருகிற தவறு இது. (சிரிப்பு.)

* 24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1992 ஏப்ரல் 2٤

பிற்பகல் 2—20

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உத்தரவு போட்டவுடன் சிவப்பு விளக்கு எரிய ஆரம்பித்துவிட்டது என்று கூறி, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 6 சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் 6 சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக திருத்தச் சட்டமுன்வடிவு தேவையற்ற ஒன்று என்று சொல்லலாம். காரணம், '' மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் '' என்று திருவள்ளுவர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். பொதுவாக சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே சிலர் சிண்டிகேட் உறுப்பினர்களாகவும், செனட் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர் ராஜினாமா செய்ய மறுத்ததன் விளைவாக இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை நான் மெத்த வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த 2 உறுப்பினர்கள் நியாயமான அடிப்படையிலே, நீதியின் அடிப்படையிலே என்று சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்களோ அன்றே அவர்கள் ராஜினாமா செய்திருந்தால் இதுபோன்ற சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியம்கூட இருந்திருக்காது. மானமிழந்த சில பேர் இருக்கக்கூடிய காரணத்தால் இது போன்ற சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவது மிகவும் அவசியமாகிறது என்பதை வலியுறுத்தும் முகத்தான் கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள சட்டத் திருத்தங்களை நிச்சயமாக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் வரவேற்று, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கே. செல்வராஜ்.

<u>திரு. கே. செல்வராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தும் சட்டமுன்வடிவை வரவேற்று எனது ஒரு சில கருத்துக்களைக் கூறலாமென்று கருதுகிறேன். அத்தியாயம் 7-ல், '' சிறுபான்மைப் பிரிவினரின் கல்லூரி ஒவ்வொன்றின் நிருவாகக் குழுவும், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் ஏற்பளிப்புடன், பல்கலைக் கழகத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள தகுதிப்பாடுகளைப் பெற்றிருக்கிறவர்களை மட்டுமே ஆசிரியர்களாக நியமித்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய நியமனமானது, ஒப்புதலளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்குள் அமைந்திருத்தல் வேண்டும் ''. ஆனால், ஒருசில



1992 ஏப்ரல் 28] [திரு. கே. செல்வராஜ்]

கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்
கிறார்கள். அந்தக் காலக்கட்டத்தில் குறைந்த சம்பளமே வழங்
குகிறார்கள். அந்த ஒப்பந்தக் காலம் முடியும்போது அவர்களை
வேலையில் இருந்து நிறுத்தி விடுகிறார்கள். இப்படியே
தொடர்ந்து கல்லூரிகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.
காலி இடம் இருந்தும் ஆசிரியர்கள் நிரப்பப்படாமல் ஒப்பந்தக்
கால ஆசிரியர்கள் நியமிப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை
எடுக்கச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இரண்டாவதாக, அதே பிரிவில், எஃப்-ல், '' அரசிட
மிருந்து மானியம் பெற்று வருகின்ற சிறுபான்மைப் பிரிவினரின்
கல்லூரி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக் கூடிய கட்டணங்
களை மட்டுமே மாணவர்களிடமிருந்து வசூலித்தல் வேண்டும்''
என்று இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, தனியார் கல்
லூரிகள் இன்று நாட்டில் வியாபார ரீதியாக இயங்குவதைத்
தடுக்கவும், நன்கொடை என்ற பெயரில் பணத்தை வாங்கிக்
கொண்டு கல்லூரியில் இடம் கொடுப்பதன் மூலம் இன்று மாண
வர்கள் தரம் குறைந்து வருகிறது. மேற்படிப்புக்குச் செல்லும்
போது இப்படிப்பட்ட மாணவர்கள் கல்வித் தரம் இல்லாது,
தேர்வில் தேர்ச்சி பெறுவதில்லை. ஆதலால் அரசின் உதவிகள்,
மானியங்கள் பெறும் தனியார் கல்லூரிகள் நன்கொடை வாங்கு
வதை அரசு தடுக்கச் சட்டத்தின் வழிவகை செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, '' அரசமைப்பின் 30(1) எனும் உறுப்பில்
பொறுப்புறுதியளிக்கப்பட்டபடி (உத்தரவாதமளிக்கப்பட்டபடி)
சிறுபான்மைப் பிரிவினரின் கல்லூரிகளை நிறுவுவதற்கும் நிரு
வகித்து வருவதற்குமாக வழங்கப்பட்டுள்ள உரிமையினைச் சீர்
கேடான முறையில் நிருவகித்து வருவதற்கு வழங்கப்பட்டுள்ள
ஊர் உரிமையாகப் பொருள் கொள்ளுதல கூடாது என்று
சென்னை உயர்நீதிமன்றமும் உச்ச நிதிமன்றமும் கருத்துத்
தெரிவித்துள்ளன. கல்வியின் மேன்மை நிலையையும், சிறுபான்
மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களை நிருவகிப்பதில் திறப்
பாட்டையும் எய்துவதற்கு விழைகின்ற ஒழுங்கு முறைப்படுத்தும்
வகைமுறைகளைச் செய்வதென்பது மாநிலச் சட்டமன்றத்தின்
சட்டமியற்று தகுதிக்குள் அமைந்த ஒன்றே என்று உச்சநீதி
மன்றமானது, அனைத்து பீகார் கிறித்துவப் பள்ளிகள் சங்
கத்திற்கும், பீகார் மாநில அரசுக்குமிடையே எழுந்த வழக்கில்
(ஏ.ஐ.ஆர். 1988 எஸ்.சி. 305) தீர்ப்புரை வழங்கியுள்ளது.
மேலும், நேர்மை நெறிக்கோட்பாட்டின்படியே பார்த்தாலும்,
முறையான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசி
ரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பிற்கு வகை செய்வதற்காகவும்
வேண்டி, தனியார் கல்லூரிகள் அனைத்தையும் ஒரே மாதிரியாக
நடத்துவதென்பது தேவையானதாக உள்ளது. எனவே, இது

தொடர்பாக, தக்க ஒழுங்குமுறைப்படுகின்ற வகை முறைகளைச் செய்ய வேண்டியது தேவையானதாகியுள்ளது'' என்று இருக்கிறது. தனியார் கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அரசு அனுமதி வழங்கும்போது, அவர்கள் கல்லூரிக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா? போதிய கட்டிட வசதிகள், விஞ்ஞானக் கூடங்கள், சோதனைக் கூடங்கள், பயிற்சிக் கூடங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் உள்ளனவா, அவைகளைச் செய்து கொடுத்துள்ளார்களா என்பதைக் கண்டறிய கல்வித்துறையைச் சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, நேரடியாக அவற்றை விசாரணை செய்து இந்த வசதிகளை முறையாக செய்து கொடுக்காத கல்லூரிகளைத் தடை செய்ய அரசு சட்டம் கொண்டுவர உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

பிற்பகல் 2–25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா.

DR. BEATRIX D'SOUZA : Hon'ble Speaker Sir, the proposed Bills to amend the Tamil Nadu Private Colleges Act of 1976 and the Tamil Nadu Recognized Private Schools Act of 1973 were inevitable in the face of recent violation of natural justice.

While welcoming the main provisions of the Bill, I would like to comment on the Government's policy of not paying grants to new schools, colleges and new courses of study started by minority groups. Even taking into consideration the financial constraints of the Government and its avowed commitment to the literacy programme and the problem of drop-outs, a permanent denial of grants is a bit harsh. The Government may consider giving grants to minority institutions that start drop-out programmes, give technical training or introduce job-oriented courses. It must be remembered that, in minority institutions, less than 50 per cent belong to the minority group. Especially in the districts, the schools cater to the poor and under- privileged. The Government, certainly, is reluctant to commit itself to funding minority schools, either religious or linguistic, that spring up like mushrooms overnight. The Government can be selective and, considering the high standards maintained by the minority institutions and the services rendered by them to education over two hundred years, evolve certain norms for giving grants. Government funds and grants restricted to education provided by the Government in its own colleges and schools appears discriminatory in nature.



The compulsory constitution of a Managing Committee for every minority institution is welcome. Anglo-Indian schools, some of them over 150 years old, have their own Constitution and their own Boards. I recommend that the Government call for and study the Constitutions of these schools. In some schools, there are no longer Anglo-Indians on the Board ; nor do these schools follow the rules that state that the post of Headmaster or Headmistress in a non- religious institution should go to a qualified Anglo-Indian, if available.

Regarding appointment of qualified teachers, in many Nursery Schools up to Standard V, the Anglo-Indian teachers, who were recruited almost 20 years ago, are known as pupil teachers. They have no special Montessori training. Their long experience is invaluable and they are for the most part, excellent teachers. The rule regarding qualification may apply to fresh recruits. It will be tragic if teachers who have served for 15 years or more, are thrown out of jobs. A fresh B.A., B.T., may not necessarily make a better teacher. The Government may provide in-service training for untrained teachers.

It is fact that the schools get their income mainly from fees ; but the children are taxed to pay for everything from new toilets to teachers retirement benefit. The Anglo-Indian children, a minority in their own schools, should be exempted from paying any fees , except Special fees as the tuition fee is paid by the Government May I remind the Hon Minister for Education that the grants paid to the Anglo-Indian schools for the Anglo-Indian children remain at the 1982–83 fee structure ? I request that it may be up-dated in the new academic year. As I said, it is unfair to make the Anglo-Indian children to contribute towards building and maintenance funds in schools built by them or for them

Regarding admissions, all Anglo-Indian children who apply should be admitted into Anglo-Indian Schools in Standard I ; and, in Standard V or higher classes, based on the promotions given by the previous schools. Some School-Heads say that they do not want to discriminate between Anglo-Indian and non--Anglo-Indian children in regard to admission procedure.

பிற்பகல் 2-30 p.m.

A distinction should be made. Discrimination means 'unfair divantage' There is no unfair advantage in Anglo-Indian children being admitted into Anglo-Indian Schools. Anglo-Indian children have a right of admission. If the proposed Act has to be effective and respected, it has to be thorough in its advanced objectives of regulating

the proper functioning of the Institution. In one of the Hill Stations in the Anglo-Indian Schools the number of students of Anglo-Indian Community has been drastrically reduced and the children are admitted from Gulf Countries and even from the Tea Estates Kerala.

It is a sorry reflection on the present state of affairs. But it is true that a Minority Community are a minority in their own Institutions Catholic Colleges or in the Anglo-Indian Schools. There you will find only less than 50 per cent are Anglo-Indians- Our birth-right has been sold to the highest bidder and we are dispossessed in our Institutions

In conclusion, I wish to state that the Minority Institutions should be made accountable not only to the Government, but above all be accountable to the Minority Community—religious, linguistic or both, in whose minority rights they run their Institutions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு வி.கே. லட்சுமணன்

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மறைந்த அமரர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயும் கல்வி அமைச்சராக இருந்தார்கள். அவர் கல்வி அமைச்சராக இருந்தபோதுதான் தமிழகத்திலே புதியதாக நிறைய பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன; வேலை வாய்ப்புக் கல்வி முதன் முறையாக கிராமங்களிலே சொல்லி கொடுக்கப்பட்டது. அதே போல கிராமங்களுக்கு அறிவியல் கல்வியை, ஹையர் செகண்டரி ஸ்கூல் மூலமாக கொண்டு சென்ற பெருமை இப்போதுள்ள மாண்புமிகு கல்வி அமைச்சருக்குத்தான் உண்டு என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே தனியார் துறை கல்விக்கு ஆற்றியிருக்கிற மகத்தான பணியை யாரும் மறந்துவிட முடியாது, மறுத்துவிட முடியாது. தமிழ்நாட்டில் இருக்கின்ற 224 கலைக் கல்லூரிகளில் 179 கலைக் கல்லூரிகள், அதாவது 76 சதவீதம் தனியார் பொறுப்பிலேதான் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதே போல பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் 39 பொறியியல் கல்லூரிகளில் 33 பொறியியல் கல்லூரிகள், அதாவது 84.6 சதவீதம் தனியார் வசம்தான் இருக்கின்றன என்பதையும், பாலிடெக்னிக்குகளில் 132-ல் 108 பாலிடெக்னிக்குகள், அதாவது 82 சதவீதம் தனியார் கையில்தான் இருக்கிறது என்பதையும் நாம் இங்கே மறந்துவிட முடியாது. ஆக, தனியார் துறையானது கல்விப் பணிக்காக தமிழ்நாட்டிலே மிகச் சிறந்த சேவை செய்து வருகிறது. இப் படிப்பட்ட சேவை செய்து வருகிற தனியார் துறைக்கு பல்-





கலைக் கழகங்களில் ஆட்சிமன்றக் குழுவிலே உரிய இடம் பெற வில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டிலே 22 பேர் கொண்ட அந்த குழுவிலே ஒருவர் கூட தனியார் நிர் வாகத்தில் இருப்பவர்கள் இல்லை. அதே போல பாரதியார் பல்கலைக் கழகத்திலே 145 பேர் கொண்ட செனட்டிலே ஒரே ஒருவர் மட்டும்தான் தனியார் நிறுவாகத்தினுடைய பிரதி நிதியாக இருக்கிறார். 21 பேர் கொண்ட சிண்டிகேட்டிலே ஒருவர் கூட தனியாருடைய பிரதிநிதியாக இல்லை. எனவே அரசு இந்த அமைப்பை மாற்றி தனியார் துறையினர் கல்விக்காக பெரும்பணி ஆற்றி வருவதால் அவர்களுக்கும் ஆட்சி மன்றக் குழுவிலேயும், ஆட்சிக் குழுவிலேயும் உரிய இடத்தை கொடுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

பிற்பகல் 2-35

இன்றைக்கு தனியார் கல்வியை முறைப்படுத்தும் சட்டமானது மிகப் பெரிய அளவிலே மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. இதிலே முதன்மை சட்டத்தினுடைய தற்போதுள்ள 10வது பிரிவின் உட்பிரிவாக ஒன்றுக்குப் பதிலாக அதாவது மானியம் என்ற தலைப்பிலே வகுத்து விளிக்கப்படக்கூடிய விதிகளுக்கு உட்பட்டு, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் முறைப்படுத்தும் திருத்த சட்டத்தின் தொடக்க தேதியில் மானியம் பற்றி வருகின்ற சிறுபான்மை பிரிவினர் கல்லூரியாக இல்லாத தனியார் கல்லூரிக்கு வகுத்தளிக்கக் கூடிய வீதத்திலும் வகுத்தளித்துப் பெறக்கூடிய நோக்கங்களுக்காகவும் அரசு தொ டர்ந்து மானியம் வழங்கி வரலாம் என்று சொல்லப்பட்டு இருக் கிறது. இதைப் படித்துப் பார்க்கின்றபோது தனியார் சிறுபான்மை கல்லூரிக்கு மானியம் வழங்கப்படமாட்டோம் என்று சொல்வது போன்ற ஒரு கருத்தை அது அளித்துக்கொண்டு இருக் கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, தனியார் கல்லூரிக்குகூட வழங்கி வரலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறதேயொழிய வழங்கப்படும் என்ற உத்தர வாதத்தோடு இங்கே சொல்லப்படவில்லை. "May Continue to Pay" என்று சொல்லப்படுகிறதேயொழிய, "will be Paid" என்று உறுதியாக சொல்லப்பட்டதாக இங்கே எடுத்துக் கொள்ள முடியாது. அதே சமயத்திலே அத்தியாயம் 7 (எ) பிரிவின் கீழே 41 (பி)—இதிலே மானியம் வழங்குவது என்ற தலைப்பின் கீழே சிறுபான்மை பிரிவினரின் கல்லூரிக்கு மானியம் வழங்குதல் என்ற தலைப்பிலே இறுதியாக வகுத்தளிக்கப்படக்கூடிய வீதத்திலும், வகுத்தளிக்கப்படக்கூடிய நோக்கங்களுக்காகவும் மானியத்தை அரசு தொடர்ந்து வழங்கி வரலாம் என்று சொல்லப்படுகிறது. ஆக, ஒரு இடத்திலே சிறு

பான்மை கல்லூரிகளுக்கு மானியம் வழங்க முடியாது என்றும். ஒரு இடத்திலே வழங்கலாம் என்றும் சொல்லப்படுவதுபோல அந்தக் கருத்து இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே கூட சிறுபான்மை கல்லூரிக்கு வழங்கி வரலாம் என்று தான் சொல்லி வருகிறோமேயொழிய, கண்டிப்பாக வழங்கப்படும் என்று ஒரு உறுதியை இங்கே தெரிவிக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே சிறுபான்மை கல்லூரி யானாலும் சரி, தனியார் கல்லூரியானாலும் சரி யாருக்குமே இனிமேல் புதிதாக தொடங்கப்படுகிற கல்லூரிகளுக்கு நாம் மானியம் வழங்குவதில்லை என்ற முடிவினை எடுத்து இருக்கிறோம். அப்படி எடுக்கின்றபோது, சென்ற ஆண்டிலே அல்லது அதற்கு முந்திய ஆண்டிலே சில கல்லூரிகளிலே புதிதாக தொடங் கப்பட்ட பாடங்களுக்கு ஓர்க்லோடு பிக்ஸ் செய்யப்படாததன் காரணமாக, அஃபிலியேஷன் இருந்தாலும் கூட அந்த புதிய பாடங்களுக்கு நாம் மானியம் வழங்கவில்லை. ஆனால் இங்கே 10 (எ)—அதிலே (சி), (டி) என்ற இரண்டு பிரிவுகளிலேயும் தனியார் கல்லூரி எதிலும் தொடங்கப்பட்ட புதிய வகுப்பு குறித்த கால படிப்பு பிரிவு எதற்கும் மானியம் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது எதிலே முடியும் என்று சொன்னால், சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட படிப்பை தொடங்கிய கல்லூரியிலே, அஃபிலியேஷன் கொடுக்கப்பட்டும், கூட, ஓர்க் லோடு பிக்ஸ் பண்ணப்படாததன் காரணமாக அங்கே மானியம் வழங்கப்படாமல் இருந்தால், அந்த கல்லூரி இன்றைக்கு மானியத்தைப் பெற முடியாது என்ற நிலைமை அங்கே ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் சிறுபான்மை கல்லூரியை நிர்வகிப் பதற்கு நாம் அதிகமான சட்டங்களை இங்கே இயற்றி இருக் கிறோம். அதிலே மிகக் கடுமையான சட்டம் எது என்று சொன்னால், காம்பிடன்ட் அத்தாரிட்டி, அதாவது தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது, அந்த அமைப்புக்காக அதிக மான அதிகாரத்தை நாம் வழங்கி இருக்கிறோம். அது ஒரு வேளை முறைகேடாகப் பயன்படுத்தப்படுமோ என்று கூட நான் அஞ்சுகிறேன். இதையும் நீங்கள் பரிசீலனை செய்து சிறு பான்மை கல்லூரிக்கு ஒரு தகுந்த நியாயம் வழங்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் இந்த மாமன்றத்திலே நுழைந்தபோது சில கோரிக்கை கள் வைத்தேன். அதிலே பல்வேறு பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன; இந்த பல்கலைக் கழகங்களிலே ஒரே மாதிரியான





பல்கலைக்கழகச் சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்றும், உயர்கல்விக்கு மாநில அளவிலான மன்றம் வேண்டும் என்றும், கல்வித் தரத்தை உயர்த்த உயர்மட்டக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும், பல்கலைக்கழக ஆணையத்திற்கு மண்டல மையம் அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்து இருந்தேன். அந்த கோரிக்கையிலே ஒன்றாக இன்றைக்கு உயர் கல்விக்கான மாநில மன்றம் அமைக்க இருப்பதை அறிந்து நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த மன்றமானது பல்கலைக்கழக மானிய (மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு கருத்தை சொல்லி முடித்து விடுகிறேன். பல்கலைக்கழக மானிய ஆணையத்தைப் போல இருக்க வேண்டு மென்று இங்கே குறிப்பிடப் பட்டிருந்தாலும் கூட, இந்த மன்றத்தினுடைய தலைவர் கல்வி அமைச்சராக இருக்கிறார். ஆனால் பல்கலைக் கழக மானிய ஆணையத்தில் ஒரு முழு நேர உறுப்பினர் தான் அங்கே பொறுப்பிலே இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் நம்முடைய கல்வி அமைச்சருடைய பொறுப்பிலே இருக்கிற பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதல்லாமல், மருத்துவப் பல்கலைக்கழகம், கால்நடைப் பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் இருக்கிறவர்கள் இங்கே உறுப்பினர்களாக இல்லை. அது மட்டுமல்லாமல் இந்த மன்றத்தில் அறிவியலுக்கும், என்ஜினியரிங் படிப்புக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, பொருளாதாரம், மருத்துவம், கால்நடை போன்ற பிரிவுகளுக்கு இங்கே யாரும் (மணியடிக்கப் பெற்றது) உறுப் பினர்களாக இல்லையென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதையும் நீங்கள் கருத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த உயர் கல்விக்கான மானிய மன்றம் அமைப்பதை நான் வரவேற்று அமர்கிறேன்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள தமிழ்நாடு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் இன்றைக்கு கல்விக்காக ஏராளமான பணங்களை நாம் செலவிட்டு கொண்டிருந்தாலும் கூட, 44 ஆண்டுகள் சுதந்திரத்திற்குக் பின்னாலும் கூட, இன்னும் நாம் கல்வியினுடைய தரத்தில் உயர்ந்த நிலையை அடைந்திருக்கி றோமா என்றால் இல்லையென்று தான் சொல்ல வேண்டும்.

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1992 ஏப்ரல் 28

இன்றைக்கு இந்த புதிய திருத்த சட்டத்தைக் கொண்டு
வந்திருக்கிறீர்கள். தனியார் பள்ளிக்கூடங்களை முறைப்படுத்த
வேண்டியது மிக அவசியம் என்ற காலக்கட்டத்தில் இருக்கி
றோம். இன்றைக்கு மைனாரிட்டியுடைய, சிறுபான்மையின
ருடைய உரிமைகள் பாதிக்காத வண்ணம், அவர்கள் பாதிக்கப்
படக் கூடாது என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும்
கிடையாது. ஏனென்றால் சில நாட்களுக்கு முன்னால் சிறு
பான்மை பிரிவினரால் நடத்தப்பட்டு வருகிற, கிறிஸ்துவர்கள்
மூலமாக நடத்தப்படுகிற அந்தப் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த
வர்கள் கூட, தங்களுடைய உரிமை பாதிக்கப்பட்டு விடக்
கூடாது, தாங்கள் கல்விக்காக தொண்டாற்றிக் கொண்டிருக்கி
றோம் என்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், நம்மு
டைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களிடமும் முறை
யிட்டு, அவர்கள் அதற்கு தீர்வு கண்டு, இங்கே பேச்சுவார்த்தை
மூலமாக தீர்த்துக் கொண்டு சென்றார்கள்.

அதேசமயத்தில் தனியார் பள்ளிகளில், பல்வேறு பள்ளிகளில்
பல முறைகேடுகள் நடப்பது உண்மை நிலைமை என்பது
எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஏனென்றால் ஆசிரியர்களுக்கு
அங்கே பணிப்பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்
கிறது. மேலும் சில பள்ளிக் கூடங்களில் சம்பளம் மிகவும்
குறைவாகக் கொடுத்து கொண்டு, மானியம் வாங்கக்கூடிய
பள்ளிகள் கூட சம்பளத்தை குறைவாகக் கொடுத்து, அந்த
ஆசிரியர்களுக்கு சலுகைகளைக் குறைத்து, அந்த ஆசிரியர்களுக்கு
முறையான சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கிறது. அதற்
காக அரசானது பல்வேறு சட்டங்களை தனியார் பள்ளிகளுக்கு
வைத்திருந்தாலும் கூட, அந்தச் சட்டங்களை அவர்கள் முறை
யாக 'ஃபாலோ' பண்ணாமல், முறையாக அந்தச் சட்டத்தின்
படி நடக்காமல் இருப்பதால் இதுபோன்ற முறைகேடுகளைத்
தவிர்க்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு மானியம் வழங்கக்கூடிய புதிய பள்ளிக்கூடங்கள்,
அதாவது புதியதாக திறக்கக்கூடிய பள்ளிகளுக்கு மானியம்
வழங்கப்படாது. அதைப்போல புதிய பிரிவுகளுக்கு மானியம்
வழங்கப்படாது என்று அரசு இன்றைக்கு இந்த திருத்தச்
சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

பிற்பகல் 2-45.

இந்தச் சட்டத்தின்படி, இன்றைக்கு புதிதாக திறக்
கின்ற, அதாவது புதிதாக பள்ளிக்கூடங்கள் திறக்க தனி
யார்கள் முயற்சி செய்தால், தனியாகத் திறந்து கொள்ளலாம்.
ஆனால் மானியம் வழங்கப்படாது. ஏன் என்றால், அரசி
னுடைய நிதிநிலைமை அவ்வாறு இருக்கிறது என்பதை இங்கே
சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். ஆனால் அதே சமயத்தில்



1992 ஏப்ரல் 28] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

நாம் கிராமங்களிலே சென்று பார்த்தோம் என்றால், இந்தச்
சட்டத்தின் மூலமாக—சில கிராமங்களிலே பள்ளிக்கூடங்களே
இல்லாத சில கிராமங்கள் இருக்கின்றன. அவ்வாறு இருக்
கின்ற கிராமங்களிலேயாவது, இந்தத் தனியார்கள் ஒருவேளை
முன்வரும்போது, மானியங்கள் வழங்குவதற்கு அரசு இது
போன்ற நிபந்தனைகளைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும் என
பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டு
கோளாக வைக்க விரும்புகிறேன்.

மேலும் 3 ஆ டுகளுக்கு முன்னாலே இருந்த பள்ளிக்
கூடங்கள் பல—இ ங்களில், அதாவது கல்வி கொண்டு வந்ததே
சாதாரண விஷயப் அல்ல—ஒரு தனியார் ஒரு பள்ளியை நிறுவி
கிராமத்திலே நட த வேண்டும் என்றால், இங்கே ஒருவேளை
சென்னையிலோ அல்லது நகரங்களிலோ ஏற்படுத்தும்போது,
அந்தப் பள்ளிகளுக்கு அவர்கள் அதிகமாக வசூல் செய்து கூட
நடத்துகிறார்கள். ஆனால் கிராமங்களிலே அவர்கள் பள்ளி
களை நடத்தும்போது மிகவும் சிரமப்படுகிறார்கள். அவ்வாறு
சிரமத்திற்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன
றைக்கு எங்களுடைய பகுதியிலே, கீழக்களங்களிலே ஒரு பள்
ளிக்கூடம் ஆரம்பித்து 5 ஆண்டுகளாக ஆசிரியர்களுக்கு சம்பளம்
கொடுக்கப்படாமல் மானியமும் வழங்கப்படாமல் இருக்கின்ற
சூழ்நிலை இருக்கின்றது. இதுபோன்ற சூழ்நிலையில் உள்ள
பள்ளிகளுக்கு மானியங்களை வழங்குவதற்கு அரசு முன்வர
வேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை நான் முழு
வதுமாக வரவேற்கிறேன்.

அதேசமயத்தில் பல்கலைக்கழகத்தைப் பற்றி இங்கே ஒரு
சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இங்கே சட்டமன்றத்திலே சொல்லும்போது
கூட, முன்னாள் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள்
சென்னையிலே உள்ள பல்கலைக் கழகத்திலே தலையிட்டு பல
முறைகேடுகளை நடத்தியிருக்கிறார்கள் என்பதை இங்கே அறிக்
கையாக வாசித்தார்கள். பலமுறைகேடுகள் என்ன, பலதுறை
களிலே ஒவ்வாத, அந்தத் துறையிலே இல்லாதவர்களைக் கூட
அந்தத்துறையிலே நியமித்து இருப்பது மிகவும் உண்மையான,
நிலைமையாகும். இதைப் போன்ற நிலமைகளைத்
தவிர்ப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது.

மேலும் பல்கலைக்கழகங்கள், அதாவது அங்கீகாரம்
இல்லாத பல்கலைக்கழகங்கள் கூட தமிழகத்திலே சில இயங்கிக்
கொண்டிருக்கின்றன. அவைகள் சர்ட்டிபிகேட்டுகளை எல்லாம்
போலியாக வழங்கக்கூடிய சூழ்நிலையிலேகூட தமிழகத்திலே பல
பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. அவைகளை எல்லாம்
தடை செய்யவேண்டும். மதுரைப் பல்கலைக் கழகத்தை

எடுத்துக் கொண்டால், அங்கே கூட பல்வேறு முறைகேடுகள் அவர்கள் கட்டிடம் கட்டுவதுலே, டெண்டர்கள் வைப்பதுலே முறைகேடுகளை நடத்தியருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறார்கள். மேலும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு சீக்கிரமாக கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று சொல்லி, இந்த முறைகேடுகளை எல்லாம் தவிர்க்கவேண்டும் என்று சொல்லி, தனியார் பள்ளிக் கூடத்தை நீங்கள் சீர்படுத்துவதோடு, இந்தச் சிறுபான்மையினருடைய உரிமையைப் பாதிக்காத வண்ணம் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் பல்வேறு சட்ட முன்வடிவுகளை இங்கே வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாக தனியார் கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில், முறைப்படுத்துதல் மிக அவசியம். ஏன் என்றால், இன்றைய தினம் கல்வியை ஒரு வியாபாரப் பொருளாக, வாணிபமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர, இந்த முறைப்படுத்துவதிலே எந்தவிதமான தவறும் சொல்ல மாட்டேன். 'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவையும் புண்ணியங்கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்று பாரதி சொன்னார். ஆனால் இன்றைய தினம் புண்ணியத்திற்காகவோ, தர்மத்திற்காகவா, பள்ளிக் கூடங்கள் நடத்துவதை விட்டுவிட்டு, அதை வியாபாரப் பொருளாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை முறைப்படுத்துவதற்காகக் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை அந்த அளவிற்கு நான் நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில், அரசாங்கம் இது துவக்கக்கல்வி என்பதையும், பள்ளிக்கூடக் கல்வி என்பதையும், அரசாங்கத்தினுடைய பேசிக் டியூட்டி, அடிப்படைக் கடமைகளிலே ஒன்று என்பதையும் கருத்திலே கொள்ளவேண்டும். இன்றைய தினம் இந்தச் சட்டத் திருத்தத்திலே முக்கியமாக சொல்லப்பட்டு இருப்பது சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரி கூட இங்கே சுட்டிக்காட்டினார்கள்.





"Grant not payable to new School, self-financing schools and new courses of instruction

என்கிற தலைப்பின்கீழே,

"Not with standing anything contained in this Act or in any other law for the time being in forcee or in any jndgement, decree or order of any court or other authority, no grant shall be paid to any private schools established on or after the date of the commencement of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Amendment Act" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது அவ்வளவு முறையானதாக எனக்குப் படவில்லை. என்னதான் நிதி நெருக்கடி இருந்தாலும் முழுவதுமாக மானியத்தை நிறுத்தி விடுகிறோம் என்று சொல்வது சரியாக இருக்காது. மானியம் நாம் வழங்குவதன் மூலமாகத்தான், இதை எல்லாம் முறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்ஸ்ட்ருமெண்ட் ஆப் கன்ட்ரோல் என்பதே இன்றையதினம் மானியமாக இருக்கிறது. ரெகுலேசன் வேண்டும் என்று சொன்னால், கிராண்ட் சிஸ்டம் நீடிக்க வேண்டும். அவைகளைக் கைவிடுவது அவ்வளவு சரியாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

குறிப்பாக, துவக்கக் கல்வி, அடிப்படைக் கல்வி, இவைகளில் எல்லாம் அரசாங்கம் தாராளமாக செலவு செய்யமுன்வரவேண்டுமே தவிர அதைக் குறைப்பது சரியாக இருக்காது. எந்த நாடுகள் எல்லாம் இன்றையதினம் முன்னேறி இருக்கிறதோ அவைகளை எல்லாம், அந்த நாடுகளை எல்லாம் நீங்கள் பார்ப்பீர்களானால், கல்விக்காகத்தான் அவர்கள் அதிகமாக செலவழித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, கல்விக்காக. செலவு செய்வதிலே எந்த வகையிலேயும் குறைக்கக் கூடாது. அதுவும் மானியம் அளிப்பதை நிச்சயமாக தவிர்க்கக்கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக கல்வியாக இருந்தாலும் சரி, சுகாதாரமாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தினுடைய முன்னுரிமைகளாக இவைகள் கருதப்படவேண்டும், அதற்காக, எந்த அளவிற்கு தேவையானாலும் செலவு செய்யத் தயாராக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதை வியாபாரப் பொருளாக ஆக்கிவிடுவார்கள்.

பிற்பகல் 2–50

தனியார் துவக்க முன் வந்தால் அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். எல்லா இடங்களிலேயும் அரசாங்கமே போய் கல்விக் கூடங்களை நிறுவுவது, பள்ளிக் கூடங்களை நிறுவுவது என்பது சிரமம். உதாரணமாக பல ஆண்டுக் காலமாக சுதந்திரம் வந்து இவ்வளவு ஆண்டுகள்

[ எஸ். ஆர் பாலசுப்ரமணியன் ] [1992 ஏப்ரல் 28

ஆகியும்கூட இன்னும் அனைத்து இடங்களிலேயும் கல்விக் கூடங்களை, பள்ளிக்கூடங்களை நிறுவி விட்டதாக நாம் சொல்ல முடியாது. பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளில் எல்லாம் கல்விக் கூடங்கள் நிறுவி இருப்பதாகச் சொல்ல முடியாது. மலைப் பகுதிகளில் எல்லாம் கல்விக் கூடங்கள் நிறுவி இருப்பதாகச் சொல்லமுடியாது. அங்கே யாராவது முன்வந்து நான் கல்விக் கூடம் அமைக்கிறேன். நிறுவுகிறேன்., அல்லது அங்கே அந்த ஊரில் இருப்பவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பள்ளிக் கூடம் கட்டினால் அவர்களுக்குக் கூட மானியம் கிடையாது. 1992-ஆம் ஆண்டிற்குப் பின்னாலே துவக்கப்பட்ட பள்ளி என்ற காரணத்தாலே மானியம் கிடையாது என்று சொல்வது சரியாக இருக்காது. அவர்களுக்கெல்லாம் மானியம் வழங்கவேண்டும். எனவே மானியமே இல்லை என்பது அவ்வளவு சரியான அணுகு முறையாக என்னைப் பொறுத்தவரையில் படவில்லை. The Government should not think in terms of abridging its role என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு அரசே இந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும். தவறினால் விளைவு விபரீதமாகக் கூட இருக்கக் கூடும். தனியார் நிறைய பள்ளிகளைத் திறந்து, சாதாரண ஏழை எளிய மக்கள் எல்லாம் அவர்களுடைய கட்டுபாட்டிற்குள்ளே அல்லது அவர்களுடைய வியாபார நோக்கத்திற்கு நாமாகவே அவர்களை பலி கொடுப்பதைப் போன்ற நிலைமை ஏற்பட்டுவிடக் கூடும். எனவே அவர்கள் முழுமையாக இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொள்வதற்கு இடமில்லாமல் புதியதாக கல்விக் கூடங்கள் திறந்தாலும், பள்ளிக்கூடங்களைத் திறந்தாலும், மானியம் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கூட ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அங்கே யாரும் தொழில் துவங்க முன் வராத பகுதிகளில் சிலர் அவர்களாகவே தொழில் துவங்க முன்வந்தால் அவர்களோடு சேர்ந்து அரசாங்கம் பங்கேற்பதற்குக் காரணமே அதுபோன்ற தொழில்கள் வரவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் புதிய பொருளாதாரக் கொள்கை அமைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று பள்ளிக்கூடங்கள் கட்டாத இடங்களிலே அவர்களாகக் கட்ட முன்வருகின்ற நேரத்திலே அவர்களுக்கு மானியம் வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும்.

குறிப்பாக இங்கே சில சந்தேகங்களைச் சிறுபான்மை சமுதாயத்தின் சார்பிலே பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த சந்தேகங்களைப் பொறுத்தவரையில் இரண்டொரு நியாயமான வகையில் அவைகளை முறைப்படுத்துவ்து சரி என்று நான் ஏற்றுக் கொண்டாலும்கூட, அதிலே தவறுகள் நேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை



1992 ஏப்ரல் 28] [திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியம்]

இருக்கிறது. ஏனென்று சொன்னால் சிறுபான்மை என்கிற பெயராலே தவறு இழைப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. சிறுபான்மை சமுதாயத்தைப் பொறுத்தவரை அரசியல் சட்டம் அவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கியிருக்கிறது. அரசியல் சட்டத்திலே இருக்கிற பல சலுகைகளை முறையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற சிறுபான்மை சமுதாயம் கல்விக் கூடங்கள் இருக்கின்றன. தவறாகப் பயன்படுத்திக் கொள்வோரும் இருக்கிறார்கள். தவறாகப் பயன்படுத்திக் கொள்வதை முறைப்படுத்தலாம்.

உதாரணமாக மொழி சிறுபான்மை, மதச் சிறுபான்மை என்று சிறுபான்மைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. மொழி சிறுபான்மை என்கிற பெயராலே ஏதோ ஒரு ஊரிலே என்னுடைய தாய்மொழி சமஸ்கிருதம். எனவே மொழிச் சிறுபான்மை அந்தஸ்து வேண்டுமென்று கேட்டுப் பள்ளிக்கூடங்கள் நடத்துவதாக எல்லாம் இன்றையதினம் பத்திரிகைகளிலே வருகிறது. அவர்களைப் போன்றவர்கள் நிச்சயமாக முறைப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் கேட்கின்றபடி எல்லாம் நாம் அனுமதிக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிறுபான்மைச் சமுதாயம் கல்விக்காக எவ்வளவோ சேவை செய்திருக்கிறது. குறிப்பாக கிறிஸ்தவச் சமுதாயத்தைப் பொறுத்தவரை நிறைய அளவிற்கு அவர்கள் நம்முடைய கல்விக்காக சேவை செய்திருக்கிறார்கள். முதலிலே இருந்த அச்சுக் கோர்க்கின்ற தொழிலிலேயிருந்து எடுத்துப் பார்ப்பீர்களானால் அவர்கள்தான் முதலில் பள்ளிகளைத் துவக்கிக்கொண்டு வந்தார்கள். நல்ல முறையில் பள்ளிகளை நடத்துகின்ற சர்ச்சுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவர்களைப் பொறுத்து ஒரு மேனேஜ்மெண்ட் கமிட்டி—"The Management Committee of every minority school shall with the approval......'' என்று இருக்கிறது. மேனேஜ்மென்ட் கமிட்டி யார் என்பதுதான் இப்போது பிரச்சினை. இப்போது ஆர்.சி. யாக இருந்தாலும், சி.எஸ்.ஐ.-ஆக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு 'டையசிஸ்' இருக்கலாம். அந்த 'டையசிஸ்' தான் ஜனநாயக முறைப்படி யாருடைய நிர்வாகத்திலே அந்தப் பள்ளிக்கூடங்கள் இயங்கவேண்டுமென்று தீர்மானிக்கின்றன. தீர்மானித்து பெரும்பாலும் 'பாரீஷ் பிரீஸ்டு' தான் அந்த நிர்வாகத்தை மேற்கொள்கிறார்கள். அதிலே தவறு வருவதற்கு நியாயம் கிடையாது. அப்படி தவறே வந்தாலும் அவர்களாகவே ஜனநாயக முறைப்படி கூடி இதிலே முடிவு எடுக்கிறார்கள். இதிலே தவறு நேர்ந்து விட்டது. அதனைக் களைய வேண்டுமென்று முடிவு எடுக்கிறார்கள். ஒரு 'பாரீஷ் பிரீஸ்டு' வெளியே போய் அதையும் அந்த டையசிஸ் கூடி முடிவு செய்கிறது. எனவே முடிந்த வரையில் கமிட்டி என்று சொல்வதைக் காட்டிலும் அவர்கள் வைத்திருப்பதை அங்கே அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அதே நேரத்திலே

அது போல் சில இடங்களிலே தவறுகள் நேருமேயானால் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். குறிப்பாக ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும் பல தவறுகள் அங்கே நேர்வதாக இன்றையதினம் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. தங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுவதாக, அவர்கள் திடீர் திடீரென்று பணி நீக்கம் செய்யப்படுவதாக—போன்ற புகார்கள் எல்லாம் வருகின்றன. அவற்றைக் களைய வேண்டுமென்ற நோக்கத்தோடு 45 ஏ-ன் கீழே 45 ஏ (3) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "the managing committee of every minority

பிற்பகல் 2.55

School shall, with the approval of the competent authority, have power to dismiss, remove or reduce in rank or otherwise terminate the appointment of any teacher

Provided that for the purpose of npproval of any disciplinary action against a teacher by the managing commitee, the competent authority shall ensure wherher such disciplinary proceedings are in accordance with the rules." என்று இருக்கிறது.

குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்தைப் பொறுத்த வரையில் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் ஒரு கோர்ட்டிற்கு முன்னாலே டிக்ளரேஷன் தாக்கல் செய்ய வேண்டும். முன்சீப் கோர்ட் அல்லது சப்-கோர்ட்டிலே அவர்கள் டிக்ளரேஷன் தாக்கல் செய்கிறார்கள். அந்த டிக்ளரேஷனை வைத்துக் கொண்டுதான் இதுவரையில் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த காம்பிடன்ட் அத்தாரிட்டி என்பதை இப்போது கூட ஒரு சப்-கோர்ட்டிலே தீர்மானிக்கலாம் என்று சொன்னால் எல்லா ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதாக இருக்கும். நிர்வாகத்திற்கும் ஏற்புடையதாக இருக்கும் என்று நினைக்கிறேன். நமது அண்டை மாநிலமான கேரளாவைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தைப் போலவே சிறுபான்மை சமுதாயத்தினராக கிருஸ்துவ சமுதாயமும் முஸ்லீம் சமுதாயமும் இருக்கிறது. இரண்டு சமுதாயங்களும் அங்கே நிறைய கல்விக் கூடங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இதுபோன்ற பிரச்சினைகள் வந்தபோது அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி இன்றையதினம் எந்தப் பிரச்சினையும் இல்லாத அளவுக்கு கல்வித்துறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே தமிழ்நாட்டிலே கூட அதேபோன்று சிறுபான்மை சமுதாயத்தினரை அழைத்து அவர்களோடு பேசி பிரச்சினைகளைத் தெளிவாக அவர்களிடத்திலே விளக்கி அவர்களுடைய கருத்தையும் அறிந்து அவைகளை நடைமுறைபடுத்த முன்வந்தால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.



அதே நேரத்திலே இங்கே மாணவர்களிடத்திலே கட்டணம் வசூலிப்பதைப் பற்றி ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். "Every Minority School receiving grant from the government shall charge from the pupils only such fees as may be prescribed, provided that the fees may be revised with the prior approval of the Government

என்று இருக்கிறது.

இன்றைக்கு எதற்காக அவர்களிடத்திலே கட்டணம் வசூலிக்க வேண்டும். கட்டணம் வசூலிக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வது வேறு. ஆனால் எதற்காக வசூலிக்க வேண்டும். அதை முழுவதுமாக அரசு மானியமாக கொடுக்கிறது. அந்த மானியத் தொகையிலே பள்ளிக்கூடம் நடைபெறுகிறது. குறிப்பாக துவக்க கல்வியாக இருந்தாலும் சரி, பள்ளி கூட கல்வியாக இருந்தாலும் சரி இலவசமாக கல்வி வழங்க வேண்டும் என்று நமது அரசியல் சாசனத்திலே இருக்கிறது. அப்படி இருக்கும்போது கட்டணம் வசூலிக்கிறோம் என்று சொல்வது தவறு. அரசு மூலமாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கலாம் என்று சொன்னாலும் கூட அதைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள வழி இருக்கிறது. எனவே கட்டணம் வசூலிப்பதை முழுவதுமாக தவிர்க்க வேண்டும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நாம் கூறி இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு, முன்வருவார்கள் என்று நம்பி இத்தோடு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை 6 சட்டமுன் வடிவுகளிலே தெரிவித்திருக்கிறார்கள். நானும் 6 சட்ட முன்வடிவுகளின் மீதும் அரசினுடைய சார்பிலே என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம்—2 ஆம் திருத்த மசோதா மீது மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே வேந்தராக இருக்கக் கூடிய கவர்னர் அவர்கள் அவர்களிடத்திலே பெறப்படுகிற குழுவிலே இருந்து ஒருவரை துணை வேந்தராக ஒரு பல்கலைக் கழகத்திற்கு நியமிக்க விரும்பவில்லை என்றால் இன்னொரு குழுவை அமைத்து புதிய பெயர்களை சிபாரிசு செய்வதற்கு வகை செய்கிற விதத்தில் இந்தத் திருத்தமானது கொண்டு வரப்பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் அண்ணாமலை

பல்கலைக் கழகம் இரண்டாவது திருத்த மசோதா அதாவது 25 வது சட்ட முன்வடிவானது சிலபேர் எம்.எல்.ஏ.க்களாக இருந்து பல்கலைக் கழகத்திலே செனட்டிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். எம். எல். ஏ.க்கள் பதவி இழந்ததற்குப் பிறகும் அவர்கள் தொடர்ந்து செனட்டிலே சிண்டிகேட்டிலே உறுப்பினர்களாக இருந்து கொண்டு வருகிற நிலைமைகளையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப் பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக எம். எல். ஏ. மட்டும் அல்ல வேறு சில அமைப்புகளிலே இருந்தும் அதே மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த அமைப்பிலே உறுப்பினர் பதவி போன பிறகும் பல்கலைக் கழக அமைப்பிலே உறுப்பினராக இருக்கக்கூடிய நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளையெல்லாம் தவிர்ப்பதற்காகத் தான் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது.

பிற்பகல் 3-00

அதற்கு அடுத்து குறிப்பாக பிரைவேட் காலேஜஸ் பற்றிய திருத்த முன்வடிவும் தனியார் துறை பள்ளிகள் திருத்த முன் வடிவும் ஒரு முக்கியமான இடத்தை இன்றைக்கு பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் எதிர் கட்சித் தலைவர் உள்பட தங்களுடைய கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அரசியல் சட்டத்தின் படி உரிமை பெற்றிருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் கல்வி நிலையங்களை ஆரம்பிக்கிற போது அரசு விரும்பவில்லை என்றாலும் அரசு அனுமதி பெறவில்லை என்றாலும் அவர்கள் ஆரம்பித்து நீதிமன்றத்தின் மூலமாக அவர்கள் அரசாங்க மானியத்தைப் பெறுகிற உத்திரவைப் பெற்று விடுகிறார்கள். இப்படி வருகிற போது, நாம் இந்த நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து ஒரு பட்ஜெட்டை பிரேரணை செய்து நிறைவேற்றி செலவு செய்ய ஆரம்பிக்கின்ற போது அந்த பட்ஜெட்டுக்கு அப்பாற்பட்டு நிதி நிலைக்கு அப்பாற்பட்டு பணம் தர வேண்டிய ஒரு நிலைமை அரசுக்கு வருகிறது என்பது அது யாருமே ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். ஜனநாயக முறைப்படி பார்த்தால் கூட அல்லது அரசினுடைய மேளாண்மை என்று பார்த்தால கூட. அதையே அவமதிக்கின்ற அளவுக்கு அந்த உரிமைகள் பயன்படுத்தப்பட்டு வந்து இருக்கிறது. ஆகவே, அவைகளை எல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் நாம் இந்தச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகின்றோம். அதிலும் ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் அரசு தலையிட முடியாது என்கின்ற





தீர்ப்புகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் பல்வேறு நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள், நம்மிடத்திலே வந்து புகாரைச் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரிடம் வந்து சொல்கிறார்கள். அப்போது அது சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் நடத்துகின்ற கல்வி நிலையங்கள். ஆகவே நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி அத்தோடு விட்டுவிடுவதற்கில்லை. ஆகவே அரசாங்கம் ஆசிரியர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதாக இருக்கிறது.

அதே நேரத்தில் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் அரசியல் சட்டத்தின்படி தரப்பட்டிருக்கின்ற உரிமைகளையும் அவர்கள் அனுபவிக்க வேண்டும். ஆகவே இந்த இரண்டையும் மனதிலை வைத்துத்தான, நாம் இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பீகாரிலே இருக்கிற கிருஸ்துவ பள்ளிகளுடைய சங்கம் ஒரு வழக்கைத் தொடர்ந்து, அந்த வழக்கானது உச்ச நீதிமன்றத்திற்குப் போய் அதிலே தரப்பட்டிருக்கின்ற தீர்ப்பின் அடிப்படையிலேதான் நாம் இந்தத் திருத்தங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் தீர்ப்பிலே கூறப்படுகின்ற முக்கியமான கருத்தே. சிறுபான்மை இனத்தவர்களால் ஆரம்பிக்கப்படுகின்ற உதவி பெறாத அல்லது அனுமதி பெற விரும்பாத அத்தகைய கல்வி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் அந்த சிறுபான்மை இனத்தவர்கள் எப்படி வேண்டுமானாலும் அதை நடத்திக்கொள்ளலாம். அதற்குக் கூட ஒரு வரம்பு இருக்கிறது. பொதுச் சட்டங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடத்த வேண்டும். இது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. இன்னொன்று. அவர்க்ள் உதவி பெற்று நடத்தலாம் அல்லது உதவி தேவையில்லாமல் அங்கீகாரம் பெற்றுவிட்டும் நடத்தலாம். அப்படி நடத்துகின்ற இரண்டு வகையைச் சார்ந்த சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் அவர்கள் நடத்துகின்ற அந்த கல்வி நிறுவனங்களிலே முறையாக நடத்த வேண்டும். அந்தக் கல்வியினுடைய தரத்தை அவர்கள் கடைபிடிக்க வேண்டும். அங்கே இருக்கின்ற ஆசிரியர்களுடைய நலனை அவர்கள் பாதுகாக்க வேண்டும். இப்படி சில வரம்புகளை அந்த உச்ச நீதி மன்றத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்ற காரணத்தால் அவற்றையெல்லாம் வைத்துத்தான் நாம் இன்றையதினம் இந்த திருத்த மசோதாவை இன்றைக்குச் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆகவே கல்லூரிகளுக்கும் அதே நேரத்தில் பள்ளிகளுக்கும் சேர்ந்து இரண்டு சட்ட திருத்த முன்வடிவுகளை இன்றைக்கு அவையின் முன்னாலே கொண்டு வந்திருக்கிறோம்.

கடைசியாக உயர்மட்டக் குழு பல்கலைக்கழக கல்விக்காக, உயர் கல்விக்கான உயர் மட்டக் குழு ஒன்று அமைப்பதற்கான ஒரு சட்டமுன்வடிவு, அது தான் 6-வது சட்ட முன்வடிவாக இந்தப் பிரிவிலே வந்திருக்கிறது. அது தேசிய கல்விக் கொள்கை என்ற அடிப்படையில் அங்கே மத்திய அரசே அல்லது அங்கே இருக்கின்ற திட்டக் குழுவில் தேசிய கல்விக் கொள்கையை நிர்ணயிக்கின்றவர்களும் சேர்ந்து செய்திருக்கின்ற அந்தப் பரிந்துரையின்படிதான் நாம் இன்றைக்கு அந்த குழுவை அமைக்க இருக்கிறோம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டது, அங்கே தலைவர் ஒருவர் ருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதே நேரத்தில் அந்தத் தலைவர் யார் என்று சொல்லவில்லை. ஆனால் தலைவராக இங்கே நாம் கல்வி அமைச்சரைப் போட்டிருப்பதற்குக் காரணம் இனிமேல்கொண்டு உயர்கல்விக்கான, கல்லூரிகளுக்கான, பல்கலைக்கழகங்களுக்கான அனைத்து உதவியையும், யார் யாருக்கு எவ்வளவு தருவது, எந்தப் பல்கலைக் கழகத்திற்கு எவ்வளவு தருவது என்பதையெல்லாம் நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரத்தை நாம் இந்தக் குழுவுக்குத் தருகிறோம். ஆகவே இன்றையதினம் கல்வித் துறையிலே இருக்கின்ற அதிகாரங்களையும் ஓரளவிற்கு எடுத்து இந்த உயர் கல்விக் குழுவுக்குத் தர இருக்கின்ற காரணத்தால் கல்வி அமைச்சர் அதற்கு தலைவராக இருப்பது நல்லது என்று கருதித்தான் தலைவராகப் போட்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இப்போது கொண்டு வருகின்ற, அரசாங்கத்தின் சார்பிலே கொண்டு வருகின்ற இன்னொரு திருத்தத்தின்படி வைஸ் சேர்மேன்—துணைத் தலைவராக இருக்கின்றவர்கள் ஒரு நல்ல அனுபவம் உள்ள ஒரு கல்வி நிபுணராக இருப்பார். அவர் முழு நேரமும் அந்தத் துணைத் தலைவர் பொறுப்பிலிருந்து இந்தக் குழுவினுடைய காரியங்களை எல்லாம் பார்ப்பார் என்கிற அளவுக்கு திருத்தம் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறோம். அதற்கான அறிவிப்பும் தரப்பட்டிருக்கிறது. ஆகவே அது ஓரளவுக்கு நல்லபடியாக இயங்குவதற்குத் தேவையான திருத்தங்களை இதிலே செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 3–05

அது மட்டுமல்ல, பல்கலைக் கழகங்கள் அதிகமாக பெருகி அவர்கள் எல்லாம் சுயேட்சையாக தன்னாட்சி உரிமைப் பெற்று நடக்க வேண்டும் என்று தான் இந்த ஆட்சி விரும்புகிறது. ஆனால் இந்த தன்னாட்சி என்பது முறைகேடாக பயன்படுத்துகின்ற விதத்திலே பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகள், மற்றவைகள் இருக்குமானால் அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரம் அற்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கக்கூடாது என்பது தான் நம்முடைய கருத்து ஆகும். ஆகவே, பல்கலைக்கழகங்களுக்கு எவ்வளவு அதிகாரத்தை வேண்டுமானாலும் நாம் தரலாம்.



ஆனால் அவர்கள் நாம் தருகிற பணத்தை முறையாக செலவு செய்யவில்லை, கல்வி மேம்பாட்டுக்கு அவர்கள் முறையாக காரியங்கள் செய்யவில்லை என்று வருகிறபோது அவர்களை திருத்துகின்ற, கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு நாம் ஒரு செல்வாக்குப் படைத்த நிலையில் தான், அதாவது அதிகாரம் படைத்த நிலையில் தான் ஆட்சி இருக்க வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பல்கலைக்கழகத்தினுடைய பாட தரத்தின்படி அந்த தரம் எப்படி இருக்கிறது என்பதை இங்கே பல தடவை நானே குறிப்பிட்டு இருக்கிறேன். அதேபோல் பல முறைகேடுகளை எல்லாம் காணுகிறபோது நாம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது அல்லது நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாத நிலையிலேயும் அரசு இருக்க முடியாது, என்கின்ற அளவிலே போதுமான அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டும் என்று தான் நாம் விரும்புகிறோம். இருந்தாலும் பல்கலைக் கழகங்களுக்கு நிறைய அதிகாரங்கள் தந்து இன்னும் நல்லபடியாக செயற்படுவதற்கான ஒரு புதிய சட்டத்தை, பொதுவான ஒரு சட்டத்தை எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் பொதுவான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியையும் கல்வித்துறை எடுத்து வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்மாலே நியமிக்கப்படுகின்ற ஒருவரிடத்திலே எல்லா அதிகாரத்தையும் தருவது தான் சிறந்த ஒரு ஆட்சி முறை, அதிகார முறை என்று நாம் நினைப்போமானால் அது நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளுவது ஆகும்.

நாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இருக்கின்ற உரிமை, அதிகாரத்தை விட நம்மால் நியமிக்கப்படுகின்ற ஒருவர் அதிக அதிகாரம் பெற்றவராக இருக்க வேண்டும் என்று நினைப்பது அது சரியும் அல்ல, முறையும் அல்ல என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் இங்கே பதிவாகியிருக்கிறது. அதிலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு பின்னர் வருகின்ற காலக் கட்டங்களில் நம்முடைய அனுபவத்திற்கு ஏற்ப தேவையான மாற்றங்களை செய்து கொள்ளலாம்.

அது மட்டுமல்ல, புதிய பல்கலைக் கழகச் சட்டம், பொதுவான பல்கலைக் கழகச் சட்டம் வரும்போது இன்னும் விரிவாக ஆராய்ந்து நாம் ஒரு நல்லச் சட்டத்தைக் கொண்டு வந்து விடலாம் என்ற உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்றபடி சட்டமுன் வடிவுகளை நிறைவேற்றி தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற அமைப்பினைப் பார்க்கிறபோது இந்த அமைப்பிலே அறிவியல் துறையைச் சேர்ந்தவர்கள், பொறியியல் துறையைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இருப்பதாக இருக்கிறதே ஒழிய பொருளாதார நிபுணர்கள், கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் இதிலே இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு மாநில அளவிலான இந்த மன்றத்திலே கலைத் துறையும் வளரவேண்டும், பொருளாதாரத் துறையும் வளரவேண்டும், மருத்துவத் துறையும் வளர வேண்டும், கால்நடைத் துறையும் வளரவேண்டும், எனவே எல்லா துறைகளும் வளர்வதற்கு ஏற்ற ஒரு மன்றமாக இந்த மன்றம் இருக்கவேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களை நியமிக்கின்றபோது இந்த கலைத் துறை சம்பந்தப்பட்டவர்களும், பொருளாதாரம் படித்தவர்களையும் அல்லது மொழி படித்தவர்களுக்கும் தேவையான வாய்ப்புகள் தருவதற்கு நாம் ஏற்பாடு செய்யலாம். ஆனால் கல்வித்துறை சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்திற்குத் தான் இந்தக் குழுவை நாம் போட்டு இருக்கிறோம், ஆகவே, கால்நடை பல்கலைக் கழகமோ, விவசாய பல்கலைக் கழகமோ, மருத்துவப் பல்கலைக் கழகமோ, இந்தக் கல்வி குழுவிலே, இதன் கட்டுப்பாட்டின் கீழே வராது. அது அந்தந்த துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கீழே இருந்து வரும். இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன், அதாவது நிதி உதவி தரக்கூடாது, இனிமேல் இல்லை என்று முடிவு எடுத்ததற்குக் காரணமே நாம் நிதி உதவி வைத்துக்கொண்டு இருக்கிற காரணத்தாலே பொருளாதாரம், நிதிநிலைமை சரியில்லை இது ஒன்று. இன்னொரு காரணம், நாம் நிதி தருகின்ற ஒரு முறையை வைத்துக்கொண்டு இருக்கிற காரணத்தால் தான் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தாங்களாகவே ஆரம்பித்து கோர்ட்டுக்குப் போய் அரசாங்கத்திடமிருந்து கட்டாயமாக நிதியைப் பெறுகின்ற சூழ்நிலை வருகிறது. அது அரசாங்கத்திற்கு கேவலம் என்கிற முறையில் தான் நாம் இது போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தைக் கேட்காமல் ஆரம்பிப்பது என்பது வேறு, ஆனால் அரசாங்கத்தை கேட்காமல் ஆரம்பித்து விட்டு அரசாங்கத்திடமிருந்து கட்டாயமாக பணத்தைப் பெறுவது என்பது அவ்வளவு ஏற்கக் கூடிய ஒன்று அல்ல.

பிற்பகல் 3-10

ஆகவே, பெரும்பான்மைச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இல்லாத ஒரு உரிமை சிறுபான்மை சமுதாயத்திற்கு இருக்கிறது





என்கிற இந்த சமய சார்புக் கொள்கைதான் இன்றைக்கு வகுப்பு வாதத்திற்கு வித்திட்டு இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெளிவுப்படுத்தத் தேவையில்லை. ஆகவே, அதைச் சொல்லியே கட்சிகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, சமய சார்பு என்பது சரியாக, முறையாக இருக்கவேண்டும். எந்தக் காரணம் பற்றியும் பெரும்பான்மை மக்களுக்கு இல்லாத உரிமை சிறுபான்மை மக்களுக்கு இருப்பது போன்ற நிலைமைகளை நாம் ஏற்படுத்துவது சரியல்ல. அந்த நிலையிலே பார்க்கிறபோது, மதவாதத்தை ஆதரிக்கின்ற காரியமாகவும் வகுப்புவாதத்தை ஆதரிப்பதைப் போலவும் வருகிறது. ஆகவே, நாம் இருக்கின்ற சூழ்நிலையில் அரசியல் சட்டத்தை நாம் போய் திருத்த முடியாது. ஆகவே, அதன்கீழே இருக்கின்ற சட்டங்களில் நமக்குத் தெரிந்த அளவில் நாம் செய்கிற மாற்றங்கள் என்பது சிறுபான்மை மக்களையும் பெரும்பான்மை மக்களையும் ஒரே சீராக நாம் நடத்துவதற்கு வகை செய்கின்ற விதத்திலேதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நிதியுதவியை நிறுத்துகிறோம். நிதியுதவியை நிறுத்துவதனாலேயே மக்களுக்கு இலவசக் கல்வி கிடைக்காமல் போகும் என்று பயப்படவேண்டியது இல்லை. அரசின் சார்பிலே தேவையான இடங்களில் நாம் கல்விக் கூடங்களை ஆரம்பிக்க இருக்கின்றோம். 500-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள இடங்களில் ஏறக்குறைய 600 இடங்கள் இருப்பதாக எங்களுக்கு கணக்கு இருக்கிறது. அதிலே 280 இடங்களுக்கு மேல் இந்த ஆண்டு ஆரம்பிக்கின்றோம். அடுத்த ஆண்டு மீதியுள்ள இடங்களிலே ஆரம்பிக்க போகின்றோம். அவையெல்லாம் அரசின் சார்பிலே ஆரம்பிக்கப்படும். ஆகவே, இலவசக் கல்வி பாதிக்காத அளவிற்கு அரசு தன்னுடைய முயற்சியை மேற்கொள்ளும். இது தனியார்கள் ஆரம்பிக்கின்ற கல்வி நிலையங்களைப் பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1992) நிறைவேற்றப்பெற வேண்டும். எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மைச் சமுதாயத்திற்கான உரிமைகளை நாம் ஒழுங்குபடுத்துகின்ற இந்த நேரத்திலே நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்காகக் கல்வியறிவைக் கொடுத்து வருகிற அந்தச் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு மாணவர்களைச் சேர்க்கிற அந்த உரிமையையாவது நாம் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதுபற்றி பேசவேண் டாம் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி இருக்கின்றார்கள். அவர்களுக்கு, மாணவர் களைச் சேர்ப்பதில் நாம் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. டெல்லி, உயர்நீதிமன்றமானது, இதுபோன்ற சிறுபான்மைக் கல்வி நிலையங்கள் 50 சதவீதத்திற்கு மேலே மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்ற தீர்ப்பை வழங்கி இருக்கிறது. மீதி 50 சதவீதத்தை தகுதி அடிப்படையிலே சேர்க்கவேண்டுமென்றுதான் டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பு தந்திருக்கிறது. அந்த மாதிரியான கட்டுப்பாட்டை இது வரையிலும் தமிழ்நாடு அரசு சிறுபான்மைக் கல்வி நிலையங் களில் கொண்டுவரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அப்படி ஏதாவது கொண்டுவரவேண்டுமென்று நினைப்பது போலத் தெரிகிறது. அப்படித் தேவையானால், அதைக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1992), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1992 ஏப்ரல் 28

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 24—4—1992ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3–15.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகுகல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி.)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1992) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

---

@ 24—4—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26 1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன் முன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஐ) ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 27/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1992 (a)) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(a) 24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.**



(ஓ) பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன் வடிவு எண் 28/1992) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 23 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 23 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 24—4—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்". எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1992) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



1992 ஏப்ரல் 28]

9. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஓ) மாநில உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

பிற்பகல் 3-20

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

@ 24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் . தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு-4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு-4, மாண்புமிகு கல்வி அமைச்சர் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 4,—

(*a*) *reletter* sub-clauses (*b*) to (l) as sub-clauses (*c*) to (m) respectively ;

(*b*) *before* sub-clause (*c*) as so relettered, *insert* the following :

(*b*) the Vice-Chairman appointed by the Government from among persons having experience in the field of education ; - ;

(*c*) In sub-clause (*c*) as so relettered, *omit* the words ' who shall be the Vice-Chairman " .

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.



பிரிவு 4, திருத்தப்பட்டபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு 5, மாண்புமிகு கல்வி அமைச்சர் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" In Clause 5, in the opening portion, *for* the words 'for being nominated or co-opted as a member of the council or for being such nominated or co-opted member, if - *substitute* the words 'for being appointed as Vice-Chairman or for being nominated or co-opted as a member of the council or for being such Vice-Chairman or nominated or co-opted member, if .

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

பிரிவு 5, திருத்தப்பட்டபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போரே 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 6, மாண்புமிகு கல்வியமைச்சர், தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"For Clause 6, *substitute* the following :—

'6. 1) The Vice-Chairman and the nominated and co-opted members shall hold office for a term of three years and shall be eligilbe for re-appointment or re-nomination or co-option for a further term of three years :—

Provided that for the the purpose of this sub-section, a person who has held a Vice-Chairman or a nominated or co-opted member in official vacancy for a period of not less than one year shall be deemed to have held office for a full term of office.

2) The Vice-Chairman or the nominated or co-opted member may by writing under his hand addressed to the Government or the Council, as the case may be, s resign his oce but he shall continue to hold office until his resignation is accepted by the Government or, as the case may be, by the Council.

3) Subject to the provisions of this section, the terms and conditios of servi of the Vice-Chairman and the nominated and co-opted members shall be such as may be prescribed.



1992 ஏப்ரல் 28) [டாக்டர் செ. அரங்கநாயகம்]

(4) The Vice-Chairman shall exercise such powers and perform such functions as may be prescribed".

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு-6, திருத்தப்பட்டபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 7 திருத்தங்கள் இல்லை. பிரிவு 7, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 8.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு 8, மாண்புமிகு கல்வியமைச்சர் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

" In Clause 8,—

(a) *For* the words ' a nominated or co-opted Member ' *substitute* the words ' the Vice-Chairman or a nominated or co-opted member ' ;

(b) *For* the words ' such member ' occurring in two places, *substitute* the words ' the Vice-Chairman or such nominated or co opted member ' as the case may be.'

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு-8, திருத்தப்பட்டபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.



பிரிவு 9.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு 9, மாண்புமிகு கல்வி அமைச்சர் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" In Clause 9,—

(a) *For* the words ' the office of the nominated or co-opted member ', *substitute* the words ' the office of the Vice-Chairman or of a nominated or co-opted member ' ;

(b) *For* the words ' such nominated or co-opted members ', *substitute* the words ' such Vice-Chairman or nominated or co-opted member ' ;

(c) *For* the words 'would have been a member', *substitute* the words ' would have been the Vice-Chairman or, a nominated or co-opted member, as the case may be ' ,,

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 9, திருத்தப்பட்டபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 10 முதல் 23 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 10 முதல் 23 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு-1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை என்க. (இல்லை)'



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

(ஔ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1992) மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1992)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்டத் திருத்தமும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடையது. ஊராட்சிகள் பற்றியது. அதிலேயும் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவினை ஆதரிக்கின்ற இந்த நேரத்தில், இன்றைக்கு சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் ஆணையர், துணை ஆணையர் மற்றும் அதிகாரிகளை நியமிக்கின்ற இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில் சென்னை மாநகராட்சிக்கு முக்கியத் தேவையாக இருப்பது அடிப்படையிலே சுகாதாரம். அந்த சுகாதார வசதியும்; துப்புரவுப் பணியும் குடி தண்ணீரும் சென்னை மாநகராட்சிக்குக் கொடுத்துவிட்டால், அத்தனை பணிகளும் சென்னை மாநகரத்தில் சிறப்பாக நடைபெறும். அந்த வகையிலே இங்கே அமைக்கின்ற பணியாளர்கள் எல்லாம் இந்தத் துப்புரவுப் பணிக்கும், குடிதண்ணீர் பிரச்சினைக்கும், தெரு விளக்கு எரிவதற்கும்

* 27—4—92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு மட்டுமல்லாமல் மாநகராட்சிக்கு இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் சென்னை மாநகரத்திலே இருக்கின்ற 14 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து அவர்களுடைய ஆலோசனைகளையும் ஒவ்வொரு வாரமோ அல்லது ஒவ்வொரு மாதமோ ஒரு கூட்டத்தைக் கூட்டி, மாநகராட்சியிலே என்னென்ன பணிகள் சென்னை மாநகரம் சிறப்பாக இருப்பதற்குச் செய்ய வேண்டும் என்று அறிவுரை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவினை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்காக சட்டமுன்வடிவைக் கொண்டு வந்ததை வரவேற்று, இந்த சட்டமுன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். கிராமங்களிலும், சிறு சிறு நகரங்களிலும் குடிநீர், கழிவுநீர், வாய்க்கால்கள், சுகாதாரம், தெரு விளக்கு, ரோடுகள் மற்றும் பராமரிப்பு பணிகளைச் செய்ய உதவும் இந்தச் சட்டமுன்வடிவினை வரவேற்று, இந்தப் பணியும், முறையாக, சிறப்பாக, சீராக, பேரூராட்சி, ஊராட்சி, கிராமப் பஞ்சாயத்து இவைகள் எல்லாம் செலவு செய்கின்றனவா என்பதனை இப்பொழுது கண்காணிக்க வேண்டும். சில இடங்களில் பேரூராட்சி அதிகாரிகள் பினாமியாக தானே பணிகளை வேறு ஆட்கள் மூலம் ஒப்பந்தம் எனச் செய்து கொண்டு தரமில்லாத முறையில் வேலைகளை முடித்துப் பணம் எடுத்துக் கொள்கிறார்கள். இதைத் தடுக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் இந்தச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுகிறேன். பணிகளைச் செய்யாமல் செய்ததாகக் கணக்குக் காட்டி பணங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆழ்குழாய்க் கிணறுகள்; கை பம்பு இவைகளைப் பழுதுபார்க்காமலேயே பணத்தைப் பெறுவதற்காகவும்; சாலைகளில், குழிகளில் மண் போடாமல் போட்டதாகவும்; கழிவு நீர் வாய்க்கால்களைப் பழுது பார்க்காமல் பார்த்து விட்டதாகவும்; குடிநீர்க் குழாய்களை ரிப்பேர் செய்யாமல் செய்ததாகவும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த எந்த இடத்தில் வேலைகளை முடிக்காமல் பில்கள் தயார் செய்து பணம் எடுத்திருக்கிறார்கள் என்பதை என் கவனத்திற்குக்



கொண்டு வந்தால் அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் ஒருசில பஞ்சாயத்துக்களில், பேரூராட்சிகளில்; இருக்கின்ற அதிகாரிகள் இதைச் செய்வதை நான் அவர்களுடைய பெயர்களோடு; பஞ்சாயத்து, பேரூராட்சிகளின் பெயர்களோடு, உங்களிடத்திலே சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். நிச்சயமாக நேரில் தருகிறேன். நான் இந்தச் சட்டமுன்வடிவிலே திருத்தம் கொண்டுவரச் சொல்வதற்குக் காரணம் இப்படிப்பட்ட தவறுகள் நடந்து வருகின்றன. அந்தத் தவறுகள் நடக்காமல் இருப்பதற்குச் சில வகைகள் செய்கின்ற சட்டத் திருத்தம் வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு காரியங்கள் குறித்து என்னிடத்திலே பேசியிருக்கிறார்கள். இதைப்பற்றி என்னிடத்தில் அப்பொழுது தகவல்கள் கொடுத்திருந்தால் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருந்திருக்கும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள். சொன்ன காரியங்களையெல்லாம் உடனுக்குடன் முடித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, குறைகளை எடுத்துச் சொன்னால் நீங்கள் அதை நிவர்த்தி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தெரு விளக்குகள் போடுகின்றபோது அந்தப் பொருள்களை வாங்குவதில் போலி பில்களை கணக்கில் காட்டி பொருள்கள் வாங்கியதாகத் தயார் செய்கின்றார்கள். இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் தடுப்பதற்கு அரசே பொருள்களை வாங்கித் தருகின்ற சட்டத்தைக் கொண்டுவரக் கேட்டுக் கொண்டு, சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி. ஒன்றிரண்டு கருத்துக்கள் மட்டும் போதும்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுக்கான சட்டத் திருத்த முன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். கிராமங்களினுடைய அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், குடிநீர் சாலைப் பராமரிப்பு; தெரு விளக்குகள் போன்ற பணிகளுக்கு

ஊராட்சி மன்றங்களுக்கு நிதி அவசியம் இருக்க வேண்டும். அப்படி நிதியிலிருந்து, விளக்குகள், குடிநீர் ஆகியவை ஒழுங்காகக் கிடைத்தாலே சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குப் பெரும் பகுதி வேலை குறைந்து விடும். எங்களுக்கு இருக்கின்ற கெட்ட பெயரும் குறைந்து விடும்.

இதைச் செய்யவில்லை என்றுதான் இப்போது குறை பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதில் விற்பனை வரி மீது, உள்ளூர் வரி முன்பு ஒரு ரூபாய்க்கு 45 பைசா என்று இருந்தது. இப்போது அது ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. நில வரி பொறுத்தவரையில் ஒரு ரூபாய்க்கு இரண்டரை ரூபாய் என்றிருந்த உள்ளூர் மேல் வரி குறைந்த பட்சம் 5 ரூபாயாகவும், அதிக பட்சம் 10 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு இதை ஒரேயடியாக உயர்த்தி இருப்பதால் விவசாயிகளுக்கு சற்று சிரமம் இருக்கிறது என்பதைப் புரிந்து இந்த 5 ரூபாய் என்பதிலிருந்து 10 ரூபாய் வரை என்று இருப்பதை முறைப்படுத்தி 5 ரூபாய் என்றே முறையாக வைத்து விட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பிற்பகல் 3-30

அதே போல் உள்ளூா நில வருவாயைப் பொறுத்தவரையில் 9-ல் 4 பங்கை நூராட்சி ஒன்றியத்தினுடைய கல்வி நிதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது குறைக்கப்பட்டு 100-க்கு 20 விழுக்காடு கல்விக்காக என்று ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஊராட்சி ஒன்றியத்தில் இப்போது கல்வி பராமரிக்கப்படுவதில்லை. வெறும் பள்ளிக் கூடங்களைப் பராமரிக்கின்ற பணிதான் இருக்கிறது. அதேபோல் உள்ளூர் தீர்வை வருவாயில் 9-ல் இரண்டு பங்கு பேரூராட்சி நிதியத்திற்குக் கிடைத்தது. தற்போது 75 சதவீதம் பேரூராட்சிக்கும், சிற்றூருக்கும் என்று கொடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஏனென்றால் அடிப்படைத் தேவைகளைச் செய்வது ஊராட்சியும், சிற்றூர் ஆட்சியும்தான். அதற்கு இப்படி நிதி ஒதுக்கி இந்த கிராமத்தினுடைய அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதார வசதி போன்றவற்றை அவர்கள் நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு எடுத்திருக்கின்ற இந்த நிலைமைகளை வரவேற்று எனது தொகுதியில்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரவேற்பதோடு முடியுங்கள்.

திரு. நா. சா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. ஆர். சிங்காரம். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடியுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். லோக்கல் செஸ், சர்சார்ஜ் 304 சதவீதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதை ரத்து செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

டாஸ்கோஸ் கமிட்டி என்று ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிலே சென்ற முறை சட்டமன்ற உறுப்பினர் கையெழுத்துப் போட்டால் உண்டு என்று இருந்தது. இந்த முறையும் கையெழுத்துப் போட்டால் வழங்குகிறார்கள். ஆனால் ஒரு கஷ்டம் இருக்கிறது. சில இடத்தில் கையெழுத்து வாங்க மறுக்கிறார்கள். நேரடியாகவே சட்டமன்ற உறுப்பினர்கள் லிஸ்ட் கொடுத்தால் அதைப் போட வேண்டும் என்ற அந்த முறையைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஐ.ஆா.டீ.பி. ஸ்கீம் லோன அவ்வாறு வந்தால்தான நன்றாக இருக்கும். பல்வேறு தொல்லைகளையும், கஷ்டங்களையும், நஷ்டங்களையும், துன்பங்களையும் துயரங்களையும், இன்னல்களையும் அடைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. எனவே சட்டமன்ற உறுப்பிர்களுக்கு அதிகமான வாய்ப்புக் கொடுத்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் சுமார் 28,000 பேர் பணியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகளை ஒழுங்காகவும் முறையாகவும் செயல்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி திருத்த சட்ட முன்வடிவை இங்கே அறிமுகப்படுத்தி இருக்கிறோம். அப்படித் திருத்துவதன் மூலமாக ' துப்புரவுப் பணி, சுகாதாரப் பணி, தெரு விளக்குப் பணி போன்ற இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை எல்லாம் விரைவாகவும் வேகமாகவும் செய்வதற்கு முடியும். அந்த அடிப்படையிலே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அதே போல்தான் ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த அடிப்படைத் தேவைகளை எல்லாம் செய்வதற்கு நிதியாதாரம் இல்லாத காரணத்தால் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இந்த இரண்டு சட்டங்களையும் பொதுமக்களுடைய

[திரு. அழகு திருநாவுக்கரசு.]

[1992 ஏப்ரல் 28

தேவைகளையும் குறைகளையும் போக்குவதற்கான, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான அடிப்படையாக எடுத்துக் கொண்டு இதை நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 முதல் 11 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 முதல் 11 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

## 10. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1992) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 9. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

### (அ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1992). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 3-35

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமி[கு பே]ரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(@) 27—4—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆஆ) ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1992). மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1992) (@) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் தனது திருத்தத்தை முன் மொழியலாம்.

(@) 27—4—92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1992 ஏப்ரல் 28

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1992) திருத்த அறிவிப்புக்கு ஒரு திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்மொழிகிறேன் என்று சொல்லிவிட்டால் போதும்; பிறகு பேசலாம்.

திரு. டி. சுதர்சனம் : நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்:

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1992).......... உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும். (உறுப்பினர்களின் பெயர் பின்னர் அறிவிக்கப்பெறும்.)''

(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது).

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி. டி. நாயுடு அவர்களுடைய பெயராலே இருக்கின்ற வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய பெயரை மீண்டும் ''தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்'' என மாற்ற வேண்டிய ஒரு சட்ட முன்வடிவை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி கொண்டு வருவதற்கான காரணங்களை அவர்கள் சொல்கிறபோது, அந்த பல்கலைக் கழகத்திலே படிக்கின்ற மாணவர்களும் அதிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் அந்தப் பெயரை விரும்பாத காரணத்தினால் பல்கலைக் கழகத்திற்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு சிறிய தரப்பினர் ஒரு மாற்றுக் கருத்தைக் கூறுகின்ற ஒரே காரணத்திற்காக ஜி. டி. நாயுடு போன்ற பெரிய அறிஞர்களுடைய பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமா என்பதனை நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால் இதே போன்ற வாதப் பிரதிவாதங்கள் இதற்கு முன்பு ஏராளமான பல்வேறு பெரியார்களுடைய பெயர்கள் வைக்கப்படுகின்ற நேர்த்திகளிலே நடைபெற்று இருக்கின்றன.



1992 ஏப்ரல் 28] [திரு. ச. அழகிரி]

குறிப்பாக தந்தைப் பெரியார் அவர்களுடைய பெயரை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க முற்பட்ட போது ஒரு நாத்திகருடைய பெயரை பேருந்து கழகத்திற்கு வைத்தால் ஏராளமான ஆத்திகர்கள் அதிலே எப்படி பயணம் செய்ய முடியும்? அது ஏற்புடையது தானா? இதனால் நாத்திக கொள்கைகளைப் பரப்புகின்ற கழகங்களுக்கு அவருடைய பெயரை வைக்கலாமே என்கின்ற ஒரு மாற்றுக் கருத்து அன்றைக்குச் சொல்லப்பட்டது. ஆனாலும்கூட, தந்தைப் பெரியார் அவர்களுடைய சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களுக்காக அவருடைய பெயர் இருக்க வேண்டும் என்று அழுத்தமான கோரிக்கை அன்றைக்கு ஏற்கப்பட்டது.

அதே போல, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மரணம் அடைந்த போது, அவருடைய உடலின் மீது தேசியக் கொடியைப் போர்த்தினார்கள். அவர் கவர்னர் ஜெனரலாக இருந்த காரணத்திற்காக அந்த தேசியக்கொடி போர்த்தப்பட்டது. ஆனால் அன்றைக்கு மாற்று கருத்துடைய பல நண்பர்கள், அவர் ஒரு மேலான பதவியில் இருந்திருந்தாலும்கூட அந்த மேலாண்மையை தக்க வைத்துக்கொள்ளவில்லை. அதன்பிறகு அவர் ஒரு அரசியல் கட்சிக்கு தலைவராக பல்வேறு மாற்றுக் கருத்துக்களைச் சொன்னார்.

பிற்பகல் 3-40

எனவே, இந்த தேச மரியாதை அவருக்கு தரப்பட வேண்டுமா என்று கோரிக்கை விடுத்தபோது அதனை ஏற்றுக்கொள்ளாமல் அவருடைய கூர்ந்த மதிக்காக அன்றைக்கு தேசியக் கொடியை அவருடைய உடல்மீது போர்த்தினார்கள். அவைகளுக்கு எல்லாம் மேலாக சர் பி. டி. தியாகராயருடைய பெயரிலே ஒரு பெரிய நகரமே உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி உருவாக்கப்பட்டபொழுது ** என்று ஒரு தீர்மானத்தையே போட்டார்கள்.

எனவே, அவைகளைக் காரணம் காட்டி, ** நீதிக் கட்சியினுடைய தலைவரின் பெயரை ஒரு நகரத்திற்கு வைத்துக் கொள்ளலாமா என்று ஒரு கடுமையான வாதப் பிரதிவாதங்கள் எழுந்தபொழுது நீதி கட்சிமேல் நம்பிக்கையுடையவர்கள் எல்லாம் அந்தப் பெயரை வைக்கலாம் என்று சொல்லி, அன்றைக்கு அதனை வைத்தார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைகிணங்க) அகற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல விவரங்களை இங்கே நான் சொல்வதில்லை. ஆனால் நான் உங்களுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன். [illegible]-ல் இருந்து [illegible] வரையிலும் நீதிக் கட்சி தான் ஆட்சியில் இருந்தது. அந்த நீதிக் கட்சி ஆட்சியில் இருங்கிறபோது தான் இங்கே பி. அண்ட் சி. மில்லில் இருந்த திரு. வி. க., வாடியா, சர்க்கரை செட்டியார் இவர்களை எல்லாம் நாடு கடத்தினார்கள். அப்படி நாடு கடத்துகிறபோது அவர்கள் 3 பேரும் எங்களுடைய நீதிக் கட்சியை சாராதவர்கள். இருந்தாலும் நாடு கடத்தியது தவறு என்பதாலும் ஆங்கில ஏகாதிபத்தியம் செய்தது தவறு என்பதாலும், அது தவறு என்று சொல்லி, அப்பொழுது தியாகராய செட்டியார் கட்சியினுடைய தலைவராக இருந்தார். முதலலமைச்சர் அல்ல அவர். ஆனாலும் அவர் என்ன செய்தார் என்றால் முதலமைச்சரிடத்திலேயும், மற்றவர்களிடத்திலேயும் இருந்து கையெழுத்து வாங்கி கவர்னரிடத்தில் கொடுத்து ராஜினாமா செய்தார்கள். ஆகவே, நீதிக் கட்சி என்றாலும் அல்லது திராவிட இயக்கம் என்றாலும் காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு இந்த நாட்டினுடைய விடுதலைக்காக பாடுபட்டதோ, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இருந்ததோ அந்த அளவுக்கு எங்கள் கட்சியும் இருந்தது என்கிற வரலாறை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>திரு. ச. அழகிரி :</u> நான் சொல்லிய கருத்து வேறு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கம் வேறு என்று கருதுகிறேன். நான் சொன்னது, தியாகராயருடைய பெயரை அப்பொழுது நகரத்திற்கு வைக்கிறபோது, வைக்கக்கூடாது என்கிற ஒரு வாதம் எழுந்தது. அதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டது என்றால் **பெயரை அந்த நகரத்திற்கு வைக்கக்கூடாது என்கின்ற . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதும் நீங்கள் சொல்வதும் வேறு அல்ல. நீதிக் கட்சியாக இருக்கிறபோது நாங்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கவில்லை. ஆதரிக்காமல் இருக்கிறபோது தான் அவர்களை நாடு கடத்தினபோது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அதை எதிர்த்து மந்திரி சபையை அமைத்திருக்கிறோம். அதைப் போலத்தான் நீதிக் கட்சியில் உள்ளவர்கள் யாருமே ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கவில்லை.? ஆதரித்தார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது ? அதைத் தாருங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளுடை வேந்தர் தியாகராய செட்டியார் அவர்கள் நீதிக் கட்சியினுடைய உன்னதமான தலைவர், தன்னலமற்ற தலைவர். அவர்களுக்கு முதலமைச்சர் பொறுப்பு வந்தபோதுகூட தனக்கு முதலமைச்சர் பொறுப்பு வேண்டாம், கட்சியில் ஒரு மூத்தத் தலைவர் வேண்டுமென்று தன்க்கு வந்த வாய்ப்பை கொடுத்தவர். அந்த அளவுக்கு விரிந்த நல்ல உள்ளம் படைத்தவர். நீங்கள் சொல்வது அதிர்ச்சியாக இருக்கிறது. அதற்கு ஆதாரம் என்ன ? விவரம் என்ன ? எங்கே என்று சொன்னால் அது எங்களுக்கும் பயன்படும்.** என்று சொல்வதற்கு ஆதாரம் எது ? சோர்ஸ் எது ? தயவுசெய்து நீங்கள் மேற்போக்காகச் சொல்லாதீர்கள். ஒருஉன்னதமான தலைவர். நேற்றைக்குத்தான் 141-வது பிறந்த நாளைக் கொண்டாடி இருக்கிறோம். அவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்துவது என்பதை பொறுப்புள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களிடத்திலிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. தயவுசெய்து எங்களைப் போன்றவர்களுக்கு விளக்கம் அளியுங்கள். தெரிந்துகொள்கிறோம்.

பிற்பகல் 3-45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய பண்பாடே தவறு செய்திருந்தாலும் கூட, அவர் இறந்த பிறகு அவரைப் பற்றி பேசுவதில்லை என்பதுதான். தமிழர்களுடைய பண்பாடு என்னவென்றால் , தமிழர்களுடைய நாகரீகம் என்னவென்றால் (குறுக்கீடுகள்)...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : உங்களுக்குத் தெரியவில்லை. அடிப்படையே இல்லை. பொதுவாகச் சொல்லக்கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் வருகிற வரையிலே அது சபைக் குறிப்பிலே இருக்கக் கூடாது (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்களை அமரக் கேட்டுக்கொள்கிறேன். திரு. அழகிரி அவர்கள் பேசுகிறபோது நான் கவனித்துக் கொண்டு தான் இருந்தேன். மற்ற தலைவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிற போது, பொதுவான எண்ணத்தில், ராஜாஜிக்கு போர்த்தக்கூடாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அப்போது அவர் பொறுப்பிலே இல்லாத காரணத்தாலே தேசியக் கொடியைப் போர்த்தலாமா என்று கேட்டார்கள் என்பது தான் வந்துகொண்டே இருந்தது. வெள்ளுடை வேந்தர் தியாகராயரைப் பற்றி வந்தபோது, அவர்மீது ஒரு பழி சொல்வதுபோல் ** என்ற குற்றசாட்டை சொன்னார்கள். குற்றச்சாட்டுச் சொன்னார்கள் என்று வரும் போதே அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தகுந்த ஆதாரம் இருக்க வேண்டும். அதுவும் இல்லாமல், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் சொன்னதுபோல் 141-வது பிறந்த நாள் விழாவை நேற்றுக் கொண்டாடும் அளவுக்கு இருந்த பெரிய தலைவர் ஒருவர் மறைந்து இத்தனை நாட்கள் கழித்து இப்படி ஒரு பழிச்சொல்லை ஏற்கும் வகையில் பிரச்சினை வருவது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் கொடுக்கும் வரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே அது இடம் பெறக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தியாகராயர் பெயரிலே ஒரு நகர் இருக்கக்கூடாது என்று சிலர் மறுத்தார்கள் என்று சொல்வது பற்றிக் கவலை இல்லை. அந்த நேரத்திலே அவர்கள் எந்த உணர்விலே செய்தார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும். ஆனால் திரு. அழகிரி சொல்வது போல ** என்று வருவது தான் சரியில்லை என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு

---

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அமைச்சர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர்கள் அவர் உட்காரக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இந்த பேசியது முழுமை பெற்ற பிறகு தான் குறுக்கீடுகள் வந்தன.

திரு. ச. அழகிரி : நான் சொல்லி முடிக்கவில்லை (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4, 5 பேர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தால் யாருக்கு மைக் கொடுக்க முடியும் (குறுக்கீடுகள்) அமைச்சர்கள் எல்லாம் அமருங்கள். (குறுக்கீடுகள்) 5 பேர் எழுந்து நிற்கிறபோது மைக் எப்படி கொடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) அமைச்சர்களுக்கு மைக் கொடுக்க முடியுமா? எதிர்க்கட்சித் தலைவருக்கு மைக் கொடுக்க முடியுமா? (குறுக்கீடுகள்) தயவுசெய்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) இப்போதே பாருங்கள், 4, 5 அமைச்சர்கள் எழுந்து நிற்கிற போது எனக்கு மைக் வரவில்லை என்றால் (குறுக்கீடுகள்) அமைச்சர்களுக்கும் மைக் கிடையாது. தயவுசெய்து அமைச்சர்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்துறை அமைச்சர் அமருங்கள். அவர் பேசி முடித்த பிறகு கருத்தைச் சொல்லலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஆதாரம் தருகிறேன் என்று சொல்கிறார். என்ன ஆதாரம் என்று கேட்டு...... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து வருவாய்துறை அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். அவர் பேசி முடித்த பிறகு உங்கள் கருத்தைச் சொல்லலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக்கட்சி வரலாறு என்பதும் காங்கிரஸ் கட்சி வரலாறு என்பதும் உலகம் அறிந்த ஒன்று. அது எல்லோருக்கும் தெரியும். பொதுவானது. அவருடைய பெயரே அழகிரி என்று இருக்கிறது என்று சொன்னால், பட்டுக்கோட்டை அழகிரியின் பெயரால் வைக்கப்பட்ட பெயர். நீங்கள் சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உள்ளாட்சித்துறை அமைச்சர் உட்காருங்கள், வேண்டாம்.

பிற்பகல் 3.50

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதெல்லாம் வேண்டாம். சட்டத்துறை அமைச்சர் நடந்து கொள்கிற முறையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மிகவும் தவறு அப்படிபேசக்கூடாது. நாம் இரண்டு பேரும் தோழமைக் கட்சி. ஒரு விஷயத்தை அவர் சொல்லிக்கொண்டு வருகிறார். சாதாரண விஷயம் அது, சொல்லிக் கொண்டுவருகிறார், மறுக்கப்பட்டது என்று சொல்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு எதிர்கட்சித்தலைவர், சட்டத்துறை அமைச்சர் அவர் கருத்தைச்சொல்கிறார். (குறுக்கீடு) சட்டத்துறை அமைச்சர் அவர் கருத்தைச் சொல்கிறபோது, அவர் நடந்து கொள்கிற முறை சரியல்ல என்பது நியாயமா? தாங்கள் குறுக்கிடுவது போல அவரும் குறுக்கிடுகிறார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் முதலிலே இரண்டு விஷயங்களை இதிலே சொல்ல விரும்புகிறேன். ஒரு பெரிய தலைவர் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர், ஒரு கட்சியை ஆரம்பித்தவர், அவர் ஆரம்பித்த அதே கட்சி தான் இன்றைக்கும் ஆண்டு கொண்டிருக்கிறது. அதாவது காங்கிரஸ் 20 ஆண்டுதான் இங்கே ஆண்டிருக்கிறது. திராவிட இயக்கம் 40 ஆண்டுகள் இங்கே ஆளுகிறது. அதுமட்டுமல்ல, அந்த 40 ஆண்டுகள் ஆள்கிற கட்சியை ஆரம்பித்த ஒருவரைப் பற்றி குறை சொல்வதைப்பற்றிய நிலைமை ஏன் ஏற்பட்டது? இதுஒன்று. இரண்டாவதாக, தமிழர்களுடைய பண்பாடே, இறந்தவர் களைப் பற்றி** இறந்தவர் ஏதாவது தவறு செய்திருந்தாலும் கூட, அதைச் சொல்லாமல் இருப்பதுதான் நம்முடைய பண் பாடு. நாமெல்லாம் தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மற்றொன்றும் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் இன்னும் முடிக்கவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இல்லை, இல்லை

** மாண்புமிகு பேரவைத்தலைவரின ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முடித்தபின் தான் அவர் பேசுகிறார். அவர் பேசட்டும். தாங்கள் சட்டத் துறை அமைச்சருக்கு ஒரு பதில் சொல்கிறபோது, நீங்கள் சொல்லி விட்டு உட்கார்ந்தபின்தான் அவர் பேசுகிறார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத ஒரு விவாதம் இப்போது நடக்கிறது. சர். பிட்டி. தியாகராய செட்டியாரைப் பொறுத்தவரையிலும், நீண்ட பெரும் காலமாக காங்கிரசில் இருந்தவர்தான் அவர். 1914 வது ஆண்டு, மகாத்மா காந்தி அவர்களை காஸ்மாபாலிடன் கிளப்பில் பெரும் வரவேற்பு கொடுத்து வரவேற்றவர் சர். பிட்டி. தியாகராயர். இரண்டா வது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் மகாநாடு சென்னை யில் நடக்கிறபோது, அதனுடைய வரவேற்புக் குழுவில் முக்கிய மான இடத்தைப் பெற்று அந்த காங்கிரசை மிகச் சிறப்பாக நடத்தியவர் சர். பிட்டி. தியாகராய செட்டியார் தான். 1946—க்குப் பிறகு அவர் காங்கிரசிலிருந்து விலகி, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை நடத்தி வந்தார். காங்கிரசிலிருந்து மாறுபட்டு இருந்தார் என்பது உண்மை.

சைமன்கமிஷன் வந்தபோது, காங்கிரஸ் முழு மூச்சோடு சைமன் கமிஷனை பாய்காட் பண்ணியபோது, சைமன் கமிஷனைநீதிக்கட்சி வரவேற்றது உண்மை. இப்படி சில பல நிகழ்ச்சிகள் இருக்குமே தவிர, சர். பிட்டி. தியாகராயருடைய வாழ்க்கை வரலாற்றை முழுவதும் படித்தபோது, எந்தவொரு இடத்திலும் ** என்ற அளவுக்குக் குறிப்புகள் இல்லை. நீதிக்கட்சி வென்ற போது, இந்த மாநிலத்தினுடைய ஆளுநர் அவர்கள், நீதிக்கட்சியின் தலைவராக இருக்கிற சர். பிட்டி. தியாகராய செட்டியார் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அறிக்கை விட்டபோது, அந்தப் பதவி எனக்கு வேண்டாம், திரு. சுப்பராய ரெட்டியாருக்குக் கொடுக்கலாம் என்று சொல்லி, அவரை ஏற்றுக்கொள்ளும்படி சொன்னவர். ஏனென்றால், அவருடைய மற்றைய அரசியல் நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது காங்கிரஸ் கட்சியின் மாபெரும் தலைவர் களும், குறிப்பாக திரு.வி.க. அவர்களும் மிகச்சிறப்பாகப் பாராட்டிய பண்பாடு கொண்ட ஒருவர் அவர். இந்தப் பிரச் சினையைப் பொறுத்த வரையிலும் ** என்பதுதான் சந்தேகம். ஆகவே, அந்த சம்பவங்களை மட்டும் விட்டுவிட்டு, உதாரணத்தை மட்டும் எடுத்துச் சொல்வது நல்லது. அதை நிறுத்தி விடுவது நல்லது. ** ஏனென்றால், இது பெரிய பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. அப்படி ஏதாவது ஆதாரம் இருந்து காண்பித்தால் பின்னால் அதை ஒத்துக்கொள்வோம். இப்போது அந்த வாதத்தை வைத்துத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தான் உங்களுடைய வாதத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது இல்லை. வாதத்தை விட்டுவிட்டு உதாரணத்தைச் சொல்லி, இப்போது ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பற்றிய விவாதத்திற்குப் போகலாம்.

பிற்பகல் 3-55

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுவதற்கு (குறுக்கீடுகள்) நீதிக் கட்சி ஆண்ட பிறகு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தியாகராயருடைய பெயரை வைக்கக் கூடாது என்று மறுத்தது ** என்று இருக்கக் கூடிய அந்த அளவோடு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய குறுக்கீடு இருந்தால் நன்றாக இருக்கும் (குறுக்கீடு) தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசக் கூடாது. வருவாய்த் துறை அமைச்சர் குறுக்கிட்டதற்கே நான் அவருக்கே அந்த அளவோடு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். தாங்களே இப்படி நின்று கொண்டிருந்தால் நான் என்ன செய்வது (குறுக்கீடு) வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கே நான் இந்த அளவோடு பேசுங்கள் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசுகின்றபோது யாருடைய உள்ளத்தையும் புண்படுத்துகின்ற அளவிற்குப் பேசவில்லை. ஆனால் தியாகராயரைப் பற்றிக் குறை கூறும்போது அதை மறுத்துப் பேசுவது என்னுடைய கடமையாகும். அது மட்டுமல்லாமல் தியாகராயரைப் பற்றிச் சொன்னதாலேதான் பேசுகின்றேன். யாருடைய உள்ளங்களையும் புண்படுத்த வேண்டும் என்று பேசவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்னும் வேண்டுமானால் நீங்கள் திராவிடர் இயக்கத்தைப் பார்க்கிற போது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இதிலே மேற்கொண்டு விவாதங்கள் வேண்டாம். ** மட்டும்தான் இப்போது பிரச்சினையாக இருக்கிறது. மேற்கொண்டு விவாதம் வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத விவாதம் போய்க் கொண்டிருப்பதன் காரணமாக அந்த உதாரணத்தைக்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





காட்டுவதை மாத்திரம் நிறுத்திவிட்டு பிரச்சினையை மட்டும் பேசும்படியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். தயவுசெய்து நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ** அது பற்றி திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்டதை மட்டும்விட்டு விட்டு அவர் மற்ற விவாதத்திற்கு வரலாம் என்று நான் சொல்லி யிருக்கிறேன். எனவே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) நான் அந்த குறிப்பிட்ட பிரச்சினையை விட்டுவிட்டு வேறுபிரச்சினைகளைப் பேசுமாறுகேட்டுக் கொண்டிருக்கிறேன். எனவே அதிலே மேற்கொண்டு விவாதம வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி நான் பேசவில்லை. நான் சொல்லுவது, நீதிக் கட்சியில் உள்ளவர்கள் ஆட்சியிலே முதலிலே இருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீதிக்கட்சி யினுடைய வரலாறுகள், மற்ற தியாகராயருடைய வரலாறுகள் பற்றியது எல்லாம் கூட இப்போது விவாதத்திற்குரிய பிரச்சினை அல்ல. திரு. அழகிரி அவர்கள் இப்போது இங்கே குறிப்பிட்டுச் சொன்னது, தியாகராயருடைய பெயரை வைக்க முற்பட்ட போது அதற்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவர்கள் சொன்ன காரணம் இது என்று ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக்காரணம் அவ்வளவு பெரிய தலைவருக்கு புகழ் சேர்க்கும் வகையில் இருக்காது. எனவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இருக்கிறேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். அதை விடுத்துவிட்டு தியாகராயருடைய பெயர் வைப்பதற்கு அந்த நேரத்திலே எதிர்ப்பு இருந்தது என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதைப் போலவே அவருக்கும் எதிர்ப்பு இருந்தது. எப்படி ஜி.டி. நாயுடுவுக்கு எதிர்ப்பு இருந்ததோ அதைப் போல அவருக்கும் எதிர்ப்பு இருந்தது என்கிற வகையில் அதை நான் ஒத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம். தயவுசெய்து அமருங்கள். நான் நிற்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். திரு. அழகிரி அவர்கள் பேசியதில் தியாகராயர் பற்றி மறுப்பு வருகிறபோது அவர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொன்ன அந்தக் காரணத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். மேற்கொண்டு திரு. அழகிரி தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு). நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். மேற்கொண்டு வேண்டாம். தயவுசெய்து இதிலே வேண்டாம். நீங்கள் நிறையச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் சொன்னதிலேயிருந்து விவாதம் தொடர்ந்து நான் ஒரு முடிவு சொல்லியிருக்கிறேன். திரு. அழகிரி அவர்கள் இந்த ஜி.டி. நாயுடு பெயர் மாற்றச் சட்டத் திருத்தத்திலே பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசியதில் தியாகராயர் பற்றிப் பேசியதில் ஒன்றை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். நீக்கிவிட்டதற்குப் பிறகு பிரச்சினை இல்லை. திரு. அழகிரி தொடர்ந்து பேசவும்.

பிற்பகல் 4-00

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டும் என்பது என்னுடைய நோக்கமல்ல. நான் படித்ததை, என்னிடம் இருக்கிற ஆதாரத்தை நான் சொல்வதற்குள்ளாக சட்ட அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு விட்டார்கள். 'திராவிட இயக்க வரலாறு' என்கிற புத்தகத்திலே ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி விட்டேன். (குறுக்கீடு) அந்தப் பிரச்சினையே முடிந்து விடுகிறது. நீங்கள் அதற்குப் பிறகு அதுப்பற்றிப் பேச வேண்டாம். (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் அதைத் தான் நீக்கி இருக்கிறேன். நான் நீக்கியதற்குப் பிறகு, நான் நீக்கிய பகுதியின் மீது உங்களுடைய கருத்துக்களைச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'தியாகராய நகர்' என்று பெயர் வைப்பதற்கு எதிர்ப்பு இருந்தது என்ற அளவோடு சொல்லி, அந்த உதாரணத்தைச் சொல்லி, தங்களுடைய விவாதங்களை வைத்துக் கொண்டு போவது நல்லது. ஆனால், இதிலே வந்து, அவருடைய பெயருக்குக் களங்கம் வைக்கிற அளவுக்கு இருப்பதன் காரணமாகத் தான் இவ்வளவு தூரம் 'கான்ராவெர்ஸி' வருகிறது. அதற்கு இடம் தர வேண்டியதில்லை. இந்த விவாதத்திலே அதற்கு அவசியமும் இல்லை. ஆகவே தான் (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆகவே அதற்கு எதிர்ப்பு இல்லை.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்னமும் சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரியினுடைய தந்தையே மிகத்தீவிரமான நீதிக்கட்சியைச் சேர்ந்தவர் தான். ஆனால், அந்த உதாரணத்தை மட்டும் சொல்லிவிட்டுப் போகலாம். 'கான்ட்ராவெர்சிக்கு காரணமாக இருப்பதை எடுக்க வேண்டாம் என்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி அவர்கள் பேசட்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விவாதம் வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : விவாதம் ஆக்கவில்லை. இன்னும் மைக் வரவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி. (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இது சரிதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்கார்ந்து விட்டால் நான் இன்னொருவரைத் தான் கூப்பிட வேண்டிவரும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இது என்ன தீர்ப்பு? 'மைக், வராதா? நான் பேசுவதற்கு அனுமதித்ததற்குப் பின்னாலும் மைக் வரவில்லையானால், என்ன பொருள்? இன்னும் 'மைக்' வரவில்லையே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பட்டனை அழுத்தினால் உங்களுக்கு கிடைக்கும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இப்போது வரும். சொல்லிவிட்டீர்கள்; இப்போது வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி அவர்கள்.

திரு ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்கிறபொழுது, அந்தக் கருத்து தவறானதாக இருந்தால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள என்னைப் போன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கிறோம். இது யார்

மீதும் சொல்கிற குற்றச்சாட்டு அல்ல. தீர படித்து, ஏராள மான ஆதாரங்களோடு தான் நான் இதைச் சொல்கிறேன். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)......

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

திரு. ச. அழகிரி : எனக்கு பேச அனுமதி தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி, நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்கு நீங்கள் விளக்கம் சொல்ல வேண்டியதில்லை. (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகு (குறுக்கீடு) இல்லை, இல்லை, வேண்டாம். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி : நான் சொன்ன பிறகு சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலே விவாதம் வந்ததோ, அதை நான் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி இருக்கிறேன். நான் நீக்கியதற்குப் பிறகு, அதற்கு விளக்கம் சொல்வது சரியல்ல. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சின்ன கருத்தை மட்டும் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதிலே, நான் அந்தப் பிரச்சினைக்கே போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். திரு. அழகிரி அவர்கள், நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகு, '' அதற்கு நான் விளக்கம் சொல்லித் தான் ஆக வேண்டும் '' என்று சொல்வது சரியல்ல ; நான் நீக்கி இருக்க வேண்டிய அவசியமே இல்லையே. (குறுக்கீடு) இல்லை, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர், இதிலே வேண்டாம் ; தயவுசெய்து இதிலே வேண்டாம். (குறுக்கீடு) திரு. அழகிரி அவர்கள், இல்லை, நான் அவைக் குறிப்பிலே ஒரு பகுதியை நீக்கியதற்குப் பிறகு, நான் நீக்கிய பகுதியின் மீது ஒரு விவாதம் தொடர்வது சரியல்ல. (குறுக்கீடு) இல்லை, ஆகவே தான் நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காரவும்.

திரு. ச. அழகிரி : நான் ஆதாரம் இல்லாமல் பேசவில்லை.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அந்தப் புத்தகம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காரவும். அதிலே வேண்டாம். நான் அதையே எடுத்துக் கொள்ளவில்லை. அவர் தெரிவிக்கிற கருத்தையே நான் எடுத்துக் கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து, அமைச்சர்கள் அமர வேண்டும். இதிலே விவாகமே வேண்டாம். (குறுக்கீடு) நான் நீக்கி இருக்கிறேன். நான் நீக்கிய பகுதியின்மீது அழகிரி அவர்கள், ''எனக்கு ஆதாரம் இருக்கிறது '' என்று பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) இல்லை. கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : ஆதாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள், ஆதாரம் இருக்கிறது என்றால், அதை முன்கூட்டியே என்னிடத்திலே கொடுத்து இருக்க வேண்டும் ; (குறுக்கீடு) அல்லது இப்போதாவது கொடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு) தயவு செய்து திரு. அழகிரி அவர்கள் தன்னுடைய விவாதத்தை நான் சொன்ன இடத்திலே இருந்து நீங்கள் தொடங் கலாம். எனவே, நான் நீக்கிய பகுதியின் மீது உங்களுடைய விளக்கங்களைத் தெரிவிக்க வேண்டாம். உங்களுடைய விவாதத் தைத் தொடங்குங்கள். (குறுக்கீடு).

பிற்பகல் 4.05

திரு. ச. அழகிரி : நீங்கள் சொன்ன இடத்திலிருந்து தொடர்ந்து பேசினால் நான் ஆதாரம் இல்லாமல் பேசிய குற்றச் சாட்டுக்கு ஆளாவேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதிலே பிரச் சினை இல்லை. நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசினீர்கள் எனவே நான் நீக்கி இருக்கிறேன் என்று சொல்லவில்லை. நீங்கள் சொன்ன அந்தப் பகுதி (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமைச்சர் களையும் கேட்டுக் கொள்கிறேன். திரு. அழகிரி அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன், நான் ஒரு பகுதியை அவைக் குறிப்பி லிருந்து நீக்கி இருக்கிறேன். நான் நீக்கியது சரியா, தவறா என்கிற ஒரு விவாதத்தைத் தொடங்குவது போலாகும். எனவே, அதிலே பிரச்சினை வேண்டாம். எனவே, உங்களுடைய விவாதத்தை, அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, மற்ற விவரங் களைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்).

[1992 ஏப்ரல் 28

திரு. ச. அழகிரி : எப்படி விடுவது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள்.
(குறுக்கீடுகள்) இது நியாயம் அல்ல.
உட்கார வேண்டும். இது சரியல்ல. திரு. அழகிரி அவர்கள்
கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர்
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது மீண்டும் பெரிய சர்ச்சையாக வளரக்
கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன். மாண்புமிகு
பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, குறிப்பாக
அவை முன்னவர் அவர்கள் எடுத்து தெரிவித்ததைப் போல,
இதை ஒரு பிரச்சினையாக்கி சர்ச்சையாக்க வேண்டாம்.
எனவே, திரு. அழகிரிக்கு ஏதோ ஆதாரம் கொடுக்க முடியாமல்
போய் விட்டது என்று நாம் நினைத்துக் கொண்டதாக இல்லாத
தால் இப்போது நீங்கள் சொன்னதும், நான் சொன்னதும், அவை
முன்னவர் சொன்னதும், அவைக் குறிப்பிலே இருக்கின்றன.
ஆதாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மறைந்துவிட்ட ஒரு
பெரியவரை பற்றி தவறான கருத்து வந்து விடக்கூடாது
என்கிற முறையில், இந்தச் சர்ச்சையை இதோடு முடித்து
விட்டு அடுத்த வாதத்தை அவர் சொல்லலாம். அதிலே
தவறு வராது, ஆனால் ஒரு நிபந்தனை பலமுறை எனக்கு மைக்
போய்விட்டது. (குறுக்கீடு) ** சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்)
அவர் ஏதோ அத்தாரிட்டி என்று நினைக்கிறார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரியல்ல. (குறுக்
கீடுகள்) உங்களுக்கு இருக்கிற உரிமை மாண்புமிகு அமைச்
சருக்கும் உண்டு. (குறுக்கீடுகள்) உங்களுக்கு இருக்கிற உரிமை,
எதிர்க்கட்சித் தலைவருக்கு இருக்கிற உரிமை அமைச்சருக்கும்
உண்டு. (குறுக்கீடுகள்) எனவே, எதிர்க்கட்சித் தலைவர்
மைக் வருகிறபோது, எதிர்கட்சித் தலைவர் குறுக்கிட்டுப்
பேச முடியும் என்கிறபோது அமைச்சர்கள் பேசக்கூடாது,**
என்று சொல்வது என்பது பிரச்சினையைச் சுமுகமாக முடிக்க
வழி வகுக்காது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் 10 தடவை
கள் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது பேசி
னீர்கள். பேசிய வரைக்கும் உங்களுடைய கருத்துக்கள் சரி.
நீங்கள் சொன்னதற்குப் பிறகு ஒரு அமைச்சர் எழுந்தால்
என்று சொல்வது என்பது நியாயம் அல்ல. (குறுக்கீடுகள்)
மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது தேவையில்லாத ஒரு
விவாதம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
இதிலே குறிப்பாக நான் வலியுறுத்த விரும்புவது, தோழமைக்
கட்சிகளைச் சார்ந்தவர்கள் ஒருவர் மனதை இன்னொருவர் புண்
படுத்துகிற ஒரு சந்தர்ப்பமாக இது போய்விடக் கூடாது. ஆகவே
தோழமைக் கட்சி என்று இருக்கிற வரைக்கும் தோழமைக்
கட்சியைச் சார்ந்தவர்களுடைய மனது புண்படாமல் பார்த்
துக் கொள்வது கூட மிகவும் முக்கியமானதாகும். அத்தகைய
விவாதங்கள் தேவையில்லாதது என்பதை நான் இங்கே குறிப்
பிட விரும்புகிறேன். ஆகவே, அந்த அளவுக்கு தான் நம்முடைய
பேச்சு இருக்க வேண்டுமே தவிர, தோழமைக் கட்சி என்கிற
அந்த எல்லையைத் தாண்டி நாம் போவோமானால் பல அர
சியல் முடிவுகளை நாம் மீறுவதாகும் என்பதை நான் கூற
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை
முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் கூறியதைப் போல, அந்தப் பிரச்சினையை
அதோடு விட்டு விட்டு, மேலும் பேச வேண்டுமென்றால்,
மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் தொடர்ந்து பேச
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது மணி
4.09.

திரு. கா. ப. பட்டாபிராமன் : ** (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நானே
சொல்லி விட்டேன். அது இருக்காது. திரு. அழகிரி தொடர்ந்து
பேசலாம். இல்லையென்றால் அடுத்த உறுப்பினர் திரு. சுதர்
சனம் பேசலாம். திரு. சுதர்சனம்.

திரு. ச. அழகிரி : தலைவர் அவர்களே, எனவே, இப்படி
பல்வேறு காலங்களில் ஒரு பெயரை வைக்கிறபோது பலபேர்
எதிர்த்தார்கள் என்பதற்காக அதை நாம் எடுத்துவிட்டதாக
இதுவரைக்கும் கிடையாது. **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

பிற்பகல் 4.10

__மாண்புமிகு பேரவைத் தலைவர்__ : திரு. அழகிரி அவர்கள் சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசி முடித்ததாகவே கருதலாம். திரு. டி. சுதர்சனம்.

__திரு. டி. சுதர்சனம்__ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக திருத்த சட்ட முன்வடிவிற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே ஜி.டி. நாயுடு அவர்கள் சிறந்த விஞ்ஞானியாக இருந்து இன்றைக்கு அகில உலகத்திலே இருக்கிற அத்தனை நாடுகளும் போற்றப் படுகின்ற ஒரு சிறந்த தலைவராக இருந்தார்கள். பெரியார் ஈ.வெ.ரா. அவர்களோடு நெருக்கமாக தொடர்பு கொண்டு பல்வேறுவிதமான ஆக்கபூர்வமான பணிகளை இந்த நாட்டுக்குச் செய்தார்கள்.

விஞ்ஞான உலகத்திலே மிகப் பெரிய சாதனையைச் செய்து காட்டினார்கள். விவசாயத் துறையிலே சிறப்பான பல நல்ல காரியங்களைச் செய்து காட்டினார்கள். அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரியவர். உலகத்திலேயே உள்ள எந்த நாட்டிற்குச் சென்றாலும், ஜி. டி. நாயுடுவை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்கின்ற அளவிற்கு உலகத்திலே இருக்கிற அத்துணை நாட்டிலும் உள்ள மக்களாலே கவரப்பட்ட ஜி.டி. நாயுடு அவர்கள் பெயரால் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப் பட்டு இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்திற்கு பெயரை மாற்றுகின்ற வகையிலே இன்றைக்கு இந்த மன்றத்திலே சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இன்றைக்கு பல் வேறுபட்ட பெரியவர்களுடைய பெயரை பல்வேறு இடங்களிலே சூட்டியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஒவ்வொருவருடைய பெயரையும் நாம் சில நேரங்களிலே எடுப்போம் என்று சொன்னால், அது சரியான முன்னுதாரணமாக இருக்கமுடியாது என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஜி. டி. நாயுடு அவர்கள் பெயரில் இருக்கிற அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் இன்றைக்கு உலகப் பிரசித்தி பெற்ற ஒரு பல்கலைக் கழகமாக இருந்து கொண்டிருந்தாலும், இன்றைக்கு அவர்களுடைய பெயரை எடுப்பதன் காரணமாக, இன்றைக்கு பல்வேறுபட்ட நண்பர்கள் உள்ளம் புண்படுகிற வகையிலே இந்த காரியம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



அதுமட்டுமல்லாமல், ஜி. டி. நாயுடு அவர்களோ, அல்லது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது வேறு யாரோ இந்தப் பெயரை வைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விட்டோ அல்லது வேறு எந்த நிர்பந்தத்தின் காரணமாகவோ, இந்தப் பெயர் சூட்டப்படவில்லை, இன்றைக்கு மாணவர்கள் போராட்டம், நடத்தினார்கள், ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்தப் பெயரை மாற்றுவது என்பது அவ்வளவு சாலச் சிறந்ததாக இருக்க முடியாது என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏன் என்று சொன்னால், அவர் ஒரு சிறந்த விஞ்ஞானி, தமிழ கத்திலே அப்படிப்பட்ட ஒரு சிறந்த மனிதர் இன்னொருவர் இனிமேல் பிறப்பாரா என்று அச்சப்படுகின்ற அளவிற்கு, இன்றைக்கு அவர் சிறந்த மனிதராக விளங்கினார்கள். அவர்கள் இன்றைக்குக் கோவை மாநகரத்திலே பல்வேறு நல்ல காரியங்களைச் செய்திருக்கிற காரணத்தாலே, அவர்கள் மோட்டார் வாகனத்திலே பல்வேறு மாற்றங்களைச் செய்து, விவசாயத்துறையிலே பல்வேறு முன்னேற்றங்களைக் கொண்டு வந்து, ஆராய்ந்து, பிறகு, உலகத்திலே இருக்கின்ற அத்தனை சிறந்த விஞ்ஞானிகளிலே ஒருவராக அவர்கள் விளங்குகின்ற காரணத்தாலே, ஜி. டி. நாயுடு அவர்களுடைய பெயரை எடுப்பதை தயவு செய்து தமிழகத்தினுடைய மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் உடனடியாக இதை மறு பரிசீலனை செய்து, இந்தச் சட்ட முன்வடிவை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்__ : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

__*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்__ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1907 ஆம் ஆண்டு கோவையிலே வேளாண் மைக் கல்லூரி அமைக்கப்பட்டது. பிறகு, 1971-ஆம் ஆண்டு அது பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. அந்தப் பல் கலைக் கழகத்திலே படித்தவர்கள் அந்தப் பல்கலைக் கழகத் திலே பணியாற்றியவர்கள் இன்றைய தினம் அகில உலகத் திலே இருக்கக்கூடிய அத்தனை வேளாண்மை ஆராய்ச்சி மையங் களிலேயும் பேராசிரியர்களாக, விஞ்ஞானிகளாக பணியாற்றி வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே அந்தக் கல்லூரி யிலே படித்தவர்கள், பிற மாநிலங்களில் மட்டுமல்லாது, பிற நாடுகளிலேயும், அவர்கள் மேற்படிப்பை நடத்திக் கொண்டு இருக் கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் சொன்னதைப் போல, இந்த வேளாண்மைக் கல்லூரிக்கு, ஜி. டி. நாயுடு அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று யாரும் கோரிக்கை வைக்கவில்லை. ஆனால் பட்டமளிப்பு விழாவிற்குச் சென்ற கருணாநிதி அவர்கள், அந்தப் பெயரை அவ்ராக வைத்தார்கள்.

பிற்பகல் 4—15

ஜி.டி. நாயுடு அவரைப் பொறுத்த மட்டிலே நல்லவர், ஒரு சிறந்த விஞ்ஞானி, ஆற்றல் மிக்கவர், அவர் வாழும் காலம் வரை அவர்களுடைய புகழைப் பரப்புவதற்கு புரட்சித் தலைவி அரசு தயாராக இருக்கிறது. அப்படிப் பட்ட அந்த அறிவியல் மேதைக்கு கொடுக்க வேண்டிய நற்பெய ரை அவர் பெயருக்குக் கொடுக்க வேண்டிய பெருமையை நிச்சயமாக இந்த அரசு செய்து தரும் என்பதிலே எள்ளளவு கூட நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். ஆனால் எதற்காக இந்தப் பெயரை மாற்றுகிறோம் என்பதனை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அந்தக் கல்லூரியிலே படித்த மாணவர்களும், அங்கே பணியாற்றக் கூடிய பேராசிரியர்களும் போராட்டம் நடத்தினார்கள் என் பதற்காக மட்டும் வேண்டி பெயர் மாற்றம் செய்யவில்லை. அங்கே இன்றையதினம் பிலிப்பைன்ஸ் நாட்டிலே இருக்கக் கூடிய அகில உலகமே பாராட்டக் கூடிய, அந்த பல் கலைக் கழகத்திலே பணியாற்றக்கூடியவர் கூட தமிழகத்திலே படித்து அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டிலே அனைத்து வேளாண் பல்கலைக் கழகங்களையும் விட நம்முடைய தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு நல்ல மரியாதை. நல்ல வரவேற்பு இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் பெயர் மாற்றம் வந்ததன் விளைவாக இங்கே படித்தவர் கள் வெளி நாடுகளுக்கு மேற்படிப்பிற்காகச் செல்கின்றபோது அந்த நாட்டிலே உள்ளவர்கள் இது, ஒரு சுயநிதிப் பல்கலைக் கழகம் என்று சந்தேகப்பட்டு, அந்த மாணவர்களுக்கு ஆதரவு தர மறுக்கிறார்கள். இங்கேயிருந்து படித்துவிட்டு பணியாற்றி வெளி மாநிலங்களுக்குச் செல்லக் கூடிய பேராசிரியர்களுக்கு உரிய தகுதியைப் பிற மாநிலங்களிலே இருக்கக் கூடிய பல்கலைக் கழகத்தார் தர மறுக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இது ஒரு சுயநிதிப் பல்கலைக்கழகமோ என கருதி, வெளிநாட்டிலேயிருந்து வரக் கூடிய நிதிகள்கூட குறைந் திருக்கிறது. அதற்கு உதாரணமாக ஒன்றை நான் குறிப்பிட்டுக் கூற ஆசைப்படுகிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையின்போது தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு ஜி.டி. நாயுடு வேளாண் பல்கலைக் கழகம் என்று பெயரை மாற்றி தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் என்று பெயர் வைக்கப்படும் என் பதனை இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்கள் அறி வித்தார்கள். அதனுடைய விளைவு தற்போது அமெரிக்கத் திருநாட்டிலேயிருந்து ஒரு விஞ்ஞானி இந்தப் பல்கலைக் கழகத் தைப் பார்க்க வந்தவர் ரூபாய் பத்து இலட்சத்திற்கு ஒரு தொழில் நுட்பக் கருவியை வாங்கித் தந்திருக்கிறார். (மேசை யைத் தட்டும் ஒலி).



ஆனால் இங்கே அழகிரி அவர்கள் பெயர் வைப்பதிலே சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். அவருடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பெயர் வைப் பது என்பதிலே கருணாநிதி அவர்கள் அவருடைய இஷ்டம்போல் பெயரை வைத்தார்கள். அரூரிலே இருக்கின்ற ஒரு சர்க்கரை ஆலைக்கு கந்தப்பன் சர்க்கரை ஆலை என்று பெயரை வைத் தார்கள். இங்கே சேத்தியாத்தோப்பிலே இருக்கக்கூடிய சர்க் கரை ஆலைக்கு கிருஷ்ணமூர்த்தி சர்க்கரை ஆலை என்ற பெயர் வைத்தார்கள். அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி என்ற பெயர் வைத்தார்கள். இப்படி போகின்ற இடம் எல்லாம் அவருக்கு வேண்டியவர்களுடைய பெயர்களை எல்லாம் 'வைத்தார்கள். ஆனால் மாண்புமிகு அழகிரி பேசும்போது பெயர்களை வைக்கின்றபோது இங்கே போராட்டம் இல்லையா ? போராட்டம் நடக்கிறது. அதை மீறித்தான் வைக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவருக்கு ஒன்றை தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். நாகை காயிதே மில்லத் என்ற பெயரை மாற்றியபோது தமிழகத்திலே அனைத்து மக்களும் வர வேற்றார்களே தவிர, யாரும் ஒரு சிறு குறையைக்கூட சொல்ல முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எங்களுடைய அரசு, யாரை, எந்த நேரத்திலே, எப்படி கௌரவிக்கவேண்டுமென்பதும், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு நிச்சயமாகத் தெரி யும். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு சென்னையிலே ரூபாய் ஒரு கோடிக்கு மணி மண்டபம் கட்டுகின்ற திட்டத்தைச் செயல்படுத்தியவர் புரட்சித் தலைவி அவர்கள் தான். (மேசையைத் தட்டும் ஒலி).

டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய பெருமையை புரட்சித் தலைவி அவர்கள் சென்னை மாநகரத்திலே புகழ்ந்து பேசி, சிலையும் திறந்து வைத்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஜி. டி. நாயுடு அவர்களுக்கு செய்ய வேண்டிய மரியா தையை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை—சட்டமுன் வடிவை ஆதரிக்கவேண்டுமாய் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று, இந்தத் திருத்தம் வலியுறுத்தப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விருப்பப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும்என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1992 ஏப்ரல் 28] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

பிற்பகல் 4-20

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மை பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1992). மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1992)ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போம் "ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

---

27—4—1992ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

58—135—95

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஈ) நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1992). மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1992)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

---

@ 27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத்தலைவர்] [1992 ஏப்ரல் 28

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள் —(தொடர்ச்சி).

(ஈ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவுகள் அறிமுகம் செய்தல் குறித்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

11. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) வேளாண் வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்).

மறுப்போர் இல்லை என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 4-25

10. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(உ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

11. சட்ட முன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க . (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

12. அரசினர் தீர்மானங்கள்.

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு ஆகிய இரண்டு சட்டமுன் வடிவுகளையும் இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க.

மறுப்போரே இல்லை.

[1992 ஏப்ரல் 28

9. சட்ட முன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்)—தொடர்ச்சி.

(உஉ) வேளாண் வருமான வரி (திருத்த சட்ட முன் வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 1992). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளான் வருமான வரி(திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 44/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

28-4-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 44/92) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊஊ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1992).''

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1992)@ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.'' எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 28—4—92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம்திருத்த) சட்டமுன்வடிவு(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு 45/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மேசையைத் தட்டும் ஒலி.

சட்ட முன்வடிவு ஏற்கப் பெற்றது.

1992 ஏப்ரல் 28] [பேரவைத்தலைவர்]

10. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஊ) சென்னை பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

பிற்பகல் 4-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

சென்னை பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழுவிற்கு (செனட்) 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்று, நியமனம் செய்யப் பெற வேண்டிய எண்ணிக்கையும் நியமனத் தாள்கள் பெறப்பட்ட எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் அக்குழுவிற்குக் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்:

1. திரு. ஏ. தேவராஜ்
2. திருமதி கவிநிலவு தர்மராஜ்
3. திரு. வி. பி. சந்திரசேகர்
4. திருமதி கே. பழனியம்மாள்
5. திரு. எஸ். எம். கிருஷ்ணன்
6. திருமதி ஜீனத் சர்புதீன்.

(எ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பேரவைக் குழுக்களுக்கு முறையான நியமனத் தாள்கள் வரப்பெற்று நியமனம் செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையும், நியமனத் தாள்கள் பெறப்பட்ட எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் அக் குழுக்களுக்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன்:



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

(i) பொதுக் கணக்குக் குழு.

(Committee on Public Accounts)

1. டாக்டர் அ. ஸ்ரீதரன்.
2. திரு. கே. பழனிசாமி.
3. திரு. வி. பழனிசாமி.
4. டாக்டர் எஸ். மணிமேகலை.
5. திருமதி கற்பகம் இளங்கோ.
6. திரு. எஸ். எம். துரை.
7. திரு. சித்தாமூர் ஆறுமுகம்.
8. இராம. இராமநாதன்.
9. செல்வி. எல். சுலோசனா.
10. திருமதி எஸ். சுந்தராம்பாள் மாரப்பன.
11. திருமதி. கே. எம். கலைச்செல்வி
12. திரு. பி. பொன்னுசாமி
13. திரு. கோ. ஜானகிராமன்
14. திரு. வி. கே. லட்சுமணன்
15. திரு. மா. சுந்தரதாஸ்
16. திரு. செ. கு. தமிழரசன்

பேரவை விதி 204-ன்படி திரு. பி. பொன்னுசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

## (ii) மதிப்பீட்டுக் குழு.

[Committee on Estimates]

1. திரு. ஏ. பாப்பா சுந்தரம்
2. திரு. வி. பி. சந்திரசேகர்
3. டாக்டர் எம். அம்மமுத்துபிள்ளை
4. திரு. ஓ. எஸ். அமர்நாத்
5. திரு. ஏ. தேவராஜ்
6. திருமதி. ஆர். சியாமளா
7. திரு. கி. தர்மலிங்கம்
8. திரு. இ. டி. பொன்னுவேலு
9. திரு. டி. ரத்தினவேல்
10. திருமதி ப. சரஸ்வதி
11. திரு. எஸ். வி. சண்முகம்
12. திரு. எஸ். பன்னீர்செல்வம்
13. திரு. வி. கண்ணன்
14. திரு. பி. வி. இராஜேந்திரன்
15. திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்
16. திரு. கே. வி. வி. ராஜமாணிக்கம்

பேரவை விதி 196-ன்படி திரு. கி. தர்மலி[ங்கம் அவர்]களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கல் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

## (iii) பொது நிறுவனங்கள் குழு.

(Committee on Public undertaking).

1. திரு. கரு. முருகானந்தம்
2. திரு. இ. ரவிக்குமார்
3. திரு. ம. சின்னசாமி
4. திரு. கி. முனிவெங்கடப்பன்
5. திரு. எஸ். ஆசைமணி
6. திரு. டி. சாத்தையா
7. திருமதி கே. பழனியம்மாள்
8. திரு. தா. வேடியப்பன்
9. செல்வி பி. நிர்மலா
10. திருமதி கவிநிலவு தர்மராஜ்
11. திரு. காஞ்சி பன்னீர்செல்வம்
12. திருமதி ஜே. லோகாம்பாள்
13. திரு. சொ. பாலகிருஷ்ணன்
14. திரு. கே. ஏ. மனோகரன்
15. திரு. கே. கே. சின்னப்பன்
16. திரு. ஜி. பழனிசாமி

பேரவை விதி 213-ன் படி திரு. ம. சின்னசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

## (iv) அவை உரிமைக் குழு.

## (Committee on Privileges)

1. திருமதி என். சி. கனகவல்லி
2. திரு. க. அர்ச்சுனன்
3. திரு. கே. எம். முனுசாமி
4. திரு. கடலாடி வ. சத்தியமூர்த்தி
5. திரு. சா. காந்திராஜன்
6. திரு. ஓமலூர் சி. கிருஷ்ணன்
7. திரு. மேலூர் அ. மா. பரமசிவன்
8. டாக்டர் மு. சீனியம்மாள்
9. திரு. எம். கே. சுந்தர்
10. திரு. போளூர் வரதன்
11. திரு. ஆர். நடேசன்
12. திரு. கே. கந்தசாமி
13. திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்
14. திரு. நா. சா. பழனிசாமி

1992—93ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 227 (3)-ன் படி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.



## (ஏ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்த விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற 10-வது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 29—1—1992 ஆம் நாளன்று தொடங்கி 10—2—1992 வரையிலும், இரண்டாவது கூட்டம் 6—3—1992 ஆம் நாளன்று தொடங்கி இன்று (28-4-1992) வரையிலும் நடைபெற்றுள்ளது.

பேரவை கூடிய மொத்த நாட்கள் 41.

பிற்பகல் 4-35

இந்தக் கால அளவில், 1991-இல் கூடிய மொத்த நாட்கள்—முப்பத்திரெண்டு.

மாலையிலும் பேரவை கூடியுள்ள நாட்கள்—நான்கு.

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்—195 மணி 15 நிமிடங்கள்.

இதே கால அளவில் சென்ற ஆண்டு கூடிய மொத்த நேரம்—161 மணி 15 நிமிடங்கள் ஆகும்.

29—1—1992 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைமீது விவாதம் நடைபெற்ற நாட்கள்—ஆறு.

1992-93-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 6-3-92 ஆம் நாளன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்

### நிதி அலுவல்கள் ;

வரவு-செலவு திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்—ஆறு.

பங்கு கொண்ட உறுப்பினர்கள்—எழுபத்தி ஒன்று.

மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்—இருபத்திரெண்டு.

உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் (குறுக்கீடுகள் இதில் இடம் பெறாது) உரைகளாக ஆற்றிய மொத்த உரை—இருநூற்று முப்பத்தாறு.

கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள்—மூவாயிரத்து முன்னூற்று பதினெட்டு.

சென்ற ஆண்டுகளில் அதிகப்பட்சமாக இருந்த வெட்டுத் தீர்மானங்களினுடைய எண்ணிக்கையே ஆயிரத்து முன்னூற்று தொன்னூற்று மூன்று தான்.

ஏறத்தாழ இரண்டாயிரம் வெட்டுத் தீர்மானங்கள் மற்ற ஆண்டுகளைவிட அதிகமாக இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவைமுன் வைக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள்—மூவாயிரத்து நாற்பத்தெட்டு.

விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள்—அறுபத்திரெண்டு.

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொதுப் பொருள்களைக் குறித்து ' சிறப்புக் குறிப்பு ' அதாவது ஸ்பெஷல் மென்ஷன் என்ற வகையில் 27 முறைகள் அனுமதிகள் வழங்கப் பெற்றுள்ளன. முதல் முறையாக இந்த அளவில் சிறப்புக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்—

இக்கூட்டத் தொடரில ஆற்றப்பெற்ற மொத்த உரைகள்—அறுநூற்று எண்பத்தெட்டு.

வினாக்கள்—விடைகள்;

குறுகிய கால வினா—ஒன்று.

உடுக்குறியிட்ட வினாக்கள் அவையில் விடையளிக்கப்பட்டவை—அறுநூற்று அறுபத்தி நான்கு.

துணை வினாக்கள்—ஆயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது.

உடுக்குறியிடாத வினாக்கள்—ஆயிரம்

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்—தொள்ளாயிரத்து எழுபத்தைந்து.

மொத்தம் 1975 உடுக்குறியிடாத வினாக்கள் மூன்றாவது கூட்டத் தொடரில் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன.

இது சட்டமன்ற வரலாற்றிலேயே முதல் முறையாக நிகழ்ந்துள்ள சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)



பத்தாவது சட்டமன்றம் துவங்கிய 1—7—1991 முதல் இன்று வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த வினாக்கள் பன்னிரெண்டாயிரத்து நூறு.

இவற்றுள் அதிக வினாக்களை தொடுத்துள்ள உறுப்பினர் என்ற சிறப்பை திரு. ஆர். சிங்காரம் பெறுகிறார்.

திரு. ஆர். சிங்காரம் 2,254 வினாக்களைத் தொடுத்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

அவரை அடுத்து, செல்வி கோ. மல்லிகா 850 வினாக்களையும் திரு. எம். ஆண்டிஅம்பலம் 760 வினாக்களையும், டாக்டர் ச. சுந்தரராஜ் 510 வினாக்களையும், திரு. எஸ். எஸ். ராமசுப்பு 254 வினாக்களையும் தொடுத்து இருக்கிறார்கள்.

அதிக வினாக்கள் தொடுத்த 5 மாண்புமிகு உறுப்பினர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, பதில் அளித்திருப்பதிலேயும் எந்த மாண்புமிகு அமைச்சர்கள் முதல் இடத்திலே இருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்ட வினாக்கள் அத்தனைக்கும் பதில் அனுப்பியிருக்கிற அமைச்சர்களாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய இருவரும் இடம் பெறுகிறார்கள் என்கிற சிறப்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவன ஈர்ப்புகள் ;

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை—330

அனுமதிக்கப்பெற்றவை—156

அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டவை—60

அனுமதி மறுக்கப்பட்டவை—139

அவைமுன் வைக்கப்பட்டவை—8

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் ;

அவையில் எழுப்பப்பட்டவை—6

உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டவை—5

**அரசினர் சட்டமுன்வடிவுகள் :**

வரப்பெற்றவை—45

நிறைவேற்றப்பட்டவை—45

**பேரவை குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள் :**

பொது நிறுவனங்கள் குழுதான் அதிக அறிக்கைகளை அளித்து இருக்கிறது. அது 57 அறிக்கைகளை அவைக்கு அளித்து இருக்கிறது.

பொதுக் கணக்குக் குழு—51

மதிப்பீட்டுக் குழு—5

உரிமைக் குழு—3

அரசு உறுதிமொழிக் குழு—5

பிற்பகல் 4–40

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—

மனுக்கள் குழு—11

சட்ட விதிகள் ஆய்வுக் குழு—7

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :**

சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் —163

அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்—240

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பெற்றவர்கள்—26,761

தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்—12,628

இதுவரையில் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோருடைய மொத்த எண்ணிக்கை—39,389

இதுவும் சென்ற ஆண்டுகளைவிட அதிக எண்ணிக்கையுடையது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



**நூலகம் :**

அங்கேதான் வருகை தந்தவர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது.

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்—727

வழங்கப்பெற்ற நூல்கள்—630

பல்லாயிரக்கணக்கான நூல்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும்.

**நடவடிக்கைக் குறிப்புகள் :**

தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள்—9,065

29—1—1992 முதல் 10—2—1992 வரையிலும் மற்றும் 6—3—1992 முதல் இன்று வரையிலும் நடைபெற்ற 3-வது கூட்டத் தொடரின்போது அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 45 என்பதைத் தெரிவித்துக்கொள்வது சிறப்புக்குரிய ஒரு காரியம் ஆகும். ஆனால் சென்ற ஆண்டு 60 பேர் தவறாமல் வந்திருந்தார்கள். அந்த எண்ணிக்கை இந்த ஆண்டு 45 ஆகக் குறைந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

45 மாண்புமிகு உறுப்பினர்கள் வருமாறு :

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை
திரு. எஸ். அன்பழகன்
திரு. எஸ். ஆசைமணி
திரு. ச. ஆரோக்கியசாமி
திரு. செ. ஆறுமுகம்
திரு. சி. இராமசுவாமி
திரு. எ. ஏகாம்பர ரெட்டி
திரு. க. குப்பன்
திருமதி ஆர். சக்குபாய்
திருமதி டி. சக்குபாய் தேவராஜ்
திரு. தி. சாத்தையா
திரு. ஆர். சிங்காரம்
திரு. கு. சிவசுப்பிரமணியன்
திரு. ம. சின்னசாமி
திரு. டி. சுதர்சனம்
திரு. எம். கே. சுந்தரம்

53—135—98

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 28

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்
திருமதி. செ. சுந்தராம்பாள்
திரு. ஆர். சுப்புரத்தினம்
செல்வி எல். சுலோசனா
திரு. எம். பி. சேகர்
திரு. செ. கு. தமிழரசன்
திரு. வெ. தமிழரசு
திரு. அ. தேவராஜ்
திரு. மு. நடேசன்
திரு. கா. ப. பட்டாபிராமன்
திரு. ஜே. பரந்தாமன்
திரு. ஆர். பி. பரமசிவம்
திரு. வெ. பழனிசாமி
திருமதி கே. பழனியம்மாள்
திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்—மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.
திரு. கி. பாலசுப்பிரமணியன்
திரு. எம். கே. பாலன்
டாக்டர் வெ. புருஷோத்தமன்
திருமதி சு. மணிமேகலை
திரு. கே. பி. மணிவாசகம்
திருமதி கே. மரியம்உல் ஆசியா
டாக்டர் ஜி. ஆர். மாலா
திரு. முகமது ஆசிப்
திரு. இ. ரவிக்குமார்
திரு. பெ. வீரபாண்டியன்
திரு. என். ஜி. வேணுகோபால்
திரு. தா. வேடியப்பன்
திரு. தே. ஜனார்த்தனன்
திருமதி. பீட்ரிக்ஸ் டி'சோசா

ஆகிய 45 உறுப்பினர்கள் ஆவார்.

சட்டமன்றப் பணிகளைத் தொடர்ந்து இடையறாது, இடைவிடாது நாள்தோறும் ஆற்றி வந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்தில் எவ்வளவு பாராட்டினாலும் தகும். (மேசையைத் தட்டும் ஒலி) காலை, மாலை, இரவு என இடையறாது எல்லா நேரங்களிலேயும் அவைக்கு வந்திருந்து அவ்வப்போது தேவையான விளக்கங்களையும் அளித்து, பேரவை மூலம் நாட்டுக்கு அரசின் கருத்துக்களை எடுத்துரைத்து சிறப்புப் பெற்றிருக்கிற அவர்களுக்குப் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

விவாதங்களில் சூடேற்றாமலும் சுவையேற்றி ஆழமாகக்கருத்துக்களை எடுத்துரைத்த பெருமைக்குரிய மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் ஆகிய அனைவரையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

உரிய நேரத்தில், அலுவல்களைச் சீரிய முறையில் நடத்துவதற்கு எனக்குப் பேருதவியாக இருந்த பேரவைத் துணைத் தலைவர் திரு. க. பொன்னுசாமி அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களான திருவாளர்கள் ம. சின்னசாமி, வ. சத்தியமூர்த்தி, ஆர். சிங்காரம், வி. தம்புசாமி, நா. சா. பழனிசாமி ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 4–45

அவர்கள் வந்திருப்பதே பெரிய சிறப்பு. நீங்கள் இருக்கிறீர்கள் என்கிற பலத்தோடுதான் இருக்கிறோம்.

அவையின் மாண்பினை மனதில் நிறுத்தி, நன்முறையில் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், மாண்புமிகு தலைமைக் கொறடா திரு. கா. ப. பட்டாபிராமன் அவர்களுக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுக்கும என்னுடைய நன்றி உரித்தாகுக.

அவையில் தங்களுக்குள்ள பேச்சுரிமை முழுவதையும் பயன்படுத்திக் கடமையாற்றிய உறுப்பினர் பெருமக்களாகு உங்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நல ஆர்வத்துடன் பேரவை நடவடிக்கைகளை நன்முறையில் மக்களுக்கு விரைந்து எடுத்துச் சென்ற தொலைக்காட்சி, வானொலி, செய்தி இதழ்கள், செய்தி நிறுவனங்கள் ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் என்னுடைய உளப்பூர்வமான நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சிறப்பாக, பேரவைக்கு, கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகிவிடுவோம் என்று பலரும் எதிர்பார்த்து, சில காரியங்களிலே ஈடுபட்டு, இன்றையதினம் வந்திருந்து. இந்தச் செய்திகளை அனைத்தையும் நாட்டுக்கு எடுத்துச் சொல்ல வருகை தந்திருக்கிற பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் குறிப்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையினுடைய அலுவல்கள் செம்மையாக நிறைவேறிட உளப்பூர்வமான ஈடுபாட்டுடன் எனக்குத் துணைநின்ற பேரவைச் செயலாளர் திரு. செ. சு. ஜானகிராமன் அவர்களுக்கும், பேரவையின் இதர அனைத்து அலுவலர்களுக்கும், பாதுகாப்பு அலுவலர்களுக்கும் பேரவையின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பேரவையின் எல்லா அலுவல்களையும் முன்நின்று சிறப்பாகநடத்தப்பெரிதும் துணையிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தனித்தனியே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு உங்கள் அனைவர் சார்பிலேயும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 12. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதலே புலவர் தொழில்" என்பதை உணர்ந்து, பேரவையின் 25 (1)-வது விதியின்படி, பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றையதினம் காலையிலே ஆரம்பித்து 4–47 வரையிலேயும் அவையிலே இருந்து அதிலும் வரலாற்றுச் சிறப்பை உருவாக்கி இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி, மாண்புமிகு பேரவை முன்னவரின் தீர்மானத்தை, பேரவையின் முடிவிற்கு (குறுக்கீடு) திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இங்கே எங்களை ஊக்குவிக்கிற விதத்தில், பல்வேறு செயல்திறனை அறிவித்தீர்கள். அதே நேரத்தில்





நாங்கள் இந்த சட்டமன்றத்திலே சிறப்புற பணி செய்வதற்கு, தாங்கள் எல்லா நேரத்திலேயும், எல்லா விஷயங்களிலும் சம அந்தஸ்து, வாய்ப்புக் கொடுத்து, எதிர்க்கட்சி, எதிரிக்கட்சி, ஆளுங்கட்சி என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் நல்ல வாய்ப்புகளைக் கொடுத்து, சமமான அந்தஸ்தைக் கொடுத்து எங்களை ஊக்குவித்ததற்காக, எங்கள் அனைவரின் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களில் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறை[illegible].

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன.

பேரவை, மீண்டும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. அனைவருக்கும் வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 4–48 மணிக்கு, மீண்டும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற்றது.

## 13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

75. மந்தார இலை விற்கப்படும் எந்த ஒரு விற்பனையாளரும் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3—1—1992-ஆம் நாளிட்ட 2-ஆம் எண், அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

[1992 ஏப்ரல் 28

76. 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எளிதான இயக்கூர்திகளை விற்கப்படும் எந்த ஒரு விற்பனையாளருக்கும் 15 சதவீத வரியிலிருந்து 8 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 1—11—1991-ஆம் நாளிட்ட 451-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

77. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1989-1990ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

78. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

79. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1990–91-ஆம் ஆண்டிற்கான முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

80. வேலூர் நகரில் 6—5—1991-ஆம் நாளன்று தளபதி அழகிரி போக்குவரத்துக் கழக (தற்போது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்றழைக்கப்படும்) தொழிலாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் காரணங்கள், காவல் துறையினர் தடியடிப் பிரயோகமும் துப்பாக்கிச் சூடும் நடத்த ஏதுவாக அமைந்த சூழ்நிலைகள் ஆகியவை குறித்து விசாரணை செய்ய அமைக்கப்பட்ட நீதிபதி திரு. ஜி. இராமானுஜம் அவர்களின் அறிக்கை. (1952-ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

81. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



1992 ஏப்ரல் 28]

82. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

83. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1992–93-ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1991–92-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள். [1948-ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

185. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 975 வரை.)

186. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை)

187. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை)

188. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை)

189. சட்டப் பேரவை விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண். 1 முதல் 8 வரை).

190. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தாறு முதல். எழுபத்தி நான்காவது வரையிலான அறிக்கைகள் 1991–92.

191. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது முதல் எண்பது வரையிலான அறிக்கைகள், 1991–92.

164944
D
V 211, 31/4/92
N92.27.1

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and ...